
சந்திரவதனா
2
எஸ்.பாலசுப்பிரமணியன்

# சந்திரவதனா

(இரண்டாம் பாகம்)

எஸ். பாலசுப்பிரமணியன்

**மின்நூலாக்கம்: தமிழ்நேசன்**

அருந்ததி நிலையம்
19, கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்,
சென்னை - 600 017.

# சந்திரவதனா

## (இரண்டாம் பாகம்)



## 41

மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கன் தன்னுடைய மார்பு மீது சரிந்து, மயங்கி விழுந்த தஞ்சை இளவரசி சந்திரவதனா கீழே விழுந்து விடாதபடி, அவள் முதுகை வளைத்துப் பிடித்து, அவளைத் தனது மார்போடு இறுக அணைத்துக் கொண்டான்.

நண்பன் வெங்கடகிருஷ்ணன் சற்று முன்னர் சொன்ன வார்த்தைகள், அவன் சிந்தனையில் உழன்றன.

'தஞ்சை மன்னன் விஜய ராகவ நாயக்கனுக்கு விருப்பமான பொருள் அவனது அருமை மகளான இதோ இந்தச் சந்திரவதனாதான். இதுதான் நல்ல தருணம். மயக்கத்தில் கிடக்கும் இவளை இப்படியே குதிரையில் ஏற்றிக் கொண்டு மதுரைக்குப் பறந்துவிடலாம்.

சொக்கநாதன் ஏறிட்டுப் பார்த்தான். வெகுதூரத்தில் தஞ்சைப் படைகள் பலத்த ஆரவாரத்துடன் ஓடி வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவர்கள் இங்கு வந்து சேர எப்படியும் இரண்டு நாழிகைகள் ஆகலாம். அதற்குள் சந்திரவதனாவைத் தூக்கிக் கொண்டு அவர்கள் கண்களில் படாமல் காட்டுக்குள் ஓடித் தப்பி விடலாம்.

விஜயராகவ நாயக்கனுக்கு விருப்பமான பொருள் மட்டுமல்ல. இந்த உலகம் முழுவதும் தேடினால்கூட இவளுக்கு இணையான அழகியைப் பார்க்க முடியாது. இப்படிப்பட்ட பெண்ணை அடையக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

சொக்கநாதன் சற்று நேரம் ஆழ்ந்து சிந்தித்தான். அவன் ஒரு முடிவுக்கு வந்த சமயத்தில் வெங்கட கிருஷ்ணன் வினவினான்.

''தயக்கம் என்ன முத்து? சீக்கிரம் இவளைக் குதிரையில் ஏற்று.''

''வேண்டாம் முருகா. எனக்கு அதில் உடன்பாடு இல்லை.''

''என்ன சொல்கிறாய்?'' அதிர்ச்சியுடன் கேட்டான்.

''என்னதான் விஜயராகவ நாயக்கனுக்கு விருப்பமான பொருள் என்றாலும், அதனைச் சவால் விடும் முறையில் கவர்ந்து வருவதுதான் பெருமை! மயக்கத்தில் கிடக்கும் ஓர் அபலைப் பெண்ணைக் கவர்ந்து செல்வது வீரத்திற்குரிய செயல் அல்ல.''

''இருந்தாலும்...''

''நான் சொல்வதை முழுக்கக் கேள் முருகா. பொருளாக இருந்தால் கவரும்போது எதிர்ப்புக் கூடக் காட்டாது. ஆனால் இவள் உயிருள்ள பெண். இவள் மனதையும் சேர்ந்து கவர்ந்து என்னோடு இழுத்துச் செல்வது இன்னமும் பெருமை வாய்ந்தது. அதனால் அந்த நினைப்பை அடியோடு மறந்து விடலாம்.''

''இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?'' என்று எரிச்சல் ததும்பக் கேட்டான் வெங்கடகிருஷ்ணன்.

''முதலில் இவள் மயக்கத்தைத் தெளிய வைத்து, பத்திரமாக அந்தப் படைகளிடம் சேர்ப்பித்துவிட வேண்டும்.''

''சரி. இவளை மார்பில் அணைத்துக் கொண்டிருந்தது போதும். தரையில் படுக்க வை. நான் சுனைக்குப் போய் தண்ணீர் கொண்டு வருகிறேன்'' என்றவாறு சிரித்தான்.

அப்பொழுதுதான் இவ்வளவு நேரமும் சந்திரவதனாவைத் தனது மார்போடு அணைத்துக் கொண்டிருப்பதை உணர்ந்த சொக்கநாதன், அவளது முதுகைப் பிடித்து மெதுவாகச் சரித்துத் தரையில் படுக்க வைத்தான்.

வெங்கடகிருஷ்ணன் சுனைக்கு அருகே சென்று ஓர் இலையில் தண்ணீரைக் கொண்டு வந்துதர, சொக்கநாதன் அதனை வாங்கி, நீரைக் கையில் குவித்து, சந்திரவதனாவின் முகத்தில் பளீர் என்று அறைந்தான்.

சற்று நேரத்தில் கண்ணைத் திறந்து பார்த்த சந்திரவதனா, மெதுவாக எழுந்து உட்கார முயன்றாள். உடல் தடுமாறியது.

''இப்பொழுது எப்படி இருக்கிறது சந்திரவதனா?'' என்று பரிவுடன் கேட்ட சொக்கநாதனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''ரொம்ப... கிறக்கமா... இருக்கு... தலை... சுத்துது.... பேச...'' பெருமூச்சு விட்டபடி, கண்கள் பாதி மூடி மூடித் திறக்க, அவளது திரண்ட மார்புகள் ஏறி ஏறி இறங்கின.

சொக்கநாதன் அவள் இடுப்பைப் பற்றி மெதுவாகத் தூக்கி அருகில் இருந்த பெரிய மரத்தின் அடிப்பாகத்தில் சாய்ந்து உட்கார வைத்தான்.

''இவள் மயக்கம் இன்னும் ஏன் தெளிய மாட்டேன் என்கிறது முத்து? வைத்தியர் தான் வரவேண்டுமோ?''

''மயக்கம் தெளிந்துவிட்டது முருகா. கிறக்கம்தான் இவளை இந்தப்பாடு படுத்துகிறது.''

''அப்படி என்றால்?''

''யானை மீது அலைக்கழிந்ததால் அவள் உடல் பதறி வியர்த்து நீண்ட நேரம் அலறியதால் உடலில் உள்ள சத்துக்கள் ஆவியாகிப் போய்விட்டது. சத்துக் குறைவால் ஏற்பட்ட கிறக்கம். வேறு ஒன்றும் இல்லை.''

''அதற்கு இப்பொழுது என்ன செய்வது?''

சொக்கநாதன் மரத்தின் அடிப்பாகத்தில் சாய்ந்து கிடக்கும் சந்திரவதனாவை ஏறிட்டுப் பார்த்தான். அரைக் கண்கள் மூடியபடி மிகவும் சோர்வாகக் காட்சி அளிக்கும் அவளைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது.

பிறகு சுற்றும் முற்றும் பார்த்தான். செய்வது அறியாமல் வானத்தை அண்ணாந்து பார்த்தான். மறு விநாடி அவனது முகம் மலர்ந்தது.

''முருகா, அங்கே பார்த்தாயா?'' என்று உயரே கையை நீட்டினான்.

வெங்கடகிருஷ்ணன் அவன் சுட்டிக் காட்டிய இடத்தை ஏறிட்டுப் பார்த்தான். அவன் கண்களில் குழப்பம்.

''மரத்தின் உச்சாணிக் கிளையில் ஒரு பறவை உட்கார்ந்திருக்கிறது. அதனைக் கொன்று, கறி சமைத்து இவளுக்குக் கொடுத்தால் இவளது கிறக்கம் தணிந்துவிடும் என்று சொல்கிறாயா?''

''மடையா, நான் அந்தப் பறவையைக் காட்ட வில்லை. பறவை உட்கார்ந்திருக்கும் கிளைக்குப் பக்கத் துக் கிளையை உற்றுப்பார்.''

வெங்கடகிருஷ்ணன் அவன் சொன்ன இடத்தை நன் றாக உற்றுப் பார்த்தான்.

''அங்கே என்ன இருக்கிறது முத்து? என் கண்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை?''

''நன்றாக உற்றுப்பார் முருகா. மிகப் பெரிய தேன்கூடு ஒன்று தொங்குகிறதே. தெரியவில்லையா?''

''எங்கே?''

''பறவைக்குப் பக்கத்தில் இரண்டாவது கிளை.''

வெங்கடகிருஷ்ணன் அந்த இடத்தை நன்றாக பார்க்க, தேன்கூடு தொங்குவது தெரிந்து முகம் மலர்ந்தான்.

''ஆமாம் முத்து. எவ்வளவு பெரிய தேன்கூடு. பெரிய பலாப்பழம் தொங்குவ்து போலல்லவா தோன்றுகிறது! அதற்கென்ன இப்பொழுது?''

''இவளது கிறக்கத்தைப் போக்குவதற்குத் தேன்தான் சிறந்த மருந்து. நீ மரத்தின் மீது ஏறிச் சென்று தேனடையை அறுத்துக் கொண்டு வா!''

''சற்று ஆபத்தான காரியமாகத் தோன்றுகிறது முத்து. இந்தத் தேனீக்கள் கொடூரமான விஷங் கொண்டவை என்று கேள்விப் பட்டிருக்கிறேன். கொட்டினால் ஆள் பிழைப்பதே அபூர்வம் என்று சொல்வார்கள். தேனடையை நான் அறுத்துவிட்டால் தேனீக்கள் என்னைக் கொட்டுவது மட்டுமன்றி கீழே இருக்கும் உங்கள் இருவரையும் சேர்த் துக் கொட்டிவிடுமே!''

''ஆம் தெரியும்.''

''தெரிந்துமா என்னைப் போகச் சொல்கிறாய்.''

''நான் சொல்கிறபடி செய். எந்த ஆபத்தும் வராது.''

சொக்கநாதன் விவரமாக வெங்கடகிருஷ்ணனிடம் சொல்ல அதனை முழுவதும் கேட்ட வெங்கடகிருஷ்ண னின் முகம் மலர்ந்தது. அடுத்த விநாடியே அவன் சொன்ன மாதிரியே செயல்படத் தொடங்கினான்.

முதலில் அவர்கள் அருகில் நின்று கொண்டிருந்த இரண்டு குதிரைகளையும் இழுத்துச் சென்று சுனை நீருக் குள் இறக்கினான். அவற்றின் கழுத்துவரை நீர் இருக்கும்ப டியான நிலையில் நிற்க வைத்து, அவற்றின் லகானை இழுத்து அருகில் இருந்த மரத்தில் கட்டினான். தேனடை அறுந்தவுடன் தேனீக்கள் கோபத்துடன் குதிரைகளைச் சூழ்ந்து கொட்டினால், ஒன்று அவை அந்த இடத்தில் செத்துவிடும். இல்லாவிட்டால் தேனீக்களின் தாக்குதல்க ளுக்குப் பயந்து, தறி கெட்டுத் தாறுமாறாகக் காட்டுக்குள் ஓடிவிடும்.

குதிரைகளின் பாதுகாப்பை பற்றித் திருப்தி அடைந்த வெங்கடகிருஷ்ணன், இரண்டு துணிகளைக் கையில் எடுத் தான்.

அதன் நீள, அகலங்களைப் பார்த்துத் திருப்தி அடைந் தவனாக, அவற்றைத் தனது இடுப்பில் சுற்றிக் கொண்டு, மரத்தின் மீது ஏற ஆரம்பித்தான்.

முதலில் தேன் தட்டு தொங்கிக் கொண்டிருக்கும் கிளைக்குச் சரியாக நேர்கீழே இருக்கும் மரக்கிளைக்கு வந்தான். இடுப்பில் இருந்த ஒரு துணியை மட்டும் அவிழ்த்து, அந்த மரக்கிளையின்மேல் பரந்து நீண்டு இருக்கும் சிறு கிளைகளின் நான்கு பக்கங்களிலும் அந்தத் துணியைக் கட்டிப் பைபோலத் தொங்கவிட்டான்.

பின்னர் திரும்பி தேன் தட்டுத் தொங்கிக் கொண்டிருக்கும் கிளை மீது கவனமாக ஏறத் தொடங்கினான். தேனடைகைக் கெட்டும் தூரத்தில் வந்தவுடன் இடுப்பில் இருந்த மற்றொரு துணியை எடுத்துத் தன்னுஐடய காலருகே இழுத்து முடிச்சுப் போட்டு, துணிக்குள் கால்களை நுழைத்து கிளை மீது படுத்து, துணியைத் தலைவரை போர்த்திக் கொண்டான்.

அதன் பிறகு தனது குறுவாளை எடுத்துக் கண் இமைக்கும் நேரத்தில் அந்தத் தேனடையை அறுத்துவிட்டுக் கைகளை இழுத்துத் துணிக்குள் வைத்துக் கொண்டு அப்படியே கிளை மீது படுத்துக் கொண்டான்.

இத்தனை செயல்களையும் உற்றுப் பார்த்தவாறு கீழே நின்று கொண்டிருந்த சொக்கநாதன், வெங்கடகிருஷ்ணன் தேனடையை அறுக்க முயன்ற அதே நேரத்தில் தன்னிடமிருந்த பெரிய துணியால் மரத்தின் மீது சாய்ந்து கிடக்கும் சந்திரவதனாவை நன்றாகப் போர்த்தித் தானும் அந்தத் துணிக்குள் நுழைந்து, அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

ஒருவேளை தேனீக்கள் துணியை மீறிக் கொட்டினால் கூட, அதன் விஷக் கொடுக்குகள் தன் உடலின் மீதுதான் பாயுமே தவிர, இளவரசியைத் தீண்ட முடியாது என்ற நோக்கத்தில் அவளை நன்றாகத் தனது உடலோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

சந்திரவதனா தாள முடியாத கிறக்கத்தில் ஆழ்ந்திருந்த பொழுதிலும் ஆடவன் ஒருவன் தன்னை அணைத்துக் கொண்டு துணியால் மூடுவதை உணர்ந்து அவள் பெண்மை உணர்வுகள் எச்சரிக்கை செய்தன.

''என்ன... என்ன செய்கிறீர்கள்... இது... தப்பு'' அவள் வாய் பயத்துடன் குழறியது. உடல் நடுங்கியது.

பயப்படாதே சந்திரவதனா. உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன். உன் மயக்கத்தைத் தெளிய வைப்பதற்குத் தேன் தேவைப்படுகிறது. எனது நண்பன் மரத்திலுள்ள தேனடையை அறுக்கிறான். தேனீக்கள் பறந்து வந்து உன்னைக் கொட்டிவிடக் கூடாது என்பதற்காகத்தான் இப் படி! என் உடலைத் தாண்டி ஒரு தேனீ கூட உன்னைக் கொட்டாது'' என்று அவள் காதில் கிசுகிசுத்தான்.

சந்திரவதனா கிறக்கத்துடன் அவன் தோளில் சரிந் தாள். சொக்கநாதன் பரிவுடன் அவள் தலையை வருடி னான்.

வெங்கடகிருஷ்ணன் தேன் தட்டை அறுத்தெறிந்த மறுவிநாடி தேன் தட்டு அப்படியே பொத் தென்று அதன் கீழ்க்கிளையில் அவன் கட்டியிருந்த துணிப்பையில் வந்து விழுந்தது. அந்த நேரம் தேனீக்கள் 'விர்ர்ர்' என்று அந்த இடமே கிடுகிடுக்கும்படியாக ரீங்காரம் செய்து, சுற்றுப் புறத்தில் இருந்த உயிர்களைக் கொட்டிக் கொன்றுவிடும் கோபத்தில் பறக்கத் தொடங்கின.

மரக்கிளையில் முரட்டுத் துணிக்குள் படுத்துக் கிடந்த வெங்கடகிருஷ்ணனையும், மரத்தின் அடியில் துணிக்குள் அணைத்தபடி கிடக்கும் சொக்கநாதன், சந்திரவதனாவை யும் அவற்றால் உணர முடியாது, சற்று நேரம் மரக் கிளையை ஒட்டிப் பறந்து, பிறகு கோபத்துடன் கூட்டமாக வெளியே பறக்க ஆரம்பித்தன.

தூரத்தில் ஆரவாரமாக ஓடிவரும் தஞ்சைப் படைக ளைப் பார்த்தவுடன் அந்தத் தேனீக்கள் வேகமாகப் பறந்து சென்று கூட்டமாக மொய்த்துக் கொட்டத் தொடங்கின.

எதிர்பாராமல் எங்கிருந்தோ ஆயிரக்கணக்கான தேனீக்கள் பறந்து வந்து கொட்ட ஆரம்பித்ததும் படை வீரர்கள் திணறிப் போய்விட்டனர்.

படைவீரர்களுக்கு முன்னால் குதிரை மீது வந்து கொண்டிருந்த அச்சுதப்பனையும் அவை விட்டு வைக்கவில்லை. நாலைந்து தேனீக்கள் அவன் ஏறி இருந்த புரவியை ஒட்டுமொத்தமாகக் கொட்டியதில் குதிரை முன்னங்கால்களை உயர்த்திக் கனைத்தவாறு, அச்சுதப்பனை முதுகில் இருந்து அசைத்து மண்ணில் தள்ளியது.

மண்ணில் உருண்டு விழுந்த அச்சுதப்பனை ஒரு தேனீ, பின்புறத்தில் கொட்டியது. மறுகணம் அச்சுதப்பன் அவசரமாக எழுந்து, ''டேய் ஓடுங்கடா, தேனீ கொட்டுது ஓடுங்கடா'' என்றவாறு தனது பின்புறத்தைத் தடவியவாறு தாறுமாறாக ஓட ஆரம்பித்தான்.

படை வீரர்கள் அனைவரும் தேனீக்களின் தாக்குதல்களுக்கு பயந்து மறுபடியும் கோயிலை நோக்கி ஓட ஆரம்பித்தார்கள்.

மரத்தில் இருந்த தேனீக்கள் ஒன்றுவிடாமல் பறந்து போய்விட்டதை உணர்ந்த வெங்கடகிருஷ்ணன், மெதுவாக எழுந்து கீழ்க்கிளைக்கு வந்து, தேன் தட்டு விழுந்து கிடக்கும் துணியை அப்படியே கவிழ்த்துச் சுருட்டி எடுத்தான். பிறகு மரத்தில் இருந்து கீழே இறங்கி வந்தான்.

மரத்தின் அடியில் சொக்கநாதனும், சந்திரவதனாவும் இன்னமும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி துணிக்குள் முடங்கி இருப்பதைப் பார்த்தான். அவன் முகத்தில் புன்னகை ததும்பியது.

''முத்து தேனடையை எடுத்துக் கொண்டு நான் மரத்தில் இருந்து கீழே இறங்கி ஒரு நாழிகை ஆகப் போகிறது. இனியாவது நீ வருகிறாயா இல்லை இன்னும் சற்று நேரம் நான் காத்து இருக்கட்டுமா?'' என்றான்.

இதைக் கேட்ட மறுவிநாடியே துணியை விலக்கிய சொக்கநாதன் - சந்திரவதனாவை மறுபடியும் மரத்தில் சாய்ந்தவாறு படுக்க வைத்துவிட்டு அவனருகில் வந்தான்.

''ஒன்றும் அவசரம் இல்லை முத்து. இந்தத் தேனடை போதாது என்றால் வேறு தேன் தட்டு வேறு எங்காவது ஒரு மரத்தில் இருக்கும். நான் போய் எடுத்து கொண்டு நிதானமாக வருகிறேன். நீ மறுபடியும் இளவரசியோடு துணிக்குள் போய் இருக்கிறாயா?'' என்றான் கிண்டலாக.

சொக்கநாதன் அவன் காதைப் பிடித்துப் பலமாகத் திருகினான்.

''உனக்கு வரவரக் கொழுப்பு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. முதலில் தேன் தட்டை எடு.''

வெங்கடகிருஷ்ணன் தேன் தட்டு அடங்கிய துணியை அவனிடம் நீட்டினான். சொக்கநாதன் அதனைப் பிரித்து தேன் தட்டைத் தனியாக எடுத்தான்.

முதலில் புழுக்கள் இருந்த பகுதியைக் கவனமாக வெட்டி எறிந்தான். பின்னர் தேன் அடங்கிய அடையை மட்டும் தனியாகப் பிரித்து, அதன் மேல் இருந்த மெழுகைக் கவனமாக அறுத்தான்.

வெங்கடகிருஷ்ணன் ஒரு பெரிய இலையை எடுத்துத் தொன்னை போல் செய்து தயாராக வைத்தான். அந்தத் தொன்னை மீது சொக்கநாதன் தேனடையை பிழிந்தான்.

சுத்தமான தேன் அந்தத் தொன்னை முழுக்க நிரம்பி யது. அதனை எடுத்துக் கொண்டு சந்திரவதனாவின் அரு கில் வந்தான்.

''சந்திரவதனா சற்று நிமிர்ந்து உட்கார். தேன் கொண்டு வந்து இருக்கிறேன். இதனைக் குடித்தால் உன் கிறக்கம் தெளிந்துவிடும்!''

சந்திரவதனா கண்களை நன்றாகத் திறந்து, நிமிர்ந்து உட்கார முயன்றாள். அவள் உடல் நடுங்கி மறுபடியும் சாய முற்பட்டது. சொக்கநாதன் உடனே அவளருகில் உட்கார்ந்து அவள் தோளைத் தன் மார்பில் சாய்த்து, தேன் நிறைந்த தொன்னையை அவள் இதழ்கள் அருகே வைத் தான்.

''வாயைத் திற சந்திரவதனா பார்... தேன்... குடி.''

சந்திரவதனா குடிக்க ஆரம்பித்தாள். இதற்குள் வெங் கட கிருஷ்ணன் சுனைக்குச் சென்று குதிரைகளை அவிழ்த் துக் கொண்டு, கையோடு ஒரு தொன்னையில் நீரும் கொண்டு வந்தான்.

தேனைக் குடித்து முடித்த பிறகு அவள் வாயில் தண்ணீரையும் புகட்டி மிச்சமிருந்த நீரை அவள் முகத்தில் சாய்த்துக் கழுவினான். இளவரசிக்கு மெதுவாகக் கிறக்க மும் தளர்ந்து நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

சொக்கநாதன் அவள் முகத்தில் படிந்த நீரை ஒரு துணியால் துடைத்தான். மறுவிநாடியே அவன் கரத்தில் இருந்த துணியைப் பற்றி இளவரசியே துடைத்துக் கொள்ளத் தொடங்கினாள்.

பிறகு மெதுவாக எழுந்து நின்றாள், மயக்கம், கிறக்கம் எல்லாம் தணிந்து அவளுக்குள் புத்துணர்ச்சி பிறந்திருந்தது.

"ரொம்ப நன்றி வீரரே! தாங்கள் யார் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று நன்றி உணர்ச்சி பொங்க சொக்கநாதனைப் பார்த்துக் கேட்டாள்.

அதே சமயம் தேனீக்களின் தாக்குதல்களில் இருந்து விடுபட்ட தஞ்சைப் படைகள் மறுபடியும் அவர்களை நோக்கி வேகமாக வர ஆரம்பித்தது.

அச்சுதப்பன் வேறு ஒரு குதிரையில் ஏறி, அவர்களுக்கு முன்னால் வந்து கொண்டிருந்தான்.



# 42

கவிதாயினி ரங்காஜம்மாவிற்கு அருகில் அமர்ந்தவாறு தனக்கு எதிரில் அமர்ந்திருக்கும் இளவரசன் மன்னார்தாசனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மதுரவாணி!

அவள் பேசுவதைச் செவிகள் உணர்ந்தாலும் அவனது அழகையும், கம்பீரத்தையும் அவள் கண்கள் பருகி 'இவ்வளவு அழகும் புத்திசாலித்தனமும் ஒருங்கே அமைந்த இவன் என்னைக் காதலிக்க வேண்டுமே' என்று அவள் மனதுக்குள் ஏக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

அன்பரே, என்னை ஒருமுறை ஏறிட்டுப் பார்க்கக் கூடாதா? ரங்காஜம்மாவிடமே பேசிக் கொண்டு இருக்கிறீர்களே, என் பக்கம் திரும்பி ஏதாவது பேசினால் குறைந்தா போய்விடப் போகிறீர்கள்! சரி, பேசக் கூட வேண்டாம். அவ்வப்பொழுது ஒரு பார்வையையாவது என்மீது வீசினால் என் இதயம் புல்லரிக்குமே! அதுகூடச் செய்யக் கூடாதா? பாருங்கள் இளவரசே, பாருங்கள்! உங்களுக்காக உங்கள் கடைக் கண்ணிற்காக ஏங்கித் தவிக்கும் இந்தப் பேதையை, உங்களுக்காக எப்படி எல்லாமோ கஷ்டப்பட்டு இங்கு ஓடி வந்திருக்கும் இந்த ஏழையை ஏறிட்டுக் கூடவா பார்க்கக் கூடாது?''

மதுரவாணியின் இதயம் அழுது புலம்ப, மன்னார்தாசனின் முகத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மன்னார்தாசனோ அந்த இடத்தில் ரங்காஜம்மாவையும், தன்னையும் தவிர வேறு யாருமே இல்லாததுபோல் மதுரவாணி உட்கார்ந்திருக்கும் பக்கமே பார்வையை வீசாது, கடைக்கண்ணால்கூட நோக்காது, ரங்காஜம்மாவிடம் மட்டும் பேசிக் கொண்டிருந்தான்.

சதவேஹினி ரங்காஜம்மாவுக்குப் பெருமை பொங்கி வழிந்தது. தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனைத் தன் மணாளனாகக் கருதித் தனது வாழ்க்கையை இத்தனை காலமும் மன்னனுக்கே அர்ப்பணம் செய்து இருந்ததால், மன்னன் மகன் மன்னார்தாசனைத் தன்னுடைய மகனாகவே கருதி வருகிறாள்.

தனது மைந்தன் இவ்வளவு புத்திசாலித்தனமாகக் கேள்விகளைக் கேட்கிறானே என்று அவளுக்குப் பெருமையாக இருந்தது. அதன்பிறகுதான் அந்தக் கேள்வியைக் கேட்டாள் ரங்காஜம்மா.

''ஆமுக்தமால்யதவைக் கிருஷ்ணதேவராயர் இயற்றவில்லை. அவரது அவைக் களப் புலவரான அல்லசானி பெத்தன்னர்தான் அதனை இயற்றியது என்பதற்கான ஆதாரங்கள் இவ்வளவுதான் உன்னிடம் உள்ளதா மகனே?''

''இன்னமும் நிறைய இருக்கின்றன அன்னையே! ஒவ்வொன்றாகச் சொல்கிறேன். முதலில் நான் கூறியதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று ஆர்வமுடன் கேட்டான்.

''நீ கூறிய இரண்டு பாடல்களுமே சாடுவு வகையைச் சேர்ந்தவை. அதாவது தனிப் பாடல்கள். இரண்டையும் இயற்றியவர் யார் என்று சரியாகத் தெரியாது. ஸ்ரீகிருஷ்ண

தேவராயர் காலத்திற்கு பின்னால் அவரைப் பிடிக்காத கவிஞர்கள்கூட இயற்றி இருக்கலாம். ஆமுக்தமால்யதவை யும், மனு சரித்திரத்தையும் படித்துப் பார் மகனே. நடை, கற்பனைத் திறன், மொழி ஆகியவற்றால் இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை.''

''அப்படியா?''

''ஆம் மகனே! ஸ்ரீகிருஷ்ணதேவராயர் இயற்றிய ஆமுக்தமால்யத 'நாரி கேளபாகம்' என்று சொல்வார்கள். அதாவது மிகக் கடினமான நடையைக் கொண்டது. தேங் காய் போல மிகவும் முயற்சி எடுத்துச் சுவைக்கத்தக்கது. ஆனால், பெதன்னாவின் மனு சரித்திரமோ கதளீபாகம் என்பார்கள். மிக எளிமையான நடை வாழைப்பழத்தி னைப் போன்று எளிதில் சுவைக்க வல்லது என்று புகல்வர். இந்த இரண்டு காவிய நடைகளுக்கும் இடையே உள்ள முரண்பாடே இவற்றை இயற்றியவர்கள் இருவேறு ஆசிரி யர்கள் என்பதைத் தெளிவுபடுத்தும்.''

''ஆம் இளவரசே! என் தந்தை கூட இதனைப் பற்றி ஒரு முறை என்னிடம் கூறி இருக்கிறார்'' என்றாள் மதுர வாணி இடையில் புகுந்தது.

அப்படியாவது மன்னார்தாசனின் கவனத்தைத் தன் மீது திருப்ப வேண்டும் என்ற அவா அவளுக்கு. மன்னார் தாசனோ அதனைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாதவன் போன்று ரங்காஜம்மாவைப் பார்த்துத் தொடர்ந்து கேட் டான்.

''தெனாலி ராமகிருஷ்ணரின் பாடல் கூடவா தவறு என்று சொல்கிறீர்கள் அன்னையே?''

''அந்தப் பாடலை தெனாலிராமன் இயற்றி இருக்க மாட்டார் என்பது நிச்சயம். தென்னாலிராமன், பெத்தன்

னாவை உயர்ந்த கவியாக மதித்தவர். அதனால் 'முதுமதி தப்பி' அதாவது முதுமையில் அறிவு மழுங்கி என்ற அடைமொழியுடன் கூறி இருக்கவே மாட்டார். அதுமட்டு மின்றி அந்தப் பாடல் சகட்டுமேனிக்கு அத்தனை பெரிய கவிஞர்களையும் சாடுகிறது. இதனை நிச்சயம் தெனாலி ராமன் பெயரில் பிற்காலத்தில் வந்து குறும்புக்காரப் புலவன் யாராவது இயற்றி இருக்கலாம். அதிலும் ராமகிரு ஷ்ணர் பாண்டுரங்க விஜயம் என்ற நூலை இயற்றியதாக அந்தப் பாடலில் வருகிறது. தெனாலிராமன் இயற்றிய நூல் பாண்டுரங்க மகாத்மியம்! நூலின் பெயரே தவறாகக் குறிப்பிட்டிருக்கும்போது அந்தப் பாடலின் முழுக் கருத் தையும் எப்படி நம்புவது மைந்தா?''

மன்னார்தாசன் சற்று நேரம் பேசாமல் இருந்தான். ரங்காஜம்மா சொன்ன கருத்துக்களை அவன் மனம் அசை போட்டன. மதுரவாணியோ அவன் முகத்தைப் பார்த்த வாறு இருந்தாள்.

சற்று முன்னர் இடைமறித்து அவள் பேசியபோது கூட இளவரசன் அதனைக் கவனிக்காதது போல் நடந்து கொண் டது அவள் மனதை நோகச் செய்தது. மன்னார்தாசன் வேண்டும் என்றே இப்படி நடந்து கொள்கிறானா இல்லை ரங்காஜம்மா முன்பு இளம் பெண்ணான என்னுடன் பேசுவ தற்குத் தயங்குகிறானா?

ஒருவேளை இளம் வயதில் பார்த்த மன்னார்தாசனுக் கும் இப்பொழுது பார்க்கும் மன்னார்தாசனுக்கும் நிறைய வேறுபாடு வந்திருக்குமோ? இளவரசன் என்ற கர்வம் அவனுக்குள் விளைந்திருக்குமோ?

மதுரவாணியின் மனம் தத்தளித்தது. இருந்தாலும் அவன் மனதைத் தன் மீது திருப்பிவிட வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் அவளுக்குள் அடங்கிவிடவில்லை.

''என்ன மகனே யோசனை? நான் சொன்ன கருத்துக் கள் சரியா? இல்லை வேறு ஏதாவது ஆதாரங்கள் உளதா?'' என்றாள் ரங்காஜம்மா.

''வேறுபல சொல்கிறார்கள். எனக்கே அதில் உடன் பாடு இல்லை. ஆனால், ஆமுக்தமால்யதவில் சொல்லப்ப டும் பிரம்ம சூத்திரம் போன்ற கடினமான தத்துவ ஞான நுட்பங்கள் அரசரான கிருஷ்ண தேவராயரால் விளக்கப் பட்டிருக்க முடியாது என்கிறார்கள். அரசியலில் மூழ்கி உள்ளவருக்கு காவியம் இயற்றுவதற்கு நேரம் கிடைக்காது என்றும், மக்களின் வாழ்க்கை பற்றிய வருணனைகளை மாமன்னர் இயற்றியிருக்க இயலாது என்றும் விஜய நகரத் தில் சிலர் கூறினார்கள்.''

''இவை அனைத்தும் தவறான கருத்துக்கள் மன்னார் தாசா! பேரரசர் சாதாரணப் பிரஜைகளின் வாழ்க்கை பற்றிய வருணனைகள் எழுத முடியாது என்பது முற்றிலும் தவறு. 'ரவி' எறுகனிதி கவி எறுகுனு' என்று தெலுங்கில் வழங் கும் பழமொழி நீ கேள்விப்பட்டதில்லையா? அதாவது 'சூரியன் அறியாததையும் கவிஞன் அறிவான்' என்று பொருள். குடிகாரனைப் பற்றிய வருணனை எழுதும் கவிஞன் குடித்தவனாக இருக்க வேண்டும் என்பதுபோல் உள்ளது நீ சொல்லும் அந்தக் கருத்து. அதுமட்டுமின்றி நாட்டு மக்களின் வாழ்க்கையைப் பற்றித் தெரியாதவன் எப்படி நாடாள முடியும்? புரிகிறதா?''

''புரிகிறது அன்னையே! இருந்தாலும் ஒரு சக்கரவர்த் திக்குச் சாகித்யம் படைக்க நேரம் ஏது என்று சொல்கிறார் களே!''

''இது முட்டாள்தனமான கருத்து என்று உனக்கே புரியவில்லையா? சமஸ்கிருதத்தில் காவியங்களையும், நாடகங்களையும் படைத்த ஹர்ஷரும், சூத்திரகரும் மன்

னர் குலத்தில் பிறந்தவர்கள்தானே! பிராகிருத மொழியில் பாடல்கள் இயற்றிய ஹாலன் ஒரு நாட்டின் அரசனல்லவா? தமிழில்கூட மன்னர்கள் பாடியதாக எத்தனையோ பாடல்கள் இருக்கின்றன. அதே மாதிரிதான் ஸ்ரீகிருஷ்ண தேவராயரும்! இவருடைய அரசவையாகிய 'புவன விஜய'த்தில் எப்போதும் கவிஞர்களும், புலவர்களும் தத்துவ ஞானிகளும், இசை மேதைகளும், கலைஞர்களும் நிறைந்து இருப்பார்கள் என்று நீ கேள்விப்பட்டதில்லையா? கிருஷ்ண தேவராயரின் புலமையைப் பற்றி எத்தனை கவிஞர்கள், எத்தனை காவியங்களில் பாராட்டி எழுதி இருக்கிறார்கள் என்பதை மறந்துவிட்டாயா மகனே?''

மதுரவாணி இந்த இடத்தில் மறுபடியும் இடைமறித்துப் பேசினாள்.

''ஜாம்பவதி பரிணம்னு ஒரு சமஸ்கிருத நூலில் கூட 'சகலகலா போஜராஜ விபம் மூறாராயரு கண்ட ஸ்ரீகிருஷ்ண தேவராய விரதம்'னுதான் படித்திருக்கிறேன் இளவரசே!'' என்றாள் சப்தமாக.

இதைக் கேட்டவுடன் மன்னார்தாசன் மதுரவாணியை ஏறிட்டுப் பார்த்தான். பிறகு புன்னகை புரிந்தவாறு, ''அப்படியா''' என்றான்.

மதுரவாணியின் இதயம் புல்லரித்தது. மன்னார்தாசன் என்னை நிமிர்ந்து பார்த்துவிட்டானே! புன்னகை புரிந்தானே! மதுரவாணி அந்தப் புன்னகையைப் பிடித்துத் தன் இயத்திற்குள் பூட்டிக் கொண்டாள்.

''மதுரவாணி சொல்வதும் உண்மைதான். புத்திசாலிப் பெண்ணல்லவா! சரியாகச் சொன்னாள். அதுமட்டுமல்ல மகனே பெத்தண்ணாவே தனது மனு சரித்திரத்தில் கிருஷ்ண தேவராயரை 'கவிதாஸ்த்ரி போஜா¬னருன்' 'வித்

யாகேலன பூஜ' என்றெல்லாம் பாடுகிறார். நந்தி திம்மண் கூடத் தனது பாரிஜாத பஹரணத்தில் 'கவிதாப் ராவீணி பணீச' என்று புகழ்கிறார். இதற்குப் பிறகும் உனக்குக் கிருஷ்ணதேவராயரின் புலமைப் பற்றி இனிச் சந்தேகம் எழாது என்று நினைக்கிறேன்.''

மன்னார்தாசன் மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்தான். ரங்காஜம்மா தொடர்ந்து சொன்னாள்.

''மன்னர்களால் கவிபாட முடியாது என்ற வார்த்தைகள் உன் வாயிலிருந்து வரக்கூடாது மகனே! உனது பாட்டனார் ரகுநாத நாயக்கர் இரண்டே ஜாமத்தில் பாரிஜாத பஹரணம் என்ற காவியத்தை இயற்றியதாகச் சொல்வார்கள். ஏன் உன் தந்தையையே எடுத்துக் கொள்ளேன். கவி இயற்றும் திறமைக்காகச் 'சாகித்யராய' என்ற கழலினை இடதுகாலில் அணிந்து கொண்டிருப்பவர்தானே! இவ்வளவும் எதற்கு? உனக்கே காவியம் எழுதும் எண்ணம் வந்திருக்கிறது. அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டு இருக்கிறாய். நீ எழுதிய காவியத்தைக் கூடப் பிற்காலத்தில் வேறு ஒரு கவிஞர் எழுதியது என்றுகூடச் சொல்லும் நிலைமை வரலாம்.''

இதைக் கேட்டவுடன் மதுரவாணியின் முகம் திடீரென்று மலர்ந்தது.

''நிஜமாகவா இளவரசே? காவியம் இயற்றப் போகிறீர்களா? அதைப் பற்றி நான் தெரிந்து கொள்ளலாமா?'' பரபரப்புடன் கேட்டாள்.

மன்னார்தாசன் அவளை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தலை குனிந்து கொண்டான். பதில் வரவில்லை.

மதுரவாணி உடனே ரங்காஜம்மாவைப் பார்த்து ''பாருங்கள் அன்னையே. இளவரசர் எனக்குப். பதில்

சொல்வதற்குக்கூடத் தயங்குகிறார். இந்த நாட்டின் வருங் கால மன்னர் கேவலம் ஓர் அமைச்சரின் மகளுடன் சரிசமமாகப் பேசவேண்டுமோ என்று தயங்குகிறார் போலி ருக்கிறது. அப்படித் தாங்கள் எண்ணி இருந்தால் என்னை மன்னித்து விடுங்கள் மன்னர் பெருமானே'' என்று வருத் தத்துடன் கூறினாள்.

இதைக் கேட்டவுடன் பதறிப் போன மன்னார்தாசன் அவளை உடனே ஏறிட்டுப் பார்த்து ''அப்படி எல்லாம் இல்லை மதுரவாணி'' என்றவன் அவளுடைய கண்களின் நேர்த் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் மீண்டும் தலை குனிந்தவாறு, ''இன்னும் நான் காவியம் எழுதுவது பற்றி முடிவு எதுவும் எடுக்கவில்லை. அதனால்தான் சொல்வதற் குத் தயங்கினேன்'' என்றான்.

சரியாக அந்தச் சமயத்தில்தான் தஞ்சை மன்னன் விஜய்ராகவ நாயக்கனின் ஆணைக்கு கட்டுப்பட்டுத் தள வாய் ரங்கப்ப நாயக்கன் ரங்காஜம்மா வீட்டு வாசலை அடைந்திருந்தான்.

வீட்டு வாசலில் இளவரசன் மன்னார்தாசனின் குதிரை கட்டப்பட்டு இருப்பதைப் பார்த்து இளவரசன் இங்குதான் இருக்கிறான் என்பதை உணர்ந்தவனாய், பக்கத்தில் பல் லக்கு ஒன்று வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தவுடன் அவ னுக்குச் சற்றுக் குழப்பம் ஏற்பட்டது.

'பல்லக்கில் யார் வந்திருப்பது?' என்று அவன் யோசித்தபொழுது அவனைப் பார்த்து ஓடி வந்த பணிப் பெண்ணைப் பார்த்து கேட்டான்.

''இது யாருடைய பல்லக்கு? இதில் யார் வந்திருக்கி றார்கள்?''

''அமைச்சரின் மகள் மதுரவாணி அம்மையார் வந்திருக்கிறார்.''

''கோவிந்த தீட்சிதரின் மகள் மதுரவாணியா?''

''ஆம்.''

''எதற்கு வந்திருக்கிறாள்.''

''தெரியவில்லை. உள்ளே ரங்காஜம்மாவுடன் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்.''

''இளவரசர் உள்ளே இருக்கிறாரா?''

''ஆம், மூவரும்தான் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்.''

இதைக் கேட்டவுடன் தளவாய் மூளை துரிதமாக வேலை செய்தது. மன்னார்தாசனும், மதுரவாணியும் ஒன்றாக இங்கே வந்து பேசுகிறார்களா? அன்று ஆரத்தி எடுக்கும்போது இருவரும் ஏதோ பேசினார்கள். கேட்டதற்கு இருவருமே இல்லை என்று சாதித்தார்கள். ஆனால், இங்கு இப்படி ஒரு சந்திப்பு நிகழ்கிறதா? கவனிக்க வேண்டுமே!

உள்ளே ரங்காஜம்மா மதுரவாணியைப் பார்த்து, ''என் மைந்தன் நீ நினைப்பதுபோல் எந்தப் பாகுபாடும் பார்ப்பவனல்லன் குழந்தாய். இவன் என் வயிற்றில் பிறக்கவில்லையே என்று எத்தனை முறை ஆதங்கப்பட்டிருக்கிறேன் தெரியுமா?'' என்று அவள் பேசி முடிக்கும் பொழுது, பணிப்பெண் ஒருத்தி வேகமாக அங்கு வந்தாள்.

''அம்மா, தளவாய் ரங்கப்பநாயக்கர் வந்திருக்கிறார்'' என்றாள்.

ரங்காஜம்மா உடனே எழுந்து, ''நீங்கள் பேசிக் கொண்டிருங்கள். நான் சற்று நேரத்தில் வந்து விடு கிறேன்'' என்று சொல்லியவாறு நடக்க ஆரம்பித்தாள்.

ரங்காஜம்மா அந்த அறையை விட்டு அகன்றதும், மதுரவாணி இளவரசனை ஏறிட்டுப் பார்த்தாள். மன்னார் தாசன் தலைக் குனிந்தவாறு உட்கார்ந்திருந்தான். அதனைப் பார்த்தவுடன் அவளுக்கு உள்ளுக்குள் கோபம் எழுந்தது. ஏறிட்டுப் பார்த்து விட்டால்தான் என்ன? உங்களைக் கடித்தா விழுங்கிவிடப் போகிறேன்.

''என்ன இளவரசே, அன்னையார் பேச்சுக்கு மதிப்புத் தர மாட்டீர்களா?'' என்று சிரித்தவாறு கேட்டாள்.

உடனே அவளை ஏறிட்டுப் பார்த்த மன்னார்தாசன் அவள் சொன்னது புரியாமல் 'என்ன சொல்கிறாய் மதுர வாணி?' என்றான்.

''அப்பா! இப்பொழுதாவது என் பெயர் தங்கள் நினைவுக்கு வந்ததே! எங்கே மறந்து விட்டீர்களோ என்று நினைத்தேன்.''

தர்மசங்கடமாகப் புன்னகை பூத்த மன்னார்தாசன், ''வேறு என்னவோ சொன்னாயே, அன்னையின் பேச்சை நான் மதிக்கவில்லை என்று அது என்ன?'' என்றான்.

''நீங்கள் இருவரும் பேசிக் கொண்டு இருங்கள் என்று சொல்லிவிட்டுப் போனார். நீங்களோ தலையைக் குனிந்து கொண்டு இருக்கிறீர்களே! அதுதான் கேட்டேன். என்னு டன் பேசுவதற்கு என்ன தயக்கம்?''

''இல்லை... என்ன பேசுவதென்று...'' மேலே பேச முடியாமலும், அவளது பார்வையில் இருந்த கூர்மையைத் தாங்க முடியாமலும் மறுபடியும் தலை குனிந்தான்.

''நான் முதலில் கேட்டதற்குத் தாங்கள் பதில் சொல்ல வில்லையே? அதைப் பற்றிப் பேசுங்களேன்.

''என்ன கேட்டாய்?'' புரியாமல் விழித்தான்.

''என்னைப் பார்த்தவுடன் இங்கிருந்து கிளம்ப யத்த னித்தீர்களே? என்னைப் பார்க்க உங்களுக்குப் பிடிக்கவில் லையா? இல்லை என்னுடன் பேச உங்களுக்குப் பிடிக்க வில்லையா? இளம் வயதில் நாம் இருவரும் சேர்ந்து விளையாடியதை மறந்து விட்டீர்களா?''

மன்னார்தாசன் இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வது என்று தயங்கியபொழுது, வாசற்பக்கம் சிலர் வரும் காலடி ஓசை தெளிவாக கேட்க ஆரம்பித்தது.

இதை உணர்ந்த மதுரவாணி இளவரசனைப் பார்த்து அவசரமாகச் சொன்னாள்.

''இப்பொழுது ஒன்றும் அவசரமில்லை. நான் கேட்ட தற்கு நீங்கள் நாளைக்குக் கூடப் பதில் சொல்லுங்கள். இனி நான் தினமும் காலையில் இங்கு வரப் போகிறேன். நீங்களும் வந்து கொண்டுதான் இருப்பீர்கள். உங்களுக்கு என்று விருப்பமோ அன்று சொல்லுங்கள் போதும்'' என்று சிரித்தவாறு சொன்னாள்.

மதுரவாணி இதனைச் சொல்லி முடித்த வேளையில் ரங்காஜம்மாவும் தளவாய் ரங்கப்ப நாயக்கனும் அந்த இடத்திற்குள் நுழைந்தனர்.

இளவரசன் மன்னார்தாசனும், அமைச்சர் மகள் மதுர வாணியும் எதிர் எதிரே அமர்ந்தவாறு சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்த தளவாயின் முகம் மாறியது.

தொடர்ந்து ரங்கப்ப நாயக்கன் பேசியது இளவரசனுக் குக் கோபத்தை விளைவித்தது.



# 43

சொக்கநாதன் தஞ்சை இளவரசி சந்திரவதனாவைத் தன்னுடைய மார்போடு சாய்த்துக் கொண்டு, தொன்னையில் இருந்த கொம்புத் தேனைக் கொஞ்சம் கொஞ்சமாக அவள் இதழ்களின் வழியே புகட்டியதும், சந்திரவதனாவிற்குக் கிறக்கம் தெளிந்து, புத்துணர்ச்சி பெருகத் தொடங்கியது.

தொடர்ந்து சொக்கநாதன் தனது நண்பன் கொணர்ந்து வந்த சுனைநீரையும், அவள் வாயில் பருகக் கொடுத்து மிச்சமிருந்த தண்ணீரை அவள் முகத்தில் ஊற்றிக் கழுவியதும் சந்திரவதனாவிற்குப் பழைய தெம்பு திரும்ப வர ஆரம்பித்தது.

என்னதான் பாதி மயக்கத்திலும் கிறக்கத்திலும் அவள் திளைத்திருந்தாலும், சொக்கநாதன் தன்னை மார்போடு அணைத்துக் கொண்டிருப்பதை அவளது உணர்ச்சிகள் அறிவித்துக் கொண்டுதான் இருந்தன. அவன் அணைப்பில் இருந்து விடுபட அவள் மனம் விரும்பினால் கூட அவள் உடல்பலம் அவளைச் செய்ய விடாமல் தடுத்திருந்தது.

இப்பொழுது பழைய தெம்பும், புத்துணர்ச்சியும் திரும்பவும் வரப்பெற்ற சந்திரவதனா முதலில் சொக்கநாதனின் அணைப்பில் இருந்து விடுபட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். அப்பொழுது சொக்கநாதன் அவள் முகத்தில் படிந்த நீரைத் துணியால் துடைக்க முயன்றபொழுது அவளது பெண்மை எச்சரித்தபடியால் அவன் கையில் இருந்த துணியைக் கைப்பற்றித்தானே தனது முகத்தைத் துடைத்துக் கொள்ளத் தொடங்கினாள்.

அதன் பிறகு தன்னருகே அன்பும் பரிவும் முகத்தில் தேக்கியவாறு நிற்கும் சொக்கநாதனை ஏறிட்டுப் பார்த்தாள். அவளது பழைய நினைவுகள் பளிச் என்று நினைவுக்கு வந்தன.

தஞ்சைப் படைகளே யானையின் அட்டகாசத்தைக் கண்டு மிரண்டு ஓடியபொழுது இவர்தானே என்னைக் காப்பாற்ற ஓடோடி வந்தார்! எத்தனை வீரம்! எத்தனை துணிச்சல்!

ஒரு சாயலுக்கு இவரைப் பார்க்கும்பொழுது நேற்று இரவு நடு ஜாமத்தில் எனது கூடாரத்தைக் கிழித்துக் கொண்டு உள்ளே குதித்தவர் போல் தோன்றுகிறதே! அவர்தானா?

கூர்ந்து சொக்கநாதனையே இமைக்காமல் பார்த்தாள். ஆம், அவரேதான்! நேற்றும் இவர் வீரம் என்னை மலைக்க வைத்தது. இன்று இவர் காட்டிய வீரம் பிரமிக்க வைத்து விட்டது!

யார் இந்த வீரர்? இவர் மனிதப் பிறவிதானா? இல்லை வானத்தில் இருந்து இறங்கி வந்த கந்தர்வனா? ஒரு வேளை இது கனவுதானா?

கண்களைக் கசிக்கிக். கொண்டு சொக்கநாதனையே கூர்ந்து பார்த்தாள்.

''என்ன சந்திரவதனா அப்படிப் பார்க்கிறாய்?'' என்று சிரித்தவாறு கேட்டான் சொக்கநாதன்.

சந்திரவதனா மெதுவாக எழுந்து நின்றாள். தனது ஆடைகளைச் சரிப்படுத்திக் கொள்ள முயன்றபொழுது, அவள் ஆடைகள் எந்த இடத்திலும் கலையாமல் இருப்பது தெரிந்தது.

தான் அரைகுறை மயக்கத்தில் இருந்தபொழுது இரண்டொரு முறை சொக்கநாதன் அவளது ஆடைகளைச் சரி செய்ய முயன்றது நினைவுக்கு வந்தது. இவ்வளவு பண்பு நிறைந்த இந்த வீரன் யார்?

''ரொம்ப நன்றி வீரரே! நீங்கள் யார் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று சொக்கநாதனைப் பார்த்துக் கேட்டாள்.

''நான் யார் என்பது இப்பொழுது முக்கியமில்லை சந்திரவதனா. நீ எப்படி இருக்கிறாய்? உன் மயக்கம் முற்றிலும் தெளிந்து விட்டதா? நின்றால் கிறக்கம் வருகிறதா? இன்னும் கொஞ்சம் தேன் அருந்துகிறாயா? உன் படபடப்பு குறைந்துவிடும்.''

தஞ்சை இளவரசியான தன்னை முன்பின் தெரியாத யாரோ ஒருவன் நீ என்று ஒருமையில் அழைத்தது அவளுக்கு மனக்குறையை ஏற்படுத்தியபொழுதிலும், தன் உயிரைக் காப்பாற்றிய வீரன் என்ற நினைப்பு அதனைப் பெரிது படுத்தவில்லை.

''எல்லாம் சரியாகிவிட்டது வீரரே! உங்களுக்கு உங்களது வீராவேசமான செயலுக்கு என் மயக்கத்தை தெளிய

வைக்க அரும்பாடுபட்ட அன்பிற்கு நான் எப்படி நன்றி சொல்வது என்றே எனக்குப் புரியவில்லை. நீங்கள் யார்?''

இந்தக் கேள்விக்கு சொக்கநாதன் பதில் சொல்லாது, பேச்சை மாற்றினான்.

''சற்று நடந்துபார் சந்திரவதனா. முதலில் கிறக்கம் தணிந்திருப்பதுபோல் தோன்றினாலும், நடக்க முயலும் பொழுது மறுபடியும் மயக்கம் ஏற்படும். அதனால் சற்று நேரம் நட. மறுபடியும் மயக்கம் வந்தால் சில பச்சிலைச் சாற்றைத் தேனுடன் கலந்து கொடுக்க வேண்டும்'' என்ற வாறு சொக்கநாதன் நடக்க ஆரம்பித்தான்.

சந்திரவதனாவும் அவனுடன் சேர்ந்து நடக்க ஆரம்பித் தாள். வெங்கடகிருஷ்ணன் இரண்டு குதிரைகளின் லகான்க ளையும் பிடித்தவாறு அவர்களைப் பின் தொடர்ந்தான்.

நாலடி எடுத்து வைத்ததுமே சந்திரவதனாவிற்கு மறு படியும் தலை சுற்றுவது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. பிறகு நடக்க, நடக்க அதுவும் தெளிவாகிப் பழைய நிலைக்கே திரும்பி வந்துவிட்ட தெம்பு ஏற்பட்டது.

சற்று தூரத்தில் அவள் ஏறி வந்த யானை அலங்கோல மாகத் தரையில் விழுந்து கிடப்பது தெரிந்தது. அதனைப் பார்த்ததும் அவள் உடல் லேசாக நடுங்கியது. என்ன பாடு படுத்திவிட்டது இந்த யானை!

''கடந்த ஏழு நாட்களாக இந்த யானையின் மீதுதான் வந்து கொண்டிருந்தேன். இத்தனை நாட்களும் நன்றாக இருந்த யானைக்கு இன்றைக்கு மட்டும் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை? வெறியாட்டம் ஆடி என்ன பாடுப டுத்திவிட்டது'' என்றாள் சந்திரவதனா.

''யானை எதனால் அப்படி வெறியாட்டம் ஆடியது என்று உனக்குத் தெரியவில்லையா? சந்திரவதனா?'' என்றான் சொக்கநாதன்.

''தெரியவில்லையே! என்ன காரணம்?'' என்று அவன் முகத்தைப் பார்த்து ஆவலுடன் கேட்டாள்.

''யானையின் அருகில் வா காட்டுகிறேன். அதன்பிறகு உனக்கே புரியும்.''

மூவரும் செத்துக்கிடந்த யானையின் அருகே வந்து நின்றார்கள். கரிய மலைக்குன்று ஒன்று சாய்ந்து கிடப்பதைப் போல் கால்களையும், தும்பிக்கையையும பரத்திப் போட்டுக் கிடந்தது அந்தக் கரி.

வெட்டுப்பட்ட தும்பிக்கையில் இருந்தும், சொக்கநாதன் குறுவாளால் பிளந்திருந்த தலைப் பாகத்தில் இருந்தும் இரத்தம் பெருக்கெடுத்து ஓடிப் புற்றரையில் பரவி உறைந்து இருந்தது. அதன் வாய் வானைப் பார்த்து பிளந்திருக்க, கண்கள் மூடி இருந்தன. உறைந்த குருதியின் மீது ஈக்களும், எறும்புகளும் மொய்த்துக் கொண்டிருந்தன.

குத்துப்பட்டுப் பிளந்த யானைத் தலையை சில பறவைகள் கொத்திக் கொண்டிருந்தன. மூவரும் யானையின் உடலருகே நெருங்கியதும் அவை கத்திக் கொண்டு பறந்தன.

சொக்கநாதன் சந்திரவதனாவை யானையின் காதருகே அழைத்து வந்தான். குனிந்து உட்கார்ந்து யானையின் காதை மறைத்துக் கொண்டிருந்த முகபடாமை விலக்கிக் காட்டினான்.

''இந்த இடத்தை உற்றுப் பார் சந்திரவதனா, ஏதாவது தெரிகிறதா?'' என்றான்.

சந்திரவதனா அவனருகில் மண்டியிட்டு அமர்ந்து அவன் காட்டிய பகுதியை உற்றுப் பார்த்தாள். அடுத்த விநாடி மூக்கைப் பொத்திக் கொண்டு சொன்னாள்.

''காதருகே ஏதோ ஓட்டை தெரிகிறது. அதிலிருந்து கறுப்பாக ஏதோ ஒரு திரவம் கசிந்து துர்நாற்றம் வீசுகிறதே! யானைக்கு அடி ஏதாவது பட்டிருக்குமோ?''

''அடிபடவில்லை. மதம் பிடித்ததற்கான அறிகுறி.''

''மதமா?'' அதிர்ச்சியுடன் கேட்டாள்.

''ஆமாம். மதம் பிடித்த யானைக்குத்தான் காதருகே இப்படி ஒரு கரிய திரவம் சுரக்கும். இதற்கு மதநீர் என்று பெயர். மதம் பிடித்த யானை இமயமலையை தூள்தூளாக்கி விடும் வெறி கொண்டிருக்கும். இது தெரியாமல் உங்கள் படையினர் இன்னொரு தவறும் செய்திருக்கிறார்கள்?''

''என்ன தவறு?''

''யானையின் வாயை முகர்ந்து பார்''

சந்திரவதனா அவன் சொன்ன மாதிரியே முகர்ந்து பார்த்து விட்டு மறுபடியும் மூக்கைப் பிடித்துக் கொண்டு ''புளிப்பு வாசனை தெரிகிறது'' என்றாள்.

''அது வேறு ஒன்றும் இல்லை. கள்ளை ஊற்றிக் குடிக்க வைத்திருக்கிறார்கள். மதவெறியும், கள் வெறியும் ஒன்றாக சேர்ந்து கொண்டதால்தான் யானை இந்த அட்டகாசம் செய்தது.''

இதைக் கேட்டவுடன் இளவரசி எழுந்து பயத்தில் நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள். இந்த மாவீரன் மட்டும் வராமல் போயிருந்தால், கள் குடித்த இந்தக் கடாக் களிற்றில் இருந்து என்னைக் காப்பாற்ற இந்தக் கங்கை

கொண்ட சோழீஸ்வரனால்கூட முடியாதோ என்ற உணர்வில் அவள் மேனி சிலிர்க்க உடல் லேசாக நடுங்கியது.

''எவ்வளவு முட்டாள் தனமான காரியத்தைச் செய்திருக்கிறார்கள். உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று எனக்குப் புரியவில்லை. தயவு செய்து என்னுடன் தஞ்சாவூருக்கு வாருங்கள். என் தந்தையிடம் சொல்லித் தங்களுக்கு தகுந்த சன்மானம் அளிக்கச் சொல்கிறேன்'' என்றாள்.

''எனக்குத் தேவையானது உன் தந்தையிடம் இல்லை இளவரசி.''

''பிறகு யாரிடம் இருக்கிறது? சொல்லுங்கள். அது என்னவாக இருந்தாலும் என் தந்தையிடம் சொல்லி எப்பாடுப் பட்டாவது வரவழைத்துத் தரச் சொல்கிறேன்.''

''அது உன்னிடம்தான் இருக்கிறது'' என்று அவள் கண்களை உற்றுப் பார்த்தான் சொக்கநாதன்.

இதைக் கேட்டவுடன் சற்றுத் தடுமாறிய சந்திரவதனாவின் முகத்தில் அடுத்த விநாடியே கோபம் எட்டிப் பார்த்தது.

''நீங்கள்தானே நேற்று இரவு என் கூடாரத்திற்குள் வந்து குதித்தது?''

''ஆமாம்.''

''எதற்காக அப்படி ஒரு காரியம் செய்தீர்கள்?''

''அதுதான் நேற்றே சொன்னேனே, உன்னை அருகில் வந்து பார்ப்பதற்கு என்று! நேற்றும் அழகாகத்தான் இருந்தாய்! இன்றும் அழகாகத்தான் இருக்கிறாய்!''

சந்திரவதனாவிற்கு கோபம் கொப்பளிக்கத் தொடங்கியது.

''வீரரே, நீங்கள் யார் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த நாட்டின் இளவரசியிடம் பேசுகிறோம் என்ற நினைப்பு தங்களிடம் கொஞ்சம்கூட இல்லை. என் உயிரைக் காப்பாற்றியதற்கு நன்றி. அதற்காக என்ன சன்மானம் கேட்டாலும் தருகிறேன். ஆனால் இப்படித் தகாத எண்ணங்களுடன் இனி என்னிடம் தயவு செய்து வராதீர்கள்!''

அதே நேரம் பெருத்த ஆரவாரத்துடன் தஞ்சைப் படைகள் அவர்கள் நிற்கும் இடத்தை நெருங்க ஆரம்பித்தன. அதனை ஏறிட்டுப் பார்த்த வெங்கடகிருஷ்ணன், சொக்கநாதன் காதருகில் கிசுகிசுத்தான்.

''இவளுக்கு இருக்கிற திமிரைப் பார்த்தாயா? இப்பொழுது ஒன்றும் கெட்டுவிடவில்லை. இவளைத் தூக்கிக் குதிரையில் ஏற்றிக் கொண்டு மதுரைக்குப் பறந்துவிடலாம். அங்கு போனால் இவளது திமிர் தானாக அடங்கிவிடும். ம். சீக்கிரம். தஞ்சைப் படைகள் நம்மை நெருங்கிக் கொண்டிருக்கின்றன.''

சொக்கநாதன் அதற்கு நிதானமாக, ''வேண்டாம் அந்த நினைப்பு'' என்று மட்டும் கிசுகிசுத்தான்.

சந்திரவதனா அவர்கள் இருவரும் ரகசியமாகப் பேசுவதைச் சற்றுப் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். தஞ்சைப் படைகளின் ஆரவாரமும் இளவரசி வாழ்க! என்ற கூக்குரலும் வெகு அருகில் கேட்கத் தொடங்கியது.

சொக்கநாதன் இளவரசியின் அருகில் இன்னும் நெருங்கி வந்தான்.

''சந்திரவதனா, எனக்கு நீதான் வேண்டும். நீயே என்னை விரும்பிவரும் வரை நானும் உன்னைவிடப் போவதில்லை. இப்போதைக்கு நான் செல்கிறேன். விரைவில் உன்னைச் சந்திக்கிறேன்''

இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தவுடன் சொக்க நாதன் தனது குதிரையில் ஏறினான். தஞ்சைப் படைக ளுக்கு எதிர்த்திசையில் இருவரது குதிரைகளும் திரும்பின.

''வீரரே! வீரரே! சற்று நில்லுங்கள்.''

சந்திரவதனாவின் வார்த்தைகளைச் சட்டைப் பண்ணா மல் அவர்களது குதிரைகள் பறக்க ஆரம்பித்தன. சற்று நேரம் அந்தத் திசையையே வெறித்துப் பார்த்துக் கொண்டி ருந்தாள்.

சொக்கநாதன் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் அவளுக்கு எரிச்சலை வரவழைத்தது. நானாக அவனை விரும்பிச் செல்வேனாமே! அதிலும் ஊர் பேர் தெரியாத எவனோ ஒருவனைத் தேடியா? அது இந்த ஜென்மத்தில் நடக்காது. உயிரைக் காப்பாற்றியதற்காக நன்றி கூறினால் மடியைக் கேட்கிறானே! பேராசைக்காரன்!

இருந்தாலும் அவன் யார் என்று தெரிந்து கொள்வதற் குள் போய்விட்டானே!

அப்பொழுது தஞ்சைப் படைகள் அவளருகே வந்து நின்று 'இளவரசி வாழ்க' என்று முழக்கம் இட்டது. அச்சுதப்பன் வேகமாகக் குதிரையில் வந்து அவளருகே குதித்து நின்றான்,

''நல்லவேளையாக உனக்கு ஓர் ஆபத்தும் ஏற்படவில் லையே! டேய் குதிரையில் செல்லும் அந்தப் பதர்களைப் பிடித்து இழுத்து வாருங்கள்'' என்று அச்சுதப்பன் கோப மாக உத்தரவிட்டான்.

உடனே சில குதிரை வீரர்கள் தயாராக ஓடிவர, இளவரசி அவர்களைத் தடுத்து நிறுத்திக் கோபத்துடன் அச்சுதப்பனைப் பார்த்துக் கேட்டாள்.

''எதற்காக அவர்களைப் பிடிக்கச் சொல்கிறீர்கள்?''

''நேற்று அவன்தான் உன் கூடாரத்தைக் கிழித்து உள்ளே குதித்தான். இன்றுகூட அவன்தான் யானைக்கு ஏதோ செய்திருக்க வேண்டும். பார், எங்களைப் பார்த்தவுடன் பயந்து ஓடுவதை!''

''நிறுத்துங்கள். அந்த வீரர் இல்லாவிட்டால், இப்பொழுது என்னை நீங்கள் உயிரோடு பார்க்கவே முடியாது.''

படைகள் ''இளவரசி வாழ்க'' என்று முழக்கம் இட்டன. சந்திரவதனா அவர்களைத் திரும்பிக் கடுமையாக முறைத்தாள்.

''இத்தனை பேர் இருந்தும் ஒரு யானையைக் கொல்ல முடியாமல் ஓடி ஒளிந்து கொண்டீர்கள். இப்பொழுது வந்து 'வாழ்க' என்று முழக்கமிடுகிறீர்களே உங்களுக்கு வெட்கமாயில்லை. வாயை மூடுங்கள்.''

உடனே அங்கு பெருத்த அமைதி நிலவியது.

''இருந்தாலும் சந்திரவதனா எனக்கு அவர்கள் மீது தான் சந்தேகமாக இருக்கிறது. யானைக்கு ஏதோ மந்திரம் போட்டு, உன்னைக் காப்பாற்றுவது மாதிரி நடித்திருப்பார்கள். அவர்களைத் தப்பவிட்டது தவறுதான்'' என்றான் அச்சுதப்பன்.

''நெஞ்சில் உறுத்தல் இல்லாமல் எப்படி உங்களால் இப்படிப் பேச முடிகிறது? யானைக்குப் பயந்து நீங்கள் ஓடிய ஓட்டத்தை நான் பார்த்துக் கொண்டிருந்தவள்தான். 'காப்பாற்றுங்கள்' என்று நான் கதறியதைக்கூட நீங்கள் பொருட்படுத்தாமல், உங்கள் உயிர்தான் பெரிது என்று ஓடிவிட்டு, இப்பொழுது வந்து குதிக்கிறீர்களே நீங்கள் எல்லாம் ஒரு வீரரா?''

அச்சதப்பன் தலை குனிந்தான். பின்புறத்தில் தேனீ கொட்டிய இடம் வீங்கி அரிப்பு எடுத்தது. இளவரசி முன்னால் சொறிந்து கொள்ளவும் அவனுக்கு வெட்கமாக இருந்தது.

''இந்த யானைக்குக் கள்ளை ஊற்றிக் கொடுத்த மடையன் யார்?'' என்று கோபம் கொப்பளிக்கக் கேட்டாள்.

ஒரு வீரன் தயக்கத்துடன் அவளருகில் வந்து ''யானை அயர்ச்சியுடன் இருக்கிறது. அதனால் கள்ளை ஊற்றிக் கொடு என்று நமது தளவாய் அச்சுதப்பர் சொன்னதனால், நான்தான் ஊற்றிக் கொடுத்தேன். என்னை மன்னித்து விடுங்கள் இளவரசி'' என்று காலில் விழுந்தான்.

சந்திரவதனா திரும்பி அச்சுதப்பனை முறைத்தாள்.

''யானைக்கு மதம் பிடித்திருக்கிறது என்பதைக் கவனிக்காதது முட்டாள்தனம். அதற்குக் கள்ளை ஊற்றிக் குடிக்கச் செய்தது அதைவிட முட்டாள்தனம். இப்படி பொறுப்பும், புத்திசாலித்தனமும் அறவே இல்லாத உங்களை ஒரு வீரர் என்று சொல்வதே இழுக்கு. உங்களை எனக்குப் பாதுகாப்பாக அனுப்பிய என் தந்தை எவ்வளவு பெரியத் தவறைச் செய்திருக்கிறார், அச்சுதப்பரே. இனி நீங்கள் என் கண்ணிலேயே படக்கூடாது. தஞ்சை செல்லும் வரை என் பாதுகாப்பை நானே பார்த்துக் கொள்கிறேன். ம். போங்கள்.''

அச்சுதப்பன் தலையைக் குனிந்தவாறு நகர்ந்தான். சந்திரவதனா பல்லக்கில் ஏறி உட்கார்ந்தாள். சொக்கநாதன் சென்ற திசையை ஏறிட்டுப் பார்த்தாள். அவர்கள் கண்களில் தட்டுப்படவே இல்லை. இளவரசியின் இதயத்திலிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

சொக்கநாதனும் வெங்கடகிருஷ்ணனும் தஞ்சைப் படைகளின் கண்களில் இருந்து மறைந்து காட்டுப் பகுதிக்குள் நுழைந்தனர்.

''சொக்கநாதா, தஞ்சை இளவரசி பேசிய வார்த்தைகளைப் பார்த்தாயா? அழகி என்ற மமதை அவளுக்குள் நிறைய இருக்கும்போல் தெரிகிறதே!''

''மமதை கொண்ட பெண்ணை மண்டியிட வைப்பதில் ஒரு சுகம் இருக்கிறது கிருஷ்ணா. சந்திரவதனா எனக்காக ஏங்கும்படி அவள் மனதை மாற்றிக் காட்டாமல் நான் விடப் போவதில்லை'' என்றவாறு குதிரையை வேறுபக்கம் திருப்பினான் சொக்கநாதன்.

''என்ன சொக்கநாதா, இது தஞ்சைக்குச் செல்லும் வழி இல்லையே! இந்தப் பாதை திருச்சிராப்பள்ளிக்கு அல்லவா செல்லும்.''

''ஒரு முக்கியமான திட்டம் இருக்கிறது. அதனை நிறைவேற்ற இப்பொழுது நாம் இருவரும் திருச்சிராப்பள்ளிக்குச் சென்றே ஆகவேண்டும்'' என்றான் சொக்கநாதன் தீர்மானமாக.



# 44

தஞ்சைத் தரணியின் தளவாய் ரங்கப்ப நாயக்கன் கவிதாயினி ரங்காஜம்மா பின் தொடர அந்த அறைக்குள் நுழைந்தபொழுது, இளவரசன் மன்னார்தாசனுடன் அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் மகள் மதுரவாணி சிரித்துப் பேசிக் கொண்டு இருக்கும் காட்சியைக் கண்ணுற்றான்.

அதே நேரம் தளவாய் உள்ளே நுழைந்ததைப் பார்த்தவுடன் மதுரவாணி மறுவிநாடியே தன் பேச்சைத் துண்டித்துவிட்டு கையிலிருந்த ஓலைச் சுவடியைப் படிப்பது போல தலையைக் குனிந்து கொணடாள். அதனையும் ரங்கப்ப நாயக்கனின் கண்கள் கவனிக்கத் தவறவில்லை.

''இளவரசருக்கு என் வணக்கம்'' என்று மன்னார்தாசனைப் பார்த்துப் பணிவுடன் வணங்கினான் ரங்கப்பன்.

''என்னைத் தேடிக் கொண்டா இவ்வளவு தூரம் வந்திருக்கின்றீர்கள் மாமா?'' என்று வியப்புடன் வினவினான் இளவரசன்.

''ஆம் மருமகனே. சற்று மன்னர் மன்னர் என்னை அழைத்துக் கொண்டு பொக்கிஷ அறைக்குள் சென்றார்.

அதன் ஈசான மூலையில் பதினாறு பெட்டிகள் நிறையப் பொற்காசுகள் இறைப்பணிக்கு என்று ஒதுக்கி வைத்திருக்கின்றோம் இல்லையா? அந்தப் பெட்டிகளுக்கான திறவு கோல்களைக் கேட்டார். அவை தங்களிடம் இருப்பதாகக் கூறினேன். உடனே அவற்றை வாங்கி வரும்படி எனக்கு கட்டளையிட்டார்.''

''எதற்கு அவ்வளவு அவசரம்?''

''ராஜகோபால சுவாமி கோயிலுக்கு அன்னதானத்திற்காகப் பதினாயிரம் பொற்காசுகள் இன்றைக்கு அனுப்ப வேண்டுமாம்.''

''அன்னதானம் என்ற பெயரில் அரண்மனைப் பொக்கிஷத்தை இறைப்பது அறிவீனமான செயல் என்று என் தந்தைக்கு எப்படிப் புரிய வைப்பது என்று தெரியவில்லை'' என்று வருத்தத்தோடு சொன்னான் மன்னார்தாசன்.

''அப்படிச் சொல்லாதே மகனே! ஏழை, எளிய குடிமக்களுக்குத் தான தருமம் செய்வது மன்னரின் கடமைகளில் ஒன்று. அன்னதானம் செய்யும் வழக்கம் ஆண்டாண்டு காலமாய் அரசர்களுக்கு இருந்து வருகிறது. இதனை அறிவீனமான செயல் என்று நினைக்காதே மகனே!'' என்றாள் ரங்காஜம்மா.

''பரம்பரை பரம்பரையாகச் செய்துவரும் வழக்கம் என்பதற்காக எதனையுமே கண்களை மூடிக் கொண்டு செய்ய நினைப்பது தவறு அன்னையே! சற்றுச் சிந்தித்துப் பார்த்து, தீர ஆராய்ந்துதான் செயல்பட வேண்டும். அதிலும் குடிமக்களிடம் இருந்து பெறும் வரிப்பணத்தைச் செலவிடுவதில் இன்னும் ஆழ்ந்து யோசனை செய்ய வேண்டியது மன்னரின் கடமை.''

''ஏழை, எளிய மக்களுக்கு அன்னதானம் செய்வது எனக்கு ஒன்றும் அநாவசியமான செயலாகத் தோன்ற வில்லை.''

''இதனை மேலோட்டமாகப் பார்க்காதீர்கள் அன் னையே! சற்று ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள். அன்ன தானம் எதற்கு அளிக்கிறார்கள்?''

''இதில் என்ன சந்தேகம்? ஏழை, எளிய மக்களுக்குத் தான்.''

''இந்த ஏழை, எளிய மக்கள் எந்த நாட்டைச் சேர்ந்த வர்கள்?''

''நமது நாட்டைச் சேர்ந்தவர்கள்தான்.''

''நமது நாட்டில் ஒருவேளைச் சாப்பாட்டிற்குக்கூட வழி இல்லாத ஏழை மக்கள் இருக்கிறார்கள் என்றால், அது மன்னருக்குத்தானே அவமானம். அவரது கையாலா காத ஆட்சியை அல்லவா இது எடுத்துக் காட்டுகிறது.''

''அப்படிச் சொல்லாதே மகனே! அந்தப் பழியினைப் போக்குவதற்காகத்தானே அன்னதானம் செய்கிறார்.''

''என்றோ ஒருநாள், ஒருவேளை அந்த ஏழை மக்க ளுக்கு உணவளித்துவிட்டால் அவர்கள் பசி தணிந்து விடுமா, இல்லை வறுமைதான் முற்றிலும் அகன்றுவிடு மா?''

''சரியான கேள்வி மருமகனே! ஆனால், இதையெல் லாம் நாங்கள் கேட்க முடியாது. உன்னைப் போன்ற அறிவுள்ளவர்கள்தான் அரசரைக் கேட்க முடியும்'' என் றான் தளவாய் ரங்கப்பன்.

இளவரசனை இப்படித் தூண்டி விட்டால் தான் அவன் மன்னரைக் கேட்பான். மன்னனுக்கு மைந்தன் மீது வெறுப்பு தோன்றும் என்ற எண்ணம் தளவாய்க்கு.

மதுரவாணிக்கோ இளவரசனின் புத்திசாலித்தனமான வாதங்கள் அவள் மனதை ஈர்க்கச் செய்தன. தானும் அவர்கள் பேச்சில் கலந்து கொள்ள ஆர்வம் இருந்தது. ஆனால் தளவாய் முன்பு இளவரசனுடன் பேசுவதற்குப் பயமாகவும் இருந்தது. அதனால் தலையைக் குனிந்தவாறே, மன்னார்தாசனை ஓரக் கண்ணால் பார்த்து, அவன் பேச்சில் மயங்கிக் கொண்டிருந்தாள் மதுரவாணி.

''பிறகு என்னதான் செய்ய வேண்டும் என்கிறாய்?'' என்றாள் ரங்காஜம்மா.

''அன்னதானம் செய்வதற்கான பணத்தைக் கொண்டு ஏழை மக்களின் முன்னேற்றத்திற்காக, அவர்கள் சொந்தமாகத் தொழில் ஏதாவது தொடங்குவதற்கு உதவலாம். பணம் சிலரிடம் மட்டும் குவிவதைத் தடுக்கலாம்.''

''அற்புதமான திட்டம் மருமகனே! அன்னதானம் செய்வதை அடியோடு ஒழித்துவிட வேண்டும்'' என்றான் ரங்கப்பன்.

''அன்னதானமும் சில சமயம் அவசியம்தான். ஆனால் எப்பொழுது தெரியுமா?''

''எப்பொழுது'' விழித்தான் ரங்கப்பன்.

''புயல், மழை, கடல் அரிப்பு, தீ போன்ற இயற்கையின் சீற்றத்தில் நாட்டு மக்கள் தங்கள் உடைமைகளை இழந்து அல்லல் படும்பொழுது அன்னதானம் அவசியமான ஒன்று. அதேசமயம் ஆண்டவன் பெயரால் என்றோ ஒருநாள் ஏழைகளுக்கு அன்னதானம் இடுவது அர்த்தமில்லாத செயல்.''

''சரியாகச் சொன்னாய் மருமகனே! நீ கூறிய இத்தனை விஷயங்களையும் அப்படியே என்னால் அரசரிடம் சொல்லுவதற்கு எனக்குத் துணிச்சல் கிடையாது. இப்பொழுதே நீயும் என்னுடன் வந்து மன்னரிடம் சொன்னால் நலமாக இருக்கும்.''

''இப்பொழுது நான் கூறினால் கூட என் தந்தை உடனே உணர்ந்து கொள்ள மாட்டார்.''

''அப்படியானால் நீ கூறியதாக மன்னரிடம் சென்று சொல்லட்டுமா?''

''வேண்டாம். பல ஆண்டுகளாக ஊறிக் கிடக்கும் நம்பிக்கைகளை உடனடியாகப் போக்குவது சிரமமான காரியம். அவர் மனதைச் சிறிது சிறிதாக மாற்ற முயல்கிறேன்.''

இதைக் கேட்டவுடன் சற்று ஏமாற்றமாக உணர்ந்த தளவாய், அப்பொழுதுதான் அமைச்சர் மகள் மதுரவாணி அங்கே அமர்ந்திருப்பதைப் பார்த்தவன் போல் கண்களில் வியப்பை விரித்தான்.

''யாரது? அமைச்சர் மகள் மதுரவாணியா? நீயும் இங்கேதான் இருக்கிறாயா? இத்தனை நேரமும் உன்னைக் கவனிக்கவே இல்லையே!''

மதுரவாணி எழுந்து நின்று அவனை வணங்கினாள்.

''மதுரவாணி பாகவதம் கற்றுக் கொள்வதற்காக வந்திருக்கிறாள்'' என்றாள் ரங்காஜம்மா.

''அப்படியா! நன்றாகக் கற்றுக் கொள்ளட்டும். இளவரசர் ஏதற்காகத் தினமும் இங்கே வருகிறார் என்று இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது'' என்று ஓரக் கண்ணால் மதுரவாணியைப் பார்த்தபடி மன்னார்தாசனைப் பார்த்து சற்று இடக்காகக் கூறினான்.

''மாமா என்ன சொல்கிறீர்கள்?'' என்று கோபத்துடன் கேட்டான் மன்னார்தாசன்.

''மன்னர் என்னிடம் பொக்கிஷ அறையிலுள்ள பெட்டிகளின் திறவுகோல்களை உன்னிடமிருந்து உடனே வாங்கி வரும்படி சொன்னவுடன், நீ எங்கே இருக்கிறாய் என்று எனக்குத் தெரியவில்லை. பிறகு மன்னர்தான் என்னிடம் கூறினார். கவிதாயினி அம்மா அவர்களிடம் நீ தினமும் சென்று தெலுங்கு இலக்கியம் பற்றிப் பாடம் கேட்கிறாய் என்று. இதுநாள்வரை எனக்குத் தெரியாது. இப்பொழுது தான் எனக்குத் தெரிந்தது என்றேன்'' என்று வெகு சாமர்த்தியமாகப் பேச்சை மாற்றினான்.

பிறகு மதுரவாணியைப் பார்த்து ''நீயும் இங்கு தினமும் பாடம் கேட்க வருகிறாயா?'' என்றான்.

இதற்கு மதுரவாணி பதில் சொல்ல முயல்வதற்குள், ''ஆம் தளவாய் அவர்களே! பாகவதத்தில் உள்ள சில முக்கியமான தத்துவங்களை விளக்கிச் சொல்லுமாறு அமைச்சர்தான் எனக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்'' என்றாள் ரங்காஜம்மா.

''நன்றாகக் கற்றுக் கொள் மதுரவாணி. இளவரசரும் நீயும் இளம் வயதிலேயே ஒன்றாகக் கல்வி கற்றவர்கள் தானே! இப்பொழுது வாலிப வயதிலும் இருவரும் சேர்ந்து கற்றுக் கொள்ளும் வாய்ப்பு அமையப் பெற்றிருக்கிறது.''

''மாமா, அது கிடக்கட்டும். இப்பொழுது உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று எரிச்சலுடன் கேட்டான் மன்னார்தாசன்.

''பெட்டிகளின் திறவுகோல்கள் வேண்டும். கையோடு வாங்கி வரும்படி மன்னர் உத்தரவு.''

''வாருங்கள் தருகிறேன்'' என்றவாறு எழுந்தான் இளவரசன்.

''நீ சிரமப்பட வேண்டாம் மருமகனே! நீ இங்கேயே இருந்து மதுரவாணியுடன் பாடங்களைக் கற்றுக் கொள். திறவுகோல்களை மட்டும் கொடுத்தால் போதும். என்னால் உங்களுடைய படிப்புக்குப் பங்கம் ஏற்பட வேண்டாம்.''

''திறவுகோல்களை எப்பொழுதும் கையில் வைத்துக் கொண்டா திரிய முடியும்? அரண்மனையில் உள்ள எனது அறையில் வைத்திருக்கிறேன். வாருங்கள் எடுத்துத் தருகிறேன்.''

''உனது அறையில் எந்த இடத்தில் வைத்திருக்கிறாய் என்று சொல் போதும். நான் சென்று எடுத்துக் கொள்கிறேன். பாவம் ஆசையோடு பாடம் கேட்டுக் கொண்டிருந்தாய், அதனை எதற்குப் பாதியில் விட்டு வரவேண்டும்?''

''பாடம் முடிந்துவிட்டது. நானும் கிளம்பிக் கொண்டிருந்தேன். நீங்களும் வந்துவிட்டீர்கள். வாருங்கள் போகலாம்'' என்றவாறு எழுந்து நின்றான்.

மதுரவாணியின் இதயம் உள்ளுக்குள் படுவேகமாக அடித்துக் கொண்டிருந்தது.

தளவாய் ரங்கப்ப நாயக்கனின் பேச்சும், கடைவாயில் தெறித்த கபடமான புன்னகையும், இடையிடையே ஓரக் கண்ணால் மதுரவாணியைக் கவனித்ததும் அவள் மனதிற்குள் லேசான நடுக்கத்தினை வரவழைத்திருந்தது.

எந்த நரியின் பார்வையில் படாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று நினைத்தாளோ, அவனே இங்கு நேரில் வந்து விட்டது அவளுக்குக் கலக்கமாக இருந்தது. அதிலும் இங்கு வந்த முதல் நாளே இவன் பார்வையில் பட்டுவிட்டது அவளுக்குள் எரிச்சலைக் கிளப்பி விட்டது.

அவன் முன்னிலையில் இளவரசனை ஏறிட்டுப் பார்ப் பதற்கே அவளுக்கு அச்சமாக இருந்தது. அதே நேரம் இளவரசனும் கிளம்பி விட எழுந்தபொழுது அவள் மனம் இன்னும் படபடத்தது.

மன்னார்தாசன் மெதுவாக நடந்து ரங்காஜம்மா அரு கில் வந்து, அவள் கால்களில் விழுந்து வணங்கினான். அவள் ஆசீர்வாதம் வழங்கியவுடன், ரங்காஜம்மாவிடம் விடைபெற்றுக் கொண்டான்.

அடுத்து மரியாதைக்காகவாவது தன்னிடம் விடை பெற்றுக் கொள்வான். தளவாய் அருகில் இருப்பதால் இளவரசன் முகத்தை ஏறிட்டுப் பார்க்காமல் தலையை மட்டும் அசைக்க வேண்டும் என்று எண்ணினாள் மதுர வாணி. ஆனால், இளவரசனோ மதுரவாணி அங்கு இருப்ப தைச் சட்டையே பண்ணாதவன்போல் விறுவிறு என்று நடக்க ஆரம்பித்தான்.

விடை பெற்றுக் கொள்ளாவிட்டாலும் ஒரு பார்வை யையாவது தன்மீது வீசுவான் என்ற நினைப்பில் கடைக் கண்ணால் அவனைப் பார்த்தவாறு இருந்த மதுரவாணிக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது. தளவாய் மீது எரிச்சல் எரிச்சலாக வந்தது.

மன்னார்தாசனும், தளவாய் ரங்கப்ப நாயக்கனும் கவிதாயினி ரங்காஜம்மா வீட்டின் வாசல்படியில் இருந்து இறங்க ஆரம்பித்தனர்.

''ஏன் மருமகனே, தஞ்சைக்கு வந்த நாளில் இருந்தே தினமும் இங்கே நீ வருகிறாயா?'' என்றான் ரங்கப்பன்.

''ஆமாம் மாமா, தெலுங்கு இலக்கியம் பற்றி முற்றி லும் தெரிந்து கொள்ள வேறு யார் இருக்கிறார்கள்?

அன்னை ரங்காஜம்மாவின் அற்புதமான கவிதை வளத்திற்கு ஈடு இணையாகச் சொல்லும்படி இந்தத் தஞ்சைப் பதியில் வேறு எந்தக் கவிஞர் இருக்கிறார்?''

''உண்மை. உண்மை. கற்றுக் கொள்ள வேண்டியது தான். அமைச்சரின் மகள்கூடத் தினமும் இங்கு வருகிறாளோ?''

''அது எனக்குத் தெரியாது. இன்று காலையில் தான் முதன் முதலாகப் பார்த்தேன். இன்றிலிருந்துதான் வருவதாக அன்னையார் சொன்ன ஞாபகம் இருக்கிறது.''

''நான் உள்ளே நுழையும்பொழுது நீங்கள் இருவரும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததைப் பார்க்கும் பொழுது அவளும் நீண்ட நாட்கள் உன்னுடன் சேர்ந்து கற்றுக் கொள்கிறாளோ என்று நினைத்து விட்டேன்.''

''நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள் மாமா! நீங்கள் வரும்பொழுது நாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கவில்லை. அவள் பாகவதத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். உங்கள் பார்வைக்கு நாங்கள் பேசிக் கொண்டிருந்ததுபோல தோன்றி இருக்கும்.''

''அழகாக இருந்தால் அந்தஸ்தைப் பற்றிக் கவலைப் படாமல் யாருக்கும் ஒருமுறை ஏறிப் பார்க்க ஆசை வரத்தான் செய்யும்'' என்றான் தளவாய் உரத்த குரலில்.

''என்ன மாமா சொல்கிறீர்கள்?'' கோபத்துடன் கேட்டான் இளவரசன்.

''அதோ பார், அமைச்சர் மகள் வந்த சிவிகையின் உள்ளே சிறுவன் ஒருவன் ஏறி உட்கார்ந்து விட்டான். அவனை ரங்காஜம்மாவின் பணிப் பெண் அடித்து விரட்டு

வதைப் பார். அவளைப் பார்த்து சொன்னேன். உனக்கேன் இவ்வளவு கோபம் வருகிறது?''

இளவரசன் அதன் பிறகு தளவாயிடம் பேசவில்லை.

பொக்கிஷ அறைக்குள் இருந்த பெட்டிகளை இளவரசனிடம் இருந்து வாங்கி வந்த திறவுகோல்கள் கொண்டு திறக்க ஆரம்பித்தான் தளவாய் ரங்கப்ப நாயக்கன். தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் அருகில் நின்று கொண்டிருந்தான்.

''மன்னா, தங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். கோபம் கொள்ள மாட்டீர்களே?''

''சொல் ரங்கப்பா.''

''இளவரசர் திறவுகோல்களை என்னிடம் தருவதற்கு முன்பாக என்ன சொன்னார் என்றால்...''

''தயங்காமல் சொல். மன்னார்தாசன் என்ன சொன்னான்?''

''மன்னருக்கு அறிவு மங்கிவிட்டது. அன்னதானம் செய்வது முட்டாள்தனம். எனக்கு இது பிடிக்கவே இல்லை. வரிப் பணத்தைத் தெருவில் இறைக்கிறார். ஆட்சி செய்யவே தெரியவில்லை... இப்படி நிறைய... என்னால் சொல்ல முடியவில்லை...''

மன்னர் இதைக் கேட்டு சிறிது யோசித்தான். பிறகு ''மன்னார்தாசனைப் படிப்பிற்காக விஜயநகரம் அனுப்பியது தப்பாகப் போய்விட்டது. என்ன செய்வது இளம் வயது. அனுபவம் ஏற ஏறப் புரிந்து கொள்வான் என்று நினைக்கிறேன்'' என்றான்.

''அப்புறம் இன்னொரு விஷயம். அமைச்சர் மகள் மதுரவாணியும் ரங்காஜம்மா வீட்டிற்குப் பாடம் படிக்க வருகிறாள். இன்று நானே அவர்கள் இருவரையும் சேர்ந்தே பார்த்தேன்.''

இதைக் கேட்டவுடன் மன்னன் அவனை ஏறிட்டுப் பார்த்தான்.

மறுநாள் காலையில் மதுரவாணி, பவழவீதியில் உள்ள கவிதாயினி ரங்காஜம்மா வீட்டிற்குச் சென்ற பொழுது அவளுக்கு அங்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.



# 45

கங்கை கொண்ட சோழபுரீஸ்வரர் கோயிலுக்குப் பின்புறம் அமைந்துள்ள காடுகளின் வழியே தங்களது புரவிகளைக் கன வேகமாகச் செலுத்திக் கொண்டிருந்த மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கனும், அவன் தோழனான வெங்கட கிருஷ்ணப்ப நாயக்கனும் கால் யோசனை தூரம் கடந்து வந்ததும், குதிரைகளின் வேகத்தினைக் குறைத்துத் தளர்வாகச் செலுத்த ஆரம்பித்தனர்.

அதுவரை இருவருமே பேசிக் கொள்ளவில்லை. வெங்கடகிருஷ்ணன் தனது புரவியைச் சொக்கநாதனின் புரவிக்கருவில் ஓட்டி வந்து மெதுவாகப் பேச்சைத் துவக்கினான்.

''என்ன சொக்கநாதா, இப்பொழுதாவது நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்வாயா?''

''என்ன கேட்டாய் கிருஷ்ணா?'' குழப்பத்துடன் திரும்பக் கேள்விக் கணையினைத் தொடுத்தான் சொக்கநாதன்.

''சரிதான் போ. இப்பொழுது நீ இந்த உலகத்தில் தானே இருக்கிறாய்?''

''கேலி பண்ணாமல் விஷயத்தைச் சொல்லுடா.''

''தஞ்சை இளவரசி உன்னிடம் நடந்து கொண்ட முறையைப் பற்றி என்ன நினைக்கிறாய் சொக்கநாதா?''

''மதங்கொண்ட யானையின் மீது அவள் இருந்த நிலை என்ன, அவளைத் தனியாகத் தவிக்க விட்டு விட்டு அவளது படைகள் முழுவதும் உயிருக்குப் பயந்து ஓடி ஒளிந்து கொண்ட சூழ்நிலை. முன்பின் தெரியாத நீ, உயிரைப் பணயம் வைத்துக் காப்பாற்றிய செயல் இவை அத்தனையையும் யோசித்துப் பார்த்தாளா தஞ்சை இளவ ரசி? எவ்வளவு எடுத்தெறிந்து பேசிவிட்டாள்! திமிர்.''

''உண்மைதான் வெங்கடகிருஷ்ணா!''

''இப்படித் தகாத எண்ணத்துடன் இனி என்னிடம் வராதீர்கள் என்று எவ்வளவு ஆணவத்தோடு மமதையோடு கூறிவிட்டாள். தான் மிகப் பெரிய அழகி என்ற கர்வம், அந்த நிலைமையில் கூட அவளிடமிருந்து எப்படி வெளிப் பட்டது பார்த்தாயா? இப்படிப்பட்ட அழகான பெண்ணை யும் நான் பார்த்ததில்லை! இவ்வளவு திமிர் பிடித்த பெண்ணையும் நான் இதுவரை சந்தித்ததில்லை!''

''இவளுடைய திமிரைப் பார்க்கும் பொழுது இதே வம்சத்தைச் சேர்ந்த பெண்ணை மணந்த என் பாட்டனார் திருமலைநாயக்கன் எவ்வளவு மனவேதனைப் பட்டிருப் பார் என்று என்னால் இப்பொழுது உணர முடிகிறது கிருஷ்ணா! அதனால்தான் என் தாய் தஞ்சைப் பகுதிக்குள் காலடி எடுத்து வைக்க நினைக்காதே என்று பன்னிப் பன்னிச் சொல்லி அனுப்பினார்.''

''அப்படியானால் உன் முடிவு? இனி தஞ்சைப் பகு திக்குள் காலடி வைக்க வேண்டாம். இந்தக் கன்னியை அடியோடு நினைக்கக்கூட வேண்டாம் என்று எண்ணமோ?''

''இல்லை கிருஷ்ணா. தகாத எண்ணத்துடன் என்னைத் தேடி வாராதீர்கள் என்று ஆணவமாகச் சொன்ன அதே இளவரசியை என் வரவைத் தேடி ஏங்கும்படியாக் ஆக்கியே தீரவேண்டும் என்று என் மனம் துடிக்கிறது கிருஷ்ணா! அடுத்து எப்பொழுது வருவீர்கள் என்று அவள் மன்றாட வேண்டும். அதுதான் என் திட்டம்.''

''இப்பொழுது இந்த விநாடியில் கூட உன்னுடைய திட்டத்தில் மாற்றம் இல்லையே!''

''நிச்சயமாக இல்லை! அதில் உனக்கு என்ன ஐயம்?''

''திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றால் தஞ்சாவூர் செல்ல வேண்டும். ஆனால் திருச்சிராப்பள்ளிக்குச் செல்லும் வழியில் நீ புரவியைச் செலுத்திக் கொண்டிருக்கிறாய் அதுதான் எனக்குப் புரியவில்லை!''

''திருச்சிராப்பள்ளிக்கு நாம் இப்பொழுது திரும்பிச் செல்லாவிட்டால், வேறு ஒரு சிக்கலில் நாம் மாட்டிக் கொள்ள நேரிடும். பிறகு தஞ்சை திட்டத்தினை நிறைவேற்ற முடியாமல் போய்விடலாம்.''

''அதுதான் எனக்குப் புரியவில்லை சொக்கநாதா.''

''இப்பொழுது புரிய வைக்கிறேன். நாம் மதுரையில் இருந்து கிளம்பி வந்து எத்தனை நாட்கள் ஆகி இருக்கிறது?''

''பத்து நாட்களைக் கடந்துவிட்டது.''

''இந்தப் பத்து நாட்களாக என் அன்னைக்கு நான் எந்தவிதச் செய்தியும் அனுப்பவில்லை. ஏற்கனவே என் தாய் அரை மனதோடு திருச்சிராப்பள்ளிக்குச் செல்ல அனுமதி அளித்தார். இத்தனை நாட்கள் என்னிடமிருந்து எந்தச் செய்தியும் வரவில்லையே என்று பயந்து யாரையா

வது அனுப்பி வைத்தாலோ, இல்லை அவர்களே நேரடியா கக் கிளம்பி வந்துவிட்டாலோ, அது எவ்வளவு பெரிய சிக்கலைத் தோற்றுவிக்கும் என்பதை உணர்ந்தாயா?''

''உண்மைதான். ஆனால் நாம்தான் 'மதுரையில் இருந்து எந்தத் தகவல் வந்தாலும் நாங்கள் வரும்வரை பதில் அனுப்ப வேண்டாம்' என்று சொல்லி வந்திருக்கி றோமே?''

''இருந்தாலும் எத்தனை நாட்கள் காத்திருப்பார்கள்? தஞ்சையில் நமது திட்டம் நிறைவேற பல நாட்கள் ஆகலாம். சில சமயம் பல மாதங்கள்கூடப் பிடிக்கலாம்.''

''ஆமாம். முதலில் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை சரி பார்த்த பின்னர் தஞ்சை செல்வதே உத்தமம்.''

''இனி ஐயம் அகன்றுவிட்டதா? முதலில் தஞ்சை மன்னனுக்கு விருப்பமான பொருளைக் கவர்வது. அடுத் தது அவன் மகள் மனதைக் கவர்ந்து எனக்காக ஏங்க விடுவது. இந்த இரண்டில் இருந்து ஒருக்காலமும் பின் வாங்க மாட்டேன். இது உறுதி!'' என்றவாறு குதிரையின் முதுகில் ஓங்கி அறைந்தான் சொக்கநாதன்.

திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்குள் இருக்கும் தர்பார் மண்டபத்தினுள் சொக்கநாதன் நுழைந்த மறுநிமிடமே கோட்டைத் தலைவன் அங்கு ஓடோடி வந்தான்.

''மன்னா, மதுரையில் இருந்து தங்கள் அன்னையார் லிகிதம் அனுப்பி இருக்கிறார். அதனை எடுத்துக் கொண்டு அழகப்ப நாயக்கன் தங்களை பார்ப்பதற்காகக் காத்துக்கி டக்கிறார்'' என்றான்.

''அழகப்ப் நாயக்கனா? நமது ஒற்றர் படைப்பிரிவின் தலைவனான அழகப்ப நாயக்கனா வந்திருக்கிறார்?'' என்று முகத்தில் அதிர்ச்சி பொங்கக் கேட்டான் சொக்க நாதன்.

''ஆமாம் மன்னவா?''

''அழகப்ப நாயக்கன் திருச்சிராப்பள்ளிக்கு வந்து சேர்ந்து எத்தனை நாட்கள் ஆகிறது?''

''நேற்றுத்தான் வந்திருந்தார்.''

''அப்படியே உடனே வரச் சொல்.''

சற்று நேரம் கழிந்து அங்கு வந்து சொக்கநாதனைப் பணிவுடன் வணங்கினான் அழகப்ப நாயக்கன்.

''எப்பொழுது வந்தீர்கள் அழகப்பரே! அன்னை நல மாக இருக்கிறார்களா?'' என்று அன்போடு வினவினான் சொக்கநாதன்.

''ராணியார் முற்றிலும் நலமாக இருக்கிறார்கள் மன் னவா. நேற்றுக் காலையில் இங்கு வந்து சேர்ந்தேன். தாங்கள் திருவரங்கம் சென்றிருப்பதாகக் கோட்டைக் காவ லன் கூறினான். தங்களை உடனே பார்ப்பதற்காகத் திருவ ரங்கம் செல்ல நினைத்தேன். தாங்கள் மாலையில் வந்து விடலாம் என்று காவலன் கூறியதால் சற்று நேரம் ஓய்வெ டுத்து இருந்தேன். காலை வரை ஆகும் என்று தெரிந்திருந் தால் நேற்றே திருவரங்கத்திற்கு வந்திருப்பேன்.''

''மாலைக்குள் திரும்பிவிட வேண்டும் என்றுதான் எண்ணியிருந்தோம். எம்பெருமானின் கருட சேவை என் றார்கள். அந்தக் கண்கொள்ளாக் காட்சியினைக் கண்டுக ளித்து மெய்ம்மறந்துவிட்டோம். இல்லையா வெங்கட கிருஷ்ணா?''

வெங்கடகிருஷ்ணன் தலையை ஆட்டினான்:

''இதோ ராணியாரின் லிகிதம். உடனே பதில் கடிதம் வாங்கி வரும்படி சொல்லி அனுப்பினார்.''

அழகப்ப நாயக்கனிடமிருந்து பொற்குழலினை வாங்கி, லிகிதத்தினை எடுத்துப் படித்துப் பார்த்தான் சொக்கநாதன்.

லிகிதத்தில் அதிக விஷயம் இல்லை. நலம் விசாரித்து விட்டு சொக்கநாதனிடமிருந்து ஏன் செய்தியே வரவில்லை என்று கோபித்து இருந்தார். சீக்கிரம் மதுரை திரும்பும்படி மன்றாடி இருந்தார். அவனுக்காக ஓர் இளம்பெண் ஏங்கிக் கொண்டிருக்கிறாள் என்று மறைமுகமாகக் குறிப்பிட்டு இருந்தார்.

சொக்கநாதனுக்கு உடனே முத்துநகையின் நினைவு வந்தது. உப்பரிகையில் அவளைச் சந்தித்து உரையாடிய நிகழ்ச்சிகள் மனதில எழுந்து குறுகுறுத்தன.

பிறகு அன்னையாருக்குக் கடிதம் எழுதத் தொடங்கி னான். அதனைச் சுருட்டி முத்திரையிட்டு பொற்குழலில் வைத்து நீட்டினான்.

''அழகப்பரே தாங்கள் மதுரைக்கு எப்பொழுது திரும் பச் செல்லப் போகிறீர்கள்?''

''இன்றே, இப்பொழுதே கிளம்ப வேண்டும் மன் னவா! மதுரையில் எனக்கு நிறைய வேலைகள் காத்திருக் கின்றன.''

''உண்மைதான். ஒற்றர் படைப்பிரிவின் தலைவரான தங்களுக்கு எத்தனையோ பணிகள் தோள்மீது சுமத்தப்பட் டிருக்கும். அதை எல்லாம் உதறிவிட்டு, ஒரு சாதாரண,

நலம் விசாரிக்கும் கடிதத்தினை என்னிடம் கொண்டு சேர்ப்பதற்காகத் தங்களை அனுப்பி இருக்கிறார் என் அன்னை! பார்த்தீர்களா, தாய்ப்பாசம் என்பது நிகரற்றது என்று இதன்மூலம் உணர்த்துகிறது. இல்லையா அழகப்பரே?''

''உண்மை, உண்மை.''

''சரி, போய் வாருங்கள் அழகப்பரே.''

அழகப்ப நாயக்கன் பொற்குழலினை வாங்கிக் கொண்டு அந்த இடத்தில் இருந்து அகன்றதுமே, சொக்க நாதன் அவசரமாக எழுந்து வெங்கடகிருஷ்ணனைக் கையோடு இழுத்துக் கொண்டு பக்கத்து அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினான்.

''சொக்கநாதா இப்பொழுது பிரச்சினை தீர்ந்து விட்ட தல்லவா! இனி உன் அன்னையைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நாம் இப்பொழுதே கிளம்பி தஞ்சாவூர் செல் வோமா?'' என்றான் கிருஷ்ணன்.

''இல்லை கிருஷ்ணா, இப்பொழுதுதான் பிரச்சி னையே ஆரம்பமாகி இருக்கிறது.''

''ஆரம்பமாகி இருக்கிறதா? எப்படி'' புரியாமல் கேட் டான்.

''ஒரு சாதாரணக் கடிதத்தினை இங்கு கொண்டு வந்து சேர்க்க மதுரையில் எத்தனையோ தூதுவர்கள் இருக்கி றார்கள். அவர்களை விடுத்து ஒற்றர் படைத் தலைவ னையே இங்கு அனுப்பி இருக்கிறார் என் தாய் என்றால் அவர்கள் நோக்கம் உனக்குப் புரிகிறதா?''

''புரியவில்லை சொக்கநாதா.''

"என் கணக்குப்படி பார்த்தால் அழகப்ப நாயக்கன் நான் கொடுத்த கடிதத்தினை எடுத்துக் கொண்டு மதுரை செல்லமாட்டான். அதனைத் தனது உதவியாளன் மூலமாக அனுப்பிவிட்டு, இங்கு நம்மை வேவு பார்ப்பதற்காக மறைவாக இருந்து செயலாற்றுவான் என்று நினைக்கிறேன்."

"இப்பொழுது என்ன செய்யலாம் சொக்கநாதா?"

"முதலில் அழகப்ப நாயக்கன் எங்கு தங்குகிறான். என்ன செய்கிறான் என்று நாம் மறைந்து இருந்து அவன் நடவடிக்கைகளைக் கவனிப்போம். அவன் உண்மையிலேயே மதுரைக்குத் திரும்பிச் சென்றுவிட்டால் நாம் மறுநிமிடமே தஞ்சாவூர் சென்றுவிடலாம். அதை விடுத்து நான் கொடுத்த கடிதத்தினை வேறு ஒருவன் மூலமாக அனுப்பி விட்டு அவன் இங்கேயே மறைந்து இருந்தால் முதலில் அவனை இடைஞ்சல் இல்லாமல் அப்புறப்படுத்திய பிறகே நாம் தஞ்சை செல்ல முடியும்."

சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் மாறுவேடம் புனைந்து கோட்டையின் சுரங்கப்பாதை வழியாக வெளியேறி அழகப்பனைத் தேடத் தொடங்கினர்.

திருச்சிராப்பள்ளியில் இருந்து மதுரை செல்லும் பாதையில் அழகப்ப நாயக்கன் குதிரை மீது சென்று கொண்டிருப்பது தெரிந்தது. அவனறியாமல் பின் தொடர ஆரம்பித்தனர்.

திருச்சிராப்பள்ளியில் இருந்து நாலைந்து கல் தொலைவில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் தன் குதிரையைச் செலுத்தினான் அழகப்பன். இவர்களும் பின் தொடர்ந்தார்கள்.

சுற்று முற்றும் பார்த்து விட்டு அழகப்பன் ஒரு குடிசைக்குள் நுழைவதைக் கண்டார்கள். ஊரைவிட்டு சற்றே ஒதுங்கி இருந்தது அந்தக் குடிசை. அதனைச் சுற்றிலும் புதர்களோ, மரம், செடி கொடிகளோ இன்றி சுத்தமாகக் காட்சி அளித்தது. அதனால் அதன் நாலாபுறங்க ளிலும் வெகு தூரத்தில் எவர் வந்தாலும் குடிசையில் உள்ளவர்கள் கவனிப்பதற்கு வசதியாக இருந்தது.

சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் குடிசையில் இருந்து நீண்ட தூரத்தில் அமைந்திருந்த புதருக்குள் படுத் துக் கொண்டு, குடிசை வாசலையே நோட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

''இந்தக் குடிசை நமது ஒற்றர் பிரிவைச் சேர்ந்த லக்கப்பன் குடியிருக்கும் இடம். ஒற்றன் வீட்டை வேறு ஒற்றன் ஒற்றாடக் கூடாது என்பதற்காக குடிசையைச் சுற்றிலும் எவ்வளவு சுத்தமாக வைத்திருக்கிறான் என்று பார்த்தாயா?''

''இங்கே எதற்காக அழகப்பன் வந்திருக்கிறான்?''

''பொறுத்திருந்து பார்.''

சற்று நேரம் கழித்து குடிசைக்குள் இருந்து லக்கப்பன் மட்டும் வெளியே வந்தான். சுற்று முற்றிலும் பார்த்து விட்டு பக்கத்தில் கட்டப்பட்டிருந்த குதிரையை அவிழ்த் துக் கொண்டு ஏறி உட்கார்ந்தான்.

மறுவிநாடி அந்தப் புரவி மதுரை செல்லும் பாதையை நோக்கிப் பறக்க ஆரம்பித்தது. இதைக் கண்ணுற்ற சொக்க நாதன் நண்பனிடம் கிசுகிசுத்தான்.

''கிருஷ்ணா நீ இங்கேய இருந்து அழகப்ப நாயக்க ாின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள். நான் லக் 5ப்ப நாயக்கன் என்ன செய்தி கொண்டு செல்கிறான் என்று அறிந்து வருகிறேன். கூண்டு பத்திமாக இருக்கிறதா?''

''இதோ'' என்றவாறு தன்னருகே இருந்த துணி மூட் டையைப் பிரித்துக் கூண்டைக் காட்டினான் கிருஷ்ணன்.

கூண்டுக்குள் இருந்ததைப் பார்த்துத் திருப்தி அடைந்த சொக்கநாதன், மெதுவாகப் புதரை விட்டு எழுந்து, தனது ரவியை சற்றுதூரம் நடத்திச் சென்று, புரவிச் சத்தம் 5டிசைக்குள் எட்டாத தூரத்திற்கு வந்ததும், குதிரையில் றிப் பறக்க ஆரம்பித்தான்.

மதுரை செல்லும் பாதையைச் சொக்கநாதன் குதிரை தாட்டபொழுது, வெகுதூரத்தில் லக்கன் குதிரை சென்று காண்டிருப்பது தெரிந்தது. சொக்கநாதன் உடனே தனது ;திரையை அந்தப் பாதையில் செலுத்தாது, காட்டுப் குதிக்குள் செலுத்தினான்.

காட்டுப் பகுதிக்குள் சுற்றி நீண்ட நேரம் கழித்து றுபடியும் மதுரைப் பாதையை அவன் அடைந்தபொழுது க்கப்பன் குதிரை வெகு தூரத்திற்குப் பின்னால் வந்து காண்டிருப்பது தெரிந்தது.

உடனே தனது குதிரையை மறைவான இடத்தில் கட்டி வத்தான். சேணத்தில் தொங்க விடப்பட்டிருந்த கயிற்றை டுத்து வந்து சாலை ஓரத்தில் இருந்த மரத்தில் கட்டி பிற்றை சாலை மீது குறுக்காகப் போட்டு அதன் மீது ண்ணைப் போட்டு மூடினான்.

மறுபுறக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு மறைவாகக் காத்துக் கிடந்தான். சற்று நேரத்தில் லக்கன் குதிரை அந்த இடத்தை நோக்கி வர ஆரம்பித்தது.

சரியாக குதிரை அந்த இடத்திற்கு வந்ததும், சொக்க நாதன் கயிற்றைத் தூக்கிப் பிடித்துச் சுண்டினான். குதிரை தடுமாறி விழ, மேலே இருந்த லக்கப்பன் தலைக்குப்புற விழுந்தான். அதிர்ச்சியில் உடனே மயக்கம் அடைந்தான்.

சொக்கநாதன் உடனே ஓடிச் சென்று மயங்கிக் கிடக் கும் அவன் உடம்பைச் சோதனைச் செய்து இடுப்புச் சட்டைக்குள் மறைத்து வைத்திருந்த ஓலைக் குழலினை வெளியே எடுத்தான்.



# 46

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் தனது அருகில் நின்று கொண்டிருந்த தளவாய் ரங்கப்ப நாயக்கனை ஏறிட்டுப் பார்த்தான்.

''என்ன சொன்னாய் ரங்கப்பா? மீண்டும் ஒரு முறை சொல்'' என்றான்.

''நமது அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் பெண் மதுர வாணியும் பவழவீதியில் உள்ள ரங்காஜம்மா வீட்டிற்குப் பாடம் கற்றுக் கொள்வதற்காக வருகிறாள். நான் பார்க்கும் பொழுது இளவரசரும் மதுரவாணியும் அருகருகே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.''

''அமைச்சர் மகள் அங்கு பாடம் கேட்க எவ்வளவு நாட்களாக வருகிறாள்?''

''இன்றிலிருந்துதான் வருவதாக ரங்காஜம்மா கூறி னார். பாகவதத்தில் ஏதோ சந்தேகம் கேட்பதற்காக என்று சொன்னார்கள்.''

''மதுரவாணி மிகவும் புத்திசாலிப் பெண். இந்த இளம் வயதில் பாகவதமும், பகவத்கீதையும் படிக்கிறாள் என்றால் அது மிகப் பெரிய செயல். சரி, ரங்கப்பா, அந்தப்

பெட்டிகளைத் திறந்து பொற்காசுகளை எடு'' என்றான் மன்னன்.

அதற்கு மேல் சொல்வதற்கும் தளவாய்க்குப் பயமாக இருந்தது. மன்னார்தாசன், மதுரவாணி பற்றி இன்னமும் தனக்கே முற்றிலும் தெரியாதபொழுது அவர்களைப் பற்றிக் கோள்மூட்டி, அநாவசியமாக அவனே மாட்டிக் கொள்ளக் கூடாது. அப்புறம் அவன் சொல்லும் எந்த விஷயமுமே மன்னரிடம் எடுபடாமல் போய்விடும்.

பழவவீதியில் உள்ள ரங்காஜம்மா வீட்டிற்குத் தனது ஒற்றர்கள் சிலரை அனுப்பி மன்னார்தாசனின் நடவடிக்கைகளை கவனிக்கச் சொல்ல வேண்டும். அதன்பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

இந்த நினைப்பில் தளவாய் ரங்கப்ப நாயக்கன் மன்னனிடம் மேற்கொண்டு எதையும் பேசாமல் மவுனமாக இருந்து விட்டான்.

தஞ்சை அரண்மனையில் இருந்து சற்றுத் தூரத்தில், சிவகங்கைக் குளத்தருகே அமைந்திருந்த நந்தவனத்திற்கு அருகாமையில் மன்னர் பரம்பரையினரும், தஞ்சை அரசைச் சேர்ந்த உயர்மட்ட அரசப் பிரதிநிதகிளின் குடும்பத்தினரும் உடற்பயிற்சி, போர்ப்பயிற்சி செய்து கொள்வதற்காகப் பரந்த இடம் ஒன்று பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்தது.

அதன் ஒரு மூலையில் காவிரி ஆற்றின் மணல் பரப்பப்பட்டு மல்யுத்தம், கரடி வித்தை என்று சொல்லப்படும் சிலம்ப ஆட்டங்களைக் கற்றுக் கொள்வதற்காகக் கூடம் ஒன்று அமைக்கப்பட்டு, அதனைக் கரடிக் கூடம் என்று அழைத்து வந்தனர்.

காலை இளம் வெயில் தன் குணத்தைச் சற்று மாற்றிக் கடுமையைக் காட்ட முயன்றபொழுது, கரடிக் கூடத்தில் அவ்வளவு நேரமும் தங்கள் நண்பர்களுடன் சேர்ந்து மல்யுத்தம் புரிந்து கொண்டிருந்த இளவரசன் மன்னார்தாசனும், அவன் ஆருயிர் நண்பன் அக்கிராஜுவும் வெளியே கிளம்ப ஆரம்பித்தனர்.

தங்கள் உடலில் ஒட்டி இருந்த மண் துகள்களைத் தட்டிவிட்டு ஆடைகளை அணிந்துகொண்ட இருவரும் கரடிக் கூடத்தில் இருந்து நடக்க ஆரம்பித்தனர்.

''மன்னார்தாசா, நீ இந்தக் கரடிக் கூடத்திற்கு வந்து எத்தனை நாட்கள் ஆகிவிட்டன. தினமும் நீ இங்கே வரமாட்டேன் என்கிறாயே என்று நம் நண்பர்கள் அடிக்கடி குறைபட்டுக் கொள்வது உண்டு'' என்றான் அக்கிராஜு.

''கவலைப்படாதே! இன்றிலிருந்து தினமும் காலையில் இங்கே வருவது என்று முடிவு எடுத்து விட்டேன்'' என்றான் இளவரசன்.

இதைக் கேட்டவுடன் மகிழ்ச்சியுடன் அவன் தோளை அணைத்துக் கொண்ட அக்கிராஜு ''ரொம்ப சந்தோஷம் மன்னார்தாசா, இனி நீ பவழவீதிக்குச் செல்லமாட்டாயா? உன் பாடங்கள் முடிந்து விட்டனவா?'' என்றான்.

''இலக்கியங்களைக் கற்றுக் கொள்வதற்கு முடிவு என்பது ஏது ராஜு? இருந்தாலும் இன்றிலிருந்து ரங்காஜம்மா வீட்டிற்குச் செல்ல வேண்டாம் என்று முடிவு பண்ணிவிட்டேன்'' என்றான் சற்றுக் கவலை தோய்ந்த குரலில்.

''ஏன் நண்பா? அரசாங்க வேலைகள் அதிகமாகி விட்டதா?''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. நான் நேற்று அங்கு வழக்கம்போல சென்றிருந்தபொழுது நமது அமைச்சர் மகள் மதுரவாணி அங்கு வந்தாள்.''

''அவள் எதற்குப் பவழவீதிக்கு வந்தாள்? அமைச்சரின் மகள், அதிலும் அந்தணர் குலப்பெண் அங்கு வர வேண்டிய அவசியம்?''

''பாகவதத்தில் ஏதோ சந்தேகமாம். அதனைத் தெளிவாகக் கற்றுணரும்படி நமது அமைச்சரே ரங்காஜம்மா வீட்டிற்குச் செல்லுமாறு மதுரவாணியிடம் கூறினாராம். அதனால் நேற்று முதல் தினமும் அங்கு வரப்போவதாக அன்னையார் கூறினார்.''

''மதுரவாணி வந்தால் வந்துவிட்டு போகட்டுமே! அதனால் உனக்கு என்ன இடைஞ்சல்?''

இதற்குச் சற்றுத் தடுமாறினான் மன்னார்தாசன். மதுரவாணி அவனிடம் பேசியது நினைவுக்கு வந்தது. அவற்றை எல்லாம் அக்கிராஜுவிடம் சொல்வதற்கு அவனுக்கு மனமில்லை.

''சொல் மன்னார்தாசா! மதுரவாணி வருவது உனக்கு எந்த வகையில் இடைஞ்சல் என்று எனக்குப் புரியவில்லையே?''

''அவள் வரவு எனக்கு ஒன்றும் இடைஞ்சல் இல்லை. நானும் அவளும் ரங்காஜம்மா வீட்டில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தபொழுது, நமது தளவாய் ரங்கப்ப நாயக்கன் அங்கு வந்தார்.''

''நமது தளவாயும் இலக்கியம் படிக்க வருகிறாரா! பரவாயில்லையே!''

''ஹு\u0bc2ம்! தளவாய் இலக்கியம் படிக்க வரவில்லை ராஜு. பொக்கிஷ அறைக்குள் இருக்கும் சில பெட்டிகளின் திறவுகோல்கள் என்னிடம் இருக்கின்றன. அவற்றை வாங்கி வரும்படி என் தந்தை கட்டளை இட்டிருக்கிறார். அதற்காக வந்தார்.''

''அப்புறம்?''

''வந்தவர் நானும் மதுரவாணியும் சேர்ந்து உட்கார்ந்து படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து ஒரு மாதிரியாகப் பேசினார்.''

''ஒரு மாதிரியாக என்றால்?''

மன்னார்தாசன் கொஞ்சம் தடுமாறிவிட்டு, ''மதுரவாணியும் நானும் இலக்கியம் கற்றுக் கொள்ளும் சாக்கில்...'' மேற்கொண்டு முடிக்க முடியாது தவித்தான்.

''புரிகிறது. புரிகிறது. அவனது கெட்ட புத்திக்கு அப்படித்தான் தோன்றும். நரிப்பயல்! அன்றுகூட ஆரத்தி எடுக்கும்பொழுது மதுரவாணியிடம் பேசினாயா என்று துளைத்து எடுத்தான் பார்த்தாயா! அன்றே எனக்கு அவன் மீது ஆத்திரம்'' என்றவாறு பற்களைக் கடித்தான் அக்கி ராஜு.

''அன்னையார் சொல்வதில் இருந்து மதுரவாணி தினமும் காலையில் அவர்கள் வீட்டிற்குப் பாகவதம் கற்றுக் கொள்ள வருவது நிச்சயம் என்று தோன்றுகிறது. இந்த நிலைமையில் நானும் அங்கு தினமும் காலை நேரத்தில் செல்வது நல்லதல்ல என்று நினைக்கிறேன்.''

''உண்மைதான் நண்பா. ரங்கப்ப நாயக்கனைப் போன்ற கபடமான ஆள் இந்த உலகத்திலேயே கிடையாது. நீயும், மதுரவாணியும் தினமும் அங்கு செல்வதை நாலு பேரிடம் திரித்துக் கூறினாலும் கூறுவான்.''

''மதுரவாணி நல்ல பெண். நமது அமைச்சரின் மகள். அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் மீது இந்த நாடும், என் தந்தையும் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியாததல்ல. அதிலும் எனது ஆரம்ப காலக் கல்வியை நான் அமைச்சரிடமே கற்றவன். அந்த வகையில் பார்த்தால் அவர் எனக்கு குரு. இத்தகைய அருமை மனிதரின் புதல்விக்கு என்னால் அநாவசியமான களங்கம் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. அதனால் இனிப் பவழவீதிக்குச் செல்ல வேண்டாம் என்று முடிவு எடுத்து விட்டேன்.''

''நல்ல முடிவுதான் நண்பா! உன்னை பாராட்டு கிறேன்'' என்றவாறு அவன் தோள்களைப் பிடித்து அணைத்துக் கொண்டான்.

**ம**துரவாணி மறுநாள் காலையில் சிறப்பாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு பல்லக்கில் ஏறிப் பவழவீதிக்குள் இருக்கும் சதவேஹினி ரங்காஜம்மா வீட்டிற்கு வந்தாள்.

நேற்று நடந்த நிகழ்ச்சிகள் அவளுக்குக் கவலையை யும், மகிழ்ச்சியினையும் அளித்திருந்தன. ரங்கப்ப நாயக்க னின் வரவும், அவன் பேச்சும் சற்றுக் கவலையை அளித்தா லும், மன்னார்தாசனுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டி ருந்தது அவளுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தி யது.

தளவாய் வந்தது தற்செயல். இனி எங்கே வரப்போகி றார். இளவரசனும் நானும் தினமும் அங்கே வருவது உறுதி. சிறிது சிறிதாக அவர் மனதை என்மீது ஈர்த்துவிட வேண்டும்.

எவ்வளவு அழகாக இருக்கிறார்! எத்தனை புத்திசாலித் தனம்! அவரை பார்த்துக் கொண்டிருந்தால், அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தால் போதுமே!

மகிழ்ச்சி பொங்க ரங்காஜம்மா வீட்டிற்குள் நுழைந்தாள். ரங்காஜம்மா ஓர் ஆசனத்தில் அமர்ந்தவாறு கையில் எழுத்தாணி கொண்டு, பனை ஓலையில் என்னவோ எழுதிக் கொண்டிருந்தாள். சுற்று முற்றும் பார்த்தாள். வேறு யாரும் அங்கு இல்லை. இளவரசர் இன்னும் வரவில்லையா? மனம் அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.

உள்ளே நுழைந்தவுடன் ரங்காஜம்மாவின் கால்களைத் தொட்டு வணங்கினாள்.

''வா மதுரவாணி உட்கார்'' என்று அவள் தலையைப் பரிவுடன் தடவி பக்கத்தில் இருந்த ஆசனத்தில் அமரச் செய்தாள்.

''தாமதமாக வந்துவிட்டேனா தாயே!'' என்று முகத்தில் கவலையைத் தேக்கிப் பணிவுடன் கேட்டாள்.

''இல்லையே! நேற்று மாதிரியே இன்றும் சரியான நேரத்தில்தான் வந்திருக்கிறாய். இதில் என்ன ஐயம்?''

''இளவரசரைக் காணவில்லையே? ஒருவேளை வந்து போய்விட்டார் போலிருக்கிறது. நான்தான் தாமதமாக வந்துவிட்டேனோ என்று எனக்குப் பயம் வந்துவிட்டது.''

''நல்ல பெண்ணம்மா நீ! எதற்குத்தான் பயம் கொள்வது என்றே கிடையாதா? தாமதமாக வந்துவிட்டால் தடி எடுத்து அடிப்பேன் என்று அச்சமுற்றாயா?'' என்றவாறு சிரித்தாள்.

''இருந்தாலும் கல்வி கற்றுத்தரும் குருவைக் காத்திருக்கச் செய்வது தவறல்லவா?''

''அமைச்சரின் பெண்ணல்லவா! அருமையாகத்தான் பேசுவாய்..''

''பாடத்தை ஆரம்பிக்கலாமா இல்லை இளவரசரும் வந்து விடட்டுமா அன்னையே?''

''இளவரசன் இனி இங்கு வரமாட்டான் மதுரவாணி.''

இதைக் கேட்டவுடன் மதுரவாணிக்கு ஏமாற்றமாக இருந்தது. இருந்தாலும் முகத்தில் அதனைக் காட்டாமல், ''ஏன் அன்னையே? இன்றைக்கு அவருக்கு வேறு ஏதாவது அலுவல்கள் வந்துவிட்டனவா?'' என்றாள்.

''இன்றைக்கு மட்டுமல்ல மதுரவாணி. இனி என் றைக்குமே இங்கு வரப்போவதில்லை என்று சொல்லி அனுப்பி இருக்கிறான்.''

இப்பொழுது மதுரவாணிக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''ஏன் தாயே இப்படிச் சொல்லி இருக்கிறார்? தங்கள் மீது ஏதாவது மனவருத்தமா? இல்லை, இளவரசருக்குச் சமமாக ஓர் அமைச்சரின் பெண் கல்வி கற்றுக் கொள்ள வந்திருக்கிறாளே என்று என் மீது கோபமா?''

இதைக் கேட்டவுடன் ரங்காஜம்மா கலகல என்று சிரித்தபடி மதுரவாணியின் கன்னத்தைப் பிடித்து நிமிண்டி னாள்.

''சிறு பெண் என்பது சரியாகத்தான் இருக்கிறது. அநாவசியமாகக் கற்பனை செய்து கலங்குகிறாயே! நீ நினைப்பது போல் எதுவும் இல்லை. என்மேல் வருத் தமோ, உன் மீது கோபமோ கொள்ளக்கூடிய அளவுக்கு என் மைந்தன் சிறுமதி படைத்தவனல்லன் மதுரவாணி! மன்னார்தாசன் உயர்வான குணம் கொண்டவன். அவ னைப் பற்றி அப்படி நினைக்காதே!''

''பிறகு எதற்காகத் தன் வரவை நிறுத்திக் கொண் டார்?''

''அவன் என்னிடம் நீண்ட நாட்களாக தினமும் காலை யில் வந்து இலக்கியங்களைக் கற்று வந்திருக்கிறான். கிட்டத்தட்ட எனக்குத் தெரிந்ததை எல்லாம் சொல்லிக் கொடுத்து விட்டேன். இனி அவன் முயற்சியால் வளர்த்துக் கொள்ள வேண்டியதுதான். அதனால் நேற்று மாலை அவன் எனக்குச் செய்தி அனுப்பினான்.''

''என்ன அனுப்பினார்?''

''தினமும் காலையில் தங்களைத் தேடி வருவதை நாளைமுதல் நிறுத்திக் கொள்கிறேன். அதனால் என் வர விற்காக இனி நீங்கள் காத்துக் கிடக்க வேண்டாம். இடை யில் ஏதாவது விளக்கம் தேவைப்பட்டால் நானே வந்து நேரில் கேட்டுக் கொள்கிறேன்' என்று சொல்லி அனுப்பி னான். ஒரு நாட்டின் இளவரசனுக்கு எத்தனையோ வேலை கள், கடமைகள், இவற்றுக்கு மத்தியில் இலக்கியத்திற்காக நேரத்தை ஒதுக்குவது சிரமம்தானே.''

இதற்கு மேலும் ரங்காஜம்மா இளவரசனைப் புகழ்ந்து ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தாள். அவை எதுவுமே மதுரவாணியின் காதுகளில் விழவில்லை. எல்லையற்ற அதிர்ச்சி அவள் இதயத்தைப் புண்ணாக்கி இருந்தது.

எவ்வளவு ஆசையுடன் திட்டமிட்டு, என் தந்தையைச் சம்மதிக்கச் செய்து இங்கு வந்தேன்? இப்படி ஏமாற்றத்தை அளித்துவிட்டாரே!

தினமும் நான் இங்கு வருவேன் என்று அழுத்தமாகக் கூறிய பிறகும் அலட்சியம் செய்துவிட்டாரே! அவருடைய கல்வி முடிந்து விட்டிருந்தால்கூட, என் மீது ஆசை இருந்தால், எனக்காக என்னைப் பார்ப்பதற்காக, இன்ன

மும் முடியாதது போல் காட்டித் தினமும் நான் வரும் நேரத்தில் வந்திருப்பாரே! என்னை அவருக்குப் பிடிக்க வில்லையா?

ஒருவேளை என்னைப் பார்க்க பிடிக்காமல்தான் தன் னுடைய கல்வி முடிந்துவிட்டதாகப் பொய்யுரைத்தி ருப்ரோ? இளவரசே! என்னை நிஜமாகவே உங்களுக்குப் பிடிக்கவில்லையா?

மதுரவாணிக்குக் கண்களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது. தான் கண் கலங்குவதை ரங்காஜம்மா பார்த்து விடக் கூடாதே என்று கஷ்டப்பட்டு அதனை அடக்கிக் கொண்டாள்.

•

சொக்கநாதன் வேகமாக ஓடிவந்து லக்கப்பனின் உடலைப் புரட்டி அவன் இடுப்பில் இருந்த ஓலைக்கு ழலை எடுத்தான்.

குழலைத் திறந்து உள்ளிருக்கும் முடங்கலை உருவி னான். சற்று நேரத்திற்கு முன் அவன், தனது தாய்க்கு எழுதிய கடிதம் அப்படியே இருந்தது. அதில் எந்த மாற்ற மும் இல்லை. அதனுள் வேறு கடிதங்களும் இல்லை.

பிறகு முடங்கலை மறுபடியும் குழலுக்குள் போட்டு மூடிவிட்டு லக்கன் இடுப்பில் வேறு கடிதங்கள் இருக்கின் றனவா என்று தேடிப் பார்த்தான். எதுவுமில்லை. அழகப் பன் திட்டம் எதுவும் புரியவில்லை அவனுக்கு.

சற்று நேரம் யோசித்துவிட்டு, குதிரையின் சேணத்தில் இருந்த தண்ணீர்ப் பையை எடுத்து வந்து லக்கன் முகத்தில் தெளித்தான்.

மயக்கம் தெளிந்த லக்கன், மலங்க மலங்க விழித்து ''இது... நான்.... நீ எப்படி...'' குழறி பிறகு எழுந்து உட்கார்ந்தான்.

''யாரப்பா நீ? பாதையில் மயங்கிக் கிடக்கிறாயே? இந்தா இன்னும் கொஞ்சம் தண்ணீர் குடி.''

தண்ணீர் குடித்த லக்கன் தெம்புடன் சொக்கனைப் பார்த்து ''மதுரைக்குச் சென்று கொண்டிருந்தேன். வழியில் பள்ளம் பார்க்காது குதிரை இடறி விழுந்துவிட்டது. நன்றி.'' என்றவாறு எழுந்தான்.

''உன் உடைமைகள் பத்திமாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளப்பா. இந்த வழியில் திருடர் பயம் அதிகம்.''

உடனே லக்கன் இடுப்பைத் தொட்டுப் பார்த்தான். குழல் பத்திரமாக இருப்பதை உணர்ந்து திருப்தி அடைந்தவனாய், சொக்கநாதனிடம் விடை பெற்று கொண்டு புறப்பட்டான்.

இவனை அனுப்பிவிட்டு அழகப்ப நாயக்கன் என்ன செய்யப் போகிறான்? எதற்காக மதுரை செல்வதாகப் பொய்யுரைத்துவிட்டு இங்கே ஒளிந்திருக்கிறான்?

சொக்கநாதன் இதனை யோசித்துக் கொண்டிருந்த வேளையில் குடிசைக்குள் இருந்த அழகப்ப நாயக்கன், அபாயகரமான கடிதம் ஒன்றை எழுதிக் கொண்டிருந்தான்.



# 47

மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கன், ஒற்றர் தலைவனான அழகப்பனின் உதவியாளனான லக்கப்பன் புரவியில் சென்று மறையும்வரை பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு, பிறகு தன்னுடைய குதிரையை வெங்கடகிருஷ்ணன் ஒளிந்து இருக்கும் இடத்தை நோக்கிச் செலுத்தலானான்.

அழகப்ப நாயக்கனின் திட்டம் என்னவாக இருக்கும் என்று அவன் மனம் குழம்ப ஆரம்பித்தது.

அதேசமயம் குடிசைக்குள் இருந்த அழகப்ப நாயக்கன் முதலில் வாசலுக்கு வந்து பார்த்தான். குடிசையின் நாலா புறமும் அமைந்திருந்த புதர்களை உற்றுக் கவனித்தான்.

அழகப்பநாயக்கன் வாசற்பக்கம் வருவதைக் கவனித்தவுடன் புதருக்குள் ஒளிந்திருந்த வெங்கடகிருஷ்ணன் அவன் பார்க்க முடியாதபடி நன்றாக பதுங்கிக் கொண்டதால் அது ஒற்றர் தலைவனின் பார்வையில் படவில்லை.

பின்னர் அழகப்பன் திருப்தி அடைந்தவனாய் வாசற்கதவை அடைத்துவிட்டு, சிறிய ஆசனத்தருகே வந்து உட்கார்ந்தான். தனது பையைத் திறந்து, ஓரங்கள் கத்தரிக்கப்பட்ட, சமீபத்தில் பனைமரத்தில் இருந்து எடுக்கப்

பட்ட இளங்குருத்து ஓலை ஒன்றையும், சிறிய எழுத்தாணி யையும் எடுத்து வைத்தான்.

சற்று யோசனை செய்துவிட்டு மதுரை அரசி வையாம் பிகாதேவிக்கு எழுத ஆரம்பித்தான்.

சரியாக இதே சமயம் அழகப்பன் இருக்கும் குடிசைக் குச் சற்றுத் தூரத்தில் வந்து சேர்ந்த சொக்கநாதன், தனது குதிரையை மறைவாகக் கட்டி இருக்கும் வெங்கடகிருஷ் ணனின் புரவிக்கருகே கட்டிவிட்டு, மிகக் கவனமாக நடந்து, தனது நண்பன் ஒளிந்திருக்கும் புதருக்குள் வந்து அவனருகே படுத்துக் கொண்டான்.

''என்ன சொக்கநாதா, நீ போன விஷயம் என்னவா யிற்று?'' என்று கிசுகிசுத்தான் கிருஷ்ணன்.

''லக்கப்பனை மடக்கிச் சோதித்துப் பார்த்தேன். நான் கொடுத்த ஓலையை அப்படியே கொண்டு செல்கிறான்'' என்று நடந்ததை அப்படியே சொல்லி முடித்தான் சொக்க நாதன்.

''பிறகு எதற்காக அழகப்பன் இங்கே ஒளிந்து கொண் டிருக்கிறான்? நம்மிடம் ஓலையைக் கொண்டு உடனே செல்வதாக எதற்குப் பொய் உரைத்துவிட்டு, ஓலையை உதவியாளனிடம் எதற்கு அனுப்ப வேண்டும்?''

''ஒற்றர் தலைவனின் திட்டம் புரியவில்லை! எதற்கும் சற்று நேரம் இவன் நடவடிக்கைகளை கவனிப்போம். கூண்டு பத்திரமாக இருக்கிறதா?''

''இதோ! கவனமாக வைத்திருக்கிறேன்'' என்று தன்ன ருகே இருந்த துணிப்பையைக் காட்டினான்.

உள்ளே ஒற்றர் தலைவன் ஓலையை எழுதி முடித்து விட்டு, ஒருமுறை அதனைப் படித்துப் பார்த்தான்.

'நான் இங்கு வந்த அன்று மன்னர் இல்லை. திருவரங்கம் சென்று இருப்பதாக சொன்னார்கள். உடனே அங்கு சென்று பார்த்தேன். அங்கும் அவர் இல்லை. திருச்சிராப் பள்ளிக்கு வந்து சேர்ந்து மறுநாள் மட்டும் அரசரும் கிருஷ்ணனும் திருவரங்கம் வந்து சேவித்தார்களாம். அதன் பிறகு இருவரும் எங்கே சென்றார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை.

தீவிரமாக விசாரித்தபொழுது இருவரது, அடையாளங்கள் சாயலில் யாரோ இருவர் தஞ்சாவூர் பாதையில் சென்றதாகத் தெரிந்தது. நான் உடனே அங்கு போக நினைத்துச் சற்றுதூரம் செல்லும் பொழுது மன்னரும் கிருஷ்ணனும் மாறு வேடத்தில் தஞ்சைப் பாதையில் இருந்து திரும்பிக் கொண்டிருப்பதை என் கண்களால் பார்த்தேன். மறுநாள் மன்னர் என்னிடம் பொய்யுரைத்தார். கடந்த பதினைந்து நாட்களும் அவர்கள் தஞ்சைப் பகுதிக் குள்தான் இருந்திருப்பார்கள் என்று நிச்சயமாகத் தெரிகிறது. மறுபடியும் அவர்கள் போக நினைக்கலாம். அவர்கள் நடவடிக்கைகளை உடனுக்குடன் தெரிவிக்கிறேன். மன்னர் தங்களுக்குக் கொடுத்த ஓலையை என் உதவியாளன் லக்கப்பன் மூலம் இன்று அனுப்பி இருக்கிறேன்.'

ஓலை நறுக்கின் மீது ஏதோ ஒரு பச்சிலைத் திரவத்தைப் பூசினான். பிறகு மெதுவாகச் சுருட்டி மெல்லிய பட்டு நூலில் இறுக்கிக் கட்டினான்.

அதனை ஆசனத்தின் அருகே வைத்துவிட்டு, மெதுவாக எழுந்து வாசலுக்கு வந்து கதவைத் திறந்து வெளியே வந்து நாலா பக்கமும் சுற்றிப் பார்த்தான்.

சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் அவசரமாகப் புதருக்குள் மறைந்து கொண்டு அவன் செயலைக் கண் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தனர்.

நாலா பக்கமும் சுற்றிப் பார்த்த அழகப்பன் பிறகு அண்ணாந்து வானத்தை நீண்ட நேரம் பார்த்தான். பிறகு திருப்தி அடைந்தவனாய் குடிசைக்குள் சென்றான்.

அழகப்பன் தலைமறைந்ததுமே சொக்கநாதன் நண்பனிடம் ''கிருஷ்ணா நான் நினைத்தது சரியாகப் போய் விட்டது. கூண்டை எடு, அதற்கான நேரம் வந்து விட்டது'' என்று கிசுகிசுத்தான்.

மறுவிநாடியே வெங்கடகிருஷ்ணன் தன்னருகே இருந்த துணி மூட்டையைப் பிரித்துக் கூண்டை எடுத்துத் தரையில் வைத்தான். அந்தச் சிறிய கம்பிக் கூண்டிற்குள் ராஜாளிப் பறவை ஒன்று அமைதியாக உட்கார்ந்திருந்தது.

ஒரு சிறிய துணிப்பையால் அந்தப் பறவை வெளி உலகைப் பார்க்க முடியாதபடி கழுத்துவரை மாட்டி வைக்கப்பட்டிருந்தது. சொக்கநாதன் ஒரு சிறிய தோல் பட்டையைத் தனது மணிக்கட்டில் சுற்றி இறுக்கிக் கொண்டான்.

கூண்டை திறந்து ராஜாளியை வெளியே எடுத்து அதன் கால்களைத் தனது மணிக்கட்டில் சுற்றப்பட்டிருந்த தோல் பட்டை மீது நிற்க வைத்தான்.

ராஜாளி சொக்கநாதனின் கைமீது நின்று தனது கூரிய நகங்களால் தோல்பட்டையைச் சுற்றி இறுக்கிப் பிடித்துக் கொண்டது. தோல்பட்டை மட்டும் இல்லாமல் இருந்தால் அதன் கூரிய நகங்கள் சொக்கநாதனின் மணிக்கட்டைக் குத்திக் கிழித்துவிடும் என்பதற்காக இந்த முன்னேற்பாடு.

பிறகு புதருக்குள் மறைந்து உட்கார்ந்து கொண்டு ராஜாளியின் கண்களை மறைத்த துணிப்பையை விலக்காது, குடிசையின் மீது கண்களை ஓட்டியவாறு காத்திருந்தான் சொக்கநாதன்.

குடிசைக்குள் நுழைந்த அழகப்பன் சுருட்டி வைத்திருந்த ஓலை நறுக்கினை எடுத்துக் கொண்டு அந்த அறையின் மற்றோர் இடத்திலிருந்த கூண்டிற்கருகே வந்தான்.

அதனுள் இருந்த தூதுப் புறாக்களில் ஒன்றை எடுத்து வந்து அதன் காலில் அந்த ஓலை நறுக்கினைச் சேர்த்து வைத்து, மெல்லிய பட்டு நூலால் இறுக்கமாகப் பிணைத்தான். பிறகு அதனை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தான்.

சுற்றுமுற்றும் பார்த்தான். வானத்தை மீண்டும் ஒரு முறை பார்த்துக் கொண்டான். பிறகு புறாவைக் கையில் ஏந்தி ஒருவிதமாகச் சன்னை செய்தான்.

அதனை புரிந்து கொண்டது போல் அந்தப் புறாவும் 'ஹ்க்கும்... ஹ்க்கும் என்றும் சப்தித்தது. உடனே புறாவினை உயர்த்தி எறிந்தான்.

புறா வானவெளியில் சிறகடித்துப் பறந்தது. உயரப் பறந்த புறா சற்றுக் கீழிறங்கி அழகப்பன் நின்றிருந்த குடிசையைச் சுற்றி இரண்டு முறை பறந்தது. பின்னர் மறுபடியும் உயர்ந்து மதுரையை நோக்கிப் பறக்க ஆரம்பித்தது.

புறா பறந்த மறுவிநாடியே சொக்கநாதன் கையில் ராஜாளியை ஏந்தியபடி புதரைவிட்டு வேகமாக ஓடினான். தூரத்தில் கட்டி இருந்த புரவியை அவிழ்த்து வேகமாக ஏறி, புறா செல்லும் திசையில் கனவேகமாக ஓட்டினான்.

புறா கண்களில் இருந்து மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்த அழகப்பன், மீண்டும் குடிசைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான். அதனைப் பார்த்த பிறகுதான் வெங்கடகிருஷ்ணன் புதரைவிட்டு எழுந்து, சொக்கநாதன் சென்ற திசையில் வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

குடிசையை விட்டு நீண்ட தூரம் புறாவினை விரட்டி வந்த சொக்கநாதன் பிறகு புரவியை அசையாமல் நிறுத்தினான். மிக உயரத்தில் கனவேகத்தில் புறா பறந்து சென்று கொண்டிருந்தது.

மறுவிநாடி ராஜாளி கண்களை மூடி இருந்த துணிப் பையை விலக்கினான் சொக்கநாதன். ராஜாளி சுற்றிலும் வெறிக்கப் பார்த்துவிட்டுக் கிறீச் என்று ஓலமிட்டது. உடனே கையை உயர்த்தி புறா செல்லும் திசையில் நீட்டினான்.

அடுத்த விநாடியே ராஜாளி புறாவை நோக்கிப் பறக்க ஆரம்பித்தது. ராஜாளி தன்னை விரட்டுவதைக் கண்ணுற்ற புறா பயத்துடன் தனது வேகத்தை அதிகரித்தது.

ராஜாளி உடனே புறாவைவிட அதிக உயரத்தில் பறந்து சரேல் என்று கீழிறங்கி புறாவின் முதுகில் வந்து அமர்ந்து அதன் தலையைக் கொத்த ஆரம்பித்தது.

ராஜாளியின் உடம்பின் மொத்த கனமும் தன்மீது அழுத்தியதாலும், தலையைக் கொத்தியதால் ஏற்பட்ட வலியாலும் அந்தப் புறா சிறகடிக்க முடியாது அப்படியே கீழே இறங்கியது.

இதனை எதிர்பார்த்துச் சொக்கநாதனும் தனது குதிரையை ஓட்டிக் கொண்டிருந்ததால், புறாவும் ராஜாளியும் ஒருசேரத் தரையில் வீழ்ந்ததுமே ஓடிச் சென்று இரண்டு பறவைகளையும் எடுத்துக் கொண்டான்.

இதற்குள் வெங்கடகிருஷ்ணனும் அந்த இடத்திற்கு வந்துவிட்டான். ராஜாளியைப் புறாவிடமிருந்து பிரித்து அதன் கழுத்தில் மறுபடியும் துணிப்பையை மாட்டிக் கூண்டில் அடைத்தான்.

புறாவின் காலில் கட்டி இருந்த ஓலை நறுக்கினை எடுத்துப் படித்துப் பார்த்தான் சொக்கநாதன். பிறகு எரிச்சலுடன் அதனைத் தன் நண்பனிடம் நீட்டினான்.

''படித்துப்பார். நான் நினைத்தது சரியாகிவிட்டது'' என்றவன் நண்பன் அதனைப் படித்து முடித்தவுடன் அதனைத் தனது குறுவாளால் சுக்கல் சுக்கலாகக் கிழித்து எறிந்தான்.

பிறகு தனது இடுப்பில் இருந்த சிறு பையை அவிழ்த்து, அதனுள் இருந்த சிறிய ஓலை நறுக்கின் மீது எழுத்தாணி கொண்டு எழுத ஆரம்பித்தான்.

'மன்னர் திருச்சிராப்பள்ளியில் பத்திரமாக இருக்கிறார். தினமும் திருவரங்கம் சென்று சேவித்து வருகிறார். அவரது பக்தியினைப் பார்த்து நாட்டு மக்களே வியக்கிறார்கள். அவரைப் பற்றித் தாங்கள் எந்தக் கவலையும் கொள்ள வேண்டாம். அவரது எண்ணம் முழுவதும் திருவரங்கன் மீதுள்ள திராப் பக்தியிலும், திருச்சிர்ாப்பள்ளிக் கோட்டையின் பாதுகாப்பைப் பற்றியுமே தான் இருக்கிறது. தஞ்சை செல்லும் பாதையை அவர் ஏறிட்டுக்கூடப் பார்ப்பதில்லை என்று நான் எனது ஒற்றர்கள் மூலம் அறிந்துகொண்டேன்.

'இன்னும் இரண்டுமாத காலத்திற்கு இங்கு தங்கி இருந்து இறைவனைச் சேவித்து வருவது மன்னரின் எதிர் காலத்திற்கு நல்லது என்று திருவரங்கன் கோயிலில் அருள் வாக்குச் சொல்லப்பட்டதாம். அதனால் மன்னர் மதுரை திரும்புவதற்கு இன்னும் இரண்டு மாதங்கள் ஆகலாம். அதுவரை நானும் மன்னரைப் பின்தொடர்ந்து, ஏதாவது முக்கியமான தகவல்கள் இருந்தால் மட்டும் தெரிவிக்கிறேன். தாங்கள் அவசரப்பட்டு வேறு யாரையும் இங்கு அனுப்பி வைக்கவேண்டாம் என்று பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.'

இதனை எழுதி முடித்தபிறகு ஓலை நறுக்கினை நண்பனிடம் நீட்டிப் படிக்கச் சொன்னான் சொக்கநாதன்.

படித்துப் பார்த்த கிருஷ்ணன், ''பிரமாதம் சொக்க நாதா, இனி உன் அன்னையார் நம்மீது எள்ளளவும் சந்தேகம் கொள்ள மாட்டார்'' என்றான்.

சொக்கநாதன் அந்த ஓலை நறுக்கினைச் சுருட்டி அதேபோன்று புறாவின் காலில் கட்டிப் பறக்கவிட்டான். புறா படுவேகமாக வானத்தில் பறந்து சென்றது.

பல நாழிகைகள் கடந்ததும் மதுரை அரண்மனையி னுள் உள்ள அந்தப்புரத்தில் இருக்கும் ராணியின் அறைக் குள் வந்து சேர்ந்தது அந்தப் புறா.

ஓர் ஆசனத்தில் ஓய்வாக அமர்ந்து இராமாயணச் சுவடியைப் புரட்டிக் கொண்டிருந்த வையாம்பிகாதேவி, தன் காலடியில் வந்து அமர்ந்த புறாவைப் பார்த்ததும், பரபரப்புடன் அதனைக் கைகளால் பிடித்தாள்.

அதன் காலில் கட்டி இருந்த ஓலை நறுக்கினை எடுத்துப் படித்த ராணிக்கு எல்லையற்ற மகிழ்ச்சி பெருக் கெடுத்தது.

''அடியே மரகதம். உடனே முத்து நகையை இங்கு அழைத்துவா'' என்று கட்டளை இட்டாள்.

சிறிது நேரத்தில் வந்து சேர்ந்த முத்துநகையினை பார்த்து, ''இந்தாடியம்மா பெண்ணே. இதைப் படித்துப் பார். உன் வருங்கால நாயகனின் நடவடிக்கை எப்படி என்று பார்'' என்றவாறு நீட்டினாள்.

ஓலை நறுக்கினைப் பரபரப்போடு வாங்கிப் படித்த முத்துநகையின் முகம் அடுத்த விநாடி மகிழ்ச்சியில் மலரத் தொடங்கியது.

''இப்பொழுது உனக்குத் திருப்திதானே! இனிக் கவலைப்படாது இருப்பாய் அல்லவா? இரண்டு மாதங்கள் பொறுத்துக் கொள். அப்புறம் உன்னிடம் கொஞ்சிப் பேச அவன் வந்துவிடுவான்.''

''போங்கள் அத்தை'' என்று வெட்கத்தில் முகத்தைப் பொத்தியபடி ஓடிவிட்டாள் முத்துநகை.

தன்னறைக்கு ஓடிவந்த முத்துநகைக்கு இப்பொழுது மனதில் கொஞ்சம் நிம்மதி பிறந்தது. இருந்தாலும் அவர் வரவிற்காக இன்னும் இரண்டு மாதங்கள் காத்துக்கிடக்க வேண்டியுள்ளதே என்று நினைக்கையில் அவள் மனம் தவித்தது.

'தேவி மீனாட்சி, இதுவரை அவர் மனதில் வேறு எந்த எண்ணங்களும் வராமல் காப்பாற்றி வருகிறாய். அது போல் இன்னும் இரண்டு மாதங்கள் வரை அவருக்கு என்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணின் மீதும் மோகம் வராது காத்தருள்வாய் தாயே' என்று மனமுருகி வேண்டிக் கொண்டாள்.

பின்னர் பெட்டியைத் திறந்து அதனுள் மறைத்து வைத்திருந்த சிறிய பேழையை எடுத்தாள். மலர்ச்சியுடன் அதனைத் திறந்தாள்.

அன்று சொக்கநாதனின் மீசைக்குள் ஒட்டி இருந்த அந்த மல்லிகை மலர் சருகாகி இருந்தது. அதனை எடுத்து ஆசையுடன் அதற்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டு, மறுபடியும் அந்த மலரைப் பேழைக்குள் வைத்து மறைத்து வைத்தாள்.

அவள் மனதிற்குள் எல்லையற்ற மகிழ்ச்சி பரவியது.

அன்று இரவு திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்குள் அமைந்திருக்கும் ராஜமகால் உப்பரிகையில் சொக்கநாத னும், வெங்கடகிருஷ்ணனும் பேசிக் கொண்டிருந்தனர்.

''இப்பொழுது வந்த ஆபத்தை நீக்கிவிட்டோம் கிருஷ்ணா. இருப்பினும் அழகப்பன் இருக்கும்வரை நம் மால் எதுவும் செய்ய முடியாது. நாம் ஏமாந்த சமயம் அழகப்பன் நம்மை பற்றிய செய்தியை அனுப்பி விட் டால், மறுநாளே என் தாயார் இங்கு வந்து கையோடு என்னைக் கூட்டிச் சென்றுவிடுவார். அதன்பிறகு தஞ்சா வூர்ப் பக்கமே நம்மால் தலை வைத்துப் படுக்க முடியாது'' என்றான் சொக்கநாதன் கவலையுடன்.

''அப்படியானால் என்ன செய்வது? அழகப்பன் இங்கு இருக்கும்வரை நாம் தஞ்சாவூர் போகாமல் இருக்க லாமா?''

''அதுமட்டும் என்னால் முடியாது கிருஷ்ணா! முத லில் விஜயராகவ நாயக்கனுக்கு விருப்பமான பொருளைக் கவரவேண்டும். அடுத்ததாக என்னை எடுத்தெறிந்து பேசிய தஞ்சை இளவரசி எனக்காக ஏங்கும்படி செய்தே ஆகவேண்டும். 'தவறான நோக்கத்துடன் என்னைத் தேடி இனி வராதீர்கள்' என்று சொன்ன அதே வாய் ''இனி என்னைத் தேடி எப்போது வரப்போகிறீர்கள்'' என்று என்னைப் பார்த்து கேட்க வைக்க வேண்டும். அதுவரை எனக்குத் தூக்கம் வராது.''

''அதுதான் சரி. தஞ்சை இளவரசி உன்மீதுள்ள காத லால் தவிக்க வேண்டும். எவ்வளவு எடுத்தெறிந்து பேசி னாள். அவள் திமிரை அடக்காமல் விடவே கூடாது. ஆனால், அதற்கு அழகப்பன் இடைஞ்சலாக இருக்கி றானே!''

''அழகப்பனுக்கு ஒரு முடிவு கட்டுகிறேன்'' என்றான் சொக்கநாதன் கையை இறுக்கிக் கொண்டு.

''கொலையா? அதுமட்டும் வேண்டாம் சொக்கநாதா! என்ன இருந்தாலும் அழகப்பன் நம்மைச் சார்ந்தவன். உன் அன்னையிட்ட கட்டளையை நிறைவேற்றியதைத் தவிர எந்தத் தவறும் அவன் செய்ததில்லை.''

''மடையா! நான் அவனைக் கொலை செய்யப்போவதில்லை. நமக்கு இடைஞ்சல் இல்லாமல் சாமர்த்தியமாக அகற்றப் போகிறேன்.''

''எப்படி?'' என்றான் புரியாமல்.

''நாளை நாம் தஞ்சை கிளம்புவோம். அப்புறம் உனக்கே அது புரியும்!''



# 48

கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து புறப்பட்ட தஞ்சை இளவரசி சந்திரவதனாவும் அவளைச் சேர்ந்த பரிவாரங்களும் தலைநகரை நெருங்கிக் கொண்டிருந்தனர்.

மதயானையினால் ஏற்பட்ட ஆபத்தில் சிக்கி, உழன்று அல்லல்பட்ட அனுபவத்தினால் கிளைத்த வெறுப்பில் சந்திரவதனா வழியில் ஓய்வெடுப்பதற்காக அதிக நேரத்தை விரயமாக்காமல் நடந்த விஷயங்களைத் தன் தந்தையிடம் சொல்லிப் புலம்ப வேண்டும் என்ற நினைப்பில் தன் பரிவாரங்களை விரட்டியதால் அங்கிருந்து கிளம்பிய மூன்றாம் நாளே அவர்கள் தஞ்சாவூர் எல்லையைத் தொட்டுவிட்டனர்.

சந்திரவதனா பயணம் முழுவதிலும் பல்லக்கைவிட்டுக் கீழே இறங்கவில்லை. அவள் மனம் கொதித்துக் கொண்டிருந்தது. அச்சுதப்பனைப் பார்க்க பார்க்க ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இவனால்தானே இத்தனை அல்லலுற நேரிட்டது!

இந்த முழுப்பயணத்தில் அச்சுதப்பன் அவளருகில் நெருங்கி வரவே இல்லை. உணவு நேரத்திலோ இல்லை

வேறு ஏதாவது ஒரு காரணத்திற்காகவோ அச்சுதப்பன் அவளை நோக்கி வர முற்பட்டால் சந்திரவதனா அவனைப் பார்த்துக் கடுமையாக முறைப்பாள். அவ்வளவுதான்! அச்சுதப்பன் அப்படியே திரும்பிப் போய்விடுவான்.

சந்திரவதனாவிற்கு மனதில் நிம்மதியே அடியோடு பாழாகிவிட்டது. எதற்குத்தான் இந்தக் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு வந்தோம் என்ற எண்ணம் அடிக்கடி எழுந்தது.

இங்கு வரவேண்டும் என்ற ஆசையை அவளுக்குள் விதைத்துவிட்ட மதுரவாணி கடைசியில் இங்கு வரமுடியாமல் போய்விட்டதும் ஒருவகையில் நல்லதுதான். மதயானையால் அவளுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருந்தால்? ஐயோ! அவள் பிரிவை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது!

ஒருவகையில் பார்த்தால் மதுரவாணி வந்திருந்தால், இந்த மாதிரி மன உழற்சி ஏற்படும் நேரங்களில் உற்சாகமாகப் பேசி உல்லாசத்தைத் தோற்றுவிக்க அவளால் முடியுமே!

அவளது துணையின்றி நான் இங்கு வந்திருக்கக் கூடாது. அதிலும் அச்சுதப்பனைப் போன்று அடிமடையனின் காவல் பொறுப்பில் வந்தது அதைவிடத் தவறு!

யானை பிளிறியதும் குதிகால் பிடரியில் படும்படி என்ன ஓட்டம் ஓடினான்!

மறுநிமிடமே தன்னைக் காப்பாற்றிய வாலிபன் நினைவு அவளுக்குள் எழுந்தது.

எவ்வளவு அற்புதமான வீரன்! என்ன வாட்டசாட்டமான உடல்வாகு! என்ன கம்பீரம்! எவ்வளவு துணிச்சல்!

முதல்நாள் இரவு கூடாரத்தைக் கிழித்துக் கொண்டு இறங்கி தனி ஒரு மனிதனாய் எத்தனை வீரர்களைச் சமாளித்துத் தப்பி ஓடினான். மறுநாள் காலையில் மதயானையை வலுச்சண்டைக்கு இழுத்து எவ்வளவு புத்திசாலித்தனமாக என்னைக் காப்பாற்றினான்.

அந்த வீரன் யார் என்று தெரியவில்லையே! அவர்களைப் பற்றி முற்றிலும் தெரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டதே!

இருந்தாலும் அந்த வீரனுக்குத் திமிர் அதிகம்! நடு இரவில் நாடாளும் ராஜகுமாரி கண்ணயரும் கூடாரத்தைக் கிழித்துக் கொண்டு குதித்ததுமின்றி; நீ அழகாக இருக்கிறாய். உன்னை அருகில் வந்து பார்க்க வேண்டும் என்ற ஆசையில் வந்தேன் என்று எவ்வளவு துணிச்சலாகச் சொன்னான். அப்பொழுதே அவன் கன்னத்தில் பளார் என்று அறைந்திருக்க வேண்டும்.

மத யானையின் மீதிருந்த என்னை வலிய வந்து காப்பாற்றினான். சரி. அதற்காக நன்றி கூறிவிட்டேன். என் தந்தையிடம் சொல்லி மிகுந்த சன்மானம் அளிக்கிறேன் என்றுகூடக் கூறிவிட்டேன்.

ஆனால் அவன் என்ன வார்த்தைக் கூறிவிட்டான்! எனக்கு வேண்டியது உன்னிடம்தான் இருக்கிறது என்று எவ்வளவு தைரியமாக என்னிடமே கூறுகிறான். திமிர், மமதை, ஆணவம், எல்லாம் திரண்டிருக்கிறது அவனிடம்!

என் தந்தை மட்டும் இந்த வார்த்தைகளைக் கேட்டிருந்தால் அவனை அந்த இடத்திலேயே வெட்டிப் போட்டிருப்பார்! அவனுக்கு வேண்டியது என்னிடம் இருக்கிறதாம்! ஹூம்!

நான் அரைகுறை மயக்கத்தில் இருந்தபொழுது அவன் என்னை எப்படி எல்லாம் அணைத்துத் தூக்கிச் சென்றான். யானைமீது கூட அவனுடன் எவ்வளவு நெருங்கி இருந்தேன்! அப்பொழுது அவன் கண்ணியக் குறைவாக நடந்து கொள்ளவில்லையே!

அதுவும் ஒருவகையான திமிர்தான்! கடைசியாக என்னைப் பார்த்துச் சொல்லிவிட்டு போனானே! 'நீயே என்னை விரும்பி வரும்வரை நான் உன்னைவிடப் போவதில்லை' என்று! அந்த நினைப்பில் எழுந்த திமிர்!

நானாக இவனை விரும்பிச் செல்வேனாமே! ஹ்ஹூம்! இவர் பெரிய மன்மதர்! இவரைப் பார்த்துச் சொக்கிப் போய் இவரைத் தேடிப் போகப் போகிறேனாக்கும்!

எவனோ ஊர் பேர் தெரியாத பயல்! அவனுக்காக இந்த நாட்டின் இளவரசி ஏங்க வேண்டுமாம்! பைத்தியக்காரத்தனம்! போயும் போயும் இவனையா நான் காதலிப்பேன்!

ஏதோ கொஞ்சம் துணிச்சல் இருக்கிறது! அச்சுதப்பனைப் பார்க்கும்பொழுது அவனைவிட வீரன் தான்! ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை மாதிரி மதயானையைப் பார்த்து எல்லாரும் ஓடி ஒளிந்துவிட்ட நிலையில் இவன் வந்து காப்பாற்றி இருக்கிறான். அதற்காகக் காதலித்துவிட முடியுமா?

நான் எதற்கு அவனையே நினைத்துக் கொண்டிருக்கிறேன்? ஊர், பேர் தெரியாத யாரோ எவனையோ பற்றி நான் ஏன் நினைத்து நினைத்து என் நெஞ்சை நோகடிக்க வேண்டும்?

சற்று நேரம் பல்லக்கின் திரைச்சீலையை விலக்கி, அங்கு தெரியும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'இப்போதைக்கு நான் செல்கிறேன். விரைவில் உன்னைச் சந்திக்கிறேன்' என்று போகும்போது சொல்லிவிட்டுச் சென்றானே! அப்படியானால் திரும்ப என்னைப் பார்க்க வருவானா? எப்பொழுது? வழியிலா? இல்லை நான் தஞ்சாவூர் சென்ற பிறகா?

தஞ்சை அரண்மனையில் கட்டுக்காவல்கள் அதிகமே! அத்தனையையும் கடந்து அவனால் என்னைச் சந்திக்க முடியுமா? கங்கைகொண்ட சோழபுரத்தில் அத்தனை கட்டுக் காவல்களையும் கடந்து, கூடாரத்தைக் கிழித்துக் கொண்டு குதித்தவன் தானே! அவனால் முடியாததா?

எவன், எக்கேடு கெட்டுப் போனால் எனக்கென்ன? நான் என்ன அவனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறேன்! சே!

தஞ்சை அரண்மனை அந்தப்புரத்திற்குள் மட்டும் அவன் நுழைந்து விடட்டும். அவனைப் பிடித்து என் தந்தையிடம் ஒப்படைத்துத் தகுந்த தண்டனை அளிக்க வேண்டும்!

இப்படிப் பல்வேறு விதமான எண்ணங்களால் அலைக்கழிக்கப்பட்ட சந்திரவதனா ஒருவழியாகத் தஞ்சாவூர் வந்து சேர்ந்தாள்.

இளவரசி தஞ்சை எல்லையில் இருந்து பத்துக் கல் தொலைவில் வரும்பொழுதே மன்னன் விஜயராகவ நாயக்கனுக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டிருந்தது.

உடனே அவசர அவசரமாக ஆட்களை முடுக்கி விட்டுத் தலைநகர் முழுவதும் தோரணங்களாலும், வளைவுக

ளாலும் அலங்காரம் செய்யப்பட்டது. நாட்டு மக்கள் வழிநெடுகக் கூடி நின்று இளவரசியின் வரவிற்காக ஆர்ப் பரிக்கத் தொடங்கினர்.

அரண்மனையின் வாயிலில் மன்னன் விஜயராகவ நாயக்கனும், மதிமந்திரி கோவிந்த தீட்சிதரும் காத்து நின்றனர். அவர்களுக்கு அருகே தளவாய் ரங்கப்ப நாயக்க னும் மிடுக்குடன் நின்று கொண்டு இருந்தான்.

இதோ சந்திரவதனா இன்னும் சற்று நேரத்தில் பத்திர மாக வந்து சேர்ந்துவிடப் போகிறாள். கொடுத்த வேலையை அச்சுதப்பன் கச்சிதமாக நிறைவேற்றிக் கொணர்ந்துவிட்டான்.

சந்திரவதனாவின் மனதை எந்த அளவுக்கு அசைத்தி ருப்பான் என்று தெரியவில்லையே? இந்த ஒருவாரப் பயணத்தில் அவள் மனதை எந்த அளவுக்கு ஈர்த்திருப் பானோ? சந்திரவதனா வந்தவுடன் அச்சுதப்பனைத்தான் மணப்பேன் என்று அடம் பிடிக்கும் அளவுக்கு அவள் காதலைப் பெற்றிருப்பானா?

இந்த எண்ணங்கள் தளவாயின் மனதைப் புரட்டிக் கொண்டிருந்தன.

சந்திரவதனாவின் பல்லக்கு அரண்மனை வாயிலை நெருங்கியதும் வாத்தியங்களின் ஓசை விண்ணைப் பிளந்தது. சிவிகையில் இருந்து எழிலாக இறங்கினாள் சந்திரவதனா.

ராஜகோபால சுவாமி கோயிலின் அர்ச்சகர்கள் அவ ளுக்கு பூரண கும்ப மரியாதை செலுத்தி, திருஷ்டி கழித்த னர். மன்னன் பாச நெகிழ்வுடன் மகளருகே நெருங்கி வந்தான்.

இதற்குள் அச்சுதப்பன் வேகமாக மன்னருக்கருகே வந்துவிட்டான். ''பயணம் எப்படி இருந்தது மகளே? மிகவும் களைத்துப்போய் காணப்படுகிறாயே? கங்கை கொண்ட சோழீஸ்வரர் தரிசனம் கிடைத்ததா?'' என்று கேட்டவாறு சந்திரவதனாவின் தலையை வருடினான் மன்னன்.

''அற்புதமான தரிசனம் மன்னா! தாங்கள வரவில்லையே என்ற ஒரே குறையைத் தவிர எங்களுக்கு வேறு எந்தக் குறையுமே இல்லை'' என்று முந்திக் கொண்டு சொன்னான் அச்சுதப்பன்.

சந்திரவதனா அவனை முறைத்துப் பார்த்தாள். அதைப் பார்த்துச் சற்று மிரண்ட அச்சுதப்பன் கண்களை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டான்.

''என் மைந்தன் அச்சுதப்பன் உடன் செல்லும் பொழுது இளவரசிக்கு என்ன குறை வந்துவிட முடியும்?'' என்றான் தளவாய்.

''உண்மைதான். தங்கள் மைந்தர் மகத்தான வீரர் அல்லவா! இல்லையா அச்சுதப்ப மாமா?'' என்று நக்கல் தொனிக்கச் சொன்னாள் இளவரசி.

''சிங்கக் கிணற்றில் குளித்தாயா சந்திரவதனா? கங்கை நீரில் புனிதமடையும் பாக்கியம் கிடைத்ததல்லவா?'' என்றான் மன்னன்.

''ஆசை தீரக் குளித்தாள் மன்னா! தாங்களும் அந்தப் புனித நீரில் நீராடுவதற்காக நூற்றியெட்டு குடங்களில் நிறைத்துக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்றான் அச்சுதப்பன் இளவரசியைப் பேசவிடாமல்.

''நல்ல காரியம் செய்திருக்கிறாய் அச்சுதப்பா'' என்றான் மன்னன்.

''என் மகன் புத்திசாலித்தனத்தைப் பார்த்தீர்களா மன்னா! நான்கூடத் தங்களுக்காகக் கங்கை நீரைக் கொண்டு வரச் சொல்ல மறந்துவிட்டேன். ஆனால், அவன் தங்கள் மீதுள்ள அன்பில் தங்களுக்குப் பிடித்த காரியத்தினை நிறைவேற்றிக் கொண்டு வந்திருக்கிறான் பார்த்தீர்களா?'' என்று பெருமை பொங்கச் சொன்னான் ரங்கப்பன்.

''உண்மைதான், தளவாயின் மைந்தன் புத்திசாலியாக இருப்பதில் வியப்பொன்றும் இல்லையே!''

''அபாரப் புத்திசாலி அப்பா அச்சுதப்ப மாமா'' என்றவாறு அச்சுதப்பனைப் பார்த்துச் சிரித்தாள் சந்திரவதனா.

அவளுக்கு அச்சுதப்பன் மத யானையைப் பார்த்துக் குதிரையில் இருந்து கீழே விழுந்து எழுந்து ஓடிய காட்சி தான் நினைவுக்கு வந்தது.

''சந்திரவதனா நான் சொன்ன விஷயத்தை மறந்துவிட்டாயா?''

''என்ன தந்தையே?''

''நகர எல்லைக்குள் நீ நுழையும்பொழுது, உன்னைக் கண் கொண்டு பார்ப்பதற்கு நாட்டு மக்கள் தவித்துக் கொண்டிருப்பார்கள். அதனால் நீ பல்லக்கில் இருந்து இறங்கி, யானை மீதுதான் வரவேண்டும். அதுதான் மரபு! அதை மறந்துவிட்டாயே! யானையைக்கூட எங்கே காணவில்லை?''

இந்தக் கேள்விக்கு சந்திரவதனா உடனே பதில் கூறாது, அருகில் இருக்கும் அச்சுதப்பனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''அச்சுதப்ப மாமா இந்தக் கேள்விக்கு நீங்கள் பதில் சொல்கிறீர்களா இல்லை நான் சொல்லட்டுமா?'' என்றாள்.

''ஹி...ஹி...ஹி...'' என்று தர்ம சங்கடமாகச் சிரித்தான் அச்சுதப்பன்.

''தங்களது அபாரப் புத்திசாலித்தனமும், மகத்தான வீரமும் இன்னதென்று மன்னருக்குத் தெரிய வேண்டாமா?''

''ஆமாம்.... ஆமாம்... இல்லை இல்லை... இப்போ எதுக்கு?''

''என்ன விஷயம் சந்திரவதனா? யானைக்கு என்ன நேர்ந்தது?'' என்றான் மன்னன்.

''அது ஒரு பெரிய கதை தந்தையே! இப்பொழுது எனக்குக் களைப்பாக இருக்கிறது. பிறகு சொல்கிறேன்!''

அச்சுதப்பனுக்கு இதைக் கேட்ட பிறகுதான் நிம்மதி பிறந்தது. இளவரசி உடனே அமைச்சர் பக்கம் திரும்பினாள்.

''மதுரவாணி நலமாக இருக்கிறாளா?'' என்றாள்.

''இருக்கிறாள் இளவரசி'' என்றார் அமைச்சர் பணிவாக.

''மாலையில் அவளை அந்தப்புரத்திற்கு வரச் சொல்லுங்கள். அவளிடம் நிறையப் பேசவேண்டும். அவளுக்காகக் கங்கா தீர்த்தம் கொண்டு வந்திருக்கிறேன்.''

''அப்படியே சொல்கிறேன் இளவரசி'' என்றார் அமைச்சர்.

''வந்தவுடன் தோழியின் நினைப்புதான் வந்திருக்கிறது. இவளுக்காக இவளது அன்னையர்கள் கவலையுடன் காத்துக் கிடக்கிறார்கள். அவர்கள் நினைப்பு இல்லை பார்த்தீர்களா அமைச்சரே?'' என்று மன்னன் சிரித்தவாறு சொல்ல, அனைவருமே நகைத்தனர்.

தளவாய் ரங்கப்ப நாயக்கன் தனது மாளிகையில் உள்ள தனியறையில் தனது மைந்தன் அச்சுதப்பனோடு மகிழ்ச்சிப் பொங்கப் பேசிக் கொண்டிருந்தான்.

''அச்சுதப்பா, இப்பொழுதுதான்டா உன்னை நினைக்கையில் எனக்குப் பெருமையாக இருக்கிறது! சொன்ன வேலையைக் கச்சிதமாக நிறைவேற்றி வந்திருக்கிறாய்!''

''நீங்கள்தான் என்னை நம்பாமல் சிடுசிடுத்தீர்கள். இப்பொழுதாவது புரிந்து கொண்டீர்களா?''

''புரிந்து கொண்டேனடா. இளவரசியின் மனதை உன் பக்கம் திருப்பச் சொன்னேனே, அது எந்த அளவில் கூடி இருக்கிறது?''

''பயணத்தின் போது என்னை அவள் ஒரு நிமிடம் கூடப் பிரிந்ததே இல்லை. சற்று நேரம் என்னைக் காணா விட்டால்கூடத் தவித்துவிடுவாள்.. மாமா எங்கே போய் விட்டீர்கள், மாமா சாப்பிட்டீர்களா, மாமா இது எந்த ஊர்' என்று என்னிடம் எந்த நேரமும் பேசிக் கொண்டிருக்க ஆசைப்படுவாள்.''

''அதுதான் பார்த்தேனே! அரசனிடம் பேசிக் கொண்டிருக்கும் பொழுதுகூட உன்னைப் பார்த்து எத்தனை முறை மாமா, மாமா என்று பேசினாள். அப்பொழுதே நினைத்தேன் நீ அவள் மனதில் இடம் பெற்றுவிட்டாய் என்று.''

''ஹி ஹி'' என்று சிரித்தான் அச்சுதப்பன்.

''யானைக்கு என்னடா ஆயிற்று? இளவரசி ஏதோ சொன்னாளே இது என்னடா விஷயம்?''

இதற்குத் தர்ம சங்கடமாக நெளிந்தான் அச்சுதப்பன்.

''பெரிய கதை என்றாளே, சொல்லுடா! என்ன நேர்ந்தது யானைக்கு?''

''அது ஒன்றுமில்லை தந்தையே! கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்து நாங்கள் கிளம்பும் நேரம் சந்திர வதனா யானை மீது ஏறி அம்பாரியில் உட்கார்ந்து கொண்டாள். கிளம்புவதை அறிவிப்பதற்காத வாத்தியங்கள் அலறின. உடனே யானை பயங்கரமாகப் பிளிறி பாகனைத் தூக்கி எறிந்து கொன்றது.''

''ஏன்?''

''யானைக்கு மதம் பிடித்துவிட்டது என்று எனக்குத் தெரிந்தது. நமது வீரர்களைத் துவட்டி, துவம்சம் செய்ய ஆரம்பித்தது. வீரர்கள் பயந்து ஓட, யானை மீது அமர்ந்திருந்த இளவரசி அலறினாள்.''

''ஐயையோ! அப்புறம்?''

''நான் மட்டும் பயப்படாமல் யானைக்கருகே போய் அதன் தும்பிக்கையை வெட்டினேன். மறுவிநாடி அதன் கொம்பைப் பிடித்து, மத்தகத்தில் கால் வைத்து ஏறி அதன் தலையில் உட்கார்ந்தேன். பிறகு குறுவாளால் மாறி மாறிக் குத்தினேன். யானை செத்து விழுந்தது. இளவரசியின் நகத்திற்குக்கூடச் சேதமில்லாமல் காப்பாற்றிவிட்டேன்.''

''அப்படியா என் சிங்கக்குட்டி!'' என்றவாறு தன் மகனை ஆசையுடன் முதுகில் தட்டிக் கொடுத்தான் ரங்கப்பன்.

தொடர்ந்து "இந்த விஷயத்தை அரசர் முன்பு சொல்லி இருக்கலாமே! பரவாயில்லை! இளவரசி கண்டிப்பாகத் தந்தையிடம் கூறுவாள். மன்னர் உன்னை எப்படிப் பாராட்டப் போகிறார் என்று பாரேன். இளவரசி உன்னிடம் குழைந்து, குழைந்து பேசியதற்குக் காரணம் இப்பொழுது தான் புரிகிறது. இனி இளவரசி உனக்குத்தான். சந்தேகமே இல்லை!" என்றான் ரங்கப்பன்.

அப்பொழுது ஒரு சேவகன், "தங்களையும், தங்கள் மைந்தர் அச்சுதப்பரையும் உடனே அரண்மனைக்கு வருமாறு மன்னர் உத்தரவிட்டிருக்கிறார்" என்றான்.



# 49

தஞ்சை அரண்மனையின் வளாகத்தினுள் அமைந்திருக்கும் சிறிய தர்பார் மண்டபத்தினுள் மன்னர் விஜயராகவ நாயக்கனும், அமைச்சர் கோவிந்த தீட்சிதரும் அருகருகே அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு எதிரே இருந்த ஆசனத்தில் இளவரசி சந்திரவதனா எழிலாக அமர்ந்திருந்தாள்.

கங்கைகொண்ட சோழபுரம் சென்று வந்த களைப்பு நீங்கக் குளிர்ந்த நீரில் நீராடி வந்திருந்ததால் அவள் முகம் புத்துணர்ச்சியுடன் காணப்பட்டது.

''இப்பொழுது சொல் சந்திரா. யானைக்கு என்ன நேர்ந்தது? நீ ஏன் அதில் ஏறி வரவில்லை?'' என்று ஆரம்பித்தான் மன்னன்.

''நாங்கள் கங்கைகொண்ட சோழபுரம் சென்று சேரும் வரை யானை நன்றாகத்தான் இருந்தது தந்தையே! அதற்குப் பிறகுதான் யானைக்கு மதம் பிடித்திருக்கிறது. அதை யாரும் கவனிக்க வில்லை.''

''மதம் பிடித்த யானைக்குக் காதருகில் கறுப்பு நிறத் திரவம் சுரக்குமே, அதைக்கூடவா பாகன் கவனிக்கவில்லை'' என்று வியப்புடன் கேட்டார் அமைச்சர்.

''முகபடாம் காதுவரை மறைந்திருந்ததால் அதனைப் பாகன் கவனிக்கவில்லையோ இல்லை அவன் கவனக் குறைவாக இருந்து விட்டானோ தெரியவில்லை!''

''கடவுளே! அப்புறம்?'' அதிர்ச்சியுடன் வினவினான் மன்னன்.

''காலையில் யானை நிலைகொள்ளாமல் தவித்திருக்கிறது. உணவு உட்கொள்ளவில்லை. அடிக்கடி தும்பிக் கையை உயர்த்திப் பிளிறிக் கொண்டு இருந்திருக்கிறது. இதனைப் பார்த்து பயணக் களைப்பில் யானைக்கு வயிறு மந்தப்பட்டிருக்கிறது. கள்ளைக் கொடுத்தால் சரியாகி விடும் என்று சொல்லி இருக்கிறார்.''

''எந்த மடையன் அப்படிச் சொன்னது?'' கோபத்துடன் கேட்டான் விஜயராகவ நாயக்கன்.

''வேறு யார் இவ்வளவு புத்திசாலித்தனமாகச் சொல்ல முடியும்? உங்கள் அருமைத் தளவாயின் அருமருந்தன்ன புதல்வன் அச்சுதப்ப நாயக்கன்தான்.''

''மடையன்'' பற்களைக் கடித்த மன்னன், ''அப்புறம்?'' என்று கவலையுடன் கேட்டான்.

''இது எனக்குத் தெரியாது; சுவாமி தரிசனம் முடிந்து நான் அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு யானையின் மீது ஏறி அம்பாரியில் உட்கார்ந்து விட்டேன்.''

''ஐயையோ!'' பதைபதைத்தான் அரசன்.

''வாத்தியங்கள் பிளிற ஆரம்பித்ததும் மதங்கொண்ட யானை கள்வெறியுடன் பாகனைப் பிடித்து வானத்தில் எறிந்து கொன்றது. சுற்றிலும் இருந்தவர்கள் மீது கோபத்துடன் புகுந்து சின்னாபின்னமாக்கியது. அம்பாரிக்குள் இருந்த நான் அலறினேன் தந்தையே!''

''பிறகு? அச்சுதப்பன் ஓடிவந்து உன்னைக் காப்பாற்றி னானா?''

''அச்சுதப்பனா! யானைக்கு பயந்து அவர் ஓடிய ஓட்டம் என்னால் ஜென்மத்துக்கும் மறக்க முடியாது தந்தையே! 'மாமா என்னைக் காப்பாற்றுங்கள்' என்று அவரைப் பார்த்துக் கதறினேன். ஆனால், அவர் காதில் அது விழுந்தும், உயிருக்குப் பயந்து அவர் ஓடினார், பாருங்கள். தங்கள் பட்டத்துக் குதிரை கூட அவ்வளவு வேகத்தில் ஓடாது. அவர் மட்டுமல்ல தந்தையே நமது படைவீரர்கள் ஒருவர்கூட அந்த இடத்தில் நிற்காது பயந்து ஓடி ஒளிந்து கொண்டனர்.''

''அப்புறம் என்னம்மா ஆயிற்று?'' கண்கள் கலங்கக் கேட்டான் விஜயராகவன்.

''யாரோ ஒரு வீரன்! திடீரென்று குதிரையில் ஓடிவந்து யானையை வலுச் சண்டைக்கு இழுத்தான்...'' என்று ஆரம்பித்துத் தன் மயக்கத்தைத் தெளிய வைத்தது வரை விரிவாகச் சொல்லி முடித்தாள் சந்திரவதனா.

விஜயராகவ நாயக்கன் கேட்டு முடித்து வானத்தைப் பார்த்துக் கைகளை உயர்த்திக் கும்பிட்டவாறு ''மன்னார் குடி ராஜகோபால சுவாமிதான் அவன் மூலம் வந்து உன்னைக் காத்தருளி இருக்கிறார். யாரம்மா அந்த வீரன்?'' என்றான்.

''யாரென்று தெரியவில்லை தந்தையே! அவனைப் பற்றித் தெரிந்துகொள்ள நினைக்கும்பொழுது அச்சுதப்பன் படைகளுடன் அங்கு ஓடிவந்தார். வரும்போதே 'அவர்க ளைப் பிடியுங்கள்' என்று கத்திக் கொண்டு வந்தார். அதனைப் பார்த்து மிரண்டு போய் அவர்கள் இருவரும் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விட்டார்கள்.''

''மடையன்! ஒவ்வொன்றையும் முட்டாள் தனமாகவே செய்து இருக்கிறான். இப்படிப்பட்ட கோழையை உனக்குக் காவலாக அனுப்பியது நான் செய்த மிகப் பெரும் தவறு. அதுசரி உன்னைக் காப்பாற்றிய வீரன் நமது நாட்டைச் சேர்ந்தவனா? இதற்கு முன்னால் அவனையோ இல்லை அவனுடன் வந்தவனையோ பார்த்திருக்கிறாயா?''

சந்திரவதனாவிற்கு உடனே அந்த வீரன் முதல் நாள் இரவு கூடாரத்தைக் கிழித்து கொண்டு குதித்த காட்சி நினைவுக்கு வந்தது. 'நீ அழகாக இருக்கிறாய் சந்திரவதனா. உன்னை மிக அருகில் வந்து பார்ப்பதற்காக வந்தேன்' என்று அவன் கூறியது மனதில் எழுந்தது.

இந்த விஷயங்களைத் தந்தையிடம் சொல்வதற்குக் கூச்சமாக இருந்தது. ஏனோ அதைப்பற்றியே தந்தையிடம் பேச அவள் விரும்பவில்லை.

''என்ன யோசிக்கிறாய் சந்திரா? இதற்கு முன் அவனை இந்த நாட்டிலோ, இல்லை வழியிலோ பார்த்திருக்கிறாயா?''

''இல்லை தந்தையே! அநேகமாக அவன் நமது நாட்டைச் சேர்ந்தவனாகத்தான் இருக்க முடியும்.''

''இருக்காது இளவரசியாரே! நமது நாட்டைச் சேர்ந்தவர்களாய் இருந்தால் தங்களைப்பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும். அதனால் ஓடிவரும் படைகளைக் கண்டு பயப்படாமல், அவர்கள் செய்த தீரச் செயலுக்கான பாராட்டுக்களை மன்னரிடம் பெற விழைந்திருப்பார்கள்'' என்றார் அமைச்சர்.

''அப்படியானால் அவர்கள் யாராக இருப்பார்கள் அமைச்சரே?''

''ஒன்று அவர்கள் கானகத்தில் உறைந்து திரியும் வேடுவர்களாக இருக்கலாம். இல்லாவிட்டால் வேற்று நாட்டில் இருந்து வந்த யாத்ரீகர்களாகவோ இல்லை நாடோடிகளாகவோ இருக்க வேண்டும். அதனால்தான் படையைப் பார்த்து மிரண்டு ஓடி இருக்கிறார்கள்.''

''இவ்வளவையும் ஒளிந்திருந்து வேடிக்கைப் பார்த்து விட்டு அப்புறமாக வந்தானா அச்சுதப்பன்! அறிவு கெட்ட மடையன்! இப்படி ஒரு புதல்வனைப்பற்றி எப்படி எல் லாம் புகழ்ந்து பேசினான் ரங்கப்ப நாயக்கன்! யாரங்கே?'' கோபத்துடன் அருகில் இருந்த மணியை அடித்தான்.

சேவகன் ஒருவன் பணிவுடன் ஓடிவந்து வணங்கி னான்.

''தளவாய் ரங்கப்ப நாயக்கனையும் அவன் மகன் அச்சுதப்ப நாயக்கனையும் நான் உடனே வரச் சொன்னதா கச் சொல்.''

''பார்த்தாயா அச்சுதப்பா! நான் சொல்லி முடிக்க வில்லை. அதற்குள் அரசரிடம் இருந்து அழைப்பு வந்து விட்டது'' என்று அச்சுதப்பனைப் பார்த்துப் பெருமையு டன் சொன்னான் தளவாய்.

அச்சுதப்பன் தர்மசங்கடத்தில் நெளிந்தான்.

''நாங்கள் இருவரும் வந்துகொண்டே இருக்கிறோம் என்று மன்னரிடம் சொல்'' என்று சேவகனைப் பார்த்துக் கூறினான்.

சேவகன் நகர்ந்ததும் அச்சுதப்பன் தந்தையைப் பார்த்து அவசரமாக, ''தந்தையே நான் கடந்த ஒரு வாரமாக ஊரில் இல்லையா, கோட்டைக் காவல் எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. தாங்கள் முன்னால்

சென்று அரசரிடம் பேசிக் கொண்டிருங்கள். நான் முதலில் அவற்றைப் பார்வையிட்டு விட்டுச் சீக்கிரம் வந்துவிடுகி றேன்'' என்றான்.

''எவ்வளவு மகத்தான காரியம் செய்திருக்கிறாய். இதற்காக மன்னர் உன்னைப் பாராட்டுவதைத் தட்டிக் கழிக்கக் கூடாது. கோட்டைக் காவல் பொறுப்பைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். வாடா என்னோடு'' என்று கையைப் பிடித்து இழுத்துச் சென்றான் தளவாய்.

அச்சுதப்பனுக்கு உள்ளுக்குள் உதறல் எடுக்க ஆரம் பித்தது.

பணிவுடன் வணங்கி நின்ற தளவாயையும், அவன் மகனையும் கோபக்கனல் தெறிக்கப் பார்த்தான் மன்னன். அந்தப் பார்வையின் உக்கிரத்தினைத் தாங்க முடியாமல் தலை குனிந்து கொண்ட அச்சுதப்பனுக்கு அங்கம் முழுவ தும் நடுங்கத் தொடங்கியது.

''ரங்கப்பா உன் மகன் செய்த காரியத்தைக் கேட்டா யா?'' என்று கர்ஜித்தான் மன்னன்.

''கேட்டுக் கொண்டுதான் இருந்தேன் அரசே! சொல்வ தற்கு ரொம்பக் கூச்சப்பட்டுக் கொண்டிருந்தான். அதற்குள் அழைத்து விட்டீர்கள்'' என்றான் தளவாய் பெருமை பொங்க.

''அவன் செய்த காரியத்திற்கு வெட்கப்பட வேறு தெரிந்திருக்கிறதா? மடையன்! இவனை நம்பி என் மக ளைத் தனியாக அனுப்பியதற்காக நானல்லவா வெட்கப் பட வேண்டும்.''

''என்ன சொல்கிறீர்கள் மன்னா?'' அதிர்ச்சியுடன் கேட்டான் தளவாய்.

''யானைக்கு மதம் பிடித்திருக்கிறது என்பதை உணராமல் அதற்குக் கள்ளை ஊற்றிக் கொடுக்கச் சொல்லி இருக்கிறான் இந்த மடையன். மதம் பிடித்த யானையின் முதுகில் உட்கார்ந்தவாறு 'மாமா என்னைக் காப்பாற்றுங்கள்' என்று என் மகள் இவனைப் பார்த்து அலறி இருக்கிறாளே, அப்பொழுது இவன் என்ன செய்திருக்கிறான் என்று சொன்னானா?''

''எ... என்ன செய்தான்?''

''அவனுடைய உயிருக்குப் பயந்து இளவரசி செத்தால் சாகட்டும் என்ற நினைப்பில் ஒரே ஓட்டமாக ஓடி ஒளிந்திருக்கிறான்.''

தளபதிக்கு இதைக்கேட்க அவமானமாக இருந்தது. ஓடி ஒளிந்தது மட்டுமின்றி தன்னிடம் வந்து பொய் சொல்லிவிட்டானே என்ற ஆத்திரம் வேறு. பல்லைக் கடித்துக் கொண்டு அச்சுதப்பனை, முறைத்துப் பார்த்தான். அச்சுதப்பன் தலைகுனிந்தவன், நிமிரவே இல்லை.

''பிறகு, இளவரசியை யார் காப்பாற்றியது மன்னா?'' என்றான்.

''யாரோ ஒருவன் எங்கிருந்தோ ஓடிவந்து தன்னுடைய உயிரைத் துச்சமாக மதித்து, யானையை வெட்டிச் சாய்த்து என் மகளைக் காப்பாற்றி இருக்கிறான். மன்னார்குடி ராஜகோபால சுவாமிதான் அவன் உருவத்தில் வந்து காப்பாற்றி இருக்கிறார்!'' என்றவாறு கைகளை உயர்த்தி விண்ணைப் பார்த்துக் கும்பிட்டான்.

பிறகு அச்சுதப்பனைப் பார்த்து முறைத்து, ''அவ்வளவு துணிச்சலாக, அபார வீர சாகசம் புரிந்து என் மகளை ஆபத்திலிருந்து மீட்ட அந்த வீரனுக்கு மரியாதை செய்து, அவனை இங்கு கூட்டி வந்திருந்தால்கூட உன் மகனின்

கோழைத்தனத்தை மன்னித்திருப்பேன். அதைவிடுத்து அவர்களைப் பிடித்துச் சிறையிலிடுமாறு கூவிக் கொண்டு படைகளைக் கூட்டி வந்திருக்கிறானே, இப்படிப்பட்ட அபாரப் புத்திசாலிக்கு என்ன தண்டனைதான் கொடுப்பது?'' என்றான்.

இதைக் கேட்ட அச்சுதப்பன் சற்று நடுநடுங்கி, ''அவன் வேறு யாரும் இல்லை மன்னா! முதல்நாள் இரவு இளவரசியின் கூடாரத்தில் குதித்துக் களவாட முயன் றானே, அதே திருடன்தான். யானையிடமிருந்து காப்பாற் றிய சாக்கில் இளவரசிக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுத்தி விடுவானோ என்ற பயத்தில்தான் அப்படிச் செய்தேன்'' என்றான்.

''இது என்ன புதுக்கதை? சந்திரவதனா. இவன் சொல் வது மாதிரி முதல்நாள் இரவு உன் கூடாரத்திற்குள் அவன் தான் குதித்தானா?''

இதைக் கேட்டவுடன் சந்திரவதனா சற்றுத் தடுமாறி னாள்.

''இ... இல்லை தந்தையே! முதல்நாள் இரவு யாரோ ஒரு திருடன் என் கூடாரத்திற்குள் நுழைந்தது உண்மை! எல்லாரும் விழித்துவிட அவன் தப்பிவிட்டான். ஆனால், அவன் வேறு. என்னை யானையிலிருந்து காப்பாற்றியவன் வேறு. இருவரையும் வெகு அருகில் பார்த்ததால் எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால், அச்சுதப்ப மாமா தூரத்தில் பார்த்திருந்ததால் தடுமாறி இருக்கலாம்.''

''இவனுக்கு இதில் மட்டுமா தடுமாற்றம்? அத்தனை காவல்களுக்கு மத்தியில் இளவரசியின் கூடாரத்திற்குள் நுழைந்து திருட வந்தவனை வேறு தப்ப விட்டிருக்கிறார் கள். வெட்கமாயில்லை. இப்படிப்பட்ட மகனைப் பற்றி

வானளாவ புகழ்ந்தாயே ரங்கப்பா. இது உனக்கு அவமானமாக இல்லை!''

தளவாய்க்கு அவமானத்தில் மகனைக் கொன்றுவிடலாம் போன்ற ஆத்திரம் கனன்று கொண்டிருந்தது.

மன்னன் பிறகு கோவிந்த தீட்சிதர் பக்கமாகத் திரும்பி, ''ஏன் அமைச்சரே, ஒருவேளை சந்திராவைக் காப்பாற்றியவன்கூடத் திருடனாக இருப்பானோ? காப்பாற்றிய பிறகு இளவரசியின் நகைகளைக் களவாடலாம் என்று நினைத்து இருக்கலாம். அதனால்தான் படைகளைப் பார்த்துப் பயந்து ஓடி இருப்பானோ என்று தோன்றுகிறது'' என்றான்.

இதைக்கேட்ட இளவரசிக்கு 'இல்லை அவர் திருடர் இல்லை. அவர் வந்த நோக்கம் வேறு' என்று மனதிற்குள் அடித்துக் கொண்டாலும் வெளியில் சொல்வதற்குப் பயமாக இருந்தது.

''எனக்கு அப்படித் தோன்றவில்லை'' என்றார் அமைச்சர்.

மன்னன் மறுபடியும் தளவாயைப் பார்த்து, ''இப்படிப்பட்ட கோழையை அரண்மனைக் காவல் பொறுப்பில் விட்டு வைக்க எனக்கு மனமில்லை. ஒரே ஒரு யானையைக் கண்டு ஓடியவன், அளப்பரும் படைகள் எதிர்த்து வந்தால் ஓடமாட்டான் என்பது என்ன நிச்சயம்? அதனால் இன்றே, இப்பொழுதே இவனைப் பதவி நீக்கம் செய்கிறேன்'' என்றான்.

இதைக் கேட்ட தளவாய் அதிர்ச்சியுற்று, ''மன்னா, சிறுவன். ஏதோ அறியாமல் செய்துவிட்டான். தயவு செய்யுங்கள்'' என்று மன்றாடியவாறு அச்சுதப்பனைப் பார்த்துக் கண்களால் ஜாடை செய்தான்.

அச்சுதப்பன் உடனே அரசனின் கால்களில் விழுந்து, ''இனி அப்படிச் செய்யமாட்டேன். மன்னித்து விடுங்கள்'' என்று பணிந்தான்.

மன்னன் சற்று யோசித்துவிட்டு ''சரி போனது போகட்டும், இனி கவனமாக இரு. இளவரசியைக் காப்பாற்றியவன் திருடனோ இல்லை, வேடுவனோ, நாடோடியோ அவன் யார் என்று நான் அறிந்தே ஆகவேண்டும். அவன் எங்கிருந்தாலும் அவனைத் தேடிக் கொண்டு வரவேண்டியது உன் பொறுப்பு. அவனுக்கு என்ன சன்மானம் வேண்டுமானாலும் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். சீக்கிரம் அவனைக் கண்டுபிடிப்பது உன் கடமை. சரி, நீங்கள் போகலாம்'' என்றான்.

தளவாய் முகத்தில் மகிழ்ச்சியைக் காட்டினாலும் உள்ளுக்குள் ஆத்திரம் கனன்று கொண்டிருந்தது.

அச்சுதப்பனும், தளவாயும் வெளியேறியவுடன் சந்திர வதனா தனது தந்தையைப் பார்த்துச் சொன்னாள்.

''தாங்களோ, அண்ணனோ என்னுடன் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு வந்திருந்தால் எனக்கு இத்தகைய ஆபத்து வந்திருக்குமா?''

''என்னால் வரமுடியாத அளவிற்கு அரசாங்கப் பணிகள் அழுத்திக் கொண்டிருக்கின்றன. மன்னார்தாசனைப் போகும்படி எவ்வளவோ சொல்லியும் அவன் மறுத்துவிட்டான். அவன் மூளை வரவர மழுங்கிக் கொண்டிருக்கிறதோ என்று அச்சமாக இருக்கிறது'' என்றான் வருத்தத்துடன்.

''ஏன் மன்னா அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்றார் அமைச்சர்.

''அன்னதானம் இடுவது அறிவீனமான செயல் என்று தளவாயிடம் புலம்பி இருக்கிறான். வரிப்பணத்தைத் தெரு வில் இறைக்கிறேன் என்று ஏகடியம் பேசி இருக்கிறான். எனக்குப் பிறகு இந்த நாட்டை ஆளப்போகும் என் வாரிசு இப்படிப் புத்தி கெட்டுப்போய் இருக்கிறானே என்று எனக்கு வருத்தமாக இருக்கிறது அமைச்சரே!''

''எல்லாம் காலப்போக்கில் சரியாகிவிடும் மன்னா.''

''நானும் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கி றேன். இப்பொழுது என் மகள் வேறு இப்படி ஓர் ஆபத்தில் சிக்கி மீண்டிருக்கிறாள். தெய்வ குற்றம் ஏதாவது இருக்குமோ?''

அப்பொழுது சேவகன் ஒருவன் வந்து நின்று பணிந் தான்.

''என்ன?''

''நமது குலகுரு குமார தாத்தாச்சாரியார் அவர்கள் குருவாயூரில் இருந்து திரும்பி விட்டாராம். சற்று நேரத் திற்கு முன்புதான் அவர் தம்முயை ஆஸ்ரமத்திற்குள் வந்து சேர்ந்ததாகச் செய்தி வந்தது.''

உடனே விஜயராகவ நாயக்கன் வானத்தைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டு முகம் மலர்ந்தான்.

''நமது குரு சரியான நேரத்தில் வந்து சேர்ந்திருப்ப தைப் பார்த்தீர்களா அமைச்சரே! இதைத்தான் தெய்வக் கடாட்சம் என்கிறார்கள். நாளைக் காலையில் என் மக்கள் இருவரையும் அவரது ஆஸ்ரமத்திற்குக் கூட்டிச் சென்று அவரது ஆசியை பெற்றுவிட்டேனானால் எல்லாம் சரி யாகி விடும் என்று நினைக்கிறேன்''

ஆனால் அதுவேறு சில குழப்பங்களுக்கு வித்திடப் போகிறது என்று அவர்களுக்கு எப்படித் தெரியும்?



# 50

அமைச்சர் மகள் மதுரவாணி அரண்மனையின் அந்தப்புரத்தினுள் அமைந்திருக்கும் இளவரசி சந்திரவதனாவின் அறைக்குள் நுழைந்தபொழுது மாலைப்பொழுது அரும்பத் தொடங்கி இருந்தது.

மஞ்சத்தில் சாய்ந்து அமர்ந்தவாறு பழைய நினைவுகளை நெஞ்சத்தில் சுமந்து கொண்டிருந்த இளவரசி தன்னுடைய தோழியைப் பார்த்ததும் மகிழ்ச்சிப் பூத்துக் குலுங்க, எழுந்து வந்து ஆசையோடு கட்டிக் கொண்டாள்.

''என்னடி மதுரவாணி. உனக்காக எவ்வளவு நேரம் காத்துக் கிடப்பது? உன்னைப் பார்த்து எத்தனை நாட்கள் ஆகிவிட்டன? எப்படியடி இருக்கிறாய்?'' என்றவாறு அவள் கன்னத்தைப் பிடித்து நிமிண்டினாள் இளவரசி.

''எனக்கென்னடி குறைச்சல்? நன்றாகத்தான் இருக்கிறேன். உன்னைப் பார்க்காமல், உன்னிடம் பேசாமல், உன்னை விட்டுப் பிரிந்து ஒருவாரமாகத் தனியாக இருந்தது ஒன்றுதான் குறை'' என்றவாறு பதிலுக்கு அவள் கன்னத்தைப் பிடித்துத் திருகினாள் மதுரவாணி.

''எனக்கும் உன்னோடு நிறைய விஷயம் பேசவேண்டி இருக்கிறது. அதற்காகத்தான் காலையில் இருந்தே உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''

''உன் பயணம் எப்படி இருந்தது சந்திரா? கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோயில் எப்படி இருந்தது? சிங்கக் கிணற்றில் நீராடினாய் இல்லையா?''

''அதில் எல்லாம் எனக்கு எந்தக் குறையும் இல்லை வாணி! கங்கைகொண்ட சோழபுரம் போய்ச் சேரும் வரையில் ஒவ்வோர் இடத்தின் அழகையும் ரசித்துக் கொண்டே சென்றேன். நீ மட்டும் என்னோடு வந்திருந்தால் இன்னும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்! அதிலும் இந்த அச்சுதப்பனால் ஏற்பட்ட கூத்து இருக்கிறதே. நீ பார்த்திருந்தால் விழுந்து விழுந்து சிரித்திருப்பாய். ஒருநாள் அவன் என்னோடு பேசிக் கொண்டிருந்தபொழுது நாய் ஒன்று அவன் காலில் சிறுநீர் பெய்து...'' மேற்கொண்டு சொல்ல முடியாமல் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள் சந்திரவதனா.

''அது இருக்கட்டும் சந்திரா. நீ ஏறிச் சென்ற யானைக்கு மதம் பிடித்து நிறையப் பேரைக் கொன்று விட்டதாமே! அச்சுதப்பன் கூடப் பயந்து போய் ஓடிவிட்டானாமே? அப்பொழுது யாரோ ஒருவன் துணிச்சலாக ஓடிவந்து உன்னைக் காப்பாற்றினானாமே?''

இதைக் கேட்டவுடன் இளவரசியின் சிரிப்பு உடனே மறைந்தது. கண்கள் சற்றுநேரம் கனவுலகில் சஞ்சரித்தன. அவள் உடல் புல்லரித்தது.

''அந்த விஷயத்தைச் சொல்வதற்காகத்தானடி உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். சில விஷயங்களை உன்னிடம் மனம்விட்டுப் பேச வேண்டும் என்று அன்றிலிருந்து துடித்துக் கொண்டிருந்தேன். உனக்கு இதைப்பற்றி யார் சொன்னார்கள்?''

''வேறு யார் சொல்ல முடியும். என் தந்தைதான் கூறினார்.''

''என்ன கூறினார் சொல்?''

''யானைக்கு மதம் பிடித்திருக்கிறது என்று தெரியாமல் அச்சுதப்பன் அதற்குக் கள்ளை ஊற்றிக் கொடுக்கச் சொன்னானாம். இது தெரியாமல் நீ வேறு அதன் அம்பாரியில் ஏறி உட்கார்ந்து விட்டாயாம். யானை அந்த இடத்தையே துவம்சம் செய்துவிட்டதாமே! நீ அலற, அலற அச்சுதப்பன் திரும்பிக் கூடப் பார்க்காமல் ஒரே ஓட்டமாக ஓடி விட்டானாம். அப்பொழுது யாரோ ஒருவன் ஓடிவந்து, துணிச்சலாக யானையை எதிர்த்துச் சண்டை போட்டு உன்னைக் காப்பாற்றினானாம். அச்சுதப்பன் முட்டாள்தனமாக அவனைப் பிடிக்கப் படைகளோடு வந்ததைப் பார்த்துப் பயந்து போய் ஓடிவிட்டானாம் அந்த வீரன். இவ்வளவுதான் சொன்னார். யார் அந்த வீரன் என்று ஒருத்தருக்கும் தெரியவில்லையாம்! இதற்கு முன் நீ கூட அவனைப் பார்த்ததில்லையாமே!''

''அப்படி அவர்களிடம் கூறினேன்.''

''அப்படி என்றால்?'' புரியாமல் அவளைப் பார்த்தாள் மதுரவாணி.

''அந்த வீரனை அதற்கு முதல்நாள் இரவு என் கூடாரத்தில் பார்த்தேன். அதைப்பற்றி நான் யாரிடமும் சொல்லவில்லை. சொல்லும் துணிச்சலும் என்னிடம் இல்லை. உன்னிடம் மட்டும் தனியாக அதைப் பற்றிப் பேசவேண்டும் என்று என் மனம் துடிக்கிறது வாணி.''

''உன் கூடாரத்திற்குள் அவன் எப்படி?''

சந்திரவதனா அன்று இரவு நடந்த சம்பவங்களைப் பற்றி மதுரவாணியிடம் சொல்லத் தொடங்கினாள்.

அமைச்சர் மகளின் முகத்தில் பிரமிப்பு அரும்பியது.

''எவ்வளவு துணிச்சலான வீரனடி அவன்! அவன் உன்னைப் பார்த்து என்ன சொன்னான்? மறுபடியும் சொல்.''

''கோயில் வாசலில் இருந்து பார்க்கும்போது உன் முகம் சரியாகத் தெரியவில்லை. அதனால் அருகில் வந்து பார்க்க நினைத்தேன். நீ உண்மையிலேயே அழகாகத்தான் இருக்கிறாய் என்றான். அதன்பிறகு அச்சுதப்பனையும் மற்ற வீரர்களையும் புரட்டு புரட்டு என்று புரட்டி எடுத்து விட்டுத் தப்பிப் போகும்பொழுது கூடக் கடைசியாக என்னைப் பார்த்து, 'இப்பொழுதுகூட நீ அழகாகத்தான் இருக்கிறாய் சந்திரவதனா' என்று சொல்லிவிட்டுச் சென் றான்.

''அதன்பிறகு மறுநாள் மதயானையை வலுச்சண் டைக்கு இழுத்தவன் அவன்தானா? இல்லை அவன் வேறா? நன்றாகப் பார்த்தாயா?''

''பார்த்தது மட்டுமல்ல வாணி, அவனிடம் நேரிடை யாகவே கேட்டேன்.''

''என்ன கேட்டாய்?''

''என்னுடைய மயக்கத்தைத் தெளிய வைத்ததும் நான் அவனுக்கு நன்றி சொல்லிவிட்டு, 'என்னுடன் தஞ்சாவூர் வாருங்கள். என் தந்தையிடம் சொல்லித் தகுந்த சன்மானம் தரச் சொல்கிறேன்' என்றதற்கு 'எனக்குத் தேவையானது உன் தந்தையிடம் இல்லை. உன்னிடம்தான் இருக்கிறது' என்றான்.

அதற்குப்பிறகு 'நீங்கள்தானே நேற்று என் கூடாரத்திற்குள் வந்தீர்கள்' என்று கேட்டேன். அவன் 'ஆமாம்' என்று ஒப்புக் கொண்டான். 'எதற்காக வந்தீர்கள்' என்று கேட்டதற்கு 'உன்னை அருகில் வந்து பார்ப்பதற்கு வந்தேன். நேற்றும் அழகாகத்தான் இருந்தாய். இன்றும் அழகாகத்தான் இருக்கிறாய்' என்று சொன்னான்.''

''அதற்கு நீ என்னடி சொன்னாய்?''

''எனக்கு உடனே கோபம் வந்துவிட்டது. 'இனிமேல் இப்படி ஓர் எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டு என்னிடம் வராதீர்கள்' என்று கடிந்து சொல்லிவிட்டேன்.''

''அடிப்பாவி! ஏனடி அப்படி சொன்னாய்?''

''பின்னே என்னடி? ஊர் பேர் தெரியாத யாரோ எவனோ என்னைப் பார்த்து 'நீ அழகாக இருக்கிறாய்' என்று சொல்லிவிட்டால் மறுநிமிடமே நான் மயங்கிப் போய் அவன் மடியில் போய் விழுந்துவிடச் சொல்கிறாயா?'' என்றாள் கோபத்தோடு.

''என்ன இருந்தாலும் அவன் உன் உயிரைக் காப்பாற்றியவன்...''

''அதற்குத்தான் நன்றி சொல்லிவிட்டேன். தஞ்சாவூருக்கு வந்தால் தகுந்த சன்மானம் அளிக்கிறேன் என்று வேறு சொன்னேனே. இது போதாதா? அவனுக்கு எவ்வளவு பேராசை என்று பார்!''

''அவன் பார்வைக்கு எப்படி இருந்தான்? அழகாக இருந்தானா.''

''ம்... பரவாயில்லை... அழகாக இருந்துவிட்டால் அடுத்த நிமிடமே காதலிக்கச் சொல்கிறாயா...? போடி எனக்கு ஆத்திரம் வருகிறது... அவன் ஒன்றும் அழகாக

இல்லை... அவன் பார்வையும் சிரிப்பும்... ச்சீ... அசிங்கமாக இருந்தான்... அழகாக இருந்துவிட்டால் காதலித்துவிட வேண்டுமா? நான் என்ன அவ்வளவு மட்டமானவள் என்று நினைத்தாயா?'' பொரிந்து தள்ளினாள்.

''இப்பொழுது நான் என்ன கேட்டுவிட்டேன் என்று என்மீது இவ்வளவு கோபப்படுகிறாய்? அழகானவனா என்று கேட்டேன். அது தப்பா? சரி, அவன் அசிங்கமானவன்தான். இருக்கட்டும் ஒரு மத யானையிடம் தனி ஒருவனாக மோதி, அதனைக் கொன்று உனக்கு ஒரு குறையும் இல்லாது காப்பாற்றியது தீரமான செயல்தான்.''

''தீரம் என்று சொல்ல முடியாது! எல்லாரும் பயந்து ஓடி விட்டார்கள். வேறு யாருமே அந்த இடத்தில் இல்லை. அவன் வந்து காப்பாற்றினான். ஏதோ ஆபத்தில் உதவினான். தீரன் என்று சொல்ல முடியாது.''

மதுரவாணி உடனே சந்திரவதனாவின் முகத்தை ஏறிட்டுச் சற்றுநேரம் கூர்ந்து பார்த்தாள். பிறகு குலுங்கிச் சிரித்தாள்.

''என்னடி சிரிக்கிறாய்?'' எரிச்சலுடன் கேட்டாள் இளவரசி.

''சந்திரவதனா, உன் மனதை அந்த வீரன் வெகுவாகக் கவர்ந்துவிட்டான் என்று இப்பொழுதுதான் தெரிகிறது.''

''அடியேய்...'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு கையை ஓங்கியவாறு, ''இனி இந்த மாதிரிப் பேசினால் உன்னைக் கொன்று விடுவேன்'' என்று வெடித்தாள்.

''சரி. சரி. நீ அவனைக் காதலிக்கவில்லை! வெறுக்கிறாய்! இல்லையா?''

''அதிலென்ன சந்தேகம்? யாரோ ஊர் பேர் தெரியாத நாடோடிப் பயலைக் காதலிக்கிற அளவுக்குத் தஞ்சை இளவரசி ஒன்றும் தரம் தாழ்ந்து போய்விடவில்லை.''

''அவன் அழகானவன் இல்லை. அசிங்கமானவன். வீரன் இல்லை. ஏதோ சந்தர்ப்பவசத்தால் உன்னைக் காப்பாற்றினான். அவனை நீ காதலிக்கவில்லை. மாறாக வெறுக்கிறாய், அப்படித்தானே?''

''அப்படித்தான்.''

''அப்படியானால் இந்த விஷயங்கள் அத்தனையையும் நீ உன் தந்தையிடம் மறைத்திருக்க வேண்டிய அவசியமே இல்லையே! முழுக்கச் சொல்லி இருக்க வேண்டியது தானே?''

இதற்கு பதில் சொல்லத் தெரியாமல் தடுமாறினாள் இளவரசி. பிறகு, ''சொன்னால் என் தந்தைக்கு அவன் மீது கோபம் ஏற்பட்டிருக்கும். என்ன இருந்தாலும் அவன் என் உயிரைக் காப்பாற்றியவன். இதை எல்லாம் சொன்னால் என் தந்தை அவனைத் தேடிப்பிடித்துத் தண்டித்து விட்டால்?''

''நீதான் அவனை வெறுக்கிறாயே? தண்டித்தால் தண்டித்துவிட்டு போகட்டும்! அது அவன் பேராசைக்குக் கிடைத்த தண்டனையாக நினைத்துக் கொள்.''

இளவரசி மறுபடியும் தடுமாறினாள்.

''சரி. இவ்வளவுதான் நடந்ததா, இல்லை இதற்கு மேலும் ஏதாவது நடந்ததா?'' என்று கிண்டல் பொங்கக் கேட்டாள் மதுரவாணி.

''ஏன் அப்படிக் கேட்கிறாய்?''

''உன் தந்தையிடம் சில விஷயங்களை மறைத்துவிட்டாய். அதே மாதிரி என்னிடம் ஏதாவது மறைக்கிறாயா என்று ஓர் ஐயம்.''

''சேச்சே! இவ்வளவுதான் நடந்தது.''

பட்டென்று இளவரசி இதனைச் சொன்னாலும் மனதிற்குள் யானை மீது அந்த வீரனை அணைத்துக் கொண்டு சென்றது, மயங்கி விழுந்த பிறகு அவன் அவளைத் தூக்கிச் சென்றது, தேனடை எடுக்கும் சமயம் ஒரே துணிக்குள் அவளை அவன் அணைத்துக் கொண்டு படுத்தது, அரை குறை மயக்கத்தில் அவன் நடந்து கொண்ட முறைகள் அனைத்தும் நினைவில் எழுந்தன.

இந்த நினைவுகள் இளவரசியின் முகத்தைச் சிவக்கச் செய்தன. மேனி ஒருமுறை மயிர்க்கூச் செறிந்தது.

''நீ சொன்னதைக் கேட்டவுடன் எனக்கு அந்த வீரனைப் பார்க்க வேண்டும் போல் ஆசையாக இருக்கிறது. அவன் போகும் பொழுது உன்னிடம் ஒன்றுமே பேசவில்லையா?'' என்றாள் மதுரவாணி.

''சந்திரவதனா, எனக்கு நீதான் வேண்டும். நீயே என்னை விரும்பி வரும்வரை நானும் உன்னைவிடப் போவதில்லை. விரைவில் உன்னைச் சந்திக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுக் குதிரை மீது ஏறிப் பறந்துவிட்டான். அவனுக்கு எவ்வளவு திமிர் பார்த்தாயா? நானாக அவனை விரும்பி வருவேனாமே! பேராசைக்காரன்! தராதரம் தெரியாத மூடன்.''

''அவன் மூடனோ இல்லையோ, சரியான கோழை என்று மாத்திரம் தெரிகிறது.''

''ஆமாம் ஆமாம்'' என்றாள் இளவரசி தன் தோழி சொன்னதைக் காதில் சரியாக வாங்கிக் கொள்ளாமல்.

''இவ்வளவு தூரம் தராதரம் தெரியாமல் பேசியவன் படைகளைப் பார்த்தவுடன் பயந்து போய் ஓடி இருப் பானா? சரியான கோழை!''

''அப்படிச் சொல்ல முடியாதடி வாணி! அவனால் அந்தப் படையையே சமாளிக்க முடியும். வேறு ஏதோ காரணத்திற்காக ஓடி இருக்கலாம்.''

''இப்பொழுதுதானே அவனைக் கோழை என்றதற்கு ஆமாம் என்று ஒத்துக் கொண்டாய்!'' வியப்புடன் கேட் டாள் மதுரவாணி.

இளவரசி மறுபடியும் தடுமாறினாள்.

''இல்லை, இல்லை. அவன் கோழைதான். கோழை தான். எனக்கு வார்த்தை தடுமாறிவிட்டது'' என்றாள் அவசரமாக.

''உனக்கு வார்த்தை தடுமாறவில்லையடி சந்திரவ தனா. உன் மனம் தடுமாறிவிட்டது.''

''மறுபடியும் அந்த மாதிரிப் பேசாதே! எனக்குக் கோபம் வந்துவிடும்.''

''சரி. அந்த வீரன் பெயரையாவது தெரிந்து கொண் டாயா?''

இதைக் கேட்டவுடன் இளவரசியின் முகத்தில் நிஜமா கவே கவலை தெரிந்தது. அவசரமாக அதனை மறைத்துக் கொண்டு ''இல்லையடி! அவர்களைப் பற்றி விவரமாகக் கேட்க நினைத்தேன். அதற்குள் அவன் என் அழகைப் பற்றித் தராதரம் அறியாது, தன் நிலைமை உணராது பேசியதும் எனக்குக் கோபம் வந்துவிட்டது. பிறகு படைக ளைப் பார்த்தவுடன் பயந்து போய் ஓடிவிட்டான். கோழைப் பயல்'' என்றாள்.

''உம்.'' என்று பெருமூச்சுவிட்ட மதுரவாணி தொடர்ந்து, ''அந்தக் கோழையைக் கண்டுபிடித்துக் கொண்டு வரும் பணியை நமது தளவாயின் புதல்வன் அச்சுதப்பனிடம் ஒப்படைத்திருக்கிறார்களாம்! கூடிய சீக் கிரம் அவனைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்துவிடுவான் அச்சுதப்பன். அதற்குப் பிறகு அவனை நேரடியாகப் பார்த்து விவரம் தெரிந்து கொள்ள வேண்டியதுதான்.''

''யார் அச்சுதப்பனா! அச்சுதப்பனா அவனைப் பிடிக்க முடியும்! அன்று இரவு அவனிடம் அச்சுதப்பன் பட்ட பாட்டை, இப்பொழுது நினைத்தால்கூட சிரிப்பு வருகி றது. அச்சுதப்பனாவது அவனைப் பிடிப்பதாவது! அவ்வ ளவு வீரம் அவனுக்கு எங்கே இருக்கிறது?''

''சற்று நேரத்திற்கு முன்னால் நீதான் அவன் வீரனே இல்லை. கோழை என்று கூறினாய்! இப்பொழுது இப்ப டிச் சொல்கிறாய்?''

இளவரசி மறுபடியும் தடுமாறி, ''அவன் ஒன்றும் பெரிய வீரன் இல்லை. கோழைதான். ஏதோ அச்சுதப் பனைவிடக் கொஞ்சம் பரவாயில்லை'' என்றாள்.

''அடிக்கடி தடுமாறுகிறாய் சந்திரவதனா. உன் தடு மாற்றம் எனக்கு வியப்பளிக்கிறது.''

''சேச்சே! நான் ஒன்றும் தடுமாறவில்லை'' என்றவள் சற்றுநேரம் மவுனமாக இருந்தாள். பிறகு, ''ஏண்டி அந்த மனிதன் கூடிய சீக்கிரம் உன்னைச் சந்திக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனானே நிஜமாகவே என்னை வந்து சந்திப்பானா?'' என்றாள்.

''அவன் எப்பொழுது வந்து சந்திக்கப் போகிறான் என்று உன் மனம் கிடந்து துடித்துக் கொண்டிருக்கிறது. அப்படித்தானே?''

''இப்படி எல்லாம் பேசினால் எனக்குக் கோபம் வரும்.''

''மனதில் உள்ள ஆசையை மூடி மறைத்துப் பொய்யுரைக்காதே.''

''இனி இந்தப் பேச்சைப் பேசினால் நீ இங்கே இருக்க வேண்டாம் உன் வீட்டுக்குப் போ'' எரிந்து விழுந்தாள் இளவரசி.

''நான் எங்கே பேசினேன். உனக்குத்தான் அவனைப் பற்றிப் பேசணும்கிற ஆசையில் என்னை வரச் சொன்னே?''

''அவனைப் பற்றிப் பேசறதுக்காக உன்னைக் கூப்பிட்டு விடவில்லை. கங்கைகொண்ட சோழபுரத்தில் நான் நீராடியது, சுவாமி தரிசனம் செய்தது இதனைப் பற்றி உன்னிடம் சொல்லத்தான் கூப்பிட்டு விட்டேன்.''

''வந்தது முதல் அதனைப் பற்றியே நீ பேசவில்லையே! இனியாவது சொல்'' என்றாள் கேலியுடன்.

தொடர்ந்து இளவரசி சொன்ன ஒரு விஷயம் மதுரவாணியின் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இளவரசன் மன்னார்தாசனைச் சந்திப்பதற்கு ஒரு வாய்ப்பு உருவானதை எண்ணி அவள் பூரிக்கத் தொடங்கினாள்.



# 51

இளவரசி சந்திரவதனா அமைச்சர் மகள் மதுரவாணி கேட்ட சொற்களுக்கு உடனே பதில் அளிக்காது சற்று நேரம் அமைதியாக இருந்தாள். அவள மனம் மறுபடியும் அந்த வீரனை நோக்கியே சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

மதுரவாணி அவள் முகத்தையே சற்று நேரம் கூர்ந்து பார்த்தாள்.

பாவம் சந்திரவதனா! தன்னைக் காப்பாற்றிய வீரன் மீது பலமான காதலில் விழுந்துவிட்டாள்! இவள் மனதை இந்த அளவுக்கு குலுக்கிவிட்ட அவன் பெரிய வீரனாகத் தான் இருக்கவேண்டும்.

''சந்திரவதனா! ஏய்!'' என்றவாறு அவள் கையைப் பிடித்து லேசாக உலுப்பினாள்.

திடுக்கிட்டு சுதாரித்த இளவரசி, ''என்னடி?'' என்றாள் எரிச்சலுடன்.

''நான் தவறாகக் கேட்டுவிட்டேன். என்னை மன்னித்து விடு. நீ கங்கைகொண்ட சோழபுரீஸ்வரரைச் சேவித்தது பற்றிச் சொல்ல வேண்டாம். அந்த வீரனைப் பற்றியேச் சொல், கேட்கிறேன்.''

''ஏய்! வரவர உனக்குத் திமிர் அதிகமாகப் போய்விட்டது. நான் ஒன்றும் அவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கவில்லை. எந்த இடத்திலிருந்து சொல்ல ஆரம்பிப்பது என்றுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.''

''விடியற்காலையில் அங்கு போய்ச் சேர்ந்திருப்பீர்களா?''

''இல்லையடி! கங்கைகொண்ட சோழபுரம் கோயிலின் முன்பு நான் சென்று இறங்கும்பொழுது மாலை வேளை மறைந்து இருள் சூழத் தொடங்கிவிட்டது.''

தொடர்ந்து அங்கு சுவாமி தரிசனம் செய்தது, சிங்கக் கிணற்றில் நீராடியது என்று தங்கு தடையின்றி சொல்ல ஆரம்பித்தாள் இளவரசி.

''இவ்வளவு அற்புதமான சுவாமி தரிசனத்தை நீ பார்க்கும் வாய்ப்பு கிடைக்கவில்லையே என்று உன்னைப் பற்றித்தான் நான் நினைத்துக் கொண்டு படுத்திருந்தேன். அப்பொழுதுதான் அவன் கூரையைக் கிழித்துக் கொண்டு தொப்பென்று என் முன்னால் குதித்து இறங்கினான். அவ்வளவு துணிச்சலான அவன் யாராக இருப்பானடி?''

''அவன் யார் என்று இப்பொழுது எனக்கு நன்றாகத் தெரிகிறது.''

''தெரியுமா? எப்படியடி? அவன் யார்?'' என்று பரபரப்பாகக் கேட்டாள் இளவரசி.

''என்னுயிர்த் தோழியான இந்தத் தஞ்சை இளவரசி சந்திரவதனாவின் காதலன்.''

இதைக் கேட்டவுடன் இளவரசி கோபத்துடன் அவள் காதைப் பிடித்துப் பலமாக திருகினாள்.

''ஸ்ஸ்...ஆ... வலிக்கிறது... விடுடி...''

''இனி இந்த மாதிரிப் பேசினே, உன் காதை அறுத்திடு வேன்'' என்றாள் கோபத்துடன்.

''நீயும் திரும்பத் திரும்ப அவனைப் பற்றியே பேசி அலுக்க வைத்தால், நானும் அப்படித்தான் பேசுவேன்.''

''சரி. நானும் இனி அவனைப் பற்றிய பேச்சையே எடுக்க மாட்டேன். நீயும் பேசாதே'' என்றவாறு முகத்தை திருப்பி வேறு பக்கமாக அமர்ந்து கொண்டாள் இளவரசி.

இருவரும் சற்று நேரம் மவுனமாக உட்கார்ந்திருந் தார்கள். பிறகு இளவரசியே எழுந்து மதுரவாணிக்கு அருகில் வந்தாள்.

''எவனோ ஒருவனுக்காக நாம் எதற்குப் பேசாமல் இருக்க வேண்டும். வா சற்று நேரம் அம்மானை ஆடலாம்.''

இருவரும் அந்தப்புரத்தினுள் அமைந்துள்ள தோட்டத் திற்கு வந்து இன்னொரு தோழியை அழைத்துக் கொண்டு அம்மானை ஆடத் தொடங்கினர்.

மூவரும் நீண்ட நேரம் அம்மானை ஆடிக் கொண்டு இருந்தார்கள். பிறகு அலுத்துப் போய் தோட்டத்தில் இருந்த ஆசனத்தில் வந்து அமர்ந்தனர். கூட விளையாடிய தோழியைக் குடிப்பதற்கு நீர் கொணருமாறு கட்டளையிட் டாள் இளவரசி.

அந்தப் பெண் அங்கிருந்து நகர்ந்ததும் மதுரவாணி, இளவரசியைப் பார்த்துக் கேட்டாள்.

''இந்த விஷயத்தைப் பற்றி உன் தந்தை என்னடி கூறினார்?''

''அம்மானை ஆடுவதைப் பற்றி அவர் எதுவும் சொல்ல மாட்டாரே!''

''நான் அம்மானை ஆடுவதைப் பற்றிச் சொல்ல வில்லை. கங்கைகொண்ட சோழபுரத்தில் உனக்கு ஏற் பட்ட கஷ்டங்களைப் பற்றி நீ சொன்னதும் மன்னர் என்ன சொன்னார் என்று கேட்டேன்.''

''ரொம்பவும் அதிர்ந்து போய் விட்டாரடி! ஏதோ தெய்வகுற்றம்தான் நேர்ந்திருக்கிறது என்று மனம் கலங் கிப் பலமுறை கையெடுத்துக் கும்பிட்டார். அதிலும் என் அண்ணனின் நடத்தை வேறு அவர் மனதை நோகச் செய்ததால், இன்னும் கலங்கிப் போய் இருக்கிறார்.''

''உன் அண்ணன் நடத்தை மன்னரின் மனதை நோகச் செய்துவிட்டதா? அப்படி என்ன உன் அண்ணன் நடத்தை மோசமாக இருந்தது?'' என்று பரபரப்புடன் கேட்டாள் மதுரவாணி.

''வேறு ஒன்றும் இல்லையடி! ராசகோபால சுவாமி கோயிலுக்கு அன்னதானம் செய்வதற்காக பதினாயிரம் பொற்காசுகள் தரச் சொல்லித் தந்தை சொல்லி இருக்கிறார். அது தேவை இல்லாத செயல். வரிப்பணத்தைத் தெருவில் இறைக்கும் மதியீனமான நடவடிக்கை என்று அண்ணன் சொன்னாராம். அதனால் அண்ணன் மீது எனது தந்தைக்கு கோபம்.''

''இதனைப் பற்றி மன்னரிடம் உன் தமையன் கூறி னாரா?''

''இல்லை... இல்லை. தளவாயிடம் தமையன் சொல்லி இருக்கிறார். அண்ணன் என்ன சொன்னாரோ, எவ்வளவு சொன்னாரோ? இந்தத் தளவாய் வேண்டும் என்றே இன்னும் சிலவற்றைச் சேர்த்து அண்ணன் சொன்ன தாகச் சொல்லி இருப்பான்!''

இந்த விவாதம் நடக்கும்பொழுது ரங்காஜம்மா வீட்டில் தானும் இருந்ததாக மதுரவாணி வாயே திறக்க வில்லை! அப்படிச் சொல்வதால் இளவரசிக்கு அநாவசிய மான சந்தேகங்கள் உருவாகலாம் என்ற அச்சத்தில் அதைப் பற்றி மதுரவாணி வாயே திறக்கவில்லை.

இளவரசி தொடர்ந்து, ''கடவுளின் கைங்கர்யத்தைப் பற்றி அண்ணன் பேசியதும், கங்கை கொண்ட சோழபுரத் தில் எனக்கு ஏற்பட்ட கஷ்டங்களுக்கும் தெய்வக் குற்றம் தான் காரணம் என்று நினைக்கிறார். அதற்காக நாளை என்னையும் அண்ணனையும் கூட்டிக் கொண்டு போக இருக்கிறார்'' என்றாள்.

''எங்கு?''

''எங்கள் குலகுரு குமார தாத்தாச்சாரியார் குருவாயூ ரில் இருந்து திரும்பி வந்துவிட்டார் அல்லவா. அவரிடம் சென்று ஆசி பெற்று அண்ணனுக்கு அவர் அறிவுரை வழங்கி வந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று தந்தை நினைக்கிறார்.''

''பார்த்தாயடி! உயிருக்குயிரான தோழி என்று நீ சொல்வது முழுக்க பொய் என்று இப்பொழுதுதான் தெரிகி றது'' என்று வருத்தத்துடன் சொன்னாள் மதுரவாணி.

''ஏனடி அப்படி சொல்கிறாய்?'' புரியாமல் கேட்டாள்.

''குல குருவிடம் ஆசிபெற என்னைக் கூப்பிட உனக்கு மனம் வரவில்லையே!''

''உன்னையும் கூட்டிக் கொண்டுதான் போகவேண்டும் என்று நினைத்தேன். பிறகு யோசித்ததில் எங்கள் குரு வைஷ்ணவர், நீங்களோ சைவர்கள்! வைஷ்ணவ குருவிடம்

ஆசி பெறுவதற்காக ஸ்மார்த்தரான உன் தந்தை உன்னை அனுமதிப்பாரோ என்று நினைத்தேன்.''

''என் தந்தைக்கு ஒருபோதும் அந்தப் பேதம் கிடையாது. வைஷ்ணவராய் இருந்தாலும் வயது முதிர்ந்தவர். ஞானி! தவசீலர்! அவரிடம் ஆசி பெற என் தந்தை மகிழ்ச்சியுடன் சம்மதிப்பாரடி.''

''அப்படியானால் நீயும் என்னோடு வாடி. நாளைக் காலையில் நீ இங்கு வந்து விடு. இருவரும் சேர்ந்தே போகலாம்'' என்றாள் சந்திரவதனா மகிழ்ச்சி பொங்க.

மதுரவாணி உள்ளத்தில் உவகை பொங்க சீக்கிரமாக இளவரசியிடமிருந்து விடைபெற்றுக் கொண்டாள்.

அந்தப்புரத்திற்குள் அமைந்திருந்த அந்தத் தோட்டத்தினுள் அரண்மனையைச் சேர்ந்த இளம் பெண்கள் ஆங்காங்கே குழுமி விதவிதமான விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்தனர்.

அம்மானை ஆடுவோர் ஒரு பக்கம், ஆர்ப்பரித்து பந்து விளையாடுபவர்கள் ஒரு பக்கம், கண்ணைக் கட்டிக் களியாட்டமாடும் காரிகையர் ஒருபக்கம் என்று நாலாபுறமும் இளஞ்சிட்டுகள் கலகலப்பு ஏற்படுத்திக் கொண்டிருந்தனர்.

இவர்கள் யாருடனும் கலந்து விளையாட மனமின்றி இளவரசி சந்திரவதனா அமைதியாக நடந்து தனது அறைக்குள் நுழைந்து மஞ்சத்தில் வந்து அமர்ந்தாள்.

மனம் மறுபடியும் அந்த வீரனை நோக்கியே பறந்தது. எவ்வளவு துணிச்சலாக என் கையைப் பற்றி வாயைப் பொத்தினான்! எடுத்த எடுப்பிலேயே 'வா போ' என்று ஒருமையில் விளிப்பதற்கு அவனுக்கு எவ்வளவு தைரியம்!

அவன் யாராக இருப்பான்? எவ்வளவு சாதுரியமாக மதயானையிடமிருந்து என்னைக் காப்பாற்றினான்! அப்பொழுது அவன் கூறிய வார்த்தைகள் இன்றுகூட மறக்க முடியவில்லையே!

'பயப்படாதே சந்திரவதனா! நான் இருக்கிறேன். உனக்கு ஒன்றும் ஆகாது. அப்படியே ஆபத்து ஏற்பட்டாலும் என்னுயிர் போன பிறகுதான் உனக்கு ஏதாவது ஆகும். பயத்தைவிடு'

அவனுடைய உயிரைவிட என்னை மேலாகக் கருதுகிறானா? தேனீக்கள் கொட்டக்கூடாது என்பதற்காக எவ்வளவு முன்னேற்பாடாக என்னையும் அணைத்துக் கொண்டு மூடிக் கொண்டான்.

தேனீக்கள் கொட்டினால் முதலில் அவன் உடம்பைத்தான் தொடமுடியும். அதைத் தாண்டி அவற்றால் வரமுடியாது என்ற உயர்வான எண்ணம்!

அரைகுறை மயக்கத்தில் இருந்தபொழுதுகூட, அலங்கோலமாக இருந்த என் ஆடைகளைச் சரி செய்தானே! பண்பு நிறைந்தவனாகவும் தெரிகிறது.

இப்படிப்பட்டவன் தராதரம் தெரியாது இந்த நாட்டின் இளவரசி மீது பைத்தியக்காரத்தனமாகக் காதல் கொண்டு இருக்கிறானே! அதிலும் எவ்வளவு ஆணித்தரமாகச் சொல்கிறான்!

நீயாக என்னை விரும்பி வரும்வரை நான் விடமாட்டேன்.

ஊர், பேர் தெரியாத நாடோடியை நானாக விரும்பிப் போவேனாம்! அது அவன் கனவில் கூட நடக்காது.

அவன் வீரம் பாராட்டக் கூடியதுதான்! அதற்காக அவனைக் காதலிக்கவா முடியும்?

பார்வைக்கு அழகாக, கம்பீரமாகத்தான் இருக்கிறான். அதற்காக ஓர் இளவரசி யாரோ ஒரு சாதாரண வீரனை மணக்க முடியுமா?

பண்பு நிறைந்தவன்தான்! உயிரைக் காத்தவன்தான். அதற்குச் சன்மானம் பெற்றுக் கொள் என்றால், இதயத்தை அல்லவா தரச் சொல்கிறான். பேராசைக்காரன்.

உன்னை விடமாட்டேன் விரைவில் சந்திக்கிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றானே! நிஜமாகவே வருவானா? எப்படி? என் தந்தையைத் தேடி வருவானா?

ஒருவேளை அந்தப்புரத்திற்குள் நுழைந்து விடுவானோ? செய்தாலும் செய்வான்? கூடாரத்தைக் கிழித்துக் கொண்டு குதித்தவனாயிற்றே! கண்டிப்பாக வந்தாலும் வருவான்.

வந்தால் என்ன செய்வது?

வரட்டும்! அவனைப் பிடித்து என் தந்தையிடம் ஒப்படைத்துச் சிறையில் தள்ளச் சொல்கிறேன். அப்பொழுது தான் அவனுக்குப் புத்தி வரும்.

அதே நேரம் மதுரவாணி வேறுவிதமான சிந்தனையில் மூழ்கி இருந்தாள்.

குலகுரு தாத்தாச்சாரியாரிடம் சென்று ஆசி பெற்று வர என் தந்தை உடனே சம்மதிப்பார். நாளைக் காலை இளவரசியுடன் சேர்ந்து அங்கு செல்லும்பொழுது இளவரசரும் வரப்போகிறார்.

எப்படியும் அவரிடம் சூசகமாகப் பேசிவிட வேண் டும்.

'உங்களுக்காகத்தான் நான் ரங்காஜம்மா வீட்டிற்கே வந்தேன். நீங்கள் இப்படி உங்கள் வரவை நிறுத்தி விடுவீர் கள் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. உங்களிடம் தனிமையில் நிறையப் பேச வேண்டும். எனக்காக மறுபடி யும் ஏதாவது ஒரு சாக்குச் சொல்லி ரங்காஜம்மா வீட்டிற்கு வாருங்கள்' என்று எப்படியாவது தெரிவித்துவிட வேண் டும்.

ஓர் ஓலையில் என் எண்ணத்தை எழுதி இளவரசர் கையில் யாரும் பார்க்காமல் கொடுத்துவிட்டால் என்ன?

வேண்டாம்! ஏதாவது இசகுபிசகாக ஆகிவிட்டால் அந்த ஓலை சாட்சியாகிவிடும். ஆபத்து. வேண்டவே வேண்டாம்.

யாரும் அறியாமல் இளவரசரிடம் எப்படியாவது பேசிவிட வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தை வீணாக்கவே கூடாது.

இந்த எண்ணங்கள் அவள் நெஞ்சில் புரள, தனது தந்தையின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந் தாள் மதுரவாணி.

மன்னன் விஜயராகவ நாயக்கன் அரண்மனையின் சிறிய தர்பார் மண்டபத்திற்கு அருகில் இருக்கும் இளவரசன் மன்னார்தாசனின் அறைக்குள் நுழைந்தான்.

மன்னார்தாசன் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தவாறு நாலைந்து ஏடுகளைப் புரட்டி ஏதோ எழுதிக் கொண்டிருந் தான்.

தந்தையைப் பார்த்ததும் எழுந்து நின்று வணங்கினான்.

''என்ன செய்து கொண்டிருக்கிறாய் மன்னாரு?'' என்று பரிவுடன் கேட்டான் மன்னன்.

''மக்களிடமிருந்து பெற்ற வரிப்பணத்தை எந்தெந்த வழியில் செலவழிக்கிறார்கள், அதில் அநாவசியச் செலவு களை எப்படிக் கட்டுப்படுத்துவது. மக்களின் மேன்மைக் குப் புதிதாக ஏதாவது செய்யலாமா என்று யோசித்து, அதனை எழுதி வருகிறேன்.''

இதைக் கேட்ட மன்னன் முகத்தில் கவலை சற்று எழுந்து மறைந்தது. இருந்தாலும் அதனைக் காட்டிக் கொள்ளாமல், தன் மகனின் தோளைத் தட்டிக் கொடுத்தான்.

''நமது குலகுரு குமார தாத்தாச்சாரியார் குருவாயூரில் இருந்து திரும்பி விட்டார் என்பது உனக்குத் தெரியுமா?''

''கேள்விப்பட்டேன் தந்தையே.''

''நாளைக் காலையில் நாம் அவரிடம் சென்று ஆசி வாங்கி வருவோம். தயாராக இரு.''

''நான் எதற்கு தந்தையே? நீங்கள் சென்றால் போதாதா?''

''அப்படிச் சொல்லாதேயடா. வைஷ்ணவர்களாகிய நமக்கு அவர்தானே குலகுரு. விஜயநகர சாம்ராஜ்யத்தைத் தோற்றுவித்த ஹரிஹரருக்கும், புக்கருக்கும் மாதாவாச் சார்ய வித்யாரண்யர் குலகுருவாக அமைந்ததுபோல், நமக்கு இந்த குமார தாத்தாச்சாரியார் அமைந்திருக்கிறார். நீயும் இங்கு வந்ததில் இருந்து அவரைத் தரிசிக்கவில்லை.

கல்வி கற்றுத் த்ரும்பி வந்தவுடன் ஓர் இளவரசன் அந்த ஞானியின் காலில் விழுந்து ஆசி பெறுவது இந்த அரசின் எதிர்காலத்திற்கே நல்லது. அதனை எதிர்க்காதே.''

''நான் எதிர்க்கவில்லை தந்தையே! நாளைக்கு எதற்கு? இன்னொரு நாள் வைத்துக் கொள்ளலாமே!''

''நாளைக்கு வருவதாக நான் ஆஸ்ரமத்திற்கு செய்தி அனுப்பிவிட்டேன். அதனால் காலையில் தயாராக இரு.''

''நாளைக்கு என்னால் வரமுடியாது.''

திட்டவட்டமாகக் கூறிய இளவரசனைக் கோபத்துடன் ஏறிட்டுப் பார்த்தான் மன்னன் விஜயராகவ நாயக்கன்.



# 52

அமைச்சர் கோவிந்த தீட்சிதர் அரசுப் பணிகளை முடித்துவிட்டு தனது மாளிகைக்கு வரும்பொழுது இருட்டி வெகுநேரம் ஆகிவிட்டிருந்தது.

அவரைப் பார்த்ததும் மதுரவாணி அவசர அவசரமாக ஓடிவந்தாள். ''என்ன வாணி, ஏதோ ஒன்றை என்னிடம் எதிர்பார்த்து வருவது மாதிரித் தோன்றுகிறதே!'' என்று புன்னகை புரிந்தவாறு கேட்டார்.

தனது தந்தையின் புன்சிரிப்பைப் பார்த்ததும் மதுரவாணிக்கு மகிழ்ச்சி பிறக்க ஆரம்பித்தது. தந்தையின் மனநிலை நன்றாக இருக்கிறது. தனது வேண்டுகோளை அவர் மறுக்கமாட்டார் என்ற எண்ணம் அவளுக்குள் பிறந்தது.

''இன்று காலை இளவரசியுடன் பேசிக் கொண்டிருந்தேன் தந்தையே. மன்னரின் குலகுரு குமார தாத்தாச்சாரியார் அவர்கள் குருவாயூரில் இருந்து திரும்பி வந்துவிட்டதாகச் சொன்னாள்.''

''உண்மைதான். அதற்கும் உன் பரபரப்பிற்கும் என்ன தொடர்பு என்றுதான் எனக்குப் புரியவில்லை.''

''நாளைக் காலையில் அவள் குருவிடம் சென்று வணங்கி, அவரது நல்லாசிகளைப் பெறப் போவதாக்க் கூறினாள்.''

''தெரியும்.''

''அப்பொழுது என்னையும் அவளுடன் வரச் சொல்கிறாள்.''

இதைக் கேட்டவுடன் அமைச்சர் முகம் சற்று மாறியது.

''அது மட்டும் வேண்டாம் கண்ணே'' என்றார். மதுர வாணியின் முகம் உடனே வாடியது.

அப்பொழுது அவள் தாய் நாகம்மாள் சேலைத் தலைப்பில் தனது கையைத் துடைத்தவாறு அவர்கள் அருகில் வந்தாள்.

''என்னது, வந்ததும் வராததுமாகத் தந்தையும் மகளும் தனியே நின்று பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்றாள்.

''பாருங்கள் அம்மா! நாளைக் காலையில் இளவரசி சந்திரவதனா அவர்கள் குலகுரு குமார தாத்தாச்சாரியாரிடம் ஆசி பெறுவதற்காகச் செல்கிறாள். என்னையும் உடன் வரும்படி கட்டாயப்படுத்துகிறாள். தந்தை இதற்குக்கூட மறுக்கிறார்'' என்று சிணுங்கினாள்.

''போனால் போய்விட்டு வரட்டுமே! இதில் உங்களுக்கு என்ன கஷ்டம்? ஸ்மார்த்தர்களாகிய நாம் வைஷ்ணவ ஆச்சாரியாரின் காலில் விழுவது தவறு என்று நினைக்கிறீர்களா?''

''எனக்கு அந்தப் பேதம் கிடையாதென்று உனக்குத் தெரியாதா நாகு? மாறுபட்ட பிரிவைச் சேர்ந்தவர் என்றாலும் அவர் ஒரு மகான். ஞானி. வயது முதிர்ந்தவர். அதர்வண வேதத்தைக் கரைத்துக் குடித்தவர். அவரிடம் ஆசி பெறுவது நல்லதுதான்.''

''பிறகு எதற்குத் தடை சொல்கிறீர்கள்?''

''குருவின் குடிலுக்கு நாளைக் காலையில் இளவரசி மட்டும் செல்லப் போவதில்லை. மன்னரும், அவரது மகன் மன்னார்தாசனும் சேர்ந்துதான் போகப் போகிறார்கள் என்று உனக்குத் தெரியுமா வாணி?''

''அது... தெரியாது. எனக்குத் தெரியாது'' என்றாள் அவசரமாக.

''அதனால்தான் நீ அவர்களுடன் போகவேண்டாம் என்கிறேன்.''

''அவர்கள் வந்தால் வந்துவிட்டுப் போகட்டுமே! வாணியும் சென்று ஆசீர்வாதம் வாங்கி வரட்டுமே!'' என்றாள் தாய்.

''புரியாமல் பேசாதே நாகு! மன்னர் தன் மகனை அழைத்துக் கொண்டு எதற்காக 'அங்கு செல்கிறார் தெரியுமா?''

''எதற்கு?'' என்றவாறு விழித்தாள் நாகம்மாள்.

''மைந்தனின் நடத்தை குறித்து மிகுந்த விசனப்படுகிறார் மன்னர். மன்னரின் செயல்களை அவன் விமர்சிப்பதும், இறைப்பணிகளைப் பற்றி அவன் எடுத்தெறிந்து பேசி வருவது பற்றி மிகவும் கவலை அடைந்திருக்கிறார்.

அவன் மனதை மாற்றி, அவனை நல்வழிப்படுத்தவே அந்த மகானிடம் கூட்டிச் செல்ல இருக்கிறார்.''

''அப்படியா?''

''இந்த மாதிரிச் சமயங்களில் அவர்கள் குருவுடன் ரகசியமாகப் பேசலாம். அப்பொழுது அந்நியர்கள் அருகில் இருப்பதை மன்னர் விரும்ப மாட்டார். மன்னர் என்னையே இதற்குக் கூப்பிடவில்லை. இளவரசிக்கு இதெல்லாம் தெரியாது. ஏதோ விளையாட்டுத்தனமாக இவளையும் வரச் சொல்லி இருக்கிறாள். இதனை நம்பி இவளையும் அங்கு அனுப்பி வைத்தால் மன்னருக்கு என்மீது வருத்தம் எழும்.''

''உண்மைதான். வேண்டாம் மதுரவாணி'' என்றாள் தாய்.

மதுரவாணியின் முகம் தொங்கிப் போயிற்று.

''வருத்தப்படாதே மதுரவாணி! இன்றைக்கு அவர்கள் போய்விட்டு வரட்டும். எனக்குக்கூட அவரிடம் ஆசி பெறவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. நாம் இருவரும் இன்னொருநாள் அவரது குடிலுக்குச் சென்று வரலாம்.''

மதுரவாணி தலையசைத்துவிட்டுத் தன்னறையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

இதற்குமேல் தந்தையைச் சம்மதிக்க வைக்க முடியாது. தான் நினைக்கும் ஒவ்வொரு காரியமும் ஏமாற்றமாகிப் போகிறதே என்ற எண்ணத்தில் அவளுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

மன்னன் விஜயராகவ நாயக்கன் தன் மைந்தன் மன்னார்தாசனைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்தான்.

''நாளைக்கு எதற்காக உன்னால் வரமுடியாது?'' என்று முறைத்தவாறே கேட்டார்.

''இன்று காலையில் இருந்தே எனக்கு ஜுரமாக இருக்கிறது தந்தையே! கைகால்கள் நடுங்குகின்றன. தலையில் பாரம் ஒன்றை வைத்ததுபோல் தலைவலி!''

இதைக் கேட்ட மன்னன் உடனே பதறிப்போய் மைந்தனை நெருங்கி, நெஞ்சில் கைவைத்துப் பார்த்தான். கொதித்து கொண்டிருந்தது.

''அடடா! இவ்வளவு சூடாக இருக்கிறேத! இதை ஏன் முதலில் சொல்லவில்லை! வைத்தியரை வரவழைத்தாயா?''

''காலையில் வந்து நாடி பிடித்துப் பார்த்தார். பித்தம் அதிகமாக இருக்கிறது என்று கஷாயமும் சூரணமும் தந்திருக்கிறார். இன்னும் மூன்று நாட்கள் இருக்குமாம். அதன்பிறகு படிப்படியாக குறைந்துவிடும் என்று சொல்லிவிட்டுச் சென்றார்.''

மன்னன் முகத்தில் கவலை தெரிந்தது.

''இப்படிப்பட்ட நிலையில் நான் எப்படித் தந்தையே நாளைக் காலை வரமுடியும்? பெரியோர்களிடம் ஆசி பெறுவதற்கு எனக்கு எந்த மறுப்பும் இல்லை. அதனால் இன்னொரு நாள் நானே சென்று அவரை வணங்கி வருகிறேனே.''

''நாளை உன்னையும் சந்திரவதனாவையும் கூட்டிகொண்டு வருவதாக உறுதியுடன் குருவிற்குச் செய்தி அனுப்பி விட்டேனே!''

''அதனால் என்ன தந்தையே! தாங்கள் சென்று விவர மாகச் சொல்லிவிட்டால் போதுமே! தவிர, உடல்நலமில் லாமல் இருக்கும் ஒருவன் பெரியோரைச் சந்திக்கும் பொழுது, அந்த நோய் அந்தப் பெரியோருக்கும் பாதிக்க லாம் இல்லையா?''

''அப்படிச் சொல்லாதே! அவர் மகான்! கடவுள் கிருபை நிறைந்தவர்! அவருக்கு எந்த ஆபத்தும் அணுகா மல் ஆண்டவன் பார்த்துக் கொள்வான்'' என்றவாறு தனது கைகளை உயர்த்தி வானத்தைப் பார்த்துக் கும்பிட்டான்.

சற்றுநேரம் யோசித்துக் கொண்டிருந்தான். பின்னர் மகனைப் பார்த்து உறுதியான குரலில் சொன்னான்.

''இந்த மாதிரிச் சமயத்தில்தான் பெரியவர்களிடம் ஆசீர்வாதம் வாங்க வேண்டும். அதனால் உன் உடல் நோயும் அகலும். மனநோய் படிந்திருந்தாலும் மாயமாய் மறைந்துவிடும்! அதனால் நாளைக்காலை நீ என்னோடு வரத்தான் வேண்டும். மறுக்காதே!''

தந்தை மனதை நோக வைக்க வேண்டாம் என்ற நினைப்பில் ''சரி'' என்றான் மன்னார்தாசன்.

தஞ்சாவூரின் எல்லையில் தலைநகரின் பரபரப்பான சூழலில் இருந்து சற்று விலகி, மரங்கள் சூழ்ந்த பூங்கா வனத்தின் மத்தியில் ஆரவாரமின்றி எளிமையாக அமைக் கப்பட்டிருந்தது குமார தாத்தாச்சாரியாரின் ஆஸ்ரமம்!

கதிரவன் உதயங்கண்ட சில நாழிகைக்கெல்லாம் மன்னன் விஜயராகவ நாயக்கன் தன் மைந்தன் மன்னார்தாச னும், மகள் சந்திரவதனாவும் அருகில் வர அந்த ஆஸ்ரமத் திற்கு நுழைந்தனர்.

அமைதியான அந்தச் சூழ்நிலையில் ஆங்காங்கு நடப் பட்டிருந்த பூச்செடிகளுக்குக் குமார தாத்தாச்சாரியாரின் சீடர்கள் நெற்றியில் திருமண்ணும், கட்டுக் குடுமியும், மார்பினில் முப்புரி நூலும் வெய்யோன் ஒளியில் பள பளக்க நீர் வார்த்துக் கொண்டு இருந்தனர்.

மன்னனைப் பார்த்தவுடன் அவர்கள் ஓடிவந்து மரி யாதை செலுத்திக் குடிலுக்குள் அழைத்துச் சென்றனர். கூரை வேய்ந்து எளிமையாக இருந்தாலும், அந்தக் குடில் பல அறைகளாகப் பிரித்து கட்டப்பட்டிருந்தது.

குரு அமர்ந்து தியானம் செய்து கொண்டிருக்கும் அறைக்கு முதலாவதாக இருந்த சிறிய அறையில் அவர் களை அமரச் செய்துவிட்டு ஒரு சீடன் உள்ளே சென்றான்.

சற்றுநேரம் கழித்துத் திரும்பி வந்த அந்த சீடன், மன்னனிடம் பணிவாக வளைந்து, ''தங்களை வரச் சொல்லி உத்தரவு'' என்று பணிந்தான்.

''நீங்கள் இருவரும் இங்கேயே அமர்ந்திருங்கள். நான் முதலில் சென்று உத்தரவு வாங்கி வருகிறேன்'' என்றவாறு மன்னன் மட்டும் எழுந்து உள்ளே செல்லத் தொடங்கினான்.

மன்னன் நுழைந்த அறை விசாலமாக இருந்தாலும் கோயிலின் கர்ப்பகிருகத்தைப் போன்று அமைதியாக ஆன் மிக மயமாக தோற்றம் அளித்தது.

அதன் நடுவே இருந்த புலித்தோல் ஆசனத்தின் மீது அமர்ந்திருந்தார் தஞ்சை மன்னனின் குலகுருவும், வைஷ் ணவ ஆச்சாரியரும், கவிதாயினி ரங்காஜம்மாவால் தனது 'மன்னார்தாச விலாசம்' என்னும் காவியத்தில் புகழ்ந்து ரைக்கப்பட்டவருமான குமார தாத்தாச்சாரியார்!

புலித்தோல் ஆசனத்தின் மீது நெற்றியில் திருமண்ணும், கழுத்தில் திருந்துழாய் மாலையும், நெஞ்சில் முப்புரி நூலும் திகழ அமர்ந்திருந்த அவருக்கு வயது எழுபதிற்குள் இருக்கும்! அவர் பாதத்தில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினான் மன்னன்.

பின்னர் மன்னரும் குருவும் நீண்ட நேரம் பேசிக் கொண்டு இருந்தார்கள்.

அறைக்கு வெளியே மன்னார்தாசனும், சந்திரவதனாவும் அன்பு கனிய மெதுவான குரலில் பேசிக் கொண்டிருந்தனர். தன்னை ஏன் அடிக்கடி வந்து பார்க்கவில்லை என்று இளவரசி அவனிடம் பொய்யாகக் கோபித்துக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது மன்னன் வந்தான்.

''மன்னார்தாசா, நீ சற்று நேரம் காத்திரு. முதலில் உன் தங்கை ஆசி பெற்று வரட்டும்'' என்றான்.

இளவரசி எழுந்து தந்தையுடன் உள்ளே நுழைந்தாள். குருவின் கால்களில் விழுந்து பணிந்தாள்.

''பகவான் அருளால் சகல பாக்கியங்களும் பெற்று மங்களம் பெறுவாய் மகளே, எழுந்திரு.''

இளவரசிக்கு தீர்த்தமும், துளசி இலைகளையும் பிரசாதமாக வழங்கினார்.

''மகளே கங்கைகொண்ட சோழபுரத்தில் உனக்கு ஏற்பட்ட கஷ்டங்களைப் பற்றி அறிந்தேன். எல்லாம் நன்மைக்கே என்றிரு.''

''உத்தரவு'' வாய் மூடிப் பணிவாகச் சொன்னாள் இளவரசி.

''கூடாரத்தைக் கிழித்துக் கொண்டு வந்தவனாலும் ஆபத்து ஏற்படவில்லை. மதயானையிடமிருந்து உன் உயிர் காப்பாற்றப்பட்டு இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் உன் தந்தை செய்த புண்ணியம். இனி உன் வாழ்க்கை சுபிட்சமாக இருக்கும். ஆனால்...''

''என்ன சுவாமி?'' என்றான் மன்னன் திடுக்கிட்டு.

''இனியும்கூட இவள் வாழ்க்கையில் சில இன்னல் களைச் சந்திக்க நேரிடலாம்.''

''ஆண்டவா! அதைத் தவிர்க்க முடியாதா?''

''அதற்கான பிராயச் சித்தம் செய்ய வேண்டும். முற் பிறவியின் கேடூழ் அவ்வளவு சீக்கிரம் விடாது.''

''என்ன பிராயச்சித்தம் வேண்டுமானாலும் செய்கி றேன். சொல்லுங்கள்.''

''கூடிய சீக்கிரமே சொல்லுகிறேன். அதுவரை உனக்கு ஒரு கெடுதலும் வராது. சென்று வா மகளே!'' என்று ஆசீர்வதித்தார்.

''சந்திரவதனா, நீ சென்று உன் அண்ணனை உள்ளே வரச்சொல்'' என்றான் மன்னன்.

சற்றுநேரம் கழித்து அங்கே நுழைந்த இளவரசன் மன்னார்தாசன் கண்களால் ஒருமுறை சுற்றிலும் பார்த்தான்.

''குருவின் கால்களில் விழுந்து வணங்கு மகனே'' என்றான் மன்னன்.

மன்னார்தாசன் மறுநிமிடமே தன் தந்தையின் கட்ட ளைக்குப் பணிந்து, குருவின் பாதத்தைத் தொட்டு வணங்கி னான்.

''உட்கார் மன்னார்தாசா! உன்னிடம் நிறையப் பேச வேண்டும்'' என்றார் குரு.

மன்னார்தாசன் அவர் எதிரில் தரையில் அமர்ந்தான். அகிலும், சாம்பிராணியும் ஓர் ஓரத்தில் புகைந்து இனிய நறுமணத்தை அங்கு வியாபித்துக் கொண்டிருந்தது.

''விஜயநகரத்தில் பல ஆண்டுகள் தங்கி பல்வேறு விதமான கலைகளையும் கற்றுத் தேர்ந்து வித்தகனாகத் திரும்பி இருக்கிறாய் என்று உன் தந்தை கூறினார். மெத்த மகிழ்ச்சி! எம் பெருமான் நாராயணன் உனக்கு எந்தக் குறையும் வைக்கமாட்டான். இருப்பினும் உன் தந்தை மனதில் சின்ன நெருடல்.''

''என்ன நெருடல்?'' என்றவாறு தந்தையை ஏறிட்டான்.

''வந்த அன்றே தந்தையின் நடவடிக்கைகளை விமர்சித்தது பற்றி வருத்தம் ஏற்படத்தானே செய்யும். இறைப் பணிக்காகச் செய்யும் செயல்களை இழிவுபடப் பேசுவது பெரும்பாவம் மகனே!''

''என் மனதிற்குத் தவறு என்று பட்டதைச் சொல்கிறேன்.''

''தவறு என்பது அவரவர் கண்ணோட்டத்தைப் பொறுத்தது. எந்த நூலைப் படித்தாலும் அதன் உட்பொருளையும் படித்த பிறகே ஒரு முடிவுக்கு வரவேண்டும். உதாரணமாக அந்தணர்களிடம் வரி வசூலிக்காமல் இருப்பது தவறு என்று சொன்னாயாம்.''

''ஆம். மற்றவர்களைப் போல்தான் இவர்களும்! இவர்களிடமிருந்து மட்டும் ஏன் வரி வசூல் செய்யக் கூடாது என்று கேட்டேன்.''

''எல்லாக் குடிமக்களைப் போலவே அந்தணர்களும் ஆறில் ஒரு பங்கை அரசனுக்கு அளிக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியாது.''

''புரியவில்லை ஸ்வாமி! அவர்கள் வரி செலுத்திய தாக எந்த ஆண்டிலும் எந்தக் கணக்கிலும் வரவில்லை.''

''அந்தணர்கள் வேள்வி செய்தும், இறைப்பணி செய்தும் கடவுளிடம் இருந்து பெறும் அனுக்கிரகத்தில் ஆறில் ஒரு பங்கை மறைமுகமாக அரசனுக்குச் செலுத்துகிறார்கள் என்ற வசிஷ்டரும், பவுதாயனரும் தங்களது நீதி நூலில் கூறி இருக்கிறார்கள். அதனால் அவர்களிடமிருந்து வரி வாங்கக்கூடாது என்றும் அந்த நீதிநூல்கள் கூறுகின்றன.



# 53

தஞ்சை மன்னனின் குலகுருவான குமார தாத்தாச்சாரியார் அந்தணர்கள் செய்யும் வேள்விகளின் பலன்களில் ஆறில் ஒரு பங்கு அரசனைச் சென்று அடைகிறது. அதனால்தான் அந்தணர்களிடமிருந்து அரசன் வரிவாங்குவதில்லை என்று சொன்னவுடன் விஜயராகவ நாயக்கன் ஆகாயத்தைப் பார்த்துக் கும்பிட்டான்.

''இப்பொழுதாவது புரிகிறதா குழந்தாய் சாஸ்திரங்களும், வேதங்களும் வீணுக்கு எழுதியதில்லை என்று. அவற்றின் வழிநடப்பதே உத்தமம்'' என்றார் தாத்தாச்சாரியார்.

''மன்னிக்க வேண்டும். எனக்கு அதில் உடன்பாடு இல்லை'' என்று அமைதியாகச் சொன்னான் மன்னார்தாசன்.

உடனே ஏதோ சொல்ல வாயெடுத்த மன்னனைப் பார்த்துக் கை அசைத்துவிட்டுக் குலகுரு, ''ஏன் உடன்பாடு இல்லை? குழந்தாய்?'' என்றார்.

''கடவுளின் அருள் மட்டும் போதும் என்றால் அரசன் குடிமக்கள் எவரிடமிருந்தும் திறை பெற வேண்டாமே! இன்னும் சரியாகச் சொன்னால் அரசனே தேவை இல்லையே! மற்றவர்கள் அனைவருமே தங்கள் உழைப்பின் மூலம் கிடைக்கும் வருவாயில் ஆறில் ஒரு பங்கை வரியாகச் செலுத்தும்பொழுது, இவர்கள் மட்டும் ஆண்டவன் அருள் கிட்டும் என்று சொல்வது சரியாகத் தெரியவில்லை. அதில் எனக்கு நம்பிக்கையும் இல்லை.''

இதைக் கேட்டு குலகுருவும், மன்னனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு லேசாகத் தலை அசைத்தனர்.

''குழந்தாய், இவற்றுக்கு விளக்கம் கூற இது சமயமும் அல்ல. இந்த நாளும் பற்றாது. நீ இன்னும் கற்க வேண்டியது நிறைய இருக்கிறது. அதனால் நாளையிலிருந்து தினமும் காலையில் இங்கு வா. சாஸ்திரங்களின் உன்னத நோக்கங்கள் உனக்குப் புரிய வைக்கிறேன். அவற்றிலிருந்து ஒருபோதும் நழுவக்கூடாது என்பதை நீயே அறிந்து கொள்வாய்.''

''சுவாமி, இன்றிலிருந்தே இவன் கற்றுக் கொள்ளட்டுமே!'' என்றான் மன்னன்.

''வேண்டாம் தந்தையே! என் உடல்நலம் சரியில்லை. இப்பொழுதுகூட உள்ளுக்குள் நடுங்குகிறது. குணமாகட்டும். அதன்பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்றான் இளவரசன்.

''உன் உடலுக்கு என்ன நேர்ந்தது மகனே?'' என்றார் குரு.

''நேற்றுக் காலையில் இருந்தே அவனுக்கு ஜுரம்! இன்றுகூட இங்கு வரமாட்டேன் என்று தான் சொன்னான். நான்தான் கட்டாயப்படுத்தி அழைத்து வந்தேன்.''

''அருகில் வா குழந்தாய்!''

மன்னார்தாசன் குருவின் அருகில் நெருங்கி உட்கார்ந் தான். குரு அவன் கையை நீட்டச் சொல்லி, அதன்மீது ஒரு பட்டுத் துணியைப் போர்த்தி நாடி பார்த்தார்.

''ஜுரம் ரொம்பக் கடுமையாகத்தான் இருக்கிறது. வா என்னுடன். நானே உனக்கு சிகிச்சை அளிக்கிறேன்'' என்றவாறு எழுந்தார்.

''ஆகா! குருவின் கையால் சிகிச்சை பெறுவதற்கு என் மைந்தன் கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்று கும்பிட்டான் மன்னன்.

இருவரையும் அந்த குடிலில் இருந்த மற்றொரு விசாலமான அறைக்குள் கூட்டிச் சென்றார் தாத்தாச்சாரி யார். அது ஒரு சிறிய வைத்திய சாலை போன்று காணப்பட் டது.

அங்கிருந்த ஆசனத்தில் மன்னார்தாசனை அமரச் சொன்னார். மன்னனைச் சற்றுத் தள்ளி உட்காரச் சொன் னார்.

அப்பொழுது குலகுருவின் மனைவியாகிய அனந்த லட்சுமி அம்மையார் உள்ளே நுழைய, மன்னனும், மன் னார்தாசனும் எழுந்து வணங்கினர்.

''அனந்தி, இளவரசனுக்கு ஜுரம். சிகிச்சை அளிக்க வேண்டும். சீடர்கள் இருவரை இங்கு வரச்சொல். அப்ப டியே நீ சென்று அடுப்பில் தீ மூட்டு'' என்றார் குரு தன் மனைவியிடம்.

அவர் மனைவி அகன்றதும், மன்னார்தாசன் குருவைப் பார்த்து ''சுவாமி எனக்கு ஒரு சந்தேகம்'' என்றான்.

''கேள் குழந்தாய்.''

''சாஸ்திரங்களின்படி நடக்க வேண்டும் என்கிறீர்களே, தாங்கள் அதனை அணு அளவும் பிசகாது கடைப் பிடிக்கிறீர்களா?''

''அதில் உனக்கு என்ன ஐயம்?''

''பிராமணர்கள் மருத்துவத் துறையில் ஈடுபடக் கூடாது. ஏனென்றால் மருத்துவன் தீட்டுப்பட்டவன். வைத்தியச் சிகிச்சையின்போது அவன் பல்வேறுவிதமான வர்ணத்தவருடன் தொட்டு பழக வேண்டி இருக்கும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.''

''எந்த சாஸ்திரம் அப்படி கூறுகிறது மகனே?''

''தைத்ரிய சம்ஹிதையில் 'பிராமணேன பேஷகம் நகார்யம்' அதாவது பிராமணன் மருத்துவம் செய்யக் கூடாது என்கிறது. இதையே மைத்ரேய சம்ஹிதையும், சதபத பிராமணமும் வற்புறுத்துகிறது!''

''உண்மைதான் குழந்தாய்.''

''பிறகு நீங்கள் எப்படி சிகிச்சையில் ஈடுபடுகிறீர்கள்?''

மன்னன் இதைக் கேட்டவுடன் மைந்தனை முறைத்துப் பார்த்தான். குரு அவனைப் பார்த்துக் கண்களால் சைகை செய்தார்.

''மன்னார்தாசா, உன் கேள்வியைப் பாராட்டுகிறேன். இந்த அடியவன் உங்கள் அரச பரம்பரையுடன் என்ன வகையில் தொடர்பு''

''எங்களது குலகுரு.''

*''நான்கு வேதங்களில் ஒன்றான அதர்வண வேதத்தினை க்ஷத்திரியர்கள் வேதம் என்று சொல்வார்கள். அதர்வண வேதத்தினை கற்றுத் தேர்ந்த ஒருவனே அரசனுக்குக் குலகுருவாக இருக்க வேண்டும் என்று யாக்ஞவல்கய ஸ்மிருதி கூறுகிறது. அதர்வண வேதத்தினை முற்றும் உணர்ந்த காரணத்தினால்தான் உன் தந்தை என்னைக் குலகுருவாக ஏற்றுக் கொண்டிருக்கிறார். இல்லையா விஜயராகவா?''

''உண்மை. உண்மை'' என்று கையெடுத்துக் கும்பிட்டான் மன்னன்.

''ஐத்ரேய பிராமணம் என்ன சொல்கிறது தெரியுமா? அரசனுடைய குலகுருவிற்கான கடமைகளைத் தெளிவாக விளக்குகிறது. மன்னனுடைய உடல்நலம் பாதுகாப்பு, குடிமக்களின் வளம், எதிரிகளின் மீது ஏற்படும் வெற்றி இவையனைத்தும் மந்திரம் கற்ற குருவின் கையில் இருக்கிறது என்று சொல்கிறது. அதன்படி பார்த்தால் அரசனையும், அவன் வாரிசுகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் குருவிற்கு உண்டு. அதனால் க்ஷத்திரியனான உனக்கு பிராமணனாகிய யான் சிகிச்சை செய்வது தப்பே இல்லை. புரிகிறதா?''

மன்னார்தாசன் மவுனமாக இருந்தான்.

''இப்படிப் பல விஷயங்கள் உனக்கு இன்னும் தெரியாத காரணத்தினால்தான் சிறுபிள்ளைத்தனமாக உன் தந்தையின் நற்செயல்களை எதிர்க்கிறாய் மகனே! உன் உடல் தேறிய பிறகு என்னிடம் வந்து சாஸ்திரங்களைக் கற்றுக் கொள்! உன் மனப்போக்கில் நிறைய மாறுதல்கள் ஏற்படும்.''

மன்னார்தாசன் அதற்கும் பதிலிறுக்கவில்லை. ஜுரம் அதிகமாக இருந்ததால் அசதியாக இருந்தது. மேலும் விவாதம் செய்யும் மனநிலையில் அவன் இல்லை.

அப்பொழுது குருவின் சீடர்கள் இருவர் அங்கு நுழைந்தனர். அவர்களைப் பார்த்து ''இளவரசனுக்கு ஜுரம் இருக்கிறது. சிகிச்சைக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அடுப்பில் தீ மூட்டச் சொல்லி இருக்கிறேன். அந்த நெருப்புக்குள் கோடாரியைப் போடுங்கள். கிணற்றில் இறங்கி வரிக்கோடுள்ள தவளையைப் பிடித்து வாருங்கள்'' என்றார்.

சீடர்கள் உடனே அகன்றனர்.

சற்று நேரத்தில் சீடன் ஒருவன் ஒரு சிறிய துணிப் பையில் தவளை ஒன்றைப் பிடித்து வந்து குருவிடம் கொடுத்தான். குரு அதனைப் பிரித்துப் பார்த்துத் திருப்தி அடைந்தவராக, மன்னார்தாசன் அருகே வந்தார்.

அவன் மார்பில் அணிந்திருந்த ஆடைகளை அகற்றச் சொன்னார். பிறகு உயிரோடு இருக்கும் அந்தத் தவளையை வெளியே எடுத்து சிவப்பும், நீலமும் உள்ள நூலில் கட்டினார்.

மன்னார்தாசனை ஆசனத்தில் சரிவாகப் படுத்துக் கொள்ளச் சொன்னார். கமண்டலத்தில் இருந்த புனித தீர்த்தத்தினை அவன் மீது தெளித்தார்.

'நமோ ரூரயேதி சகுநீன் இவேஷிகாஞ்சி மண்டுகம் நீலலோஹிதாப்யம் சகக்ஷும் பத்வா' என்று மந்திரத்தினை உச்சரித்தபடி அந்தத் தவளையை மன்னார்தாசனின் அக்குளுக்குள் வைத்து அதே நூலால் இறுகப் பிணைத்தார்.

பிறகு ''இரண்டு நாட்களாகத் தொடர்ந்து வரும் பக்தியற்ற ஜுரமே. இந்தத் தவளைக்குள் சென்று புகுந்து விடு'' என்று பொருள்படும் அதர்வண மந்திரத்தை ஓதி னார்.

மற்றொரு சீடன் நெருப்பிலே காய வைத்துப் பழுக்கச் சிவந்து இருந்த இரும்புக் கோடாரியை ஒரு தட்டில் எடுத்து வைத்துக் கவனமாக அவரருகே கொண்டு வந்து வைத்தான்.

இன்னனொரு சீடன் வாயகன்ற பாத்திரம் ஒன்றில் குளிர்ந்த நீரைக் கொண்டு வந்து வைத்தான். இரண்டுமே மன்னார்தாசனின் எதிரே வைக்கப்பட்டன.

'பரசுனா க்வாதயதி உதகம்...' என்று உச்சரித்தபடி கோடாரி இருந்த தட்டை எடுத்து, பாத்திரத்தில் கவிழ்த்தி னார். பழுக்கக் காய்ச்சிய கோடாரி நீருக்குள் விழுந்தவுடன் 'உர்ர்' என்று உறுமிக் குமிழிட்டது.

சற்று நேரம் பொறுத்து அந்த நீரைத் தொட்டுப் பார்த்தார். கோடாரியின் சூடு நீரில் பரவி வெதுவெதுப் பாக இருந்தது. பின்னர் கோடாரியை எடுத்து கீழே வைத்துவிட்டு, அந்தப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு இளவரசன் அருகில் வந்தார்.

''தண்ணீரில் நுழைந்த அக்னி எரிந்து அடங்கிவிட் டது. பிரபஞ்சத்தின் உயர்வை எண்ணிக் கடவுளர்கள் அக்னியைத் துதிக்கின்றனர். உன்னுடைய மூலம் உயர்ந் தது என்கிறார்கள். எங்களை எண்ணிப் பாருங்கள். ஓ! ஜுரமே! எங்களை விட்டு அகன்றுவிடு'' என்று பொருள் படும் அதர்வண மந்திரத்தை ஓதியபடி, பாத்திரத்தில் இருந்த நீரை மன்னார்தாசன் உடலில் ஊற்றினார்.

பின்னர் சைகை காட்ட இளவரசன் எழுந்து உட்கார்ந் தான். தலையில் இருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது. அக்குளுக்குள் கட்டப்பட்டிருந்த தவளை வேறு அடிக்கடி முண்டிக் கொண்டிருந்தது ஒரு பக்கம் எரிச்சலாகவும் இருந்தது.

''குழந்தாய், நாளைக் காலைவரை இந்தத் தவளை இப்படியே இருக்கட்டும். அதன்பிறகு எடுத்து எறிந்து விடு. காலையில் ஜுரம் பறந்துவிடும்.''

''இதென்ன சிகிச்சை? புரியவில்லையே!'' என்றான் இளவரசன்.

''அதர்வண வேதத்தில் சொல்லப்பட்ட ஜுரத்தைக் குணப்படுத்தும் சிகிச்சை முறைகளில் உயர்வானவை இந்த இரண்டும்தான்.''

''இவ்வளவுதான் சிகிச்சையா? மருந்து எதையும் சாப் பிட வேண்டாமா?''

''தேவையே இல்லை. பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கோடாரியில் அக்னி பகவான் புகுந்துவிட்டார். அந்தக் கோடாரியைக் குளிர்ந்த நீரில் போட்டவுடன், சூட்டை நீர் உட்கொண்டதைப் பார்த்தாய் அல்லவா! அந்த நீர் அக் னியை உள்இழுக்கும் ஆற்றலைப் பெற்றுவிட்டது. அதே நீரை உன் உடல் மீது ஊற்றியதும், அந்த நீர் உன் உடல் வெப்பத்தை அதாவது ஜுரத்தை உறிஞ்சிவிடும். அதற் கான ஆற்றலை அளிப்பதற்குத்தான், அதர்வண வேதத்தில் இருந்து மந்திரங்களை உச்சரித்தேன்.''

''இந்தத் தவளையை எதற்காக என் அக்குளில் கட்டி இருக்கிறீர்கள்?''

''நாணலும், தவளையும் நீருக்குள் வாழ்பவை! அதனால்தான் நாணல் போலும் வரியுடைய தவளையைக் கொண்டு வரச் சொன்னேன். தண்ணீர் அக்னியின் ஆற்றலை அணைப்பது. அந்தச் சக்தி அதில் வாழும் தவளைக்கும் உண்டு. அதை ஜுரம் இருப்பவன் உடலோடு கட்டினால், அந்த ஜுரத்தைத் தவளை அணைத்துவிடும். நான் உச்சரித்த அதர்வண மந்திரம் அந்த ஆற்றலைத் தவளைக்குத் தந்துவிடும்.''

''புதுமையான வைத்தியம்தான்'' என்று இகழ்ச்சியாகச் சிரித்தான் இளவரசன்.

''நான் குருவாயூரில் இருக்கும்பொழுது ஓர் அயல்நாட்டவன் என்னை வந்து சேவித்தான். அவன் சொன்னான் பொஹீமியா என்று ஒரு நாட்டில் ஜுரம், ஜன்னி இவற்றுக்கு விடிகாலையில் ஒரு பச்சைத் தவளையைப் பிடித்து வந்து ஒரு பைக்குள் வைத்துக் கட்டி அதனை நோயாளியின் கழுத்தில் கட்டி விடுவார்களாம். அந்த நோயாளிக்கு அதில் என்ன இருக்கிறது என்றே தெரியாதாம். பிறகு அந்த நோயாளி சூர்யோதயத்திற்கு முன்பு ஒன்பது நாட்கள் ஒன்பது தடவைகள் இறைவனை வழிபட வேண்டுமாம். ஒன்பதாவது நாள், துதித்தபடி ஆற்றுக்குச் சென்று, கழுத்தில் கட்டியிருந்த பையைத் தண்ணீருக்குள் எறிந்துவிட்டு, திரும்பிப் பாராது வீட்டுக்கு வந்துவிட வேண்டுமாம். நான் அதர்வண வேதத்திலிருந்து சிகிச்சைப் பற்றிச் சொன்னதும் அசந்துவிட்டான் அந்த அயல்நாட்டான்'' என்று பெருமை படச் சிரித்தார்.

''மன்னார்தாசனின் ஜுரம் நாளை தணிந்துவிடுமா?'' என்றான் மன்னன்.

''நிச்சயமாக. அதர்வண மந்திரத்தின் ஆற்றல் அப்படி! ஜுரத்தைப் பற்றிச் சுஸ்ருதர் தன்னுடைய வைத்திய சாஸ்தி

ரத்தில் என்ன சொல்லி இருக்கிறார் தெரியுமா? நோய்க ளுக்கு அரசன்தான் ஜுரம். மனிதன் இவ்வுலகுக்கு வரும் பொழுது ஜுரம் இருக்கிறது. அவன் உலகை விட்டு மறையும்பொழுது ஜுரம் இருக்கிறது. அதன் அழிவுகளில் இருந்து கடவுளரும், மனிதருமே தப்ப முடியும் என்று உத்தர தந்திராவின் முப்பத்தொன்பதாவது அங்கம் சொல்கி றது.''

''மன்னார்தாசனுக்குத் திடீர் என்று எப்படி ஜுரம் வந்தது என்றுதான் புரியவில்லை'' என்றார் மன்னன்.

**''வேறு என்ன காரணம்? காமம்தான். காமக்களி யாட்டம் ஜுரம் வருவதற்கான காரணம் என்கிறார் சுஸ்ரு தர். மிக அதிகமான உடலுறவு ஜுரத்தை விளைவிக்கும் என்று ரிக்வேதம் கூறுகிறது.''

இதைக் கேட்டவுன் மன்னார்தாசன் முகத்தில் கோபம் எழுந்தது.

''குரு அவர்கள், வயதில் முதிர்ந்தவர். அனுபவம் மிக்கவர். இப்படி ஆராயாது சொல்வது வருத்தம் தருகி றது. நீங்கள் நினைப்பதுபோல் நான் காமக்களியாடத்தில் ஈடுபட்டதே இல்லை. ஒன்றும் அறியாத பச்சிளம் குழந் தைகளுக்குக்கூட ஜுரம் வருகிறதே! அது எப்படி?''

''ஜுரத்திற்கான காரணமே அதுதான் என்று சுஸ்ருதர் சொல்லவில்லை. காரணங்களில் காமமும் ஒன்று என்கி றார். நீ வயது வந்த வாலிபன். நாட்டின் இளவரசன். காமக் களியாட்டத்திற்கான வாய்ப்புகள் அதிகம்.''

''யூகத்தில் வேண்டாம். நான் இதுவரை பெண்கள் மீதான மோகத்தில் திளைத்தது இல்லை. அந்த எண்ணமும் இதுவரை இல்லை. உங்களை ஒன்று கேட்கிறேன். உங்க ளுக்கு ஜுரமே வந்ததில்லையா?''

''யூகத்தின் அடிப்படையில் சில சிகிச்சைகளைச் செய்து பார்ப்பதும் உண்டு மகனே! அதுவும் அந்த யூகத்தில் உண்மைக்கு நெருங்கிய தொடர்பு இருக்கும் என்று நிச்சயமாகத் தெரியும்போது.''

''என் விஷயத்தில் அப்படி என்ன யூகித்தீர்கள்?''

''நீ இந்த நாட்டிற்கு வந்த நாள் முதல் தாசியர் வசிக்கும் பவழ வீதிக்குள் அடிக்கடி செல்கிறாய் என்று சொன்னார்கள்.''

''இது என்ன முட்டாள்தனமான பேச்சு'' என்று ஆத்திரத்துடன் எழுந்த மன்னார்தாசன், அக்குளில் கட்டியிருந்த தவளையை அறுத்தெறிந்துவிட்டு, மறுவிநாடியே யாரிடமும் சொல்லாமல் வெளியேறினான்.

---

* "The TaitS VI.4,9,3 (Cf Maitr S.IV 6,2 Sat Br IV, 1,5,15) says brahmanena bheshgam na karyam, "a Brahman shall not practise, medicine'.... "Hymns of the Artharvan - Veda Translated by Maurice Bloomfield - Edited by F.max Muller - page no. XXXIX - XI

* The King must choose for his chaptain (purohita) one who is skilled in the atharvan and angiras, yagnav I 312, I bid - page no. XIVIII.

** அதர்வண வேத மந்திரம், சிகிச்சை முறை பற்றிய விவரங்கள் Hymns of Atharvan - Veda - Translated by Maurice Bloom field - Edited by F.Max Muller - page no. 3,4, 270, 442, 565, 567, 568 and 569.



# 54

மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கன் கோட்டைத் தலைவனிடம் திருவரங்கம் செல்வதாகச் சொல்லிவிட்டுத் தனது நண்பன் வெங்கட கிருஷ்ணப்ப நாயக்கனுடன் கிளம்பினான்.

இருவரது புரவிகளும் திருச்சிராப்பள்ளி எல்லைக்கு வந்ததும் காட்டுப் பகுதிக்குள் நுழைந்து தங்களது ஆடைகளைக் களைந்து நாடோடிகளைப் போல மாறுவேடம் புனைந்து கொண்டனர்.

மறுபடியும் குதிரை மீது ஏறி, காட்டுக்குள் செலுத்தி தஞ்சாவூர் செல்லும் பாதையில் திருப்பினார்கள். நீண்ட தூரம் கடந்ததும் சொக்கநாதன் குதிரையை நிறுத்தி, அருகில் இருந்த உயரமான மரத்தின் மீது ஏறிப் பார்த்தான்.

வெகு தூரத்தில் புரவி ஒன்றில் ஒற்றர் தலைவனான அழகப்ப நாயக்கன் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவசரமாகக் கீழே இறங்கினான்.

''என்ன சொக்கநாதா?'' என்றான் கிருஷ்ணன்.

''நான் நினைத்தது மாதிரியே அழகப்பநாயக்கன் நம்மைத் தொடர்ந்து வந்து கொண்டுதான் இருக்கிறான்?''

''இப்பொழுது என்ன செய்வது?''

''தஞ்சாவூர் செல்லும் வரையில் அவன் பின் தொடர்ந்தே வரட்டும். அங்கு சென்ற பிறகு அவனை அகற்றும் வழியைச் சொல்கிறேன்.''

இருவரும் மறுபடியும் குதிரையில் ஏறித் தங்களது பயணத்தைத் தொடர்ந்தார்கள். தஞ்சாவூருக்குப் பத்துக்கல் தொலைவு இருக்கும்பொழுது இருள் சூழத் தொடங்கியது.

அருகில் இருந்த கிராமத்து எல்லையில் இருக்கும் சத்திரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். சத்திரத்துக் காவலன் ஆளுக்கொரு பொன் நாணயத்தை கட்டணமாகப் பெற்றுக் கொண்டு அவர்களை அங்கு தங்குவதற்கு அனுமதித்தான்.

சற்றுநேரம் கழித்து வயோதிக் வடிவத்தில் வெளுத்த தாடி மீசையுடன் அழகப்ப நாயக்கனும் அங்கு வந்து சேர்ந்தான். அங்கு ஏற்கனவே பத்துப் பேருக்கு மேல் தங்கி இருந்தனர்.

உணவு வேளை நெருங்கியபொழுது அங்கு தங்கி இருந்த அத்தனை பேருக்கும் மொத்தமாக உணவு பரிமா றப்பட்டது.

சொக்கநாதன் வேண்டும் என்றே அழகப்ப நாயக்கன் அருகில் சென்று அமர்ந்தான். வெங்கடகிருஷ்ணன் மறு புறம் உட்கார்ந்து கொண்டான். இருவரும் தனக்கு இருபுற மும் வந்து உட்கார்ந்ததைப் பார்த்து அழகப்பனின் கண்க ளில் மிரட்சி தட்டுப்பட்டது.

''பெரியவரே, தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்று தெரிந்து கொள்ளலாமா?'' என்று வினயமுடன் வினவினான் சொக்கநாதன்.

அதற்கு அழகப்பன் வாயைத் திறந்து பதில், சொல்லா மல் கையால் சைகை செய்தான்.

''ஓகோ, மவுன விரதம் அனுஷ்டிக்கிறீர்களா? மன் னிக்கவும். பார்த்தால் பெரிய மகான் மாதிரித் தோன்றுகிறீர் கள்! ம்றறும் துறந்த முனிபுங்கவர் என்பது தங்கள் முகத்திலிருந்து ஒளிவிடும் தேஜஸ் பறை சாற்றுகிறது. எங்களை ஆசீர்வதியுங்கள்'' என்று கும்பிட்டான்.

அழகப்பன் கையை உயர்த்தி ஆசீர்வதித்தான். பக்கத் திலிருந்த வெங்கட கிருஷ்ணன் சிரிப்பை அடக்க படாத பாடு பட்டான்.

''தன்யனானேன் ஸ்வாமி! பயணம் எங்கே? காசிக்கா?'' என்றான் சொக்கநாதன் பவ்யமாக.

அதற்கு மறுபடியும் அழகப்பன் சைகை செய்தான்.

''ஓ, இமயமலைக்குச் செல்கிறீர்களா? நாளைக்கு நாங்கள் தஞ்சாவூர் செல்கிறோம். எங்களுடன் வருகிறீர் களா?''

'முடியாது' என்று தலையசைத்தான்.

''எவ்வளவு பெரிய ஞானி இப்படிச் சத்திரத்தில் வந்து தங்குவதா? எங்களுடன் தஞ்சாவூருக்கு வந்தால் உங்க ளுக்கு ராஜ உபசாரம் கிடைக்கும்.''

அழகப்பன் சைகையால் மறுத்துவிட்டு, அவசர அவச ரமாகச் சாப்பிட்டுவிட்டு, அந்த இடத்தை விட்டு எழுந்து சென்றான். சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் ஒரு வரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

நேரம் கடந்தவுடன் சத்திரத்திற்குள் ஒவ்வொருவரா கப் படுக்கத் தொடங்கினர். சொக்கநாதனும், வெங்கட

கிருஷ்ணனும் தன் பார்வையில் படுமாறு அழகப்பனும் படுத்துக் கொண்டான்.

''முத்து, சாமியாருக்கு மயக்க மருந்து கொடுத்து விட்டு நாம் இருவரும் இங்கிருந்து தப்பி விடுவோமா?'' என்று கிருஷ்ணன் சொக்கநாதன் காதில் வந்து கிசுகிசுத் தான்.

''வேண்டாம். மயக்கம் தெளிந்தவுடன் அவன் முத லில் மதுரைக்குத்தான் ஓடுவான். நாம் தஞ்சாவூர் சென்ற சேதி தெரிந்தால் என் தாய் மறுநாளே பதறிக் கொண்டு ஓடி வந்துவிடுவார். பிறகு நமது திட்டம் எல்லாம் பாழாகி விடும்.''

''அப்படியானால் இவனை அகற்ற வேறு என்ன வழி?''

''இவன் எந்தப் பக்கமும் நகர முடியாதபடி ஆணி அடித்தாற்போல் செய்துவிட வேண்டும். அதைத் தஞ்சாவூர் சென்ற பிறகு செய்வோம்.''

''எப்படி?''

''பொறுத்திருந்து பார்.''

சத்திரத்தில் படுத்திருந்தவர்களில் ஒரு சிலர் தூக்கத் தில் ஆழ்ந்து குறட்டைவிடத் தொடங்கினர். ஒரு சிலருக்கு இன்னமும் தூக்கம் வராமல் உட்கார்ந்தவாறு பேசிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் பேச்சு சொக்கநாதன் காதுகளில் விழத் தொடங்கியது.

''மதயானை அந்த இடத்தையே தூள்தூளாக்கி விட்ட தாம். யானை மேல் இருந்து இளவரசியம்மா அலறிக்

கொண்டே இருந்தார்கள். அவர்களைக் காப்பாற்ற ஒரு நாதி இல்லையாம். படையே நடுநடுங்கிப் போய் பயத்தில் ஓடி ஒளிந்து கொண்டார்களாம். அப்பொழுதுதான் அவன் ஓடிவந்து காப்பாற்றினானாம்.''

''அவன் யார் என்று தெரியவில்லையா?''

''அவன் யார் என்று யாருக்குமே தெரியவில்லையாம். அவனுடன் இன்னொருவனும் வந்திருந்தானாம். திடீர் என்று எங்கிருந்தோ வந்தார்களாம். இளவரசியம்மாவைக் காப்பாற்றினார்களாம். திடீர் என்று இருவருமே மறைந்து விட்டார்களாம்.''

''ஏன் அண்ணே ஒருவேளை இப்படி இருக்குமோ?''

''எப்படி?''

''கங்கை கொண்ட சோழபுரக் கோயிலை பூதம் காக்கிறதாச் சொல்றாங்க. அந்தப் பூதம்தான் அவன் உருவில் வந்திருக்குமோ?''

''இவன் யாரடா அதிபுத்திசாலி! பூதமாவது, பிசாசாவது!''

''ஏன் அண்ணே, நம்ம தளபதியார் மகன் அச்சுதப்பர் கூடவா இளவரசியைக் காப்பாற்ற முடியவில்லை.''

''அச்சுதப்பரா? அவர் யானையைப் பார்த்து ஓடிய ஓட்டத்தில் அந்த யானையே சிரித்து சிரித்து வயிறு வலி கண்டதாம்!''

''இல்லேண்ணே! அச்சுதப்பர் இளவரசியம்மாவைக் காப்பாற்றக் குதிரைல ஓடினாராம். குதிரையோட அவரை யானை தூக்கி வீசி விட்டதாம். அதனால மயக்கம் அடைந்து விட்டாராம். மயக்கம் தெளிந்து எழுவதற்குள்

இளவரசியம்மாவை அவன் காப்பாற்றி விட்டானாம். இல்லாவிட்டால் அச்சுதப்பர் தான் காப்பாற்றி இருப்பா ராம்.''

''அப்படி என்று உனக்கு யார் சொன்னது?''

''அச்சுதப்பரின் படைவீரன் ஒருவன் சொன்னான்.''

''பொய்யுரைத்திருக்கிறான் முட்டாள். அன்று அந்தச் சம்பவத்தை நேரில் இருந்து பார்த்த என் சிறிய தந்தை மகன், தஞ்சைப் படைக்கு எடுபிடி வேலை செய்யும் பணியில் இருக்கிறானே நஞ்சப்பன், அவன் கதை கதையா கக் கூறினான். அச்சுதப்பர் ஓடிய ஓட்டத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது அவனுக்கே சிரிப்பு வந்து புரை ஏறி விட்டது. இவன் வேறு புதுக்கவிதை சொல்றான். ஆளைப் பாரு!''

''அது இருக்கட்டும் அண்ணே. நம்ம இளவரசி அம் மாவைக் காப்பாற்றிய அந்த வீரன் யார் என்று இதுவரை தெரியவில்லையா?''

''தெரியவில்லையாம். ஒருவேளை திருடனாக இருப் பானோ என்று அரசர் அபிப்பிராயப்படுகிறாராம். யானை யில் இருந்து இளவரசியைக் காப்பாற்றிய பிறகு அவர் அணிந்திருந்த அணிகலன்களைத் திருட எண்ணி இருக்க லாம். அதனால்தான் படையைப் பார்த்தவுடன் பயந்து போய் ஓடிவிட்டார்கள் என்று அரசர் நினைக்கிறாராம்.''

''மயக்கம் தெளிந்த இளவரசி அம்மாவிடம் அந்த வீரன் ஏதாவது பேசினானா?''

''எதுவுமே பேசவில்லை' என்று இளவரசியார் சொல்லி இருக்கிறார்.''

''அந்த வீரனைத் தேடிக் கண்டுபிடிக்கும் பொறுப்பை அச்சுதப்பரிடம் ஒப்படைத்திருக்கிறாரே அரசர்.''

''ஆமாம். அவன் நல்லவனாக இருந்தால் தகுந்த சன்மானம் அளிப்பாராம். திருடனாக இருந்தால் சிறையில் தள்ளப் போவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.''

''அச்சுதப்பர் கெட்டிக்காரர். அவனைக் கண்டுபிடிக் காமல் விடவே மாட்டார். நாலாபுறமும் ஆட்களை அனுப் பித் தேடச் சொல்லி இருக்கிறார்களாம். பிடிக்கட்டும். நாமும் சென்று பார்க்கலாம்.''

இந்த உரையாடல் முழுவதையும் கேட்டுக் கொண்டி ருந்த சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

அழகப்ப நாயக்கன் தூங்காமல் அவர்கள் இருவரை யும் ஓரக்கண்ணால் பார்த்தவாறு படுத்திருந்தான்.

உதயசூரியன் உம்பர்வானில் உற்சாகமாக எழும் பொழுது சத்திரத்தில் படுத்திருந்த சொக்கநாதன் கண் விழித்தான். தூரத்தில் அழகப்ப நாயக்கன் படுத்துக் கிடந்த இடத்தை ஏறிட்டுப் பார்த்தான். அந்த இடம் காலியாக இருந்தது.

தனக்குள் சிரித்தவாறு, வெங்கடகிருஷ்ணனை உலுப் பினான்.

''விடிந்து வெகுநேரம் ஆகிவிட்டதா முத்து?'' என்ற வன் கண்களைக் கசக்கிக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, ''எங்கே நமது ஞானியாரைக் காண வில்லை'' என்றான்.

''ஞானியார் அந்தர் தியானம் ஆகிவிட்டார். நாம் ஞ்சை செல்லும்பொழுது வேறு உருவில் வருவார்'' ன்றவாறு சிரித்தான்.

சற்று நேரத்தில் சத்திரத்தை விட்டு இருவரும் கிளம்பி ார்கள். தஞ்சை செல்லும் பாதையில் இருவரது புரவிக 5ம் விரைந்தன. அழகப்ப நாயக்கன் மறைவாக அவர் ளைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தான்.

தஞ்சாவூரை நெருங்கியதும் இருவரும் தங்கள் புரவி ளை மறைவானதோர் இடத்தில் நிறுத்திவிட்டு, மாறு வடம் புனையத் தொடங்கினர்.

சொக்கநாதன் தலையில் பெரிய முண்டாசும், தோளில் ந துணிப் பையும், மார்பில் பலவண்ணத் துணிகள் ர்த்துத் தைக்கப்பட்ட ஆடையையும் அணிந்து ஒரு சிறிய டுகுடுப்பையைக் கையில் எடுத்துக் கொண்டான்.

வெங்கடகிருஷ்ணன் தனது தலைமுடியைப் பெரிய காண்டையாகப் போட்டுக் கொண்டு முறுக்கு மீசை ன்றை உதட்டில் ஒட்ட வைத்துக் கொண்டான். வெற்று ர்பில் காயம் ஏற்பட்டதைப் போல் மூலிகைச் சாற்றைப் சிக் கொண்டான்.

ஒரு கையில் சாட்டையையும், மற்றொரு கையில் ரிய உடுக்கை ஒன்றையும் எடுத்துக் கொண்டான்.

இருவரும் தஞ்சாவூருக்குள் நுழைந்தனர். இருவரும் நவருக்கொருவர் பேசாமல், சற்று இடைவெளிவிட்டு ாக்கநாதன் முன் நடக்க வெங்கடகிருஷ்ணன் தொடர்ந் ன்.

தஞ்சாவூருக்குள் நாலைந்து தெருக்களில் நுழைந்து, ாக்கநாதன் குடுகுடுப்பையை ஆட்டி ஜோதிடம்

சொல்லி யாசகம் கேட்டான். வெங்கடகிருஷ்ணன் உடுக் கையைத் தட்டி கையில் இருந்த சாட்டையால் தன்னைத் தானே அடித்துக் கொண்டு வீடு வீடாகச் சென்று பிச்சைக்கு இறைஞ்சினான்.

இரண்டு தெருக்கள் கடந்ததும் வெங்கடகிருஷ்ணன் மெதுவாகச் சொக்கநாதன் அருகில் வந்து வேறு பக்கமாகப் பார்த்தபடி கிசுகிசுப்பாகச் சொன்னான்.

''முத்து யாரோ ஒரு பிச்சைக்காரன் நம்மை விடாமல் தொடர்ந்து கொண்டேயிருக்கிறான்.''

''நானும் கவனித்தேன்.''

''அழகப்ப நாயக்கனா?''

''வேறு யாராக இருக்க முடியும்?''

''இப்பொழுது என்ன செய்வது?''

''இப்படியே நேராகச் சென்றால் ஒரு குளம் வரும். அதன் கிழக்குக் கரையில் உள்ள ஆலமரத்தின் அடியில் உட்கார். நானும் வந்து விடுகிறேன். பிறகு சொல்கிறேன்.''

வெங்கடகிருஷ்ணன் அவன் சொன்ன மாதிரியே உடனே வேகமாக நடக்கத் தொடங்கினான். அவன் சென்ற சிறிது நேரம் கழித்த பிறகே சொக்கநாதன் குடுகுடுப் பையை ஆட்டி நாலைந்து வீடுகளுக்கு ஜோதிடம் உரைத்து விட்டு, சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு குளத்தை நோக்கி விரைந்தான்.

இருவ்ரும் ஆலமரத்தனடியில் வந்து உட்கார்ந்தார் கள். அதனைத் தூரத்தில் இருந்த புதரில் இருந்தவாறு அழகப்பன் பார்த்துக் கொண்டிருந்தான்.

சொக்கநாதன் தன் திட்டத்தை விவரித்தான். வெங்கட கிருஷ்ணன் தலையை ஆட்டினான். பிறகு இருவரும் கிளம்பி மறுபடியும் ஊருக்குள் வந்தனர். அழகப்பனும் பின் தொடர்ந்தான்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு எதிரில் இருந்த மைதானத்தில் நுழைந்ததும், வெங்கடகிருஷ்ணன் உடுக்கை அடித்து அலற ஆரம்பித்தான்.

''அம்மாமார்களே, அய்யாமார்களே, சிறுவன்மார் களே, சிறுமிமார்களே, கிழவன்மார்களே, கிழவிமார் களே, ஆண்டவன் எனக்கு அளித்த சக்தியைப் பார்க்க வாருங்கள்.''

மறுநிமிடமே கூட்டம் அவனைச் சூழ ஆரம்பித்தது. சொக்கநாதனும் அதனை வேடிக்கை பார்ப்பவன்போல் நின்று கொண்டான். அந்தக் கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு பிச்சைக்காரன் வேடத்திலிருந்த அழகப்பனும், சொக்கநாதன் தன் பார்வையில் படுமாறு நின்று கொண் டான்.

வெங்கடகிருஷ்ணன் சாட்டையால் தன் மார்பில் அடிக்க, மூலிகைச் சாறு நிறம் மாறி இரத்தம் போல் கொப்பளித்தது. கூட்டம் வியந்தது.

''இப்பொழுது பாருங்கள். இது வெறுங்கை'' கையை விரித்துக் காட்டி மறுபடியும் மூடிச் சுற்றினான். திறந்தான். உள்ளே இருந்து சிட்டுக்குருவி ஒன்று சிறகடித்துப் பறந் தது. கூட்டம் கைதட்டியது.

''ஐயாமார்களே இப்பொழுது இந்தப் பிச்சைக்கார னைப் பாருங்கள்'' என்று அழகப்ப நாயக்கன் முன்வந்து நின்றான். அழகப்பன் மிரட்சியுடன் அவனைப் பார்த்தான்.

''பிச்சைக்காரா ஆகாயத்தைப் பார். அதோ நாராயணன் கருட வாகனத்தில் பறந்து வருகிறார். அது உன் கண்களுக் குத் தெரிகிறதா?''

அழகப்பன் மட்டுமல்ல. கூட்டத்தினரே ஆகாயத் தைப் பார்த்தனர். 'ஒன்றும் தெரியவில்லை' என்று தலை யாட்டினான் அழகப்பன்.

''சரியான கூ முட்டையாக இருக்கிறாயே'' என்றவாறு அழகப்பனது தலையை லேசாக உலுக்கித் தனது கையை விரித்துக் காட்டினான். கைக்குள் ஒரு முட்டை காட்சி அளித்தது.

அப்பொழுதுதான் அழகப்பன், சொக்கநாதன் நின்றி ருந்த இடத்தை ஏறிட்டுப் பார்த்தான். சொக்கநாதனைக் காணவில்லை.

பதட்டத்துடன் கூட்டத்திற்கு வெளியே வந்து பார்த் தான். எங்கேயும் தட்டுப்படவில்லை. ஏமாற்றம் அவனுக் குள் எழ, மறுபடியும் கூட்டத்தினுள் புகுந்து பார்த்தான். இல்லவே இல்லை.

சொக்கநாதனைத் தவறவிட்டு விட்டோம். இனி வெங் கடகிருஷ்ணனையும் தவறவிட்டு விடக்கூடாது. எப்படி யும் நண்பன் இருக்கும் இடத்திற்கு மன்னன் திரும்பி வந்துதானே ஆகவேண்டும் என்ற நினைப்பில் கண் கொட் டாமல் வெங்கடகிருஷ்ணனைப் பார்த்துக் கொண்டிருந் தான்.

வெங்கடகிருஷ்ணன் சித்து விளையாட்டுக்களை முடித்துக் கொண்டு, கிடைத்த காசுகளைப் பொறுக்கிப் பையில் வைத்துக் கொண்டு, பெருவுடையார் கோயிலுக் கருகில் உள்ள மண்டபத்தில் உட்கார்ந்தான்.

அழகப்ப நாயக்கன் கோயில் வாசலில் பிச்சை எடுப்பவன் போல் சம்மணமிட்டு அமர்ந்து ஓரக்கண்ணால் வெங்கடகிருஷ்ணனின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

அதேநேரம் சொக்கநாதன் தஞ்சாவூர் எல்லையைத் தாண்டி இருக்கும் தென்னந்தோப்பிற்குள் நுழைந்தான்.

தோப்பிற்குள் தளவாயின் மகன் அச்சுதப்ப நாயக்கன் கள் குடித்துக் கொண்டிருக்கும் காட்சி தட்டுப்பட்டது.

சொக்கநாதனின் மூளை துரிதமாக வேலை செய்தது. அச்சுதப்பனை வைத்தே அழகப்பனை அகற்றத் திட்டம் ஒன்று அவனுக்குள் பிறந்தது.



# 55

சொக்கநாதன் தனது குடுகுடுப்பைக்காரன் வேடத்தைக் களைந்துவிட்டு, ஒரு சாதாரண வீரனைப் போலத் தன் உருவத்தினை மாற்றிக் கொள்ள ஆரம்பித்தான்.

முகம் முழுக்க தாடி, மீசை வைத்து, நெற்றிப் பாகத்தில் புடைப்பாக ஒரு கட்டி எழுந்ததுபோல் ஒன்றை ஒட்ட வைத்தான். தனது வேடத்தைக் கையகல ஆடி ஒன்றில் பார்த்துத் திருப்தி அடைந்தவனாக மாறுவேடப் பொருட்கள் அடங்கிய மூட்டையை ஒரு மரப்பொந்தில் மறைத்து வைத்துவிட்டு அச்சுதப்பன் இருக்கும் தென்னந்தோப்பிற்குள் நுழையத் தொடங்கினான்.

தோப்பின் ஒரு மூலையில் இருந்த குடிசையின் அருகே ஒரு முக்காலி போட்டு அச்சுதப்பன் அமர்ந்திருக்க, பக்கத்தில் இருந்த கள் நிறைந்த பானையில் இருந்து சிறு கலயத்தில் கள்ளினை முகர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தாள் செல்லத்தாய்.

அச்சுதப்பன் கண்களில் போதை ஏறத் தொடங்கியது. மீசையில் ஒட்டி இருந்த கள்ளைத் துடைத்தவாறு பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் செல்லத்தாயை ஆசையுடன் பார்த்தான்.

''செல்லத்தாயி, என் ஆசைக் கண்மணி! உன்னைப் பார்க்கப் பார்க்க எனக்குப் போதை ஏறுகிறதா, இல்லை நீ கொடுக்கும் கள்ளினால் போதை ஏறுகிறதா என்று புரியமாட்டேன் என்கிறது. இப்படி என் மடியில் உட் கார்ந்து உன் கையாலேயே கள் கலயத்தை எடுத்து என் வாயில் புகட்டு'' என்று கண்கள் சொருகி, தொடையைத் தட்டிக் காண்பித்தான்.

செல்லத்தாய் உடனே நாணம் அதிகமுற்றவளாக, கள் கலயத்தைக் கையில் ஏந்தியவளாக அச்சுதப்பன் மடிமீது உட்கார, அச்சுதப்பன் ஆசை பொங்க அவள் இடையை வளைத்துப் பிடித்தான். கையிலிருந்த கள் கலயத்தை அச்சதப்பன் வாயருகே கொண்டு போனாள் செல்லத்தாய்.

அச்சுதப்பன் அதை விலக்கிவிட்டு அவளைப் பார்த் துக் காமம் வழியச் சிரித்தவாறு. ''நான் சொன்ன கள் கலயம் இதுவல்ல கணணே! உன்னிடம் வேறு இரு கள் கலயங்கள் வைத்திருக்கிறாயே, அவற்றில் ஒன்றை உன் கையாலேயே எடுத்து என் வாயில் புகட்டு'' என்றவாறு அவள் கன்னத்தைப் பிடித்து நிமிண்டினான்.

செல்லத்தாய் இன்னும் அதிகம் நாணமுற்றவளாய்ச் சிணுங்க, அச்சுதப்பன் அவளைக் கெஞ்ச ஆரம்பிக்கும் பொழுது, சொக்கநாதன் அவர்கள் அருகில் வந்து நின்றான்.

''வணக்கம் படைத்தலைவர் பெருமானே!'' என்றான் பணிவாக.

செல்லத்தாய் அச்சுதப்பன் மடியில் இருந்து அவசர மாக எழ, அச்சுதப்பன் அவனைக் கோபத்துடன் முறைத் துப் பார்த்தான்.

''யாரடா நீ?''

''தங்கள் படைப்பிரிவைச் சேர்ந்த வீரன். நஞ்சப்பன் எனது பெயர்.''

''யாராக இருந்தாலும், இந்த இடத்தில் என்னை பார்க்க வரக்கூடாது என்று உங்களுக்கு எத்தனை முறை சொல்லி இருக்கிறேன்?'' என்றான் கோபம் பொங்க.

''அவசரமாக...''

''எத்தனை அவசரமாக இருந்தாலும் தோப்பின் வாசலில் இருந்துதான் அழைக்க வேண்டும். உள்ளே வரக் கூடாது என்று சொன்னதை மறந்துவிட்டாயா? வாசலில் காவல் இருந்தவர்கள் உன்னை எப்படி உள்ளே விட்டார்கள்? கூப்பிடு அவர்களை...''

''தஞ்சை அரசின் வருங்கால மன்னர் இந்த ஏழையிடம் சினம் கொள்ளக் கூடாது'' மிகப் பணிவாகச் சொன்னான் சொக்கநாதன்.

''என்ன... என்ன சொன்னே...''

''தஞ்சை அரசின் வருங்கால மன்னர் தாங்கள்தானே! நமது மன்னரின் மகள் சந்திரவதனா தேவியாரை மணக்கப் போகிறவர் தாங்கள்தானே! அதனால் வருங்கால மன்னரும் தாங்கள்தானே!''

இதைக் கேட்டவுடன் அச்சுதப்பன் மனம் குளிர்ந்து, சினம் சற்று அடங்கியது. சொக்கநாதன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

''உங்களைப் போன்ற அழகும், அறிவும், பண்பும், வீரமும் நிறைந்த ஒருவர் இம்மண்ணுக்கு மன்னராக வருவதில் என் போன்றவர்களுக்கு எத்தனை மகிழ்ச்சி தெரியுமா மகாராஜா! கங்கை கொண்ட சோழபுரத்தில் நீங்கள் காட்டிய வீரத்தினைப் பார்த்து நான் எப்படிப் பிரமித்துப் போயிருந்தேன்!''

''கங்கை கொண்ட சோழபுரத்திற்கு நீ வந்திருந் தாயா?'' என்று கனிவுடன் கேட்டான் அச்சுதப்பன்.

''வந்திருந்தேனா என்றா கேட்டீர்கள் மகாராஜா? இள வரசியார் ஏறி இருந்த மதங்கொண்ட யானையைக் குதிரை யில் இருந்து வழிமறித்து நீங்கள் தாக்க முயற்சிக்கும்போது உங்கள் பக்கத்தில் நின்று கொண்டிருந்து 'எவ்வளவு துணிச்சலாக மத யானையை எதிர்கொள்கிறாரே! இவ ருக்கு இணையான வீரர் இந்த நாட்டிலேயே கிடையாது' என்று பாராட்டினேனே, நீங்கள் கவனிக்கவில்லையா?''

''அப்படியா! ஞாபகம் இல்லை! பார்த்தாயா செல்லத் தாயி'' என்று போதையுடன் அவளைப் பார்த்தான்.

''குதிரை மட்டும் உங்களைக் கீழேத் தள்ளி இருக்கா விட்டால் அன்று நீங்கள்தான் இளவரசியைக் காப்பாற்றி இருப்பீர்கள் என்று நான் எத்தனை பேரிடம் சொல்லி உங்கள் வீரத்தைப் புகழ்ந்து போற்றிக் கொண்டு வருகி றேன் என்பதைத் தாங்கள் அறிய மாட்டீர்கள் மன்னவா!''

''உம்... உம்...'' என்று அச்சுதப்பன் மீசையைக் கர்வத்துடன் திருகிக் கொண்டு, ''சரி. என்ன காரியமாக என்னைத் தேடி வந்தாய்?'' என்றான்.

''யாரோ இரண்டு நாடோடிப் பயல்கள். இளவரசியா ரின் ஆபரணங்களைத் திருடும் நோக்கத்தில் அவரைக் காப்பாற்றி இருந்தார்கள். நீங்கள் மட்டும் தக்க சமயத்தில் சென்றிருக்காவிட்டால்...''

''அது இருக்கட்டும். நீ வந்த விஷயத்தைச் சொல்?''

''அந்தக் கள்வர்களைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை மன்னர் தங்களிடம் ஒப்படைத்திருப்பதால் அவர்களை எங்கே கண்டாலும் பிடித்து வரும்படி தாங்கள் எங்களிடம் ஆணையிட்டீர்கள்...''

''இப்பொழுது அதற்கு என்ன?'' என்றான் அச்சுதப் பன் அவசரமாக.

''அந்தக் கள்வரில் ஒருவன் சாயலில் இன்று ஒரு பிச்சைக்காரனைப் பார்த்தேன். அதைச் சொல்வதற்காகத் தான் தங்களைத் தேடி ஓடோடி வந்தேன்.''

''மடையா சொல்வதற்கா ஓடி வந்தாய்? கையோடு பிடித்துக் கொண்டு வருவதற்கென்ன?''

''அவன் சாயலில் இருக்கிறான். ஆனால் பிச்சைக் காரன். ஒரே ஒருவன்தான் இருக்கிறான். அதனால் சந்தே கம். தாங்கள் வந்து நேரில் பார்த்துவிட்டால் நல்லது என்று நினைக்கிறேன்.''

''பிச்சைக்காரன்போல் வேடமிட்டுக் கோயிலைக் கொள்ளையடிக்க வந்திருப்பான் சீக்கிரம் வா.''

அச்சுதப்பன் உடனே எழுந்து வாசலில் இருந்த காவ லர்களையும் வழியில் சில காவலர்களையும் அழைத்துக் கொண்டு சொக்கநாதனுடன் சேர்ந்து பெருவுடையார் கோயிலுக்கருகே வந்தார்கள்.

கோயில் வாசலில் உட்கார்ந்தவாறு உள்ளிருக்கும் மண்டபத்தில் உட்கார்ந்திருந்த வெங்கடகிருஷ்ணனை நோட்டமிட்டவாறு இருந்ததால் ஒற்றர் தலைவன் அழ கப்ப நாயக்கன் தூரத்தில் வரும் இவர்களைக் கவனிக்க வில்லை.

சொக்கநாதன் தூரத்தில் இருந்தவாறு சுட்டிக்காட்டி னான்.

''அவன்தானா?'' என்று ஐயத்துடன் கேட்டான் அச்சு தப்பன்.

''அவனேதான் மகாராஜா! தங்களுக்கு அடையாளம் தெரியவில்லையா? நிச்சயம் அவன்தான்! தாடியைப் பிடித்து இழுங்கள் தெரிந்துவிடும்.''

உடனே அச்சுதப்பன் வீரர்கள் பின் தொடர வேகமாக நடந்து அழகப்ப நாயக்கன் அருகில் வந்தான்.

''டேய் எழுந்திரு'' அதட்டலாகச் சொன்னான்.

திடீரென்று தன் எதிரே தஞ்சை வீரர்கள் ஆயுதங்களுடன் வந்ததும் திகைத்துப்போய் எழுந்து நின்றான் அழகப்பன். அதேநேரம் மண்டபத்திலிருந்து இவர்களைப் பார்த்தவுடன் ஒரு தூணுக்கருகில் மறைந்த வெங்கடகிருஷ்ணனைப் பார்த்து மற்றவர்கள் அறியாமல் சைகை செய்தான் சொக்கநாதன். மறுவிநாடியே அந்த இடத்தில் இருந்து நழுவிவிட்டான் கிருஷ்ணன்.

''யாரடா நீ?'' என்றான் அச்சுதப்பன்.

''நான்... நான்... பிச்சைக்காரன்.''

''பொய் சொல்கிறாயா? நீ தானடா அன்று கங்கை கொண்ட சோழபுரத்தில் இளவரசியிடம் திருட முயன்றது? இப்பொழுது கோயிலில் என்ன திருடலாம் என்று நோட்டம் பார்த்துக் கொண்டிருக்கிறாயா?''

''இல்லை ஐயா! நான் மெய்யாகவே பிச்சைக்காரன் தான்.''

அழகப்ப நாயக்கன் இதைச் சொல்லி முடிப்பதற்குள் அச்சுதப்பன் அவன் தாடியைப் பிடித்து இழுக்க, அது கையோடு வந்துவிட்டது. அழகப்ப நாயக்கன் மிரட்சி அடைய ஆரம்பித்தான்.

அச்சுதப்பனுக்கு இவன் கங்கை கொண்ட சோழபுரத்

தில் பார்த்த ஆள் இல்லை என்பது புரிந்தது. இருந்தாலும் எதற்காக வேறு வேடம் புனைந்திருக்கிறான் என்ற ஐயத்தில் அவனுடைய உடைமைகளைச் சோதனை செய்யச் சொன்னான்.

சொக்கநாதன் மிகக் கவனமாக அழகப்பன் பார்வையில் பட்டுவிடாது. வீரர்களின் பின்னால் நின்று கொண்டு நடப்பவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தான். அழகப்ப நாயக்கன் வைத்திருந்த மூட்டையை அவிழ்த்துப் பார்த்ததில், அதில் சில ஓலைத் துணுக்குகளும், மதுரை இலச்சினையும் கிடைத்தது.

அச்சுதப்பன் கோபத்துடன் அழகப்பன் கன்னத்தில் அறைந்தான்.

''நீ மதுரை ஒற்றன்தானே? எதற்காகடா மாறுவேடம் புனைந்து இங்கே சுற்றிக் கொண்டிருக்கிறாய்?''

''எனக்கு ஒன்றும் தெரியாது! நான் பிச்சைக்காரன்தான் ஐயா.''

''இப்படிக் கேட்டால் இவன் உண்மையைச் சொல்ல மாட்டான். இவனை இழுத்து வாருங்கள் நம் அரண்மனைக்கு.''

உடனே அழகப்பன் கரத்தைப் பின்பக்கமாக வளைத்துப் பிடித்து இறுக்கமாகக் கட்டினார்கள். அச்சுதப்பன் கர்வத்துடன் முன்னே நடக்க அழகப்பனைப் பிடித்தவாறு வீரர்கள் பின் தொடர்ந்தனர்.

அவர்களுக்குப் பின்னால் சொக்கநாதனும் நடக்க ஆரம்பித்தான். சற்று நேரம் நடப்பதற்குள் வெங்கடகிருஷ்ணனும் தனது உருவத்தினை ஒரு சாதாரண வீரனைப்போல் மாற்றிக் கொண்டு சொக்கநாதனுடன் சேர்ந்து கொண்டான்.

## சந்திரவதனா

தஞ்சை அரண்மனையின் தர்பார் மண்டபத்தில் அரசன் விஜயராகவ நாயக்கன் அமர்ந்திருக்க, அவனருகில் தள வாய் ரங்கப்ப நாயக்கன் பணிவுடன் நின்று கொண்டிருந் தான்.

அழகப்ப நாயக்கனிடமிருந்து கைப்பற்றப்பட்ட வெற்று ஓலைத் துணுக்குகள், ஓர் எழுத்தாணி, சிறிய குறுவாள், ஏதோ ஒரு சூரணம் நிரம்பிய சிறு குப்பி, மதுரையின் ராஜ இலச்சனை இவற்றை மன்னன் வாங்கிப் பார்த்தான். பிறகு கோபம் பொங்க அழகப்ப நாயக்கனைக் கேட்டான்.

''இங்கு வேவு பார்ப்பதற்காக அந்த மதுரைச் சிறுவன் சொக்கநாதன் உன்னை இங்கு அனுப்பினானா? சொல்லடா!''

சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் அனைத்து வீரர்க்கும் பின்னால் நின்று கொண்டு நடப்பவற்றை மிக உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தனர்.

அழகப்ப நாயக்கன் கண்களில் கண்ணீர் பெருக் கெடுக்க தனது நடிப்புத் திறமையைக் காட்டத் தொடங்கி னான்.

''ஐயா! மகாராஜா! தர்மப்பிரபு. என்னை நம்புங்க சாமி, நான் பிச்சைக்காரன். அடுத்த வேளை சோற்றுக்கு வழியற்று அல்லாடும் ஏழை! தாங்கள் சொல்வது எதுவுமே எனக்குத் தெரியவும் இல்லை. என்னவென்று புரியவும் இல்லை.''

''நீ மதுரை ஒற்றன்தானே?''

''ஒட்டனா? நான் எதையும் ஒட்டவில்லையே?''

இதைக் கேட்டவுடன் தளவாய் ஓடிவந்து அவன் கன்னத்தில் அறைந்து, ''நடிக்கிறாயாடா? உண்மையைச் சொல்! இல்லாவிடில் உன்னை அணு அணுவாகச் சித்திர வதை செய்து கொன்று விடுவோம். என்ன காரணத்திற்காக உங்கள் மன்னன் உன்னை இங்கு அனுப்பினான்?'' என்று உறுமினான்.

''ஐயா, தயவு செய்து என்னை நம்புங்கள். நான் மெய்யாகவே பிச்சைக்காரன்தான் சாமி'' கை கூப்பி இறைஞ்சினான்.

''பிறகு எதற்கடா இப்படித் தாடி மீசை ஒட்ட வைத்து மாறுவேடம் புனைந்திருக்கிறாய்?''

''வயதானவன்போல் தோற்றமளித்தால் மக்களுக்கு இரக்கம் பிறந்து பிச்சை இடுவார்களே என்ற நோக்கம்தான் சாமி.''

''இந்த ஓலைத் துணுக்குகள், எழுத்தாணி, மதுரை முத்திரை, குறுவாள் இவற்றையும் உனக்குள் மறைத்து வைத்துக் கொண்டு எவ்வளவு சாமர்த்தியமாகப் பொய்யு ரைக்கிறாய்!''

அழகப்பன் கண்ணீர் மல்கி, தஞ்சை மன்னன் எதிரில் தரை தொட்டு வணங்கி, அழுதவாறு கூறினான்.

''நேற்றிரவு சத்திரத்தில் என்னருகே ஒருவன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். அவனிடமிருந்த மூட்டை அது. அதற்குள் பணம் ஏதாவது வைத்திருப்பான் என்ற ஆசை யில் திருடிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்.''

''இவன் இப்படிக் கேட்டால் சொல்லமாட்டான். இவனை இழுத்துச் சென்று சிறையில் அடைத்துச் சித்திர வதை செய்யுங்கள். தானாக உண்மையை உரைத்துவிடு வான்.''

மன்னன் கட்டளையிட்ட மறுநிமிடமே அழகப்ப நாயக்கனை இழுத்துக் கொண்டு வீரர்கள் நகர்ந்தனர்.

உடனே வெங்கடகிருஷ்ணன், சொக்கநாதனை நெருங்கி அவன் காதோடு கிசுகிசுத்தான்.

''என்ன முத்து நீயே இவனைச் சிறைச்சாலைக்கு அனுப்ப முயற்சி செய்துவிட்டாயே! இப்பொழுது என்ன செய்வது?''

''கவலைப்படாதே! இவனை இங்குள்ள சிறையில் அடைக்கச் செய்ய வேண்டும் என்பதுதான் எனது திட்டம். இனி அவன் நம்மைப் பின் தொடரவும் முடியாது. நம்மைப் பற்றிய செய்திகளை என் அம்மாவிற்கு அனுப்பவும் முடியாது.''

''அதற்காக நமது ஆளை எதிரியின் சிறைக்கு அனுப்புவதா?''

''பயப்படாதே நமது வேலை முடிந்து இங்கிருந்து கிளம்பும்பொழுது, இவனையும் விடுவித்துச் சென்றுவிடலாம்.''

அப்பொழுது மன்னன் விஜயராகவ நாயக்கன் தளவாயைக் கவலையுடன் பார்த்து, ''ரங்கப்பா, இந்த ஒற்றனை அந்த மதுரைச் சிறுவன் எதற்காக அனுப்பி இருப்பான்? ஒருவேளை படையெடுத்துவரும் எணணமாக இருக்குமோ?'' என்றான் கவலையுடன்.

''அவ்வளவு துணிச்சல் அந்தக் கோழைக்கு ஏது? வெறுமனே நாட்டு நடப்பு பற்றி அவ்வப்போது அறிவிக்கும் நோக்கத்தில் அனுப்பப்பட்டு இருக்கலாம். இவனை சிறையில் அடைத்துவிட்டதால், அதைப் பற்றிய பயமும்

இனி இல்லை. என் மகன் அச்சுதப்பன் எவ்வளவு சாமர்த்தியமாக ஒற்றனைப் பிடித்து விட்டான் பார்த்தீர்களா?'' என்றான் பெருமையுடன்.

''உண்மைதான்! அச்சுதப்பா இவனை எப்படிப் பிடித்தாய்? இவன் ஒற்றன் என்பதை எப்படிக் கண்டுகொண்டாய்?'' என்றான் மன்னன்.

அச்சுதப்பன் உடனே நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு, முகத்தில் பூரிப்பும், கண்களில் பெருமையும் பொங்க பதில் சொல்ல வாய் திறந்த அதே சமயம், சொக்கநாதன் முண்டியடித்து முன்னே வந்து மன்னனைப் பார்த்துச் சொன்னான்.

''அதைப்பற்றி நான் சொல்கிறேன் மன்னா.''

இதைக் கேட்டவுடன் பதறிப் போனான் அச்சுதப்பன். எங்கே இவன் உண்மையைச் சொல்லிவிட்டால் இப்பொழுது கிடைத்த நற்பெயரை இவன் தட்டிச் செல்வது மட்டுமின்றி, தனக்கு ஏதாவது திட்டுக் கிடைக்குமோ என்று அவனுக்குள் உதறல் எடுத்தது.

''ஊஹூம்! நீ சொல்லாதே! நீ சொல்லக்கூடாது! நான்தான் சொல்ல வேண்டும்'' என்றான் அச்சுதப்பன் அவசரமாக.

''இல்லை நானே சொல்கிறேன்'' என்றான் சொக்கநாதன்.

''நீ யாரடா?'' என்றான் மன்னன் அவனைப் பார்த்து.

''அச்சுதப்பரின் படைப்பிரிவில் பணியாற்றும் சாதாரண ஒரு வீரன். பெயர் நஞ்சப்பன்.''

அதேநேரம் தளவாய் ரங்கப்ப நாயக்கனுக்கும் மனதில் லேசான உறுத்தல் தோன்றியது. இளவரசியை மதயானையிடமிருந்து காப்பாற்றியதில் அச்சுதப்பன் பொய்யுரைத்தமாதிரி இதிலும் ஏதாவது இருக்குமோ! தேவையில்லாது முன்னே வரும் இவன் உண்மையைக் கூறிவிட்டால், அச்சுதப்பனுக்கு அவப்பெயர் ஏற்பட்டுவிடுமோ என்று அச்சமாகவும் இருந்தது.

''நீ வாயை மூடு! படைத்தலைவனை முந்திக் கொண்டு சபை நடுவே மன்னரிடம் பேச உனக்கு என்னத் துணிச்சல்?'' என்றான் தளவாய் கோபத்தோடு.

''ரங்கப்பா, கோபப்படாதே! உன் மகனின் திறமையை உன் மகன் வாயில் இருந்து கேட்பதைவிட, அடுத்தவர் வாயில் இருந்து கேட்கும் பொழுதுதான் அதிக மதிப்புப் பெறும்! வீரனே என்ன நடந்தது என்று விரிவாகச் சொல்'' என்றான் மன்னன் விஜயராகவ நாயக்கன்.

சொக்கநாதன் மன்னனை ஏறிட்டுப் பார்த்தான்.



# 56

எழுபது வயதைக் கடந்துவிட்ட பின்னரும், கம்பீரமாக அரியணையில் வீற்றிருக்கும் தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனை ஒருமுறை தலை முதல் கால்வரை உற்றுப் பார்த்தான் சொக்கநாதன்.

மன்னனோ சொக்கநாதனைச் சற்றுக் கனிவுடன் பார்த்து, ''வீரனே, ஏன் தயங்கி நிற்கிறாய்? தளவாய் சொன்னதைக் கேட்டு மிரண்டு விட்டாயா? பயப்படாமல் சொல்! இந்த ஒற்றனை அச்சுதப்பன் எப்படிப் பிடித்தான்?'' என்றான்.

அச்சுதப்பனுக்கு வயிறு கலங்கத் தொடங்கியது. இந்த வீரன் உண்மையைச் சொல்லிவிட்டால், நற்பெயர் இவனுக்கல்லவா சென்று சேர்ந்துவிடும் என்று உள்ளுக்குள் பதட்டமடைந்து மற்றவர்கள் பார்க்காதவாறு சொக்கநாதனைப் பார்த்து 'சொல்லாதே' என்று கண்களால் சைகை செய்தான்.

சொக்கநாதன் அவனைச் சட்டை செய்யாதவாறு மன்னனைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினான். ''மன்னா! நானும் நமது படைத் தலைவர் அச்சுதப்பரும் காலையில் அந்தப்புரம் அமைந்திருக்கும் இடம் வழியாக வந்து

கொண்டிருந்தோம். அச்சுதப்பருக்கு எப்பொழுதுமே அந்தப்புரக் காவல் மீதுதான் அதிகக் கண்ணோட்டம் இருக்கும். இளவரசியாருக்கு எந்தவித ஆபத்தும் வந்துவிடக் கூடாது என்பதில்தான் அவருக்கு கண்ணும் கருத்தும் இருக்கும்.''

அச்சுதப்பன் இதைக் கேட்டு அவனை மலைப்புடன் பார்த்தான். என்ன இது புதிதாகக் கதைச் சொல்கிறானே!

சொக்கநாதன் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தான். ''அப்பொழுது இந்தப் பிச்சைக்காரன் ஒரு திருப்பத்தில் நின்று கொண்டு யாரிடமோ பிச்சை கேட்பது மாதிரி அந்தப்புரத்தையே நோட்டமிட்டுக் கொண்டிருந்தான். அது என் கண்ணில்கூடப் படவில்லை. நமது படைத் தலைவர் எப்படியோ மோப்பம் பிடித்துவிட்டார்.''

''அப்புறம்?'' என்றான் மன்னன் ஆவலுடன்.

''என்னைப் பார்த்து 'நஞ்சப்பா இவனைப் பார்த்தால் பிச்சைக்காரன் போல் தோன்றவில்லை. இவன் ஒற்றனாக இருப்பானோ என்று சந்தேகமாக இருக்கிறது' என்றார். 'எனக்கு அப்படித் தோன்றவில்லையே' என்றேன். 'நன்றாகப் பார். இவன் பிச்சை கேட்பதைவிட அந்தப்புரத்தைக் கவனிப்பதில்தான் கண்களைச் செலுத்துகிறான்' என்றார். அவர் சொன்ன பிறகுதான் எனக்கும் அப்படித் தெரிந்தாலும், நான் முற்றிலும் நம்பவில்லை.''

''பிறகு என்ன நடந்தது?'' என்றான் தளவாய்.

''நாங்கள் மெதுவாய் அவனருகே நெருங்கினோம். எங்களைப் பார்த்தவுடன் அவசர அவசரமாக நகர்ந்து செல்ல ஆரம்பித்தான். 'நஞ்சப்பா இப்பொழுது சந்தேகமின்றித் தெரிந்துவிட்டது. இவன் ஓர் ஒற்றனேதான்''

என்றார். எனக்கு அப்பொழுதும் விளங்கவில்லை. அதற்கு அவர் 'அவன் நம்மைப் பார்த்தவுடன் அவன் கண்களில் ஒரு பரபரப்புத் தென்பட்டதைக் கவனித்தாயா? பக்கத்து வீட்டில் பிச்சைப் போடுவதற்காக வாசலில் வந்து நிற்கும் பெண்மணியைக்கூடக் கவனிக்காதவாறு அவன் நகர்வதைப் பார். அவன் நடையில் வேகமில்லாததுபோல் காட்டி நம் பார்வையில் இருந்து மறையப் பார்க்கிறான். அது மட்டுமல்ல அவன் முகத்தைக் கவனித்தாயா?' என்றார்.''

''தயங்காதே வீரனே! தொடர்ந்து சொல்'' என்றான் தளவாய். அவன் முகத்தில் மலர்ச்சி தென்பட ஆரம்பித்தது.

''அவர் சொன்ன பிறகுதான் ஒவ்வொன்றும் உண்மை என்று எனக்குப் புலப்பட ஆரம்பித்தது. அதிலும் அந்தப் பிச்சைக்காரன் முகத்தை அவ்வளவு நேரம் உற்றுப் பார்த்திருந்தபோதிலும் அவர் மனதில் தோன்றியது எனக்கு புலப்படாமல் போய்விட்டது.''

''அப்படி என்ன அவன் முகத்தில் தெரிந்தது?'' என்றான் மன்னன்.

''நானும் இதே கேள்வியைத்தான் அச்சுதப்பரிடம் கேட்டேன். அதற்கு அவர் 'இந்தப் பிச்சைக்காரன் உருவத்தையும் உடல் அமைப்பையும் பார்க்கும்பொழுது இவன் வயது முப்பது முதல் முப்பத்தைந்து வரை இருக்கலாம். ஆனால், அவன் முகத்தில் வளர்ந்திருக்கும் வெளுத்த தாடி மீசையையும், வெண்பட்டுப் போல் கலைந்திருக்கும் நரை படர்ந்த தலை முடியையும் பார்த்தால் இவன் வயது எழுபதுக்கு மேலிருக்கும் என்று எவரும் உறுதியாகச் சொல்வார்கள். அதுமட்டுமல்ல அவன் முகத்தில் காதிற்கும், கழுத்திற்கும் இடைப்பட்டப் பகுதியைப் பார்த்

தாயா? கன்னத்தில் இருக்கும் தாடி ஓர் ஒழுங்கு வரிசையில் வந்திருக்கிறதே ஒழிய கழுத்துப் பகுதியில் ஒரு முடி கூடத் தென்படவில்லை. இதிலிருந்து அவன் தாடி, மீசை ஒட்ட வைத்திருக்கிறான் என்பது புரியவில்லையா?' என்றார்.

அடேயப்பா! அற்புதம் அச்சுதப்பா!'' என்று மன்னன் வியந்தான்.

அச்சுதப்பனுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. 'இவன் பொய் பேசுவதில் என்னைவிட சாமர்த்தியசாலி யாக இருக்கிறானே' என்று பிரமிப்புடன் சொக்கநாதனைப் பார்த்தான்.

''சொல் நஞ்சப்பா! அப்புறம் என்ன நடந்தது?'' என்றான் தளவாய்.

''தலைவர் சொன்ன பிறகுதான் மந்தமான என் மூளைக்கும் புரிந்தது. இருவரும் அந்தப் பிச்சைக்காரனை அவனறியாமல் பின் தொடர்ந்தோம். அவன் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே வேகமாக நடந்து பெரிய கோயில் வாசலுக்கருகே வந்து உட்கார்ந்தான். நாங்கள் மறைந்தி ருந்து அவனையே. கவனித்துக் கொண்டிருந்தோம். சற்று நேரம் கழித்து அவன் செய்த செயல் எங்கள் சந்தேகத்தை அறவே தீர்த்துவிட்டது.''

''அப்படி என்ன செய்தான்?'' என்றான் மன்னன்.

''சுற்று முற்றும் பார்த்துவிட்டு மூட்டையில் இருந்த ஓர் ஓலையையும் எழுத்தாணியையும் எடுத்து எதையோ எழுத ஆரம்பித்தான். அடுத்த நிமிடமே நமது அச்சுதப்பர் புலிபோல அவன் மீது பாய்ந்து அமுக்கினார். அவனும் சாதாரணமானவன் இல்லை என்று அப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது. நல்ல திடகாத்திரமாக, பலசாலியாக

இருந்ததால் நமது படைத்தலைவருடன் ஆவேசமாக மல்லுக்கட்டினான். உடனே உதவிக்குச் சென்ற என்னைத் தடுத்துவிட்டு, அச்சுதப்பர் ஒருவரே அவனுடன் சண்டையிட்டு அவனை நகர முடியாமல் அழுத்திப் பிடித்தார். அவர் சண்டையிட்ட விதத்தைக் கண்டு நானே பிரமித்துப் போய்விட்டேன் மன்னவா! அதற்குப் பிறகுதான் மற்றக் காவலர்களை அழைத்து வந்து இவனைப் பிடித்துக் கட்டி இங்கு இழுத்து வந்தோம்.''

''அச்சுதப்பா, உன் புத்தி கூர்மை என்னை வியக்க வைக்கிறது. நீ செய்தது மெச்சத் தகுந்த செயல்! உன்னை பாராட்டுகிறேன்'' என்றான் மன்னன்.

இளவரசிக்கு பாதுகாப்பு அளிப்பதில் என் மைந்தன் எவ்வளவு கவனமாக இருக்கிறான் பார்த்தீர்களா மன்னா?'' என்றான் தளவாய்.

''உண்மைதான். இனியும் அப்படியே இரு அச்சுதப்பா! அந்தப்புரக் காவல் மீது இப்படித்தான் எப்பொழுதும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்.''

''கவலையே படாதீர்கள் மன்னவா! என்னை அறியாமல் ஓர் ஈ, காக்கைகூட அந்தப்புரத்து மதிற் சுவரின் அருகேகூட நெருங்க முடியாது. பார்த்தீர்களா. அந்தப்புரத்தின் திட்டிவாசற் சாவிகள் எப்பொழுதும் என் இடுப்பில்தான் இருக்கும். என்னை மீறி எவரும் நுழைய முடியாது'' என்று தன் இடுப்பில் சொருகி இருக்கும் சாவிக் கொத்துக்களைத் தொட்டுக்காட்டி, தலைநிமிர்ந்து கர்வமாகச் சொன்னான் அச்சுதப்பன்.

சொக்கநாதன் உடனே அந்தத் திறவுகோல்களை உற்று கவனித்து, பக்கத்தில் நின்று கொண்டிருந்த வெங்கட கிருஷ்ணனைப் பார்த்து கண்களால் சைகை செய்தான்.

அரண்மனையை விட்டு வெளியேறியவுடன் அச்சுதப்பன் மற்ற வீரர்களை அனுப்பிவிட்டுச் சொக்கநாதனை மட்டும் தனியாகத் தன்னருகே கூட்டிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

''நஞ்சப்பா, நான் முதலில் பயந்தேவிட்டேன். எங்கே நீ உண்மையைச் சொல்லி விடுவாயோ என்று! எப்படியடா உனக்கு இவ்வளவு கற்பனை வந்தது?'' என்று பூரிப்புடன் கேட்டான்.

''எல்லாம் தங்களிடமிருந்துதான் தலைவரே! தஞ்சையின் வருங்கால மன்னருக்கு அடியேன் இதுகூடச் செய்யக் கூடாதா?''

''உண்மை. உண்மை. இவ்வளவு பெரிய உதவி செய்த உனக்கு எவ்வளவு பரிசு அளித்தாலும் தகும்! இன்று முதல் நீதான் எனக்கு முக்கியமான நண்பன். எப்பொழுதும் நீ என்னுடனே இருக்க வேண்டும்.''

''உத்தரவு மன்னவா! நாம் இருவரும் தனியாக இருக்கும்பொழுது மட்டும் தங்களை மன்னவா என்று அழைக்க இந்த ஏழைக்கு அனுமதி தாருங்கள் மன்னவா?''

இதைக் கேட்டவுடன் அச்சுதப்பன் புளகாங்கிதம் அடைந்து, ''உன் இஷ்டப்படியே ஆகட்டும். இன்று நீ எனக்குச் செய்த உதவிக்கு உன்னை நான் மகிழ்ச்சிப் படுத்தாமல் இருக்கக்கூடாது. வா என்னோடு. தோப்பிற்குச் செல்வோம். என்னருகே சரிசமமாக உட்கார்ந்து கள் குடிக்கும் பெருமைய்யை உனக்கு அளிக்கிறேன்.''

''ஆகா! எப்பேர்ப்பட்ட பாக்கியம்! இருந்தாலும் மன்னவர் கள் குடிக்கப் போவதற்குள் ஒருமுறை அந்தப்புரக் காவல் எப்படி இருக்கிறது என்று பார்த்துவிட்டுப் பிறகு

செல்லலாம். தங்களின் வருங்கால மாமனார் சொன்னதை நாம் மறந்துவிடக் கூடாது.''

''உண்மை. உண்மை. வா. முதலில் அங்கு செல்லலாம்.''

இருவரும் அந்தப்புரம் அமைந்திருந்த பகுதிக்கு வந்து சேர்ந்தார்கள்.

''மன்னவா தங்களிடம் ஒன்று கேட்க வேண்டும் என்று நெடுநாளாக எனக்கு ஓர் ஆசை! கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?''

''நீ இனி எது கேட்டாலும் எனக்குக் கோபம் வராது.''

''தாங்களும் இளவரசியாரும் ஒருவரை ஒருவர் காதலிக்கிறீர்கள். அந்தப்புரத்தில் தினமும் சந்தித்துப் பேசிக் கொள்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். தங்களை ஒரு நாள் பார்க்காவிட்டால் இளவரசியாருக்கு உறக்கமே வராதாமே?''

அச்சுதப்பன் உடனே நெஞ்சை நிமிர்த்தி கர்வத்துடன் மீசையைத் திருகி, ''அதெல்லாம் உண்மைதானடா! இதைக் கேட்கவா இவ்வளவு பயந்தாய்! சந்திரவதனா என்மீது எவ்வளவு காதல் கொண்டிருக்கிறாள் தெரியுமா?'' என்றான்.

''பகல் நேரத்தில் தாங்கள் இந்தப் பகுதியினை காவற் பணியினை மேற்பார்வையிட வரும்பொழுது, இளவரசியார் தன்னுடைய அறையிலிருந்து தாங்களை பார்த்து மகிழ்ச்சியுறுவதாகவும் தாங்கள் இருவரும் சைகை செய்வீர்கள் என்றும் என்னிடம் பலர் சொல்லி இருக்கிறார்கள்.''

''காதலுக்குக் கண்ணில்லை என்பது சரி என்று இப்பொழுதுதான் தெரிகிறது. எங்கள் நடவடிக்கைகளை இத்தனை பேர் கவனித்திருக்கிறார்கள் என்று இதுவரை நான் அறியவில்லை பார்த்தாயா?'' என்றான் வருத்தத்துடன்.

''இப்பொழுதுகூட இளவரசியார் தங்களைப் பார்த்துக் கொண்டுதான் இருப்பாரோ?''

''அதிலென்ன சந்தேகம்! வா காட்டுகிறேன்.''

அச்சுதப்பன் சொக்கநாதனை அழைத்துக் கொண்டு அந்தப்புர மதிற் சுவரோரம் சற்று நேரம் நடந்து, ஓர் இடத்தில் வந்து நின்றான்.

ஏழடுக்குகளுடன், எழில்மிக்க சுதை வேலைப்பாடுகளுடன் எழுச்சி பெற்று நின்றிருந்தது விஜயராகவ நாயக்கனின் அந்தப்புர மகளிர் குடி இருக்கும் கட்டிடம். அதனை நோக்கிக் கையுயர்த்திக் காட்டினான் அச்சுதப்பன்.

''அதோ பார்த்தாயா! ஆறாவது மாடியில் வலதுபுறத்தில் இருந்து மூன்றாவது சாளரம். அதில்தான் இளவரசி இருக்கிறாள். இன்னும் சற்று நேரத்தில், எனக்காக இளவரசி வந்து எட்டிப் பார்ப்பாள் பார்'' என்றான் பெருமையுடன்.

இருவரும் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். சற்று நேரத்தில் ஒரு பெண்ணுருவம் சாளரம் வழியாக எட்டிப் பார்த்தது. அவ்வளவு உயர்த்தில் இருந்த பெண் இளவரசியா இல்லை சேடிப் பெண்ணா என்று சரியாக அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. சில விநாடி நேரமே சாளரத்தின் அருகே நின்றிருந்த அந்தப் பெண் உடனே மறைந்துவிட்டாள்.

''பார்த்தாயா, அவள்தான் இளவரசி சந்திரவதனா தேவி! பக்கத்தில் நீ நின்று கொண்டு இருந்ததால்தான் அவள் என்னைப் பார்த்து சைகை எதுவும் செய்யாமல் உடனே நகர்ந்துவிட்டாள்.''

சொக்கநாதன் அந்த மாளிகையின் அமைப்பு, இளவரசி தங்கி இருக்கும் அறை, அந்தப்புர மதில், மதிலுக்கும் மாளிகைக்கும் இடைப்பட்ட தூரம், மதிற்சுவரில் திட்டி வாசல் இருக்கும் இடம் என்று சகல விவரங்களையும் நுணுக்கமாகக் கவனித்துத் தன் மனதில் பதித்துக் கொண்டான்.

''இன்று இரவு இளவரசியைத் தனியாகச் சந்திக்கும் பொழுது அவள் என்னிடம் கோபித்துக் கொள்ளப் போகிறாள் பார்'' என்றான் அச்சுதப்பன்.

''எதற்கு மன்னவா?'' சொக்கநாதனுக்கு அவன் என்ன சொல்ல வருகிறான் என்பது புரிந்தாலும் புரியாதது மாதிரிக் கேட்டான்.

''உங்களைப் பார்த்து ஆசையுடன் ஏதாவது சைகை பரிமாறிக் கொள்ளலாம் என்று ஓடி வந்தால், உங்களுடன் எவனோ ஒரு பரதேசியைக் கூட்டிக் கொண்டு வந்து நின்று கொண்டு இருக்கிறீர்களே என்று என்னிடம் கோபிப்பாள். சிணுங்குவாள். செல்லமாக அழக்கூடச் செய்வாள். அவளைச் சமாதானப்படுத்துவதற்குள் எனக்குப் போதும் போதும் என்று ஆகிவிடும்.''

சொக்கநாதன் இதைக் கேட்டவுடன் பயந்தவன் போல் நடித்து ''என்னை மன்னித்துவிடுங்கள் மன்னவா! என்னால் இன்று தங்கள் காதலுக்கு இடைஞ்சல் வந்துவிட்டதே! இடையூறு செய்த பெரும்பிழை பொறுக்கவேண்டும்'' என்றான்.

''அடப்போடா! ஊடல் இல்லாத காதலில் சுவை ஏது? பெண்கள் சிரித்தாலும் அழகு! சிணுங்கினாலும் அழகு! செல்லமாகக் கொஞ்சினாலும் அழகு! சிடுசிடுப்பாக மிஞ் சினாலும் அழகு! இதெல்லாம் உனக்குத் தெரியாது!'' என்று அவன் முதுகில் பலமாக அடித்து உரக்கச் சிரித்தான் அச்சதப்பன்.

அச்சுதப்பனும், சொக்கநாதனும் தென்னந்தோப்பிற்குள் நுழையும்பொழுது, மாலை மயங்கத் தொடங்கியது. வாச லில் நின்ற காவலர்களை எச்சரித்துவிட்டு, அச்சுதப்பன் சொக்கநாதனின் கையைப் பிடித்துக் கொண்டு உள்ளே கூட்டிச் சென்றான்.

செல்லத்தாய் குடிசை வாசலில் நின்று கொண்டிருந் தாள். அச்சுதப்பன் அவள் கன்னத்தை லேசாகத் தட்டி ''செல்லத்தாயி, இவன் இன்று முதல் என் உற்ற நண்பன். இவன் இன்று எனக்குச் செய்த உதவிக்கு நான் என்ன பரிசளித்தாலும் தகும். இவன் இங்கு வந்து எவ்வளவு கள் கேட்டாலும் கொடு. காசு கேட்காதே! போ. போய் எங்கள் இருவருக்கும் கள் கொண்டு வா'' என்றான்.

சிரித்தவாறு திரும்பிக் குடிசைக்குள் நுழைய முயன்ற செல்லத்தாயின் பின்புறத்தில் பலமாகத் தட்டினான் அச்சு தப்பன். செல்லத்தாயி உடனே சிணுங்கி, ''மூஞ்சியைப் பாரு'' என்று வைதவாறு உள்ளே ஓடினாள்.

''பார்த்தாயா! பெண்கள் சிணுங்கினாலும் அழகு என்று இப்பொழுது தெரிந்து கொண்டாயா!'' என்றவாறு ''ஹாஹா ஹா' என்று சிரித்தான்.

குடிசைக்கு வெளியே உள்ள முற்றத்தில் பாய்விரித்து இருவரும் அருகருகே வந்து உட்கார்ந்தார்கள். செல்லத் தாயி ஒரு தென்னையில் இருந்து இறக்கிய கள் நிறைந்த

குடத்தை அவர்கள் முன்னால் வைத்து, இரண்டு சிறு கலயங்களையும், முகர்ந்து ஊற்றுவதற்குச் சற்றுப் பெரிய கலயத்தையும் கொண்டு வந்து வைத்தாள்.

பின்னர் கள் குடத்தின் விளிம்பில் பொங்கி வழிந்த நுரையையும், கள்ளின் ருசியில் விழுந்து கிடந்த தேனீக்களையும் வழித்துக் கீழே கொட்டிவிட்டு, இருவருக்கும் ஊற்றிக் கொடுத்தாள். தொட்டுக் கொள்ள முயற்கறி வறுத்து வைக்கப்பட்டிருந்தது.

அச்சுதப்பன் மாறி மாறிக் குடித்துக் கொண்டிருந்தான். சொக்கநாதன் குடிப்பதுபோல் நடித்துக் கொண்டிருந்தான். பொழுது நன்றாக இருட்டிவிட்டது.

அடுத்த சில நாழிகை நேரத்தில் அச்சுதப்பனுக்கு போதை அதிகமாகி செல்லத்தாயின் மடியில் விழுந்தான். இந்த உலக நினைவே அவனுக்கு அடியோடு அற்றுப் போய் இருந்தது.

செல்லத்தாயும், சொக்கநாதனும் சேர்ந்து அச்சுதப்பனைப் பத்திரமாகத் தூக்கிச் சென்று குடிசைக்குள் படுக்க வைத்தார்கள். அப்பொழுது செல்லத்தாயி பார்க்காத நேரத்தில் அச்சுதப்பனின் இடுப்பில் இருந்த அந்தப்புரத்தின் மதிற்சுவர் திட்டிவாசல் திறவுகோலை மட்டும் சொக்கநாதன் கவர்ந்து மறைத்து வைத்துக் கொண்டான்.

போதையுடன் சாய்ந்து கிடக்கும் அச்சுதப்பன், நாளைய பொழுது விடியும்வரை எழுந்திருக்க மாட்டான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, சொக்கநாதன் குடிசைக்குள் இருந்து வெளியேற முயன்றான். அப்பொழுது செல்லத்தாயி அவன் கையை ஆசையுடன் பற்றிக் காமம் வழியச் சிரித்தாள்.

''சீ! போடி!'' என்று கடிந்து அவள் கையை உதறிவிட்டுக் குடிசையிலிருந்து வெளியேறினான் சொக்கநாதன்.

நள்ளிரவுப் பொழுது! தஞ்சை நகரமே துயில் கொண்டு இருந்தது. வானத்தில் குறை நிலவும், கோடிக் கணக்கான தாரகைகளும் மங்கலான வெளிச்சத்தை இறைத்துக் கொண் டிருந்தன.

அந்தப்புரத்தின் மதிற்சுவரை ஒட்டி சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் பதுங்கிப் பதுங்கி வந்து கொண்டி ருந்தனர். காலையில் போட்ட மாறு வேடத்திலேயே இருவரும் இருந்தனர்.

வெங்கடகிருஷ்ணனின் தோளில் ஒரு கயிற்றுச் சுருள் இருந்தது. சொக்கநாதன் தோளிலும் ஒரு கயிற்றுச் சுருள்! கையில் ஒரு பெரிய துணிப்பை அதற்குள் இருந்த பொருள் அசைந்து கொண்டிருந்தது.

அந்தப்புரத்தின் முக்கிய வாசலில் மட்டும் எப்பொழு தும் காவல் இருக்கும்! திட்டி வாசல் பகுதியை அந்தப்புர மதிலைச் சுற்றிவரும் காவல் வீரர்கள் பார்த்துக் கொள்வ தால், அவர்கள் வருவதற்குள் தங்கள் வேலையை முடித்து விட இருவரும் முயன்றனர்.

அச்சுதப்பனிடமிருந்து எடுத்த திறவுகோலால் திட்டி வாசலின் பூட்டை திறந்தனர். சுற்றிலும் யாரும் வர வில்லை என்பதை உறுதி செய்து கொண்ட பின்னர் இருவரும் உள்ளே நுழைந்தனர்.

மறுவிநாடியே அவர்கள் நெஞ்சில் கத்தி முனை பதிந்தது.

''அரண்மனையில் நீ .பேசிய பேச்சை வைத்தே உன்னை சந்தேகப்பட்டேன். அது சரியாகப் போய் விட்டது'' என்று சிரித்தவாறு வாளை நீட்டிக் கொண்டிருந் தான் நான்கு காவலர்கள் புடைசூழ நின்றிருந்த தளவாய் ரங்கப்ப நாயக்கன்!



# 57

அந்தப்புரத்து மதிற்சுவரின் திட்டி வாசலைத் திறந்துகொண்டு, அர்த்த ராத்திரியில் உள்ளே நுழைந்த சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் தங்கள் நெஞ்சில் வாட்களின் நுனி பதிந்ததும், தங்களைச் சுற்றி நான்கு வீரர்களுடன் தஞ்சையின் தளவாய் ரங்கப்ப நாயக்கன் நின்று கொண்டிருப்பதையும் பார்த்தவுடன் அடியோடு திகைத்துப் போய் நின்றுவிட்டார்கள்.

வானத்திலிருந்து தேய்பிறை நிலவு தெளிவற்ற வெளிச்சத்தை வீசிய போதிலும், அந்தப்புர வளாகத்தில் இருந்த அளப்பரிய பெரும் மரங்கள் அடர்ந்த கிளைகளை வீசி அந்த அறைகுறை வெளிச்சத்தையும் வர ஒட்டாமல் தடுத்துக் கொண்டிருந்ததால், முகம் தெரியாத இருட்டில் தங்கள் நெஞ்சில் கத்திமுனை பதிந்ததும், காவலர்கள் சூழ்ந்து கொண்டதும் இருவரும் ஒரு விநாடி உணர்ச்சியற்று உறைந்து போனார்கள்.

இருட்டு சற்றுப் பழகிய நேரத்தில் இடிக்குரலில் சிரித்தவாறு தன் நெஞ்சில் வாளைப் பதித்துநின்ற தளவாய் ரங்கப்ப நாயக்கனைப் பார்த்து வியப்பும், திகைப்பும் அடைந்தான் சொக்கநாதன்.

'இந்த நேரத்தில் இவன் எப்படி இங்கு வந்தான்?'

அதேநேரம் தளவாய் நகைத்தவாறு சொக்கநாதனைப் பார்த்துச் சொன்னான்.

''அரண்மனையில் நீ பேசிய பேச்சை வைத்தே உன் மீது நான் சந்தேகப்பட்டேன். அது சரியாகத்தான் இருக்கிறது.''

சொக்கநாதன் எதுவும் பேசாமல் மவுனமாக அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஒரு படைத்தலைவனின் முன்னால், அவன் கீழே பணிபுரியும் ஒரு சாதாரண படைவீரன் அவனை மிஞ்சிக் கொண்டு தெருவில் பேசுவதற்கே பயப்படுவான். ஆனால் நீயோ, அரச சபையில் அத்தனை பேர் மத்தியில், மன்னனுக்கு எதிரிலேயே நீ உன் படைத்தலைவனை முந்திக் கொண்டு பேசும்பொழுதே எனக்கு ஆத்திரம் வந்தது. தராதரம் தெரியாத மடையனாக இருப்பாயோ இல்லை தலைகனம் நிறைந்த தறுதலையாக இருப்பாயோ என்று நினைத்தேன்.''

சொக்கநாதன் எதையுமே பேசவில்லை. தளவாய் பேசுவயை கண் கொட்டாமல் பார்த்துக் கேட்டவாறு நின்று கொண்டிருந்தான்.

தன் நெஞ்சின் மீது தளவாயின் வாள் நுனியும் மற்றும் இரு வீரர்களின் வாட்களின் நுனிகளும் அழுந்தி இருக்கத் தனது நண்பனின் நெஞ்சில் மற்ற இரு வீரர்களின் வாட்களின் நுனி அழுத்தமாக பதிந்திருந்தது.

இந்த நிலையில் தாங்கள் சற்று அசைந்தாலோ, அநாவசியமாக நெளிந்தாலோ, அவர்களின் வாட்கள் அப்படியே தங்களின் நெஞ்சில் இறங்கிவிடும் என்பதால், இருவரும் அசையாது சிலைபோல நின்று கொண்டிருந்தனர்.

தளவாய் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

''அரசர் மட்டும் அந்த இடத்தில் இல்லாவிட்டால் உன்னை அந்த இடத்தில் அடித்தே இருப்பேன். மன்னன் முன்னிலையில் என்னால் எதுவுமே செய்ய இயலாமல் போய்விட்டது. ஆனால், தொடர்ந்து நீ பேசிய பாணி என் எண்ணத்தை அடியோடு மாற்றிவிட்டது. எவ்வளவு சாமர்த்தியமாகப் பேசினாய் நீ?''

சொக்கநாதன் லேசாகப் புன்னகைத்தான்.

''சிரிக்காதே! சிரித்தால் என் வாள் இப்படியே ஆழமாக உன் நெஞ்சில் இறங்கிவிடும்!''

சொக்கநாதன் சிரிப்பு நின்றது. பயத்துடன் தளவாயைப் பார்ப்பது மாதிரி முகத்தை மாற்றிக் கொண்டான்.

''முதலில் நீ பேசிய பேச்சைக் கேட்டு நானே அசந்து விட்டேன். நீ பொய்யுரைக்கின்றாய் என்பதை நான் கடுகளவும் சந்தேகிக்கவில்லை. ஆனால் போகப் போக உன் பேச்சில் எனக்கு நம்பிக்கை குறைய ஆரம்பித்தது.

சொக்கநாதன் அவன் சொல்வதைப் பயத்துடன் கேட்டுக் கொண்டிருப்பதைப்போல் நடித்துக் கொண்டிருந்தாலும், அவன் பார்வை நாலாபுறமும் சுழன்று கொண்டிருந்தது.

சொக்கநாதன் கையில் வைத்திருந்த பைக்குள் இருந்த பொருள் அசைந்து, நெளிந்தது. அதனை உடனே கவனமாக பற்றி அழுத்திக் கொண்டான்.

''நீ நடந்த விஷயம் இன்னதுதான் என்று மட்டும் சொல்லி இருந்தால் உன்மீது எனக்கு சந்தேகமே வந்திருக்காது. ஆனால், அதைச் சொல்வதைவிட என் மகனின் புத்தி சாதுர்யத்தைப் புகழ்வதில்தான் உன் பேச்சின் போக்கு பெரும்பாலும் செல்ல ஆரம்பிக்கும் பொழுதுதான் உன் மீது எனக்கு சந்தேகம் தோன்றத் தொடங்கியது.''

வெங்கடகிருஷ்ணன் தன் இடுப்பில் இருந்த குறு வாளை எடுதுது தளவாயின் நெஞ்சில வீசிவிடலாமா ஏன்று யோசித்தான். ஆனால், தான் இருக்கும் நிலையில், நான் சற்று அசைந்தாலும் தன் கதி அதோகதிதான் என்று நிச்சயமாகத் தெரிந்ததால், என்ன செய்வது என்று புரியா மல் தளவாயின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''எப்படி எல்லாம் என் மகனைப் புகழ்ந்தாய்! அரசன் முன்னிலையில் அவனை நீ புகழ்ந்தது முதலில் எனக்கு மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. ஆனால், அந்தப் பிச்சைக் காரனின் மாறு வேடத்தை எவ்வளவு உன்னிப்பாக என் மைந்தன் கவனித்தான் என்று கூறினாயே, அப்பொழுது தான் உன்மீது என் சந்தேகம் உச்சத்திற்குச் சென்றது!''

''எப்படி...'' சொக்கநாதன் இழுத்தான்.

''ஒரு மகனின் புத்திசாதுர்யம் எவ்வளவு என்பது அவனைப் பெற்ற தந்தைக்குத் தெரியாதா? எப்படி என்று கேட்கிறாயா, உன்னிடம் அதை எல்லாம் சொல்ல வேண் டுமா திருட்டு நாயே! நான் என்ன கதையா சொல்கிறேன்? விளக்கம் கேட்கிறாயா? வாயைத் திறந்தால் உன் தொண் டையில் வாளைச் சொருகிவிடுவேன்'' என்று படபட வென்று ஆத்திரத்தில் பேசினான் ரங்கப்ப நாயக்கன்.

சொக்கநாதன் மறுபடியும் வாயை மூடிக்கொண்டு, பயத்துடன் நிற்பதைப்போல் காட்டிக் கொண்டான்.

முன்பு ஒரு தடவை அந்தப்புரத்தில் இளவரசி தனது தோழியருடன் பந்து விளையாடுவதை அச்சுதப்பன் மறைந்து இருந்து பார்க்கும்பொழுது, இளவரசியால் பிடி பட்டு வாளைத் தவறிவிட்டு வந்தபொழுது, அந்த வாள் தந்தையின் கையில் இருப்பதைக் கூட உணர முடியாத அளவுக்கு புத்தி மட்டமான தன் மகன் இப்பொழுது தூரத்தில், தெருவில் பிச்சை எடுக்கும் ஒருவனின் மாறு

வேடத்தை எப்படி உற்றுக் கவனித்திருப்பான் என்ற சந்தேகம் தளவாயின் மனதில் உதித்ததை நான்கு பேர் முன்னால் எப்படிச் சொல்வான்?

''உன் மனதில் ஏதோ ஒரு திட்டம் வைத்துக் கொண்டு தான் நீ என் மகனை அவ்வளவு தூரம் தானாக முன் வந்து அரசரிடம் புகழ்கிறாய் என்று என் மனதுக்கு நிச்சயமாக புரிந்துவிட்டது. அரண்மனையில் இருந்து நீங்கள் வெளி யேறியவுடன், உங்களுடன் சேர்ந்து அந்த ஒற்றனைப் பிடித்த வீரர்களில் ஒருவனைத் தனியே அழைத்துக் கேட் டேன். அவன் உண்மையைக் கூறிவிட்டான்.''

''என்ன கூறினான்?'' என்றான் சொக்கநாதன்.

''வாயைத் திறக்காதே! உனக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் இந்த ரங் கப்ப நாயக்கன் உன்னைவிடப் புத்திசாலி என்று நீ உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இத்த னையும் சொல்கிறேன். அந்த ஒற்றன் இருக்கும் இடத்திற் குத் தென்னந்தோப்பில் கள் குடித்துக் கொண்டு இருந்த என் மகனை அழைத்து வந்ததும் நீதானாம்! அவன் தாடியை இழுத்துப் பார்க்கச் சொன்னதும் நீதான் என்று சொன்னான். உன் மீது இருந்த சந்தேகம் எனக்கு உறுதிப் பட்டுவிட்டது. அடுத்து நான் என்ன செய்தேன் தெரியுமா?''

சொக்கநாதன் அவனை ஏறிட்டுப் பார்த்தான் கேள்விக் குறியுடன்!

''நீ யார் என்று தெரிந்து கொள்ள முயன்றேன். அதிலும் எனக்கு வெற்றிக் கிடைத்தது.''

இதைக் கேட்டதும் சொக்கநாதன் மட்டுமின்றி பக்கத் தில் இருந்த வெங்கடகிருஷ்ணனும், சேர்ந்து அதிர்ச்சி

அடைந்தான். மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கன்தான் இங்கு மாறு வேடத்தில் வந்திருப்பது என்பதை தளவாய் அறிந்து கொண்டானோ என்ற பயம் இருவர் நெஞ்சிலும் எழுந்தது.

''நஞ்சப்பன் என்ற பெயரில் என் மகன் படைப்பிரிவில் இருப்பது யார் என்று விசாரித்தேன். அப்படிப்பட்ட பெயரில் யாருமே இல்லை என்றார்கள். அதன்பிறகுதான் தெரிந்தது நீ படை வீரனல்லன். ஒரு திருடன் என்பது! என் மகனை ஏமாற்றி எதையோ திருட முயல்கிறாய் என்று ஊகித்தேன்'' தொடர்ந்து தளவாய் சொன்னதைக் கேட்டு இருவர் நெஞ்சிலும் நிம்மதி பிறந்தது.

''உடனே என்னுடைய ஒற்றர்களை அனுப்பி, உன்னைப் பின்தொடர்ந்து உனது நடவடிக்கைகளைக் கவனித்து வரச் சொன்னேன். என் மகனுடன் நீ அந்தப்புரத்தருகே வந்ததையும், இந்த இடத்தின் அருகே நீண்ட நேரம் பேசிக் கொண்டு இருந்ததையும், மாளிகையை நோக்கி கை நீட்டிப் பேசிக் கொண்டிருந்ததையும் என்னிடத்தில் வந்து சொன்னார்கள்.''

சொக்கநாதன் மூளை துரிதமாக வேலை செய்யத் துவங்கியது. தளவாயோ, ரொம்ப அலட்சியமாகத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தான்.

''அதன் பின்னரும் நீயும், அச்சுதப்பனும் தென்னந்தோப்பிற்குள் புகுந்து கள் குடித்ததாகச் சொன்னார்கள். சற்று நேரத்தில் நீ இருட்டுக்குள் மறைந்து சென்றுவிட்டதாகவும் கூறினார்கள். உன்னுடைய நோக்கம் அந்தப்புரத்தில் நுழைந்து திருடுவதாகத்தான் இருக்கும் என்று ஊகித்தேன். அது மிகச் சரியாகவே அமைந்துவிட்டது. இந்தத் திட்டிவாசல் வழியாகத்தான் நுழைவாய் என்று நினைத்தேன். அதுவும் சரியாகவே இருக்க, நீங்கள் இருவரும் வகையாக

மாட்டிக் கொண்டீர்கள்'' என்று அலட்சியமாகச் சிரித்தான்.

''அச்சுதப்பர் மாதிரி அசமந்தமாக இருப்பீர்கள் என்று நினைத்தேன். இவ்வளவு சிறந்த மதியூகியாக இருப்பீர்கள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. அதனால்தான் இந்தத் தஞ்சைத் தரணிக்கே தாங்கள் தளவாயாக இருக்கி றீர்கள்! அடேயப்பா எப்பேர்ப்பட்ட அறிவு!'' சொக்கநா தன் மிகவும் வியந்தவன்போல் சொன்னான்.

''நிறுத்துடா! புகழ்ச்சியான வார்த்தைகளைப் பேசி என்னைக் குளிர்வித்துத் தப்பிவிடலாம் என்று மட்டும் நினைக்காதே! அதுமட்டும் என்னிடம் நடக்கவே நடக்காது.''

''ஏதோ அறியாமல் செய்துவிட்டேன். எங்களை மன் னித்து விடுங்கள் மகாப்பிரபு!'' பணிவுடன் கூறினான் சொக்கநாதன்.

''உன்னை மன்னிப்பதா! உன்னை மாதிரிப் பசப்பு வார்த்தைகள் கூறி ஏமாற்ற நினைக்கும் பதர்களை மன்னவ ரிடம் அடையாளம் காட்டித் தண்டனை வாங்கித் தந்தால் தான் என் ஆத்திரம் அகலும், சொல்லுடா! யார் நீ? எந்த நாட்டில் இருந்து வந்திருக்கிறீர்கள்? இங்கு எதைத் திருடும் நோக்கத்துடன் உள்ளே நுழைந்தீர்கள்?''

''நாங்கள் எதையும் திருடவேண்டும் என்ற நோக்கத் தில் இங்கு வரவில்லை. அந்தப்புரத்திற்குள நாங்கள் நுழைந்ததே இல்லை. அது எப்படி இருக்கிறது என்று பார்ப்பதற்காக வந்தோம்'' என்று மிகவும் அப்பாவிபோல் சொன்னான் சொக்கநாதன்.

''அர்த்த ராத்திரியில் ஆளுறங்கும் வேளையில், அந் தப்புரத்தின் அழகை ரசிப்பதற்காக வந்தீர்களா? ஆண்டிப்

பயல்களா! என்னை என்ன அடிமடையன் என்றா நினைத் தாய்?'' என்றவாறு கோபத்துடன் சொக்கநாதன் கன்னத் தில் ஓங்கி அறைந்தான் தளவாய்.

இதைப் பார்த்தவுடன் கோபத்துடன் சிலிர்த்த வெங் கட கிருஷ்ணனின் நெஞ்சில் காவலர்கள் வாள் நுனி அழுத்தமாகப் பதிந்தது. சொக்கநாதனும், அவனைப் பார்த்து 'நீ சும்மா இரு' என்பதுபோல் சைகை செய்ய, வெங்கட கிருஷ்ணன் தன்னை அடக்கிக் கொண்டு அமைதி யாக நின்றான்.

''சொல்லடா நாயே! எதற்காகடா இங்கு வந்தாய்?'' மறுபடியும் சொக்கநாதனைப் பார்த்துக் கோபத்துடன் கேட்டான் தளவாய்.

சொக்கநாதன் பதில் பேசாமல் நின்றான்.

''டேய், இவர்கள் இடுப்பில் இருக்கும் குறுவாளை எடுங்கள். வேறு ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கிறார் களா என்று பாருங்கள்'' என்றான்.

உடனே அந்த வீரர்கள் இருவரது இடையில் இருந்த கட்டாரிகளையும், தோளில் வைத்திருந்த கயிற்றுச் சுருளை யும் எடுத்தார்கள்.

அப்பொழுது சொக்கநாதன் கையில் இருந்த துணிப் பைக்குள் இருந்த பொருள் மறுபடியும் அசைய, சொக்கநா தன் அதனை அழுத்தமாகப் பிடித்துத் தன் நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்டான்.

தளவாயின் கண்கள் உடனே அந்தத் துணிப்பையின் மீது அழுத்தமாகப் பதிந்தது.

''பைக்குள் என்னடா வைத்திருக்கிறாய்? வெளியே எடு.''

''சோற்று மூட்டை பிரபோ! அந்தப்புரத்தைச் சுற்றிப் பார்க்கும் பொழுது, அலுப்பு எடுத்தால் சாப்பிடுவதற்கா கக் கொண்டு வந்தேன்.''

''இனியும் இப்படிப் பேசினால் உன் குரல் வளையை அறுத்து விடுவேன். மரியாதையாகப் பையில் இருப்பதை எடுத்துக்காட்டு கன்னக்கோல்தானே? டேய், அதை பிடுங்கி பாருங்கள்.''

''வேண்டாம், வேண்டாம். நானே காட்டுகிறேன்'' என்று சொக்கநாதன் பைக்குள் கையைவிட்டு, அந்தப் பொருளை வெளியே எடுத்தான்.

அது ஓர் உடும்பு! இவ்வளவு நேரம் பைக்குள் சுருண்டுக் கிடந்த எரிச்சலில், சொக்கநாதன் பையை விட்டு எடுத்ததும் துள்ள ஆரம்பித்தது. சொக்கநாதனோ உடும்பைப் பைக்குள் இருந்து எடுத்த அதே வேகத்தில், அதனைத் தளவாயின் முகத்தின் மீது எறிந்தான்.

துள்ளி விழுந்த உடும்பு, தளவாயின் முகத்தைப் பிறாண்டி விட்டுத் தரையில் விழுந்து ஓடியது. இதனால் மிரண்டு, நிலை தடுமாறிச் சரிந்தான் தளவாய்! காவலர்கள் நால்வரும் பதறிப்போய் தளவாயைப் பார்த்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் தங்களருகே இருந்த வீரர்களை உதைத்தார்கள். இருவர் மல்லாந்து விழ, மற்ற இருவரது வாட்களும் தங்கள் மீது படாதவாறு தாக்கத் தொடங்கினர்.

இதற்குள் கீழே விழுந்த தளவாய் அவசரமாக எழுந்து, சொக்கநாதனைத் தாக்குவதற்காக வாளை ஓங்கியவாறு ஓடி வந்தான். இதைப் பார்த்த சொக்கநாதன், ஒரு வீரனின் கையைப் பற்றித் திருகி, அவன் வயிற்றில் உதைத்து அவனிடமிருந்த வாளைப் பிடுங்கினரான்.

தளவாயின் வாளும், சொக்கநாதனுடைய வாளும் மோதத் தொடங்கின. முதலில் அலட்சியமாகச் சண்டை யிட்ட தளவாய், சொக்கநாதனின் வாள் சுழற்சியைப் பார்த்தவுடன் இவ்ன வாள் வீச்சில் வல்லவன் என்பதை உணர்ந்து ஆவேசமாக போரிட ஆரம்பித்தான்.

வெங்கடகிருஷ்ணன் தன்னுடன் போரிட்ட இரண்டு வீரர்களைக் கொன்றான். தளவாயும், மற்ற இரண்டு வீரர்க ளும் சொக்கநாதன் வாளுடன் மோதித் திணறிக் கொண்டி ருந்தனர்.

அவர்களில் ஒருவனை வெங்கடகிருஷ்ணன் இழுத்து, அவன் நெஞ்சில் வாளைச் சொருகினான். மற்றொரு வீரன் சொக்கநாதன் வாள் குரல்வளையில் பாய சத்தமின்றி உயிர் விட்டான்.

கடைசியாகத் தளவாயும், சொக்கநாதனும் மட்டும் தனித்து நின்று போரிட்டுக் கொண்டிருந்தார்கள். சற்று நேரத்தில் தளவாயின் வாள் வானை நோக்கி பறந்தது. மறுவிநாடியே தன் கையில் இருந்த வாளைக் கீழே எறிந்துவிட்டுச் சொக்கநாதன், தளவாயின் முகத்தில் ஓங் கிக் குத்தினான். கடைவாயில் இரத்தம் வழிய, 'மடார்' என்று கீழே விழுந்தான் ரங்கப்பன்.

பிறகு சொக்கநாதன், அவன் நெஞ்சில் உட்கார்ந்து கொண்டு முகத்தில் மாறி மாறிக் குத்தினான். தளவாய்க்கு மயக்கம் வந்தது. உடனே அவன் வாய்க்குள் துணியைச் சுருட்டித் திணித்தான்.

பின்னர் தளவாயை அருகில் இருந்த மரத்தில் இறுக்க மாகக் கட்டி வைத்தார்கள் இருவரும் சேர்ந்து! செத்துக் கிடந்த நான்கு வீரர்களையும் இழுத்து ஒரு புதருக்குள் எறிந்தார்கள்.

வெங்கடகிருஷ்ணன் நாலைந்து புதர்களுக்குள் இறங்கித் தேடி ஒரு வழியாக அந்த உடும்பைப் பிடித்துக் கொண்டு வந்தான். சொக்கநாதன் அதனை வாங்கி, அதன் வாயில் ஒரு கயிற்றின் நுனியை இறுக்கமாகக் கட்டினான்.

இருட்டில் நாலாபுறமும் கண்களை ஓட்டிச் சற்று நேரம் காத்து நின்றார்கள். அந்தப்புரமே அமைதியான துயிலில் ஆழ்ந்திருந்தது.

''முருகா, நான் வரும்வரை இங்கேயே இரு. முக்கியமாகத் தளவாய் தப்பித்துவிடாமல் பார்த்துக் கொள்'' என்றான் சொக்கநாதன்.

பிறகு உடும்பை எடுத்துக் கொண்டு இளவரசி தங்கி இருக்கும் கட்டிடத்தின் அருகே வந்தான். கயிற்றைச் சுழற்றிக் கையில் இருக்கும் உடும்பை உச்சியில் எறிந்தான். சரியாக ஆறாவது மாடிக்கு மேல் உள்ள சுவரில் உடும்பு விழுந்து, சுவரை இறுகப் பற்றிக் கொண்டது.

உடும்பின் வாலில் இருந்து தொங்கிய கயிற்றைப் பிடித்துக் கொண்டு ஏற ஆரம்பித்தான் சொக்கநாதன்.



# 58

தஞ்சை அரண்மனையும், அதையொட்டி அமைந்திருந்த அந்தப்புரமும் அந்தகாரத்தில் ஆழ்ந் திருந்தன. கிருஷ்ணபட்சத்துத் திரயோதசி என்ப தால் வானத்தில் எழுந்திருந்த பிறை நிலவு கூட மங்கலான ஒளியை அங்குள்ள மாளிகைகளின் மீது வீசிக் கொண்டு இருந்தது.

எங்கும் அமைதி! ஒருசில வண்டுகளின் ரீங்காரமும், அந்தப்புர மகளிர் நீராடும் வாவியிலிருந்து தவளைகளின் பிலாக்கணமும் அந்த அமைதியை ஊடுருவி ஒலித்துக் கொண்டிருந்தது.

இளவரசி சந்திரவதனா துயில் கொள்ளும் அந்தப்புர மாளிகையின் ஆறாவது மாடியில் மூன்றாவதாக உள்ள சாளரம் இருள் தோய்ந்து காணப்பட்டது. அதுமட்டு மின்றி, அதிலிருந்த அத்தனை சாளரங்களுமே இருளில் தான் மூழ்கிக் கிடந்தன.

சொக்கநாதன் சுழற்றி எறிந்த உடும்பு சந்திரவதனா இருக்கும் அறையின் சாளரத்தை ஒட்டி, அதற்கு சில அடிகள் மேற்புரத்தில் உள்ள சுவரின்மீது கெட்டியாக ஒட்டிக் கொண்டு இருந்தது. சொக்கநாதன் அதன் வாலில்

இருந்து தொங்கிய கயிற்றை முதலில் தன் பலங்கொண்ட மட்டும் இழுத்துப் பார்த்தான்.

இழுக்க இழுக்க அந்த உடும்பு சுவரைக் கெட்டியாகப் பிடித்து ஒட்டிக் கொண்டது. திருப்தி அடைந்த சொக்கநா தன் சுற்றுமுற்றும் தன் பார்வையை ஓடவிட்டான்.

எங்கும் எந்த அரவமும் தென்படவில்லை. சற்று முன்னர் தளவாய் ரங்கப்ப நாயக்கனுடன் அவர்கள் ஈடு பட்ட வாட்போர்கூட அங்கு தூங்கிக் கொண்டிருப்பவர் களை எழுப்பவில்லை. காரிருள் ஆங்காங்கே அப்பிக் கிடந்தது.

சொக்கநாதன், சற்று தூரத்தில் நிற்கும் வெங்கடகிருஷ் ணனைப் பார்த்துச் சைகை செய்துவிட்டு, உடும்பின் வாலில் இருந்து தொங்கிய கயிற்றைப் பிடித்துக் கொண்டு கட்டிடத்தின் மீது ஏற ஆரம்பித்தான்.

அதே நேரம் இளவரசி சந்திரவதனா தன்னுடைய அறையின் மத்தியில் அமைந்திருந்த அம்சதூளிகா மஞ்சத் தில் கண்களை மூடிப் படுத்துக் கிடந்தாள்.

மஞ்சத்திற்குச் சற்றுத் தள்ளி ஒரு சிறு மேடையின் மீது கண்ணாடிக் கூடு போட்டிருந்த சிறிய விளக்கின் திரி, அவள் படுத்த உடனே குறைக்கப்பட்டிருந்ததால், மெல் லிய வெளிச்சத்தை இளவரசி படுத்திருக்கும் மஞ்சம் மட்டிலும் வீசிக் கொண்டிருந்தது. அதைத் தாண்டி எங்கும் இருள் சூழ்ந்திருந்தது.

மஞ்சத்தின் மீது கண்களை மூடிப் படுத்திருந்தாலும் இளவரசி சந்திரவதனாவிற்கு தூக்கம் பிடிக்கவில்லை. மனம் எங்கெங்கோ அலைபாய்ந்து கொண்டிருந்தது.

எவ்வளவோ கட்டுப்படுத்திப் பார்த்தும், மனம் அந்த வீரனை நோக்கியே செல்கிறது! எரிச்சல், எரிச்சலாகவும் வந்தது.

கங்கை கொண்ட சோழபுரத்தில் இருந்து திரும்பி வந்து பத்து நாட்களுக்கு மேலாகப் போகிறது. 'உன்னை விரைவில் சந்திக்கிறேன்' என்று சொன்ன வீரனை இது வரை காணவே இல்லை.

ஏதோ அன்று பெருமைக்குச் சொல்லி இருப்பான்! தஞ்சை அரண்மனையின் அந்தப்புரத்தில் இவ்வளவு கட்டுக் காவல்களை மீறி அவனால் எப்படி உள்ளே நுழைய முடியும்?

இங்கு வந்து பார்த்திருப்பான். இத்தகைய கோட்டைக்குள் நுழைய முயல்வது முட்டாள்தனம் என்று தெரிந்து வாலைச் சுருட்டிக்கொண்டு ஓடி இருப்பான்!

இந்த லட்சணத்தில் அவனுக்காக என்னை ஏங்க வைத்துவிடுவானாம்! முட்டாள்! சந்திரவதனா அப்படி ஒன்றும் சாதாரணமானவள் அல்லள்!

சே! எதற்கு அவனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இந்தத் தூக்கச் சனியன் வேறு வந்து தொலைக்க மாட்டேன் என்கிறது! அவன் யாரோ, எவனோ? அவனை நினைக்கவே கூடாது! தூக்கம் வரும் வரை வேறு எதையாவது நினைக்க வேண்டும்.

இன்று காலையில் என்ன செய்தேன்? என் தந்தை என்னிடம் வைகுண்ட ஏகாதசி அன்று நடக்க இருக்கும் விழா பற்றிப் பேசினார். அப்புறம் என்ன பண்ணினேன்? பாரிஜாத பஹரணம் படித்தேன். அந்த வீரன் இப்படி இலக்கியம் எல்லாம் கற்றிருப்பானோ?

அவன் இலக்கியம் படித்தால் என்ன, நாசமாகப் போனால் என்ன... சே.. தப்பு... தப்பு... என்னுயிரைத் தன்னுயிரைக்கூடப் பொருட்படுத்தாமல் காப்பாற்றியவனை நாசமாகப் போனால் என்ன என்று நினைத்தது

தப்பு! சாமி! என்னை மன்னித்துவிடு! அவன் நன்றாக இருக்கட்டும். அவனுக்கு ஒரு கெடுதலும் வரக்கூடாது!

சே! மறுபடியும் அவனைப் பற்றியே நினைத்துக் கொண்டு இருக்கிறேன். அவனை நினைத்து நான் ஏங்கு வேன் என்று எவ்வளவு திமிராகச் சொன்னான். அவன் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? அவன் நினைப்பு மட்டும் எனக்கு வரவே கூடாது.

சொக்கநாதன் உடும்பின் வாலில் தொங்கிய கயிற் றைப் பிடித்துக் கட்டிடத்தின் மீது காலை வைத்து, மெது வாகக் கவனமாக ஏறிக் கொண்டிருந்தான். அவன் கயிற்றில் தொங்கிய கனம் தாளமாட்டாமல், சுவரில் ஒட்டி இருந்த உடும்பு சுவரோடு சுவராக தனது நான்கு கால்களையும் இறுகப் பதித்து ஒட்டிக் கொண்டது.

வெங்கடகிருஷ்ணன், சுவரில் ஏறும் சொக்கநாதனை யும், தன்னருகே மரத்தில் கட்டப்பட்டுப் பாதி மயக்க நிலையில் இருக்கும் தளவாய் ரங்கப்ப நாயக்கனையும் நாலாபுறம் சூழ்ந்து கிடக்கும் மரங்களின் இடையேயும் மாறி மாறிக் கண்களைச் செலுத்திப் பார்த்துக் கொண்டிருந் தான்.

இளவரசி சந்திரவதனாவிற்கு எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது. அந்த வீரன் நினைப்பிலேயே மனம் சுற்றிச் சுற்றிச் சுழல்கிறது.

மனமே, அவனை நினைக்காதே! இன்று மதியம் என்ன பண்ணினேன்? சேடிப் பெண் மனோரமாவைக் கூட்டி வந்து சற்று நேரம் பல்லாங்குழி ஆடினேன்!

அந்தக் கழுதை வாயை மூடிக் கொண்டு ஆடக் கூடாது? கங்கைகொண்ட சோழபுரத்தில் மதயானையின் மீது அமர்ந்திருந்தபொழுது மிகவும் பயந்து விட்டீர்களா?

என்று திரும்பவும் அவன் நினைவைத் தூண்டும்படி யல்லவா கேட்டுவிட்டாள்!

உடனே அவள் மீது கோபப்பட்டு பல்லாங்குழியில் முத்துப் பரல்களை எறிந்துவிட்டு, அவளைப் போகச் சொன்னவுடன் அவள் எவ்வளவு பயந்துவிட்டாள்! பாவம்! என் கோபத்திற்கான காரணம் அவளுக்கு எப்படி புரியும்!

எவன் நினைவை மறக்க வேண்டும் என்று நினைக்கி றேனோ அவன் நினைவையல்லவா தூண்டிவிட்டாள்! பாதகி! சேச் சேச்சே! இப்படி அவஸ்தைப்படுவதைவிட, அன்று அந்த மதயானையின் காலில் மிதிப்பட்டுச் செத்தி ருக்கலாம்! நிம்மதியாக உயிர் போயிருக்கும்!

சொக்கநாதன் கட்டிடத்தின் பாதிக்கு மேல் ஏறி விட் டான். தொடர்ந்து மேற்கொண்டு ஏறாமல், கயிற்றைப் பிடித்துத் தொங்கியவாறு சுவரோடு சுவர் ஒட்டிக் கொண்டு, நாலாபுறமும் பார்க்கத் தொடங்கினான். அவ்வ ளவு உயரத்தில் இருந்து பார்க்கும்பொழுது, அந்தப்புரத் தின் சுற்றுவட்டாரம் முழுவதும் நன்றாக அவன் கண்களில் பட்டது. நள்ளிரவின் மெல்லிய வெளிச்சத்தில் அந்தப் பகுதி முழுவதும் தூசு படிந்த ஓவியம்போல் மங்கலாகத் தெரிந்தது.

அந்தப்புரத்தின் முக்கிய வாயிலில் பணிபுரியும் இரு வர், தீவட்டி வெளிச்சத்தில் தரையில் உட்கார்ந்து ஆடுபுலி ஆட்டம் ஆடிக் கொண்டிருந்தனர்.

மதிற்சுவரைச் சுற்றிக் காவல் செய்வோர், கையில் ஈட்டியுடன் மெதுவாக அந்தப் பகுதியினருகே வந்து கொண்டிருந்தனர். அந்தப்புரத்தின் வளாகத்தில், ஆங் காங்கே ஏற்றி வைக்கப்பட்டிருந்த தீப்பந்தங்கள் எண் ணெய் குறைந்து மெதுவாக எரிந்து கொண்டிருந்தது.

இரண்டு நாழிகைகளுக்கு ஒருமுறை தீப்பந்தங்க

ளுக்கு எண்ணெய் இடும் காவலன் ஒருவன் அந்தப் பகுதிக்கு வந்து எண்ணெய்ப் பாத்திரத்தில் இருந்து ஒரு கரண்டியால் எண்ணெயை எடுத்துத் தீப்பந்தத்தில் ஊற்றிக் கொண்டிருந்தான்.

சொக்கநாதன் சுவரோடு சுவராக மேலே இருக்கும் உடும்பைப் போல ஒட்டியவாறு பார்த்துக் கொண்டிருந் தான். வெங்கடகிருஷ்ணனும் அவசரமாகப் புதருக்குள் மறைந்து கொண்டான்.

மதிற்சுவர்க் காவலர்களும், தீப்பந்தக் கண்காணிக ளும் அந்த இடத்தைவிட்டு அகன்றபிறகு, வெங்கடகிருஷ் ணன் வெளியே வந்து சைகை செய்ய, சொக்கநாதன் தொடர்ந்து மேலே ஏற ஆரம்பித்தான்.

இளவரசி தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத் தாள். தூக்கம் வரும்வரை ஏதாவது படிக்கலாம் என்றால் மனமும் வரவில்லை. கண்களைத் திறந்தாலே, கண்கள் எரிகிறது. கண்களை மூடிப்படுத்தால் தூக்கமோ வரமாட் டேன் என்கிறது!

என்ன ஓர் அவஸ்தை! மதுரவாணியிடம் சொன்னால் இதற்குப் பெயர்தான் காதல் என்பாள்! இல்லை. இல்லை. எனக்கு அவன் மீது இந்த ஜென்மத்தில் காதல் பிறக்காது!

அவனை நினைத்து நான் ஒன்றும் ஏங்கவில்லை! தூக்கம் வராததால் பழைய நினைப்பு வருகிறது! அதையும் ஒழிக்க வேண்டும்.

மாலையில் என் அன்னையருடன் நாடக சாலைக்குச் சென்றேன். அதில் ஒரு புலவர் கஞ்சனம்மானையை எவ்வ ளவு அழகாகப் பாடி விளக்கம் சொன்னார். கண்ணனைக் கொல்வதற்கு கம்சன் எத்தனைவிதமான ஆபத்துகளை அனுப்பி வைக்கிறான்!

மாலையில் நடந்த சம்பவங்கள் அவள் மனதில் புரண்டன.

நாடக சாலையில் இருந்த மேடையில் அமர்ந்தபடி புலவர் கஞ்சனம்மானையைப் பாடி விளக்கம் கூற, இளவ ரசியும் அவள் அன்னையாரும், உடன் சில அந்தப்புர மகளிர் சூழ்ந்திருக்கத் தங்களை மறந்து மெய்யன்போடுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இத்தனை செய்தும் ஒரு சிறுவனைக் கொல்ல முடிய வில்லையே என்று ஆத்திரப்பட்ட கம்சன் அடுத்துக் குவ லயா பீடம் என்று பெயர் கொண்ட யானையை ஆயர் பாடிக்குள் அனுப்பிக் கண்ணனைக் கொல்ல நினைத்தான். கருமேகம் ஈன்ற கன்றுபோல, வெற்பொத்த கூற்றை விலங்கிட்டு வாறதுபோல அந்த யானையைக் கொண்டு வந்தார்கள்.''

இளவரசிக்கு உடனே கங்கைகொண்ட சோழபுரம் நினைக்கு வந்தது.

''அந்த யானைக்குக் கன்னமதம், கபோலமதம், பீஜ மதம் ஆகிய மும்மதங்கள் பிடித்திருந்தது.''

ஆம்! அந்த யானைக்கும் மதம் பிடித்திருக்கிறது என்று அவர் சொல்லித்தானே எனக்குத் தெரியும்!

''மதம் பிடித்த யானைக்கு மேலும் வெறியை ஏற்றுவ தற்காகக் கஞ்சா, மத மத்தை போன்ற போதைப் பொருட்க ளைக் கற்றாழைக் கள்ளுடன் சேர்த்து அதனை யானைக்குப் புகட்டினார்கள்.''

இதே மாதிரித்தானே எனக்கும் நடந்தது! மதம் பிடித்த யானை என்று தெரியாமல் முட்டாள் அச்சுதப்பன் அந்த யானைக்குக் கள்ளை ஊற்றிக் குடிக்கச் செய்திருக்கிறான்.

''ஆயர்பாடிக்குள் நுழைந்த கடாக்களிறு கால் கடுகி, வால் நிமிர்ந்து, கண்கள் சிவப்பெறிந்து பாகர் சிலரைப் பலதிக்கும் பிய்த்தெறிந்தது.''

உண்மை! உண்மை! இதே மாதிரித்தானே அந்த யானையும் துவம்சம் செய்தது!

"வாயிலிருந்து நீண்ட தந்தத்தைப் பார்க்கும்பொழுது, வெண்பிறையைக் கவ்வி ஒரு மேகம் வருவதைப் போலிருந்தது. அதனைப் பார்த்து ஆயர்பாடியில் உள்ள அத்தனை பேரும் பயந்து ஓடி ஒளிந்தனர். கண்ணன் எதிரில் வந்து நின்றது கடாக்களிறு."

என் விஷயத்தில் மதயானையின் எதிரே அந்த வீரன் தானாகவே ஓடிவந்து நின்றான்.

"யானையுடன் கண்ணன் மாயப்போர் செய்தான்."

அந்த வீரனும் மாயப்போர்தான் செய்தான். யானையை வலுச் சண்டைக்கு இழுத்தான். பிறகு ஓடுவான். மறுபடியும் திரும்பி வேறு பக்கமாக ஓடி யானையை எப்படியெல்லாம் அலைக்கழித்தான்.

"கடைசியாகக் கண்ண பரமாத்மா அந்த மத யானையின் கொம்பைக் கையால் பற்றிக் கும்பத்தினோடு அறைந்து, தும்பிக்கை தன்னைத் துண்டித்து நிலத்தில் எறிந்தான்."

இதே மாதிரித்தானே அவனும் செய்தான்! புலவர் கண்ணன் கதையைச் சொல்கிறாரா இல்லை என் கதையைக் கூறுகிறாரா?

★"மலையில் கை நீட்டி ஓர் அருவி கொட்டுவதுபோல அதன் தும்பிக்கையில் இருந்து இரத்தம் கொட்டி, அங்கங்கே ஆறாகப் பரவியது."

இப்படித்தான்! இப்படித்தான்! அந்த யானையின் துதிக்கையில் இருந்தும் இரத்தம் கொட்டியது. தலையில் இருந்தும் இரத்தம்!

சந்திரவதனாவிற்கு யானை விழுந்த காட்சியின் கொடூ ரம் நினைவுக்கு வர, தன்னிலை மறந்து அலறி மயங்கி விழுந்தாள்.

இளவரசிக்கு இப்பொழுது பயமாகவும் இருந்தது. அந்த வீரன் செய்த செயலும், கஞ்சனம்மானையில் கண் ணன் செய்த செயலும் அப்படியே பொருந்துகிறதே! அந்த வீரன் மனிதன்தானா? இல்லை கண்ணனின் அவதாரமா?

அவனை மறுபடியும் காணமுடியுமா? வருவேன் என்று சூளுரைத்தானே! வருவானா?

சொக்கநாதன் இப்பொழுது கட்டிடத்தின் ஆறாவது மாடிக்கு அருகே வந்து சந்திரவதனா படுத்திருக்கும் சாள ரத்தருகே தன் காலை வைத்து உள்ளே எட்டிப் பார்த்தான்.

அறையின் நடுவில் அமைந்திருந்த கட்டிலின் மீது இளவரசி படுத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. மறுநிமி டம் ஓசையில்லாமல் உள்ளே இறங்கினான்.

அந்த அறையில் அவளைத் தவிர வேறு யாரும் இல்லை. மஞ்சத்தைத் தாண்டி மற்ற இடங்கள் இருளில் மூழ்கி இருந்ததால் சொக்கநாதன் மிகக் கவனமாக, எந்தப் பொருள் மீதும் மோதிவிடாமலும், தான் நடந்துவரும் ஓசை கேட்டு, இளவரசியின் துயில் கலைந்துவிடக் கூடாது என்ற நோக்கிலும் அடிமேல் அடி எடுத்து வைத்து மஞ்சத் தினருகே வந்து நின்றான்.

சந்திரவதனா மல்லாக்கப் படுத்தபடிக் .கண்களை மூடிக் கொண்டு இருந்தாள். மஞ்சத்திற்கு அருகே இருந்த சிறு மேடையில் வைக்கப்பட்ட விளக்கு மங்கலான வெளிச்சத்தை அவள் மேனி எங்கும் வீசிக் கொண்டிருந் தது. சொக்கநாதன் இளவரசியின் அருகே வந்து நின்றதைப் பார்த்ததும், அந்த விளக்கின் சுழல் நடுங்க ஆரம்பித்தது.

எவ்வளவு அழகாக இருக்கிறாள்! இவ்வுலகப் பெண்ணா இல்லை இந்திரலோகத்தில் இருந்து இறங்கி வந்து இங்கே ஓய்வெடுக்கிறாளா?

என்ன அழகான முகம்! குழந்தைபோல மாசுமறு வற்று! அப்படியே எடுத்துக் கொஞ்ச வேண்டும் போல் இருக்கிறதே!

சொக்கநாதன் பிரமித்துப் போய் மெதுவாக அந்த மஞ்சத்தின் ஓரத்தில் அமர்ந்து அவள் அழகை மிக அருகில் இருந்தவாறு ரசிக்கத் தொடங்கினான்.

மூச்சு விடுவதற்கேற்ப இவளது முன்னழகுகள் கொந்தளிப்பது மட்டும் இல்லாவிட்டால் பளிங்குச் சிலை ஒன்று படுத்திருக்கிறது என்றுதான் தோன்றும்! வழவழ என்ற வயிற்றுப் பிரதேசமும், அதன் மத்தியில் இருந்த உந்திச் சுழலும் அவனைக் கிறங்க அடித்தன.

அதேநேரம் இளவரசி மாலையில் புலவர் பாடிய கஞ்சனம்மானையில் கண்ணன் கொன்ற யானையின் விவரத்தையும், கங்கைகொண்ட சோழபுரத்தில் அந்த வீரன் கொன்ற யானையின் நிலையையும் ஒப்பிட்டு திகல் மனதில் எழ முகம் வியர்த்தாள்!

அடடா! இவளுக்கு ஏன் இப்படி வியர்க்கிறது! இது கூட அழகாகத்தான் இருக்கிறது! மெதுவாகத் துடைத்து விடலாம் என்று ஆசையாக இருந்தது! தொட்டால் விழித்துக் கொள்வாளோ என்ற நினைப்பில், அருகில் இருந்த சிறிய மயிற்பீலி விசிறியால் மெதுவாக வீச ஆரம்பித்தான் சொக்கநாதன்.

குப்பென்று முகத்தில் மட்டும் காற்றுப்பட்டவுடன் திடுக்கிட்டுக் கண் விழித்தாள் சந்திரவதனா! தன் முகத்திற்கு நேர் மேலே வெகு அருகில் தாடி வைத்த ஓர் ஆணின்

முகம் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் திகிலுற்று ''பேய்... பேய்...'' என்று அலறினாள்.

உடனே சொக்கநாதன் அவள் வாயைப் பொத்தி, ''எப்பொழுது பார்த்தாலும் ஏன் பேய் பேய் என்று அலறுகிறாய்? பேயைத் தவிர வேறு யாரும் உன்னை இவ்வளவு அருகில் வந்து பார்த்தது இல்லையா? அலறாதே! நான் தான்! என்னைத் தெரிகிறதா?'' என்றவாறு தன் முகத்தில் ஒட்டி இருந்த தாடியை எடுத்தான்.

சந்திரவதனா மெதுவாக எழுந்து உட்கார்ந்து அவன் முகத்தையே கூர்ந்து பார்த்தாள். இவன்... இவன்... அன்று கங்கை கொண்ட சோழபுரத்தில் என்னைக் காப்பாற்றியவன் மாதிரித் தெரிகிறதே?

ஆம்... அவனேதான்!

மறுநிமிடம் தன்னை மறந்து 'வீல்' என்று அலறினாள். அந்தக் குரல் கீழ் மாடியில் தூங்கிக் கொண்டிருந்த ஒரு வீரனைத் திடுக்கிட்டு விழிக்கச் செய்தது.

---

✱ *கஞ்சனம்மானை - தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு, பாடல் வரி 2380 - 2475.*



# 59

தஞ்சை இளவரசி சந்திரவதனா, மதுரை மன்னன் சொக்கநாதனைப் பார்த்து, நள்ளிரவில் பயந்து, தன்னை மறந்து 'வீல்' என்று அலறிய சப்தத்தைக் கேட்டு, அந்தப்புரத்தின் கீழ் மாடியில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த காவல் வீரன் திடுக்கிட்டு விழித்தான். அதே நேரம் சொக்கநாதனும் இளவரசியின் வாயை மறுபடியும் இறுகப் பொத்திச் சற்றுநேரம் கூர்ந்து கவனித்தான். வாய் பொத்திய நிலையில் இளவரசி செய்வ தறியாது சொக்கநாதனைப் பார்த்து மலங்க மலங்க விழித் தாள்.

தூக்கத்திலிருந்து விழித்த காவல் வீரன் எழுந்து நின்று சாளரத்தின் வழியாக எட்டிப் பார்த்தான். ஒன்றும் தெரிய வில்லை. உப்பரிகையின் மாடிப்படியருகே வந்து பார்த் தான். எங்கும் அமைதியாக இருந்தது.

சற்று நேரம் அங்கேயே நின்று, காதுகளைக் கூர்மை யாக்கிச் சுற்றுமுற்றும் பார்த்தான். எந்தத் திசையிலிருந்தும் எந்தவிதச் சப்தமும் வருவது மாதிரித் தெரியவில்லை.

யாரோ ஒரு பெண் அலறியது மாதிரிக் கேட்டதே! ஒருவேளை தூக்கத்தில் வந்த கனவாக இருக்குமோ? அப்படித்தான் இருக்கும்!

மறுபடியும் வாயிலுக்கு வந்து உட்கார்ந்து சுவரில் ஈட்டியைச் சாத்தி வைத்துவிட்டுக் கண்களை மூடிக் கொண்டான்.

இளவரசியின் வாயைப் பொத்திய சொக்கநாதன் சற்று நேரம் கூர்ந்து கவனித்து விட்டு இளவரசியின் அலறல் எவரையும் தூக்கத்தில் இருந்து எழுப்பவில்லை என்று நிச்சயப்படுத்திக் கொண்டு இளவரசியைப் பார்த்துச் சொன்னான்.

''ஏய் சந்திரவதனா, கோழைப் பெண்ணே! ஏன் இப்படி அடிக்கடி அலறுகிறாய்? என்னைத் தெரியவில்லையா?''

இளவரசி மீண்டும் ''உம்... உம்'' என்று முனகி, அவன் கையை விலக்கிவிட முயன்றாள்.

''ஓ! கையை எடுக்க மறந்துவிட்டேனா? மன்னித்துக் கொள்! நீ அலறக்கூடாது என்பதற்காகத்தான் வாய் பொத்தினேன். மறுபடியும் அலறாதே!'' என்றவாறு கையை விலக்கினான்.

சந்திரவதனா அவனிடமிருந்து சற்று விலகி உட்கார்ந்து அவனையே முறைத்துப் பார்த்தாள்.

''நீ...நீங்கள்...'' அவள் வார்த்தைக் குழறியது.

''நானேதான்! அன்று கங்கைகொண்ட சோழபுரத்தில் பார்த்த அதே... என் பெயர்கூட உனக்குத் தெரியாதல்லவா... என் பெயர் முத்து... உனக்கு ஆசையாக இருந்தால் முத்து அத்தான் என்றுகூடக் கூப்பிடலாம். எனக்கு ஆட்சேபனை இல்லை.''

சந்திரவதனாவிற்கு இதற்குள் திகில் குறைந்து அவன் இன்னார் என்று தெரிந்ததும் அதிர்ச்சியையும், அவன் பேசிய விதம் ஆத்திரத்தையும் ஒருசேர வரவழைத்து.

''இங்கு எப்படி வந்தீர்கள்? எதற்காக வந்தீர்கள்?'' கோபத்துடன் கேட்டாள்.

''எப்படி வந்தேனா? கஷ்டப்பட்டுச் சுவரேறிக் குதித்து வந்தேன். எதற்காக வந்தேனா? என் ஆசைக் கண்மணியைப் பார்ப்பதற்கு! கூடிய விரைவில் உன்னை வந்து சந்திக்கிறேன் என்று சொன்னேனே. சொன்ன சொல்லை நிறைவேற்ற வேண்டாமா? நான் வராவிட்டால், எனக்காக நீ ஏங்கித் தவிப்பாய் என்று எனக்குத் தெரியாதா?''

''நான் ஒன்றும் உங்களுக்காக ஏங்கித் தவிக்கவில்லை'' எரிச்சலுடன் சொன்னாள்.

''நான் உன் பக்கத்தில் உட்கார்ந்து விசிறியவுடனே விழித்துக் கொண்டாய்? இதிலிருந்து நீ தூங்கவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது. ஓர் இளம் பெண், அதிலும் அழகான இளம் பெண், நடு இரவு நேரம் கழிந்த பிறகும் தூங்காமல் இருக்கிறாள் என்றால் அவள் தூக்கத்தைப் போக்கியது அவள் மனதைக் கவர்ந்த காதலன் நினைப்பு ஒன்றைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்? உன் மனதைக் கொள்ளையடித்த காதலன் என்னைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்! பாவம்! என்னை நினைத்து, நினைத்து ஏங்கி, ஏங்கி இதுவரை தூங்காமல் தவித்துக் கொண்டிருந்தாயா கண்ணே?''

சந்திரவதனாவிற்கு இதைக் கேட்டதும் கோபம் தாறுமாறாக வந்தது.

''நிறுத்துங்கள் உங்கள் ஆணவமான பேச்சை! அர்த்த ராத்திரியில் அந்தப்புரத்தில் ஒரு திருடனைப் போல் நுழைந்தது மட்டுமின்றி, இந்த நாட்டின் இளவரசியிடம் கண்ணியக் குறைவாகப் பேசுவதற்கு உங்களுக்கு எவ்வளவு துணிச்சல்?''

''என் உள்ளத்தைக் கொள்ள கொண்ட திருட்டுப் பெண்ணை எந்த நேரத்திலும் சந்தித்து எப்படிப் பேசினாலும் தகும்! ஆனால் சந்திரவதனா, நீ எப்பொழுது பார்த்தாலும் எனக்கு அழகாகவே தோன்றுகிறாயே, அது எப்படி? காலையில் பார்த்தாலும் அழகாக இருக்கிறாய். மாலையில் பார்த்தாலும் மதியை மயக்குகிறாய்! இந்த அர்த்த ராத்திரியில் அரைகுறை வெளிச்சத்தில், நீ ஆத்திரப்பட்டுப் பேசுவதுகூட அழகாகத்தான் இருக்கிறது. உலகத்தின் ஒட்டு மொத்த அழகையும் நீயே திருடி வைத்திருக்கிறாயா?''

சந்திரவதனா காதுகளைப் பொத்திக் கொண்டு கண்களில் கனல் பறக்கச் சொக்கநாதனை முறைத்துப் பார்த்துச் சொன்னாள்.

''மரியாதையாக இந்த இடத்தைவிட்டுப் போய் விடுங்கள். இல்லாவிட்டால் காவலர்களை அழைத்து உங்களைக் காராக்கிருகத்தில் அடைக்கச் சொல்லி உத்தரவிட வேண்டி இருக்கும்.''

''சந்திரவதனா உன்னிடம் அழகு இருக்கும் அளவிற்கு பண்பாடு இல்லையே?''

''நள்ளிரவில் கன்னிப்பெண் தூங்கும் இடத்திற்குக் கள்வனைப்போல் வந்து காதல் மொழி பேசுகிறவரிடம் பண்பாடோடு நடந்து கொள்ள வேண்டும் என்று எவரும் சொல்ல மாட்டார்கள்.''

''என்ன இருந்தாலும் மத யானையிடமிருந்து உன் உயிரைக் காப்பாற்றியவன்! அதற்காக நீ எனக்கு நன்றி தெரிவிக்காவிட்டாலும், இப்படியா என்மீது கோபக் கனலைக் கொட்டுவது?''

''அதற்குத்தான் அப்பொழுதே நன்றி தெரிவித்துவிட்டேன். அப்பொழுதும் தராதரமின்றிப் பேசினீர்கள். இப்

பொழுதும் தராதரமின்றிப் பேசுகிறீர்கள். மரியாதையாகப் போகிறீர்களா இல்லையா?''

''என்ன இருந்தாலும் வீட்டுக்கு வந்த விருந்தினரை இப்படியா விரட்டி அடிப்பது? இதுவா நமது பண்பாடு! விருந்தினரை அன்போடு எதிர்கொண்டு ஆசனத்தில் அமர்த்தி அறுசுவை உணவு பரிமாற வேண்டாமா? இப் படி ஆத்திரப்படக் கூடாது கண்ணே!''

''நீங்கள் எல்லை மீறிப் பேசுகிறீர்கள்.''

''உனக்காக பசி தாகம் மறந்து ஊர் அடங்கிய பிறகு ஓடோடி வந்திருக்கிறேன். இப்பொழுது பசியாக இருக்கி றது. எனக்காக உணவு பரிமாறினால் என்ன? உன் கையால் உணவருந்திய பாக்கியமாவது எனக்குக் கிட்டும்.''

''அது இந்த ஜென்மத்தில் நடக்காது. மரியாதையாகப் போகிறீர்களா இல்லை காவலர்களை அழைக்கட்டுமா?''

''சரி போகட்டும். ஒரு குவளைத் தண்ணீராவது கொடேன். அந்தத் திருப்தியாவது எனக்கு கிடைக்கட்டும்.''

''ஒரு சொட்டுத் தண்ணீர் கூட உங்களுக்குத் தரமாட் டேன். இவ்வளவு நேரம் உங்களுடன் பேசியதே தவறு.''

''அப்படியா! நீயாகவே என்னைத் தேடி வந்து உன் கையாலேயே உணவை எடுத்து என் கையில் வைத்துச் சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள் என்று என்னைப் பார்த்துக் கெஞ்சச் செய்யட்டுமா?''

''வீரரே, உங்களைப்பற்றி அளவுக்கதிகமான தற்பெரு மையில் தருக்கிப் பேசுகிறீர்கள்! இந்தச் சந்திரவதனாவின் மனதை உங்களால் எந்தக் காலத்திலும் அசைக்க முடியாது. நீங்கள் சொன்ன அந்தச் செயல் ஏழேழு ஜென்மம் எடுத்தா லும் நடக்காது.''

''அப்படியா.''

''அப்படித்தான்!''

''என்னை நீ காதலிக்கவில்லையா?''

''இப்படி நீங்கள் எதிர்பார்ப்பதே முட்டாள்தனம். தகுதிக்கு மீறிய செயல் என்று இன்னுமா நீங்கள் உணர வில்லை? இதுதான் எல்லை. இதற்கு மேலும் நீங்கள் இங்கு இருந்தால், காவலர்களை நான் அழைக்க வேண்டி வரும். போகிறீர்களா இல்லையா?'' இளவரசி கோபத்து டன் கத்தினாள்.

சொக்கநாதன் விருட்டென்று கோபத்துடன் எழுந்தான்.

''சரி. நீ காவலர்களை அழைக்கலாம்'' என்றான்.

சந்திரவதனா திகைத்துப் போய் அவனைப் பார்த்தாள்.

''இன்னும் ஏன் தயங்குகிறாய்? நான் சொன்னது உன் காதுகளில் விழவில்லையா? போய் காவலர்களைக் கூட் டிக் கொண்டு வா.''

'காவலர்கள் உங்களைப் பிடித்துவிட்டால் சிறையில் தள்ளிச் சித்திரவதை செய்வார்கள். என் உயிரைக் காப்பாற் றியதற்காக உங்களுக்குச் சிறிதளவு இரக்கம் காட்டுகி றேன். ஓடிப்போய் விடுங்கள்.''

''அதைப்பற்றி உனக்கென்ன கவலை? நான் இந்த இடத்தைவிட்டு நகர மாட்டேன். போய்க் காவலர்களைக் கூட்டிக் கொண்டுவா.''

சந்திரவதனா மறுபடியும் தயங்கினாள்.

''ஏன் தயங்குகிறாய் சந்திரவதனா? அப்படியானால் என்மீது உனக்குக் காதல் இருக்கிறது இல்லையா? ஆசைக்

குரியவனைச் சிறையில் தள்ள உனக்கு மனம் வரவில்லை. அப்படித்தானே!''

இதைக் கேட்டவுடன் சந்திரவதனா ஆத்திரத்துடன் எழுந்து கதவை நோக்கி வேகமாகச் சென்றாள்.

''சந்திரவதனா கொஞ்சம் நில்'' என்றான் சொக்க நாதன்.

சந்திரவதனா திரும்பிப் பார்த்தாள்.

''காவலர்கள் வருவதற்குள் நான் ஓடிப்போய் விடுவேனோ என்று நீ நினைத்தால், உன் கையாலேயே எனது கை கால்களைக் கட்டிப்போட்டுவிட்டு அப்புறமாகக்கூட நீ காவலர்களை அழைக்கலாம்.''

''அப்படியாவது உங்கள் மீது என் விரல்கள் பட வேண்டும் என்ற உங்களது அற்ப எண்ணம் எனக்குப் புரிகிறது. உங்களுக்குத் தைரியம் இருந்தால், காவலர்கள் வரும்வரை தைரியமாக இதே இடத்தில் நில்லுங்கள் பார்க்கலாம்.''

''உத்தரவு'' என்று கேலியாகப் பணிந்து ''இனியும் உனக்குக் காவலர்களைக் கூப்பிட மனம் வரவில்லையா?'' என்றான் புன்னகைத்து!

சந்திரவதனா கோபத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு வேகமாகக் கதவருகே சென்று ஆத்திரத்துடன் திறந்தாள்.

பிறகு வெளியே எட்டிப் பார்த்து ''ஐயையோ, ஆபத்து, ஆபத்து, ஆபத்து! ஓடி வாருங்கள்'' என்று கத்தினாள்.

அவள் அலறிய அலறல் கட்டிடத்தையே அசைத்து

விடும் போல் இருந்தது. ஏழு மாடிக் கட்டிடத்தில் ஆங்காங்கே காவலுக்கு நிறுத்தப்பட்டவர்கள், தூக்கம் கலைந்து ஓடோடி வந்தார்கள்.

''ஆபத்து! ஆபத்து! ஐயையோ! யாராவது ஓடி வாருங்கள்!'' என்று சந்திரவதனா மறுபடியும் கத்தியவாறு அறைக்குள் திரும்பிப் பார்த்தாள்.

சொக்கநாதன் கைகளைக் கட்டியபடி, புன்னகை சிந்தியவனாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரத்தில் இருபதுக்கும் மேற்பட்ட காவலர்கள், கைகளில் ஆயுதம் தாங்கியவர்களாக இளவரசி நிற்கும் இடத்திற்கும் ஓடோடி வந்தார்கள்.

''இளவரசியாரே, என்ன ஆயிற்று?''

''யாரோ ஒரு திருடன் என் அறைக்குள் நுழைந்திருக்கிறான். உம். சீக்கிரம் போய்ப் பிடியுங்கள்.''

வாசலை நன்றாகத் திறந்து விட்டு உள்ளே நிற்கும் சொக்கநாதனைக் காட்டி ''அதோ அவன்தான்! சீக்கிரம் போய்ப் பிடியுங்கள்!'' என்று ஆணையிட்டாள்.

மறுவிநாடியே இருபது காவலர்களும் சொக்கநாதனை நோக்கி ஓடி வந்தார்கள். அதுவரை கையைக் கட்டிக் கொண்டு பேசாமல் இருந்த சொக்கநாதன். ஆயுதங்களை நீட்டியவாறு அந்த வீரர்கள் தன்னருகே வந்தவுடன் புலியைப்போல அவர்கள் மீது எகிறிக் குதித்தான்.

அவனது இரு கால்களும் இரு வீரர்களின் வயிற்றில் இறங்க, அவனது இரண்டு கைகளும் அந்த வீரர்களின் கைகளில் இருந்த வாட்களைப் பறித்தது. கண் இமைக்கும் நேரத்தில் இவ்வளவும் நடந்தது. சொக்கநாதன் இரு கைகளாலும் வாளைச் சுழற்றத் தொடங்கினான்.

அவனைச் சுற்றி இருபது பேரும் சூழ்ந்து கொள்ள சொக்கநாதன் பம்பரமாகச் சுழன்று நாலாபக்கமும் தாக்கத் தொடங்கினான்.

இளவரசி சந்திரவதனா பிரமித்துப் போய்ப் பார்த்தாள். இருபது வீரர்களும் அவனிடம் போரிட முடியாமல் திணறுவதையும் சொக்கநாதனின் கால்கள் ஓர் இடத்தில் பதியாமல் எகிறிக் குதித்து அவனது இரு கைகளின் வாட்களும் சுழற்காற்றைப் போல் சுழன்று சுழன்று வீசுவதையும் பார்த்து வியப்பின் எல்லைக்கே சென்றாள்!

அதே நேரம் வாட்கள் மோதும் ஒலியும், சொக்கநாதனுடன் போரிட்ட வீரர்கள் எழுப்பிய குரலும் அந்தப்புர வளாகம் எங்கும் எதிரொலிக்க கட்டிடத்தில் தூங்கிக் கொண்டிருந்த ஒவ்வொருவரும் விழித்துக் கொள்ள ஆரம்பித்தனர். ஆங்காங்கே இருந்த காவலர்களும் ஆயுதங்களை எடுத்து கொண்டு ஓடி வரத் தொடங்கினர்.

இதனை ஊகித்து உணர்ந்த சொக்கநாதன், துரிதமாகத் தனது பாணியை மாற்றிக் கொள்ள ஆரம்பித்தான். தன்னை வியப்புடன் பார்த்துக் கொண்டு நிற்கும் இளவரசியைப் பார்த்து கண்ணடித்தான்.

இளவரசிக்கு பிரமிப்பு மறைந்து கண்களில் கோபம் தெரிந்தது. சொக்கநாதன் அவளைப் புன்னகையுடன் பார்த்துத் தனது உதடுகளைக் குவித்து முத்தமிடுவதுபோல் அவளைப் பார்த்துச் சைகை செய்துவிட்டு அவள் ஆத்திரப் பட்டு முறைப்பதைப் பற்றிக் கவலையே படாமல் வீரர்களுடன் சண்டையிட்டவாறு சாளரம் அருகே வந்தான்.

பிறகு படாரென்று சாளரத்தின் வழியாகத் தாவி உடும்பின் வாலில் இருந்து தொங்கிய கயிற்றின் வழியாக 'சர்' என்று வழுக்கிக் கொண்டு இறங்கினான்.

''திருடன் கீழே இறங்குகிறான். பிடியுங்கள்'' என்று மேலே இருந்து வீரர்கள் கத்தினார்கள். சிலர் அதே கயிற்றின் வழியாக இறங்கத் தொடங்கினர்.

அதேசமயம் அந்தக் கட்டிடத்தில் இருந்த அனைத்து வீரர்களும் சொக்கநாதன் இறங்கிய இடத்திற்கு ஓடிவந்தார்கள். ஒரே கூக்குரலும், வாட்கள் மோதும் ஒலியும் கேட்கத் தொடங்கியது.

இளவரசி பயத்தில் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாளரத்தருகே வந்து எட்டிப் பார்த்தாள். இருட்டில் ஒன்றும் தெரியவில்லை.

தென்னந்தோப்பில் செல்லத் தாயின் குடிசையில் படுத்துக் கிடந்த அச்சுதப்பன் போதை தெளிந்து கண்விழித்தான். பக்கத்தில் செல்லத்தாயி படுத்துக் கிடந்தாள். மாலை நடந்த சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. நஞ்சப்பன் எங்கே என்று பார்த்தான். அவனைக் காணவில்லை.

அச்சுதப்பனுக்கு நாவறட்சி ஏற்பட, தண்ணீர் குடிப்பதற்காக எழுந்தான். அப்பொழுதுதான் தன் இடுப்பில் இருந்த அந்தப்புரத்துத் திட்டி வாசற் திறவுகோல்கள் இல்லாததைக் கவனித்தான்.

நஞ்சப்பன் மீது சந்தேகம் வந்தது. உடனே குதிரையில் ஏறி, அந்தப்புரத்திற்கு விரைந்து வந்தான். அதே நேரம் உள்ளிருந்து 'திருடன் பிடியுங்கள்' என்று கூக்குரல் கேட்டது.

இதற்குச் சற்று நேரம் முன்னதாக அந்தப்புரத்தில் எழுந்த கூக்குரல் அரசன் விஜயராகவ நாயக்கனையும் விழித்தெழச் செய்தது. 'யாரோ ஒரு திருடன் உள்ளே

புகுந்திருக்கிறான்' என்று கேள்விப்பட்ட மன்னன் இன்னும் சில வீரர்களை அழைத்து அந்தத் திருடனைப் பிடித்து வரச் சொல்லி உத்தரவிட்டான்.

அதே நேரம் மரத்தில் கட்டப்பட்டுக் கிடந்த தளவாய் ரங்கப்ப நாயக்கன் மயக்கம் தெளிந்து, தன்னருகே காவல் இருக்கும் வெங்கடகிருஷ்ணனை உற்றுப் பார்க்கத் தொடங்கினான்.

அந்தப்புரக் கட்டிடத்தின் ஆறாவது மாடியில் இருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த இளவரசி சந்திரவதனா அருகே ஒரு சேடிப் பெண் ஓடோடி வந்தாள்.

''இளவரசியாரே, திருடனைப் பிடித்துவிட்டார்கள். நமது தளவாயின் மைந்தர் அச்சுதப்பர் அந்தத் திருடனைக் கட்டி இழுத்துக் கொண்டு மன்னரிடம் கூட்டிச் செல்கிறார்'' என்றாள்.

இளவரசி இதைக் கேட்ட மறுவிநாடியே மன்னரின் இருப்பிடம் நோக்கி விரையத் தொடங்கினாள்.



# 60

அச்சுதப்பனுக்கு நெஞ்சம் எல்லாம் பதறிப் பதறித் துடித்தது. அந்தப்புரத்தின் திட்டி வாசற் திறவுகோல்களை மட்டும் காணவில்லை என்று உணர்ந்ததும் அவன் மூளையில் படிந்திருந்த அறைகுறை போதையும் அடியோடு மறைந்து அச்சம் சூழத் தொடங்கியது.

ஆடை விலகியபடி படுத்துக் கிடந்த செல்லத்தாயைத் தட்டி எழுப்பினான்.

''ஊஹூம்... ஹ்ம்... என்ன நீங்க... இந்த நேரத்தில... நாளைக்குப் பார்க்கலாம்... வேண்டாம்...'' சிணுங்கியவாறு திரும்பிப் படுத்தாள்.

''அடச்சீ! எழுந்திருடி! அறிவுக் கெட்ட கழுதை!'' என்றவாறு அவள் முதுகில் படாரென்று அறைந்தான்.

செல்லத்தாயி அரக்கப்பரக்க எழுந்தாள்.

''இடுப்பில் வைத்திருந்த திறவுகோலைக் காணவில்லை. எங்கேயாவது விழுந்திருக்கிறதா என்று பார்''

இருவரும் சேர்ந்து குடிசை முழுக்கத் தேடிப் பார்த்தார் கள். குடிசைக்கு வெளியே கள் குடித்த இடத்திலும் விளக்கை வைத்துக் கொண்டு பார்த்தார்கள். எங்கும் தென்படவில்லை.

''நஞ்சப்பன் எங்கே காணவில்லை? இங்கே அவன் படுக்கவில்லையா?'' என்று கேட்டான் செல்லத்தாயைப் பார்த்து.

''இங்கேதான் படுக்கச் சொல்லி வற்புறுத்தினேன். அவர் என்னைச் சட்டை பண்ணாமல் போய்விட்டார்'' என்றாள் வருத்தத்துடன்.

''எப்பொழுது போனான்?''

''தாங்கள் அளவுக்கு மீறிய போதையில் மயங்கி அப்படியே என் மீது சரிந்துவிட்டீர்கள். கள்ளின் போதை யில் கூட என்னுயை மார்பு மீதுதான் சரிய வேண்டுமா? ரொம்பப் பொல்லாதவர் நீங்கள்.''

''சீ! கழுதை! நஞ்சப்பன் எப்போது போனான் என்று சொல்'' என்றான் எரிச்சலுடன்.

''நீங்க மயக்கம் அடைந்தவுடன் நானும், நஞ்சப்ப னும் சேர்ந்து உங்களைத் தூக்கிக் கொண்டு வந்து குடிசைக் குள் படுக்க வைத்தோம். மறுநிமிடமே அவர் இங்கிருந்து கிளம்பிவிட்டார்.''

''போகும்பொழுது என் இடுப்பில் இருந்த திறவு கோல்களை எடுத்துச் சென்றானா?''

''இல்லையே! ஒருவேளை எனக்குத் தெரியாமல் எடுத்தாரோ? என்னவோ? நான் பார்க்கவில்லை.''

அச்சுதப்பனுக்கு ஒரு பக்கம் நஞ்சப்பன்மீது சந்தேகம் வந்தது. ஒருவேளை நஞ்சப்பனுடன் சேர்ந்து வரும் வழியில் எங்காவது விழுந்திருக்குமோ என்ற நினைப்பும் எழுந்தது.

அந்தப்புரத்திற்குள் ஏதாவது ஓர் அசம்பாவிதம் நடந்துவிட்டால் மன்னன் தன்னை உயிரோடு தோலுரித்து விடுவாரே என்ற அச்சம் அவனுக்குள் எழுந்தது.

அடுத்த விநாடியே தோப்பிற்குள் கட்டி இருந்த குதிரையை அவிழ்த்து, அதன்மீது பாய்ந்து ஏறி அந்தப் புரத்தை நோக்கி அவசரமாக விரைந்து வந்தான் அச்சுதப்பன்.

அந்தப்புரத்து மதில்சுவர் இருளில் மூழ்கிக் கிடந்தது. எங்கும் நிசப்தமாக இருந்தது. முதலில் திட்டி வாசல் அருகே ஓடோடி வந்தான்.

திட்டிவாசற் கதவு திறந்து கிடந்தது. அதனைக் கண்ணுற்றதும் அச்சுதப்பனுக்கு ஆத்திரம் எழுந்தது. அதே நேரம்தான் உள்ளுக்குள் இருந்து 'திருடன் கீழே குதித்து விட்டான். பிடியுங்கள்' என்று உப்பரிகையில் இருந்து கூக்குரல் கேட்டது.

தொடர்ந்து கட்டிடத்தின் கீழே உள்ள மரங்கள் அடர்ந்த பகுதியில் வாட்கள் மோதும் சத்தமும், நாலாபுறம் இருந்தும் வீரர்கள் ஓடி வரும் ஒலியும், ஒருசிலர் அலறும் கூக்குரலும் கேட்கத் தொடங்கியது.

அச்சுதப்பனுக்கு ஆத்திரமும், பயமும், கோபமும் ஒருசேர எழ வேகமாகத் திட்டிவாசல் வழியாக உள்ளே குதித்து இறங்கினான்.

## எஸ். பாலசுப்பிரமணியன்

அமைதியான நித்திரையில் ஆழ்ந்து கிடந்த மன்னன் விஜயராகவ நாயக்கன், அர்த்த ராத்திரியில் அந்தப்புர வளாகத்தில் இருந்து எழுந்த கூக்குரலைக் கேட்டுக் கண் விழித்தான்.

இருட்டுக்குள் யார் யாரோ ஓடுவதும், 'அதோ இருக்கிறான். கீழே இறங்கிவிட்டான். பிடியுங்கள். அடியுங்கள்' என்று ஆள் ஆளுக்குக் கத்திப் பேசுகிற கூச்சலும் இடை இடையே வாட்கள் மோதுகின்ற சப்தமும் கேட்டுப் பதறித் தன்னுடைய மஞ்சத்தில் இருந்து எழுந்து, அருகில் இருந்த மணியைப் பலமாக அடித்தான்.

மணி ஓசை கேட்டு ஓடோடி வந்து பணிந்த காவல் வீரனைப் பார்த்து, ''அங்கே என்ன கூச்சல் என்று பார்த்து வா'' என்று உத்தரவிட்டான்.

சற்று நேரம் கழித்துத் திரும்பி வந்த அந்தக் காவல் வீரன் ''நமது இளவரசியாரின் அந்தப்புரத்திற்குள் யாரோ ஒரு திருடன் நுழைந்து விட்டானாம்'' என்றான்.

''என்ன?'' என்று கோபத்துடன் எழந்த விஜயராகவ நாயக்கன், மஞ்சத்தில் இருந்த உடைவாளை எடுத்து மாட்டிக் கொண்டு, பக்கத்து அறைக்கு விரைந்து சென்றான்.

அங்கிருந்த வீரர்களை அவசரமாக அழைத்தான்.

''திருடனைப் பிடித்து விட்டார்களா?''

''இல்லை மன்னவா! காவலர்கள் விழித்தவுடன். திருடன் உப்பரிகையில் இருந்து கீழே குதித்துவிட்டானாம். தேடிக் கொண்டு இருக்கிறார்கள்.''

''முதலில் அந்தப்புரத்தில் இருக்கும் அனைத்து வாசல்களையும் மூடச் சொல்லுங்கள். யாரையும் வெளியே

விடவேண்டாம். இங்கிருக்கும் வீரர்கள் அனைவரையும் கூட்டிச் செல்லுங்கள். அந்தத் திருடன் தப்பிவிட்டால் உங்கள் தலைகள் தப்பி விடும் ஜாக்கிரதை! உம். சீக்கிரம்.''

மன்னனின் கண்களில் கனல் பறந்தது. அங்கிருந்து வீரர்கள் அனைவரும் வாட்களை உருவிக் கொண்டு சொக்க நாதன் கீழே குதித்த இடத்தை நோக்கி விரைவாக ஓடினார்கள்.

மரத்தில் கட்டப்பட்டு மயக்க நிலையில் கிடந்த தளவாய் ரங்கப்ப நாயக்கனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக மயக்கம் கலைந்து தன்னுணர்வு எட்டிப் பார்த்தது. கண் களை மெதுவாகத் திறந்து பார்க்கலானான்.

அவனருகில் காவலுக்கு நின்று கொண்டிருந்த வெங் கட கிருஷ்ணன், தூரத்தில் கேட்ட கூச்சலைக் கேட்டுத் திரும்பி நின்று பார்க்கத் தொடங்கினான்.

ஏகப்பட்ட கூக்குரலும், வாட்கள் மோதும் ஒலியும் கேட்பதை உணர்ந்தவுடன், அந்தப்புரம் முழுக்க விழித்துக் கொண்டது. அனைத்து வீரர்களும் சொக்கநாதனைப் பிடிக்க ஓடி வருகிறார்கள் என்பதை உணர்ந்த கிருஷ்ண னுக்குப் பதட்டம் ஏற்பட்டது.

தானும் ஓடிச் சென்று சொக்கநாதனுக்கு உதவலாமா என்று யோசித்தான். மரத்தில் கட்டப்பட்டிருந்த தளவாய் எப்படி இருக்கிறான் என்று திரும்பிப் பார்த்தான்.

வெங்கடகிருஷ்ணன் திரும்பிப் பார்ப்பதை உணர்ந்த தளவாய் மயக்கமுற்றுக் கிடப்பதைப் போலக் கண்களை மூடிக் கொண்டான்.

தளவாயின் நிலையைப் பார்த்துத் திருப்தியுற்ற வெங் கடகிருஷ்ணன், மறுபடியும் திரும்பி நின்று, கூக்குரல் எழும் திக்கை நோக்கியவாறு யோசிக்கத் தொடங்கினான்.

தன்னை இந்த இடத்தைவிட்டு நகரக் கூடாது என்று சொக்கநாதன் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறான். தனியாக நூற்றுக்கணக்கான வீரரைக் கூட அவன் சமாளிப்பான் என்றாலும், எதிர்பாராதவிதமாக அவனுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிட்டால்?

வெங்கடகிருஷ்ணனின் கவனம் வேறு திசையில் இருப்பதை உணர்ந்த தளவாய் கஷ்டப்பட்டுத் தன்னைப் பிணைத்திருந்த கட்டுக்களை அசைக்கத் தொடங்கினான். வாயில் இறுக்கமாக அடைத்திருந்த துணி அவன் மூச்சு விடுவதைக்கூடச் சிரமப்படுத்தியது.

கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய கைக்கட்டுகள் தளர ஆரம்பித்தன.

**சொ**க்கநாதனைச் சுற்றி நாலாபுறமும் வீரர்கள் சூழ்ந்து கொண்டார்கள். அதுவரை விளையாட்டாகச் சண்டை செய்து கொண்டிருந்த சொக்கநாதன், தன் பாணியை மாற்றி ஆவேசமாகப் போரிடத் தொடங்கினான்.

அவனது இரண்டு கைகளிலும் இருந்த வாட்கள் சுழன்று தாக்கத் தெடாங்கின. அவை சுழன்ற விதம் அவன் தோள்களில் இரண்டு சக்கரங்கள்தான் வேகமாகச் சுற்றுகி றதோ என்ற பிரமையை ஏற்படுத்தின.

இருந்தாலும் மேலும் மேலும் கூக்குரல் அதிகமாவ தும், ஏராளமான வீரர்கள் நாலா திசையில் இருந்து ஓடி வருவதையும், அரண்மனை வளாகம் முழுவதும் தீப்பந்

தங்கள் அவசரமாக ஏற்றப்படுவதையும் கண்ணுற்ற சொக்க நாதன் இனியும் இப்படிப் போரிட்டுக் கொண்டிருந்தால் தான் பிடிபடுவது நிச்சயம் என்று உணர்ந்து கொண்டான்.

மறுவிநாடியே வாள்கள் இரண்டையும் இரண்டு வீரர் கள் வயிற்றில் பாய்ச்சிவிட்டு ஓடினான். தொடர்ந்து வீரர் கள் அவனை எட்டுவதற்குள், உடும்பின் வாலில் இருந்து தொங்கிய கயிற்றைப் பிடித்து ஏறி அந்தப்புரத்தின் இரண் டாவது மாடியருகே வந்ததும், கயிற்றை அசைத்து, ஊஞ்ச லாடி தூரத்தில் இருந்த மரக்கிளையில் வந்து நின்றான்.

வீரர்கள் சிலர் அந்த மரத்தை நோக்கி ஓடி வந்தார்கள். சொக்கநாதன் மரக்கிளைகளின் வழியாக ஒவ்வொரு மரமா கத் தாவி இருளில் மறைந்தான். கீழே நின்ற வீரர்கள் அவன் எந்தப் பக்கம் சென்றான் என்று தெரியாமல் நாலாபுறமும் தேடத் தொடங்கினார்கள்.

**சொ**க்கநாதனைக் காப்பாற்றச் செல்வதா, இல்லை இங்கேயே நிற்பதா என்று குழம்பிக் கொண்டிருந்த வெங் கட கிருஷ்ணனின் பின் பக்கத்தில் உள்ள மரத்தில் கட்டப் பட்டிருந்த தளவாயின் கைக்கட்டுகள் தளர ஆரம்பித்ததும், தளவாய் ஓசை இல்லாமல் தன்னை விடுவித்துக் கொண் டான்.

பிறகு தனது வாய்க்குள் இருந்த துணியைக் கஷ்டப் பட்டு வெளியே எடுத்துப் போட்டுவிட்டு, கீழே கிடந்த ஒரு மரக்கட்டையை எடுத்துக் கொண்டு, வேறு பக்கமாகத் திரும்பி நிற்கும் வெங்கடகிருஷ்ணனின் தலையில் தாக்கு வதற்காக ஓசையின்றி அடிமேல் அடி எடுத்து வைக்கத் தொடங்கினான் தளவாய்.

சரியாக வெங்கடகிருஷ்ணன் அருகே நெருங்கித் தனது கையில் இருந்த மரக்கட்டையை ஓங்கி அவன் தலையை நோக்கி இறக்கியபோது, அவன் பின்புறமாக ஓர் உருவம் வந்து அவன் கையை வளைத்துப் பிடித்துக் கொண்டது. தளவாய் அந்த உருவத்தின் பிடியின் காரண மாக எழுந்த வலியால் தன்னை மறந்து முனகினான்.

இந்தச் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த வெங்கடகிருஷ்ணன் முதலில் திகைத்துப் போனான்.

''முட்டாள்! எங்கேயடா கவனமாக இருக்கிறாய்? நான் வராவிட்டால் இந்நேரம் உன் தலை சிதறியிருக்கும். முதலில் துணியை எடுத்துத் தளவாயின் வாயை அடை'' என்ற சொக்கநாதனின் குரலைக் கேட்டு மலர்ந்து அவன் சொன்னதைச் செய்தான்.

''இவ்வளவு கூச்சலைக் கேட்டதும் உன் உதவிக்கு வரலாமா? என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அதனால் தான்...''

''எந்தச் சூழ்நிலையிலும் கவனம் தேவை. இவன் கைகளை நன்றாகக் கட்டு.''

இருவரும் சேர்ந்து தளவாயின் கைகளை நன்றாகப் பிணைத்தனர். வாய்க்குள் இன்னும் ஒரு துணியைத் திணித்து அடைத்தார்கள்.

''ஆபத்து நீங்கிவிட்டதா முத்து?''

''இப்பொழுதுதான் அதிகமாகி இருக்கிறது. நாம் தப்ப வேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.''

''என்ன வழி?''

அவன் காதோடு சொன்னான் சொக்கநாதன். மறுவிநாடியே தளவாயின் உடைகளைக் கிழித்தார்கள். பிறகு வெங்கடகிருஷ்ணனின் முகத்தில் இருந்த தாடி, மீசையை எடுத்துத் தளவாயின் முகத்தோடு ஒட்டவைத்து, தளவாயை அடையாளம் கண்டுபிடிக்க முடியாதபடி மாற்றினார்கள்.

அந்த நேரம் திட்டி வாசல் வழியாக நுழைந்த அச்சுதப்பன் ''யாரடா அங்கே? என்னடா கூச்சல்?'' என்று அதிகாரமாகக் கத்தினான்.

''அச்சுதப்பன் வந்துவிட்டானே?'' என்றான் வெங்கட கிருஷ்ணன்.

''இதை நான் எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் இதுவும் ஒருவகையில் நமக்குச் சாதகம்தான்'' என்று சொக்கநாதன் பதிலுக்கு கிசுகிசுத்துவிட்டு அச்சுதப்பன் அருகே ஓடோடி சென்றான்.

சொக்கநாதனைப் பார்த்ததும் அச்சுதப்பன் கனல் தெறிக்க,

''நஞ்சப்பா, இங்கே எதற்கடா வந்தாய்? திட்டி வாசற் திறவுகோலைத் திருடி எடுத்து வந்தது நீதானே?'' என்றான்.

''மன்னவா, நடந்ததைச் சொல்கிறேன். தயவு செய்து பொறுமையாகக் கேளுங்கள். மன்னரிடம் இருந்து பாராட்டு பெறுவதற்கு அதிர்ஷ்டம் உங்களைத் தேடி வந்திருக் கிறது'' என்றான் பணிவாக.

''என்னடாச் சொல்கிறாய்?''

''கள்ளைக் குடித்தவுடன் நாம் இருவரும் அசந்து தூங்கிவிட்டோம். அப்போது யாரோ ஒருவன் நமது குடி

சைக்குள் புகுந்து உங்கள் இடுப்பில் இருந்த திறவுகோலை உருவிச் செல்வதைப் பார்த்தேன்.''

''அப்பொழுதே என்னை எழுப்பிச் சொல்ல வேண்டியதுதானேடா?''

''எழுப்பினேன். நீங்கள் ஆழ்ந்த போதையில் இருந்தீர்கள். சரி திறவுகோலை எடுத்தவன் என்ன செய்கிறான் என்று பார்க்கலாம் என்ற நினைப்பில் அவனைப் பின் தொடர்ந்து வந்தேன். அவன் அந்தப்புரத்திற்குள் நுழைந்தான். நானும் அவன் பின்னாடியே வந்தேன். பிறகு அவன் உப்பரிகையில் கயிறு வீசி ஏறி, இளவரசியாரின் அறைக்குள் நுழைவதைப் பார்த்தேன்.''

''ஐயையோ! அப்புறம்?''

''நானும் அந்தக் கயிற்றின் வழியாக ஏறலாமா என்று யோசித்தபொழுது, மேலே இளவரசியார் கத்தும் குரல் கேட்டது. உடனே அந்தத் திருடன் பயந்துபோய், கயிற்றின் வழியாக கீழே இறங்கினான். நான் கீழே நின்று பிடிக்கப் பார்த்தேன். மூர்க்கமாகப் போராடினான். என்னுடைய உதவிக்கு நாலைந்து வீரர்கள் ஓடி வந்தார்கள். அவர்களைக் கூடக் கொன்றுவிட்டான்.''

''பிடித்தீர்களா இல்லையா?''

''நானும், இன்னொரு வீரனும் சேர்ந்து அவனைப் பிடித்துக் கட்டிப்போட்டுக் கொண்டிருந்தோம். தாங்களும் வந்துவிட்டீர்கள்?''

''எங்கேயடா இருக்கிறான்?''

''சொக்கநாதன் அவனைக் கூட்டிக் கொண்டு, தளவாயைக் கட்டிப் போட்டிருக்கும் இடத்திற்கு வந்தான். தளவாயின் ஆடைகள் கிழிந்து இருப்பதும், முகத்தில் தாடி, மீசை மண்டிக் கிடந்ததாலும் அச்சுதப்பனுக்குத் தனது தந்தையை முற்றிலுமாக அடையாளம் தெரியவில்லை.

திருடன் என்ற நினைப்பில் தளவாயை முறைத்துப் பார்த்தான். தளவாய் தனது மகனைப் பார்த்து மலங்க மலங்க விழித்தான்.

''உனக்கு என்ன தைரியம் இருந்தால், இளவரசியின் அறைக்குள் புகுந்து திருட நினைப்பாய்?'' என்றவாறு தளவாயின் முகத்தில் ஓங்கிக் குத்தினான் அச்சுதப்பன்.

தளவாயின் வாய்க்குள் இறுக்கமாகத் துணி அடைத்து இருந்ததால் பேச முடியாமல் 'உம் உம்' என்று முனகினான்.

இதற்குள் நாலாபுறம் இருந்தும் வீரர்கள் ஓடிவருவது தெரிந்தது.

''மன்னவா, வீரர்கள் ஓடி வருகிறார்கள். இந்தத் திருடனை நீங்கள் பிடித்த மாதிரிச் சொல்லுங்கள். அப்பொழுதுதான் தங்கள் பெருமை மன்னரிடம் இன்னும் உயரும். மன்னர் முன்பு இந்தத் தடவை நான் வாயைத் திறக்க மாட்டேன். நானே திரும்பத் திரும்பத் தங்களைப் புகழ்ந்தால் மன்னருக்குச் சந்தேகம் வரலாம்.''

''ஆமாம், ஆமாம். நீ வாயைத் திறக்காதே! நானே சொல்லிக் கொள்கிறேன்.''

அப்பொழுது வீரர்கள் அவர்களருகே ஓடி வந்து நின்றனர்.

''முட்டாள்களா, இப்பொழுது ஓடி வருகிறீர்களாக்கும்! இந்தத் திருடனை எவ்வளவு கஷ்டப்பட்டுப் பிடிக்க வேண்டி இருந்தது. இழுத்துச் செல்லுங்களடா. இவனை மன்னரிடம்'' என்று ஆணவம் மிளிர உத்தரவிட்டான் அச்சுதப்பன்.

மறுவிநாடியே கைகள் கட்டப்பட்டிருந்த தளவாயை இழுத்துக் கொண்டு செல்ல ஆரம்பித்தார்கள்.



# 61

அந்தப்புரத்து மாளிகையின் உப்பரிகையில் இருந்து சாளரத்தின் வழியாகக் கீழே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த இளவரசி சந்திரவதனாவிற்கு இருட்டுக்குள் என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை.

வாட்கள் மோதும் ஒலியும், வீரர்கள் அலறும் கூக்குரலும் நாலாபுறம் இருந்தும் யார் யாரோ ஓடிவரும் ஓசையும் கேட்டதே ஒழிய, கீழே நடக்கும் சம்பவங்கள் எதுவும் அவள் கண்களுக்கு தெளிவாகத் தெரியவில்லை.

அந்தப்புர வளாகத்தில் இருந்த அனைத்துக் கட்டிடங்களிலும் குடி இருப்பவர்கள் விழித்துக் கொண்டதும், ஆங்காங்கே தீப்பந்தங்கள் அவசரமாக ஏற்றப்படுவதையும் பார்த்து அவள் மனம் பதறத் தொடங்கியது.

எவ்வளவு துணிச்சலான வீரன்! எத்தனை அநாயசமாகச் சண்டையிட்டான்! அவனைப் பிடித்து விடுவார்களோ?

இளவரசி மனம் பதறிச் சாளரத்திலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில்தான் அந்தச் சேடிப் பெண் ஓடி வந்து செய்தி உரைத்தாள்.

''இளவரசியாரே, திருடனைப் பிடித்து விட்டார்கள். நமது தளவாயின் மைந்தர் அச்சுதப்பர் அந்தத் திருடனைக் கட்டி இழுத்துக் கொண்டு மன்னரிடம் கூட்டிச் செல்கிறார்.''

இந்தச் செய்தியைக் கேட்டதும் இளவரசியின் இதயம் ஒரு கணம் துடித்து உருகியது.

கடைசியில் அவர் பிடிபட்டு விட்டாரே! என்னுடைய முட்டாள்தனமான செய்கையால் அவரை மாட்ட வைத்து விட்டேனே! அந்தப்புரத்தில் அநாவசியமாக எட்டிப் பார்த்த எவரையும் கண்களைக் குத்திக் குருடாக்கிவிடும் அளவுக்கு மன்னருக்கு ஆத்திரம் வரும்.

என்னுடைய அறைக்குள் நுழைந்து ஓடிவந்தவன் என்று தெரிந்தால் என் தந்தை அவரை நாற்சந்தியில் கழுவில் ஏற்றித் துடிக்க துடிக்கக் கொன்று விடுவாரே!

அர்த்த ராத்திரியில் அந்தப்புரத்தில் புகுந்து அரசன் மகளிடமே காதல் மொழி பேசத் துணிந்தவனுக்குத் தகுந்த தண்டனைதான் என்று விட்டுவிடலாமா?

அவள் மனம் கேட்கவில்லை! என்ன இருந்தாலும் தனது உயிரைப் பணயம் வைத்து என்னுயிரைக் காப்பாற்றியவன்! அவனை நான் பிடித்துக் கொடுத்து மரண தண்டனை வாங்கிக் கொடுத்தது மாதிரி ஆகக்கூடாது!

ஒப்பற்ற வீரன்! இவனைச் சாகவிடக்கூடாது. தந்தையிடம் ஏதாவது சொல்லி அவனை விடுவித்தே ஆகவேண்டும்.

இளவரசி அடுத்த கணமே தன் தந்தையின் அறையைத் தேடிச் செல்லத் தொடங்கினாள்.

அச்சுதப்பன் பெருமையுடன் நெஞ்சி நிமிர்த்திக் கொண்டு நிற்க, ஓடி வந்த வீரர்கள் கைகள் கட்டப்பட்டு, துணிகள் கிழிபட்டு, வாயில் துணி அடைக்கப்பட்டுப் பரிதாபமாக நின்று கொண்டிருந்த தளவாய் ரங்கப்ப நாயக்கனை நெட்டித் தள்ளினார்கள்.

தளவாய் தனது மகனைப் பார்த்துக் கண்களால் சைகை செய்ய முயன்று வாயால் 'ம்... ம்... ம்' என்று முனகிய வாறு, நகராமல் பிடிவாதமாக நின்றான்.

இதைக் கண்ட அச்சுதப்பன் ஆத்திரம் அதிகமாகி, ''என்னடா இன்னமும் உன் திமிர் அடங்கவில்லையா?'' என்றவாறு தளவாயின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

''மரியாதையாக நட! இல்லாவிட்டால் உன்னைச் சாட்டையால் அடித்தே இழுத்துச் செல்ல வேண்டி வரும்!'' என்றான் கர்வமாக.

அதே நேரம் நான்கு வீரர்கள் தளவாயின் பிடரியைப் பிடித்து நெட்டித் தள்ளினார்கள். தளவாய் நிலைகுலைந்து, பரிதாபமாக நடக்க ஆரம்பித்தான். இதே நேரம் அனைத்து வீரர்களும் அங்கே வந்து சேர்ந்து விட்டார்கள்.

உடனே அச்சுதப்பன் அருகில் நின்ற சொக்கநாதன் ''திருடனைத் திறமையாகப் போரிட்டுப் பிடித்த அச்சுதப் பர்'' என்று பெருங்குரலில் கத்தினான்.

கூடி நின்ற வீரர்கள் ''வாழ்க வாழ்க'' என்று முழக்க மிட்டனர்.

இப்படி மூன்று முறை சொக்கநாதன் கத்த, மற்றவர்க ளும் உற்சாகமாக வாழ்த்தினர்.

இதைக் கேட்டு கர்வமுடன் தனது மீசையை திருகிய வாறு நாலாபுறமும் ஒருமுறை நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு பார்த்தான் அச்சுதப்பன்.

பிறகு சொக்கநாதனைப் பார்த்து ''போதும் நஞ்சப்பா, எனக்குப் புகழ்ச்சி பிடிக்காது. என்னுடைய கடமை! இதில் நான் பெருமைப்படக் கூடாது'' என்றவாறு உள்ளுக்குள் மகிழ்ச்சி பொங்க, அவன் முதுகை ரகசியமாகத் தட்டிக் கொடுத்தான்.

''அடடா! எவ்வளவு உயர்ந்த எண்ணம்! 'இவரல்லவோ உன்னதமான தலைவர்'' என்று சப்தமாகச் சொன்னான் சொக்கநாதன்.

கூடி இருந்த வீரர்கள் 'ஆஹா, ஆஹா' என்று ஆர்ப்பரித்தனர்.

''உம், இவனை இழுத்துச் செல்லுங்கள்'' என்று அச்சுதப்பன் ஆணையிட, நாலைந்து பேர் தளவாயின் கைகளைப் பிடித்துச் சங்கிலியால் பிணைத்து இழுத்துச் செல்ல ஆரம்பித்தார்கள்.

சற்று தூரம் நடந்ததும் தளவாய் சற்று நின்று தனது மகனைத் திரும்பிப் பார்த்து ''ம்... ம்ம... ம்... ம்... ம்ம...'' என்று முனகினான்.

''மரியாதையாகப் போகிறாயா இல்லை?'' என்று அச்சுதப்பன் கோபத்துடன் தளவாயின் முதுகில் அறைந்து தள்ளினான்.

தளவாய்க்கு ஒருபுறம் அவமானமாக இருந்தது. மற்றொருபுறம் தன் மகனின் முட்டாள்தனமான செய்கையை நினைத்து ஆத்திரமாக வந்தது. மறுபடியும் தான் தயங்கி நின்றால் இந்த மடையன் என்னைச் சாட்டையால் அடித்து இழுத்துச் சென்றாலும் செல்வான், அது இதைவிட அவமானம் என்ற நினைப்பில் ரங்கப்ப நாயக்கன் தலைகுனிந்தவாறு தளர்ச்சியாக நடக்கத் தொடங்கினான்.

இதற்குள் அந்தப்புர வளாகத்தில் இருந்த அனைத்துத் தீப்பந்தங்களும் ஏற்றப்பட்டுவிட்டதாலும் அங்கிருந்த கட்டிடங்களின் அறைகளது விளக்குகளும் ஒளிவீசத் தொடங்கியதாலும் அங்கு ஏராளமான வெளிச்சம் தெரிந்தது.

அந்தப்புரத்தின் உப்பரிகைகளில் இருந்து ஏராளமான பெண்கள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர். இதை ஓரக்கண்ணால் பார்த்த அச்சுதப்பனுக்கு உள்ளுக்குள் பெருமை பொங்கிப் பொங்கி வழிய ஆரம்பித்தது.

இத்தனை பெண்களும் என் அசகாய வீரச் செயலைக் கேள்விப்பட்டு என்மீது மையலுற்று மனதிற்குள் தவிப்பார்கள்! தவிக்கட்டும், தவிக்கட்டும்!

இளவரசி சந்திரவதனாவும் இதேபோல் மேலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பாளா? கட்டாயம் பார்ப்பாள்! அவள் அறையில் புகுந்த திருட்டுப் பயலாயிற்றே! பார்க்காமலா இருப்பாள்!

இத்தனை வீரர்கள் கைக்கும் அகப்படாத திருடனை நான் பிடித்துக் கொண்டு செல்வதைப் பார்த்தவுடன் என்னைப் பற்றி, என் வீரத்தைப்பற்றி எவ்வளவு பெருமையாக நினைப்பாள்! இனிமேல்தான் அவளுக்கு என்மீது காதல் உருவாகும்! என்னைப் பார்த்தவுடனே உருகிப் போய்விடத்தான் போகிறாள்.

அதன்பிறகு நான்தான் அவள் காதலன், பிறகு கணவன், அதன்பிறகு இந்த நாட்டின் மன்னன். இதுமட்டும் நடக்கட்டும், இதற்குக் காரணமான நஞ்சப்பனை இந்த நாட்டிற்கே படைத்தளபதி ஆக்கி விடுகிறேன்!

எங்கே நஞ்சப்பன் என்று கண்களால் தேடிப் பார்த்தான். தன் அருகில் அவன் தலை தென்படவில்லை. மன்னரிடம் இந்தத் திருடனை இழுத்துச் செல்லும் பொழுது, தனது பக்கத்தில் நின்றால்கூட மன்னர் ஐயமுறுவாரோ என்று அவன் ஒதுங்கி வருகிறான் போலும், அப்படியே வரட்டும்!

அச்சுதப்பன் பிறகு பெருமையுடன் நாலாபுறமும் எட்டிப்பார்க்கும் பெண்களை ஏறிட்டுப் பார்த்தும் பார்க்காததுபோல் நெஞ்சை நிமிர்த்தி வந்து கொண்டிருந்தான்.

மன்னரின் மாளிகையை நெருங்க நெருங்க சொக்கநாதனும் வெங்கடகிருஷ்ணனும் கூட்டத்திலிருந்து படிப்படியாக நழுவிக் கடைசிப் பகுதிக்கு வந்துவிட்டனர்.

''முத்து, இனி என்ன செய்ய? இவர்களுடன் சேர்ந்து மன்னன் மாளிகைக்குச் செல்ல வேண்டுமா?'' என்றான் வெங்கடகிருஷ்ணன்.

''வேண்டாம், உள்ளே போனவுடன் உண்மை புலப்பட்டுவிடும். அதன்பிறகு நம்மைத் தேடுவார்கள். அதனால் உண்மை விளங்குவதற்குள் நாம் அந்தப்புரத்தை விட்டே அகன்றுவிட வேண்டும்.''

இருவரும் மெதுவாக வேறு பக்கமாக நடந்து அந்தப்புரத்தின் மதிற் சுவரருகே வந்தார்கள். திருடன் பிடிபட்ட மகிழ்ச்சியில் அந்தப்புரத்தின் மதிற்சுவர் காவற்பணி மந்தமாகி இருந்தது.

சற்று நேரத்தில் திட்டி வாசல் வழியாக இருவரும் வெளியேறி, அச்சுதப்பன் ஏறி வந்த குதிரையில் ஆரோகணித்து, அந்தப்புரத்தின் எல்லையை விட்டு அசுரகதியில் ஓடி மறைந்தனர்.

மன்னன் விஜயராகவ நாயக்கனுக்கு அந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட பிறகு தான் பதட்டம் குறைந்து நிம்மதி ஏற்பட்டது.

திருடனை அச்சுதப்பன் பிடித்து விட்டானாமே! பரவா யில்லை. தளவாயைப் போலவே அவன் மகனும் சிறந்த வீரன்தான்! வீணாக அவனை அன்று கடிந்து கொண்டோம். அதற்குப் பிராயச்சித்தமாக இன்று பகலில் மதுரை ஒற்ற னைப் பிடித்திருக்கிறான். நள்ளிரவில் அந்தப்புரத்தில் நுழைந்த திருடனைக் கஷ்டப்பட்டு பிடித்திருக்கிறான்.

வீரத்திலும், புத்திசாலித்தனத்திலும் தனது தந்தையை மிஞ்சி விடுவான். இந்த அச்சுதப்பன்! அந்தப்புரத்துக் காவற் பணியின் மீதும் இளவரசியின் பாதுகாப்பைப் பற்றியும் அவனுக்கு எவ்வளவு அக்கறை!

வரட்டும்! அவனுக்குத் தகுந்த சன்மானம் அளிக்கி றேன்.

அடுத்த சில நிமிடங்களில் சங்கிலியால் பிணைத்த தளவாய் ரங்கப்ப நாயக்கனை இழுத்துக் கொண்டு மன்ன ரின் மாளிகைக்கு வந்து சேர்ந்தான் அச்சுதப்பன்.

மன்னர் இருக்கும் அறைக்குள் நுழைவதற்கு முன் பாக, தளவாயைப் பிணைத்திருந்த சங்கிலிகளைப் பிடித்தி ருந்த வீரர்களிடம் இருந்து, சங்கிலியை வாங்கித் தானே பிடித்துக் கொண்டு தனது தந்தையை முதுகைப் பிடித்துத் தள்ளி நடக்கச் செய்து உள்ளே நுழைந்தான் அச்சுதப்பன்.

மன்னரைப் பார்த்தவுடன் பெருமை பொங்க, முகத் தில் கர்வம் மிளிர, தளவாயின் முதுகைப் பிடித்து பலமாக மன்னரை நோக்கித் தள்ளினான்.

தளவாய் நிலைகுலைந்து மன்னர் காலருகே வந்து விழுந்தான். பிறகு கஷ்டப்பட்டு எழுந்து நின்று மன்னரைப் பார்த்து ''ம்... ம்' என்று முனகினான் பரிதாபமாக.

''மன்னா இந்தப் பதர்தான் அந்தப்புரத்தில் கயிறு கொண்டு ஏறி நமது இளவரசியாரின் அறைக்குள் நுழைந்த திருடன்'' என்றான் பெருமையாக அச்சுதப்பன்.

மன்னன் இருந்த அறைக்குள் ஏராளமான விளக்குகள் ஏற்றப்பட்டு இருந்தாலும், தளவாயின் அலங்கோலமான உடையும், அவன் முகத்தில் ஒட்ட வைத்து முக்கால்வாசி முகம் முழுக்க மறைத்துக் கொண்டிருந்த தாடி மீசையும் அவன் யார் என்று சுத்தமாக யாராலும் அடை 'யாளம் கண்டு கொள்ள முடியாதபடி அமைந்திருந்தது.

விஜயராகவ நாயக்கன் தளவாயை ஏறிட்டுப் பார்த்தான். அவன் முகத்தில் கோபம் தாண்டவமாடத் தொடங்கியது.

''உனக்கு எவ்வளவு துணிச்சல் இருந்தால், அந்தப்புரத்திற்குள் நுழைவாய்?'' என்று அவன் கன்னத்தில் பளார் என்று அறைந்தான் மன்னன்.

அடிபட்டதால் ஏற்பட்ட அவமானத்தில் வாய் பேச முடியாத நிலையில் இருந்த தளவாய்க்குள் உள்ளுக்குள் திகில் ஏற்படத் தெடாங்கியது. மன்னன் ஆத்திரத்தில் தன்னை அதே இடத்தில் கொன்று விடுவானோ என்று அச்சம் அவன் மனதை அரிக்க ஆரம்பித்தது. இனியும் பே:சாதிருந்தால் தன் கதி அதோ கதிதான் என்ற பயம் எழுந்தது.

''ம்... ம்... ம்...'' என்று முனகினான்.

''மன்னரிடம் மரியாதையாக நில்லுடா! மறுபடியும் முனகினால் உன் குரல்வளையை அறுத்துவிடுவேன்'' என்று கோபமாகத் தளவாயின் கன்னத்தில் அறைந்தான் அச்சுதப்பன்.

சரியாக இதே நேரம்தான் இளவரசி அங்கு உள்ளே நுழைந்தாள். அவசரத்தில் பிடிபட்டவனைச் சரியாகப் பார்க்காமல், அந்த வீரனைத்தான் பிடித்து விட்டார்களோ என்ற நினைப்பில் அவள் கன்னத்தில் அச்சுதப்பன் அறைவதைப் பார்த்துச் சகிக்காது பதட்டமாக கூறினாள்.

''அவரை ஏன் இப்படி அடிக்கிறீர்கள்? நிறுத்துங்கள்.''

''சந்திரவதனா, வா. இவன்தானே உன் அறைக்குள் வந்தது? உனக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டதா?'' என்று பாசத்துடன் கேட்டான் மன்னன்.

இளவரசியைப் பார்த்ததும் அச்சுதப்பன் இன்னும் பெருமை பொங்க நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு பார்த்தான்.

இளவரசி அப்போதும் கட்டப்பட்டுக் கிடந்தவனைச் சரியாகக் கவனிக்காமல், ''அது வந்து... தந்தையே... இருட்டில் திடீரென்று யாரோ வந்தது மாதிரித் தெரிந்தது... இவனோ... இல்லை...'' மிகவும் தடுமாறினாள்.

''அது இருக்கட்டும். அச்சுதப்பா நீ எப்படி இவனை மடக்கிப் பிடித்தாய்?'' என்றான் மன்னன்.

அச்சுதப்பன் உடனே, ''மன்னர் தங்களுக்குத்தான் தெரியுமே எனது மூச்சின் ஒவ்வொரு விநாடியும் இளவரசியின் பாதுகாப்பைப் பற்றியே துடித்துக் கொண்டிருக்கிறது

என்று! வழக்கம்போல நள்ளிரவில் நடு ஜாமத்தில் அந்தப் புரத்து மதிற்சவரை ஒட்டி, ஒவ்வோர் இடமாக கவனித்துக் கொண்டு வந்தேன். அப்பொழுது உப்பரிகையில் இருந்து இளவரசியார் அலறும் குரல் கேட்டது. மறுவிநாடி நான் என்னைப் பற்றியே மறந்துவிட்டேன். ஒரே தாவாக மதிற்சு வர் மீது தாவி, அங்கிருந்து ஓடி வந்தேன். இந்தப் பதர் உப்பரிகையில் இருந்து குதித்து இறங்கி நமது வீரர்களு டன் சண்டையிட்டு ஏராளமான வீரர்களைக் கொன்றுவிட் டான். சும்மா சொல்லக்கூடாது. வாள் வீச்சில் வீரன்தான். ஆனால் என்னிடம் நடக்குமா?'' என்றான் கர்வம் மிளிர.

தளவாய் மறுபடியும் முனகினான்.

''சும்மா இருடா. மறுபடியும் முனகினே வாயைப் பெயர்த்து விடுவேன். அப்புறம் மன்னா, எல்லோரையும் வீழ்த்திவிட்டு ஓடி வரும் சமயம்தான் நான் அவனை எதிர்கொண்டேன். சண்டை என்றால் சண்டை அப்படி ஒரு சண்டை! என் வாள் வீச்சுக்கு முன் அவன் எம்மாத்திரம். அவன் வாள் பறந்தது. பிறகு அவன் கையைக் கட்டினேன். அதற்குப் பிறகுதான் மற்றவர்கள் ஓடிவந்தார்கள்!''

''பிரமாதம் அச்சுதப்பா! உன் தந்தையைப் போலவே ஒப்பற்ற வீரன் என்பதை இன்று உறுதிப்படுத்தி விட்டாய்!''

''தந்தையே, பாவம்! ஏதோ தெரியாமல் செய்திருப் பான் பிழைத்துப் போகட்டும், விட்டு விடுங்கள்'' என் றாள் சந்திரவதனா.

''இவனை விட்டுவிடுவதா? அந்தப்புரத்தில் திருட நுழைந்தவனை விடுதலை செய்வது நமது பரம்பரைக்கே அவமானம்! இவனை விடிவதற்குள் அந்தப்புரத்து வாச

வில் கழுவேற்றிக் கொல்ல வேண்டும்'' என்று கோபத்துடன் கூறினான் மன்னன்.

இதைக் கேட்டவுடன் தளவாய் திகிலடைந்து 'ம் ம்' என்று தன் பலம் கொண்ட மட்டும் முனகினான்.

''யாரடா நீ? எங்கிருந்து வந்தாய்?'' என்றான் மன்னன்.

'உம்... உம்' என்று பரிதாபமாக முனகினான் தளவாய்.

''வாய்க்குள் துணியை வைத்து அடைத்திருக்கிறாய் போலும். முதலில் அதனை அகற்று. அவன் யார் என்று விசாரிக்கலாம்.''

மறுகணம் அச்சுதப்பன் தனது தந்தையை நெருங்கி, வாய்க்குள் கையை விட்டுத் துணியை உருவி எடுத்தான்.

''மன்னா, என்னைத் தெரியவில்லையா? நான்தான் தளவாய் ரங்கப்ப நாயக்கன்'' என்று பரிதாபமாக அலற ஆரம்பித்தான்.



# 62

கைகள் கட்டப்பட்டு, அதன்மீது சங்கிலி கொண்டு பிணைக்கப்பட்ட திருடன் வாயில் அடைக்கப்பட்டிருந்த துணி முழுவதையும் அச்சுதப்பன் உருவி எடுத்தவுடன் அவன் பேசிய வார்த்தைகள் அங்குள்ள அத்தனை பேரையுமே துணுக்குறச் செய்தன.

''மன்னா என்னைத் தெரியவில்லையா? நான்தான் தளவாய் ரங்கப்ப நாயக்கன்'' என்று அந்தத் திருடன் சொன்னவுடன் மன்னனுக்கே முதலில் நம்புவதற்குக் கஷ்டமாக இருந்தது.

அவனை உற்றுப் பார்த்தான். முகம் முழுக்கக் காடாகப் பரந்து கிடந்த தாடி, மீசை! அலங்கோலமாகக் கிழிந்த ஆடைகள்! இவன் தளவாயா? குரலைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது.

இதே குழப்பத்தில் அச்சுதப்பனும் திகைத்துப் போய் நிற்க, தளவாயின் குரல் அவனை நோக்கிக் கோபத்துடன் ஒலித்தது.

''அச்சுதப்பா, அறிவு கெட்ட நாயே! என் கைக் கட்டுகளை அவிழ்த்து விடுடா! இன்னும் புரியவில்லையா உனக்கு!''

அச்சுதப்பன் பதறிப் போய்த் தளவாயின் அருகில் ஓடிவந்து அவன் கைகளைப் பிணைத்திருந்த சங்கிலி கயிறு இவற்றை அவசரமாக பிரித்து எறிந்தான்.

கைகள் விடுபட்டவுடன் தளவாய் தன் முகத்தில் சொக்கநாதன் ஒட்ட வைத்திருந்த தாடி, மீசைகளைக் களைந்தான். தளவாயின் முகத்தைப் பார்த்ததும் அவர்கள் அனைவரின் சந்தேகமும், விலகி திகைப்பில் மூழ்க ஆரம்பித்தனர்.

இளவரசிக்கு ஒருபுறம் திகைப்பாக இருந்தாலும் மறுபுறம் மகிழ்ச்சியாக இருந்தது. அதுதானே பார்த்தேன்! இவர்களாவது அந்த வீரனைப் பிடிப்பதாவது!

அவர் எப்படி இவ்வளவு வீரர்களின் கண்களில் படாமல் தப்பினார்? தளவாய் எப்படி மாட்டிக் கொண்டார்? ஒன்றுமே புரியவில்லையே!

பிய்த்தெறிந்த தாடி மீசைகளைக் கீழே போட்டு மிதித்து விட்டு, அருகில் அதிர்ச்சியுடன் நின்றிருந்த தன் மகன் அச்சுதப்பன் கன்னத்தில் பலமாக ஓர் அறைவிட்டான் தளவாய்.

''உன்னுடைய முட்டாள்தனமான செயல் என்னை எந்த அளவுக்கு அவமானப்படுத்திவிட்டது பார்த்தாயா?'' என்றான் எரிச்சலுடன்.

மன்னன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

''ரங்கப்பா, என்ன இது? நீ எதற்கு இந்த வேஷத்தில் இருக்கிறாய்? நீதான் அந்தப்புரத்தில் திருடனைப் போல் நுழைந்தாயா? என்ன காரணத்திற்காக இளவரசியின் அறைக்குள் இந்த நேரங்கெட்ட நேரத்தில் நுழைந்தாய்?''

''மன்னவா அந்தத் திருடன் நானில்லை!'' அழாக் குறையாகச் சொன்னான் தளவாய்.

''பொய் வேறு சொல்கிறாயா? உப்பரிகையில் இருந்து கீழே குதித்த உடன் வீரர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். அவர்களைக் கொன்றுவிட்டு நீ ஓடிவரும்பொழுது, உன் மகனே உன்னிடம் மோதி, உன்னைக் கையோடு பிடித்துக் கொண்டு வந்திருக்கிறான். அப்படித்தானே அச்சுதப்பா?''

''ஆமாம்... இல்லை... இல்லை... அது வந்து...'' அச்சுதப்பன் திணறினான்.

''என்னடா இரண்டு பேருமே திருதிரு என்று விழிக்கிறீர்கள்? நீங்கள் எதையோ மறைக்கிறீர்கள் என்பது புரிகிறது. உண்மையைச் சொல்லுங்கள். இல்லாவிட்டால் உங்கள் இருவரையுமே விடிவதற்குள் கழுவேற்றச் சொல்லி விடுவேன்.''

தளவாய் உடனே பதறிப்போய், ''நடந்தது என்னவென்று சொல்லி விடுகிறேன் மன்னா'' என்றான் அழாக் குறையாக.

''சொல்லுடா சீக்கிரம்''

தளவாய் ஒருவிநாடி தன் மகனை முறைத்துப் பார்த்தான். அச்சுதப்பன் அவசரமாகத் தலையைக் குனிந்து கொண்டான்.

''இன்று பகல் வேளையில் யாரோ ஒருவன் அந்தப்புரத்து மதிற்சுவர் ஓரமாக அடிக்கடி வந்து போகிறான். இளவரசியின் அறையையே உற்றுப் பார்க்கிறான் என்று என் ஒற்றர்கள் கூறினார்கள். நான் உடனே வந்து பார்ப்பதற்குள் அவன் ஓடிவிட்டான்.''

ஆரம்பத்தில் நடந்ததைச் சொன்னால் அச்சுதப்பன் மீது மன்னன் இன்னும் கோபப்படுவான் என்பதால் அதனை முற்றிலும் மறைத்து ஆரம்பித்தான் தளவாய்.

''அவன் திருடனாகத்தான் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் இரவில் எல்லோரும் தூங்கிய பிறகு அந்தப் புரத்திற்குள் கண்டிப்பாக நுழைவான் என்று எதிர்பார்த்துத் திட்டி வாசல் அருகே நான்கு வீரர்களோடு காத்துக் கிடந் தேன். நான் நினைத்த மாதிரியே அவனும், இன்னொருவ னும் உள்ளே நுழைந்தார்கள். உடனே நாங்கள் அவனைப் பிடித்துக் கொண்டோம்.''

''பின்னர் என்ன நடந்தது?''

''அவனை யார், எவன் என்று நான் விசாரிக்கும் பொழுது அவன் தனது கையில் வைத்திருந்த உடும்பை நான் எதிர்பாராத நேரத்தில் என் மீது எறிந்தான். அந்தப் பிராணி என் முகம் முழுக்க நகத்தால் பிறாண்டி என்னைத் தள்ளியதும் நான் நிலைகுலைந்து கீழே விழுந்து விட் டேன். உடனே அவர்கள் இருவரும் சேர்ந்து என்னுடன் வந்த வீரர்களைக் கொன்றுவிட்டு, என்னை மயக்கம் வரும்வரை அடித்துப் போட்டு, என் வாயில் துணி அடைத்து ஒரு மரத்தில் கட்டி வைத்தார்கள்.''

''வெட்கம், வெட்கம்! இரண்டு பேர் சேர்ந்து நான்கு வீரர்களையும் இந்த நாட்டின் தளவாயையும் முறியடித்து இருக்கிறார்கள். மேலே சொல்லுடா.''

''அப்புறம் எனக்கு என்ன நடந்தது என்றே தெரியாது. மறுபடியும் நான் கண் விழித்துப் பார்க்கும்பொழுது எனக் குக் காவலாக ஒருவன் மட்டும் நின்று கொண்டிருந்தான். மற்றவன் எங்கே சென்றான் என்று தெரியவில்லை. அப் பொழுது அந்தப்புரக் கட்டிடம் அருகிலிருந்து ஒரே கூச்ச

லாகக் கேட்டது. எனக்குக் காவலாக நின்று கொண்டிருந்தவன் கவனம் முழுவதும் அந்தப் பக்கம் இருந்தது. நான் மெதுவாகக் கைக்கட்டுகளை விடுவித்துவிட்டு, கீழே கிடந்த மரக்கட்டையை எடுத்து அவனைத் தாக்க முயலும் பொழுது, மற்றொருவன் எங்கிருந்தோ ஓடி வந்து என் பின்புறமாகப் பிடித்துக் கொண்டான். பிறகு இருவரும் சேர்ந்து என்னை அடித்து, வாயில் துணி அடைத்துக் கைகளைக் கட்டினார்கள்.''

''அப்புறம்?''

''இருவரும் தங்களுக்குள் ரகசியமாகப் பேசிக் கொண்டு என் உடைகளைக் கிழித்து, முகத்தில் இந்தத் தாடி மீசைகளை ஒட்ட வைத்தார்கள். அந்த சமயத்தில் அச்சுதப்பன் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான்'' என்றவாறு அச்சுதப்பனை முறைக்க, அவன் தலை நிமிர்த்தவே இல்லை.

உடனே அவர்கள் இவனிடம் வலியச் சென்று 'அந்தப் புரத்தில் நுழைந்த திருடனைப் பிடித்துக் கட்டிப் போட்டு வைத்திருக்கிறோம். நீங்கள் இவனை மன்னரிடம் இழுத்துச் செல்லுங்கள்' என்றார்கள். இந்த மடையனும் அதைப் பற்றி விசாரிக்காமல் என்னை இங்கு இழுத்துவிட்டான். இடையில் அவனைப் பார்த்துக் கணகளால் சைகை செய்ததைக்கூட இவன் கவனிக்கவில்லை.''

இதைக் கேட்டவுடன் மன்னன் அச்சுதப்பனை முறைத்தான்.

''அச்சுதப்பா இதென்ன புதுக் கதை? நீ இவனுடன் சண்டையிட்டுப் போராடி இவனைப் பிடித்து வந்ததாகச் சொன்னாயே? இவன் சொல்வது உண்மையா? இல்லை நீ சொன்னது உண்மையா?''

"அது வந்து... மன்னவா... நான் அந்தப்புரத்துக் காவலுக்காக மதிற்சுவரைச் சுற்றி வந்து கொண்டிருந்த பொழுது, திட்டி வாசற் கதவு திறந்து கிடந்தது. பதறிப் போய் உள்ளே நுழைந்து பார்த்தபொழுது, அந்தப் புரத்தி னுள் அமளி கிளம்பியது. அப்பொழுது இரண்டு பேர் இவரைக் கட்டி இழுத்து என் முன் கொண்டு வந்து 'இந்தத் திருடன் இளவரசியாரின் அறைக்குள் நுழைந்து விட்டான். நாங்கள் பிடித்துக் கட்டிப் போட்டோம்' என்றார்கள். நான் உடனே அதை நம்பி..."

"மூடனே! ஏதோ நீதான் பெரிய சாகசம் செய்து திருடனைப் பிடித்ததாகப் பெருமை அடித்தாயே, அத்த னையும் பொய்யா? இதில் எதை நம்புவது என்று புரியவே இல்லையே? சந்திரவதனா, நீயாவது உண்மையைச் சொல்! என்ன நடந்தது?"

"நான் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தேன் தந் தையே! அப்பொழுது சாளரத்தருகே யாரோ குதித்து இறங் கும் ஓசை கேட்டது. நான் திடுக்கிட்டு எழுந்து பார்த்த பொழுது, யாரோ ஒருவன் நின்று கொண்டிருப்பது தெரிந் தது. உடனே நான் பயந்து கதவை நோக்கி ஓடி 'ஆபத்து, திருடன். ஓடி வாருங்கள் என்று கத்தினேன். வீரர்கள் ஓடி வந்து அவனோடு சண்டையிட்டார்கள். அவன் சாமர்த்திய மாக மறுபடியும் சாளரத்திற்கு ஓடி அங்கிருந்து கீழே இறங்கிவிட்டான்."

"அவன் முகத்தை நன்றாகப் பார்த்தயா?"

இளவரசி சற்றுத் திணறி "ஓரளவு... இருட்டாக இருந்ததால் முற்றிலும் சரியாகக் கவனிக்க முடிய வில்லை" என்றாள்.

"அந்தத் திருடன் தாடி மீசை ஒட்டிய இந்தத் தளவாயா?"

''இல்லை தந்தையே! அவனும் தாடி மீசை வைத்திருந் தான். ஆனால் அது நிச்சயம் நமது தளவாய் இல்லை. வேறொரு ஆள்தான்.''

''அவனை இதற்கு முன்னர் பார்த்திருக்கிறாயா?''

''இல்லை. இல்லை. நான் அவனை இதற்கு முன் எங்கேயும் பார்த்ததில்லை'' என்றாள் அவசரமாக.

தளவாய்க்கு கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு பிறந் தது. மன்னன் மறுபடியும் அவர்கள் இருவரையும் முறைத் துப் பார்த்தான்.

''வெட்கம், அவமானம். மகாக் கேவலம். 'தஞ்சை யின் வீரம் இவ்வளவு தரக்குறைவாகப் போய்விடும் என்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. யாரோ ஒரு திருடன் இத்தனைக் கட்டுக் காவலர்களையும் மீறி இங்கு நுழைந் தது மட்டுமின்றி, இத்தனை வீரர்களைக் கொன்றுவிட்டு சாமர்த்தியமாகத் தப்பி வேறு போயிருக்கிறான். அவன் யார் என்றுகூடத் தெரியவில்லை!''

''அவன் பெயர் முத்து என்பது மட்டும் தெரியும் மன்னவா'' என்றான் தளவாய்.

''எப்படித் தெரியும்?''

''என்னை அவர்கள் இரண்டாவது முறையாகக் கட் டிப் போடும் பொழுது 'ஆபத்து நீங்கிவிட்டதா முத்து' என்று என்னருகே இருந்தவன் அவனைக் கேட்டான்.

இதைக் கேள்விப்பட்டவுடன் இளவரசியின் இதயத் தில் எல்லையற்ற மகிழ்ச்சி பெருகத் தொடங்கியது. அவர் பெயர் முத்து என்றுதானே கூறினார். அவரேதான்!

எத்தனை சாமர்த்தியமாகத் தளவாயையும் அவர் மைந்தரையும் ஏமாற்றி இருக்கிறார்! இளவரசிக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

''அச்சுதப்பா, அந்த இருவரின் அடையாளங்கள் உனக்கு நன்றாகத் தெரியும் அல்லவா?''

''தெரியும் மன்னவா!'' என்றான் தலைகுனிந்தவாறு.

''இப்பொழுதே நீ சென்று அந்தப்புரம் முழுவதும் சல்லடை போட்டுத் தேடிப்பார். அவர்களை எப்படியாவது பிடித்து வா.''

அச்சுதப்பன் உடனே நாலைந்து வீரர்களை அழைத்துக் கொண்டு அந்த இடத்திலிருந்து கிளம்பினான்.

அப்பொழுது இளவரசன் மன்னார்தாசன் அந்த அறைக்குள் நுழைந்தான். மன்னன் விஜயராகவ நாயக்கன் தனது மைந்தனைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்தான்.

''இவ்வளவு நேரம் இந்த இடமே அமளி துமளிப்பட்டுக் கொண்டு இருக்கிறது. நீ சாவகாசமாக வருகிறாயே! இவ்வளவு நேரமும் தூங்கிக் கொண்டு இருந்தாயா?'' என்று எரிச்சலுடன் கேட்டான்.

''இல்லை தந்தையே! கூச்சலைக் கேட்டவுடன் விழித்துக் கொண்டேன். அந்தப்புரத்திற்குள் யாரோ திருடன் புகுந்துவிட்டதாகச் சொன்னார்கள். உடனே என்னருகே இருந்த வீரர்களை நான் தயார்ப்படுத்தி கிளம்பிய நேரத்தில் 'அச்சுதப்பன் திருடனைப் பிடித்து இழுத்துக் கொண்டு மன்னரிடம் செல்கிறார்' என்றார்கள். அதனால்தான் இங்கு ஓடோடி வந்தேன். சந்திரவதனா, உனக்கு ஓர் ஆபத்தும் நேரிடவில்லையே?'' என்று கவலையுடன் கேட்டான்.

''இல்லை அண்ணா'' என்றாள் இளவரசி.

''திருடன் எங்கே?'' என்று தந்தையைப் பார்த்துக் கேட்டான்.

''இதோ திருதிரு என்று விழித்துக் கொண்டு நிற்கிறானே, இவன்தான் அந்தத் திருடன்'' என்று தளவாயைப் பார்த்து ஏளனமாகக் கைநீட்டினான்.

''என்னது? தளவாயா? நம்ப முடியவில்லையே? உண்மையா?''

''உண்மையான திருடன், இவனைத் திருடனாக மாட்டி விட்டுச் சாமர்த்தியமாகத் தப்பிவிட்டான்'' என்றவாறு நடந்த நிகழ்ச்சிகளை மன்னர் தன் மகனுக்கு விளக்கமாகச் சொன்னார்.

இதைக்கேட்ட மன்னார்தாசனுக்கு முகத்தில் வியப்பும், பிரமிப்பும் மாறி மாறித் தோன்றியது.

''தந்தையே நடந்ததைப் பார்க்கும்போது அவன் திருடனாக இருப்பான் என்று எனக்குத் தோன்றவில்லை.''

இதைக் கேட்டவுடன் இளவரசிக்குப் பகீர் என்றிருந்தது.

''திருடனாக இல்லாவிட்டால் வேறு யார்?'' என்றான் மன்னன்.

''தெரியவில்லை. ஒரு திருடனுக்கு இவ்வளவு சாமர்த்தியம் இருக்காது. சாமர்த்தியம் இருந்தால் இவ்வளவு வீரம் இருக்காது. இரண்டும் சேர்ந்து அமைந்திருந்தால் அவன் பாராட்டுக்குரியவன்.''

''தளவாய்க்கு ஒரு முட்டாள் மைந்தன் அச்சுதப்பன் பிறந்திருப்பதைப்போல், எனக்கு நீ பிறந்திருக்கிறாய்'' என்றான் எரிச்சலுடன்.

''ஏன் தந்தையே இப்படிச் சொல்கிறீர்கள்?''

''பிறகு என்னடா? அந்தப்புரத்தில் உன் தங்கையின் அறைக்குள் ஒரு திருடன் புகுந்து தப்பியிருக்கிறான். அவனை நீ பாராட்டுகிறாய்.''

''எதிரியாக இருந்தாலும் மெச்சத்தகுந்த செயல் என்றால் பாராட்டத்தான் வேண்டும் தந்தையே!''

''நம்மையே ஒருவன் முட்டாளாக்கி இருக்கிறான். அது மெச்சத்தகுந்த செயல் என்று நாம் அவனைப் பாராட்ட வேண்டும். வரவர உனக்குப் பேசவே தெரியவில்லை. பெரியவர்களிடம் பேசும் முறைகூடத் தெரியாமல் இவ்வளவு நாள் விஜயநகரத்தில் என்னதான் கற்றாயோ?''

''அப்படி என்ன தந்தையே முறை தவறி நடந்து கொண்டேன்?''

''நமது குலகுருவிடம் நீ நடந்து கொண்ட முறை பாராட்டத்தகுந்ததா? முகத்தில் அறைந்தாற்போல் பேசிவிட்டு போனது எவ்வளவு தவறு?''

''அவர் பேசிய முறை மட்டும் சரியா தந்தையே? என்னை எவ்வளவு தரக்குறைவாக எடை போட்டுவிட்டார்.''

அப்பொழுது அச்சுதப்பன் அங்கு வந்தான்.

''என்ன அச்சுதப்பா, போன காரியம் என்ன ஆயிற்று? அவர்களைப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறாயா?'' என்றான் மன்னன்.

''இல்லை மன்னா! அவர்கள் தப்பித்துவிட்டார்கள்!''

''தப்பித்துவிட்டார்கள் என்பதை எவ்வளவு கம்பீரமாகச் சொல்லுகிறான் பார், மடையன்'' என்று பற்களைக் கடித்தான் மன்னவன்.

அச்சுதப்பன் தலை குனிந்தான். இளவரசிக்கு இதைக் கேட்டபிறகுதான் மனதிற்குள் நிம்மதியும் மகிழ்ச்சியும் பிறந்தது.

''ரங்கப்பா உன்னை இந்த நாட்டின் தளவாய் என்று சொல்வதற்கே வெட்கமாக இருக்கிறது. இன்னும் ஒரு மாதத்திற்குள் அந்தத் திருடனை நீ கண்டுபிடித்துக் கொண்டு வந்து என் முன்னால் நிறுத்தாவிட்டால் உன்னைத் தளவாய்ப் பதவியில் இருந்தே தூக்கிவிடுவேன்.''

தளவாய் அவமானத்துடன் தலை குனிந்தான்.

''அச்சுதப்பா, இனி உன்னை நம்பி அந்தப்புரத்துக் காவல் பணியை ஒப்படைப்பது அறிவீனமான செயல்! இனி இந்தப் பொறுப்புக்களை மன்னார்தாசன் ஏற்றுக் கொள்ளட்டும். மன்னார்தாசா, இந்த நாட்டின் வருங்கால மன்னன் நீ! நீதான் நமது அந்தப்புர மகளிரின் பாதுகாவல் முழுவதையும் ஏற்கும் அக்கறை கொள்ள வேண்டும்.''

''உத்தரவு தந்தையே.''

அச்சுதப்பன் தலைகுனிந்து நிற்க, தளவாய்க்கு உள்ளுக்குள் கடுகடுவென்று இருந்தது.

''மன்னார்தாசா, அப்புறம் ஒரு முக்கியமான விஷயம். நாளை மறுநாள் வைகுண்ட ஏகாதசி வருகிறது. அன்று நமது குலகுருவிற்கு நாம் செய்யும் மகத்தான மரியாதை

கோலாலகமாக நடக்க இருக்கிறது. நீ முதன் முதலில் கலந்து கொள்ள இருக்கிறாய். அதனால் நமது பரம்பரை வழக்கப்படி என் சொல்லைத் தட்டாது குருவிடம் பணி வன்புடன் நடந்து கொண்டு அவரது நல்லாசியை நீ பெற வேண்டும் புரிகிறதா?''

''சரி தந்தையே.''

ஆனால் அன்றுதான் தந்தைக்கும் மகனுக்கும் அடுத்த கட்ட மோதல் ஏற்படப் போகிறது என்று அவர்கள் எப்படி அறிவார்கள்?

அன்றுதான் மதுரவாணி இளவரசனைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படப் போவதையும் அவர்கள் அறிய மாட்டார் கள்.

அன்றுதான் சொக்கநாதனும், இளவரசி சந்திரவத னாவை மீண்டும் சந்திக்கப் பொருத்தமான திட்டம் உருவா வதற்கான களம் அமையப் போகிறது என்பதையும் எவர் தான் அறிவர்?



# 63

இளவரசி சந்திரவதனா விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினாள். மதுரவாணி ஒன்றும் புரியாமல் அவள் சிரிப்பதை எரிச்சலோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

சந்திரவதனாவிற்குச் சிரித்து சிரித்து புரை ஏறத் தொடங்கியது. மதுரவாணி அருகில் இருந்த தண்ணீர் குவளையை எடுத்து அவளிடம் நீட்டினாள். அவள் தண்ணீர் குடித்து முடித்தவுடன் தலையை லேசாகத் தட்டிக் கொடுத்தாள்.

''இப்பொழுதாவது சொல். நான் கேட்டது உனக்குச் சிரிப்பாகப் போய்விட்டது இல்லையா?'' என்றாள் மதுரவாணி எரிச்சலுடன்.

''என்ன கேட்டாய் நீ?''

''நேற்று இரவு யாரோ ஒரு திருடன் உன் அறைக்குள் புகுந்து விட்டானாமே, உனக்கு அவனால் ஏதாவது தீங்கு நேரிட்டு விட்டதா என்று கேட்டேன். அது உனக்குச் சிரிப்பாக இருக்கிறது இல்லையா?''

''கோபித்துக் கொள்ளாதேடி! நீ கேட்டவுடன் அந்தத் திருடர் நமது தளவாயையும் அவர் மகனையும் சாமர்த்திய மாக மாட்டிவிட்டு விட்டுத் தப்பித்துவிட்டாரே அதை நினைத்தேன், சிரிப்பு வந்துவிட்டது.''

''என்னது திருடரா? அந்தத் திருடனுக்கு இவ்வளவு மரியாதை நீ கொடுப்பது எனக்கு அதிசயமாக இருக்கிறது சந்திரவதனா!''

''அந்தத் திருடர் யார் தெரியுமா?''

''யாரடி?''

''அதுதாண்டி அவர்'' என்று சொல்லும்பொழுது அவ ளுக்கு வெட்கத்தில் முகம் சிவந்தது.

''அவர் என்றால்...''

''போடி! இன்னும் புரியவில்லையா? புரியாதது மாதிரி நடிக்காதே!''

''உண்மையிலேயே தெரியவில்லையடி!''

''அவர்தாண்டி... அன்று கங்கைகொண்ட சோழபுரத் தில் என்னை மதயானையிடமிருந்து காப்பாற்றினாரே...''

இதைக் கேட்டவுடன் மதுரவாணி வியப்புற்று, ''கட வுளே, அவன்தானா? நன்றாகப் பார்த்தாயா?'' என்றாள்.

''பார்த்தது மட்டுமின்றி நீண்டநேரம் அவரோடு பேசிக் கொண்டு இருந்தேன்'' என்றவாறு நடந்தது முழுக்க விவரமாகச் சொன்னாள் இளவரசி.

மதுரவாணி இதைக் கேட்டு வியப்பும், திகைப்பும் ஒரு சேர அடைந்து, ''இவ்வளவு நடந்ததா? இதை நீ மன்னரிடம் சொன்னாயா?'' என்றாள்.

''யாரிடமும் நான் சொல்லவில்லை. உன்னிடம் மட்டும் சொல்ல வேண்டும் என்று தவித்துக் கொண்டிருந்தேன். நல்லவேளையாக நீயே தேடி வந்துவிட்டாய். சொன்னபடியே அவர் செய்து காட்டிவிட்டார் பார்த்தாயா?'' என்றாள் பூரிப்புடன்.

''ஆமாம், ஆமாம். நீயும்தான் அவனுக்காகத் தினமும் ஏங்கிக் கொண்டிருந்தாய்! எப்போ வருவார், எப்போ வருவார் என்று துடித்துக் கொண்டிருந்தாய்! இப்பொழுது திருப்தியாகிவிட்டதா?''

''போடி! நான் ஒன்றும் அவருக்காக ஏங்கிக் கொண்டிருக்கவில்லை!''

''அவன் என்பது அவராகிவிட்டது! அவன் கோழை என்று குறை கூறிய நீயே இப்பொழுது அவன் வீரத்தை மெச்சிப் பேசுகிறாய்! அவன் மீது எல்லையற்ற காதலில் வீழ்ந்து விட்டாய் என்று புரிகிறது.''

''நான் ஒன்றும் அவரைக் காதலிக்கவில்லை.''

''காதலிக்காதவள், அவனைப் பற்றிய உண்மையான விவரங்களை உன் தந்தையிடம் சொல்ல வேண்டியது தானே?''

''மனம் வரவில்லையடி.''

''இதற்குப் பெயர்தானடி காதல்! உன் மனதை இந்த அளவுக்கு அசைத்தவன் உண்மையிலேயே சாமர்த்தியசாலி தான்! ஆனால் அழகற்றவனாக, விகாரமாக இருந்தான் என்று கேள்விப்பட்டேனே!''

''சீச்சீ! யாரடி சொன்னது? ஒருவேளை அவர் மாறு வேடத்தில் இருந்ததால் அப்படி நினைத்திருக்கலாம். உண்மையில் அவர் எவ்வளவு அழகாக இருப்பார்... இல்லை...

இல்லை... விகாரம்தான்'' இளவரசி தடுமாறி மாற்றி மாற்றிச் சொன்னாள்.

மதுரவாணி இளவரசியைச் சற்று நேரம் கூர்ந்து பார்த்தாள்.

''சந்திரவதனா இனியும் என்னிடம் மறைக்காதே! அழகும், வீரமும் இணைந்த ஒருவன் உனக்குப் பொருத் தம்தான். உன் மனது அவன் மீது மையல் கொண்டுவிட்டது உண்மைதானே?''

இளவரசி பதில் சொல்லாமல் தலைகுனிந்தவாறு இருந்தாள்.

''ஆமாமடி, இவ்வளவு தூரம் அவன் மீது ஆசை வைத்திருக்கும் நீ உன்னைத் தேடி வந்தவரை எதற்காகடி காட்டிக் கொடுத்தாய்?''

''எனக்கும் முதலில் மனம் வரவில்லையடி! வீரர் களை அழைத்தவுடன் பயந்துபோய் ஓடி விடுவார் என்று நினைத்தேன். மாறாக நின்று கொண்டே இருந்தார். பிறகு எனக்கும் முட்டாள்தனமான ஓர் எண்ணம். உண்மையி லேயே வீரர்கள் ஓடி வந்தால் என்ன செய்வார் பார்க்கலாம் என்ற எண்ணத்தில்தான் காவலர்களை அழைத்தேன். காவ லர்கள் ஓடி வந்ததும் நான் உள்ளுக்குள் எவ்வளவு பதறி விட்டேன் தெரியுமா? அவருக்கு மட்டும் ஏதாவது ஒன்று ஆகி இருந்தால்...'' மேற்கொண்டு சொல்ல வராமல் வருத்தத்துடன் தலைகுனிந்தாள் சந்திரவதனா.

''அவன் எப்பேர்ப்பட்ட வீரன் என்று இந்த நாடு முழுவதும் பரபரப்பாகப் பேசுகிறார்களே! அவனுக்கு... மன்னித்துக் கொள்ளுங்கள் இளவரசியாரே...' இனிமேல் அவன் இவன் என்று கூப்பிட்டால் என்மீது கோபப்படு வாய்... அவர்... சரிதானா.''

''ச்சீ போடி!'' என்று செல்லமாக சிணுங்கினாள் இளவரசி. பிறகு ''மதுரவாணி ஒரு விஷயத்தை நினைத்தால் எனக்கு வருத்தமாக இருக்கிறது. நேற்று இரவு முழுக்க என் மனதை அரித்துக் கொண்டு என்னைத் தூங்கவிடவில்லை...'' என்றாள்.

''என்ன விஷயமடி?''

''உன்னைத் தேடி இவ்வளவு கஷ்டப்பட்டு வந்திருக்கிறேன். பசியாக இருக்கிறது. ஒருவேளைச் சாப்பாடாவது உன் கையால் போடக்கூடாதா என்று கேட்டார். கடைசியாக ஒரு குவளைத் தண்ணீராவது கொடு என்று கேட்டார். அதைக்கூடத் தராமல் போய்விட்டேனே என்று நினைக்கும்பொழுது சற்று வேதனையாக இருக்கிறது.''

''அப்பொழுதே செய்வதை விட்டுவிட்டு, இப்பொழுது வேதனைப்பட்டு என்னடி பிரயோசனம்?''

''அப்பொழுது எப்படியடி தரமுடியும்? அர்த்த ராத்திரியில் திடீரென்று என் மஞ்சத்தினருகே பார்த்ததும் திகைப்பாகப் போய்விட்டது. பிறகு அவர் பேசிய பாணி எனக்கு எரிச்சலை வரவழைத்துவிட்டது. கட்டின மனைவி மாதிரி நினைத்துக் கொண்டு, சாப்பாடு போடச் சொல்கிறாரே என்று கோபம் வந்தது.''

''இனிமேல் கட்டப்போற மனைவிதானடி நீ!''

''போடி...! மதுரவாணி அவர் கடைசியாக ஒன்று கூறினார். 'உன் கையாலேயே உணவை எடுத்து என் கையில் வைத்துச் சாப்பிடுங்கள்' என்று நீ சொல்லும்படியாச் செய்கிறேன் என்றாரே, அதை நிறைவேற்றுவாரா?''

''தேவையே இல்லை! அடுத்த முறை அவர் இங்கு வந்தால், நீயே அவர் மடியில் விழாத குறையாக உபசரிப்பாய் என்பது நிச்சயம்.''

''குறும்பு பண்ணாதேடி! அவர் மீண்டும் வரு வாராடி?''

''அவர் வருகிறாரோ இல்லையோ, இப்பொழுது நான் கிளம்புகிறேன்.''

''ஏனடி இவ்வளவு அவசரம்?''

''வந்ததில் இருந்து அந்த ஆளைப்பற்றியே சொல்லிச் சொல்லி என்னை அலுக்க வைத்துவிட்டாய். இதற்கு மேல் என்னால் தாளாது.''

''உன் மனதைக் கொள்ளையடிக்க ஒருவன் வருவான். அப்பொழுது நீயும் இதே மாதிரித்தான் புலம்பப் போகி றாய்.''

மதுரவாணி உள்ளுக்குள் பெருமூச்சு விட்டாள். 'என் மனம்தான் இன்னமும் உன் அண்ணனுக்குப் புரியமாட் டேன் என்கிறதே.'

''மதுரவாணி நாளைய விழாவிற்கு வர மறந்து விடாதே!''

மதுரவாணி தலையாட்டியவாறு, மனதிற்குள் மன் னார்தாசனை எண்ணிப் புலம்பியவாறு அந்தப்புரத்திலி ருந்து வெளியேறத் தொடங்கினாள்.

**வை**குண்ட ஏகாதசித் திருநாளன்று அதிகாலையில் ஆதவன் எழும் நேரத்திற்கெல்லாம் தஞ்சை மன்னரின் குலகுருவாகிய குமார தாத்தாச்சாரியாரின் ஆசிரமம் கல கலப்பாகத் திகழத் தொடங்கியது.

ஆச்சாரியாரின் குடிலுக்கு வெளியே அலங்காரமான இரண்டு பல்லக்குகள் வைக்கப்பட்டிருந்தன. அதற்கு அருகே இருந்த சிறு பந்தலின் கீழ் அமைக்கப்பட்டிருந்த

ஆசனங்களில் மன்னன் விஜயராகவ நாயக்கனும் அவனது மனைவியர்களும் வீற்றிருந்தனர்.

மன்னனுக்கு அருகே இருந்த ஆசனம் ஒன்றில் இளவரசி சந்திரவதனாவும், அவளுக்கருகில் அமைச்சர் மகள் மதுரவாணியும் அமர்ந்திருந்தனர். அவர்களுக்குப் பக்கத்தில் இருந்த மற்றோர் ஆசனத்தில் அமைச்சர் கோவிந்த தீட்சிதரும், அவர் அருகே தளவாய் ரங்கப்ப நாயக்கனும் உட்கார்ந்திருந்தனர்.

அதற்குப் பக்கத்தில் இருந்த மற்றொரு பந்தலின் கீழ் அந்தப்புரத்தைச் சேர்ந்த அரச மகளிர் அனைவரும் அமர்ந்திருந்தனர். ஆசிரமத்தின் வெளிப்பக்கம் வேலியால் தடுக்கப்பட்டு அதனை ஒட்டித் தஞ்சை வாழ் மக்கள் கூட்டம் கூட்டமாய் நின்று கொண்டிருந்தனர்.

அந்தக் கூட்டத்தோடு கூட்டமாய் மதுரை மன்னன் சொக்கநாதனும், அவன் நண்பன் வெங்கடகிருஷ்ணனும் மாறு வேடத்தில் நின்று கொண்டு அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளை ஆர்வமுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

தளவாயின் மகன் அச்சுதப்ப நாயக்கன் கூட்டத்தினரை ஒழுங்குபடுத்தும் சாக்கில் ஆசிரமத்திற்கு வெளியிலேயே அலைந்து கொண்டிருந்தான். நேற்று இரவு நடந்த அவமானமான நிகழ்ச்சிக்குப் பின்னர் அவனுக்குத் தனது தந்தை, மன்னர், இளவரசி இவர்கள் அனைவரின் முகங்களில் விழிக்கவே வெட்கமாக இருந்ததால், அவர்கள் அமர்ந்திருக்கும் மேடைக்கு அருகில் அவன் செல்லவே இல்லை.

மதுரவாணியின் கண்கள் நாலாபுறமும் சுழன்று கொண்டிருந்தன. இளவரசர் மன்னார்தாசனைக் காணவில்லையே? எங்கே போயிருப்பார்? வேறு ஏதாவது வேலை

யாக மன்னர் அவரை அனுப்பி இருப்பாரோ? இதனை இளவரசியிடம் கேட்கலாம் என்றால் சூழ்நிலையும் சரி யில்லை.

இன்றும் எனக்கு ஏமாற்றமாகப் போய்விடுமோ? அவள் மனம் உள்ளுக்குள் புலம்பத் தொடங்கியது.

மன்னன் விஜயராகவ நாயக்கனும் அடிக்கடி வாசலை நோக்கிப் பார்வையை வீசிக் கொண்டிருந்தான். அவன் மனதிற்குள் எரிச்சல் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

''அமைச்சரே இன்னும் மன்னார்தாசன் வரவில்லை. பார்த்தீர்களா? முந்தாநாள் படித்துப் படித்துச் சொன்னேன். பாருங்கள் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அவனை காணவில்லை'' என்றான் எரிச்சலோடு.

''இளம் வயது பாருங்கள். காலையில் பள்ளி எழ நேரமாகி இருக்கலாம். விழா துவங்குவதற்குள் வந்துவிடு வார்'' என்றார் அமைச்சர்.

''என் சேவகனை அனுப்பினேன் மன்னவா. தயாராகி விட்டாராம். இன்னும் சற்று நேரத்தில் வந்துவிடுவதாகச் சொல்லி அனுப்பினாராம் இளவரசர்'' என்றான் தளபதி தலையைக் குனிந்தவாறு.

''ஹூம்'' என்று பெருமூச்சுவிட்டான் மன்னன்.

அதே நேரம் கூட்டத்தில் நின்று கொண்டிருந்த சொக்க நாதனும் பந்தலினுள் அமர்ந்திருக்கும் இளவரசி சந்திரவத் னாவை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந் தான்.

சந்திரவதனா அந்தக் கூட்டத்தின் மத்தியில் முழு நிலவைப்போல் பிரகாசித்துக் கொண்டிருந்தாள். அவள் அணிந்திருந்த ஆடை அணிகலன்களும், விழாவிற்கு

என்றே கவனமாக அலங்கரிக்கப்பட்டிருந்தாலும், அவள் அழகினால் அவற்றின் எழில் அதிகரிக்கப்பட்டிருப்பது போல் தோன்றியது.

கண் இமைக்காமல் இளவரசியைப் பார்த்துக் கொண்டிருக்கும் சொக்கநாதனைக் கூர்ந்து பார்த்தான் வெங்கட கிருஷ்ணன்.

''பார்த்துப் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்தால் பலன் ஒன்றும் கிடையாது முத்து.''

''உண்மைதான். அதனால்தான் கூடிய விரைவில் சொந்தமாக்கிவிட முடிவு செய்துவிட்டேன்.''

''என்ன இருந்தாலும் அவள் காவலர்களை அழைத்து வந்திருக்கக்கூடாது. காப்பாற்றிய நன்றிகூட இல்லை. அவளை அப்பொழுதே நீ தூக்கிக் கொண்டு வந்திருக்க வேண்டும் முத்து.''

''அது சுலபம் முருகா. அவள் மனதைத் தூக்கிக் கொண்டு வரத்தான் முயற்சிக்கிறேன்.''

''அது முடியுமா?''

''முடிக்காமல் விடமாட்டேன்.''

அப்பொழுது மன்னார்தாசன் ஆசிரமத்திற்குள் நுழைந்தான். அவனைப் பார்த்ததும் மதுரவாணியின் இதயம் பறக்கத் தொடங்கியது.

''ஏனடா இவ்வளவு தாமதமாக வருகிறாய்'' என்று கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்டான் மன்னன்.

''நாடக இலக்கிய ஏடு ஒன்றைத் தேடிக் கொண்டிருந்தேன். மேலும தாங்கள்தான் இங்கு இருக்கிறீர்களே, நான் வந்து என்ன செய்யப் போகிறேன் என்று நினைத்தேன்'' சாதாரணமாகச் சொன்னான்.

இதைக் கேட்ட மன்னனுக்கு கோபம் எழுந்தது. மன்னார்தாசனை முறைத்துப் பார்த்தான். அவனைக் கண்டித்துப் பேச அவன் வாய் எடுப்பதற்குள், ஆசிரமத்தில் இருந்து குலகுரு வெளியே வந்து கொண்டிருப்பதாகச் சீடர்கள் வந்து அறிவித்தார்கள்.

மன்னர், அமைச்சர், தளவாய், இவர்கள் முன்னே செல்ல, அவர்களைத் தொடர்ந்து மன்னனின் தேவியரும், இளவரசியும் தொடர்ந்து நடக்க, மதுரவாணி மட்டும் சற்றுத் தயங்கி, மன்னார்தாசனை பார்த்தவாறு நின்று கொண்டிருந்தாள்.

மன்னார்தாசன் மிக மெதுவாக நிதானமாக நடந்து வந்து கொண்டிருந்தான். அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றிய ஆர்வமோ, மகிழ்ச்சியோ அவன் கண்களில் தட்டுப்படவில்லை.

அரண்மனையின் அந்தப்புரத்து அரச மகளிர் வேகமாக வரும் கூட்டத்திலிருந்து சற்று ஒதுங்கி, மதுரவாணி யதேச்சையாக வருவதுபோல் மன்னார்தாசனுக்கு அருகில் வந்தாள்.

''இளவரசருக்கு என் வணக்கம். நலமாக இருக்கிறீர்களா?'' என்றாள்.

''மதுரவாணியா! வணக்கம். நீயும் வந்திருக்கிறாயா?'' வியப்புடன் கேட்டவாறு சுற்று முற்றும் பார்த்தான்.

மேற்கொண்டு என்னபேசலாம் என்று அவள் தயங்கிய பொழுது, ''சீக்கிரம் செல் மதுரவாணி. உன் தந்தை உன்னைத் தேடுவதுபோல் தோன்றுகிறது'' என்றவாறு மன்னார்தாசன் கூட்டத்துடன் கலந்துவிட்டான்.

மதுரவாணி ஏமாற்றத்துடன் பெண்களுடன் சேர்ந்து இளவரசிக்கு அருகே போய் நின்றாள்.

அதேநேரம் ஆசிரமத்து வாசலில் குலகுரு வந்து நின்றார். அங்கு தயாராக இருந்த அனைத்து வாத்தியங்களும் பிளிற ஆரம்பித்தன. வாழ்த்து ஒலிகள் விண்ணைப் பிளந்தன.

மன்னன் ஆளுயர மாலை ஒன்றைத் தாத்தாச்சாரியாருக்குப் பணிவுடன் சூட்டினான். அவரது பாதங்களில் மலர்க் குவியல் ஒன்றைப் பக்தியுடன் வைத்தான். அப்படியே நெடுஞ்சாண் கிடையாக அவரது கால்களில் விழுந்து வணங்கினான்.

*''கடவுளரே!, இவன் இம்மண்ணுலக மகிழ்ச்சியின் சாராம்சத்தில் உடல் வலிமையுடன் வாழட்டும்! அக்னியும், சூரியனும், பிரஹஸ்பதியும் இவனுக்கு வாழ்வின் வலிமையை அளிக்கட்டும்'' என்று பொருள்படும் அதர்வண வேத மந்திரத்தை உச்சரித்துக் குலகுரு மன்னனுக்கு ஆசி வழங்கினார்.

அதன் பின்னர் நடந்த சம்பவங்கள் மன்னனுக்கும் அவன் மைந்தனுக்கும் மற்றோர் உரசலை ஏற்படுத்தியது. அதன் காரணமாக மதுரவாணியும், மன்னார்தாசனும் தனிமையில் சந்திக்கும்படியான வாய்ப்பு ஒன்றை ஏற்படுத்தித் தந்தது.

---

* *In the essence of earthyly bliss, O ye gods, in strength of body (may he live) May Agni, Surya, Brihaspati bestow upon him life's vigour!" - Hymns of Atharvana - Veda - Translated by Maurice Bloom field - Edited by F.Max Muller, page no.47.*



# 64

தஞ்சை மன்னனின் குலகுருவாகிய குமார தாத்தாச்சாரியாரின் கால்களில் விஜயராகவ நாயக்கன் பணிவன்புடனும், பக்திப் பெருக்குடனும் சாஷ்டங்கமாக விழுந்து வணங்கி, அவரது ஆசீர்வாதத்தினைப் பெற்றவுடன், மன்னனின் தேவியரும் வரிசையாக வந்து வணங்கினர்.

மன்னன் தன்னருகில் நின்று கொடிண்டிருக்கும் இளவரசன் மன்னார்தாசனை ஏறிட்டுப் பார்த்தான்.

''மன்னாரு. குருவின் கால்களில் விழுந்து வணங்கு. நல்ல புத்தியும், நீண்ட ஆயுளும், இந்த நாட்டை வழிநடத்திச் செல்வதற்குத் தேவையான வலிமையும் வழங்குமாறு ஆசீர்வாதம் பெற்றுக் கொள்.''

மன்னார்தாசன் மறுபேச்சின்றித் தந்தையின் கட்டளைக்குக் கட்டுப்பட்டுக் குலகுரு குமார தாத்தாச்சாரியாரின் கால்களில் விழுந்து வணங்கினான்.

குருவும் அதே அதர்வண மந்திரத்தை உச்சரித்து அவனுக்கு ஆசி வழங்கிவிட்டுத் தொடர்ந்து ''எழுந்திரு மகனே!'' என்றார்.

மன்னார்தாசன் எழுந்து நின்றான். அவன் தலையில் சிறிது தீர்த்தம் தெளித்தார்.

''இப்பொழுது உன் உடல்நலம் தேறிவிட்டதா மகனே? ஜுரம் மறைந்து பழைய தெம்பு வந்துவிட்டதா?''

''ஓரளவு வந்துவிட்டது!'' என்றான் பணிவுடன்.

''பவழ வீதிக்குச் செல்வதை நிறுத்திவிட்டாய் என்று கேள்விப்பட்டேன்! ஜுரமும் குறைந்து விட்டதல்லவா?''

இதைக் கேட்டவுடன் மன்னார்தாசனுக்கு கோபம் எழுந்தது.

''திரும்பத் திரும்ப அதையே சொல்லாதீர்கள் ஸ்வாமி! பவழ வீதிக்குச் செல்லாமல் இருந்தது நீங்கள் நினைப்பது போல் அல்ல. தாங்கள் செய்த வைத்தியத்தினாலும் என் ஜுரம் குறையவில்லை. கும்பகோணத்தில் இருந்து ஒரு வைத்தியரை வரவழைத்தேன். அவர் கொடுத்த சூரணம், காய்ச்சல் குறைந்துவிட்டது'' என்றான் எரிச்சலுடன்.

''மன்னார்தாசா!'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு முறைத்த மன்னனைப் பார்த்துக் குரு சைகை செய்தார்.

''நீ சும்மா இரு விஜயராகவா! குழந்தை! அவனுக்கு என்ன தெரியும்? போகப் போக புரிந்துகொள்வான்'' என்றார் தொடர்ந்து.

மன்னார்தாசன் மனதுக்குள் எழுந்த புகைச்சலை அடக்கிக் கொண்டு சற்று நகர்ந்து நின்று கொண்டான். அதன் பிறகு இளவரசி சந்திரவதனா குருவின் கால்களில் விழுந்து ஆசி பெற்றாள்.

தாத்தாச்சாரியார் பின்னர் கூட்டத்தினரைப் பார்த்து அபயகரம் நீட்டி ஒட்டுமொத்தமாக ஆசி வழங்கியவாறு நாலாபுறமும் சுற்றிப் பார்த்துப் புன்னகைத்தார்.

இந்தக் காட்சியைக் கண்ணுற்றவுடன் கூடியிருந்த மக்கள் அனைவரும் 'குரு வாழ்க, அரஹர நமோ நாராயணா' என்று வாழ்த்தொலிகளை முழக்கமிட்டனர். வாத்தியங்களும் ,சேர்ந்து அலறி அந்த இடமே கலகலத்துப் போயிற்று!

சற்று நேரம் அந்த வாழ்த்தொலிகளைப் புன்னகையுடன் ஏற்று மகிழ்ந்த குரு பிறகு கூட்டத்தினரைப் பார்த்து கை உயர்த்தினார். அத்தனை சப்தங்களும் ஒரு விநாடியில் நின்று நிசப்தம் ஆனது.

மன்னன் தன்னிரு கைகளையும் கூப்பியவாறு குலகுருவின் அருகில் பணிவுடன் வந்து நின்றான்.

''ஸ்வாமிகளே, முகூர்த்தவேளை ஆரம்பித்துவிட்டது. தங்களது புறப்பாட்டிற்கான அனைத்து ஏற்பாடுகளும் ஆண்டவன் அருளால் சித்தமாகக் காத்து நிற்கின்றன. தங்களது உத்தரவிற்காக இந்த அடியவனும் காத்து நிற்கிறேன்.''

''எல்லாம் இறைவன் சித்தப்படி நடக்கட்டும். புறப்படலாம், நமோ நாராயணா!'' என்றார்.

மன்னன் மனமகிழ்ந்து குருவினை அழைத்துக் கொண்டு மலர் தூவிய பாதை வழியாக வாசல் முன் இருந்த பல்லக்கிற்கு அழைத்து வந்தான். அவர் பாதங்களைப் புனித நீரால் கழுவி, குருவின் பாதங்களைக் கழுவிய நீரைப் பக்தியுடன் தலையில் தெளித்துச் சில துளிகளை வாயில் ஊற்றிக் கொண்டான்.

குலகுரு பல்லக்கில் ஏறி உட்கார்வதற்கு முன்னதாக தனது பாதக் குறடுகளைக் கழற்றித் தரையில் வைத்துவிட்டுப் பிறகு பல்லக்கினுள் ஏறி அமர்ந்தார்.

மன்னர் உடனே தனது மகனை ஏறிட்டுப் பார்த்து, ''மன்னார்தாசா தாம்பாளம் ஒன்று அந்தப் பல்லக்கில் வைக்கப்பட்டிருக்கும் அதனை எடுத்து வா'' என்றான்.

அதற்குள் தளவாய் ஓடிச் சென்று குரு அமர்ந்திருந்த பல்லக்கிற்குச் சற்று முன்னால் வைக்கப்பட்டிருந்த மற்றொரு பல்லக்கில் வைக்கப்பட்டிருந்த தங்கத் தாம்பாளம் ஒன்றை அவசரமாக எடுத்துக் கொண்டு வந்து இளவரசன் கையில் கொடுத்தான்.

எதற்காகத் தனது தந்தை தங்கத் தாம்பாளத்தினை கொண்டு வரச் சொல்கிறார் என்று புரியாமல், மன்னார் தாசன் அதனை வாங்கிக் கொண்டு மன்னன் அருகில் சென்றான்.

மன்னன் தனது மகனிடமிருந்த தங்கத் தாம்பாளத்தினை வாங்கி, அதனைக் குருவின் பாதணிகளுக்கு அருகே வைத்தான். பிறகு தரையில் இருந்த அந்தப் பாதக் குறடுகள் அருகே மண்டியிட்டு உட்கார்ந்து, குருவின் செருப்புகளை மூன்று முறை தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டான்.

பிறகு மைந்தனைப் பார்த்து ''மன்னார்தாசா, நான் செய்ததுபோல் நீயும் நமது குலகுருவின் பாதாரவிந்தங்களில் தவழும் பாக்கியம் பெற்ற இந்தப் புனிதமான பாதக்குறடுகளை மும்முறை தொட்டு வணங்கு'' என்றான்.

''எனக்கு இஷ்டமில்லை'' என்றான் மன்னார்தாசன்.

இதனைப் பார்த்ததும் பார்க்காதது மாதிரி இருந்தார் குமார தாத்தாச்சாரியார். வாத்தியங்களின் ஓசை சன்னமாக ஒலித்துக் கொண்டிருந்ததாலும், கூடியுள்ளவர்கள் தங்களுக்குள் ஏதேதோ பேசிக் கொள்ளும் சப்தம் கேட்டதாலும் மன்னனுக்கும் மைந்தனுக்கும் நடந்த இந்த உரையாடல் நல்லவேளையாக எவர் காதிலும் விழவில்லை.

மன்னன் மன்னார்தாசனைக் கடுமையாக முறைத்துப் பார்த்தான். மன்னார்தாசன் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டான்.

இதற்கு மேலும் அவனை வணங்கச் சொன்னால், அவன் ஏதாவது சொல்வான் இது மற்றவர்கள் கவனத்தைக் கவரும் என்ற நினைப்பில் மன்னன் தனது கோபத்தை அடக்கிக் கொண்டு தரையில் இருந்த குருவின் காலணிகளை பூக்குவியலை அள்ளி எடுப்பதுபோல் மெதுவாகப் பக்தி சிரத்தையுடன் ஒவ்வொன்றாக எடுத்து தங்கத் தாம்பாளத்தின் மீது வைத்தான்.

பிறகு அவனே அந்தத் தாம்பாளத்தினைத் தனது இரு கைகளாலும் எடுத்துக் கொண்டு எழுந்து நின்றான்.

''இதனையும் நீயே ஒரு கைப்பிடித்து அதோ இருக்கும் பல்லக்கு வரை கொண்டு செல்ல வேண்டும். வா, வந்து பிடித்துக் கொள்'' என்றான்.

''நான்தான் சொன்னேனே தந்தையே, எனக்கு இதில் இஷ்டமில்லை என்று'' என்று மன்னார்தாசன் திட்டவட்டமாகக் கூறினான்.

இதனைத் தளவாய் ரங்கப்ப நாயக்கன் ஓரக்கண்ணால் கவனித்துக் கொண்டிருந்தான். அவனது உள்மனதுக்குள் மகிழ்ச்சி அலை பாயத் தொடங்கியது.

மன்னனுக்குத் தனது மகனைப் பார்க்க ஆத்திரமாக வந்தது. இருப்பினும் முகத்தில் அதனைக் காட்டாது குருவின் பாதணிகளைத் தங்கத் தாம்பாளத்தில் ஏந்திய வாறு, பல்லக்கை நோக்கி நடந்தான்.

பல்லக்கு அருகில் வந்து பணிவுடன் குனிந்து அதற் குள் இருந்த சிறிய மேடை ஒன்றில் தங்கத் தாம்பாளத் தினை வைத்தான். அதன்மீது இருந்த குருவின் காலணிகள் மற்றவர்கள் கண்களில் படுமாறு அந்தப் பல்லக்கு வடிவ மைக்கப்பட்டிருந்தது.

பல்லக்கினுள் தங்கள் குலகுருவின் பாதக் குறடுகள் அடங்கிய தங்கத் தாம்பாளத்தினை வைத்துவிட்டு நிமிர்ந்த மன்னன் ஏறிட்டுப் பார்த்தான். மன்னார்தா.சன் பழைய இடத்திலேயே நின்று கொண்டிருந்தான்.

''மன்னார்தாசா இங்கே வா'' என்றான்.

மைந்தன் அருகில் வந்தவுடன் மன்னன் சுற்றிலும் பார்த்தான். அந்த இடத்தில் கூட்டம் இல்லை. இருக்கும் ஒரு சிலரும் அவர்கள் பேசினால் கேட்காத தூரத்தில் நின்று கொண்டிருந்தார்கள். மன்னன் தனது மகனைப் பார்த்து வாஞ்சை ததும்பச் சொல்ல ஆரம்பித்தான்.

''மன்னார்தாசா, விஜயநகர மன்னர்கள் பரம்பரையில் வந்த நம் தீவிர வைஷ்ணவர்கள். வைஷ்ணவ குருவிற்கு வைகுண்ட ஏகாதசி அன்று நாம் செலுத்தும் இந்த மரி யாதை பரம்பரை பரம்பரையாக இருந்துவரும் ஒன்று. என்னைப்போல நீயும் நீண்ட ஆயுள் பெற்று இந்த நாட் டைச் சிறப்பாக ஆளவேண்டும் என்ற எண்ணத்தில்தான் உன்னையும் இதில் கலந்துகொள்ளச் சொல்லிக் கட்டளை இட்டேன்''

மன்னார்தாசன் தலையைக் குனிந்தவாறு மவுனமாக இருக்க, விஜயராகவ நாயக்கன் தொடர்ந்து சொன்னான்.

''நமது குலகுருவின் பாதணிகளை நீ தொட்டு வணங் காதது எனக்கு வருத்தம் அளிக்கிறது. இருக்கட்டும் இள வயது, இதனைப் புரிந்துக் கொள்ளும் மனப்பக்குவம் உனக்கு இன்னும் வரவில்லை. இனியாவது நான் சொல்வ தைக் கேட்டு நட. நமது குலகுரு வீற்றிருக்கும் பல்லக் கினை நமது அரச குடும்பத்துப் பெண்கள் சுமந்து வருவார் கள். பாதக் குறடுகள் இருக்கும் இந்தப் பல்லக்கினை நாம் இருவரும் சேர்ந்து சுமக்க வேண்டும். வா, நீ முன்பக்கம் சென்று தாங்கிக் கொள்.''

இதைக் கேட்டதும் மன்னார்தாசன் முகத்தில் அதிர்ச்சி தென்பட்டது.

''இல்லை தந்தையே! இதை என்னால் செய்ய முடியாது'' என்றான் தீர்மானமாக.

''ஏன் செய்ய முடியாது'' மன்னனுக்குக் கோபம் எழுந்தது.

''எனக்குப் பிடிக்கவில்லை.''

''அதுதான் ஏன் என்று கேட்கிறேன்?''

''ஒரு மனிதனின் செருப்புக்கெல்லாம் என்னால் மரி யாதை அளிக்க முடியாது.''

''அவர் மனிதரல்லர்! மகான்!''

''மகானாக இருந்தால் கால்களில் விழுந்து வணங்க லாம். அவர் காலில் அணியும் செருப்பைத் தொட்டு வணங்குவதும், அந்தச் செருப்பைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்துப் பல்லக்கில் ஏற்றிப் பவனி வருவதும் முட்டாள் தனமான செயலாகத் தோன்றுகிறது.''

இதைக் கேட்டதும் மன்னன் பல்லைக் கடித்துக் கொண்டு மகனை முறைத்துப் பார்த்து ''எதுடா முட்டாள் தனமான செயல்? உனக்குப் புத்தி கெட்டு விட்டதா? கோயில்களில் சடாரியை நம் தலைமீது வைக்கிறார்களே, அது என்ன? பகவானின் பாதங்களை கொண்டதுதானே சடாரி? பகவானின் பாதங்களை நம் தலைமீது சுமப்பதா கத்தானே அதன் பொருள்'' என்றான்.

''அது கூடப் பக்தியின் அதீதமான செயல்பாடு. அதைக்கூடச் சகித்துக் கொள்ளலாம். ஆனால், இந்தக் குரு நம்மைப் போல ஒரு மனிதர். அவருக்கு மரியாதை செலுத்துங்கள். தவறில்லை. அவரது பாதணிக்கு இவ்வ ளவு மரியாதை கொடுப்பது பைத்தியக்காரத்தனமான செயல்.''

''இராமாயணத்தில் ராமன் காட்டிற்குச் சென்றபொ ழுது அவனது பாதக் குறடுகளைப் பரதன் வாங்கி வந்து மரியாதை செலுத்தியதையும், அந்த நாட்டு மக்கள் அவற் றுக்கு அளித்த பெருமையையும் பற்றி நீ படித்த தில்லையா?''

''ராமன் அவதாரம் என்ற நோக்கத்தில் புனையப்பட்ட கதை! ஆனால் நமது குலகுரு ராமனல்லன்! மனிதன்!''

மன்னனுக்கு இதைக் கேட்கக் கேட்க ஆத்திரம் பொத் துக் கொண்டு வந்தது. அவன் கன்னத்தில் ஓங்கி அறைய லாம் போலிருந்தது. சூழ்நிலை சரியில்லை என்பதால் பல்லைக் கடித்துக் கொண்டு அடக்கினான்.

''வீண் வாக்குவாதம் எதற்கு? இப்பொழுது நீ சுமக்கப் போகிறாயா இல்லையா?'' கண்டிப்புடன் கேட்டான்.

''தெரிந்து கொண்டே மதியீனமான செயலில் ஈடுபட என் மனம் ஒப்பவில்லை.''

''பிறகு எதற்காக இங்கு வந்தாய்?''

''தாங்கள் அழைத்ததால்தான் வந்தேன். எனக்கு ஆரம் பத்தில் இருந்தே இங்கு வர இஷ்டம் இல்லை.''

''அப்படியானால் என் கண் முன்னே நிற்காதே: போய் விடு'' கோபத்துடன் சொன்னான்.

மன்னார்தாசன் உடனே அந்த இடத்தைவிட்டு அகன்று தன் தந்தையின் கண்களில் படாதவாறு ஓரிடத்தில் நின்று கொண்டான்.

விஜயராகவ நாயக்கன் உடனே கட்டளைகளைப் பிறப்பித்தான். வாத்தியங்களின் ஒலியும், வாழ்த்தொலிக ளும் விண்ணைப் பிளந்தன.

* குலகுரு குமார தாத்தாச்சாரியார் வீற்றிருந்த பல்லக் கினைத் தஞ்சை அரச குடும்பத்துப் பெண்கள் தூக்கித் தங்களது தோள்களில் வைத்துக் கொண்டார்கள். குலகுரு வின் காலணிகள் வைக்கப்பட்டிருந்த பல்லக்கினை மன் னன் விஜயராகவ நாயக்கனும் மற்றும் சில உயரதிகாரிக ளும் தூக்கி சுமந்தனர்.

பாதணிகள் அடங்கிய பல்லக்கு முன்னால் வர, குலகுரு அமர்ந்திருந்த பல்லக்கு அதன் பின்னால் வர, வாத்தியங்கள் இடையறாது முழங்க, அந்த ஊர்வலம் ஆசிரமத்தில் இருந்து கிளம்பி, தஞ்சை நகர வீதிகளை நோக்கிச் செல்லத் தொடங்கியது.

இந்தக் காட்சியைச் சற்று வெறுப்பாகவும், வேதனை யாகவும் பார்த்து நின்று கொண்டிருந்த இளவரசன் மன் னார்தாசன், பிறகு வேறு பக்கமாகத் திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

ஊர்வலத்தில் குருவின் பல்லக்கினைத் தொடர்ந்து மன்னன் விஜயராகவ நாயக்கனின் மனைவியரும், அடுத்து இளவரசி சந்திரவதனாவும், அவளருகே மதுரவாணியும்

நடக்க, அவர்களுக்குச் சற்று பின்னால் அமைச்சர் கோவிந்த தீட்சிதரும், தளவாயும் மற்ற உயரதிகாரிகளும் வர அவர்களுக்குப் பின்னால் மக்கள் கூட்டம் தொடர்ந்து வரத் தொடங்கியது.

கூட்டத்தோடு கூட்டமாக சொக்கநாதனும், வெங்கட கிருஷ்ணனும் நடந்து வந்து கொண்டிருந்தனர்.

இளவரசியின் அருகே வந்து கொண்டிருந்த மதுர வாணியின் இதயம் பரபரக்கத் தொடங்கியது. இளவரசர் ஏன் திரும்பிப் போகிறார்? ஊர்வலத்தோடு வரவில் லையா? மன்னர் அவரிடம் ஏதோ கோபமாகப் பேசியது போல் தெரிந்ததே! என்னவாக இருக்கும்?

தற்செயலாகத் திரும்பிப் பார்ப்பதுபோல் திரும்பி னால், மன்னார்தாசன் ஊர்வலத்தில் இருந்து பிரிந்து தனியே சென்று கொண்டிருப்பது தெரிந்தது. இதுதான் நல்ல தருணம்!

''தலை வலிக்கிறது சந்திரவதனா. நான் வீட்டிற்குச் செல்கிறேன்'' என்று கிசுகிசுக்க இளவரசி தலையாட்டி னாள்.

மதுரவாணி மெதுவாகத் தனது தந்தையருகே வந்தாள்.

''ஊர்வலத்தில் வர எனக்கு விருப்பம் இல்லை தந் தையே. நான் வீட்டிற்குச் செல்லட்டுமா?'' என்றாள்.

அந்தணப் பெண் இப்படி ஊர்வலமாக வருவது அவருக்கும் பிடிக்கவில்லை. எனவே, மகிழ்ச்சியுடன் தலையாட்டினார்.

மதுரவாணி உடனே ஊர்வலத்தில் இருந்து பிரிந்து மன்னார்தாசன் சென்ற திசையில் வேகமாக நடக்க ஆரம் பித்தாள்.

அதேநேரம் அமைச்சர் அருகில் வந்து கொண்டிருந்த தளவாய் சிந்திக்க ஆரம்பித்தான். மன்னார்தாசன் சென்றவுடன், மதுரவாணியும் கிளம்பிச் செல்கிறாளே! மெதுவாகத் திரும்பிப் பார்த்தான்.

மன்னார்தாசன் செல்லும் திசை நோக்கி மதுரவாணி செல்வது தெரிந்தது. இவர்களுக்குள் என்னவோ இருக்கிறது. இதைக் கண்டுப்பிடிக்காமல் விடக் கூடாது என்ற நினைப்பில் தளவாய் ஊர்வலத்தில் இருந்து நழுவி, அவர்கள் சென்ற பக்கம் நடக்க ஆரம்பித்தான்.

ஊர்வலம் தஞ்சைத் தெருக்களில் கோலாகலமாகச் செல்லத் தொடங்கியது. குருவின் பாதணிகள் இருந்த பல்லக்கைச் சுமந்த மன்னன், பிறகு அதிலிருந்து விடுவித்துக் கொண்டு குருவின் பல்லக்கிற்கருகே வந்து அவருக்குச் சாமரம் வீசினான். மற்றொரு தெருவில் நுழையும்போது, சாம்பிராணி இருக்கும் தூபக் காலைப் பல்லக்கருகே ஏந்தி வந்தான்.

ஊர்வலம் ஒவ்வொரு தெருவாக வர ஆரம்பித்தது.

---

*' ... in a Jesuit letter of 1659, which states... that every Deceember the then Nayakkan of Tanjore (Vijayaragava Naickkan) Used to cause his Guru to be carried several times round and round the town in a gorgeous palanquin borne by the ladies of the palace and preceded by another palanquin containing the Guru's slippers; and used to walk himself in front of the procession, swinging a censer and making repeated obeisances to his spiritual master" - The Madura Country - A Manual - J.H. Nelson - part II page no. 160-61.*

*2. The Nayakas of Tanjore - V.Vridhangirison - page no. 159.*



# 65

தஞ்சை மன்னனின் குலகுருவாகிய குமாரதாத் தாச்சாரியார் அமர்ந்திருந்த பல்லக்கினை அந்தப் புரத்து அரச மகளிர் தங்கள் தோள்களில் சுமந்தபடி செல்ல, அவர்கள் முன்னால் குருவின் பாதரட்சைகள் வைக்கப்பட்டிருந்த பல்லக்கு முன் செல்ல, தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் குருவிற்குச் சாமரம் வீசியபடியும், சில சமயங்களில் தூபக்காலினை ஏந்தியபடியும், ஒவ்வொரு தெரு முனையிலும் குருவிற்கும் அவரது பாதணிகளுக்கும் மரியாதை செலுத்தியபடியும் வர, அந்த ஊர்வலம் தஞ்சையின் வீதிகளைக் கோலாகலமாகச் சுற்றி வந்து கொண்டிருந்தது.

அரச மகாதேவியர் பல்லக்கின் பின்னால் பணிவுடன் நடந்துவர, அவர்களுடன் இளவரசி சந்திரவதனா எழிலாக நடந்து கொண்டிருந்தாள்.

அவர்கள் பின்புறத்தில் வரும் கூட்டத்தோடு கலந்து வந்து கொண்டிருந்த சொக்கநாதன், தனக்கு முன்னால் சற்று தூரத்தில் நடக்கும் இளவரசியின் பின்னழகைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விட்டபடி நடந்து வந்தான்.

இவள் நடையே எவ்வளவு அழகாக இருக்கிறது! நடக்கும்பொழுது இடுப்பு ஏன் இப்படி ஆடுகிது! ஒரு வேளை ஒடிந்துவிடுமோ? இவளது பின்னழகு தானாகச் சுழல்கிறதா? இல்லை இடுப்புக்குக்கீழ் ஏதேனும் எந்திரம் இருந்து இரு பந்துகளையும் இப்படி சுழற்றுகிறதா?

விஜயராகவ நாயக்கா, இப்படி ஓர் அழகான மகளைப் பெற்றதற்காக உன் பகையைக்கூட மன்னித்துவிடலாம் போல் தோன்றுகிறதே!

''முத்து, இப்படி ஒரு கோலாகலமான காட்சியை என் வாழ்நாளில் நான் கண்டதே இல்லை'' என்றான் வெங்கட கிருஷ்ணன்.

''ஆமாம் முருகா... அற்புதமான காட்சி... நடக்க விட்டு நாள் முழுவதும் பார்த்துக் கொண்டிருந்தாலும் திகட்டாது...'' சொக்கிப் போய்ச் சொன்னான் சொக்க நாதன்.

வெங்கடகிருஷ்ணன் திடுக்கிட்டு அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்துவிட்டு ''நான் ஒரு மடையன். போதையில் மயங்கிக் கிடப்பவனிடம் பாதைக்கு வழி கேட்கிறேன்'' என்றான்.

''ஏய் என்ன உளறுகிறாய்?''

''நான் உளறவில்லை. நீதான் இந்த உலகத்திலேயே இல்லை. அது தெரியாமல் நான் கேட்டது முட்டாள் தனம்.''

''என்ன கேட்டாய்?'' சற்றுச் சுதாரித்தவாறு வினவினான்.

''இப்படி ஓர் ஊர்வலத்தை என் வாழ்நாளில் நான் பார்த்ததில்லை என்றேன். நீ என்னடா என்றால், நாள்

முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்று உளறு கிறாய். உனக்கு அவளைத் தவிர யாருமே கண்ணில் படாத போதையில் மூழ்கிக் கிடக்கிறாய்.''

''ஓஹோ, ஊர்வலத்தைச் சொன்னாயா? விஜயராகவ நாயக்கன் அளவுக்கு அதிகமான பக்தி நிறைந்தவன் என்று கேள்விப்பட்டேன். ஆனால், இப்படி ஒரு கண்மூடித்தன மான பக்தி கொண்டவன் என்று இப்பொழுதுதான் தெரிகிறது.''

ஊர்வலம் தஞ்சை வீதிகளில் பலமுறை சுற்றி வந்த பிறகு, ராஜகோபால சுவாமி கோயில் அருகே அமைந்திருக் கும் மிகப் பெரிய மேடையில் வந்து முடிவுற்றது.

பல்லக்குகள் இறக்கித் தரையில் வைக்கப்பட்டன. மறுபடியும் வாழ்த்தொலிகளும், வாத்தியங்களின் ஒலிக ளும் காதுகளைப் பிளந்தன.

பல்லக்கு இறக்கி வைக்கப்பட்ட இடத்திலிருந்து மேடை வரை மலர்ப்பாதை ஒன்று அமைக்கப்பட்டிருந் தது. விஜயராகவ நாயக்கன், குருவின் பல்லக்கருகே வந்து பணிந்து நின்று ''ஸ்வாமிகள் இந்த மேடைக்கு எழுந்தருளி என்னையும் எனது நாட்டு மக்களையும் ரட்சிக்க வேண் டும்'' என்றான்.

குமார தாத்தாச்சாரியார் பல்லக்கில் இருந்து வெளிப் பட்டு அபயகரம் நீட்டியபடி மலர்ப்பாதையின் வழியாக மேடைக்குச் செல்ல சுற்றி இருந்த மக்கள் அவர்மீது மலர்களைத் தூவி வணங்கினார்கள்.

மேடையில் இருந்த ஆசனத்தில் குலகுரு அமர்ந்தவு டன் விஜயராகவ நாயக்கன் மற்றொரு பல்லக்கில் வைக் கப்பட்டிருந்த குருவின் காலணிகள் அடங்கியத் தங்கத் தாம்பாளத்தினைப் பவ்யமாக எடுத்துக் கொண்டு மேடைக் குச் சென்றான்.

குருவின் காலருகே வந்து மண்டியிட்டு தாம்பாளத்தில் இருந்த பாதக் குறடுகளைப் பக்தி சிரத்தையுடன் எடுத்து அவர் காலருகில் வைத்துவிட்டு, வணங்கி எழுந்தான். குலகுரு புன்சிரிப்புடன் காலணிகளை அணிந்து கொண்டார்.

பிறகு மன்னனை ஆசீர்வதித்தார். பிறகு சீடன் ஒருவனை அழைத்தார். அந்தச் சீடன் ஒரு சிறிய தாம்பாளத்தில் துளசி இலைகளின் மேல் வைக்கப்பட்டிருந்த தாயத்தினைக் கொண்டுவந்து பணிவுடன் நீட்டினான்.

''விஜயராகவா என்னைக் குலகுருவாக ஏற்றுக் கொண்ட உனது நன்மைக்காக, பல நாட்கள் தவமிருந்து அதர்வண மந்திரங்களை உச்சாடனம் செய்து, உருவாக்கிய தாயத்து இது. வா, நானே எனது கையால் உனக்கு அணிவிக்கிறேன்'' என்றார்.

விஜயராகவன் கைகளைக் கூப்பியபடி குலகுருவின் காலடியில் மண்டியிட்டு நின்றான். குரு தாம்பாளத்தில் இருந்த தாயத்தினைத் தனது வலது கையால் எடுத்து, ராஜகோபால சுவாமி கோபுரக் கலசத்தினைப் பார்த்து நீட்டியபடி, விண்ணில் கண்களைச் செலுத்தி, அதர்வண வேத மந்திரத்தைச் சப்தமாக உச்சாடனம் செய்தார்.

பின்னர் குனிந்து தனது கையில் இருந்த தாயத்தினை, மன்னனின் வலது புஜத்தில் இறுகக் கட்டினார்.

''விஜயராகவா! நான் உச்சரித்த அதர்வண மந்திரத்தின் பொருள் என்ன தெரியுமா?''

''சொல்லுங்கள் குருவே! தெரிந்து கொள்கிறேன்.''

* ''இந்தத் தாயத்தினை எவன் அணிந்து கொள்கிறானோ அவன் உண்மையாக புலிக்கு நிகராகிறான். சிங்கத்திற்கு ஒப்பாகிறான். காளை மாட்டிற்குச் சமமாகிறான். அதுமட்டு மின்றி எதிரிகளைத் துவம்சம் செய்கிறவனாகிறான் என்கிறது வேதம். எனவே, உன் கையில் இந்தத் தாயத்து இருக்கும்வரை இம்மண்ணுலகில் எந்த எதிரியும் உன்னை நெருங்கவே முடியாது. அதனால் இதனை நீ பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.''

''என் உயிருக்கும் மேலாக இதனைப் பாதுகாத்துக் கொள்வேன் ஸ்வாமி'' என்று கும்பிட்டான்.

உடனே வாழ்த்தொலிகள் விண்ணைப் பிளந்தன. மக்களின் ஆரவாரமும், வாத்தியங்களின் ஒலியும் அவற்றோடு இணைந்தது.

இதைப் பார்த்த சொக்கநாதன், தனது நண்பனின் காதோடு கிசுகிசுத்தான்.

''விஜயராகவ நாயக்கனுக்கு விருப்பமான பொருள் இந்தத் தாயத்து என்று இப்போது புரிந்துவிட்டது. இதனை அணிந்தால் இவன் புலியாம், சிங்கமாம். எதிரிகள் இவனை நெருங்க முடியாதாம். அதனால் இந்தத் தாயத்தைக் கவர்வதுதான் நாம இங்கு வந்த நோக்கம் என்று முடிவு பண்ணிவிட்டேவன் முருகா.''

''உண்மைதான் முத்து.''

பிறகு விஜயராகவ நாயக்கனின் தேவியர் வந்து வணங்கி, குருவிடம் ஆசி பெற்றனர்.

''உன் மைந்தன் மன்னார்தாசனை வரச் சொல்'' என்றார் குரு.

விஜயராகவன் உடனே முகம் தொங்கி ''அவன் இங்கு வரவில்லை ஸ்வாமி. அவன் போக்கு எனக்கு வரவரப் பிடிக்க மாட்டேன் என்கிறது. பக்தியில் நாட்டமின்றிக் காணப்படுகிறான்'' என்றான் வருத்தமாக.

குரு சற்றுச் சிந்தனையில் ஆழ்ந்தார்.

''எல்லாம் இறைவன் சித்தம். நான் இறைவனிடம் உன் வருத்தம் தீர இறைஞ்சி வழிபடுகிறேன். கவலைப் படாதே'' என்றார்.

மன்னன் கையுயர்த்திக் கும்பிட்டான்.

''உன் மகளை வரச் சொல் விஜயராகவா.''

இளவரசி சந்திரவதனா பணிவுடன் மேடைக்கு வந்து அவர் கால்களில் விழுந்து வணங்கினாள்.

** குரு தன் கையுயர்த்தி, ''இவளை அழகுள்ளவளாக சோமராஜன் உருவாக்கி இருப்பதால், இவளுக்கு கணவன் கிடைக்கட்டும், ஆண் குழந்தைகளைப் பெற்று இவள் மகாராணியாக ஆகக்கடவது. கணவனிடம் சென்றடைந்த பிறகு இவள் அழகு பிரகாசிக்கக் கடவது'' என்று பொருள் படும் அதர்வண மந்திரத்தை உச்சாடனம் செய்து, புனித தீர்த்தத்தினை அவள் தலையில் தெளித்தார்.

''எழுந்திரு குழந்தாய்'' தலையில் கை வைத்து ஆசி அளித்தார்.

சந்திரவதனா முழங்காலிட்டபடி எழுந்து நின்று குருவின் கரங்களில் இருந்து துளசி இலைகளைப் பெற்று, அவற்றைத் தனது இரு கண்களிலும் ஒத்திக் கொண்டு, வாய்க்குள் போட்டவாறு எழுந்து சென்றாள்.

இதனைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த சொக்க நாதன் உடனே தனது நண்பனைப் பார்த்துக் கிசுகிசுத்தான்.

''முருகா இளவரசியைக் கூடிய சீக்கிரம் நேரில் சந்திப் பதற்கு ஒரு வழி கிடைத்துவிட்டது.

மன்னார்தாசன் மிக நிதானமாக அரண்மனையை நோக்கி நடந்து கொண்டிருந்தான். தந்தையின் கண்மூடித் தனமான பக்தியை நினைத்து அவன் மனம் குமுறிக் கொண்டிருந்தது.

கூட்டத்தில் இருந்து பிரிந்து வந்த மதுரவாணி நாலைந்து தெருக்கள் கடந்ததும் இளவரசன் மெதுவாக நடந்து கொண்டிருப்பதைப் பார்த்து விட்டாள். மனதில் மகிழ்ச்சி பரவ அவனை நோக்கி வேகமாக நடக்க ஆரம் பித்தாள்.

இவர்கள் இருவருக்கும் பின்னால் நீண்ட தூரத்தில் தளவாய் ரங்கப்ப நாயக்கன் வந்து கொண்டிருந்தான். மன்னார்தாசனைத் தொடர்ந்து மதுரவாணி நடந்து கொண் டிருப்பதைக் கண்டவுடன் அவன் மனம் பரபரக்கத் தொடங்கியது.

மதுரவாணி இளவரசன் அருகே நெருங்கிவிட்டாள்.

''இளவரசருக்கு வணக்கம்'' என்றள்.

திரும்பிப் பார்த்த மன்னார்தாசன் தன்னருகே வந்து நின்ற மதுரவாணியைப் பார்த்ததும் ஒரு கணம் திகைத்தான்.

''மதுரவாணியா! என்ன தனியாக வருகிறாய்? விழா வில் கலந்து கொள்ளவில்லையா?''

''இவ்வளவு நேரம் அங்குதான் இருந்தேன். ஊர்வலத்தோடு கலந்து தெருத்தெருவாகச் சுற்ற மனமில்லை. ஆமாம், தாங்கள் ஏன் மன்னருடன் செல்லவில்லை?''

''விருப்பமில்லை. இந்தச் சடங்குகள் எதுவும் பிடிக்கவில்லை.''

''இளம் வயதில் நான் பார்த்துப் பழகிய இளவரசருக்கும், இப்பொழுது நான் பார்க்கும் இளவரசருக்கும் நிறைய மாற்றம் தெரிகிறது.''

''காலம் மாறுவதற்கு ஏற்ப உடலில் மாற்றம் தெரிவது இயல்புதானே!''

''உடலில் ஏற்படும் மாற்றம் பற்றி நான் பகரவில்லை. தங்கள் மனதில் ஏற்பட்ட மாற்றங்கள்தான் என்னைத் திகைக்க வைக்கிறது.''

''மனதிலா? அப்படி என்ன மாற்றத்தை என்னிடம் கண்டு விட்டாய்?''

இருவரும் மெதுவாக நடந்தவாறு பேசிக் கொண்டிருந்தனர்.

''என்னைப் பார்ப்பதற்கே பயப்படுகிறீர்கள்! என்னிடம் பேசுவதையே தவிர்க்கப் பார்க்கிறீர்கள்!''

''அப்படி ஒன்றும் இல்லை. நீயாக இப்படித் தவறாகக் கற்பனை பண்ணிக் கொண்டு இருக்கிறாய்!''

''அப்படியானால் பவழ வீதிக்குப் பல நாட்களாகக் கவிதாயினி ரங்காஜம்மா வீட்டில் பாடம் கற்று வந்த தாங்கள், நான் அங்கு வந்த மறுநாளே தங்கள் வருகையை அடியோடு நிறுத்தியதற்கு காரணம் என்ன?''

''என் படிப்பு முடிந்துவிட்டது. அதோடு அரசுப் பணிகள் வேறு நிறைந்து விட்டது. அதுதான் காரணம்.''

''இல்லை. தாங்கள் பொய்யுரைக்கிறீர்கள். என்னைப் பார்ப்பதைத் தவிர்ப்பதற்காகத்தான் அப்படிச் செய்திருக்கி றீர்கள்.''

மன்னார்தாசன் சற்று மவுனமாக இருந்தான். பிறகு ''மதுரவாணி இது பொது இடம். இந்த இடத்தில் பலர் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். நம்மைக் கடந்து செல் லும் அனைவரின் பார்வையும் நம்மீதுதான் விழுகிறது. அதனால் இந்த இடத்தில் நாம் இருவரும் சேர்ந்து பேசிக் கொண்டு வருவது சரியல்ல'' என்றான்.

''அப்படியானால் உய்யான வனத்திற்குள் சென்று பேசலாமா?'' ஆசையோட கேட்டாள்.

''வேண்டாம். இன்று விழா நாள் என்பதால் அங்கும் கூட்டம் இருக்கும். பிறிதொருநாள் பேசலாம்.''

''இல்லை இளவரசே! இதைப்பற்றி மட்டுமல்ல. வேறு சில விஷயங்கள் குறித்துத் தங்களிடம் தனிமையில் பேச ஆசைப்படுகிறேன். நாளைக் காலை முதல் ஜாமத்தில் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் தங்களுக்காக் காத்தி ருப்பேன். வருவீர்களா?''

''வருகிறேன். இப்பொழுது நீ சென்றுவிடு.''

மன்னார்தாசன் அதற்குமேல் அவளருகே வராமல், அப்படியே திரும்பி எதிர் திசையில் நடக்க ஆரம்பித்தான்.

அப்பொழுதுதான் தளவாய் தங்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். மனம் பதறியது. நானும் மதுரவாணியும் பேசியதைத் தளவாய் கேட்டிருப் பாரோ?

''என்ன மாமா வேகமாக வருகிறீர்கள்? தந்தை என்னை அழைத்து வருமாறு சொன்னாரா?'' என்றான்.

''ஓ மருமகனா! நான் கவனிக்கவே இல்லையே! மன்னர் நமது குலகுருவின் இரவு நேரப் பூஜைக்கான பொருட்கள் தயாராக வைத்திருக்கும்படி பார்த்துவிட்டு வரச் சொன்னார். அந்த ஞாபகத்திலேயே வந்து கொண்டிருந்ததால் தங்களைக் கவனிக்கவில்லை.''

மன்னார்தாசனுக்கு இதைக் கேட்டதும் நிம்மதியாக இருந்தது. தற்செயலாக பார்ப்பதுபோல் திரும்பிப் பார்த்தான். மதுரவாணி வேறொரு வீதிக்குள் நுழைந்து மறைந்து விட்டாள். தளவாய் இதனைப் பார்த்ததும் பார்க்காதது மாதிரி வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

''மழை வரும்போல் தெரிகிறது. விழா முடியும்வரை மழை வராமல் இருந்தால் சரி. அது இருக்கட்டும். நீ ஏன் விழாவில் கலந்து கொள்ளவில்லை!''

''விருப்பமில்லை!''

''புரியவில்லை! உனக்கும் மன்னருக்கும் ஏதோ விவாதம் நடந்த மாதிரித் தெரிந்ததே! என்ன மருகமனே?''

''தந்தையின் கண்மூடித்தனமான பக்தி என்னைக் கவலைக்கு உள்ளாக்குகிறது மாமா.''

''கால காலமாக நடந்துவரும் ஒரு திருவிழா. இதில் கண்மூடித்தனமான பக்தி என்று எதைச் சொல்கிறாய்?''

''வேமணாவின் கவிதையில் ஒன்று சொல்கிறேன் கேளுங்கள்.

*** ஊரிவாரு பாவி யுதகமு நிம்திம்சு
பாததேர்த்த முனக்கு பிரமகினாரு
பாததேர்த்த முனக்கு பலமேமி கத்துரா

என்று சொல்கிறார்.

''ஊரில் உள்ள ஒருசிலர் பயன்படுத்தும் கிணற்று நீரில் கூட குற்றம் பார்க்கிறார்கள். ஆனால் புண்ணியவான் களின் பாதங்களைக் கழுவிய நீரை உயர்வாக மதிக்கிறார் கள். பாதங்களைக் கழுவுவதில் என்ன பலன் என்று கேட்கிறார். என் தந்தையோ பாதங்களைக் கழுவியது மட்டுமின்றி, குருவின் பாதக் குறடுகளுக்குப் பல்லக்கு மரியாதை செலுத்துகிறார். ஹூம்'' என்று பெருமூச்சு விட்டவாறு வேகமாக நடந்தான் இளவரசன்.

தளவாய் சற்று நேரம் யோசித்தபடி இருந்தான். ''நாளைக் காலை.. முதல் ஜாமம்.... பெருவுடையார் கோயில்...'' என்று அவன் எண்ணம் சுழன்றது.

---

*''He that wears this talisman, verily is a tiger, a lion as well, and, too, a bull, moreover a curtailer of enemies'' Hymns of Atharva - Veda - Translated by Maurice Bloom field - Edited by F.Max Muller - page no.80.*

***This woman shall obtain a husband, since king Soma makes her lovely! May she begetting sons, become a queen; may she, going to her husband, shine loveliness - Hymns of Atharva - Veda - page no.94.*

****They find fault with the well used by the village and are delighted with the water in which a holy man's feat have been washed. what profit is there in foot washings? - verses of Vemnua - C.P.Brown - page no.212.*



# 66

தஞ்சை மாநகரத்தின் மீது தனது மஞ்சள் கிரணங்களை வீசித் தங்க மயமாக்கிக் கதிரவன் விழித்தெழுந்த இளங்காலைப் பொழுது.

முதல் ஜாமம் அரும்பிய அந்த நேரத்தில் தள்வாய் ரங்கப்ப நாயக்கனின் மூளை துரிதமாக வேலை செய்து கொண்டிருந்தது. நேற்றைய பொழுதில் நடந்த நிகழ்ச்சிகள் அவன் மனதில் திரும்பத் திரும்பச் சுழன்று கொண்டிருந்தன.

முதலில் மன்னார்தாசன் சென்றான். சற்று நேரத்தில் அவன் சென்ற அதே திசையில் மதுரவாணியும் சென்றாள்.

இளவரசனுக்குத்தான் தந்தையிடம் கோபம். மன்னர் திட்டியதால் அந்த இடத்தில் இருந்து அவன் அகன்றது சரி. இந்த மதுரவாணி அவ்வளவு நேரம் இளவரசியின் அருகில் இருந்துவிட்டு மன்னார்தாசன் செல்வதைப் பார்த்த பின்னர் அவளும் விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் அகன்றதற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

சற்று நேரத்தில் மன்னார்தாசனும் மதுரவாணியும் சேர்ந்தே நடந்தார்கள். அதுகூடத் தற்செயல் என்று எடுத்துக் கொண்டால்கூட, மன்னார்தாசன் மட்டும் திடீரென்று பிரிந்து செல்கிறான்.

அவ்வளவு நேரம் அதே திசையில் சென்றவன் அதற்குப் பிறகு எதற்காக எதிர்த்திசையில் செல்ல வேண்டும். என்னைப் பார்த்தவுடன் அவன் முகத்தில் ஒரு தடுமாற்றம் தெரிந்ததே!

அவர்களுக்குள் என்னவோ இருக்கிறது! அதை எப்படியாது கண்டுபிடித்தே ஆகவேண்டும்!

அவர்கள் இருவரும் பேசியது எதுவுமே காதில் விழவில்லை. 'நாளைக்காலை, முதல் ஜாமம், தஞ்சைப் பெருவுடையார் கோயில்' இந்த மூன்று வார்த்தைகள் மட்டும்தான் அதிர்ஷ்டவசமாகக் கேட்டது.

ஒருவேளை நாளைக் காலை முதல் ஜாமத்தில் இளவரசனைத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு வந்து சந்திக்கச் சொல்லி அழைப்பு விடுத்திருப்பாளோ? இருக்கும்! அப்படித்தான் இருக்கும்!

இவர்களைக் கையும் களவுமாகப் பிடிக்காமல் விடக்கூடாது. முதன் முதலில் இளவரசன் அரண்மனைக்குள் நுழைவதற்கு முன் ஆரத்தி எடுக்கும்பொழுது இருவரும் ஏதோ பேசிக் கொண்டார்கள். கேட்டதற்கு இருவருமே இல்லை என்று சாதித்தார்கள்.

பிறகு பவழவீதியில் உள்ள கவிதாயினி ரங்காஜம்மா வீட்டில் சந்தித்துப் பேசி மகிழ்ந்திருக்கிறார்கள். நான் அதனைக் கண்டுவிட்ட மறுநாளில் இருந்து இளவரசன் அங்கு செல்வதை அடியோடு நிறுத்திக் கொண்டான்.

இனி அவர்கள் பெருவுடையார் கோயிலுக்குள் சென்று கூடி மகிழப் போகிறார்களா? பொருத்தமான இடம்தான். அதிக ஆள் நடமாட்டமில்லாத கோயில். யாருமறியாமல் இருவரும் சந்தித்துப் பேசிக் கூடிக் குலாவிக் குதூகலித்துக் கும்மாளமிடப் போகிறார்கள் என்று நினைக்கிறேன்.

விடக்கூடாது. இந்த முறை இவர்களைக் கையும் களவுமாகப் பிடித்து விடவேண்டும். இளவரசனின் அந்தரங்கம் என் கையில் சிக்கிக் கொண்டால், அதனை என் மகன் அச்சுதப்பனின் எதிர்காலத்திற்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மதுரவாணி! தராதரம் தெரியாமல் இளவரசியுடன் சேர்ந்து கொண்டு என்னையும் என் மகனையும் கேலி செய்து சிரித்தாயல்லவா! உன் காரியம் மட்டும் என் கைக்குள் வந்து சிக்கட்டும்! உன்னை நாலு பேர் என்ன இந்த நாடு முழுவதும் சிரிப்பாய்ச் சிரிக்குமாறு சீரழிக்கிறேனா இல்லையா பார்!

தளபதி ரங்கப்ப நாயக்கன் சாளரத்தின் வழியாக வானத்தைப் பார்த்தான். முதல் ஜாமம் தொடங்கி நீண்ட நேரம் ஆகிவிட்டது. இனியும் தாமதம் செய்யக்கூடாது.

உடனே கிளம்பிப் பெருவுடையார் கோயிலுக்கு வந்தான். கோயிலுக்குள் மனித நடமாட்டமே தென்படவில்லை.

கர்ப்பக்கிரகத்தினுள் அர்ச்சகர் சுவாமிக்கு அலங்காரம் செய்து கொண்டிருப்பது அர்த்த மண்டபத்தின் அருகே வந்து பார்த்த தளவாய்க்குத் தெரிந்தது. வேறு எவருமே தென்படவில்லை.

கோயிலின் பிராகாரத்தினை ஒருமுறை சுற்றுப் பார்த்து விட்டு ஒரு இருட்டான பகுதியில் மறைந்து இருந்தவாறு வாசலையே பார்த்துக் கொண்டிருந்தான் ரங்கப்ப நாயக்கன்.

பொழுது புலர்ந்ததில் இருந்தே மதுரவாணியின் மனது பூரிக்கத் தொடங்கியது.

இன்று எப்படியும் இளவரசர் சொன்ன நேரத்தில் பெருவுடையார் கோயிலுக்கு வந்துவிடுவார். இந்தத் தடவை என்னை நிச்சயமாக ஏமாற்றமாட்டார்.

கோயிலில் கூட்டமே இருக்காது. நானும் அவரும் மட்டும் தனியாக இருப்போம். அந்த இனிமையான நேரத்தில் என் மனதில் உள்ளதை இன்று எப்படியும் அவரிடம் வெளிப்படுத்தி விடவேண்டும்.

அவர் மீது கொண்ட காதலில் நான் எப்படி உருகித் தவிக்கிறேன் என்பதை அவருக்கு உணர்த்திவிட வேண் டும். அவர் என்னைக் காதலிப்பாரா? காதலிக்கா விட்டால்?

கடவுளே! அப்படி ஒன்று நடந்தால் அதனை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாது! பிரகதீஸ்வரா! அவர் என்னைக் காதலிக்கும்படி நீதான் திருவருள் புரிய வேண் டும்!

மதுரவாணிப் பார்த்துப் பார்த்துத் தன்னை அலங்கரித் துக் கொண்டாள். அலங்காரங்களையும், ஆடைகளையும் பலமுறை மாற்றி மாற்றி ஆடியில் பல கோணங்களில் தன் மேனியை வளைத்துப் பார்த்துத் திருப்தி அடைந்தாள்.

பூஜைப் பொருட்கள் அடங்கிய தட்டை எடுத்துக் கொண்டு தன் தாயிடம் சொல்லிக் கொண்டு பல்லக்கில் ஏறி அமர்ந்து பெருவுடையார் கோயில் வாசலின் முன் வந்து இறங்கினாள்.

இந்தக் காட்சியினைத் தூரத்தில் மறைந்து பார்த்துக் கொண்டிருந்த தளவாயின் மனம் படபடக்கத் தொடங்கி யது.

இதோ மதுரவாணி வந்துவிட்டாள்! இனி மாப் பிள்ளை வரவேண்டியதுதான் மிச்சம்! வரட்டும்! சற்று நேரத்தில் இவர்களைக் கையும் களவுமாகப் பிடித்து விடுகி றேன்.

மனம் பரபரக்கக் கண்களையும் காதுகளையும் கூர்மை யாக்கி மறைவிடத்தில் பதுங்கியவாறு பார்த்துக் கொண்டி ருந்தான் தளவாய்.

சிவிகையில் இருந்து இறங்கிய மதுரவாணி நேரே நடந்து கருவறைக்குள் சென்றாள். அங்கிருந்த அர்ச்சகர் அவளிடம் அளவுக்கதிகமான மரியாதை காட்டி, பூஜைப் பொருட்கள் அடங்கிய தட்டைப் பெற்றுக் கொண்டார்.

மகேசனின் லிங்க சொரூபத்தின் மீது மலர்களைத் தூவி மதுரவாணியின் பெயருக்கு அர்ச்சனைப் புரியத் தொடங்கினார். கைகளைக் கூப்பி, கண்களை மூடி, கனத்த நெஞ்சுடன் கடவுளைத் துதித்தாள் மதுரவாணி!

'பிரஹதீஸ்வரா, பெருவுடையாரே, பிட்டுக்கு மண் சுமந்து பேரருள் புரிந்தவனே, என் மனதில் இருக்கும் ஆசையை நிறைவேற்று! இளவரசர் மன்னார்தாசன் என் காதலை ஏற்று என் கை பிடிக்க வரம் தரவேண்டும் ஸ்வாமி! என் எண்ணம் நிறைவேறினால் சொர்ணாபிஷே கம் செய்கிறேன் ஸ்வாமி!'

பூஜை முடிந்து, பிரசாதம் பெற்றுக் கொண்டு கருவறையில் இருந்து வெளியேறி அர்த்தமண்டபத்தில் வந்து உட்கார்ந்தாள். வானத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

முதல் ஜாம வேளையின் முதல் முகூர்த்தம் முடியும் தறுவாய் ஆகி இருந்தது. இனி ஒரு முகூர்த்த வேளைதான் மிச்சம் உள்ளது. இந்த மூன்று நாழிகை நேரத்திற்குள் இளவரசர் வந்துவிட்டால் நல்லது! எப்பொழுது வரப்போகிறார் என்று தெரியவில்லையே?

ஏங்கித் தவிக்கும் இதயத்துடன் மதுரவாணி கோயிலின் வாயிலைப் பார்த்தவாறு அர்த்தமண்டபத்தினுள் அமர்ந்திருக்க, மறைவிடத்தில் பதுங்கி இருந்து பார்த்துக் கொண்டிருந்த தளவாயின் மனம் சிந்திக்கத் தொடங்கியது.

மன்னார்தாசனை எதிர்பார்த்து மதுரவாணி உட்கார்ந்து விட்டாள். இளவரசனை இன்னும் காணவில்லையே! எப்பொழுது வரப்போகிறான்?

சற்று நேரத்தில் சிவிகை ஒன்று கோயிலின் வாசற்புறத்தில் வந்து நிற்பது தெரிந்தது. அதிலிருந்து இளவரசி சந்திரவதனா எழிலாக இறங்கி பூஜைப் பொருட்கள் அடங்கிய தட்டு ஒன்றை ஏந்தியவாறு கோயிலுக்குள் நுழையத் தொடங்கினாள்.

இதனைப் பார்த்த மதுரவாணிக்கு அதிர்ச்சியாக இருந்தது. இளவரசி எதற்காக இங்கு வருகிறாள்? இதனை நான் எதிர்பார்க்கவில்லையே!

இந்த நேரத்தில் இளவரசரும் இங்கு வந்துவிட்டால் இக்கட்டான சூழல் ஏற்பட்டுவிடுமே! இளவரசருடன் தனிமையில் பேசவும் முடியாது. எதிர்பாராத விதமாக இளவரசரும் அங்கு வருவதைப் பார்த்தால் சந்திரவதனாவிற்குச் சந்தேகம்கூடத் தோன்றலாம்.

கடவுளே! இதென்ன சோதனை! என் எண்ணங்களுக்கு விடிவு காலம் எப்பொழுதுதான் வரப்போகிறதென்று தெரிய வில்லையே!

மனதில் புகைந்த எண்ணங்களை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு, மதுரவாணி இளவரசியின் எதிரே ஓடோடிச் சென்று வரவேற்றாள்.

''வரவேண்டும், வரவேண்டும் இளவரசியாரே! தங்களது திடீர் வரவு என்னைத் திகைக்க வைத்துவிட்டது'' என்றாள்.

''நீ இங்கு வந்து நீண்ட நேரம் ஆகிவிட்டதா?''

''இல்லை. சற்று நேரத்திற்கு முன்புதான் வந்தேன். பூஜை முடித்து இப்பொழுதுதான் இங்கு வந்து உட்கார்ந்தேன். அதே நேரம் நீயும் வந்து கொண்டு இருக்கிறாய்.''

''என்ன, பூஜையை முடித்துவிட்டாயா? நான் வருவதற்குள் எப்படியடி செய்யலாம்?''

''நீ இங்கு வருவாய் என்று எனக்கு எப்படியடி தெரியும்?''

''கேலி செய்தது போதும். என்னை இங்கு வரச் சொல்லிச் செய்தி அனுப்பிவிட்டு, நான் வருவதற்குள் பூஜையை வேறு முடித்திருக்கிறாய்!'' என்றாள் பொய்க் கோபத்துடன்.

''நான் உன்னை வரச் சொன்னேனா? யாரிடம் செய்தி அனுப்பினேன்?'' குழப்பத்துடன் கேட்டாள் மதுரவாணி.

''என் தமையன் மன்னார்தாசனிடம் நேற்று நீதான் சொன்னாயாம்.''

''என்ன சொன்னேன்?''

''நாளைக் காலையில் முதல் ஜாம வேளையில் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு நீ செல்லப் போவதாகவும், என்னைக் கண்டிப்பாக அங்கு வரச் சொல்ல வேண்டும் என்று அவரிடம் கேட்டுக் கொண்டாயாமே?''

''அப்படி என்று உன்னிடம் யார் வந்து சொன்னார்கள்?''

''என் அண்ணன் மன்னார்தாசன்தான் நேற்று இரவு என்னிடம் வந்து சொல்லி 'கண்டிப்பாக காலையில் சென்று விடு சந்திரா. இல்லாவிடில் மதுரவாணி கோபித்துக் கொள்ளப் போகிறாள்' என்று என்னிடம் கூறினார்.''

''அப்படியா!'' என்றாள் மதுரவாணி அதிர்ச்சியுடன்.

''என்னடி 'அப்படியா' என்று இப்படி அசந்து போய்க் கேட்கிறாய்? நீ செய்தி சொல்லி அனுப்பவில்லையா?''

''இல்லை... இல்லை... நான்தான் செய்தி சொல்லி அனுப்பினேன்.''

''இதைச் சொல்வதற்கு உனக்கு ஏன் இவ்வளவு தடுமாற்றம்?''

''தடுமாற்றம் எல்லாம் ஒன்றும் இல்லை. முதல் ஜாமம் தொடங்கும்பொழுது உன்னை இங்கு வரச் சொன்னேன். நீயோ ஜாமம் முடியும் தறுவாயில் வருகிறாய். அதனால் உன்னைக் கொஞ்சம் கோபிக்க வேண்டும் போல் இருந்தது. இளவரசி ஆயிற்றே. உன்மேல் கோபப்பட முடியுமா? அதனால் கொஞ்சம் நேரம் சீண்டி விளையாடிப் பார்த்தேன்.''

''போதும் விளையாடியது வா. கோயிலுக்குள் செல்லலாம்.''

இருவரும் கோயிலுக்குள் செல்வதைத் தூரத்தில் மறைந்து இருந்தவாறு பார்த்துக் கொண்டிருந்தான் தள வாய் ரங்கப்ப நாயக்கன்.

என்ன இது மன்னார்தாசனை எதிர்பார்த்தால் சந்திரவ தனா அல்லவா வந்து இருக்கிறாள்? சந்திரவதனாவைத் தான் வரச் சொல்லி மன்னார்தாசனிடம் செய்தி சொல்லி அனுப்பி இருப்பாளோ? நான்தான் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டேன் போலிருக்கிறது!

தளவாய் ரங்கப்ப நாயக்கன் குழப்பத்துடன் மறைவி டத்தை விட்டு மற்றவர்கள் பார்க்காதவாறு வெளியேறி னான்.

மதுரவாணி மனத்திற்குள் புகையத் தொடங்கியது. இளவரசர் என் மனதை இன்னும் புரியவில்லையா? ஒரு வேளை புரிந்து கொண்டு என்னைத் தவிர்க்கப் பார்க்கி றாரா? எவ்வளவு சாமர்த்தியமாக இளவரசியை இங்கு அனுப்பிவிட்டார்! என்னை வெறுக்கிறாரா?

பிரஹதீஸ்வரா! எவ்வளவு நாளைக்குத்தான் என்னை இப்படிச் சித்திரவதைக்கு ஆளாக்கப் போகிறாய்? மன்னார் தாசன் மேல் நான் வைத்திருக்கும் காதலை அவரிடம் நேரடியாக என் வாயாலே சொல்ல எப்பொழுதுதான் நேரம் அமையப் போகிறதோ?

''என்னடி மதுரவாணி. என்னை இங்கு வரச் சொல்லி விட்டு, இஞ்சி தின்ற குரங்கு மாதிரி 'உம்' என்று வருகிறாயே! கால தாமதமாக நான் வந்ததற்காக என் மீது கோபமா?'' என்றாள் இளவரசி.

''அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. மனதிற்குள் ஸ்தோத்திரம் சொல்லிக் கொண்டு வந்தேன்.''

''இன்றைக்கு இங்கு என்ன விசேஷம்? திடீரென்று இந்தக் கோயிலுக்கு என்னை வரவழைத்ததற்கு ஏதாவது காரணம் உள்ளதா?''

''உம்... ஆங்... இன்று மிகவும் விசேஷமான தினம் சந்திரா! சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பெற்ற திருநாள். அதனால்தான் பெருவுடையாருக்கு இன்று இத்தனை அலங்காரம்! இந்தக் காட்சியை நீ காணவேண்டும் என்பதற்காகத்தான் உன்னை இங்கு வருமாறு சொல்லி அனுப்பினேன்.''

''பிட்டுக்கு மண் சுமந்த பிரம்படி பட்டாரா? சிவ பெருமானா? எப்படி? நான் கேள்விப்பட்டதே இல்லையே!''

மதுரவாணி சுருக்கமாக அந்தக் கதையை இளவரசிக்கு விளக்கினாள். கேட்ட சந்திரவதனா பிரமித்தாள்.

''அற்புதமாக இருக்கிறதடி! தன் பக்தர்களைக் காக்க இறைவன் எப்படி இல்லாம் மாறுவேடத்தில் வந்திருக்கிறார்!'' இளவரசிக்கு முத்துவின் ஞாபகம் எழுந்து மனம் பூரித்தது.

''இம்மாதிரி அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் அத்தனையும் மதுரைப் பகுதியில் நடந்ததாகப் புராணம் கூறுகிறது. இம்மாதிரி மதுரை மன்னன் சொக்கநாதனும் பலவிதமான திருவிளையாடல் புரிந்து உன்னை மணக்கப் போகிறான் என்றுதான் நான் நினைத்தேன்.''

''ஏய், அவனைப்பற்றி மட்டும் என்னிடம் பேசவே பேசாதே! என் உயிர் உள்ளவரை அவனை நான் மணப்பது நடக்கவே நடக்காது.''

''ஹூம்! இப்பொழுது முத்து என்று ஒரு திருடன், மன்னித்துக் கொள். திருடர் வந்து திருவிளையாடல் புரிந்து உன் மனதில் புகுந்து கொள்வார் என்று நான் நினைக்க வில்லை''

''அவரை ஒன்றும் நான் காதலிக்கவில்லை.''

''அப்படியானால் சொக்கநாதனைத்தான் நீ காதலிக் கிறாய் என்று நினைக்கிறேன்.''

''அது ஒருபோதும் நடக்காது. ஊர் பேர் தெரியாத முத்துவையாவது என் மனம் விரும்பினாலும் விரும்புமே ஒழிய, எங்கள் பரம்பரை எதிரியான சொக்கநாதனை என் மனம் ஒருபோதும் நாடாது. எதிர்பாராதவிதமாக அவன் என்னைத் தொடும்படியாக நேர்ந்தால்கூட மறுவிநாடியே என் உயிர் பறந்துவிடும்.''

''இல்லை... வந்து...''

''விடு அந்தப் பேச்சை! இறைவன் சந்நிதானத்திற்குள் எங்கள் இனப் பகைவன் பற்றிய பேச்சை எடுக்காதே.''

மறுவாரம் வயது முதிர்ந்த சந்நியாசி வடிவத்தில் சொக்கநாதன் தஞ்சை நகரையே கலக்க ஆரம்பித்தான். இளவரசி சந்திரவதனாவும் கலங்கிப் போனாள்.



# 67

தஞ்சை மாநகரமே ஆச்சர்யப் பெருங்கடலில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தது.

இமய மலையின் அடிவாரத்தில் இருந்து அருளானந்த ஸ்வாமிகள் என்று ஒரு மகான் தீர்த்த யாத்திரையின் பொருட்டு கன்னியாகுமரிக்கு செல்லும் வழியில் சில நாட்கள் தஞ்சாவூரில் தங்கி இருக்கின்றாராம்! அவருக்கு வயது நூற்று அறுபத்து ஏழு ஆகிறதாம்! இருந்தாலும் முகத்தில் தேஜஸ் ஒளிவிடுகிறதாம். உடலில் கம்பீரமும், கண்களில் தீட்சண்யமும் தென்படுகிறதாம்.

அவரிடம் அருள் வாக்குப் பெற்றால், தீராத நோய்கள் எல்லாம் தீர்ந்து விடுகின்றனவாம். ஏழைகளின் பணக்கஷ்டம் தீர்வதற்காகச் சிலருக்குப் புதையல் கிடைக்கும்படி கூட அவர் ஆசி வழங்கி இருக்கிறாராம்.

இப்படி பேசியவாறு தஞ்சை வாழ் மக்கள் அருளானந்த ஸ்வாமிகள் தங்கி இருக்கும் இடம் தேடி அலை அலையாகச் சென்று வணங்கத் தொடங்கினர்.

தஞ்சை நகரத்தைவிட்டுச் சற்றே ஒதுங்கி, காவிரிக் கரையில் சிறு குடில் ஒன்று அமைத்து சாந்த சொரூபத்தில்

வீற்றிருந்தான் அருளானந்த ஸ்வாமிகள் என்ற பெயரில் மதுரை மன்னன் சொக்கநாதன். அவனுக்கருகே அவனுடைய பிரதான சிஷ்யன் என்ற போர்வையில், வயோதிக வேடம் தரித்துப் பவ்யமாகக் கை கட்டி நின்று கொண்டிருந்தான் அவனது நண்பன் வெங்கடகிருஷ்ணன்.

மாறுவேடம் தரித்து இங்கு வருவதற்குச் சில நாட்களுக்கு முன்பிருந்தே இதற்கான ஏற்பாடுகளை இருவரும் செவ்வனே செய்து முடித்திருந்தனர்.

வெளியூரில் சுற்றி அலைந்து கொண்டிருந்த சில பிச்சைக்காரர்களைத் தேடிப்பிடித்து, அவர்களுக்குப் பணம் தந்து காது கேளாதவராக, பார்வையற்றவராக, நொண்டியாக நடிக்கச் சொல்லி இருந்தார்கள். அருளானந்த ஸ்வாமிகளிடம் வந்து ஆசி பெற்று அவர் கையால் தடவிக் கொடுத்ததும் அவர்கள் நோய் குணமுற்றதாக மிகப் பிரமாதமாக நடித்தார்கள்.

தஞ்சாவூரில் உள்ள சில ஏழைகளை அடையாளம் கண்டு, நள்ளிரவில் அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள வீட்டின் பின்புறங்களில் மண்ணைத் தோண்டி, பொற்காசுகளைப் போட்டு புதைத்து வைத்தார்கள். மறுநாள் அந்த ஏழைகள் இவர்களிடம் வந்து ஆசி பெறும்பொழுது 'சிறந்த பக்தனான நீ ஏழ்மையில் வாடுவதைக் கண்டு இரக்கம் கொண்டு இறைவன் உனக்கு வரம் அளித்திருக்கிறார். உன் புறவாசற் பக்கம் உள்ள மரத்தின் அடியில் உன் ஏழ்மையைப் போக்கும் மருந்து புதைந்து கிடக்கிறது' என்று அருளானந்த ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்து அருள் புரிவார்.

அடுத்த சில நாழிகைகளில் அந்த ஏழை அவர் சொன்ன இடத்தில் தோண்டிப் பார்த்து, பொற்காசுகள் புதைந்து கிடப்பதைக் கண்டு ஆனந்தக் கூத்தாடுவதை

அக்கம் பக்கத்தில் இருப்போர் பார்த்து ஆச்சர்யக் கடலில் மூழ்கி, அலை அலையாய்த் திரண்டு அருளானந்த ஸ்வாமி களிடம் ஆசி பெற ஓடோடி வரத் தொடங்கினர்.

ஒரே நாளில் அருளானந்த ஸ்வாமிகளின் கீர்த்தி தஞ்சை மாநகரத்தையே கிடுகிடுக்க வைத்தது. ஆண்டி முதல் அரசப் பிரதிநிதிவரை அருளானந்த ஸ்வாமிகளின் குடிலுக்குத் தேடி வந்து ஆசி பெற்றுச் சென்று கொண்டிருந் தார்கள்.

அப்பொழுது அச்சுதப்பன் குதிரையில் அமர்ந்தவாறு அந்தப் பக்கம் வந்து கொண்டிருந்தான். காவிரிக் கரைய ருகே குடில் ஒன்று முளைத்திருப்பதையும், அதனைச் சுற்றி ஏராளமானோர் கூடி இருப்பதையும் பார்த்து என்னவென்று விசாரித்தான்.

விஷயத்தைக் கேள்விப்பட்டதும் பிரமித்து, அத்த கைய மாமுனிவரிடம் ஆசி பெறும் ஆவலுடன் குதிரை யில் இருந்து இறங்கி குடிலை நோக்கிச் சென்றான்.

குடிலுக்கு வெளியே நின்று கூட்டத்தினரை அனுப்பிக் கொண்டிருந்த வெங்கடகிருஷ்ணன் அச்சுதப்பன் அந்த இடத்திற்கு வந்து கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் அவ சர அவசரமாகக் குடிலுக்குள் நுழைந்து சொக்கநாதனின் காதோடு சொன்னான்.

பின்னர் சொக்கநாதன் கிசுகிசுப்பாக ஏதோ பேச, அதைக் கேட்டு தலையசைத்தாவறு வாசலுக்கு வந்தான். அதே நேரம் சரியாக அச்சுதப்பனும் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

வெங்கடகிருஷ்ணன் அச்சுதப்பனைப் பார்த்து கைய சைத்துத் தன்னருகே வருமாறு சைகை செய்தான். அச்சுதப்

பன் ஒன்றும் புரியாமல் விழித்தவாறு அவனருகே வந்தான்.

''தாங்கள் வந்தவுடன் ஒரு நொடிகூடக் காத்திருக்காமல் உடனே வருமாறு ஸ்வாமிகள் கட்டளை இட்டிருக்கிறார்'' என்றான் வெங்கடகிருஷ்ணன்.

''என்ன? நான் இங்கு வருவேன் என்று ஸ்வாமிகளுக்கு எப்படித் தெரியும்? நான் யார் என்று தெரியுமா?'' என்று வியப்புடன் கேட்டான் அச்சுதப்பன்.

வெங்கடகிருஷ்ணன் அதற்குப் பதில் எதுவுமே பகராது அவனைக் குடிலுக்குள் அழைத்துச் சென்றான்.

அச்சுதப்பன் உள்ளே நுழைந்ததை அறிந்தும் அறியாதவன் போலச் சொக்கநாதன் கண்களை இறுக மூடிக் கொண்டு கையில் இருந்த ருத்திராட்ச மாலையை வருடியவாறு, ''வா, மகனே! உன் வரவைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்றான்.

அச்சுதப்பன் இதைக் கேட்டுப் பிரமிப்புடன் ஸ்வாமிகளை ஏற இறங்கப் பார்த்தான்.

வயது இன்னதென்று கணிக்க முடியாதபடி முகத்தில் சற்றுச் சுருக்கம் விழுந்து, ஆனால் பளபளப்புடன் கூடிய முதிர்ச்சியான தோற்றம். நீண்ட வெண்தாடி அவர் மார்பு வரை தெரிந்தது. வெண்பட்டுப் போல நரைத்திருந்த தலைமுடி மகுடம் வைத்ததுபோல் முடிக்கப்பட்டிருந்தது.

தூய்மையான காவி உடை தரித்து புலித்தோல் பரப்பிய தரை மீது கால்களை மடித்துப் போட்டு அமர்ந்திருந்தார். சுற்றிலும் பூஜைப் பொருட்களும், பக்தர்கள் கொண்டு வந்த காணிக்கைப் பொருட்களும் பரப்பி வைக்கப்பட்டிருந்தன.

கையில் இருந்த ருத்ராட்ச மாலையை வருடியவாறு அமர்ந்திருந்த தோற்றம் காண்பவர் எவரையுமே கையெடுத்துக் கும்பிடும்படியாக அமைந்திருந்தது.

இன்னமும் பிரமிப்பு விலகாமல், வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கும் அச்சுதப்பனை ஏறிட்டுப் பார்த்த அருளானந்த ஸ்வாமிகள், ''தஞ்சை தரணியின் தன்னேரில்லாத தளவாய் ரங்கப்ப நாயக்கனின் அருமைப் புதல்வன் அச்சுதப்பனுக்கு இன்னும் என்ன தயக்கம்? உனக்காகத்தான் காத்திருக்கிறேன். என்னருகில் வா மகனே'' என்றார்.

இதைக் கேட்டவுடன் வியப்பின் எல்லைக்கே சென்றுவிட்ட அச்சுதப்பன் அவசரமாக அவரருகே ஓடி வந்து கால்களில் விழுந்து வணங்கினான்.

சொக்கநாதன் அவன் தலையில் கை வைத்து, ''கூடிய விரைவிலேயே உன் எண்ணம் நிறைவேறும். எழுந்து என் எதிரில் உட்கார் மகனே!'' என்றான்.

அவசரமாக எழுந்து பணிவுடன் ஸ்வாமிகள் எதிரே உட்கார்ந்து கைகட்டி, வாய் புதைத்துக் கேட்டான் அச்சுதப்பன்.

''நான் யார் என்று தங்களுக்கு எப்படித் தெரியும் ஸ்வாமி? நான் இங்கு வருவேன் என்று எப்படி எதிர்பார்த்தீர்கள்? சற்று நேரத்திற்கு முன்வரை நான் இங்கு வருவேன் என்று எனக்கே தெரியாது!''

''ஸ்வாமிகள் திரிகாலம் உணர்ந்தவர்! அவர் அறியாமல் இந்த அகிலத்தில் ஓர் அணுகூட அசையாது! முற்றும் துறந்த ஞானியிடம் இப்படி முட்டாள்தனமான கேள்விகளை எல்லாம் கேட்கக்கூடாது'' என்று பக்கத்தில் இருந்த வெங்கடகிருஷ்ணன் அவனைக் கடிந்து கொண்டான்.

''சிஷ்யா, அவனைக் கடிந்து கொள்ளாதே! அவன் குழந்தை! அவனுக்கு என்ன தெரியும்! இல்லாமலா தஞ்சைத் தரணிக்கு மன்னனாகும் வாய்ப்பைத் தனது மதியீனமான செயலால் தவறவிட்டிருப்பான்?'' என்றான் சொக்கநாதன்.

இதைக் கேட்டதும் அச்சுதப்பன் திகைத்து ''ஸ்வாமிகள் என்ன சொல்கிறீர்கள்?'' என்றான்.

''கள்ளின் மீதுள்ள மோகத்திலும், கள் விற்கும் பெண்ணின் மீதுள்ள காமத்திலும் உன் புத்தி மழுங்கிக் கிடக்கிறது மகனே! எவனோ ஊர் பேர் தெரியாத ஒரு திருடன் உன்னை மிகவும் தந்திரமாக ஏமாற்றி உன்னாலேயே உன் தந்தைக்குக் களங்கம் ஏற்படும்படி செய்துவிட்டது கண்டு வேதனையில் ஆழ்ந்திருக்கிறாய்! இளவரசிக்கு உன் மீது காதல் ஏற்படும் சமயம் பார்த்து அந்தப்புரத்திற்குள் இப்படி ஓர் அசாதாரணமான சம்பவம் நிகழ்ந்தது விதி மகனே விதி.''

அச்சுதப்பன் கண்கள் ஆச்சர்யத்தில் விரிந்தன.

''இதைப்பற்றி நாட்டு மக்கள் எவரும் அறிய மாட்டார்கள். தங்களுக்கு எப்படித் தெரிந்தது ஸ்வாமி?''

அப்பொழுது வெங்கடகிருஷ்ணன் அச்சுதப்பன் அருகே வந்து குனிந்து காதோடு கிசுகிசுத்தான். ''மறுபடியும் முட்டாள்தனமாகக் கேட்கிறாயே! இனி இப்படிப்பட்டக் கேள்விகளை எல்லாம் கேட்டால் ஸ்வாமிகள் உன்னுடன் பேசவே மாட்டார்!''

அச்சுதப்பன் உடனே பயந்து, ''ஸ்வாமிகள் என்னை மன்னிக்க வேண்டும். நான் கேட்டது தவறு'' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

''நீ சிறுவன். வளமான எதிர்காலம் ஒன்று உனக்காகக் காத்திருக்கிறது. உனது விளையாட்டுத்தனமான புத்தியினால் அதனைச் சிதறடித்துவிடுவாயோ என்று தான் கவலைப்படுகிறேன்.''

''தாங்கள் சொல்வது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை.''

''உன் மனதில் ஓர் ஆசை பன்னெடுங்காலமாகக் குடிகொண்டிருக்கிறதே, அதனைச் சொல் மகனே!''

''இந்த நாட்டில் உள்ள மக்கள் சுபிட்சமாக இருக்க வேண்டும். மாதம் மும்மாரி பெய்து வளம் செழிக்க வேண்டும். அதுதான் என் ஆசை.''

''பொய்யுரைக்கிறாய் புதல்வா! தஞ்சை மன்னன் விஜய ராகவ நாயக்கனின் ஒரே மகளான இளவரசி சந்திரவதனா மீது உனக்குத் தணியாத ஆசை இருக்கிறது. ஆனால் அவளோ உன்னை ஏறிட்டுக் கூடப் பார்க்க மாட்டேன் என்கிறாள். உன்னை உதாசீனம் செய்கிறாள். அப்படித்தானே? அவளை மணந்து இந்த நாட்டின் மன்னனாக முடிசூட வேண்டும் என்பதுதானே உன் ஆசை?''

''உண்மைதான். உண்மைதான் ஸ்வாமி'' என்று அச்சுதப்பன் ஸ்வாமிகளின் கால்களில் விழுந்து வணங்கினான்.

''உன் எண்ணம் நிறைவேற நீ முன் ஜென்மத்தில் செய்த பாவ காரியங்கள் குறுக்கே நிற்கின்றனவே. என்ன செய்வது?''

''அது நிவர்த்திக்க என்ன வேண்டுமானாலும் செய்யக் காத்து இருக்கிறேன் ஸ்வாமி! சந்திரவதனாவை மணந்து இந்த நாட்டின் மன்னனாக நான் ஆகவேண்டும். நீங்கள் தான் அதற்கு அருள் புரியவேண்டும் ஸ்வாமி!''

''அதற்கு நீ மட்டுமல்ல, உன் தந்தையும் சேர்ந்து சில வேள்விகளை செய்யவேண்டும். உன் தந்தையை அழைத்து வா. விவரமாக கூறுகிறேன்.''

''உத்தரவு ஸ்வாமி. இப்பொழுதே கூட்டிக் கொண்டு வருகிறேன்'' என்றவாறு மறுபடியும் ஸ்வாமிகள் கால்களில் விழுந்து கும்பிட்டுவிட்டு எழுந்து நடந்தான்.

உடனே வெங்கடகிருஷ்ணன் அவனருகே நெருங்கி வந்து ''மகனே, எங்கள் குருவின் முழு அனுக்கிரகமும் உனக்குக் கிடைக்க வேண்டும் என்றால் நீ இப்படி வணங்கக் கூடாது'' என்றான்.

''பிறகு எப்படி வணங்க வேண்டும்?'' புரியாமல் கேட்டான் அச்சுதப்பன்.

''நீ தரையில் நெடுஞ்சாண் கிடையாகப் படுத்துக் கொள்ள வேண்டும். குரு உனது தலையில் தனது கால்களை வைப்பார். அவர் 'போதும்' என்று திருவாய் மலரும் வரை நீ அப்படியே கிடக்க வேண்டும்.''

இதைக் கேட்ட அச்சுதப்பன் மறுபடியும் ஸ்வாமிகள் அருகே வந்து பணிந்து ''ஸ்வாமிகள் இந்த அறியாச் சிறுவனை மன்னித்து அருள வேண்டும். தங்களது பாதாரவிந்தங்களை அடியவன் தலைமீது வைத்து ஆசி கூற வேண்டுகிறேன்'' என்று காலடியில் விழுந்தான்.

சொக்கநாதன் தனது இரண்டு கால்களையும் அச்சுதப்பனின் தலைமீது வைத்தவாறு வெங்கடகிருஷ்ணனைப் பார்த்து ''என்னடா இது விளையாட்டு'' என்று கண்களால் சைகை செய்தான்.

'நீ சும்மா இரு. இந்த முட்டாளுக்கு இதுதான் நல்லது' என்று கண்களால் வெங்கடகிருஷ்ணன் பதில் சைகை காட்டினான்.

அச்சுதப்பனுக்கு மூக்கும் வாயும் தரையோடு தரையாகப் பதிந்து அவஸ்தையாக இருந்தது. ஸ்வாமிகள் எப்போதடா தனது தலையில் இருந்து காலை எடுப்பார் என்றிருந்தது. சொக்கநாதன் சற்று நேரம் கழித்து தனது கால்களை அவன் தலையில் இருந்து விலக்கி ''உன் ஆசை சீக்கிரம் நிறைவேறட்டும்'' என்று ஆசீர்வாதம் நல்கினான்.

அன்று மாலையே தளவாய் ரங்கப்ப நாயக்கன் ஏகப்பட்ட காணிக்கைப் பொருட்களுடன் அருளானந்த ஸ்வாமிகளின் குடிலைத் தேடி ஓடி வந்தான்.

வெங்கடகிருஷ்ணன் தளவாயை மட்டும் குடிலுக்குள் அனுமதித்தான். தளவாயுடன் வந்த அச்சுதப்பனையும், மற்றைய வேலையாட்களையும் வெளியே நிற்கும்படி கூறினான்.

தளவாய் மிகுந்த பயபக்தியுடன் சொக்கநாதனின் கால்களில் விழுந்து பணிவாக வணங்கினான்.

''என் மைந்தன் தங்களைப் பற்றிச் சகல விஷயங்களையும் கூறினான். தங்கள் பெருமையும் அருமையும் இதுவரை எனக்குத் தெரியாமல் போனதற்கு மன்னிக்க வேண்டும்.''

''ஏதுவுமே உனக்குத் தாமதமாகத்தான் வந்து சேருகிறது மகனே! உனது மைந்தனின் நிலையற்ற புத்தியால் தரணி ஆளும் வாய்ப்பைக்கூடத் தவற விட்டு விடுவாயோ என்று தோன்றுகிறது.''

இதைக்கேட்ட தளவாய் பயந்து பதறி, ''ஸ்வாமிகள் இந்த அடியவனுக்குப் புரியம்படியாகச் சொல்ல வேண்டும்'' என்றான்.

சொக்கநாதன் கங்கைகொண்ட சோழபுரத்தில் இளவரசிக்கு மதயானையால் ஏற்பட்ட ஆபத்தில் இருந்து, அந்தப்புரத்தில் நடைபெற்ற அசிங்கமான சம்பவம் வரை அச்சுதப்பன் செய்த முட்டாள்தனமான செய்கைகளை விவரித்தான். கேட்கக் கேட்கத் தளவாய்க்குப் பிரமிப்பாக இருந்தது. இத்தனை நுணுக்கமான செய்திகள் அவர்களைத் தவிர யாருக்கும் தெரியாது. இவர் உண்மையிலேயே பெரிய ஞானிதான்!

''ஸ்வாமிகள்தான் என் மைந்தனுக்கு அறிவாற்றலை நல்கி, இளவரசியை மணந்து, இந்நாட்டின் மன்னனாக மகுடம் சூட அருள் புரியவேண்டும்'' என்றான் கும்பிட்டவாறு.

''நீங்கள் இருவரும் சேர்ந்து சில வேள்விகள் புரிய வேண்டும். அதற்கு முன் தஞ்சை மன்னனும், அவனது மகள் சந்திரவதனாவும் என் குடிலுக்கு வந்தால் எமது அருட்பார்வை அவர்கள் மீது விழுந்தால், அவர்கள் மனதில் மாற்றங்கள் உருவாகும். உன் மனோரதம் நிறைவேறும்.''

''கண்டிப்பாக, அழைத்து வருகிறேன் ஸ்வாமி'' என்றவாறு வணங்கி விடை பெற்றபொழுது, வெங்கடகிருஷ்ணன் ஸ்வாமியிடம் காதோடு காதாக, ''அச்சுதப்பன் மாதிரி இவனையும் உன் காலைத் தலையில் தாங்கச் சொல்லட்டுமா'' என்றான்.

''வேண்டாமடா! என்ன இருந்தாலும் இவன் வயதில் மூத்தவன். இவனை அசிங்கப்படுத்துவது நமக்கு அழகல்ல'' என்று கிசுகிசுத்தான்.

தளவாய் இதைப் பார்த்து ஒன்றும் புரியாமல், ''தங் கள் சிஷ்யர் ஏதேனும் சொல்ல விரும்புகிறாரா?'' என்றான்.

''ஒன்றுமில்லை! யாம் கன்னியாகுமரியை நோக்கி பயணப்படும் நாட்கள் நெருங்கிவிட்டன. அதற்குள் மன் னர் வரவேண்டும் என்றான்.''

''கவலைப்படாதீர்கள். நாளையே இருவரையும் இங்கு அழைத்து வருகிறேன்'' என்று சொல்லியவாறு மீண்டும் வணங்கி விடை பெற்றான் தளவாய் ரங்கப்ப நாயக்கன்.



# 68

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனும், அவனது மகள் இளவரசி சந்திரவதனா தேவியும் அமர்ந்திருந்த நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட ரதம், காவிரியாற்றங்கரையில் அமைந்திருந்த அருளானந்த ஸ்வாமிகளின் குடிலின் அருகே வந்து நிற்கும்பொழுது காலைப் பொழுது புலர்ந்து முதல் ஜாம வேளை கடந்து இருந்தது.

மன்னனையும் அவர்தம் மகளையும் பார்த்தவுடன் அங்கு கூடியிருந்த ஏராளமான மக்கள் அவசரமாக விலகி நின்றனர். ரதத்தினை தொடர்ந்து குதிரையில் வந்த தளவாயும், மற்றைய காவலர்களும் கூட்டத்தினை ஒழுங்குபடுத்தினர். மன்னனைக் கண்ட மக்கள் கூட்டம் மகிழ்ச்சி ஆரவாரமிட்டது.

இதனைக்கண்ட வெங்கடகிருஷ்ணன் அவசரமாகக் குடிலுக்குள் சென்று சொக்கநாதனோடு ரகசியமாகப் பேசினான். பிறகு மறுபடியும் அவன் வாசலுக்கு வரவும், மன்னனனும் இளவரசியும் மற்றவர்கள் புடைசூழ வருவதற்கும் சரியாக இருந்தது.

'''இமயமலையின் அடிவாரத்தில் இருந்து இங்கு எழுந்தருளி இருக்கும் அருளானந்த ஸ்வாமிகளைத் தரிசிக்கும் 'பாக்கியத்தை இந்த அடியவனுக்கு நல்கும்படி அருள் புரிய வேண்டும்'' என்று மன்னன் மிகவும் பணிவுடன் வெங்கடகிருஷ்ணனைப் பார்த்துக் கையெடுத்துக் கும் பிட்டவாறு கேட்டான்.

''உன் வரவைத்தான் ஸ்வாமிகள் காலையில் இருந்தே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். நீயும் உனது மகளும் மட்டும் உள்ளே செல்லலாம்'' என்று வெங்கடகிருஷ்ணன் கூறினான்.

மறுவிநாடி காணிக்கைப் பொருட்கள் அடங்கிய தட்டை மன்னன் தனது கைகளில் வாங்கிக் கொண்டு இளவரசி பின் தொடர்ந்து வரக் குடிலுக்குள் நுழைந்தான்.

குடிலின் உள்ளே அருளானந்த ஸ்வாமிகள் அமர்ந்திருந்த திருக்கோலம் கண்டு அவர்கள் இருவரும் மெய் சிலிர்த்தனர்.

குடில் முழுக்கச் சாம்பிராணி புகை மண்டி மேக மண்டலத்திற்குள் இருப்பது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. இதன் நடுவே வெறுந்தரையில் விரிக்கப்பட்டிருந்த புலித்தோலின் மீது வெளுத்த தாடியும் ஜடா முடியும் மிளிர, முகத்தில் தேஜஸ் ஒளிர, கால்களை மடித்து அமர்ந்து, ஒரு கையில் ருத்ராட்ச மாலையை வருடியபடி, கண்களை மூடி யோகாசனத்தில் வீற்றிருந்த அருளானந்த சுவாமிகளைப் பார்த்ததும் இளவரசிக்குப் பக்திப் பிரவாகத்தில் கண்களில் நீர் துளிர்த்தது. கையெடுத்துக் கும்பிட்டாள்.

அதேசமயம் இவர்கள் உள்ளே நுழைந்ததை ஓரக்கண்ணால் பார்த்த சொக்கநாதனுக்குச் சாம்பிராணிப் புகை

மூட்டத்தின் மத்தியில் நின்ற சந்திரவதனாவைப் பார்த்ததும்; மேக மூட்டத்திற்குள் மிதந்துவரும் மேனகையோ என்று பிரமித்தான். சகலத்தையும் உதறி எறிந்துவிட்டு அவளை இழுத்து அணைத்துக் கொள்ளலாம் போல் ஆசையாக இருந்தது.

மன்னன் தனது கரங்களில் இருந்த காணிக்கைப் பொருட்கள் அடங்கிய தட்டை அருளானந்த ஸ்வாமிகளின் காலடியில் வைத்து ''ஸ்வாமிகளுக்கு இந்த அடியவன் அடிமை! ஏற்றுக் கொள்ள வேண்டும் எனது காணிக்கையினை'' என்றவாறு சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான்.

''மங்களம் உண்டாகட்டும். எழுந்திரு மகனே! உன் மனதில் உள்ள காரியங்கள் நிறைவேறும் வேளை வந்துவிட்டது.''

''தன்யனானேன் ஸ்வாமி! இவள் என் மகள்...''

''சந்திரவதனா. அறிவேன்.''

''முற்றும் உணர்ந்த தங்களுக்கு நான் என் மகள் என்று அறிமுகப்படுத்த நினைத்தது முட்டாள்தனம்தான் ஸ்வாமி! மன்னிக்க வேண்டும். சந்திரவதனா, இந்த மாமுனிவரின் கால்களில் விழுந்து வணங்கு.''

இளவரசி உடனே ஸ்வாமிகளின் எதிரே வந்து அவர் காலருகே மண்டியிட்டுப் பணிந்து வணங்கி தரை தொட்டாள்.

''சகல நலன்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வாயாக! சந்திரவதனா, உனக்கு ஏற்ற சிறந்த கணவன் சீக்கிரம் கிடைக்கப் போகிறான்'' என்றவாறு சொக்கநாதன் அவள் தலையைத் தொட்டு ஆசீர்வதிப்பதுபோல் வருடி, முதுகு வரை கையைக் கொண்டுவந்து தடவி எடுத்துத் தட்டினான்.

இளவரசிக்கு என்னவோ போல் இருந்தாலும், வயது முதிர்ந்த மகான், மாமுனிவர் என்ற எண்ணத்தில் பொறுத்துக் கொண்டாள்.

''இருவரும், என் எதிரில் அமருங்கள். மகனே, உன் புதல்வனின் மனநிலை குறித்த கவலை உன் முகத்தில் தோற்றுவிக்கிறதே!''

மன்னனின் முகம் உடனே வியப்புற்று, ''ஆம் ஸ்வாமி! தங்களைத் தரிசிக்க வேண்டும் என்று அவனைப் பலமுறை கட்டாயப்படுத்தி அழைத்தும் மறுத்துவிட்டான். கடவுள் நம்பிக்கை அற்றவனாக மாறி விடுவானோ என்று பயமாக இருக்கிறது. எனக்குப் பிறகு இந்த நாட்டை ஆள வேண்டியவனின் போக்கு எனக்கு மனக்கலக்கத்தினை அளிக்கிறது ஸ்வாமி'' என்றான்.

''வருந்தாதே மகனே! விடிவதற்குமுன் இருக்கும் இருளை எண்ணிக் கலங்குகிறாய்! இருள் விலகும் வேளை வந்துவிட்டது. அவன் போக்கும் நாளாவட்டத்தில் மாற்றம் காணும்.''

''அதுபோதும் ஸ்வாமி எனக்கு. தங்களைப் பற்றி எனக்கு முன்கூட்டியே தெரியாமல் போனதற்கு மன்னிக்க வேண்டும்.''

''இமயமலையில் இதுவரை தவம் பண்ணி வந்த யாம், குமரி முனையிலும் சிலகாலம் தவம் இயற்ற எண்ணி இந்தப் புண்ணிய யாத்திரை மேற்கொண்டோம். வரும் வழியில் தீவிர வைணவ பக்தனான உன்னைச் சந்தித்து, ஆசீர்வதித்து வருமாறு ஆண்டவனே எனக்குக் கட்டளையிட்டார். அதனால் சிறிது காலம் யாம் இங்கு தங்க எண்ணி வந்துள்ளோம்.''

''தங்கள் சித்தம் என் பாக்கியம்! எனக்கு நீண்ட நாட்களாக ஒரு குறை ஒன்று மனதில் இருந்து வருகிறது...''

''தெரியும் மகனே! திருவரங்கத்திற்குத் தினமும் சென்று பூஜித்து வந்த நீ, இப்பொழுது அங்கு போவதை அடியோடு நிறுத்தும்படியாக ஆயிற்று என்றுதானே?''

இதைக் கேட்டதும் மன்னன் வியப்புற்று, ''அதுவே தான் ஸ்வாமி! மதுரையின் மன்னனாகச் சொக்கநாதன் என்று ஒரு சிறுவன் முடியேற்று இருக்கிறான். அவனால் எனக்கு ஏதேனும் இடையூறு ஏற்படுமோ என்று அஞ்சித் தான் திருவரங்கம் செல்வதை நிறுத்திவிட்டேன். அது என் மனதைத் தினமும் உறுத்துகிறது'' என்றான் வருத்தத் துடன்.

''உன் கவலை தீரும் நாள் அதிகமில்லை மகனே! உன் மனதில் இதற்கு ஒரு வழிகூடப் பிறந்திருக்குமே! திரு மலை மன்னன் காலத்தில் ஒரு பெண்ணை கொடுக்கும் பொழுது திருச்சிராப்பள்ளியைக் கொடுத்துவிட்டு, வல் லம் கோட்டையை ரகுநாத நாயக்கன் பெற்றதுபோல, திருவரங்கத்திற்காக வேறு ஏதாவது ஒரு நகரை மதுரை மன்னனுக்கு அளிக்கலாமா, அவன் ஒத்துக் கொள்வானா என்ற எண்ணம் உனக்கு உண்டல்லவா?''

இதைக் கேட்டதும் மன்னன் அளவில்லா வியப்புக்கு ஆளானான். அவன் மனதில் இப்படி ஓர் எண்ணம் இருந் தது அரச குடும்பத்தைத் தவிர வேறு யாருமே அறிய மாட்டார்கள். ஞானிகள் திரிகாலமும் உணர்ந்தவர் என்று நிரூபித்துவிட்டாரே!

''உண்மைதான். உண்மைதான் ஸ்வாமி'' கால்களில் விழுந்து கும்பிட்டு, ''ஆனால் சொக்கநாதனுக்குப் பெண்

கொடுக்கும் தவறை என் உயிர்போனாலும் செய்யமாட்டேன். திருமலையிடம் பட்ட அவமானம் போதும்'' என்றான்.

''எல்லாக் கவலைகளும் தீரத்தான் போகிறது. உனது மகள் திருமணத்தின் மூலம் எல்லாமே சுபிட்சமாகப் போகிறது. எதையுமே மாற்றிக் கொள்ளாமல் திருவரங்கம் உனக்குக் கிடைக்கும். அதுமட்டுமல்ல மதுரை நாடே உனது நாட்டுடன் இணையும் காலமும் வரப்போகிறது.''

''என் மகன் மன்னார்தாசன், மதுரை மன்னனை ஜெயித்து அதனை எங்கள் நாட்டுடன் இணைத்து விடுவான் என்கிறீர்களா ஸ்வாமி?''

''இரண்டு நாடுகளும் எப்படி இணையும் என்று இப்பொழுது நான் சொல்ல மாட்டேன். ஆனால், ஒன்று மட்டும் சூசகமாகச் சொல்கிறேன் கேள். உனது பூர்வஜென்மத்தில் நீ செய்த புண்ணியத்தின் பலனாக இப்படி ஓர் அருமையான பெண் மகளாக அவதரித்திருக்கிறாள். இவளது திருமணத்திற்குப் பிறகுதான் எல்லாமே நல்லபடியாக நடக்கும்.''

''அது போதும் ஸ்வாமி எனக்கு! இவளுக்குரிய மணாளனைத் தேர்ந்தெடுப்பது இன்னமும் எனக்குப் பிரச்சினையாகவே உள்ளது.''

''கவலையுறாதே! நீ முற்றிலும் எதிர்பாராத மிகச் சிறந்த வீரன் ஒருவனே இவளுக்கு மணாளனாக அமையப் போகிறான்.''

இதைக் கேட்டதும் இளவரசியின் முகம் சிவந்தது.

''தங்களது திருவாக்கு என் கவலையை நீக்கிவிட்டது ஸ்வாமி! கடந்த சில நாட்களாக இவளுக்கு ஏற்பட்ட

நிகழ்ச்சிகளின் காரணமாக மனங்கலங்கி இருந்தேன். இப்பொழுதுதான் தெளிவு ஏற்பட்டிருக்கிறது'' என்று கையெடுத்துக் கும்பிட்டான் மன்னன்.

''உனது மகள் கங்கைகொண்ட சோழபுரம் சென்றது முதல் அடுக்கடுக்காக அவளுக்கு ஏற்பட்ட சம்பவங்கள் உன் மனதைப் பெரிதும் பாதித்திருக்கிறது என்று எமக்கும் தெரியும். உன் இதயத்தையும் அது கலக்கி இருக்கிறது இல்லையா மகளே?''

மன்னனும் இளவரசியும் தலையசைத்து ஆமோதித்தனர்.

''கங்கைகொண்ட சோழபுரத்தில் நள்ளிரவில் நீ தங்கி இருந்த கூடாரத்தைக் கிழித்துக் கொண்டு ஒரு திருடன் நுழைந்தான். மறுநாள் மதயானையின் பிடியில் சிக்கி மரண அவஸ்தைப்படும்பொழுது எங்கிருந்தோ ஓடிவந்த ஒருவன் உன்னைக் காப்பாற்றி இருப்பான். பிறகு படைகள் திரண்டு வந்த சமயம் ஓடி மறைந்து இருப்பான். கடைசியாக உனது அந்தப்புரத்திற்குள் அர்த்தராத்திரியில் ஒரு திருடன் புகுந்து நீ அலறியதும் ஓடி இருப்பான். அதுமட்டுமல்ல சாமர்த்தியமாக அவன் உங்களது தளவாயையும் அவன் மைந்தனையும் அவமானமுறும்படியாகச் செய்திருப்பான். இந்த நிகழ்ச்சிகள்தானே அவை.''

இருவரும் வியப்புடன் தலையசைத்தனர். மன்னன் கையெடுத்துக் கும்பிட்டான்.

''மகனே விஜயராகவா, உன் மகளுடன் ஒரு சில வார்த்தை தனித்துப் பேச வேண்டும். நீ சற்று விலகி நில்.''

மன்னன் உடனே கட்டுப்பட்டு குடிலின் மறுகோடியில் வந்து அமர்ந்தான்.

''சந்திரவதனா என் அருகில் வா'' என்றான் சொக்க நாதன்.

இளவரசி பயந்து பயந்து அவனருகில் வந்து நின் றாள். சொக்கநாதன் மிகவும் ரகசியமான குரலில் மன்னன் காதுகளில் விழாதவாறு அவளைப் பார்த்துப் பேசத் தொடங்கினான்.

''சந்திரவதனா, கங்கைகொண்ட சோழபுரத்தல் உன் கூடாரத்தைக் கிழித்துக் கொண்டு இறங்கியவனும், மத யானையிடமிருந்து உன்னைக் காப்பாற்றியவனும், அந்தப் புரத்தில் அர்த்தராத்திரியில் திருடனைப் போல நுழைந்தவ னும் ஒருவன்தான் என்பது உனக்கு மட்டும்தான் தெரியும் இல்லையா?''

இதைக் கேட்டவுடன் இளவரசி வியப்பின் எல் லைக்கே சென்றாள். அதே நேரம் பயமும் அவளுக்குள் எழ, ஸ்வாமிகளின் கால்களில் விழுந்து வணங்கினாள். அவள் நெஞ்சு படபடத்தது.

''எழுந்திரு மகளே! அவனை உன் மனம் விரும்பு கிறதா?''

இளவரசி மிகவும் மெதுவான குரலில் ''இல்லை ஸ்வாமிகளே! அவன் யார், எந்த நாட்டைச் சேர்ந்தவன் என்றே தெரியாது. ஊர் பேர் தெரியாத ஒருவன் மீது என் மனம் எப்படி நாட்டங் கொள்ளும். தயவு செய்து என் தந்தையிடம் கூறி விடாதீர்கள்'' என்று மன்றாடினாள்.

''கவலைப்படாதே! நீ பிரமிக்கும்படியாக உனக்கு ஒரு கணவன் அமைவான்'' என்று அவள் தலையை வருடி ஆசீர்வதித்தான்.

''விஜயராகவா, உன் மகளுக்கு நான் ஆசி வழங்கிவிட்டேன். இனி நீ அருகில் வரலாம். உனது மனக்கவலைகள் தீர்ந்துவிடும்.''

மன்னன் அருகில் வந்து வணங்கி உட்கார்ந்தான். அப்பொழுது வெங்கடகிருஷ்ணன் ஸ்வாமியிடம் வந்தான்.

''ஸ்வாமிகளே, தஞ்சை வந்து மூன்று நாட்களாகிவிட்டன. இதுவரை தாங்கள் தண்ணீர்கூட அருந்தவில்லை. தங்களது உண்ணாநோன்பு எங்களை நோகடிக்கிறது'' என்றான் வருத்தத்துடன்.

''என்னது ஸ்வாமிகள் இந்நாள்வரை உணவருந்தவில்லையா? இது எனக்குப் பெரிய இழுக்கு! ஸ்வாமிகள் இன்று எனது அரண்மனைக்கு எழுந்தருளி, எனது விருந்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்றான் மன்னன்.

''மகான்கள் மன்னரின் மாளிகைக்கு வரமாட்டார்கள்'' என்றான் வெங்கடகிருஷ்ணன்.

''அப்படியானால் எனது அரண்மனையில் இருந்து அமுது படைத்து இங்கு கொண்டுவரச் சொல்கிறேன்.''

''அதுவும் சரிப்படாது. அரண்மனையில் பல்வேறு விதமான பரிசாரகர்கள் சமைப்பது ஞானிகளுக்கு ஒவ்வாது.''

''அப்படியானால் என் தேவியரை ஸ்வாமிகளுக்காகப் புனிதமான முறையில் சமையல் செய்து எடுத்துவரச் சொல்கிறேன்.''

''அதுகூட ஒருவகையில் ஏற்றதல்ல மகனே! உனது தேவியர் திருமண பந்தத்தில் உழன்று கொண்டு இருப்பவர்கள். அவர்கள் சமைத்த உணவு துறவிக்கு ஏற்றதல்ல.''

''பிறகு என்ன செய்வது என்று எனக்குப் புரியவில் லையே! எனது நாட்டிற்கு வந்த இத்தகைய மகான் இது வரை உணவருந்தாமல் இருப்பது என் நெஞ்சைப் பிளந் தார் போலிருக்கிறதே!''

''வேறு ஒரு வழி உள்ளது மகனே! அந்த முறையில் செய்தால் எமது குரு ஒருவேளை உனது விருந்தை ஏற்றுக் கொள்வார்.''

''சொல்லுங்கள், என்ன வழியாக இருந்தாலும் அத னைத் தலைமீது ஏற்றுச் செய்கிறேன்!''

''உனது நேரடி வாரிசாக இருக்கும் கன்னி கழியாத பெண் தெய்வத்திற்குச் சமமானவள். அவள் பரிசுத்தமான முறையில் அவள் கையாலேயே உணவு சமைத்து, அவள் கையாலேயே இங்கு வந்து பரிமாறினால் எங்கள் குரு ஒருவேளை ஏற்றுக் கொள்ளலாம்.''

''இவ்வளவுதானே! சந்திரவதனா சீக்கிரம் வா, முனி வரின் பசி போக்கும் பாக்கியம் உனக்குத்தான் கிடைத்தி ருக்கிறது.''

இருவரும் அரண்மனைக்கு விரைந்தனர். சந்திர வதனா மீண்டும் ஒருமுறை குளித்துவிட்டுக் கவனமாகச் சமையல் செய்யத் தொடங்கினாள். உள்ளுக்குள் பயமும் வியப்பும் மாறி மாறி வந்தது. பக்கத்தில் இருந்து பார்த்தது போல் அத்தனையையும் புட்டுபுட்டு வைத்துவிட்டாரே! மெய்யான ஞானி இவர்தான்!

சமைத்த உணவு வகைகளுடன் மன்னனும், இளவரசி யும் ரதத்தில் ஏறி மறுபடியும் குடிலுக்கு வந்தனர். வெங் கட கிருஷ்ணன் அவர்களை உள்ளே அழைத்துச் சென்றான். ஸ்வாமிகள் கண்களை மூடி நிஷ்டையில் இருந்தார்.

அவர் முன் இலை விரித்து உணவு வகைகளைப் பரிமாறினாள் இளவரசி. பின்னர் ஸ்வாமிகளைப் பார்த்து, ''ஸ்வாமிகள் தயவு செய்து உணவு அருந்தவேண்டும். தங்கள் எண்ணப்படி எனது கையாலேயே சமைத்த உணவு! எங்களை ரட்சியுங்கள்'' என்றாள்.

சொக்கநாதன் விழித்துப் பார்த்து மறுபடியும் கண் களை மூடினான்.

''எங்களைச் சோதிக்க வேண்டாம் ஸ்வாமி! தயவு செய்யுங்கள். தங்கள் பசி போக்கிய பாக்கியத்தை எனக்கரு ளுங்கள்'' மன்றாடினாள்.

சொக்கநாதன் தனது வலக்கையை நீட்டினான். மன் னன் உடனே மகிழ்ச்சி பொங்க மகளிடம் சைகை செய் தான்.

சந்திரவதனா உணவை எடுத்துச் சொக்கநாதன் கையில் வைக்க சொக்கநாதன் மகிழ்ச்சிப் பெருக்குடன் உண்ண ஆரம்பித்தான். சில நிமிடங்களில் அவன் 'போதும்' என்று சொன்ன பிறகும் திரும்பத் திரும்ப மன்றாடி அவனைச் சாப்பிடச் சொல்லிக் கட்டாயப்படுத்தி உணவை கைகளில் திணித்தாள் இளவரசி.

ஒருவழியாகச் சாப்பிட்டு முடித்தவுடன் சொக்கநாதன் இளவரசியை மட்டும் தன்னருகில் அழைத்து, ''சந்திர வதனா, அன்று நான் சொன்ன மாதிரியே உன் கையா லேயே எனக்கு உணவு அளிக்கச் செய்துவிட்டேன் பார்த் தாயா!'' என்றான் ரகசியமான குரலில்!

இதைக் கேட்டதும் தன்னை மறந்து அலறினாள் இளவரசி!



# 69

தஞ்சை இளவரசி சந்திரவதனா தன் கையாலே பார்த்து பார்த்து பக்குவமாக சமைக்கப்பட்ட உணவு வகைகளை அருளானந்த ஸ்வாமிகளாக வேடம் புனைந்திருக்கும் சொக்கநாதனுடைய கரத்தில் பரிவுடன் எடுத்து எடுத்து கொடுக்க அவன் அவளது அழகை ரசித்தவாறு வாங்கி வாங்கிச் சாப்பிட்டான்.

'போதும்' என்று கையசைத்த பிறகும் இளவரசி விடாமல் 'இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்கள்' என்று கனிவுடன் வற்புறுத்த, அருகில் இருந்த மன்னனும் கையெடுத்துக் கும்பிட்டு, 'தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள் ஸ்வாமி' என்று இறைஞ்ச, குடிலின் ஓர் ஓரத்தில் நின்றவாறு வெங்கடகிருஷ்ணன் உள்ளுக்குள் எழுந்த சிரிப்பை அடக்கியவாறு ரசிக்க, சொக்கநாதன் உவகைப் பெருக்குடன் உண்டு முடித்தான்.

சந்திரவதனா அதன் பின்னர் உணவருந்தி முடித்த ஸ்வாமிகளின் கைகளைக் கழுவுவதற்காகப் பெரிய பாத்திரம் ஒன்றை தரையில் வைத்து ''கையைக் கழுவிக் கொள்ளுங்கள் ஸ்வாமி'' என்றவாறு தண்ணீர் நிறைந்த பாத்திரம் ஒன்றை நீட்டினாள்.

உடனே சொக்கநாதன் அருகில் நின்ற வெங்கடகிருஷ்ணனை சூசகமாகப் பார்க்க, அதனை புரிந்துகொண்ட வெங்கடகிருஷ்ணன் மன்னனின் அருகில் வந்து ''உணவு பரிமாறியவரே எமது குருவின் கரங்களை கழுவித் துடைத்து விட்டால்தான் பரிபூரண பாக்கியம் கிட்டும்'' என்று கிசுகிசுத்தான்.

இதைக் கேட்டவுடன் மன்னன் தன் மகளை பார்த்து ''சந்திரா மாமுனிவரின் கரத்தை கழுவித் துடைத்து விடுவதுதான் நம் போன்ற அடியவர்களின் கடமை'' என்றான்.

இளவரசியும் இதற்கு உடனே கட்டுப்பட்டு ஸ்வாமிகளின் கரத்தில் நீர் ஊற்றிக் கழுவி, பட்டுத் துணியால் துடைத்துவிடப் பரவசத்திற்குள்ளானான் சொக்கநாதன்.

பின்னர் இளவரசியைப் பார்த்து, ''குழந்தாய், யாம் தாகசாந்தி செய்ய வேண்டும்'' என்றான்.

அருகில் இருந்த மன்னன் ''பழச்சாற்றினைக் குவளையில் எடுத்துக் கொடு சந்திரா'' என்றான்.

அதைக் கேட்ட வெங்கடகிருஷ்ணன், ''எமது குரு ஆடம்பர வாழ்வை வெறுப்பவர். பழச்சாறு அவருக்கு பச்சை நாவி! தண்ணீர் மட்டும் தந்தால் போதும்'' என்றான்.

இளவரசி தண்ணீர் நிறைந்த குவளையைத் தன் கையால் எடுத்து ஸ்வாமிகளிடம் நீட்டினாள். சொக்கநாதன் வேண்டும் என்றே அவள் கரத்தைப் பற்றி வாங்கினான்.

இதனால் பதற்றமடைந்த இளவரசி தன் கையை விலக்க முயல, குவளை தரையில் விழுந்து தண்ணீர் சிந்தியது.

இதைப் பார்த்து திடுக்கிட்ட மன்னன் ''கவனமாகப் பார்த்துக் கொடும்மா! ஸ்வாமிகளுக்குத் 'தள்ளாத வயது' பார்! அதனால்தான் தடுமாறுகிறது'' என்றான்.

இளவரசி மறுபடியும் ஒரு குவளை நீர் எடுத்துத் தனது கரம் தீண்டாமல் சுவாமிகளுக்கு தர சொக்கநாதன் அதை வாங்கியவாறு அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் கிசுகிசுத்தான்.

''தள்ளாத வயது! 'அழகானவற்றைத் தள்ளாத வயது!''

இதைக் கேட்டதும் இளவரசி திடுக்கிட்டு ஸ்வாமிகளைக் கூர்ந்து பார்த்தாள். அதனைச் சட்டையே செய்யாமல் சொக்கநாதன் நீர் அருந்தி முடித்து குவளையை நீட்டினான்.

''இந்த அடியவனுக்கு அற்புதமாக விருந்து படைத்து விட்டாய்! நீ வாழி! உன் மகளின் கைப்பக்குவம் திகட்டவே திகட்டவில்லை'' என்று சொல்ல இளவரசி குழம்பினாள்.

கைப்பக்குவம் என்று எதைச் சொல்கிறார்? என் சமையலையா? இல்லை சற்று முன் என் க்ரங்களைத் தீண்டியதையா?

''இவளைத் திருமணம் செய்யப் போகிறவன் மிகவும் புண்ணியம் செய்தவன். குழந்தாய்! என் அருகில் வா! உனக்கு ஆசி வழங்க இந்தக் கட்டை விரும்புகிறது'' என்றான் சொக்கநாதன்.

இளவரசி குழப்பத்தில் ஸ்வாமிகளின் அருகில் நின்று வாய் பொத்திக் குனிந்தாள். சொக்கநாதன் அவள் காதுகளில் மட்டும் கேட்கும்படியாகச் சன்னமான குரலில் சொன்னான்.

''சந்திரவதனா அன்று நான் சொன்ன மாதிரியே உன் கையாலேயே எனக்கு உணவு அளிக்கச் செய்துவிட்டேன் பார்த்தாயா''

இதைக் கேட்டவுடன் இளவரசி திடுக்கிட்டு நிமிர்ந்து ஸ்வாமிகளை கூர்ந்து பார்த்தாள். குழம்பினாள். சொக்க நாதன் தொடர்ந்து சொன்னான்.

''என்னைத் தெரியவில்லையா கண்ணே? நான்தான் முத்து, முத்து அத்தான்.''

இந்த வார்த்தைகள் அவள் காதில் விழுந்த மறுவிநாடியே இளவரசி தன்னை மறந்து 'ஆ' என்று அலறினாள்.

இதைப் பார்த்ததும் மன்னன் திடுக்கிட்டு, ''என்ன ஆயிற்று சந்திரா?'' என்றவாறு அவளருகில் ஓடோடி வந்தான்.

அதேநேரம் குடிலுக்கு வெளியே நின்று கொண்டிருந்த தளவாய் ரங்கப்ப நாயக்கன் இளவரசிக்கு ஏதோ ஆபத்து என்று நினைத்து உள்ளுக்குள் வேகமாக நுழைந்தான்.

இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்த வெங்கடகிருஷ்ணன் அடுத்த நிமிடமே சொக்கநாதனுக்கு ஆபத்து சூழ்ந்துவிடும் என்ற அச்ச உணர்வில் முன்னெச்சரிக்கையாக தனது காவி உடைக்குள் மறைத்து வைத்திருந்த கட்டாரியின் பிடியின் மேல் கை வைத்து தயாராக நின்றான்.

இளவரசியைப் பார்த்து கேலியாக சிரித்தபடி சொல்லி முடித்த சொக்கநாதன், இளவரசி அலறியதை கண்ணுற்றவுடன் அந்தப்புரத்தில் அன்று நடந்த மாதிரியே இன்றும் என்னைக் காட்டிக் கொடுத்துவிடுவாள் போலிருக்கிறதே என்ற எண்ணத்தில் இவர்கள் கையில் மாட்டாமல் தப்பிக்கும் வழிகளை அவன் மனம் மின்னலென சிந்திக்கத் தொடங்கியது.

அதேநேரம் இளவரசியின் மனதிலும் பலவிதமான சிந்தனைகள் ஓட ஆரம்பித்தன.

இந்த மனிதருக்குத்தான் எவ்வளவு தைரியம்! அதே நேரம் உடல் முழுவதும் கொழுப்பும் நிறைந்திருக்கிறது! இப்பொழுது இவர் யார் என்று நான் காட்டிக் கொடுத்து விட்டால் இவர் கதி என்னாகும்! தந்தையிடம் இவர் யார் என்று சொல்லிவிடுவோமா?

திக்பிரமை பிடித்தவள் போல் திகைத்து நின்ற தன் மகளை உலுப்பி ''சந்திரவதனா என்ன ஆயிற்று? எதற்காக இப்படி அலறினாய்?'' என்றான் மன்னன்.

அதேநேரம் உள்ளே நுழைந்த தளவாயும் ''இளவரசி யார் அலறும் குரல் கேட்டதே! அவளுக்கு என்ன ஆயிற்று மன்னா?'' என்று அவசரமாக கேட்டான்.

சொக்கநாதன் தயாராக இருக்க வெங்கடகிருஷ்ணன் குறுவாளின் கைப்பிடியை உறுதியாகப் பற்ற இளவரசி அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பாத்தாள்.

பிறகு தந்தையைப் பார்த்து ''இனிப்புப் பண்டங்களில் இருந்த எறும்பு என் இடுப்புப் பக்கம் கடித்து விட்டது. அதனால்தான் என்னை மறந்து அலறிவிட்டேன்'' என்றவாறு இல்லாத எறும்பை இடுப்பு பகுதியில் தட்டிவிட்டாள்.

இதைக் கேட்டவுடன் வெங்கடகிருஷ்ணன் நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி சகஜ நிலைக்கு வர, சொக்கநாதன் உள்ளம் உவகைக் கூத்தில் துள்ளத் தொடங்கியது.

''நல்ல பெண்ணம்மா நீ! இதற்கா இப்படி அலறுவது! நான் என்னவோ ஏதோ என்று எண்ணிப் பதறிவிட்டேன்'' என்றான் மன்னன்.

''ஆமாம் நான்கூடப் பயந்துவிட்டேன்'' என்றான் தளவாய்.

''ஸ்வாமிகள் என் மகள் அலறியதை மரியாதைக் குறைவாக நினைக்கக் கூடாது. அவள் இன்னும் குழந்தை யாகவே இருக்கிறாள். தயவு செய்து இதனை பொருட் படுத்தாதீர்கள்'' என்று இறைஞ்சி கும்பிட்டான் மன்னன்.

மன்னன் கையெடுத்து கும்பிடுவதைப் பார்க்க பார்க்க இளவரசிக்கு எரிச்சலாகவும் வந்தது. சொக்கநாதன் மீது ஆத்திரமாகவும் வந்தது.

''தாங்கள் வணங்கியது போதும் தந்தையே! ஸ்வாமி கள் இதை எல்லாம் பொருட்படுத்தவே மாட்டார்! ஸ்வாமி கள் யார்? முற்றும் துறந்த மகா முனிவர்! மகான்! இமயமலையின் அடிவாரத்தில் எத்தனையோ காலம் தவ மிருந்து தஞ்சை மண்ணில் முந்தாநாள் திடீரென்று தோன்றி சித்து விளையாட்டுகள் செய்து வருபவர். இந்த அடியவ ளின் சிறு குற்றத்தை நிச்சயம் பொருட்படுத்த மாட்டார். இல்லையா ஸ்வாமிகளே?'' என்றவாறு சொக்கநாதனைப் பார்த்து கேலியாகச் சிரித்துப் பற்களைக் கடித்தாள்.

''உண்மை, உண்மை'' என்று தர்மசங்கடமாக சொன் னான் சொக்கநாதன்.

''சந்திரவதனா என்ன இது அதிகப்பிரசங்கித்தனமான பேச்சு! ஸ்வாமிகள் மன்னிக்க வேண்டும்'' என்றான் மன் னன்.

''அவள் குழந்தை! குழந்தை பேசுவதை ரசிப்பவனே ஞானி! குழந்தாய் நீ பேசிக் கொண்டே இரு.''

''குழந்தை நிறைய பேசினால் ஸ்வாமிகள் தாங்க மாட்டீர்கள்.''

''இந்தக் கட்டை தாங்கும் குழந்தாய்! தாங்குவதற்கா கத்தானே யாம் தஞ்சை மண்ணைத் தேடி வந்திருக்கிறோம். தங்களது கர்ம வினைகளைத் தாங்குவதற்காகத்தானே! இல்லையா விஜயராகவா?''

''முற்றிலும் உண்மை ஸ்வாமி'' என்று கும்பிட்ட வாறு பதில் சொன்னான் மன்னன்.

''ஸ்வாமிகள் இன்னும் எத்தனை நாட்கள் இச்சிறுகுடி லில் தங்கி இருக்கப் போகிறீர்கள் என்று இந்த அடியாள் அறிந்து கொள்ளலாமா?''

இதற்கு சொக்கநாதன் சற்று யோசிப்பவன் போல் நடித்துவிட்டு, ''யாம் வந்த நோக்கம் நிறைவேறிவிட்டது! இனி இங்கிருந்து இந்தக் கட்டை கிளம்ப இறைவனது சித்தம் நாளையேகூட வரலாம்'' என்றான்.

''அவ்வளவு சீக்கிரம் தாங்கள் இவ்விடத்தைவிட்டு அகல நாங்கள் சம்மதிக்கமாட்டோம். உங்களை இன்னும் நல்ல முறையில் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று கருதுகிறோம்'' என்று அவன் மட்டும் அறியும் படியாகப் பல்லைக் கடித்தவாறு சொன்னாள்.

''என் மகள் சொல்வதுதான் என் மனதிலும் இருக்கி றது ஸ்வாமி! தாங்கள் சில காலம் இங்கு தங்கிவிட்டுத்தான் செல்லவேண்டும்'' என்றான் மன்னன்.

''குழந்தையும் தெய்வமும் ஒன்று என்று சொல்வார் கள். இந்தக் குழந்தை சொல்வதைத் தெய்வத்தின் கூற்றாக நாம் ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது சிஷ்யா?'' என்று வெங்கடகிருஷ்ணனைப் பார்த்துக் கேட்டான் சொக்க நாதன்.

வெங்கடகிருஷ்ணன் தர்மசங்கடமாகத் தலையாட்டி னான்.

''மகனே விஜயராகவா உன் குழந்தையின் விருப்பப் படி சில நாட்கள் இங்கு தங்கி இருக்க சம்மதிக்கிறோம்.''

''தங்கள் சித்தம் என் பாக்கியம்'' மன்னன் கும்பிட் டான்.

'இருங்கள், இருங்கள் இப்படி ஏமாற்றிய உங்களுக் குத் தகுந்த தண்டனை கிடைக்கச் செய்கிறேன்' என்று மனதிற்குள் கருவியவாறு நின்றாள் இளவரசி.

''உத்தரவு ஸ்வாமிகளே! நாங்கள் விடைபெற்றுக் கொள்கிறோம். எங்களை ஆசீர்வதியுங்கள்'' என்று மன் னன் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தான்.

''சகல நலன்களும் பெற்று வாழி!'' என்று அபயகரம் நீட்டி வாழ்த்திய சொக்கநாதனைப் பார்க்க பார்க்க சந்திர வதனாவிற்கு ஆத்திமாக வந்தது.

காலில் விழுந்து வணங்க வேண்டாம் என்று சொல்வ தற்கும் முடியாமல் தர்மசங்கடமாக கைகளைப் பிசைந்த வாறு நின்றாள். சொக்கநாதன் அவளை ஏறிட்டுப் பார்த் தான்.

''மகனே உன் மகளுக்கு என்னை வணங்கி ஆசி பெற விருப்பம் இல்லைபோல் தெரிகிறதே!''

''ஐயையோ! அப்படி எல்லாம் இல்லை ஸ்வாமி! சந்திரா, ஸ்வாமிகளை வணங்கி விடை பெற்றுக் கொள்.''

சந்திரவதனா வேண்டா வெறுப்பாக ஸ்வாமிகளைப் பார்த்து நின்றபடியே கையெடுத்துக் கும்பிட்டாள்.

''இப்படி இல்லை. காலருகே மண்டியிட்டு தரை தொட்டு வணங்கு'' என்று கிசுகிசுத்தான் மன்னன்.

''இடுப்பில் எறும்பு கடித்தது வலிக்கிறது தந்தையே! குனிய முடியவில்லை!'' என்று பதிலுக்கு கிசுகிசுத்தாள் இளவரசி.

''பரவாயில்லை மகனே! உன் மகள் எப்படி வணங்கி னாலும் என் பரிபூரண ஆசி அவளுக்கு எப்பொழுதும் உண்டு குழந்தாய்! கூடிய சீக்கிரமே முத்தான... முத் தான.... முத்துக்கு முத்தான கணவனைப் பெற்று நீடூழி வாழக் கடவது!'' கையை உயர்த்தி அவன் கூறியதைக் கேட்டு, பற்களைக் கடித்தாள் கோபமாக.

மன்னன் குடிலை விட்டு வேகமாக வெளியேற இளவ ரசி மட்டும் சொக்கநாதனைத் திரும்பிப் பார்த்து, இருங்கள் உங்களை கூடிய சீக்கிரமே வகையாகக் கவனிக்கிறேன் என்ற பாணியில் தலையசைத்தவாறு நகர்ந்தாள்.

சொக்கநாதன் அவளைப் பார்த்து தனது உதடுகளைக் குவித்து முத்தமிடுபவன் போல் சைகை செய்ய இளவரசி ஆத்திரத்தின் உச்சியில் குடிலின் கதவைத் திறந்து வெளி யேறினாள்.

வெளியே மன்னன் தனது தளவாயிடம் உத்தரவு பிறப்பித்துக் கொண்டு இருந்தான்.

''முற்றும் உணர்ந்த மகா ஞானி! பற்றற்றவர்! இவர் காலடி நமது நாட்டில் பட்டதே பெருமை! ரங்கப்பா இவர் இங்கு இருக்கும்வரை இவருக்கு வேண்டிய சகல வசதிக ளையும் செய்து கொடுக்க வேண்டியது உன்கடமை! வா சந்திரா கிளம்பலாம்'' என்றவாறு மன்னன் ரதத்தை நோக்கி நகர்ந்தான்.

இளவரசி சற்று நேரம் காத்திருந்து தனது வார்த்தைகள் தந்தையின் காதுகளில் விழாத தூரம் அவர் சென்றதும் தளவாயைப் பார்த்துப் புன்னகைத்தவாறு பேசத் தொடங்கினாள்.

''மாமா, தளவாய் மாமா, இந்த மகா முனிவரைப் பற்றி முதன் முதலில் தாங்கள்தானே அறிந்து சொன்னீர்கள்?''

''ஆம் மருமகளே! ஸ்வாமிகளின் பெருமையை அறிந்த மறுநிமிடம் இதை மன்னரிடம் ஓடி வந்து சொன்னேன்.''

''ஆஹா! மாமா! தங்களது புத்திசாலித்தனம் என்னை வியக்க வைக்கிறது. இப்படிப்பட்ட விஷயங்கள் எல்லாம் உங்களுக்குத்தான் முதலில் தெரிகிறது. தந்தை சொன்னது நினைவிருக்கிறதா? ஸ்வாமிகளின் பாதுகாப்பு உங்கள் கையில்தான் உள்ளது.''

''கண்ணை இமை காப்பதுபோல் காக்கிறேன். கவலைப்படாதே!''

''ஸ்வாமிகள் பெரிய ஞானி! திடீரென்று அந்தர்தியானம் ஆகிவிடுவார். அதனால் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அவர் இந்த இடத்தைவிட்டு நகர்வதானால் எனக்கு உடனே சொல்லி அனுப்புங்கள். நான் வரட்டுமா மாமா?''

''போய் வா மருமகளே!'' என்று பல் எல்லாம் தெரியும்படி சிரித்து வழியனுப்பி விட்டு வந்தான் தளவாய்!

அவன் மனம் ஆனந்தக் கூத்தாடியது. ஞானிகள் மெய்யாகவே அபார சக்தி நிறைந்தவர்தான். பேசிய சிறிது நேரத்திலேயே இளவரசி என்னைப் பார்த்து 'மாமா மாமா' என்று உருக வைத்துவிட்டாரே!

இனி நாங்கள் செய்ய வேண்டிய வேள்வி பற்றிக் கேட்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஸ்வாமிகளைத் தேடிச் சென்றான். அது சொக்கநாதனின் இன்னொரு திட்டத்தின் அடித்தளம் என்று அவனுக்கு எப்படித் தெரியும்?

அதேநேரம் அரண்மனைக்குள் சென்ற இளவரசி, தன்னையும் தந்தையையும் ஏமாற்றிய சொக்கநாதனைப் பிடித்துவர ரகசியமாகச் சில வீரர்களை அழைத்தாள்.



# 70

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனும், அவனது மகள் இளவரசி சந்திரவதனாவும் அருளானந்த ஸ்வாமிகளின் குடிலை விட்டு வெளியேறி ரதத்தில் ஏறும் வரை அருகில் இருந்தான் தளவாய் ரங்கப்ப நாயக்கன்.

ரதம் கிளம்பி கண்ணுக்கு மறையும் வரை அங்கே நின்று பார்த்துக் கொண்டிருந்த தளவாய் பிறகு அவசர அவசரமாகக் குடிலை நோக்கி விரைந்து வந்தான்.

தளவாய் வேகமாகக் குடிலுக்குள் நுழைவதைப் பார்த்த அருளானந்த ஸ்வாமிகள் நிஷ்டையில் இருப்பது போல் கணகளை மூடிக் கொண்டார். அவர் முன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான் ரங்கப்பன்.

''ஸ்வாமிகள் கண் திறந்து பார்த்து என்னை மன்னிக்க வேண்டும்'' என்று கலங்கிய குரலில் அவர் காலைத் தொட்டு வணங்கினான்.

சொக்கநாதன் கண்களை விழித்துப் பார்த்து ''என்ன மகனே? உனக்கு என்ன ஆயிற்று? ஏன் இப்படி என் கால்களில் விழுந்து கதறுகிறாய்? முதலில் எழுந்து உட்கார்'' என்றான்.

தளவாய் எழுந்து அவர் காலடியில் உட்கார்ந்து கைக ளைப் பணிவாகக் கட்டியவாறு ''ஸ்வாமிகள் என்னை மன்னிக்க வேண்டும். தங்களைப்பற்றி ஆரம்பத்தில் சிறிது ஐயம் என் மனதில் இருந்தது. இன்று தங்களது அபார சக்தியை நேரடியாகப் பார்த்தபிறகுதான் இந்த அடியவன் அபசாரம் செய்துவிட்டேன் என்று கலங்குகிறேன்'' என் றான்.

அருளானந்த ஸ்வாமிகள் புன்னகைத்தார். ஆனால், வெங்கடகிருஷ்ணனோ தளவாயை முறைத்துப் பார்த்தான்.

''எங்கள் மாமுனியின் மீது ஐயம் கொள்வது மகேஸ்வ ரன் மீது ஐயம் கொள்வதற்கு சமம்! இப்படி நீ தொடர்ந்து ஐயம் கொண்டால் ஸ்வாமிகளின் அருள் கிட்டாது என் பதை முதலில் புரிந்துகொள்.''

''புரிந்து கொண்டேன் ஸ்வாமி. புரிந்துகொண்டேன்'' என்றவாறு தன் கன்னத்தில் அடித்துக் கொண்டான். ''இனி ஸ்வாமிகள் மீது சத்தியமாக அணுவளவும் சந்தேகம் கொள்ள மாட்டேன்.''

''எனக்கு எல்லாம் ஒன்றுதான் மகனே! விருப்பு வெறுப்பற்ற பரம்பொருளோடு ஐக்கியமானவர்கள், விந்தை மனிதர்களின் சிந்தை தடுமாற்றத்தை நிந்திக்க மாட்டார்கள். வீண் கலக்கம் வேண்டாம் மகனே!''

''உண்மைதான் ஸ்வாமி! எத்தகைய பரந்த உள்ளம்! எப்பேர்ப்பட்ட அதிசய சக்தி'' என்று வியந்தான் தளவாய்.

''உனது வியப்பிற்கான காரணத்தை ஸ்வாமிகள் அறிய லாம். இருந்தாலும் இந்தச் சிறியவன் தெரிந்து கொள்ளும் படி சொல் மகனே'' என்றான் வெங்கடகிருஷ்ணன்.

''இளவரசி சந்திரவதனா என்னை எப்பொழுதும் எடுத்தெறிந்தே பேசுவாள். என்னை மாமா என்று கூப்பிடவே அவளுக்கு வெறுப்பாக இருக்கும். அப்படியே தப்பித் தவறி அவள் கூப்பிட்டால்கூட அதில் வெறுப்புத் தான் தொனித்திருக்கும்.''

''இப்பொழுது அதற்கு என்ன மகனே?''

''முழுவதும் கேளுங்கள் ஸ்வாமி! கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து திரும்பியது முதல் அவள் என்னை மாமா என்று விளிப்பதையே நிறுத்திவிட்டாள். ஏதாவது அவசியம் இருந்தால் தளவாய் அவர்களே என்றுதான் கூப்பிடுவாள். கடைசியாக அந்தப்புரத்தில் ஏற்பட்ட அசிங்கமான சம்பவத்திற்குப் பிறகு இளவரசி என் முகத்தைப் பார்த்தாலே வெறுப்பைக் காண்பிப்பாள். என்னைப் பார்த்தும் பார்க்காதது மாதிரி முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விடுவாள். ஏதாவது ஒரு பணி என்றால் கூட அவளது தோழிகள் மூலம்தான் உத்தரவிடுவாள்.''

''இன்று அதில் ஏதும் மாற்றம் தெரிந்ததா மகனே?''

''ஆம் ஸ்வாமிகளே! மாற்றம் என்றால் மகத்தானதொரு மாற்றம்! சந்திரவதனா வார்த்தைக்கு வார்த்தை மாமா மாமா என்று பாசம் கலந்து கூப்பிட்டாள். என்னை எப்படி எல்லாம் பாராட்டினாள் தெரியுமா? மன்னர்கூட என்னிடம் நீண்ட நாட்கள் கழித்து இன்றுதான் பரிவுடன் பேசினார். மகானின் அற்புதமான சக்தி!'' என்று கையெடுத்துக் கும்பிட்டான் தளவாய்.

அப்பொழுது அச்சுதப்பன் குடிலுக்குள் நுழைந்து அருளானந்த ஸ்வாமிகளின் கால்களில் தடார் என்று விழுந்து வணங்கினான்.

''ஸ்வாமி தங்கள் கருணையே கருணை! தங்கள் சக்தியே சக்தி!'' என்றவாறு பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டான்.

''உனக்கு என்ன நடந்தது மகனே?'' என்று அச்சுதப்ப னைப் பார்த்துக் கேட்டான் வெங்கடகிருஷ்ணன்.

''சந்திரவதனா ரதத்தில் ஏறுவதற்கு முன் என்னைப் பார்த்து அன்புடன் கூப்பிட்டு 'மாமா ஸ்வாமிகள் உங்க ளுக்கு மிகவும் வேண்டியவர் ஆகிவிட்டார். அவரைப் பத்திரமாக கவனித்துக் கொள்ளுங்கள்' என்று புன்சிரிப் போடு சொன்னாள். கங்கை கொண்ட சோழபுரத்தில் நடந்த சம்பவங்களுக்குப் பின்னர் அவள் இப்படிப் பேசி யது இதுவே முதல் முறை! எல்லாம் தங்களது கடாட்சத் தின் கருணையால் கிட்டியது.''

''ஆஹா! என்னே தங்களது சக்தி!'' என்று கையெடுத் துக் கும்பிட்டான் ரங்கப்ப நாயக்கன்.

''இதில் வியப்புக்கு இடமில்லை குழந்தைகளே! எங்களது குருவினது உன்னத சக்தியின் ஓர் அணுதான் இந்தச் சித்து விளையாட்டுக்களை நடத்திக் காட்டியது. முழுச் சக்தியினையும் பிரயோகித்தாரானால் அதனை இந்த நாடே தாங்காது'' என்றான் வெங்கடகிருஷ்ணன்.

''உண்மை. உண்மை. உண்மைதான் ஸ்வாமி! இதனை முற்றும் அறிந்து கொண்டதனால்தான் தங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் இங்கேயே சில காலம் தங்கி இருந்து இளவரசியை என் மைந்தனுக்கு மணம் செய்வித்து, அவனை இந்த நாட்டின் ஏகச் சக்ராதிபதியாக ஆக்கி அருள் புரிந்த பின்னரே தஞ்சாவூரை விட்டு அகல வேண்டும்!''

''அவ்வளவு காலம் எம்மால் இந்த இடத்தில் இருக்க முடியாது மகனே! கன்னியாகுமரியைத் தரிசிக்கும் தாகம் என் மனதில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. யாம் இங்கு வந்த வேலை இனிதே முடிந்து விட்டது. இனி இங்கு இருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்து கொண்டு இருக்கிறது.''

''அப்படிச் சொல்லக்கூடாது ஸ்வாமி! என் மகன் இந்நாட்டின் அரசனாவது தங்கள் கைகளில்தான் இருக்கிறது.''

''அதற்கான என் ஆசிகள் எப்பொழுதும் உங்களுக்கு உண்டு. ஆனால் அதனைச் செம்மையாகப் பயன்படுத்துவது உங்கள் இருவரின் நடத்தையில்தான் இருக்கிறது.''

''நாங்கள் என்ன செய்ய வேண்டும். எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தாங்கள் கட்டளை இடுங்கள். அதன்படியே நடந்து கொள்கிறோம்.''

''யாம் இந்த இடத்தைவிட்டு அகன்ற மறுநாளே நீங்கள் இருவரும் சேர்ந்து ஊர் எல்லையைவிட்டு ஒரு காத தூரம் இருக்கும் காளி கோயிலில் அர்த்த ஜாமப் பூஜை நடத்த வேண்டும். தொடர்ந்து வரும் அமாவாசை நாளன்று இரவில் காவிரியில் தலை முழுகிவிட்டுச் சகலவிதமான படையல்களைக் காளிக்குப் படைத்து, நள்ளிரவுக்கு மேல் கண்களை மூடித் தவம் புரியுங்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும் வழி தானாகவே உங்களைத் தேடி ஓடிவரும்.''

''தாங்கள் இன்னும் எத்தனை நாட்கள் இங்கு தங்கி இருப்பீர்கள் என்பதை இந்த அடியவன் தெரிந்து கொள்ளலாமா?''

''அது எமக்கே தெரியாது! ஒரு நாழிகையோ, ஒரு நாளோ, ஒரு மாதமோ யாமறியோம்! பராபரமே அறியும். ஆண்டவன் கட்டளை இட்டால் அடுத்த விநாடியே யாம் அந்தர் தியானம் ஆகிவிடுவோம். அதைப் பற்றி நீ கவலை யுறாதே! யாம் சொன்னபடி அணு அளவும் பிசகாமல் நீங்கள் நடந்து கொள்வீர்களானால் மன்னனின் மனமும் மாறும், இளவரசியின் எண்ணமும் மாறும். இந்நாட்டின் மணிமகுடம் இதோ இந்தக் குழந்தையின் மீது அணிவிக் கப்படும்.''

''ஸ்வாமிகளின் அளப்பரிய கருணையை இந்த அடிய வன் ஒருநாளும் மறக்கமாட்டேன்.''

தளவாய் ரங்கப்ப நாயக்கனும், அவன் மகன் அச்சுதப் பனும், சொக்கநாதனின் கால்களில் விழுந்து வணங்கி, ஆசி பெற்று அச்சிறுகுடிலை விட்டு வெளியே வந்தனர்.

தளபதி தன்னுடைய படை வீரர்களில் நான்கு பேரை அழைத்தான்.

''ஸ்வாமிகளின் பாதுகாப்பினை உங்களிடம் ஒப்ப டைக்கிறேன். அல்லும் பகலும் அனவரதமும் நீங்கள் இக்குடிலை விட்டு அகலக்கூடாது. ஸ்வாமிகளுக்கு ஒரு சிறு துரும்பு தேவைப்பட்டாலும் அதனை நிறைவேற்றித் தருவது உங்கள் கடமை. இங்கு எது நடந்தாலும் அதனை என் கவனத்திற்கு உடனே கொண்டு வரவேண்டும். இதில் ஏதாவது பிழை ஏற்பட்டால் உங்கள் தலை இருக்காது ஜாக்கிரதை.''

# எஸ். பாலசுப்பிரமணியன்

அதேநேரம் இளவரசி சந்திரவதனா தன்னுடைய அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தாள். அவள் உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது.

எவ்வளவு சாமர்த்தியமாக எல்லோரையும் ஏமாற்றி விட்டார். அவரை அப்பொழுதே காட்டிக் கொடுத்திருக்க வேண்டும். சே! அப்பொழுது பார்த்து என் புத்தி தடுமாறி விட்டது.

என் தந்தை எவ்வளவு பெரிய மனிதர். இந்தத் தஞ்சையம்பதியின் தன்னேரில்லாத மன்னர்! வயதில் பெரியவர். அவரைக் காலில் விழ வைத்துவிட்டாரே!

இவர் யார் என்று தெரியாமல் நானும்கூட அவர் காலில் விழுந்து பணிந்தேனே! ரொம்ப மோசமான மனிதர். காலில் விழுந்து மண்டியிட்டுக் கிடந்த என்னைத் தலையில் தடவி, முதுகில் ஒரு தட்டுக்கூடத் தட்டிவிட்டாரே!

அப்பொழுதே நான் சுதாரித்திருக்க வேண்டும். முட்டாளாக்கி விட்டாரே! கங்கைகொண்ட சோழபுரத்தில் நடந்தது முதல் அந்தப்புரத்தில் நுழைந்தது வரை அணுவளவும் பிசகாது சொன்னவுடனே நான் சுதாரித்திருக்க வேண்டும்!

யாரோ ஒரு பெரிய மகான் தனது ஞான திருஷ்டியில் இவ்வளவற்றையும் கண்டறிந்திருக்கிறார் என்று குருட்டுத் தனமாக நினைத்துப் பிரமித்துவிட்டேன். வெகு சுலபமாக என்னை ஏமாற்றிவிட்டார்.

வயது முதிர்ந்த மகாமுனி சிரேஷ்டர் என்று மடத்தனமாக நினைத்து இந்தக் கபட வேடதாரிக்காக நானே சமையலறைக்குச் சென்று பார்த்துப் பார்த்து எவ்வளவு கவனமாகச் சமையல் செய்தேன். அதை நினைக்க நினைக்க ஆத்திரமாக இருக்கிறது.

சமைத்தது மட்டுமின்றி நானே அவருக்கு முன் அவற்றை பரிமாறி, என் கையாலேயே பிசைந்து அவர் கையில் வைத்து சாப்பிடுங்கள் சாப்பிடுங்கள் என்று வற் புறுத்தி...

சொன்னபடியே செய்து காட்டிவிட்டாரே! அதுவும் எனது தந்தைக்கு எதிரிலேயே!

மகாக் கொழுப்புப் பிடித்தவர். என் கையைப் பற்றி எப்படிச் சாமர்த்தியமாகப் பேசினார். என் கைப்பக்குவம் திகட்டவே திகட்டாதாம். தள்ளாத வயது. அழகானவற் றைத் தள்ளாத வயது.

அவளுக்கு ஒரு பக்கம் நாணமாகவும் இருந்தது. உள்ளுக்குள் சிலிர்ப்பாகவும் இருந்தது. தன்னை மறந்து சிரித்து முகம் சிவந்தாள்.

பேச்சிலும் சாமர்த்தியம்! வீரத்திலும் சாமர்த்தியம்! வீரனே நீ யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவன்?

ஒரு பக்கம் உனது செய்கைகள் வெறுப்பாக இருந்தா லும் இன்னொரு பக்கம் உன்மீது என் மனம் ஏங்குகிறதே! ஊஹூம்! இது தப்பு! ஊர் பேர் தெரியாதவன் மீது உலகாளும் இளவரசி உள்ளத்தைப் பறி கொடுப்பது உன் னத மான செயல் அல்ல! தந்தை அறிந்தால் துடித்துப் போவார்.

பேச்சோடு பேச்சாக எவ்வளவு சாமர்த்தியமாகக் கேட் டார். அந்த வீரனை உன் மனம் விரும்புகிறது இல்லையா என்று! நல்லவேளை என் புத்தி அந்நேரம் தடுமாறாமல் இருந்தது! ஆம் என்று சொல்லி இருந்தால் அந்த இடத்தி லேயே எனக்கு முத்தம் கொடுத்திருப்பார்!

இல்லை, இல்லை. அந்த அளவுக்குக் கண்ணியமற்றவர் இல்லை. மதயானையிடமிருந்து என்னைக் காப்பாற்றிய பொழுது மயங்கிக் கிடந்த என்னிடம் எவ்வளவு கண்ணியமாக நடந்து கொண்டார். சுயநினைவில் இருக்கும் பொழுதுதான் என் மனதை அந்தப் பாடு படுத்துகிறார். இன்று அவர் குடிலை விட்டு கிளம்பும்பொழுதுகூட என்னைப் பார்த்து முத்தமிடுவதைப் போல் சைகை செய்தாரே! தைரியசாலிதான்!

இதற்கு மேல் என்னால் தாங்க முடியவில்லை. இவர் யார் என்று நான் அறிந்து கொண்டே ஆகவேண்டும். இல்லாவிடில் என் மனதை என்னாலேயே கட்டுப்படுத்த முடியாது! ஆனால் எப்படி அறிந்து கொள்வது?

தந்தையைக் கூப்பிட்டு அவரைப் பற்றிச் சொல்லிவிடுவோமா? வேண்டாம். வேண்டாம். விபரீதமாகப் போய் விடும். தந்தை கோபத்தில் அந்த இடத்திலேயே அவரைக் கொன்றுவிடுவார்.

அவர் யார் என்று தெரிய வேண்டும். அதற்கென்ன வழி?

நீண்ட நேரம் யோசித்தாள். புதுவழி ஒன்று புலர்ந்தது.

ஆம். அதுதான் சரி! யாரும் அறியாமல் அவரைச் சிறைபிடித்து எனது அறைக்குள்ளேயே விலங்கிட்டு விசாரிக்க வேண்டும். அவர் யார் என்று தெரிந்து கொள்ளும் வரை அவருக்கு உணவளிக்கக் கூடாது. பிறகு புத்தி சொல்லி அளவுக்கு மீறி ஆசைப்படாதே என்று அறிவுறுத்தி, ஒருவரும் அறியாமல் அனுப்பிவிட வேண்டும்.

அதன்பிறகும் அவர் புத்தி கெட்டுப் போய் வந்தால் தந்தையிடம் சொல்லி தண்டனையளிக்கச் சொல்ல வேண்டியதுதான்.

இந்த முடிவுவோடு அந்தப்புரத்தில் தன்னுடைய மெய்க்காவலுக்கென்று நியமிக்கப்பட்டிருந்த வீரர்களின் தலைவனை மட்டும் ரகசியமாக அழைத்து வரச் சொன்னாள். அவனிடம் யாருமறியாது உத்தரவுகளைப் பிறப்பித்தாள்.

''மிகக் கவனமாகச் செய்யுங்கள். நள்ளிரவுக்கு மேல் நலைந்து வீரர்களோடு ஸ்வாமிகளின் குடிலுக்குச் செல்லுங்கள். ஸ்வாமிகள் நன்கு அயர்ந்து தூங்கும் வரை காத்திருங்கள். அவருடைய சிஷ்யரையும் வாயைப் பொத்தி, கண்களைக் கட்டி ஒரு கோணிக்குள் அடைத்து ஒருவரும் அறியாமல் இங்கு கொண்டு வந்து சேர்ப்பது உங்கள் பொறுப்பு!''

நள்ளிரவு நேரம் கடந்து நான்கு நாழிகைகள் ஆகி இருந்தன. தேய்பிறை நிலவு வானத்தில் மெதுவாக எழுந்து கொண்டிருந்தது. அமைதியான அந்த இடத்தில் காவிரியாற்றின் நீர் மட்டும் சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது.

இளவரசி அனுப்பிய வீரர்கள் குடிலை நோக்கிப் பதுங்கிப் பதுங்கி நகர்ந்தார்கள். குடிலுக்கு வெளியே தளவாயின் காவலர்கள் இருவர் தரையில் உட்கார்ந்தவாறு தூங்கிக் கொண்டிருந்தனர்.

ஒரு வீரன் குடிலின் அருகே நெருங்கி ஓலையைப் பிரித்து உள்ளே பார்த்தான். வெறுந்தரையில் புலித் தோலின் மீது ஸ்வாமிகள் படுத்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. அதற்குச் சற்றுத் தள்ளி மற்றொரு முதிய உருவம் தூங்கிக் கொண்டிருந்தது.

மறு விநாடி அவன் சைகை செய்ய மற்ற வீரர்கள் ஓசையின்றி உள்ளே புகுந்து அப்படியே இருவர் மீதும் விழுந்து அமுக்கி, கண், வாய், கைகள் ஆகியவற்றைக் கட்டி இரண்டு கோணிகளுக்குள் திணித்து வெளியே தூங்கிக் கொண்டிருந்த காவலர்கள் விழித்துவிடாதபடி தூக்கிக் கொண்டு அந்தப்புரம் நோக்கி விரைய ஆரம்பித்தார்கள்.



# 71

காரிருள் சூழ்ந்திருந்த வேளையில் காவிரி ஆற்றங்கரையில் அமைந்திருந்த குடிலுக்குள் புகுந்து அருளானந்த ஸ்வாமிகளையும் அவருடைய சீடனையும் இரண்டு பெரிய கோணிகளுக்குள் போட்டுக் கட்டி, இளவரசி சந்திரவதனா அனுப்பிய வீரர்கள் குடிலுக்கு வெளியே காவலுக்கு இருந்த தளவாயின் ஆட்களது தூக்கம் கலைந்துவிடாதபடி மிகக் கவனமாக வெளியே தூக்கிக் கொண்டு வந்தார்கள்.

குடிலில் இருந்து நீண்ட தூரத்தில் மறைவான ஓர் இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாட்டு வண்டியில் அந்தக் கோணிகளை வைத்தார்கள். சுற்றுமுற்றும் நன்றாகப் பார்த்துவிட்டு தங்கள் செயலை யாரும் கவனிக்கவில்லை என்று திருப்தி அடைந்தவர்களாக மாட்டு வண்டியைக் கண வேகத்தில் அந்தப்புரத்தை நோக்கி ஓட்டினார்கள்.

இரவின் கடைசி ஜாமம் முடிவதற்கு இன்னும் ஒரு சில நாழிகைகளே இருந்த காரணத்தால் அந்தப்புரத்திற்குள் ஏற்றி வைக்கப்பட்டிருந்த தீப்பந்தங்கள் எண்ணெய் இன்றி ஆங்காங்கே உயிர் விட்டிருந்தன.

கன்னியர் கண் துயிலும் கன்னிமாடம் காரிருள் சூழ்ந்து கிடந்தது. எங்கும் நிசப்தம்! மரங்களின் இலைகள் அசையும் ஓசைகூடக் கேட்கவில்லை.

இளவரசி சந்திரவதனாவிற்கு மட்டும் உறக்கம் பிடிக்கவில்லை. பல்வேறு சிந்தனைகள் அவளைப் பாடாய் படுத்திக் கொண்டு இருந்தன.

குடிலுக்குள் இந்நேரம் சென்று இருப்பார்களா? அவர் தூங்குவாரா இல்லை விழித்துக் கொண்டிருப்பாரா? என் கையைத் தொட்டு, தலையைத் தடவியதை நினைத்து நினைத்துத் தவித்துக் கொண்டிருப்பாரா?

அவர் தூங்காமல் இருந்தால் எத்தனை வீரர்கள் சென்றாலும் அவரைப் பிடிக்க முடியாதே! உறங்கி இருந்தால் நல்லது.

மஞ்சத்தில் புரண்டு புரண்டு படுப்பாள். பிறகு எழுந்து உட்கார்ந்து யோசிப்பாள். கையைப் பிசைவாள். மெல்ல எழுந்து மாடத்தின் வழியாக எட்டிப் பார்ப்பாள். இன்னும் இவர்களைக் காணவில்லையே என்ற எரிச்சலில் மறுபடியும் மஞ்சத்தில் வந்து விழுவாள். சிந்தனையில் தவிப்பாள்.

இந்தச் செயல்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நீண்ட நேரம் கழித்து அவளது அறைக் கதவு ரகசியமாகத் தட்டப்பட்டது. ஆவலுடன் ஓடிப் போய் திறந்தாள். மறுகணம் அவள் முகம் மலர்ந்தது.

அவள் அனுப்பிய வீரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் அருகே இரண்டு பெரிய மூட்டைகள்!

''போன காரியம் என்ன ஆயிற்று?'' என்றாள்.

''வேலையைக் கச்சிதமாக முடித்துவிட்டோம் இளவரசியாரே! ஸ்வாமிகளும், அவரது சிஷ்யரும் அயர்ந்த தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்தார்கள். அவர்கள் தூக்கம் கலையாமல் அப்படியே விழுந்து அமுக்கி இந்த மூட்டைக்குள் திணித்துக் கொண்டு வந்துவிட்டோம்.''

''நல்லது மூட்டைகளை உள்ளே கொண்டு வாருங்கள்.''

அத்தனை பேரும் சேர்ந்து இரண்டு மூட்டைகளையும் தூக்கிக் கொண்டு அறைக்குள் வைத்தார்கள்.

''மூட்டைகளைப் பிரித்து அவர்களை வெளியே கொண்டு வரட்டுமா?''

''வேண்டாம், வேண்டாம். அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் செல்லலாம். இங்கு நடந்தவற்றை யாருக்கும் சொல்ல வேண்டாம்'' என்றாள் அவசரமாக.

வீரர்கள் சென்றவுடன் கதவைச் சாத்தித் தாழிட்டாள். ஏளனப் பார்வை ஒன்றை வீசியபடி மூட்டைகளை நெருங்கினாள்.

மூட்டையை அவிழ்த்தவுடன் முற்றும் துறந்த முனிவர் பேந்தப் பேந்த விழிக்கப் போகிறார்! தஞ்சை இளவரசி எவ்வளவு புத்திசாலி என்று உணரப் போகிறார்! பக்கத்து அறையில் இவர்களை அடைத்து வைத்து, பட்டினிப் போட்டு புத்தி சொல்லி அனுப்பிவிட வேண்டும்.

காலிக்கிறாராம்! கொழுப்பைக் குறைக்கிறேன்!

ஒரு மூட்டையை அவிழ்த்தாள். உள்ளுக்குள் இருந்த தாடி வைத்த உருவம் மயங்கிக் கிடந்தது. இவ்வளவு நேரம் இந்த மூட்டைக்குள் காற்றுக் குறைவாக இருந்ததால் மயக்கம் வந்திருக்கும் என்ற நினைப்பில் ஸ்வாமிகளைத் தரையிலே படுக்க வைத்தாள்.

மற்றொரு மூட்டையையும் பிரித்து, அதற்குள்ளும் மயங்கிக் கிடந்த வெண்தாடி மனிதனையும் தரையில் படுக்க வைத்து மூட்டைகளை ஒரு கோடியில் எறிந்தாள்.

மங்கலான வெளிச்சத்தில் அந்த இரண்டு உருவங்களின் கைகளும் கால்களும் கட்டப்பட்டு வாயில் ஒரு துணியால் பிணைக்கப்பட்டிருப்பது தெரிந்தது.

வாயை மறைத்திருந்த துணியை மட்டும் விலக்கினாள். ஆனால் துணியோடு அந்த உருவத்தின் முகத்தில் ஒட்ட வைத்திருந்த பொய்த்தாடியும் சேர்ந்து கையோடு வந்தது.

முகத்தைப் பார்த்த இளவரசிக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அவசரமாக மற்றோர் உருவத்தின் வாய்த் துணியையும் ஒட்டுத்தாடி மீசைகளையும் பிடுங்கி எறிந்தாள். அவள் அதிர்ச்சி இன்னும் அதிகமாகியது.

அவசரமாக ஓடிச் சென்று ஒரு விளக்கை எடுத்து வந்து, இருவரது முகங்களின் அருகே வைத்துப் பார்த்தாள். ஏமாற்றமும் அதிர்ச்சியும் அவளை மாறி மாறித் தாக்கியது.

இவர்கள் இருவரும் முத்துவும் அவரது நண்பனும் இல்லையே! யார் இவர்கள்?

எரிச்சலுடன் அவர்களது கை, கால் கட்டுகளை அவிழ்த்து எறிந்தாள். குவளை நிறைய நீர் எடுத்து வந்து அவர்கள் முகங்களில் காட்டினாள்.

சற்று நேரத்தில் அவர்களது மயக்கம் தெளிந்தது. இருவரும் எழுந்து உட்கார்ந்தார்கள். மலங்க மலங்க விழித்தார்கள். அவர்கள் எதிரே அதீதி மாதிரி விழித்துக் கொண்டு நின்று கொண்டிருந்த இளவரசியைப் பார்த்தவுடன் திடுக்கிட்டு எழுந்து, வெடவெடத்துப் பணிந்தனர்.

''இளவரசியா... இது... நாங்கள்... நீங்கள்... எப்படி... இந்த இடம்....''

''யாரடா நீங்கள்?'' அதட்டலாகக் கேட்டாள் இளவரசி.

''அந்தப்புரத்தில் உள்ள இளவரசியின் அறைக்கு எப்படி வந்து விழுந்தீர்கள்?''

''அந்தப்புரமா? இது தங்கள் அறையா...? ஐயோ! இளவரசியாரே எங்களுக்கு ஒன்றும் தெரியாது. நாங்கள் தளவாயின் படையைச் சேர்ந்த வீரர்கள். காவிரிக் கரையில் இருக்கும் அருளானந்த ஸ்வாமிகளின் குடிலில் காவற் பணிக்காக அமர்த்தப்பட்டிருந்தோம்.''

''இங்கு எப்படியடா வந்தீர்கள்?''

''அதுதான் எங்களுக்கும் தெரியவில்லை இளவரசியாரே. நள்ளிரவு வரை நான்கு பேர் குடிலின் நான்கு திசைகளிலும் காவல் புரிந்து கொண்டிருந்தோம். அதன் பிறகு எங்கள் இருவரை மட்டும் ஸ்வாமிகள் குடிலுக்குள் அழைப்பதாக அவரது சீடர் வந்து கூப்பிட்டார்.''

''எதற்கு?''

''ஸ்வாமிகள் அர்த்த ஜாமப் பூஜை முடித்திருந்தாராம். பூஜைப் பிரசாதமாக வைக்கப்பட்டிருந்த பழங்களை எங்கள் இருவருக்கும் தந்து சாப்பிடச் சொன்னார். சாப்பிட்டு முடித்தவுடன் தலை சுற்றுவதுபோல் இருந்தது. கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது. விழித்துப் பார்த்தால் இங்கே இருக்கிறோம்.''

சந்திரவதனாவுக்குள் எரிச்சலும் ஏமாற்றமும் பொங்க பற்களைக் கடித்தாள்.

''நாங்கள் இங்கே எப்படி வந்தோம் இளவரசியாரே?''

''ம்... ஸ்வாமிகளின் மந்திர சக்தி உங்களை இங்கே கொண்டு வந்து போட்டிருக்கிறது'' என்றாள் எரிச்சலுடன்.

''ஆஹா... ஸ்வாமிகளுக்கு எவ்வளவு அற்புதமான சக்தி!'' என்று வியந்தவாறு இருவரும் கையெடுத்துக் கும்பிட்டார்கள்.

''சரி, சரி. வியந்ததுபோதும். உடனே இந்த இடத்தை விட்டு அகலுங்கள்'' என்று எரிந்து விழுந்தாள் இளவரசி.

இரு வீரர்களும் அந்தப்புரத்தைவிட்டு வெளியேறிய பிறகும் சந்திரவதனாவிற்கு ஆத்திரம் தணியவில்லை. பக்கத்தில் இருந்த குவளையை எடுத்துக் கோபத்துடன் சுவரில் எறிந்தாள்.

இருக்கட்டும். இருக்கட்டும். இந்த முறை தப்பி இருக்கலாம். விடமாட்டேன். அவரை நன்றாகச் சிக்க வைக்கிறேன். இதோ பொழுது புலரும் அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன.

இப்பொழுதே தந்தையிடம் செல்கிறேன். அவரையும் கூட்டிக் கொண்டு அருளானந்த ஸ்வாமிகளின் ஆஸ்ரமத் திற்குச் செல்கிறேன். என் தந்தை முன்னிலையில் அவரது தாடியைப் பிடித்து இழுத்து ஸ்வாமிகளின் உண்மை சொரூ பத்தைப் புலப்படுத்துகிறேன். அப்பொழுது என்ன செய் வார் என்று பார்க்கலாம்.

அவசர அவசரமாகத் தனது காலைக் கடன்களை முடித்துவிட்டு மன்னரைத் தேடிச் சென்றாள். விஜயராகவ நாயக்கன் அப்பொழுதுதான் குளித்து முடித்துவிட்டுப் பூஜை அறைக்குள் உட்கார்ந்து இருந்தான்.

''என்ன சந்திரா, இவ்வளவு அதிகாலையிலேயே என்னைத் தேடி வந்திருக்கிறாய்? அந்தப்புரத்திற்குள் பந்து விளையாட அஞ்சுகங்கள் அகப்படவில்லையா?'' என்று கேலி செய்தான் மன்னன்.

''போங்கள் தந்தையே! இன்னும் என்னைச் சிறுமியாகவே நினைத்துக் கேலி செய்கிறீர்கள்! தங்கள் பூஜை முடிந்து விட்டதா?''

''ஆம். முடிந்துவிட்டது. அதற்கென்ன?''

''நாம் இருவரும் இப்பொழுதே அருளானந்த ஸ்வாமிகளின் குடிலுக்குச் செல்ல வேண்டும்.''

''எதற்கம்மா? எனக்குச் சில முக்கியமான வேலைகள் இருக்கின்றன. மாலையில் செல்லலாமே!''

''இல்லை தந்தையே. இப்பொழுதே செல்வதுதான் நல்லது.''

''அவ்வளவு அவசரம் எதற்குச் சந்திரா?''

''ஸ்வாமிகள் நேற்று இரவு என் கனவில் வந்தார்.''

''அப்படியா! கனவில் வந்தாரா!'' விஜயராகவ நாயக்கன் விண்ணைப் பார்த்துக் கையுயர்த்திக் கும்பிட்டான். ''ஏதேனும் அருள்வாக்கு நல்கினாரா?''

''ம். 'எனது பசிக்கு உணவளித்த உன் பக்திக்கு மெச்சி எனது உன்னத சக்தியை உன் தந்தைக்கும் வெளிப்படுத்தி விஸ்வரூபம் எடுக்கப் போகிறேன். அதனால் நீங்கள் இருவரும் அந்தக் காட்சியைக் காண காலையில் எனது குடிலுக்கு வாருங்கள்' என்று உத்தரவு பிறப்பித்தார். அதனால்தான் ஓடி வந்தேன்.''

''ஆஹா'' மறுபடியும் வானைப் பார்த்துக் கும்பிட்ட மன்னன், ''மகானின் உத்தரவுப்படியே செய்வோம் வா. மகளே'' என்று எழுந்தான்.

மன்னனும் இளவரசியும் ரதத்தில் ஏறிக் காவிரிக் கரைக்கு வந்தார்கள். அங்கு நிறைய மக்கள் குழுமி இருந்தனர்.

ரதத்தைப் பார்த்து அவசரமாக வழிவிட்டனர். கூட்டம் விலகியதும் குடில் இருந்த இடத்தைக் கண்ணுற்ற மன்னனுக்கும் அவள் மகளுக்கும் அதிர்ச்சியாக இருந்தது.

குடிலைக் காணவில்லை. குடில் அமைந்த இடமே தெரியாத அளவுக்குச் சுத்தமாக இருந்தது. இரவோடு இரவாகக் குடில் எப்படி மாயமாய் மறைந்திருக்கும்?

அங்கிருந்த தளவாயின் மற்ற இரு வீரர்களும் ஓடி வந்து மன்னனைப் பணிந்து வணங்கினர்.

''யாரடா நீங்கள்?'' என்றான் மன்னன்.

''தளவாயின் படை வீரர்கள் மன்னா! ஸ்வாமிகளின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்தோம்.''

''ஸ்வாமிகள் எங்கே? அவரது குடிலைக்கூட காண வில்லையே?''

''அவரது சக்தியின் அதிசயத்தை என்னவென்று சொல்வது மன்னா! நேற்று இரவு நாங்கள் கண் இமைக்காது குடிலுக்கு வெளியே காவல் புரிந்து கொண்டிருந்தோம். அர்த்த ராத்திரிக்குப் பிறகு ஸ்வாமிகள் எங்களை அழைத்தார். பிரசாதங்கள் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார்.

'வீரர்களே, தங்களது கடமை உணர்வை மெச்சுகி றோம். நாளைக் காலையில் எமது சக்தியின் அதிசயத்தை இவ்வுலகத்தோர் உணர நீங்களே சாட்சியாகும் பெரு மையை உங்களுக்கு அளிக்கிறோம்' என்று ஆசி கூறினார். அப்பொழுது அதைப்பற்றி எங்களுக்கு புரியாமல் குழப் பத்துடன் குடிலுக்கு வெளியே வந்து மறுபடியும் காவல் புரியத் தொடங்கினோம். சற்று நேரத்தில் ஆகாயத்தில் பறப்பது போன்ற ஓர் உணர்வு எங்களுக்குத் தோன்றியது. பிறகு எதுவுமே எங்களுக்கு நினைவில்லை. கண் விழித் துப் பார்த்தபொழுது நாங்கள் கட்டாந்தரையில் கிடக்கி றோம். குடில் இருந்த அடையாளமே தெரியவில்லை. ஸ்வாமிகள் மறைந்துவிட்டார்.''

''அடேயப்பா! எவ்வளவு சக்தி! சந்திரவதனா இந்தச் சக்தியை நாம் உணர வேண்டும் என்பதற்காகத்தான் உன் கனவில் வந்து உத்தரவிட்டிருக்கிறார். எப்பேர்ப்பட்ட மகான். அவரை நாம் சந்தித்ததே நமது பூர்வஜென்ம பலன். இல்லையா மகளே?'' என்று விண்ணைப் பார்த்துக் கும்பிட்டவாறு கேட்டான் மன்னன்.

''ஆமாம், ஆமாம்'' என்று எரிச்சலை அடக்கிக் கொண்டு சொன்னாள் இளவரசி!

இத்தனை நிகழ்ச்சிகளையும் மக்களோடு மக்களாக மாறுவேடம் புனைந்து நின்று கொண்டிருந்த சொக்கநாத னும், வெங்கடகிருஷ்ணனும் கேட்டுக் கொண்டு இருந்தார் கள். மன்னனும், இளவரசியும் அகன்றபிறகு தனிமை யான இடத்தில் வந்து பேசத் தொடங்கினர்.

''பார்த்தாயா முத்து! நம்மைத் தூக்கிவர ஆட்களை அனுப்பியது மட்டுமின்றி, இவ்வளவு அதிகாலையிலேயே தந்தையையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாள்! இதற்குப் பிறகும் அவள் உன்னை விரும்பி வருவாள் என்று நினைக்கிறாயா?''

''அவள் மனம் மாறி இருப்பதை இன்னும் நீ புரிந்து கொள்ளவில்லையா முருகா? நான் யார் என்று தெரிந்தும் இதுவரை அவள் தந்தையிடம் அவள் சொல்லவில்லை. அசையத் தொடங்கிவிட்டது அவள் மனம். முழுவதும் அசைத்துப் பெயர்த்தெடுக்கும் வரை விடமாட்டேன்.''

''சரி அடுத்த திட்டம் என்ன?''

''நல்ல வேளையாகத் தளவாயின் வீரர்களுக்கு பழத்தில் மயக்க மருந்து அளித்து குடிலைப் பிரித்துக் காவிரி ஆற்றுடன் எறிந்துவிட்டது பற்றி யாருக்கும் சந்தேகம் வரவில்லை. தளவாய்க்கும் சந்தேகம் வராமல் நாம் உத்தர விட்டபடி செய்தால் அவன் மூலமாக நமது அடுத்த திட்டம் நிறைவேறும்.''

அதேநேரம் இளவரசியின் ஆட்கள் பிடித்து வந்து அந்தப்புரத்தில் போட்ட தளவாயின் வீரர்கள், தளவாயைச் சந்தித்துப் பேசத் தொடங்கினார்கள். அவர்கள் பேசப் பேசத் தளவாயின் முகம் மாற ஆரம்பித்தது.



# 72

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனும் இளவரசி சந்திரவதனாவும் அருளானந்த ஸ்வாமிகளின் அற்புத லீலைகளை எண்ணி ஆளுக்கொரு பக்கம் வியந்தவாறு ரதத்தில் ஏறி அரண்மனைக்குச் சென்று விட்டனர்.

இளவரசிக்கு ஒரு பக்கம் ஏமாற்றமாக இருந்தாலும் இன்னொரு பக்கம் சிரிப்பும் வந்தது. பலே கைக்காரராக இருக்கிறாரே அந்த வீரர்! எவ்வளவு சாமர்த்தியம்! எவ்வளவு முன்யோசனை? எவ்வளவு கொழுப்பு!

பார்க்கலாம். இன்னும் என்ன திருவிளையாடல்கள் நடத்திக் காட்டப் போகிறார் என்று!

மன்னனும் இளவரசியும் ஏறிய ரதம் காவிரியாற்றங் கரையில் இருந்து கணணுக்கு மறையும் பொழுது தளவாய் ரங்கப்ப நாயக்கன் ஒரு குதிரையில் ஏறிக் கனவேகமாகக் குடில் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

தளவாயைக் கண்டதும், ஸ்வாமிகளின் காவலுக்கென்று அவன் நியமித்திருந்த வீரர்கள் இருவரும் ஓடோடி வந்து அவன் முன் பணிந்ததனர்.

''என்னடா ஆயிற்று? ஸ்வாமிகள் திடீரென்று மறைந்து விட்டார் என்று பேசிக் கொள்கிறார்களே! குடில் அமைந்து இருந்த சுவடு தென்படவில்லையே! என்ன நடந்தது?'' என்று அதிகாரமாகக் கேட்டான் தளவாய்.

அதற்கு அந்த வீரர்கள் சற்று நேரத்திற்கு முன் மன்னனிடம் சொன்ன அதே பதிலைச் சொல்லி ஸ்வாமிகளின் அதிசய சக்தியை வியப்புடன் கூறினர்.

தளவாய் சற்று நேரம் யோசித்தபடியே நின்று கொண்டு இருந்தான்.

அவர்கள் சொல்வதை முற்றிலும் நம்புவதற்கும் அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

நள்ளிரவுப் பூஜை முடித்து ஸ்வாமிகள் இவர்களைக் கூப்பிட்டு எதற்காகப் பிரசாதம் கொடுக்க வேண்டும்? அவர் கொடுத்த பழங்களைச் சாப்பிட்ட பிறகு வானத்தில் பறப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டதாகப் பிதற்றுகிறார்களே!

ஒருவேளை பழத்தில் மயக்க மருந்து கொடுத்திருப்பாரோ? மயக்க உணர்வில் இந்த மடையர்களுக்கு பறப்பது போன்ற உணர்வு ஏற்பட்டிருக்குமோ?

இவர்களை மயக்கத்தில் ஆழ்த்திவிட்டு தாங்கள் தங்கி இருந்த குடிலைப் பிரித்து ஆற்றுக்குள் எறிந்து இருந்தால்? சுழித்துக் கொண்டு ஓடும் காவிரி வெள்ளம் அவற்றை இந்நேரம் கடலுக்குள் சென்று அமிழ்த்தி இருக்கும்! ஒருவேளை அப்படி நடந்திருக்குமோ?

குடில் அமைக்கப்பட்டிருந்த இடத்தைச் சுற்றிச் சுற்றி வந்து பார்த்தான். நுங்கும் நுரையுமாகப் பொங்கி ஓடும்

காவிரி ஆற்றுத் தண்ணீரைச் சற்று நேரம் வெறித்துப் பார்த்தான்.

ஒன்றும் புலப்படவில்லை. ஒருவேளை ஸ்வாமிகள் இந்த மாதிரி ஏமாற்றி இருந்தால் அதற்கான காரணமும் தென்படவில்லை. ஸ்வாமிகளின் சக்தியைப் பற்றிச் சந்தேகிப்பதற்கும் பயமாக இருந்தது.

அவரது அளப்பரிய சக்தியை நேரடியாகவே பார்த்திருக்கிறான். அவனுக்கும், அச்சுதப்பனுக்கும் நடந்த சில சம்பவங்களும், இளவரசிக்கு நிகழ்ந்த சில விஷயங்களும் அரண்மனை உயர்மட்ட அதிகாரிகள் ஒருசிலரைத் தவிர வேறு யாருக்குமே தெரியாது. அத்தனையையும் பக்கத்தில் இருந்து பார்த்ததுபோல் புட்டுப் புட்டு வைத்துவிட்டார்!

அதுமட்டுமின்றி அரசனையும், இளவரசியையும் ஒரு நாழிகைக்குள் அவனைப் பார்த்து அன்புடன் பேச வைத்து அதிசயம் புரிந்தார். அப்படிப்பட்டவரின் மகா சக்தியைப் பற்றி சந்தேகம் கொள்வது தவறு!

அதேநேரம் தளவாய்க்குச் சட்டென்று ஒரு பொறி தட்டியது. காவல் வீரர்களை அழைத்தான்.

''டேய், ஸ்வாமிகளின் குடிலைக் காவல் செய்வதற்காக மொத்தம் நான்கு பேரை நியமித்து இருந்தேன்! நீங்கள் இருவர் மட்டும் இங்கே இருக்கின்றீர்கள். மற்ற இருவரும் எங்கே?''

''அவர்களைத்தான் நாங்களும் தேடிக் கொண்டிருக்கிறோம் பிரபு! ஸ்வாமிகள் எங்கள் நால்வருக்கும்தான் பிரசாதம் கொடுத்தார். நான் கண் விழித்துப் பார்க்கும் பொழுது, இதோ இவன் மட்டும் என்னருகில் படுத்துக் கிடந்தான். மற்ற இருவரும் எங்கே சென்றார்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை.''

''முதலில் அவர்களைத் தேடுங்கள். அவர்கள் கதி என்ன ஆயிற்று என்று எனக்குத் தெரிய வேண்டும்.''

தளவாய் இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்த ஒருசில விநாடிகளுக்குள் அரண்மனையின் அந்தப்புரத்திற்குள் இள்வரசியின் ஆட்களால் கொண்டு செல்லப்பட்ட தளவாயின் மற்ற இரண்டு காவலர்களும் ஓடோடி அங்கு வந்தனர்.

தன் முன்னால் பணிவுடன் நின்ற அந்த இரு காவலர்களையும் தளவாய் கோபத்துடன் முறைத்துப் பார்த்தான்.

''இவ்வளவு நேரம் எங்கேயடா போய்த் தொலைந்தீர்கள்? உங்கள் இருவரையும் இங்கு காவலுக்கு இருக்கும்படி சொன்னால் நீங்கள் ஊரைச் சுற்றிவிட்டு வருகிறீர்களா, இல்லை வீட்டில் போய் உறங்கிவிட்டு வருகிறீர்களா?''

''இல்லை பிரபு! நாங்கள் இங்குதான் காவல் காத்துக் கொண்டு இருந்தோம். ஸ்வாமிகளின் அதிசய சக்தியை என்னவென்று சொல்வது! இங்கே இருந்த குடில்கூட மாயமாக மறைந்துவிட்டிருக்கிறதே! என்னே அற்புத சக்தி படைத்தவர்'' என்று ஒருவன் வியந்தான்.

''அது இருக்கட்டுமடா முட்டாள்! உங்களுக்கு என்ன நடந்தது? நீங்கள் எங்கே போய்விட்டு வருகிறீர்கள்?''

''நேற்று நள்ளிரவு வரை நாங்கள் அனைவரும் எங்களது இமைகளைக்கூட அசைக்காமல் ஸ்வாமிகளின் குடிலைச் சுற்றிக் காவல் காத்துக் கொண்டு இருந்தோம். நள்ளிரவு தாண்டி ஒரு நாழிகை ஆனபோது ஸ்வாமிகள் எங்களை அழைத்துப் பிரசாதம் கொடுத்து ஆசீர்வதித்தார். அவர் பிரசாதமாக அளித்த பழங்களை நான் சாப்பிட்டு முடித்து, மறுபடியும் குடிக்கு வெளியே வந்து சேர்ந்த சிறிது நேரத்திற்குள் எனது கண்கள் இருட்டிக் கொண்டு வந்தன.''

இதனைக் கேட்டதும் தளவாயின் முகம் யோசனையில் ஆழ்ந்தது. தளவாயின் கவனம் சிதறுவதைக் கண்ணுற்ற அந்த வீரன், சொல்வதை நிறுத்திவிட்டுத் தளவாயின் முகத்தையே உற்றுப் பார்த்தவாறு நின்றான்.

''என்னடா என் முகத்தையே உற்று பார்க்கிறாய்?''

''பிரபு எதையோ யோசித்துக் கொண்டிருக்கிறீர்களே என்று...''

''ஆமாம். இந்த நாட்டுக்கு மன்னனாக உனக்கு முடி சூட்டி வைத்தால் என்ன என்று யோசிக்கிறேன். அறிவு கெட்டவனே! அப்புறம் என்ன நடந்தது என்று சொல்.''

''ஸ்வாமிகளின் பிரசாதத்தைச் சாப்பிட்டு வெளியே வந்தேனா கண்கள் இருட்டிக் கொண்டு வந்ததா...''

''இதற்கெல்லாம் நான் பதில் சொல்லணுமா?'' என்றவாறு தளவாய் அவனை முறைத்தான்.

''மன்னித்துக் கொள்ளுங்கள் பிரபு! ஸ்வாமிகளின் சக்தியை நினைக்க நினைக்க எனக்குப் புல்லரித்துப் பேச்சுத் தடுமாறுகிறது.''

''மீதியை நான் சொல்கிறேன் பிரபு!'' என்று மற்றொரு வீரன் தளவாய் எதிரில் வந்து பணிந்தான்.

''சொல்லுடா சீக்கிரம்'' தளவாயின் பொறுமை கரைய ஆரம்பித்தது.

''இவனை மாதிரியே எனக்கும் கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது. என் உடம்பு லேசாகி, காய்ந்த சருகை விடக் கனம் குறைந்ததாக உணர்ந்தேன். இலவம் பஞ்சு போல ஊதினால் பறக்கும்படி என் தேகம் இளைத்துவிட்டதோ என்ற ஒரு பிரமை!''

''இதற்கு அவனே தேவலை! முண்டங்களா, வர்ணனைகளை எல்லாம் விட்டுவிட்டு நடந்ததை மட்டும் சொல்லுங்கள்.''

''சொல்கிறேன் பிரபு! எனது தேகம் இளைத்து லேசாகி காற்றில் மிதப்பது மாதிரி முதலில் தோன்றியது. பிறகு அப்படியே எழுந்து விண்ணில் பறப்பது மாதிரி இருந்தது. அதற்குப் பிறகு எனக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. மீண்டும் கண்களை விழித்துத் தன்னுணர்வுக்கு வந்தபொழுது நாங்கள் இளவரசியின் அந்தப்புரத்திற்குள் விழுந்து கிடப்பது தெரிந்தது.''

அதுவரை சற்று அசட்டையாகக் கேட்டுக் கொண்டிருந்த தளவாய், கடைசி வரியைக் கேட்டதும் அதிர்ச்சிக்கு ஆளாகி, ''என்ன, என்ன? திரும்பச் சொல். எங்கே விழுந்து கிடந்தீர்கள்?'' என்றான்.

''நமது இளவரசியின் சந்திரவதனா தேவியாரின் அந்தப்புர அறைக்குள் விழுந்து கிடந்தோம்?''

''நிஜமாகவா? சரியாகச் சொல்! இங்கிருந்து நமது அரண்மனையின் அந்தப்புரம் அமைந்து இருக்கும் இடம் கிட்டத்தட்ட இரண்டு மைல் தொலைவு இருக்கும். அதிலும் அந்தப்புரத்தில் இளவரசியின் அறை ஆறாவது மாடியில் அமைந்திருக்கிறது. அங்கேயா விழுந்து கிடந்தீர்கள்?''

''ஆமாம் பிரபு! அதை நினைக்கையில் எங்களுக்கே வியப்பாக இருக்கிறது! இதோ எப்படிப் புல்லரிக்கிறது பார்த்தீர்களா?'' என்றவாறு தனது கரத்தை நீட்டிக் காட்டினான்.

''டேய்! சரியாக நினைவுபடுத்திச் சொல்! அரைகுறை மயக்கத்தில் ஏற்பட்ட கனவில் இளவரசியின் அந்தப்புரத்தில் விழுந்து கிடந்ததாகத் தெரிந்ததா?''

''இல்லை பிரபு! கடவுள் சாட்சியாக நாங்கள் அங்கே தான் விழுந்து கிடந்தோம். எங்களை தன்னுணர்வுக்குக் கொண்டு வந்ததே இளவரசியார்தான்.''

''விவரமாகச் சொல்'' பரபரப்பாகக் கேட்டான் தளவாய்.

''வானத்தில் பறந்து கொண்டிருந்த நான் திடீரென்று கடலுக்குள் விழுந்த மாதிரித் தெரிந்தது. கண்களை விழித்துப் பார்த்தால், என்னை யாரோ ஒரு தேவதை ஒன்று குனிந்து உற்றுப் பார்ப்பதுபோல் இருந்தது. பயந்து அரக்கப்பரக்க எழுந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தபொழுது அது நமது இளவரசி என்று தெரிந்தது.''

''அப்புறம் என்ன நடந்தது?''

''இளவரசியைப் பார்த்ததும் பயந்துபோய் அவசர அவசரமாக எழுந்து நின்றோம். நாங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்பட அவர் எங்களைப் பார்த்துப் பயந்து நின்றார்.''

''இளவரசி எதுவுமே பேசவில்லையா?''

''அவர் பயந்துபோய் நாங்கள் யார் என்று விசாரித்தார். நாங்கள் சொன்னோம். இங்கு எப்படி வந்தோம் என்று தெரியவில்லை என்றோம். அதற்கு அவர் 'நான் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தேன். ஏதோ ஒரு கனமான பொருள் விழுந்தது போன்ற சப்தம் கேட்டது. திடுக்கிட்டு விழித்து எழுந்து பார்த்தால் நீங்கள் இங்கே விழுந்து கிடக்கிறீர்கள். ஸ்வாமிகளின் சக்தியாகத்தான் இருக்கும்' என்று அதிசயித்தார்.

தளவாய் இதைக் கேட்டு அதிசயித்து நிற்க, அந்த வீரனே தொடர்ந்து சொல்லிக் கொண்டு போனான்.

''இளவரசியார் பிறகு எங்களைப் பார்த்து 'இனி நீங்கள் இங்கு இருக்காதீர்கள் போய்விடுங்கள்' என்றார். நாங்கள் மறுவிநாடியே அங்கிருந்து வெளியேறினோம். பொழுதும் விடிந்தது. அதன்பிறகு ஊருக்குள் வரும் பொழுது தான் தெரிந்தது. ஸ்வாமிகள் இங்கும் ஓர் அற்புதம் நிகழ்த்தி இருக்கிறார் என்று.''

தளவாய் அந்த இரு வீரர்களையும் அனுப்பிவிட்டு நீண்டநேரம் யோசித்தபடி நின்றான்.

ஸ்வாமிகளின் குடிலுக்குக் காவலாக அமர்த்திய இந்த நான்கு வீரர்களும் அவனது நம்பிக்கைக்கு மிகவும் பாத்திர மான வீரர்கள். இவர்கள் பொய்யுரைக்க மாட்டார்கள்!

இங்கிருந்து இரண்டு கற்கள் தொலைவில் இருக்கும் அந்தப்புரத்தில் அதுவும் ஆறாவது மாடியில் இவர்கள் விழுந்து கிடந்தது நிஜமாகவே ஓர் அற்புதமான செயல் தான்! இதில் ஏதாவது சதி இருக்கிறது என்று சந்தேகப் படவே முடியாது.

இரண்டு வீரர்களும் முரட்டு உருவம் கொண்டவர் கள். இவர்களை மயக்கத்தில் ஆழ்த்தித் தூக்கிக் கொண்டு போவதற்குப் பத்துக்கும் மேற்பட்ட ஆட்கள் தேவைப் படும். அதிலும் நடுநிசியில் அந்தப்புரத்துக் காவலைக் கடந்து ஆறாவது மாடியில் பூட்டிக் கிடந்த இளவரசியின் அறைக்குள் போடுவது என்பது நடக்கவே முடியாத ஒரு காரியம்!

இது ஸ்வாமிகளின் அற்புத சக்தியைத் தவிர வேறு எதுவும் கிடையாது! ஸ்வாமிகள் எதற்காக இவர்களை அந்தரத்தில் கொண்டு சென்று அந்தப்புரத்தில் போய்ப் போட்டார்?

ஒருவேளை இப்படி இருக்குமோ? இரண்டு முரடர்க ளையே இவ்வளவு தூரத்தில் தூக்கி எறிந்தேன்! இளவரசி யின் மனதை அச்சுதப்பன் மேல் திருப்புவது எளிது என்று புரிந்துகொள்ளடா ரங்கப்பா என்று எனக்குச் சூசகமாக உணர்த்துவதற்காகத்தான் இருக்குமோ?

இருக்கும் இருக்கும். அப்படித்தான் இருக்கும்! அரு ளானந்த ஸ்வாமிகளே, தங்கள் அற்புத சக்தியைச் சந்தேகப் பட்ட இந்த அற்பனை மன்னித்து அருளுங்கள்! இனி ஆயுசுக்கும் தங்களைப் பற்றிச் சந்தேகப்பட மாட்டேன்.

மானசீகமாகக் குருவின் கால்களில் விழுந்து மன்னிப் புக் கேட்டான். பிறகு வானத்தைப் பார்த்துக் கையுயர்த்திக் கும்பிட்டான்.

ஸ்வாமிகளின் குடில் அமைந்திருந்த இடத்திற்கு வந்து அந்த மண்ணைத் தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண் டான். பிறகு சிறிது மண்ணை எடுத்து நெற்றியில் பூசிக் கொண்டு அந்த இடத்தை விட்டு நடக்கத் தொடங்கினான்.

இந்தக் காட்சியைத் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த மக்களில் சிலர், தளவாய் செய்தது போலவே குடில் அமைந்திருந்த மண்ணை தொட்டுக் கும்பிட்டு சிறிது மண்ணைப் பூசிக் கொள்ள ஆரம்பித்தார் கள். சற்று நேரத்தில் அந்த இடத்தில் தஞ்சை வாழ் மக்கள்

அனைவரும் திரண்டு வந்து வரிசை அமைத்து ஒவ்வொரு வராக அதேபோல் செய்யத் தொடங்கினர்.

தளவாய் ரங்கப்பநாயக்கனும், அவனது மைந்தன் அச்சுதப்பனும் அருளானந்த ஸ்வாமிகளின் திருவாய் மலர்ந்து அருளியபடி, மறுநாளில் இருந்தே தஞ்சை எல் லையைவிட்டு ஒரு காத தூரம் தள்ளிக் காட்டுக்குள் அமைந்திருந்த பாழடைந்த காளி கோயிலில் அர்த்த ஜாமப் பூஜை செய்யத் தொங்கினர்.

அமாவாசை வந்தது.

அன்று இரவு ஸ்வாமிகளின் உத்தரவுப்படி காவிரியில் இருவரும் தலைமுழுகிவிட்டு, ஓமகுண்டம் வளர்த்து காளிக்குப் படையல்களைச் சமர்ப்பித்துக் கண்களை மூடித் தவம் புரிய ஆரம்பித்தனர்.

நடுநிசியை அடைந்ததும் ஓமகுண்டத்தில் இருந்த தீ திடீரென்று ஓசையுடன் வெடித்து ஓர் ஆள் உயரத்தில் எரிய ஆரம்பித்தது.

காளி கோயிலுக்குள் கர்ண கடூரமான சப்தம் எழ ஆரம்பித்தது. அதே நேரத்தில் கோயிலுக்கு வெளியே யாரோ அலறும் குரல் நடுநிசியின் அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒலித்தது.



# 73

தஞ்சை நகரின் எல்லை முடிவுற்ற இடத்தில் இருந்து ஒரு காத தூரம் தள்ளி அமைந்திருந்தது பாழடைந்த அந்தக் காளி கோயில். மனித நடமாட்டம் என்பதே அடியோடு அற்றுப்போய், பகல் நேரத்தில் கூட ஆளரவம் அற்று, அடர்ந்த காட்டுப் பகுதியில், அஞ்சும்படியான தோற்றத்துடன் சிதிலமாகிக் கிடக்கும் இந்தக் காளி கோயில் முற்காலச் சோழ மன்னர்கள் காலத்தில் கபாலிக மதத்தினரால் கட்டப்பட்டு இப்பொழுது சீந்துவாரற்றுப் போய்க் கிடக்கிறது.

ஒரு காலத்தில் கபாலிக மதத்தினர் இந்தக் கோயிலில் நரபலி கொடுத்ததாக பரபரம்பரையாகப் பயத்துடன் பேசப்பட்டு வருகிறது. இதில் குடிகொண்டு இருக்கும் காளி உக்கிரமாகக் கண்களைத் திறந்து, நாக்கைத் தொங்க விட்டபடி எட்டுக் கரங்களில் விதவிதமான ஆயுதங்களுடன் அறுபட்ட தல ஒன்றை பிடித்தபடி அகோரமாக நிறகும் அந்தக் காட்சியைப் பார்க்கும் எவருக்கும் அடிவயிற்றில் பயம் கிளம்பும்.

இப்பொழுதும் கூட சில மந்திரவாதிகள் ரகசியமாக இங்கு வந்து நரபலி கொடுக்கிறார்கள் என்று ஒரு வதந்தி உலவுவதால், தஞ்சை நகர மக்கள் எவரும் இதன் திசை

யில்கூடத் தலை வைத்துப் படுத்துறங்க ப்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கோயிலின் முன்பக்கம் மிகப் பெரிய ஆலமரம் ஒன்று கிளைகள் பரப்பி, விழுதுகள் வேரோடிப் போய் அடர்ந்து இருந்தது. அதிலிருந்து சற்று தூரத்தில் காவிரியாறு சலசலத்து ஓடிக் கொண்டு இருந்தது.

அருளானந்த ஸ்வாமிகளின் கட்டளைப்படி தளவாய் ரங்கப்ப நாயக்கனும், அவனது மைந்தன் அச்சுதப்பனும் காவிரியாற்றில் தலைமுழுகி, பூஜைப் பொருட்களுடன் காளி கோயிலுக்குள் நுழைந்தனர்.

அமாவாசை இருட்டு கோயிலுக்குள் கருமை நிறத்தை அப்பி இருந்தது. முதலில் விளக்கேற்றினான் தளவாய். காளியின் பயங்கர ரூபத்தைப் பார்ப்பதற்கே அச்சுதப் பனுக்குப் பயமாக இருந்தது.

பூஜைப் பொருட்களை சிலையின் காலடியில் வைத்து ஓமகுண்டம் வளர்த்து, இருவரும் கண்களை மூடித் தவம் புரியத் தொடங்கினர்.

அருளானந்த ஸ்வாமிகள் சொன்ன கடைசி நாள் இதுதான். இன்றுதான் வழி கிடைக்கும் என்றார். என்ன வழி, எப்படிக் கிடைக்கும் என்ற புதிரில் இருவரும் கண்களைத் திறக்காது கடுமையாகக் காளியை வேண்டித் தவம் செய்தவாறு இருந்தனர்.

இளவரசி சந்திரவதனாவின் மனம் மாறி அச்சுதப்பன் மீது மையலுற வேண்டும். தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் அவளை அச்சுதப்பனுக்கு திருமணம் முடித்து, இந்த நாட்டுக்கே மன்னனாக்க வேண்டும் என்ற வேண்டு தலை மனதில் நினைத்துக் காளிதேவியிடம் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள் தந்தையும் தனயனும்.

நள்ளிரவு வேளை நெருங்க ஆரம்பித்தது. கோயிலைச் சுற்றி மயான அமைதி! ஆலமரத்தில் குடிகொண்டிருந்த கூகை ஒன்று திடீர் என்று கர்ண கடூரமாகக் கத்தியது. வெகுதூரத்தில் நாலைந்து நரிகள் ஓலமிடுவது துல்லியமாகக் கேட்டது.

அச்சுதப்பனுக்குப் பயம் நெஞ்சுக்குள் பீறிட்டுக் கிளம்பியது. கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டு காளியை வேண்டிக் கொள்ள ஆரம்பித்தான். தளவாயோ கண்களைச் சிறிதுகூடத் திறக்காது, ஆத்மார்த்தமாக மனதிற்குள் பூஜித்தவாறு இருந்தான்.

ஓமகுண்டத்தில் இருந்த தீ சற்றுத் தணிந்து, மிகச் சன்னமாக எரிந்து கொண்டிருந்தது. அதனால் தீயின் வெளிச்சம் காளி சிலையின் பீடம் வரை மட்டுமே படர்ந்து இருந்ததால் சிலையின் முழுப் பகுதியும் இருளில் மூழ்கிக் கிடந்தது.

அப்பொழுது காளி சிலையின் பின்பக்கம் இருந்து ஓர் உருவம் மெதுவாக எழுந்தது. கரங்களின் இடைவெளி வழியாக எட்டிப் பார்த்தது. அது சொக்கநாதனின் தோழன் வெங்கட கிருஷ்ணன்தான்.

தளவாயும் அவனது தனயனும் கண்களை இறுக மூடிக்கொண்டு கனதவம் பண்ணும் காட்சியைப் பார்த்து திருப்தி அடைந்த வெங்கடகிருஷ்ணன் தனது இடுப்பில் இருந்த ஒரு துணிப் பொட்டலத்தை எடுத்து ஓம குண்டத்தில் எறிந்துவிட்டு மறுபடியும் சிலைக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டான்.

ஓமகுண்டத்தில் விழுந்த துணிப் பொட்டலம் முதலில் கருகி, துணியை எரித்தது. மறுவிநாடி அதற்குள் வைக்கப்பட்டிருந்த பொடி மீது தீ பட்டதும், ஓசையுடன் வெடித்தது. தொடர்ந்து ஓர் ஆள் உயரத்திற்கு தீ எழுந்தது.

வெடிச்சத்தம் கேட்டதுமே கண்களை மூடித் தியானம் செய்து கொண்டிருந்த இருவருமே திடுக்கிட்டுக் கண் விழித்தனர். ஓம குண்டத்தில் ஓர் ஆள் உயரத்திற்கு தீ எழுந்து நிற்பதையும் சுற்றிலும் புகைமூட்டமாக இருப்பதையும் தீயின் வெளிச்சத்திலும், புகை மூட்டத்தில் காளியின் சிலை அமானுஷ்யமாகக் காட்சி அளிப்பதையும் பார்த்து இருவர் மனதிலும் அச்சம் எழ ஆரம்பித்தது.

அதேசமயம் காளி சிலையின் பின்புறம் பதுங்கிக் கிடந்த வெங்கடகிருஷ்ணன் ''ஓ... ஹோ.... ஹாஹ்ஹா ஹ்ஹா... ஆ'' என்று கர்ண கடூரமாகக் கூச்சலிட ஆரம்பித்தான்.

காளிமாதேவிதான் குரல் கொடுக்கிறாள் என்ற எண்ணம் இருவர் மனதிலும் தோன்ற இருவர் உடலும் நடுங்க ஆரம்பித்தது. எழுந்து ஓடிவிடலாமா என்று அச்சுதப்பனுக்கு உதறல் ஏற்பட்டது. தளவாய் தன் மகனின் மன நிலை அறிந்து அவன் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ''ஓம் காளி... நமோ காளி... மகா காளி...'' என்று சப்தமாக உச்சரித்தான்.

வெங்கடகிருஷ்ணன் காளி சிலையின் கரத்தில் வடிக்கப்பட்டிருந்த ராட்சதனின் அறுபட்ட தலைக்குப் பின்புறம் இருந்து கர்ண கடூரமான குரலில் பேசத் தொடங்கினான்.

''அடேய் மானிடப் பதர்களா! என் தாயின் காலில் விழுந்து வணங்குங்கள்.''

சிலையின் கரத்தில் இருந்த தலை பேசுவதைப் பார்த்துப் பிரமித்து இருவரும் தரையில் நெடுஞ்சாண் கிடையாகப் படுத்து வணங்கினர்.

''அருளானந்தரின் சீடர்கள் என்பதற்காக என் தாய் உங்களுக்குக் கருணை காட்டுகிறாள். எழுந்து ஓடுங்கள் வாசலில் வழி கிடைக்கும். ஹாஹ்... ஹ்ஹா... ஹோ...''

கர்ண கடூரமாக வெங்கடகிருஷ்ணன் கூச்சலிட்டவுடன் இருவரும் எழுந்து நின்றனர். அதே சமயம் ஓம குண்டத்தில் எறிந்த பொடி முழுக்க எரிந்து முடிந்துவிட்டதால், தீ திடீரென்று சுத்தமாக அணைந்து புகை மட்டும் எழுந்து கொண்டிருந்தது. சுற்றிலும் இருள்!

''என்ன தந்தையே ஒன்றும் புரியவில்லை. வாசலில் வழி கிடைக்குமா? இதற்கு வாசல்தானே வழி!''

''பேசாமல் வா'' என்றவாறு ரங்கப்பன், அச்சுப்பனின் நடுங்கும் கரத்தைப் பற்றியவாறு இருட்டுக்குள் தட்டுத் தடுமாறியவாறு நடந்து வாசலுக்கு வந்தான்.

வாசலை அவர்கள் எட்டிய அதே நேரத்தில் கோயிலின் முன்பக்கத்தில் இருந்த பிரமாண்டமான ஆலமரத்தின் உச்சியில் யாரோ அலறும் குரல் எழத் தொடங்கியது.

ஆண் மகனின் குரல் என்று மட்டும் தெரிந்ததே ஒழிய அவன் அலறிய மொழி புரியவில்லை. இருவரும் பயத்துடன் ஆலமரத்தின் அருகே வந்து அண்ணாந்து பார்த்தனர்.

மரத்தின் உச்சாணிக் கிளை மீது ஓர் உருவம் தொங்கியவாறு புரியாத பாஷையில் அலறிக் கொண்டிருந்தது.

அச்சுதப்பனுக்கு சர்வநாடியும் உதற ஆரம்பித்தது.

''தந்தையே பேய் ஒன்று மரக்கிளையில் தொங்குகிறதே! வேதாளமாக இருக்குமோ? வாருங்கள் ஓடிவிடலாம்.''

நடுங்கிய அவன் கரத்தைக் கெட்டியாகப் பிடித்து ஓடாதபடி நிறுத்திய தளவாய், ''பயப்படாதே! அந்த

உருவம் என்ன என்பதைப் பார்த்துவிடலாம்'' என்றவாறு கோயில் வாசலில் உள்ள தூண் ஒன்றில் அவர்கள் சொருகி வைத்திருந்த தீப்பந்தத்தை எடுத்து வந்து, மரத்தின் உச்சி தெரியும்படி உயர்த்திப் பிடித்தான்.

உச்சிக்கிளையில் தொங்கிக் கொண்டிருப்பது மனித உருவம் என்று தெரிந்தது. இவர்கள் தீப்பந்தத்தை உயர்த்திப் பிடித்ததும் அந்த உருவம் புரியாத பாஷையில் அவர்களைப் பார்த்துப் பலமாகக் கத்த ஆரம்பித்தது.

''யாரடா நீ? எதற்காக இப்படிக் கத்துகிறாய்?'' தளவாய் அதட்டலாகக் கேட்டான்.

உடனே அந்த உருவம், ''தமிழா? தமிழ்நாட்டில் வந்து விழுந்துவிட்டேனா? ஐயா, தயவு செய்து என்னை இறங்கிவிடுங்கள்'' என்று கத்தியது.

''இவ்வளவு உயரத்தில் ஏறத் தெரிந்த உனக்கு, இறங்கத் தெரியவில்லையா?''

''நானாக ஏறவில்லை ஐயன்மீர்! என் குருவின் சக்தி என்னை இங்கு கொண்டு வந்து போட்டிருக்கிறது. முதலில் இறக்கிவிடுங்கள். விவரமாகச் சொல்கிறேன்.''

தளவாய்க்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் அவர்களது குதிரைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு வந்து சேணத்தில் வைத்திருந்த கயிற்றுச் சுருளை எடுத்து மரக்கிளையில் எறிந்தான்.

சற்று நேரத்தில் அந்த உருவம் கயிற்றின் வழியாக மெதுவாகக் கீழே இறங்கித் தரையில் வந்து நின்றது. அந்த உருவத்திற்க்குக் கால்கள் இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகுதான் அச்சுதப்பனுக்குப் பயம் சற்றுக் குறைந்தது.

தளவாய் அந்த உருவத்தை ஏற இறங்கப் பார்த்தான். வித்தியாசமாக ஆடை அணிந்து இருந்தான். மீசை உதடுகளின் இரு பக்கங்களிலும் நூல்போலத் தொங்கிக் கொண்டிருந்தது. சீன தேசத்தைச் சேர்ந்தவன் போல இருக்கிறான். இவன் எப்படி இங்கே?

''உன்னைப் பார்த்தால் சீன தேசத்தைச் சேர்ந்தவன் போல் தெரிகிறதே?'' என்றான் தளவாய்.

''உண்மைதான் ஐயன்மீர். இன்று இரவு என் வீட்டில் நான் படுக்கும்வரை எனது நாட்டில்தான் இருந்தேன். எனது குருவின் சக்தி என்னை இங்கு வந்து சேர்த்திருக்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த தஞ்சையம்பதி என்பது இதுதானா?''

''இதுதான். நீ சொல்வது எதுவும் விளங்கவில்லை.''

''நேற்று இரவு என் கனவில் என் குருநாதர் காட்சி தந்தார். 'மகனே எனது சீடர்களுக்கு உதவுவதற்காக உன்னைத் தமிழ்நாட்டில் உள்ள தஞ்சைத் தரணிக்கு அனுப்புகிறேன். அவர்களே உன்னைத் தேடி வருவார்கள். அவர்கள் காரியத்தை வெற்றிகரமாக நடத்தித் தருவது உனது கடமை' என்று கட்டளையிட்டுவிட்டு மறைந்துவிட்டார். விழித்துப் பார்த்தால் இங்கே தொங்கிக் கொண்டு இருக்கிறேன். என்னே அவரது சக்தி! நீங்கள்தான் அவரது சீடர்களா?''

''உன்னுடைய குருநாதர் யார்?''

''அருளானந்த ஸ்வாமிகள்.''

இதைக்கேட்டதும் இருவரும் அதிர்ச்சியும், மகிழ்ச்சியும் ஒருசேர அடைந்தனர். இருந்தாலும் தளவாய்க்கு ஓர் ஐயம்.

''சீன தேசத்தவனான நீ ஸ்வாமிகளை எப்படிச் சந்தித்தாய்?''

''ஒருமுறை இமயமலைக்கு நான் சென்றிருந்த பொழுது அவரது ஆஸ்மரத்திற்குச் சென்றிருந்தேன். அவரது அதிசய சக்தியைக் கண்கூடாகப் பார்த்தபிறகு, அவரிடம் மன்றாடி அவரது சீடராகப் பலகாலம் பணிபுரிந்தேன்.
''

''உனது பெயர்?''

''சிங் சாங்.''

தளவாய் சற்று நேரம் யோசித்தபடி நின்றான்.

''தங்களுக்கு என்மீதுள்ள ஐயம் இன்னும் அகலவில்லை என்று நினைக்கிறேன். ஸ்வாமிகள்தான் இதனை நிவர்த்திக்க வேண்டும். அன்னையே! காளிமாதா! அருள் புரிவாய்தாயே!'' என்று கோயிலைப் பார்த்து பலமாகக் கத்தினான்.

இதைக் கேட்ட வெங்கடகிருஷ்ணன் மறுபடியும் ஒரு துணிப் பொட்டலத்தை ஓம குண்டத்தில் எறிந்தான் மறு விநாடி வெடிச் சத்தத்துடன் ஓர் ஆள் உயரத்திற்குத் தீப் பிழம்பு ஏற்பட்டது.

''ஐயப்பட்டால் அழிவு நிச்சயம்'' என்று உள்ளிருந்து கர்ண கடூரமாகக் குரல் ஒலித்தது.

இதைக்கேட்ட மறுவிநாடி தளவாயும், அச்சுதப்பனும் தரையில் விழுந்து வணங்கி எழுந்தனர்.

''தங்களது ஐயம் தெளிந்துவிட்டதா ஐயன்மீர்?''

''தெளிந்துவிட்டது. தெளிந்துவிட்டது. சிங்சாங். நீ எங்களுக்கு எப்படி உதவப் போகிறாய்? ஸ்வாமிகள்

உனக்கு வேறு எதுவும் கட்டளை இட்டாரா?'' என்றான் தளவாய்.

''எதுவும் உரைக்கவில்லை! தாங்கள்தான் சொல்ல வேண்டும். ஸ்வாமிகளின் அடியார்களுக்கு உதவ வேண்டி யது என் கடமை. சொல்லுங்கள். என்னவிதமான உத வியை என்னிடமிருந்து நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? ஆணையிடுங்கள். நிறைவேற்றுகிறேன்.''

''நீ என்ன விதத்தில் எங்களுக்கு உதவப் போகிறாய் என்பதே எனக்குப் புரியவில்லை.''

''உங்களது பிரச்சினை என்ன? அதை முதலில் சொல் லுங்கள். அதன்பிறகு அதனைத் தீர்ப்பதற்கு என்னுடைய பங்கு என்ன என்பதை நான் சொல்கிறேன்.''

தளவாய் சற்று நேரம் யோசித்தான். பிறகு அண் ணாந்து வானத்தைப் பார்த்தான்.

''விடிவதற்கு இன்னும் ஒரு ஜாமம்தான் இருக்கிறது. விடிவதற்குள் நாம் தஞ்சை சென்று விடுவது நல்லது. அதனால் நாம் மெதுவாக நடந்து செல்லலாம். போகும் பொழுது எல்லா விவரமும் சொல்கிறேன்.''

''ஆமாம், ஆமாம் சீக்கிரம் கிளம்புங்கள்'' என்றான் அச்சுதப்பன் சுற்றிலும் பார்த்தவாறு.

அவனுக்கு அந்த இடத்தைவிட்டுச் சீக்கிரம் அகன்று விட வேண்டும் என்று இருந்தது.

புரவிகளை அவிழ்த்து நடத்திக் கூட்டியவாறு மூவரும் தஞ்சாவூரை நோக்கிச் செல்ல ஆரம்பித்தார்கள். வெங்கட் கிருஷ்ணன் அவர்கள் அறியாமல் பின்தொடர்ந்து வந்தான்.

தாங்கள் யார் என்பதையும், தஞ்சை மன்னன் விஜய ராகவ நாயக்கன் எந்த வகையில் உறவு என்பதையும், தனது மைந்தன் அச்சுதப்பன் இளவரசி சந்திரவதனாவை மணந்து, இந்நாட்டின் மன்னனாக மகுடம் சூட்ட வேண்டும் என்ற தனது மாளாத ஆசையினையும் வரும் வழியில் சிங்சாங்கிடம் விவரமாகச் சொல்லி முடித்தான் தளவாய்.

கேட்டு முடித்த சிங்சாங், ''ப்பூ! இவ்வளவுதானா! மன்னன் இளவரசி இருவரது மனங்களையும் மாற்ற வேண்டும் இல்லையா? இது எனக்கு எளிதான செயல்! ஸ்வாமிகள் என்னை எதற்காக இங்கு அனுப்பி இருக்கிறார் என்று இப்பொழுதுதானே எனக்குப் புரிகிறது. வசியம் பண்ணும் கலையில் என்னை மிஞ்சுகிறவர் உலகில் எவரும் இல்லை. மாற்றிக் காட்டுகிறேன் அவர்களது மனங்களை!'' என்று சிரித்தான்.

தளவாய் அவன் முகத்தைத் திடீரென்று உற்றுப் பார்த்தான். யோசித்தான்.

''தாங்கள் மறுபடியும் என்மீது சந்தேகப்படுவது போல் தோன்றுகிறதே!'' என்றான் சிங்சாங்.

''சந்தேகப்படவில்லை குழப்பம்'' என்றான் தளவாய்.

''எதுவாக இருந்தாலும் தீர்த்து வைக்க வேண்டியது எனது கடமை''

அதன்பிறகு எதிர்பாராத சில நிகழ்ச்சிகள் நடக்கத் தொடங்கின.



# 74

தஞ்சை தளவாய் ரங்கப்ப நாயக்கனும், அவனது மைந்தன் அச்சுதப்பனும் சிங்சாங்குடன் சேர்ந்து தஞ்சை நகரின் எல்லையைத் தொட்டபொழுது கிழக்கில் வானம் வெளுத்து விடிவதற்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன.

'வசியம் பண்ணும் கலையில் என்னை விஞ்சுகிறவர் இந்த உலகில் எவரும் இல்லை' என்று சிங்சாங் சொன்னவுடன், தளவாய் அவனை உற்றுப் பார்த்துக் குழம்பியதையும், அதன்பிறகு சிங்சாங் அந்தக் குழப்பத்தைத் தீர்த்து வைப்பதைப் பற்றிப் பேசியதையும் அச்சுதப்பன் பார்த்து, அவனுக்கு ஒன்றும் புரியாமல் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

''வசியம் செய்து மன்னனையும் அவன் மகளையும் மனம் மாறச் செய்வது என்னால் முடியக்கூடிய காரியமா என்று தாங்கள் குழம்புகிறீர்கள் இல்லையா? அதாவது சந்தேகப்படுகிறீர்கள் அப்படித்தானே?'' என்றான் சிங்சாங்.

'ஐயம் கொண்டால் அழிவு நிச்சயம்' என்று காளி கோயிலில் வாக்கு எழுந்தது தளவாயின் நினைவுக்கு வர,

அவன் பயந்து, ''சந்தேகம் கொள்ளவில்லை'' என்று அவசரமாகச் சொன்னான்.

''பயப்படாதீர்கள். என்மேல் உங்களுக்கு முழு நம்பிக்கை ஏற்பட்ட பிறகே, நீங்கள் என் உதவியைப் பெறலாம். வாருங்கள். பொழுது இதோ விடிந்து கொண்டிருக்கிறது. நாம் இப்பொழுது தங்களது இருப்பிடத்திற்குச் செல்ல வேண்டாம். அங்காடிகள் அமைந்திருக்கும் சந்தைப் பகுதிக்குச் செல்லலாம். முதலில் நீங்கள் யார் என்று மக்களுக்குத் தெரியாதபடி தங்களது முகத்தை மறைத்துக் கொள்ளுங்கள்.''

தளவாயும், அச்சுதப்பனும் சிங்சாங் கேட்டுக் கொண்டபடி தங்களது தலைப்பாகையை அவிழ்த்து பாதி முகம் மறைத்தவாறு தலையோடு கட்டிக் கொண்டார்கள். ஏற்கனவே அவர்கள் இருவரும் அர்த்த ஜாமப்பூஜைக்காகச் சாதாரண குடிமக்கள்போல் ஆடைகள் அணிந்து இருந்ததால், அவர்களது இப்போதைய தோற்றம் எவராலும் அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி அமைந்திருந்தது.

பொழுது நன்றாய் புலர்ந்து, நகருக்குள் ஆள் நடமாட்டம் அதிகரித்துக் கலகலப்பு அடையத் தொடங்கியது.

மூவரும் அங்காடிகள் வரிசையாக அமைந்திருந்த சந்தைப் பகுதிக்குள் நுழைந்தனர். அங்கு தென்பட்ட மக்கள் சீன உடையில் இருக்கும் சிங்சாங்கை அதிசயமாக ஏறிட்டுப் பார்த்தார்களே ஒழிய, ஒருவரும் தளவாயையோ அவனது மகனையோ அடையாளம் கண்ட கொண்டதாகத் தெரியவில்லை.

அப்பொழுதுதான் அவர்கள் முற்றிலும் எதிர்பாராத ஒரு சம்பவம் அங்கு நிகழத் தொடங்கியது.

சந்தையின் மையப் பகுதிக்கு அவர்கள் வந்து சேரும் பொழுது அவர்கள் எதிரே சற்றுத் தூரத்தில் முறுக்கேறிய வாலிபன் ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவனது தோற்றமும் அவன் பூண்டிருந்த ஆடை, ஆயுதங்களும் மனதை அச்சுறுத்தும்படியாக அமைந்து இருந்தது.

உருண்டு திரண்ட கட்டுடலாகக் காய்ப்பேறிக் கிடந்தது அவன் தேகம். கன்னங்களின் இரண்டு பக்கங்களிலும் முறுக்கேறி பருத்த எலுமிச்சம் பழங்களின் அளவுக்குத் திரண்டிருந்த மீசையும், கம்பளிப் பூச்சிகளை ஒட்டி வைத்தாற்போல் அடர்த்தியாகக் காணப்பட்ட புருவங்களும் அவன் முகத்தின் பெரும்பகுதியை மறைத்துக் கொண்டிருந்தன.

ஏராளமான தலை முடியைச் சுருட்டித் தனது பிடரிக்கு மேல் யாழ்ப்பாணத்துத் தேங்காய் பருமனுக்குக் கொண்டை போட்டு, அது அவிழ்ந்துவிடாமல் இருக்க, அதற்குள் பளபளப்பான கட்டாரி ஒன்றைச் சொருகி இருந்தான்.

மேலே துணி எதுவும் அணியாத வெற்று மார்பில் ஏராளமான முடிக் கற்றைகளுக்கு மத்தியில் பதப்படுத்தப் பட்ட நரித்தலை ஒன்று தொங்க விடப்பட்டிருந்தது. இரண்டு கைப்புஜங்களிலும் தாயத்துக்கள் கட்டி இருந்தான்.

இடுப்பு வேட்டியைத் தார்ப்பாய்ச்சிக் கட்டி அதன் மேல் பட்டையாகத் தோல்வார் அணிந்து, இரு பக்கங்களிலும் கட்டாரி சொருகி இருந்தான். கால்களில் புதையடிச் செருப்பு அவன் முழங்கால்கள் வரை பின்னல்களாகச் சுற்றி இருந்தது. அதற்குள்ளும் கட்டாரிகள் திணிக்கப் பட்டு இருந்தன.

தளவாயும் மற்றவர்களும் வந்து கொண்டிருந்த இடத்தில் இருந்து சுமார் நூறு அடி தூரத்தில் இருந்த துணிக்கடை ஒன்றின் முன்னால் வந்து நின்றான். அக்கடையில் தொங்கிக் கொண்டிருந்த விலை உயர்ந்த பட்டுத் துணி ஒன்றை எடுத்துத் தரச் சொன்னான்.

கடைக்காரன் எடுத்துத் தர, அதனைத் தனது தோளில் போட்டுக் கொண்டு திரும்பி நடக்க முயன்றான். அதனைக் கண்ணுற்ற கடைக்காரன் பதறிப்போய், ''ஐயா காசு தராமல் செல்கிறீர்களே! அதற்கான விலை பத்து வராகன்கள்'' என்று அலறினான்.

இதைக் கேட்ட அந்த வாலிபன் திரும்பிக் கடையருகே வந்து கடைக்காரனை முறைத்து, ''பத்து வராகன் தானே? இந்தா பெற்றுக் கொள்'' என்று அவன் முகத்தில் சரமாரியாக பத்துக் குத்துக்கள் விட்டு, மறுபடி திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

இதனைப் பார்த்தவுடன் அக்கம்பக்கத்துக் கடைகளில் பணிபுரியும் வாலிபர்களும் இந்த மாதிரி அராஜகம் செய்யும் பேர்வழிகளை உதைப்பதற்கு என்றே கடைக் காரர்கள்ால் அமர்த்தப்பட்ட கூலி ஆட்களும் அந்த வாலிபனைத் தாக்குவதற்கு ஓடோடி வந்தனர். அதேசமயம் சந்தையின் காவற் பணிக்காகத் தஞ்சை அரசால் நியமிக்கப்பட்டிருந்த இரண்டு வீரர்கள் கைகளில் உருவிய வாட்களோடு அவனை நோக்கி ஓடி வர ஆரம்பித்தனர்.

மறுவிநாடி அந்த வாலிபன் மின்னலெனச் செயல்படத் தொடங்கினான். இரண்டு கரங்களும் கண் இமைப்பதற்குள் இடுப்பில் சொருகி இருந்த கட்டாரிகளை உருவி ஓடிவரும் காவல் வீரர்களை நோக்கி எறிந்தன. மறுவிநாடி அந்த இரு வீரர்களும் வயிற்றில் பாய்ந்த கட்டாரியைப் பிடித்தவாறு மண்ணில் சரிந்தனர்.

அதேநேரம் மற்ற வாலிபர்கள் அவனைச் சூழ்ந்து கொள்ள ஒவ்வொருவரையும் பந்தாட ஆரம்பித்தான். அவனது வலிமையையும், திறமையையும் பார்த்த மக்கள் பயத்துடன் விலக ஆரம்பித்தனர். அத்தனை வாலிபர்களையும் சற்று நேரத்தில் தாக்கிச் செயல் இழக்க வைத்த அந்த வாலிபன், தனது இரு கைகளையும் தட்டி, மண்ணை உதறிவிட்டுப் பிறகு எதுவுமே நடக்காதது போல் சர்வசாதாரணமாக அடுத்த கடைக்குச் சென்றான்.

அந்தக் கடைக்காரன் நடுநடுங்கிப்போய் அவன் கேட்டதை எல்லாம் வாரி வாரிக் கொடுத்தான்.

சண்டை ஆரம்பித்ததுமே தூரத்தில் நின்றவாறு பார்த்துக் கொண்டிருந்த தளவாய், அந்த வாலிபன் சண்டையிட்டதைப் பார்த்து பிரமித்துப் போய்விட்டாலும் மறுபக்கம் ஆத்திரம் கொப்பளித்துக் கொண்டிருந்தது அவன் இதயத்தில்.

தன்னருகே இருந்த தனயனைப் பார்த்துக் கோபத்துடன் ''டேய் அச்சுதப்பா, இது என்ன நமது நாடுதானா? இப்படி ஓர் அராஜகம் நடத்துபவனை இனியுமா விட்டு வைப்பது? பிடித்து இழுத்து வாடா அவனை!'' என்று உறுமினான்.

அச்சுதப்பனுக்கு அந்த வாலிபனின் அபார வீரத்தைப் பார்த்து உள்ளுக்குள் உதறல் எடுத்தாலும் தந்தை அருகில் இருக்கிறாரே என்ற தைரியத்தில் மிடுக்காக, நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அந்த வாலிபன் அருகே சென்றான்.

''டேய் முட்டாள், வாடா இங்கே!'' என்று அதட்டலாகக் கூப்பிட்டபடி, தன் இடுப்பில் இரண்டு கைகளையும் ஊன்றிக் கொண்டு மிதப்பாக நின்றான் அச்சுதப்பன்.

அருகில் இருந்த கடையில் தொங்கிய முத்து மாலையினை எடுத்துத் தனது கழுத்தில் போட்டு அழகு பார்த்துக் கொண்டிருந்த அந்த வாலிபன் இதைக் கேட்டுத் திரும்பி, ''யார் என்னையா கூப்பிட்டாய்?'' என்றான் அலட்சியமாக.

''உன்னைத்தானடா முட்டாள்! இந்நாட்டு மக்களைப் பேடிகள் என்று எண்ணிவிட்டாயா? யாரடா நீ?'' என்று கர்வம் மிளிரக் கடுமையாகக் கேட்டான் அச்சுதப்பன்.

மறுவிநாடியே அவனை நோக்கி வந்த அந்த வாலிபன் கண் இமைக்கும் நேரத்தில் அச்சுதப்பன் முகத்தில் பலமாக ஒரு குத்துவிட்டான். இதனால் அச்சுதப்பன் நிலை தடுமாறிக் கீழே விழும் அதே சமயத்தில் அவன் இடுப்பில் இருந்த வாளை மிகவும் லாகவமாக உருவிக் கொண்டான் அந்த வாலிபன்.

இதைப் பார்த்தவுடன் ஆத்திரத்தின் உச்சிக்கே சென்றுவிட்ட தளவாய் தனது வாளை வேகமாக உருவிக் கொண்டு, அந்த வாலிபனை நோக்கிப் பாய முயன்றான். அவனை அவசரமாகத் தடுத்து நிறுத்தினான் சிங்சாங்.

'சற்றுப் பொறுங்கள் தளவாய்! இந்த முரடனை நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்றவாறு சிங்சாங் தளவாயை மறைத்து நின்று கொண்டவாறு அந்த வாலிபனை நோக்கி, ''டேய் என்னிடம் வந்து உன் வீரத்தைக் காட்டுப் பார்க்கலாம்'' என்றான் மிக அலட்சியமாக.

தடுமாறித் தரையில் விழுந்த அச்சுதப்பனைத் தாக்குவதற்காக உருவிய வாளுடன் சென்ற அந்த வாலிபன், இதனைக் கேட்டுத் திரும்பிப் பார்த்து கோபம் கண்களில் பொறிவிட்டுப் பறக்க வாளை ஓங்கியவாறு சீனதேசத்துச் சிங்சாங்கை நோக்கி ஓடிவந்தான்.

சிங்சாங் அதைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படா மல தன் இடுப்பில் ககைகளை ஊன்றிக் கேலியாகப் புன்னகைத்தவாறு "வாடா, வா... என்னைத் தாக்கு பார்க்க லாம்" என்றான்.

இதைக்கேட்டுக் கோபமும் ஆத்திரமும் அடைந்த அந்த வாலிபன் "ஏய்" என்று அந்த இடமே கலகலத்துப் போகும்படியான ஆங்காரக் குரல் ஒன்றை எழுப்பியவாறு கையிலிருந்த வாளைப் பலமாக ஓங்கிச் சிங்சாங்கின் தலைமீது இறக்க முயன்றான்.

அவன் அலறிய அலறலும், வாளை ஓங்கிய வலுவை யும் பார்த்தால் அடுத்த விநாடி சிங்சாங்கின் தலை மண் ணில் உருளப் போகிறது என்று அங்கு கூடியிருந்த அனை வரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் சிங்சாங் அதற்குள் மின்னலெனச் செயல்பட் டுத் தனது இடுப்பில் இருந்து ஏதோ ஒரு பொடியை எடுத்து அந்த வாலிபன் மீது தூவி ஏதோ புரியாத மொழியில் உச்சரித்தான். அடுத்த விநாடி அங்கு நிகழ்ந்த ஆச்சர்யத் தைப் பார்த்து அத்தனை பேரும் வாய் பிளந்து நின்றனர்.

வாளுடன் ஓங்கிய கை ஓங்கியவாறு இருக்க, கால்க ளும் கைகளும் விறைப்பாக அப்படியே நிற்க அந்த வாலிபன் ஒரு சிலையைப்போல சீன தேசத்தவன் முன் நின்றான்.

சிங்சாங் மீண்டும் பொடியை அந்த வாலிபன் மீது தூவி, ஏதோ உச்சரித்து "டேய் வாளைக் கீழே போட்டு விட்டு ஒழுங்காக நில்" என்றான்.

மறுவிநாடியே அந்த வாலிபன் கையில் இருந்த வாள் நழுவித் தரையில் விழ, அவன் கரங்களைக் கீழே போட்டு நேராக நின்றான்.

''வாலிபனே உன் பெயர் என்ன? எந்த நாட்டைச் சேர்ந்தவன் நீ?'' என்றான் சிங்சாங்.

உடனே அந்த வாலிபன் மிக பணிவாகத் தனது கைகளைக் கட்டி வாய் புதைத்தவாறு மரியாதையாகப் பதில் சொன்னான்.

''என் பெயர் மச்சக்காளை சுவாமி! குடகு நாட்டவன்.''

''நீ செய்வது தவறல்லவா! அப்பாவி ஏழை மக்களை அடித்துத் துன்புறுத்தி அவர்கள் பொருட்களைக் கவர்வது பாவமல்லவா?''

''உண்மைதான் சுவாமி! உணர்ந்துகொண்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்'' என்றவாறு அந்த வாலிபன் சிங்சாங்கின் காலைத் தொட்டுக் கும்பிட்டான்.

இதனைப் பார்த்த தளவாய்க்கு மட்டுமின்றி அங்கு கூடி இருந்த பொதுமக்கள் அனைவருக்கும் வியப்பாக இருந்தது.

''இந்த வாளை உரியவரிடம் ஒப்படை.''

வாலிபன் அதற்குக் கட்டுப்பட்டுத் தரையில் கிடந்த வாளை எடுத்து அச்சுதப்பன் கையில் பணிவாகக் கொடுத்தான். அதனை வெடுக் என்று வாங்கிய அச்சுதப்பன் கோபத்துடன் அந்த வாலிபனை அடிக்கக் கை ஓங்கினான்.

அதற்குள் சிங்சாங் குறுக்கே பாய்ந்து தடுத்துவிட்டு கோபத்தோடு அச்சுதப்பனைப் பார்த்துக் கூறினான்.

''திருந்திய ஒருவனைத் தண்டிப்பது அழகல்ல'' என்று சொல்லிவிட்டு வாலிபனை பார்த்து ''மச்சக்காளை நீ பறித்த பொருட்களை மறுபடியும் அதே அங்காடிகளில்

கொடுத்துவிட்டு அவர்களிடம் வன்முறையாக நடந்து கொண்டதற்கு மன்னிப்புக் கேள்'' என்றான்.

மச்சக்காளை அதற்குக் கட்டுப்பட்டு தான் கைப்பற்றிய அத்தனை பொருட்களையும் உரியவர்களிடம் கொடுத்துவிட்டு ஒவ்வொருவரிடமும் மன்னிப்புக் கேட்டான். திரும்ப வந்து சீன தேசத்தவன் அருகே கும்பிட்டவாறு நின்றான்.

''நீ இவர்களிடம் முறைகேடாக நடந்து கொண்டதற்குத் தண்டனையாக, நீ திருடிய கடைக்காரர் ஒவ்வொருவருக்கும் ஒரு பொற்காசு கொடு.''

மச்சக்காளை கொஞ்சம்கூட வாயைத் திறக்காமல் அவனது வார்த்தைக்குக் கட்டுப்பட்டுத் திரும்பவும் ஓடி ஒவ்வொரு கடைக்காரருக்கும், தன் இடுப்பில் இருந்த தோல்பட்டைக்குள் வைத்திருந்த பொற்காசுகளை எடுத்து ஒவ்வொன்றாகக் கொடுத்தான். இந்தக் காட்சியைப் பார்த்து அத்தனை பேரும் வியந்து நின்றனர்.

''தாங்கள் சொன்னபடி செய்துவிட்டேன். இந்த நாயை மன்னிக்க வேண்டும் ஸ்வாமி'' என்று மச்சக்களை சீன தேசத்தவன் கால்களைத் தொட்டுப் பணிந்தான்.

''இனி நீ இந்த இடத்தில் அல்ல. இந்த ஊரில் அல்ல. இந்த நாட்டில்கூட இருக்கக்கூடாது. ஓடிப்போ. மறுபடியும் உன்னை இங்கு பார்த்தால் உன் உயிர் உடலில் தங்காது. உம்'' என்று அதட்டினான்.

மறுவிநாடியே மச்சக்காளை தலைதெறிக்க அந்த இடத்தைவிட்டுத் தாறுமாறான வேகத்தில் ஓடத் தொடங்கினான். உடனே சந்தையில் கூடி இருந்த மக்கள் ஆர்வமுடன் சிங்சாங்கைச் சூழ்ந்துகொள்ள ஆரம்பித்தார்கள்.

சந்தையைத் தாண்டி ஓடிய மச்சக்களை தஞ்சை எல்லையைத் தாண்டி வேகம் குறைத்தான். ஆள் அரவம் அற்ற இடத்தருகே வந்ததும் தன் வேஷத்தைக் களைய ஆரம்பித்தான் மச்சக்காளை வேடத்தில் இருந்த வெங்கடகிருஷ்ணன்.

சிங்சாங்கைச் சூழ்ந்திருந்த மக்களை விலக்கிக் கொண்டு தளவாயும், அச்சுதப்பனும் அவனருகில் வந்தனர். சிங்சாங் உடனே தளவாயின் காதுகளில் ரகசியமாகச் சொன்னான்.

''ஐயன்மீர் இனி நாம் இந்த இடத்தைவிட்டு சீக்கிரம் அகன்றுவிட வேண்டும். தாங்கள் யார் என்பதை இவர்களுக்குப் புரிய வையுங்கள்.''

மறுவிநாடி தளவாய் தனது தலைப்பாகையை அகற்றிய வாறு, சூழ்ந்திருந்த மக்கள் கூட்டத்தினைப் பார்த்து, ''தனி ஒருவனைத் தாக்குவதற்குத் திறமில்லாத கோழைகளே! விலகுங்களடா'' என்று கத்த கூட்டத்தினர் தளவாயை அடையாளம் புரிந்து பயத்துடன் கலைந்து ஓட ஆரம்பித்தனர்.

பின்னர் சீன தேசத்தவனை அழைத்துக் கொண்டு தனது மாளிகைக்கு வந்து சேர்ந்தான் தளவாய்.

''ஐயன்மீர், இப்பொழுது என் திறமையைப் பற்றிய சந்தேகம் இன்னமும் தங்களுக்கு இருக்கிறதா?'' என்று கேட்டான் சிங்சாங்.

''அடியோடு அகன்றுவிட்டது. அருளானந்த ஸ்வாமிகளின் அருள்வாக்கு அளப்பரும் சக்தி படைத்ததல்லவா!'' என்றான் தளவாய்.

''என் குருநாதர் எனக்கு இட்ட கட்டளைப்படித் தங்களது விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியது என் கடமை! இளவரசியின் மனம் தங்கள் மைந்தன் மீது மையலுற, அந்தப்புரத்திற்கு மிக அருகில் இருக்கும் வீடு ஒன்றில் நான் மட்டும் தனியாகத் தங்குவதற்குரிய ஏற்பாடு களைத் தாங்கள் செய்து தரவேண்டும். இளவரசியாரின் அறை தெரியும்படியான திசையில் இருந்து நான் பூஜை செய்யச் செய்ய அவரது மனம் கொஞ்சம் கொஞ்சமாக அச்சதப்பனை நோக்கி ஓடிவரும். அதேசமயம் மன்னவ னின் மனம் மாறுவதற்குச் சில நாட்கள் நான் மன்னவன் அருகிலேயே இருக்கும்படி தாங்கள் ஏற்பாடு செய்து தந்தால் நல்லது.''

''அந்தப்புரத்து மதிற்சுவரை ஒட்டி அரண்மனை வளா கத்திலேயே உனக்கு ஒரு வீடு எடுத்துத் தருகிறேன். ஆனால் மன்னருடன் சில நாட்கள் கூடவே இருப்பதற்கு என்ன செய்வது?'' என்று யோசித்தான்.

''அதற்கு நானே வழி சொல்கிறேன்'' என்று சிங்சாங் அவன் காதுகளில் கிசுகிசுக்கத் தளவாயின் முகம் மலர ஆரம்பித்தது.



# 75

தர்பார் மண்டபத்தின் மத்தியில் அமைந்திருந்த தங்க ஆசனத்தின் மீது தனக்கே உரிய கம்பீரத்துடன் மன்னன் விஜயராகவ நாயக்கன், தனக்கு எதிரில் தலை பணிந்து நிற்கும் சீன நாட்டவன் சிங்சாங் வேடத்தில் இருக்கும் சொக்கநாதனையும், அவனருகில் நிற்கும் தளவாய் ரங்கப்ப நாயக்கனையும் மாறி மாறிப் பார்த்தான்.

''ரங்கப்பா இவனைப் பார்த்தால் சீன தேசத்தவன் போல் தோன்றுகிறதே! தமிழ் தங்கு தடையின்றிப் பேசுகிறான். தெலுங்கும் தெரிந்திருக்கிறதே!'' என்றான் வியப்புடன் விஜயராகவ நாயக்கன்.

''இதில் வியப்பு எதுவும் இல்லை மன்னவா! நான் பிறந்தது சீனத்தேசம். சிங்சாங் என்து பெயர். இளம் வயதில் இருந்தே இவ்வுலகில் இருக்கும் அத்தனை நாடுகளையும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆவலால் பதின்கு வயதில் எனது நாட்டைவிட்டு வெளியேறினேன். பிற தேசத்திற்குள் நுழைவதற்கு முன் அந்நாட்டில் பேசும் மொழியினைக் கற்று அறிந்த பின்னரே செல்வது என் வழக்கம். எனக்குப் பல பாஷைகள் தெரியும். அரபி, உருது, இந்துஸ்தானி, தமிழ், தெலுங்கு மட்டுமின்றி

சமீபத்தில் இந்நாட்டில் வந்திருக்கும் போர்த்துக்கீசியரின் மொழிகூட கற்றிருக்கிறேன்'' என்றான் சிங்சாங் பணிவாக.

''மெச்சத்தகுந்த செயல்.''

''கங்காபுரி மன்னன் விஜயவர்த்தனனிடம் சில ஆண்டுகள் பணிபுரிந்தேன். அப்பொழுதே தஞ்சை மண்ணின் பெருமையைப் பற்றியும், அதனை ஆளும் தங்களின் பெருமை பற்றியும் கேள்விப்பட்டு இந்தப் புண்ணிய பூமியைத் தரிசிக்கும் ஆவலுடன் இங்கு வந்துள்ளேன்.''

''இவன் என்று வந்தான் ரங்கப்பா?''

''இன்று காலையில்தான் என் மாளிகையைத் தேடி வந்தான். தங்களை தரிசிக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தான். அதனால் கூட்டிக் கொண்டு வந்தேன்.''

''நல்லது சிங்சாங்! உன் விருப்பப்படி எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் இங்கு தங்கிக் கொள். அனுமதி அளிக்கிறேன். நீ வெளிநாட்டினன் என்பதால் உனக்குச் சிறப்பு சலுகையாக வரிகள் எதுவும் செலுத்தத் தேவையில்லை.''

''நன்றி மன்னவா! நான் தங்களிடம் சேவை புரியும் ஆர்வத்தில் தான் இங்கு வந்திருக்கிறேன். நான் செய்யும் பணி தங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கம் ஒன்றே இந்த அடிமையின் குறிக்கோள்.''

''என்ன ரங்கப்பா, இவனிடம் நமது அரண்மனையில் எந்தவிதமான பணியை ஒப்படைப்பது? ஏதேனும் வாய்ப்புள்ளதா?''

''இவன் வேறு எதற்கும் லாயக்கில்லை மன்னவா! ஆனால் ஒரே ஒரு கலையில் வல்லவன் என்று சொல்கிறான்.''

''என்ன கலை?''

''எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி விடுவதில் வல்லவனாம்.''

''இதிலென்ன பெரிய கலை இருக்கிறது?'' என்று அலட்சியமாகக் கேட்டான் மன்னன்.

''அப்படிச் சொல்லாதீர்கள் மன்னவா! எங்கள் நாட்டில் எண்ணெய்த் தேய்த்து விடுவதைக் கற்றுக் கொள்ளவே பள்ளிகள் இருக்கின்றன. அதனைப் பூரணமாகக் கற்றுக் கொள்வதற்கு மூன்று ஆண்டுகள் பிடிக்கும். அதில் திறமை மிளரச் செய்ய இன்னும் பல ஆண்டுகள் அனுபவம் தேவைப்படும்.''

''அதில் அப்படி என்ன அதிசயம் இருக்கிறது?'' என்று கேலியாகச் சிரித்தான் மன்னன்.

''உடம்பில் எண்ணெய் தேய்த்து விடும்பொழுது ஒவ்வொரு அங்கத்திலும் ஒவ்வொரு மாதிரியாக சுழற்றித் தேய்க்க வேண்டும். உடம்பில் ஓடும் நரம்புகள் ஒவ்வொன்றும் புத்துணர்ச்சி பெற வேண்டும். தசைகளுக்கு இதமாகும் பொருட்டுக் கவனமாக உருவி விடவேண்டும். பிறகு கைகளால் சுகமாக ஒவ்வொரு நரம்பையும் தட்டிக் கொடுக்க வேண்டும். அப்படிக் குளிப்பவர் பெறும் ஆனந்தத்திற்கு இணை எதுவும் இல்லை. நான் சொல்லுவதை விட அதனை அனுபவித்துப் பார்த்தால்தான் தெரியும் மன்னவா.''

''அப்படியா! அதனையும் பார்த்துவிடலாம்! ரங்கப்பா இவனை எனது அந்தப்புரக் குளியலறை பொறுப்பாளனிடம் சேர்த்துவிடு. நாளைக் காலை இவன் கையாலேயே எண்ணெய் தேய்த்துக் குளித்துப் பார்க்கிறேன்.''

''காலையில் குளிப்பதைவிட மாலையில் குளித்து விட்டு அளவாகச் சாப்பிட்டுவிட்டு, உடலுக்கும் உள்ளத்திற்கும் ஓய்வுக் கொடுத்துவிட்டு உறங்கினீர்களேயானால், மறுநாள் காலையில் இருபது வயது வாலிபனுக்குரிய புத்துணர்ச்சியைப் பெறுவீர்கள் மன்னவா!''

''சரி. அப்படியே செய்து பார்க்கலாம். ரங்கப்பா, இவன் தங்குவதற்குரிய வசதிகளைச் கொண்ட நல்ல வீடாக நீயே ஏற்பாடு செய்து கொடு.''

''உத்தரவு மன்னவா! நமது அரண்மனைக்குள் அந்தப் புரத்தினை ஒட்டி இருக்கும் வீடு ஒன்றை ஒதுக்கித் தர எண்ணியுள்ளேன். அதில் இவன் தங்கினால் தங்களது குளியலறைக்குச் சென்று வரச் சவுகரியமாக இருக்கும். தங்களது அனுமதி வேண்டும்.''

''சரி. அப்படியே செய். முதலில் இவனைக் கூட்டிக் கொண்டு போய் தங்கச் செய். சிங்சாங், நீ நெடுந்தொலைவில் இருந்து வந்திருப்பதால் இன்று நீ ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். நாளை மாலையில் உனது பணி நடக்கட்டும்.''

சிங்சாங் மரியாதையுடன் மன்னவனை வணங்கினான். பின்னர் தளவாய் அவனை அந்தப்புரத்தினை ஒட்டி அமைந்துள்ள பெரிய வீடு ஒன்றிற்குள் கூட்டிச் சென்றான்.

''இதுதான் அந்த வீடு. உன்னுடைய வசதிக்கு ஏற்ற முறையில் இருக்கிறதா என்று பார்'' என்று கேட்டான் தளவாய்.

''என் வசதியைவிட தங்களது மனோரதம் நிறைவேறுவதற்குரிய வசதிகளைப் பார்ப்பதே என் கடமை ஐயா. இங்கிருந்து பார்த்தால் அந்தப்புரத்து உப்பரிகை நன்றாகத் தெரிகிறது. இதில் இளவரசி சந்திரவதனா தேவியார் எந்த

இடத்தில் தங்கி இருக்கிறார் என்று தாங்கள் சரியாகச் சொன்னால் நல்லது.''

தளவாய் அவனை ஒரு சாளரத்தின் அருகே கூட்டிச் சென்றான்.

''அதோ பார் ஆறாவது மாடி. அதில் வலதுபுறத்தில் இருந்து மூன்றாவது சாளரம். அதில்தான் இளவரசி இருக் கிறாள்.''

உடனே சிங்சாங் தனது இடுப்பில் இருந்த ஏதோ ஒரு மூலிகையை எடுத்து அந்தச் சாளரத்தை நோக்கி உயர்த்திப் பிடித்து கண்களை மூடி ஏதோ ஒரு மந்திரத்தை உச்சாடனம் செய்வதுபோல் உதடுகளை அசைத்தான். பிறகு கண்க ளைத் திறந்து அந்த மூலிகையினை முகர்ந்து பார்த்தான். மறுகணம் முகம் மலர்ந்தான்.

''வெற்றி! தளவாய் அவர்களே, வெற்றி நிச்சயம் கிட்டும். இந்த மூலிகையின் மணம் மாறிவிட்டது. இதே போல் இளவரசியின் மனம் மாறுவது நிச்சயம். இந்தச் சாளரத்தின் நேர்பார்வை இளவரசி இருப்பிடத்திலுள்ள சாளரத்தின் பார்வையோடு மோதுகிறது. நமக்கு வெற்றி நிச்சயம்.''

இதைக்கேட்டு, வாய் எல்லாம் பல்லாய்ச் சிரித்த தளவாய் ''அப்படியா! எத்தனை நாட்களுக்குள் மாறும்?'' என்று கேட்டான்.

''இன்று இரவே எனது பூஜையைத் துவக்க எண்ணி யுள்ளேன். சரியாக ஒரு மண்டலம் பூர்த்தியாகும்பொழுது உங்களது எண்ணமும் பூர்த்தியாகும். அதேபோன்று நாளை மாலை முதல் உங்கள் மன்னனுக்கு நான் செய்துவிடும் எண்ணெய் குளியல் அவன் மனதையும் கொஞ்சம் கொஞ்ச மாக மாற்ற ஆரம்பித்துவிடும். ஒரு மண்டலம் முடியும்

பொழுது இருவரது மனங்களும் உங்கள் எண்ணப்படி முற்றிலுமாக மாறி இருக்கும்.''

''நல்லது சிங்சாங். இந்த வீட்டில் உனக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுக்கச் சொல்லி இருக்கிறேன். வேறு எதுவும் வேண்டும் என்றாலும் என்னிடம் தயங்காமல் கேள்.''

''முக்கியமான ஒரு வேண்டுகோளைச் சொல்ல மறந்து விட்டேன்.''

''என்ன வேண்டும்?''

''இன்றுமுதல் என் பூஜை முடியும்வரை தங்களது மைந்தன் அச்சுதப்பன் ஒவ்வோர் இரவிலும் யாருக்கும் தெரியாமல் இங்கு வந்து இருக்க வேண்டும்.''

''அவன் எதற்கு?'' புரியாமல் கேட்டான் தளவாய்.

''தங்களின் மகன் முன்னிலையில்தான் பூஜை நடக்க வேண்டும். பூஜையின் பலத்தால் இளவரசியின் மனம் அணு அணுவாக மாறி கண்ணுக்குத் தெரியாத அலைகளாக உருமாறி, இந்த வீட்டின் சாளரத்தின் வழியாக வந்து சேரும். அப்பொழுது அச்சுதப்பன் இங்கு இருந்தால்தான் அவனது மனதோடு அவை ஐக்கியமாகும்.''

''கண்டிப்பாக அவனை அனுப்பி வைக்கிறேன் ஜாக்கிரதை. வரட்டுமா?''

மறுநாள் மதியம் தாண்டி மாலைப் பொழுது அரும்பும் நேரத்தில் தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் தனது அந்தப்புரத்தினுள் இருக்கும் குளியலறைக்கு வந்து சேர்ந்தான்.

சிங்சாங் அவன் வரவிற்காகக் காத்திருந்தான் அங்கே. மன்னன் தன்னுடைய ஆடைகளை முற்றிலும் களைந்து

விட்டு, ஒரு சிறிய உள்ளாடையை மட்டும் இடுப்பில் தரித்துக் கொண்டு அங்கிருந்த முக்காலி ஒன்றில் வந்து உட்கார்ந்தான்.

அன்று காலையில் செக்கில் இருந்து ஆட்டிப் பிழியப் பட்ட, எண்ணெய், எள்ளும், வெல்லமும் கலந்த இனிய வாசனையுடன் இருந்தது. அதனுடன் இஞ்சி, வெள்ளைப் பூண்டு மற்றும் சில மூலிகைகள் கலந்து காய்ச்சிப் பதமாக எடுத்து ஆற வைக்கப்பட்ட அந்த எண்ணெயை சிங்சாங் மன்னவன் உடலில் மெதுவாகத் தடவ ஆரம்பித்தான்.

பிறகு கொஞ்சம் கொஞ்சமாக உருவிவிட ஆரம்பித் தான். தசைப் பெருக்கான இடத்தில் தட்டிக் கொடுத்தான். சுழற்றிச் சுழற்றித் தடவினான். மன்னவனின் கண்கள் சுகானுபவத்தில் சொக்க ஆரம்பித்தன.

மன்னவனை மரக்கட்டில் ஒன்றில் படுக்க வைத்து அவன் கழுத்து முதல் கால்கள் வரை இரு கைகளாலும் வெட்டுவதுபோல் பதமாகத் தட்ட ஆரம்பித்தான். மன்ன வன் ஆனந்தம் கொள்ளத் தொடங்கினான்.

பின்னர் மன்னனை மறுபடியும் உட்கார்த்தி வைத்து தலைமுடியில் குளிரக் குளிர எண்ணெய் தடவி, விரல்க ளைக் குவித்துக் கொண்டு தலையின் நாலாபறமும் குத்தி னான். மன்னவன் கிறங்கிப் போனான். கண்கள் சொக்கி இன்ப லாகிரியை அடைந்தது.

மூலிகை கலந்து சூடாக்கப்பட்ட வென்னீரை இத மான சூட்டில் எடுத்து வந்து மன்னவனைக் குளிப்பாட்டி னான். உடலில் இருந்த எண்ணெய் நீங்க பல்வேறு வாசனைப் பொருட்கள் கலந்த சிகைக்காய்த் தூளை அவன் தேய்த்துவிட்ட விதமே அலாதியாக இருந்தது.

இதற்குள் சமையலறையில் கருப்பஞ்சாறு, சுக்கு, கொத்துமல்லி கலந்த பானகம் ஒன்றினைச் சூடுபடுத்தச்

சொல்லி இருந்தான். மன்னன் குளித்து முடித்ததும், அகில், தேவதாரு, சாம்பிராணி, இவற்றின் புகைகாட்டி, அதன் பிறகு அந்தப் பானத்தை அருந்தச் சொன்னான்.

மன்னவனுக்கு விண்ணில் பறப்பதுபோன்ற உணர்வு ஏற்பட்டது.

''சிங்சாங் இப்படி ஒரு குளியல் அனுபவத்தை என் வாழ்நாளில் நான் அனுபவித்ததில்லை. இது உண்மையி லேயே சிறந்த கலைதான்'' என்று பாராட்டினான்.

''மன்னவா, தாங்கள் இன்று அளவோடு உணவருந்தி விட்டு மகளிர் முகத்தை பாராது சயன அறைக்குச் செல் லுங்கள். அங்கு தங்கள் கால்களைப் பதமாகப் பிடித்துவிட ஒரு வேலையாளை ஏவுங்கள். உடனே தூக்கம் உங்களைச் சூழ்ந்து, இன்னும் அதிக சுகத்தை உணர்வீர்கள். நாளைக் காலையில் இதுவரை அறிந்திராத புத்துணர்ச்சியை அடை வீர்கள்.''

''உனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் எனது சயன அறைக்குள் வந்து என்னை உறங்கச் செய்யும் வேலையும் ஏற்றுக் கொள்ளேன்.''

''ஆஹா, அது எப்பேர்ப்பட்ட பாக்கியம்! என் கலை யின் முழுமை அதில்தானே அடங்கியுள்ளது.''

சற்று நேரத்தில் சிங்சாங் சொன்னபடி மன்னவன் உணவு அருந்திவிட்டுச் சயன அறைக்கு வர தயாராகக் காத்திருந்த சிங்சாங் அவனது கால்களை அழுத்திவிடத் தொடங்கினான். உடனே தூக்கம் மன்னனை ஆட்கொண் டது.

அவனை முழுமையாக ஒரு தடவை பார்த்த பிறகு அந்த இடத்தைவிட்டு அகலத் தொடங்கினான் சிங்சாங் வேடத்தில் இருந்த சொக்கநாதன்.

மறுநாள் காலையில் மன்னவனின் அழைப்பின் பேரில் சிங்சாங்கும், தளவாயும் தர்பார் மண்டபத்தில் நின்று கொண்டிருந்தனர்.

''சிங்சாங், நீ ஒரு மாபெரும் கலைஞன் என்பதை நிரூபித்துவிட்டாய். இன்று எனக்கு மிகவும் புத்துணர்ச்சியாக இருக்கிறது. நீ சொன்னபடி இருபது வயது வாலிபனைப் போல் முறுக்கேறி இருக்கிறது என் தேகம். இதற்காக உனக்கு என்ன சன்மானம் வேண்டுமானாலும் அளிக்கலாம்.''

''எனக்கு எதுவும் வேண்டாம் மன்னா! தங்கள் அன்பு ஒன்றே போதும்'' என்றான் சிங்சாங் பணிவுடன்.

''பார்த்தாயா ரங்கப்பா! அந்நிய நாட்டில் இருந்து வந்தாலும் 'இவனுக்கு எவ்வளவு பணிவு இருக்கிறது என்று! இப்படிப்பட்ட ஒரு சிறந்த கலைஞனைக் கூட்டிக் கொண்டு வந்ததற்காக எனது இனிய மைத்துனர் ரங்கப்ப நாயக்கனுக்கு இந்த ராஜ்ஜியத்தையே தந்துவிடலாம் போலிருக்கிறது'' என்று கேலியாகச் சொல்லிச் சிரித்தான் மன்னன்.

இருந்தாலும் அந்த வார்த்தை தளவாயை அதிர வைத்து விட்டது. அருளானந்த ஸ்வாமிகளின் சீடன் என்பது சரியாகத்தான் இருக்கிறது. ஒரே நாளில் மன்னவனின் மனதை இந்த அளவுக்கு அசைத்துவிட்டானே!

''ரங்கப்பா இவன் என்ன கேட்டாலும் கொடு. சிங்சாங் வாரம் இருமுறை எனக்கு நீ எண்ணெய்க் குளியல் செய்து வை, போதும்.''

தளவாயும், சிங்சாங்கும் மன்னவனிடம் விடை பெற்று வெளியே வந்தார்கள்.

''சிங்சாங் என்னை மிகவும் வியக்க வைத்துவிட்டாய். மன்னவன் மனம் இந்த அளவுக்கு மாறும் என்று நான் எதிர்பார்க்கவில்லை'' எனறான் தளவாய்.

''இதேபோன்று இளவரசியின் மனமும் மாறுவதை நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள்!''

''என் மைந்தன் இரவு தவறாமல் உன் வீட்டிற்கு வந்து பூஜையில் கலந்து கொள்கிறானா?''

''ஆம் ஐயா! இன்று மூன்றாவது நாள். இன்று தங்கள் மகன் மாபெரும் மாற்றத்தை உணரப் போகிறார்.''

அன்று இரவு ஊர் அடங்கியபிறகு அச்சுதப்பன் வழக்கம்போல சிங்சாங் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அங்கு இளவரசியின் சாளரம் தெரியும் அறையில் பூஜைப் பொருட்கள் பரப்பி வைத்திருக்க, அச்சுதப்பனைக் கண் களை மூடி உட்காரச் சொன்னான் சிங்சாங்.

மறுவிநாடி வாழைப்பழம் ஒன்றில் அச்சுதப்பனுக்குத் தெரியாமல் ஒரு களிம்பு போன்ற பொருளை நுழைத்தான். பிறகு ஏதோ ஒரு மந்திரத்தைப் பலமாக உச்சரித்துவிட்டு அச்சுதப்பனை அழைத்தான்.

''அச்சுதப்பரே, கண்களைத் திறவுங்கள். இதோ என் பூஜையின் பலத்தாலும், அருளானந்த ஸ்வாமிகளின் கிரு பையாலும், இளவரசியின் மனம் அசைந்து இந்த வாழைப் பழத்தில் வந்து இறங்கி இரண்டறக் கலந்து இருக்கிறது. இதனைத் தாங்கள் உண்டீர்களேயானால், உங்கள் இருவர் மனமும் இரண்டறக் கலந்து இன்ப ஒளி வீசும்.''

''ஆஹா கொடுங்கள்'' என்று ஆர்வத்தோடு அச்சுதப்பன் அந்தப் பழத்தை வாங்கிப் புசித்தான்.

''சற்று நேரம் கண்களை மூடித் தவம் புரியுங்கள். இளவரசியே உங்களோடு வந்து பேசுவதை நீங்கள் காண்பீர்கள்.''

அச்சுதப்பன் கண்களை மூடியபடி அசையாமல் உட்கார்ந்து இருந்தான். பிறகு அவன் தலை லேசாக ஆட ஆரம்பித்தது. சிங்சாங் அவன் உடலை அணைத்தவாறு எழுப்பி அருகில் இருந்த கட்டிலில் படுக்க வைத்தான்.

''சந்திரவதனா, என் கண்ணே... ஏன் அங்கேயே நிற்கிறாய்? என்னருகில் வா'' என்று ஏதேதோ பிதற்ற ஆரம்பித்தான் அச்சுதப்பன்.

அப்பொழுது ஓர் உருவம் இருட்டில் இருந்து மறைந்தவாறு அந்த இடத்தை நெருங்கத் தொடங்கியது.



# 76

சீன தேசத்தவனான சிங்சாங் வேடமிட்டிருந்த சொக்கநாதன் தன்னை மறந்து பிதற்றிக் கொண்டிருந்த அச்சுதப்பனைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கூட்டிக் கொண்டு பக்கத்தில் இருந்த மரக்கட்டில் அருகே வந்தான்.

அச்சுதப்பனோ சிங்சாங்கைக் கட்டிப்பிடித்து ''என்ன சந்திரவதனா... மாமாவுக்கு ஒரு முத்தம் குடு... என்மேல் உனக்கு இவ்வளவு ஆசை இருக்கிறதா...'' என்றெல்லாம் உளறியவாறு கால்கள் தள்ளாடி, சிங்சாங்கின் இழுத்த இழுப்பிற்கெல்லாம் வந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது அதே வீட்டில் மற்றோர் இருட்டு அறையில் ஒளிந்து கொண்டிருந்த உருவம் ஒன்று மறைந்து மறைந்து வந்து இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று எட்டிப் பார்த்தது.

சிங்சாங் அச்சுதப்பனை மரக்கட்டிலில் படுக்க வைத்து விட்டுத் தன் கைகளை விலக்க முயல, அச்சுதப்பன் அவன் கைகளை விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

''சந்திரவதனா ஏன் இந்த அவசரம்...? என்னைவிட்டு நீ போகவேக் கூடாது.... கூடாதென்றால் கூடாது... நான்

தான் மன்னன்... நீ மகாராணி... ராஜா விளையாட்டு விளையாடலாமா...''

பாதிக் கண்களை மூடியவாறு சிங்சாங்கின் கரத்தைக் கெட்டியாகப் பிடித்தபடி பல்லைக் காட்டிப் பிதற்றிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அந்த அறையில் மறைந்திருந்து எட்டிப் பார்த்த உருவம் வேகமாக உள்ளே நுழைந்தது. அதுவேறு யாருமல்ல சொக்கநாதனின் நண்பன் வெங்கடகிருஷ்ணன் தான்.

உள்ளே நுழைந்த வெங்கடகிருஷ்ணன் கட்டிலில் கிடக்கும் அச்சுதப்பன் பார்வையில் படாதவாறு இருளில் நின்றுகொண்டு ''சிங்சாங் நான் உள்ளே வரலாமா?'' என்று கிசுகிசுத்தான்.

''தாராளமாக வா முருகா. இவனைப் பற்றிக் கவலைப் படாதே. இவன் இப்பொழுது இருக்கும் உலகமே வேறு'' என்றவாறு சிரித்தான் சிங்சாங்.

அச்சுதப்பனோ வெங்கடகிருஷ்ணன் உள்ளே நுழைந் ததுகூட அவன் கண்களிலே படாமல் இருப்பதுபோல் சிங்சாங்கின் கரத்தைப் பிடித்தபடி சம்மந்தமில்லாமல் உளறிக் கொண்டிருந்தான்.

''இவன் ஏன் இப்படி உளறுகிறான்?'' என்றான் கிருஷ்ணன்.

''இவன் உளறவில்லை முருகா. இவன் உள்ளே சென்றிருக்கும் சரக்கு இவனை இப்படி உளற வைக்கிறது.''

''அப்படி என்ன சரக்கு?''

''வேறு ஒன்றுமில்லை. வாழைப்பழத்தில் அபினைச் சேர்த்துச் சாப்பிடச் சொன்னேன். அபின் அபாரமாக வேலை செய்கிறது.''

''அபினா? அது என்ன வஸ்து?''

''வடநாட்டில் இப்பொழுது அதிகமாகப் புழங்கி வரும் ஒரு போதைப் பொருள் முருகா! கசகசாச் செடியில் இருந்து தயாரிப்பதாகச் சொல்கிறார்கள். லேகியம் மாதிரி இருக்கும். சிறு மிளகுப் பருமனில் உள்ளே உட்கொண் டால் போதும். தன்னை மறந்த போதையில் தடுமாறுவார் கள். அளவு சற்று அதிகமாக இருந்துவிட்டால் அவர்களுக் குப் பிரமையில் விருப்பமான காட்சிகள் தோன்றும். பிரமை என்ற உணர்வே இருக்காது. அதனால்தான் அபி னுக்கு * 'பிரமையளிக்கும் பிரம்மன்' என்று ஒரு பட்டப் பெயரே வடநாட்டில் உலவுவதுண்டு.''

''இது எத்தனை நாட்கள் இருக்கும்?''

''காலையில் சரியாகிவிடும். இருந்தாலும் தான் பார்த் தது கனவா, நினைவா என்ற குழப்பம் மட்டும் இருக்கும்.''

சிங்சாங் அச்சுதப்பனைப் பார்த்து ''மாமா விளையாடி யது போதும். நீங்கள் தூங்குங்கள்'' என்றான்.

''சரி... நீ சொன்னால் சரி...'' அச்சுதப்பன் சிங்சாங் கின் கரத்தை விடுவித்துவிட்டு, மரக்கட்டிலில் காலை மடக்கி, இரு தொடைகளுக்குள்ளும் கரங்களைச் செலுத் திய வாறு கண்களை மூடினான். அளவுக்கு மீறிய போதை யில் அவனைத் தூக்கம் ஆட்கொண்டது.

சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும், பக்கத்து அறைக்கு வந்து ரகசியமான குரலில் பேச ஆரம்பித்தார்கள்.

''சிங்சாங், நீ போன காரியம் என்ன ஆயிற்று?''

''அதிலும் வெற்றிதான் முருகா. மன்னன் எண்ணெய்க் குளியலில் மயங்கிப் போய்விட்டான். என்மீது அவனுக்கு அபார நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.''

''என்ன இருந்தாலும் நீ செய்தது எனக்குப் பிடிக்க வில்லை. நமது எதிரிக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவது நீ செய்யக் கூடியச் செயலா?''

''இதில் தவறு ஏதும் இல்லை முருகா! நமக்கு வேண்டியது வெற்றி! அதை அடைய நல்ல வழி எதுவாக இருந்தாலும் தப்பில்லை. இதில் வீண் பெருமை பார்த்தால் காரியம் ஜெயமாகாது.''

''சரி அப்புறம்?''

''மன்னன் வாரத்திற்கு இருமுறைதான் எண்ணெய்க் குளியல் செய்யப் போவதாகச் சொல்லிவிட்டான். அதன் படி பார்த்தால் இன்னும் இரண்டு நாட்கள் இருக்கின்றன. அந்த நாளில் மன்னன் நம் எண்ணப்படி நடந்து கொண்டால் நமது திட்டம் தங்கு தடையின்றி நடந்துவிடும்.''

''அச்சுதப்பனைத் தேவையில்லாமல் எதற்கு இங்கே கொண்டு வந்து இந்த நிலைக்கு ஆளாக்குகிறாய்?''

''நமது திட்டத்தின் பெரும்பங்கு இவனிடம்தான் இருக்கிறது. போகப் போகப் பார்.''

மறுநாள் காலையில் தளபதி ரங்கப்ப நாயக்கன் சிங்சாங்கின் வீட்டைத் தேடி ஓடோடி வந்தான்.

''வாருங்கள் தளபதியாரே! என்ன இது இந்த அடிமையை இவ்வளவு அதிகாலையில் தேடி வந்திருக்கிறீர்கள்?'' என்று சிரித்தவாறு கேட்டான் சிங்சாங்.

''எனது மைந்தன் அச்சுதப்பனைப் பற்றிய விஷயம் ஒன்றைத் தெரிந்து கொள்வதற்காக வந்தேன்'' என்றான் தளவாய் அவசரமாக.

''அச்சுதப்பருக்கு என்ன ஆயிற்று? இன்னுமா வீடு வந்து சேரவில்லை. விடிவதற்கு இரு நாழிகைக்கு முன்பே நான் அவரை இங்கிருந்து அனுப்பிவிட்டேனே!'' என்றான் கவலையுடன் சிங்சாங்.

''அச்சுதப்பன் அப்பொழுதே வந்துவிட்டான். ஆனால், அவன் சொன்ன விஷயம்தான் என்னை ஆச்சர்யத்தில் ஆழ்த்திவிட்டது.''

''அப்படி என்ன சொன்னார் தங்களது புதல்வர்?''

''நேற்று இரவு பூஜை நடந்து கொண்டிருக்கும் பொழுது இளவரசி சந்திரவதனா என் மகனைத் தேடி வந்தாளாம் இருவரும் மிகவும் சல்லாபமாகவும், சந்தோஷமாகவும் விடிய விடியப் பேசிக் கொண்டிருந்தார்களாம். பிறகு திடீரென்று அவள் மறைந்துவிட்டதாகவும் சொன்னான். உண்மையா.''

''உண்மை என்றும் சொல்லலாம் இல்லை என்றும் சொல்லலாம்.''

''என்ன புதிர் போட்டுப் பேசுகிறாய்?''

''என் பூஜையின் பலம் இளவரசியின் மனதை நன்றாகவே அசைத்துவிட்டது. அதேசமயம் இங்கிருந்த அச்சுதப்பரின் மனமும் மாயா வெளியில் பறக்க ஆரம்பித்தது. அசைந்த இளவரசியின் மனம் உருக்குலைந்து எண்ண அலைகளாக மாறிப் பரவெளியில் பறந்து வந்து அச்சுதப்பரின் மன அலைகளுடன் ஒன்றிக் கலக்க ஆரம்பித்துவிட்டன. அதனுடைய வெளிப்பாடுதான் அச்சுதப்பர் கண்டதாகச் சொன்ன தோற்றம்.''

''அப்படியானால் அது உண்மை இல்லையா?''

''ஸ்தூல சரீரம் விட்டு இரண்டு ஆன்மாக்களும் ஒன்றை ஒன்று இப்பொழுதுதான் சந்தித்திருக்கின்றன. இதே மாதிரியான உணர்வு இளவரசிக்கும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும். இனி தொடர்ந்து நான் பூஜை செய்யச் செய்ய இருவரது எண்ணங்களும் ஸ்திரப்பட்டு, ஸ்தூல சரீரத்திற்குள் உட்புகுந்து நிஜமாகவே சந்தித்து இன்புறும் நாள் வரும்.''

''அப்படியா! நடக்கட்டும். நடக்கட்டும். இன்றும் அச்சுதப்பனை இங்கு வரச் சொல்லுகிறேன்.''

தளவாய் மகிழ்ச்சிப் பெருக்கில் தளுக்கி நடந்து சென்றான்.

அச்சுதப்பனுக்கு அடுத்த வந்த இரண்டு பூஜைகளிலும் பூஜைப் பிரசாதம் என்ற பெயரில் வாழைப்பழத்தில் அபின் சேர்த்து மகிழ்வூட்டும் போதை மயக்கத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தான் சொக்கநாதன்.

மூன்றாம் நாள் மாலை அரும்பும் நேரத்தில் சிங் சாங்கை அழைத்து வரும்படி மன்னன் விஜயராகவ நாயக் கன் காவலன் ஒருவனை ஏவினான்.

இன்று தனது திட்டத்தை எப்படியாவது நிறைவேற்றி விட வேண்டும் என்று கவனமாகச் சில பொருட்களைத் தன் இடுப்பில் மறைவாக எடுத்துக் கொண்டு கிளம்பினான் சிங்சாங்.

மன்னவன் அவனை மகிழ்ச்சிப் பெருக்குடன் வர வேற்றான்.

''சிங்சாங், இன்று உன் கையால் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். நீ சொன்ன மாதிரி அன்று குளித்த பிறகு ஒருநாள் முழுக்கப் புத்துணர்ச்சியாக இருந்தது. மறக்கமுடியாத சுகம். ஒரு நாளுக்குமேல் அந்தப் புத்து ணர்ச்சி நீடிக்காதா?''

''நீடிக்கும் மன்னவா. தங்களின் அங்கங்களை தொட்டு எண்ணெய் தேய்ப்பதில் இருந்து, தாங்கள் தூங் கும் வரை நானே சகல காரியங்களையும் சரிபார்த்துச் செய்தால் அந்தப் புத்துணர்ச்சி இன்னும் ஒரு நாள் நீடிக் கும். தொடர்ந்து இதேமாதிரிக் குளித்து வந்தால் காலப் போக்கில் இளமை திரும்பும் என்று இமயமலைச் சித்தர் கள் கூறக் கேட்டிருக்கிறேன்.''

''சரி இன்று உனது இஷ்டப்படியே செய்.''

சிங்சாங் உடனே தன் பணிகளைத் துவக்கினான். அவன் சொன்ன முறைப்படி பதமாகக் காய்ச்சி வடித் தெடுக்கப்பட்ட எண்ணெயை மன்னவன் உடல் மீது தடவி, தட்டி, உருவி, மெதுவாகக் குத்தித் தேய்த்து விடத் தொடங்கினான்.

மன்னன் சுகானுபவத்தில் கண்கள் சொக்கிப் போய்க் கிறங்கினான்.

குளித்து முடித்துத் தலை துவட்டி, மன்னவனை முக்காலி ஒன்றில் உட்கார வைத்து நறுமணப் புகை காட்ட இரண்டு உதவியாட்களுக்குச் சொன்னான் சிங்சாங்.

பின்னர் சமையலறையில் இருந்து கொண்டு வரப் பட்ட உணவு வகைகளை அளவாக அவன் சொன்ன வரிசையில் பரிமாறினார்கள்.

''போதும் மன்னவா, இதற்கு மேல் தாங்கள் சாப்பிட் டால் இப்போதைக்கு மகிழ்வூட்டும்படியாக இருந்தாலும், நாளைக் காலை வயிறு சற்று மந்தப்படும். இத்துடன் நிறுத்திக் கொள்வது நன்று.''

மன்னவன் சிங்சாங்கின் வார்த்தைகளுக்குக் கட்டுப் பட்டு கைகளைக் கழுவினான்.

மறுவிநாடி அடைப்பக்காரன் தங்கத் தாம்பாளத்தில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த இளம் வெற்றிலைத் தளிர்களை மன்னவன் முன் கொண்டு வந்தான்.

''மன்னவா வடநாட்டில் உள்ளவர்கள் வெற்றிலைப் போடுவதற்கும் இங்குள்ளவர்கள் வெற்றிலை போடுவதற் கும் நிறைய வேறுபாடு இருக்கிறது'' என்றான் சிங்சாங்.

''அப்படி என்ன வேறுபாட்டினைக் கண்டாய்?'' என் றான் மன்னன்.

' ''இங்குள்ளவர்கள் முதலில் வெறும் பாக்கை வாயில் போட்டு மென்றவாறு, ஒவ்வொரு வெற்றிலையாக எடுத்துச் சுண்ணாம்பு தடவி வாயில் போட்டு மெல்லுகிறார்கள். வடநாட்டில் முதலில் வெற்றிலையில் சுண்ணாம்பு தடவி, அதற்கு மேல் பாக்கு தூளைப் பரப்பி, அதனுடன் பச்சைக் கற்பூரம், கல்கண்டு, குங்குமப்பூ, கிராம்பு இவற்றைப் பதமாகச் சேர்த்து, அவற்றை மொத்தமாக வெற்றிலையில் சுருட்டி, அழகாக மடித்து, அதற்குப் பிறகே வாயில் போட்டுச் சுவைப்பார்கள்.''

''ஆஹா கேட்பதற்கே நன்றாக இருக்கிறதே!''

''சுவைத்துப் பார்த்தால் இன்னும் நன்றாக இருக்கும். இந்த மாதிரி எண்ணெய்க் குளியல் செய்து, மனம் மகிழ உண்டு முடித்த கையோடு அப்படிச் செய்யப்பட்ட வெற்றிலையைச் சுவைப்பது இன்னும் சிறந்தது.''

''உனக்கு அந்த முறை தெரியுமா சிங்சாங்?

''உத்தரவிட்டால் இந்த அடிமை செய்து தருகிறேன்.''

அடுத்த சில நிமிடங்களில் சிங்சாங் சொன்ன பொருட்களை அடைப்பக்காரன் கொண்டு வந்து கொடுத்தான். சிங்சாங் சிறிய கத்தரியால் வெற்றிலைகளை வட்ட வட்டமாக வெட்டி வைத்தான். அதேநேரம் மற்றவர்கள் பார்க்காதவாறு இடுப்பில் இருந்த அபினை எடுத்துச் சுண்ணாம்புடன் கலந்து கொண்டான்.

பின்னர் வெற்றிலையில் அபின் கலந்து சுண்ணாம்பினை அளவாகச் சேர்த்து, அவற்றின் மீது பாக்கு, பச்சைக் கற்பூரம், கிராம்பு, குங்குமப்பூ இவற்றை வைத்து கலையழகோடு மடித்து, மன்னவனிடம் பணிவாக நீட்டினான்.

வாங்கிச் சுவைத்த மன்னவன் கடைவாயில் எச்சில் ஒழுக, அதன் சுவையைச் சிலாகித்துச் சிங்சாங்கைப் பாராட்டினான். சற்று நேரத்தில் அபினால் ஏற்பட்ட மயக்கம் மன்னவனைக் கிறக்கத் தொடங்கியது.

''அற்புதமாக இருக்கிறது சிங்சாங்! எனது கண்கள் சுழலுவதுபோல் இருக்கிறது. நான் இப்பொழுது சென்று படுத்துத் தூங்க நினைக்கிறேன்.''

''தாங்கள் தூங்கும்வரை தங்களது கால்களைப் பிடித்து விடுகிறேன் மன்னவா! எண்ணெய்க் குளியலால் தங்களது நரம்புகள் சற்று விரிவடைந்து இருக்கும். தாங்கள் தூங்கும்பொழுது அவற்றைப் பதமாகப் பிடித்து நீவி விட்டால் அவை புத்துணர்ச்சி பெறும். நாளைக் காலை நீங்கள் கண் விழிக்கும்பொழுது புத்தம் புதிய மனிதராய் உணர்வீர்கள்.''

''சரி என்னுடன் வா.''

மன்னவன் சிங்சாங்கைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு பக்கத்திலிருக்கும் தனது படுக்கை அறைக்குள் சென்றான். அறை வாசலில் காத்திருக்கும் காவலர்களிடமும் வழக்கமாகத் தனக்குகால் அமுக்கிவிடும் பணியாளர்களிடமும் ''டேய் இன்று இந்தச் சீன நாட்டவன் நான் தூங்கும்வரை என் கால்களைப் பிடித்து நீவிவிடப் போகிறான். நீங்கள் வெளியே காவல் இருங்கள்'' என்றான்.

மன்னவன் படுக்கையில் படுத்ததும், சிங்சாங் அவனது முழங்காலில் இருந்து பாதம்வரை பதமாக மெதுவாகப் படிப்படியாக நீவிவிடத் தொடங்கினான். சற்று நேரத்தில் மன்னவனுக்கு ஆழ்ந்த தூக்கம் ஏற்பட்டது. பலமாகக் குறட்டைவிட்டான்.

சிங்சாங் ஓரக்கண்ணால் வாசற்பக்கம் பார்த்தான். வெளியே இருந்த காவலர்கள் இந்தப் பக்கமே திரும்பாமல் கடமையே கண்ணாகக் காவல் புரிந்து கொண்டிருந்தார்கள்.

சிங்சாங் மெதுவாக மன்னவனின் கையருகே வந்து உட்கார்ந்து வைகுண்ட ஏகாதசித் திருநாளன்று மக்கள் கூட்டத்தின் மத்தியில் குலகுரு குமார தாத்தாச்சாரியார்

பெருமையுடன் அணிவித்த தாயத்தினை மெதுவாகக் கழட்டித் தனது இடுப்பில் சொருகிக் கொண்டான்.

பின்னர் மன்னனின் வலது கை விரலில் அணிந்திருந்த முத்திரை மோதிரத்தினை எடுத்துப் பத்திரமாக முடிந்து கொண்டான். மன்னவனோ அபின் அளித்த ஆழ்ந்த தூக்கத்தில் அசையாமல் படுத்துக் கிடந்தான்.

சிங்சாங் எழுந்து நின்று, மன்னவன் காலருகே கிடந்த போர்வையை எடுத்து அவன் கழுத்துவரை மூடினான். படுக்கையைச் சுற்றி இருந்த திரைச்சீலைகளை அவிழ்த்து விட்டான். வாசலுக்கு வந்தான்.

''மன்னவர் தூங்கிவிட்டார். இனி காலையில்தான் கண் விழிப்பார். காலையில் எழுந்தவுடன் அவர் என்னைத் தான் முதலில் தேடுவார். தாமதமின்றி வந்து சொல்லுங்கள். உங்களுக்கும் சேர்த்து அவர் பெரும் பரிசுத் தரப் போகிறார்'' என்றான் காவலர்களைப் பார்த்து.

காவலர்கள் பூரிப்பில் சத்தமின்றிப் பல் இளிக்க, சிங்சாங் அரண்மனையில் இருந்து வெளியேறித் தனது வீட்டை நோக்கி வேகவேகமாக நடக்கத் தொடங்கினான்.

அச்சுதப்பன் வீட்டிற்குள் உட்கார்ந்திருந்தான்.

தனது அடுத்த திட்டத்தை அவன் மூலம் செயல் படுத்துவதற்கான ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தான் சிங்சாங் வேடத்தில் இருந்த சொக்கநாதன்.

---

*Hallucinating drug



# 77

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனைத் தன்னிலை மறந்த தூக்கத்துக்கு ஆட்படுத்திவிட்டு அரண்மனையில் இருந்து வெளியேறிய சிங்சாங் என்னும் சீன நாட்டவன் வடிவில் இருந்த சொக்கநாதன் வானத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

சூரிய அஸ்தமனமாகி ஒரு ஜாம வேளை முடியும் தறுவாய் என்பதைச் சுடர்விடும் நட்சத்திரங்கள் புலப்படுத்தின. தஞ்சை நகர மக்கள் இரவு உணவு முடித்துவிட்டு நித்திராதேவி அணைப்பிற்காகவும், நெஞ்சு தடுமாற வைக்கும் குமரிகளுடன் கொஞ்சுவதற்காகவும் விளக்குகளை அணைக்கத் தொடங்கி இருந்தனர்.

நகரின் தெருக்களில் ஆங்காங்கே இருள் சூழ்ந்து கிடந்தது. ஆள் அரவமற்ற இருட்டான ஒரு பகுதிக்கு வந்த சிங்சாங் தன் இடுப்பில் வைத்திருந்த பொருட்கள் பத்திரமாக இருக்கிறதா என்று எடுத்துப் பார்த்து உறுதி செய்து கொண்டான்.

தாயத்தை எடுத்துப் பார்க்கும்பொழுது அவன் இதழ்க் கடையில் இளக்காரமான புன்னகை ஒன்று வெளிப்பட்டது. வைகுண்ட ஏகாதசித் திருநாளில், மக்கள் மத்தியில் இந்தத் தாயத்தினைப்பற்றிக் குமார தாத்தாச்சாரியார் கூறியது அவன் நினைவுக்கு வந்தது.

இந்தத் தாயத்தினை அணிந்தவன் புலியாம், சிங்கமாம், பொங்கிவரும் காளையாம், இதனை எடுத்ததுகூடத் தெரியாமல் விஜயராகவ நாயக்கன் அடித்துப்போட்டது மாதிரித் தூங்குகிறான். தாயத்து எதிரிகளைப் பக்கத்தில் கூட வரவொட்டாதாம். ஹூம்.

மன்னன் கையில் இருந்து கழற்றிய மோதிரத்தை எடுத்து உற்றுப் பார்த்தான். தஞ்சை அரசுச் சின்னம் பொறிக்கப்பட்டிருப்பது நன்றாகத் தெரிந்தது.

முத்திரை மோதிரம்தான். இதை வைத்து எனது அடுத்த திட்டத்தை அச்சுதப்பன் மூலம் நிறைவேற்ற வேண்டியதுதான் என்று மனதிற்குள் நினைத்தவாறு வேக வேகமாக வீட்டை நோக்கி நடந்தான் சிங்சாங்.

அச்சுதப்பன் சிங்சாங்கின் வரவை எதிர்பார்த்துத் தயாராகக் காத்துக் கிடந்தான். சிங்சாங் வீட்டினுள் நுழைந்ததும் ஓடி வந்து அவன் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''என்ன சிங்சாங், ஏன் இவ்வளவு நேரம்? உன் வரவிற்காக இங்கு எவ்வளவு நேரமாகக் காத்துக் கிடக்கிறேன் தெரியுமா? என் பொறுமையை இன்று நிறையவே சோதித்துவிட்டாய்!''

''பொறுமைதான் முக்கியம் அச்சுதப்பரே! ஒரு லட்சியத்தை நாம் ஏற்றுக் கொண்டால் அது நிறைவேறும் வரை நமது பொறுமை நம்மை விட்டு நழுவக் கூடாது'' என்று சிரித்தாவறு சொன்னான் சிங்சாங்.

''இருந்தாலும் இன்று நீ வருவதற்கு இவ்வளவு நேரமா? நான் தவித்துப் போய்விட்டேன்.''

''மன்னரின் மனம் நோகாமல் நடந்து கொள்ள வேண்டாமா? அவருக்கு எண்ணெய் தேய்த்துவிடும் பொழுது அவர் மனத்தை உங்கள் விருப்பத்தின் மீது செலுத்தும் வசியத்தையும் சேர்த்து அல்லவா அவர் நரம்புகளில் நான்

புகட்ட வேண்டும். அது அவ்வளவு எளிதாக முடிந்துவிடக் கூடிய காரியம் அல்லவே!''

''மன்னர் உனது வசியத்தில் வீழ்ந்துவிட்டாரா? அவர் மனம் எவ்வளவு நாட்களில் மாறும்? என்னை மருமகனாக ஏற்றுக் கொள்வாரா?''

''இப்பொழுது மன்னனுக்கு நான் போட்ட வசியம் இன்று இரவு முழுக்க வேலை செய்யும். நாளைக் காலையி லேயே அவரிடம் பெரிய மாற்றம் ஒன்று உருவாகும். விடிந்தவுடன் உங்களையும் உங்கள் தந்தையையும்தான் முதலில் கூப்பிட்டு அனுப்புவார்.''

''எதற்கு?''

''எனது வசியம் சரியான முறையில் வேலை செய்து இருந்தால் உங்களுக்கு மகளையும் மணம் முடித்துக் கொடுத்து, மகுடத்தையும் சூட்டுவதற்கு ஏற்பாடு செய்ய லாம். அல்லது அதற்கான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கி இருக்கலாம்.''

''இந்த அல்லதுதான் எனக்குப் பிடிக்கவில்லை சிங் சாங்'' என்று அலுத்துக் கொண்டான் அச்சுதப்பன்.

''பொறுமையாக இருங்கள் அச்சுதப்பரே! படிப்படி யாக உங்கள் எண்ணம் நிறைவேறும். தாங்கள் இங்கு வந்து நீண்ட நேரம் ஆகிவிட்டதா?''

''ஒரு முகூர்த்த வேளை கடந்துவிட்டது. சரி சரி வா, உன் பூஜையைத் தொடங்கு.''

''இப்படி எல்லாம் அவசரப்படுத்தக் கூடாது. என்னை நீங்கள் எந்தக் கட்டாயமும் செய்யக் கூடாது. நான் சொல் கிறபடிதான் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். இல்லா விட்டால் வசியத்திற்குப் பலன் இல்லாமல் போய்விடும்.''

''மன்னித்துக்கொள் சிங்சாங். நீ சொல்கிறபடி எல் லாம் நான் கேட்கிறேன்.''

''இப்பொழுது இங்கு வரும்வரை தாங்கள் சுத்தமாக எந்தவித அசுத்தங்களும் ஏற்படாமல் தானே வந்திருக்கிறீர்கள்?''

''சுத்தமாகக் குளித்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன்.''

''நான் அதைச் சொல்லவில்லை. தென்னந்தோப்பிற்குச் சென்று கள் அருந்தினீகளா?''

''சேச்சே! நான் கள் குடிப்பதை நிறுத்திப் பல நாட்கள் ஆகிவிட்டன.''

''கள் விற்கும் பெண் செல்லத்தாயின் கள்ளச்சிரிப்பில் கட்டுண்டு மாசுபடுத்திக் கொண்டுள்ளீர்களோ என்று ஓர் ஐயம்?''

''செல்லத்தாயுடன் நான் உறவு வைத்திருக்கும் விஷயம் உனக்கு எப்படித் தெரியும்?'' என்றான் வியப்புடன்.

''அருளானந்த ஸ்வாமிகளின் ஆத்மார்த்தமான சீடனுக்கு அச்சுதப்பரின் அந்தரங்கள் அறியாமலா போய் விடும்!''

''மன்னித்துக்கொள் சிங்சாங்! அருளானந்த ஸ்வாமிகளின் கட்டளைப்படி அர்த்தஜாமப் பூஜை துவங்கிய நாளில் இருந்தே நான் தென்னந்தோப்பு இருக்கும் திசையைக் கூடப் பார்ப்பதில்லை. செல்லத்தாயின் முகமே மறந்துவிட்டது'' என்றவாறு பெருமூச்சு விட்டான்.

''நல்லது இப்படி இருந்தால்தான் நமது பூஜைக்குரிய பூரண பலன் கிட்டும்.''

''கடந்த மூன்று நாட்களாக இளவரசி சந்திரவதனா கனவில் வருகிற மாதிரி வருகிறாள். என்னுடன் எவ்வளவு காதலுடன் பேசுகிறாள் தெரியுமா? காலையில் விழித்துப் பார்க்கும்பொழுது என் கண்களில் இருந்து மறைந்துவிடுகிறாள். மிகவும் ஏமாற்றமாக இருக்கிறது. எப்பொழுதுதான் அவளை நிஜமாக நான் சந்தித்துப் பேசுவேன் சிங்சாங்?''

''நான்தான் ஏற்கனவே சொன்னேனே! உங்கள் இருவரது ஆன்மாக்களும் ஒருவரை ஒருவர் நெருங்கிவிட்டன. உங்களுக்கு ஏற்பட்ட மாதிரியே இளவரசியும் தன்னுடைய கனவில் உங்களைச் சந்தித்துப் பேசி மகிழ்ந்ததுபோல் உணருவாள். உல்லாசத்தில் மிதப்பாள். காலையில் கண் விழித்ததும் கனவு என்று எண்ணி மருகி மனம் பதைப்பாள். ஏமாற்றத்தில் உருகுவாள். நிஜமாக உங்களைச் சந்தித்து மகிழும் நாள் வராதா என்று ஏங்கித் தவிப்பாள்.''

''நாங்கள் இருவரும் உண்மையிலேயே நேருக்கு நேர் எங்களது ஸ்தூல தேகத்துடன் சந்தித்து இன்புறும் நாள் என்றுதான் வரும்?'' என்று ஏக்கத்துடன் கேட்டான் அச்சுதப்பன்.

''இன்று நடக்கப்போகும் பூஜை மிகவும் விசேஷமானது. நான் பூஜை துவங்கியவுடன் நீங்கள் மவுனம் காக்க வேண்டும். நான் சொல்வதை எல்லாம் தட்டாமல் செய்ய வேண்டும். நான் நினைத்தபடி இன்றைய பூஜை வெற்றிகரமாக நிறைவேறிவிட்டால் இன்று இரவே தாங்களும் இளவரசியாரும் உண்மை சொரூபத்தில் ஸ்தூல சரீரத்தில் இதே இடத்தில் சந்தித்து இன்புறுவீர்கள் என்பது நிச்சயம். அதன்பிறகு...''

''அதன்பிறகு? அதன்பிறகு? சொல்லு. சொல்லு.''

''நாளைக்காலையில் இளவரசியே தந்தையைத் தேடிச் செல்வார். அங்கு மன்னவனின் மனநிலையும் மாறி இருக்கும். இருவரும் ஒரே எண்ணத்துடன் இருப்பார்கள். இளவரசியே தனது வாய் திறந்து உங்களைத்தான் மணப்பேன் என்று கூறுவார். மன்னரும் அதைக் கேட்டு மகிழ்வார். மகளைத் தாரை வார்த்துத் தருவார் மணம் நடக்கும். மகுடம் நிலைக்கும்.''

''ஆஹா... பூஜை துவங்க நேரமாகுமா சிங்சாங்?'' ஏக்கத்துடன் கேட்டான்.

''இதோ தொடங்கப்போகிறேன். வாருங்கள்.''

அந்தப்புரத்தில் அமைந்துள்ள உப்பரிகையின் ஆறாவது மாடியில் இளவரசி சந்திரவதனா இருக்கும் மூன்றாவது சாளரத்திற்கு நேர் எதிரில் இருக்கும் சாளரத்தைத் திறந்து வைத்து, அதன் பார்வைபடும் இடத்தில் அச்சுதப்பனை உட்கார வைத்து அவன் முன் பூஜைப் பொருட்களைப் பரப்ப ஆரம்பித்தான் சிங்சாங்.

அச்சுதப்பன் கண்களை இறுக்க மூடியவாறு கைகளை கூப்பிக் கொண்ட சந்திரவதனாவை நெஞ்சில் நிறுத்தித் தியானிக்க, சிங்சாங் மந்திரம் என்ற பெயரில் புரியாத வார்த்தைகளை உச்சரித்தவாறு எதிரில் உள்ள ஓமகுண்டத்தில் புகை கிளப்பிக் கொண்டிருந்தான்.

பின்னர் அச்சுதப்பன் அறியாதவாறு ஒரு வாழைப் பழத்தை எடுத்து ஊசியால் ஒரு சிறு துளையிட்டு, அதனுள் அபினைத் திணித்தான். பிறகு துளை தெரியாதவாறு தோலை நன்றாக நீவிவிட்டான்.

''அச்சுதப்பரே, இந்தப் பிரசாதத்தை தங்கள் கையில் வைக்கிறேன். தங்கள் கண்களைத் திறவாமல் இதனைச் சாப்பிட்டுவிட்டு, மறுபடியும் தியானத்தில் ஈடுபட வேண்டும்'' என்றான்.

அச்சுதப்பன் கண்களை மூடியவாறு கையை நீட்டினான். தொடர்ந்து சிங்சாங் வைத்த பழத்தை அப்படியே தோலுடன் சேர்த்து சாப்பிட்டுவிட்டுத் தனது தியானத்தை தொடர்ந்தான்.

சற்று நேரத்தில் அபின் வேலை செய்யத் தொடங்கியது. அவன் தலை உடல் இரண்டும் தள்ளாடுவது தெரிந்தது. சிங்சாங் உடனே எழுந்து அச்சுதப்பன் அருகே வந்து அவனை அணைத்துத் தூக்கி நிறுத்தினான்.

''வந்துவிட்டாயா கண்ணே... இனி நீ எனக்குத்தான். நான் உனக்குத்தான்... இந்த நாடு எனக்கே எனக்குத்தான்... உன் தந்தையிடம் சொல்வாயா சந்திரவதனா...'' என்று உளற ஆரம்பித்தான்.

''நிச்சயமாகச் சொல்கிறேன். நீங்களும் என்னுடன் சேர்ந்து வருகிறீர்களா கண்ணாளா?'' என்றான் சிங்சாங்.

''நீ கூப்பிட்டால்... அரண்மனைக்கு என்ன... ஆழ்கடலுக்கே வருவேன்... என் கையைப் பிடித்துக் கூட்டிக் கொண்டு போ...''

சிங்சாங் அவனை அணைத்துக் கூட்டிப்போய் அருகில் இருந்த கட்டிலில் படுக்க வைத்தான். அச்சுதப்பனோ சிங்சாங்கின் கையைச் சந்திரவதனாவின் கை என்று நினைத்துக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு என்னென்னவோ உளறிக் கொண்டிருந்தான்.

சிங்சாங் உடனே ஒருவித சங்கேத ஒலி எழுப்ப, பக்கத்து அறையில் மறைந்திருந்த வெங்கடகிருஷ்ணன் ஓடோடி வந்தான்.

''முருகா, இவன் கையைச் சற்றுநேரம் பிடித்துக் கொள். இளவரசி பேசுவது மாதிரி ஏதாவது காதல் வசனம் பேசு. நான் உடைமாற்றிக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்றவுடன் வெங்கடகிருஷ்ணன் சிங்சாங்கின் கையை உருவிவிட்டு அந்த இடத்தில் தன் கையை நுழைத்துக் கொண்டான்.

அச்சுதப்பன் அபின் அளித்த போதையில் வெங்கடகிருஷ்ணனின் கையைத் தடவித் தடவிக் காதல் மொழி பேசிக் கொண்டிருந்தான்.

சொக்கநாதன் பக்கத்து அறைக்குள் சென்று சீன நாட்டவன் உடையைக் களைந்துவிட்டு, தஞ்சை அரண்மனையில் பணிபுரியும் வீரனைப் போன்ற உடையணிந்து வந்தான்.

''முருகா, நான் இவனைக் கவனித்துக் கொள்கிறேன். நீ உள்ளே சென்று இதேபோல் உடையணிந்து வா'' என்றான்.

சற்றுநேரத்தில் சொக்கநாதன் சொன்னது மாதிரியே அவன் ஆடை புனைந்து வர, இருவரும் சேர்ந்து அச்சுதப்பனைத் தூக்கி நிறுத்தினர். அச்சுதப்பனோ அளவுக்கு மீறிய போதையில் அவர்கள் இழுத்த இழுப்பிற்கெல்லாம் இசைந்து கொண்டிருந்தான்.

நீண்ட துணி ஒன்றை எடுத்து அச்சுதப்பன் தலையில் இருந்துபோர்த்தி, அவன் முகத்தை தெரியாதபடி சுற்றி மூடினர். சொக்கநாதன் சற்று முன்னர் மன்னவன் கரத்தில் இருந்து கைப்பற்றி வந்த முத்திரை மோதிரத்தை அச்சுதப்பன் விரலில் மாட்டினான்.

''முருகா, வாசற்கதவைத் திறந்து பார்''

வெங்கடகிருஷ்ணன் திறந்து கண்களை நீண்ட தூரம் ஓட்டி நாலாபுறமும் பார்த்துவிட்டு ''ஊர் அடங்கிவிட்டது முத்து. நாம் கிளம்பலாம்'' என்றான்.

இருவரும் அச்சுதப்பனை அணைத்துப் பிடித்தவாறு வீட்டில் இருந்து வெளியேறி இருட்டுக்குள் நடக்க ஆரம்பித்தனர்.

நீண்ட நேரம் கழித்துத் தஞ்சை அரசின் சிறைச் சாலை அமைந்திருக்கும் பகுதிக்கு வந்து சேர்ந்தார்கள். அதன் வாசலில் காவல் காத்திருப்போர் மூன்று உருவங்கள் இருட்டில் வருவதையும், அதில ஒன்று முக்காடு போட்டிருப்பதையும் பார்த்து உஷாரானார்கள்.

''யாரடா நீங்கள்? எங்கே வருகிறீர்கள்?'' என்று ஒருவன் இவர்கள் தூரத்தில் வரும்பொழுதே அதட்டலாகக் கேட்டான்.

''உஷ்! கத்தாதே! நமது தளபதியின் மைந்தர் சிறைச்சாலையில் இருக்கும் மதுரை ஒற்றனைப் பார்த்து அவனிடம் உண்மையை வரவழைக்க வந்திருக்கிறார்'' என்றான் சொக்கநாதன்.

''அச்சுதப்பரா!'' என்று வாய் பிளந்த காவலன், ''எதற் ாக இப்படி முக்காடு போட்டிருக்கிறார்? நிச்சயமாக ,வர்தானா?'' என்றான்.

''மதுரை ஒற்றர்கள் இங்கு எங்காவது மறைந்திருக்க ாம். அதனால் இப்படி வருகிறார். சந்தேகம் இருந்தால் ப்பந்தத்தை எடுத்து வா.''

காவலன் தீப்பந்தத்தை எடுத்துவர, அச்சுதப்பன் முகத்தை மூடி இருந்த முக்காட்டைச் சொக்கநாதன் விலக் க் காட்டினான்.

அச்சுதப்பன்தான் என்று உறுதியாகத் தெரிந்தவுடன் ந்தக் காவலன் பணிவுடன், ''மன்னிக்க வேண்டும் ச்சுதப்பரே! இங்கு நுழைவதற்கு அரசரின் அனுமதி தவை!'' என்றான்.

சொக்கநாதன் உடனே அச்சுதப்பன் காதுகளில் கிசு சுத்தான்.

''மாமா... நான் சொல்வது மாதிரிச் சொல்லுங்கள்.''

அச்சுதப்பன் கேட்டுப் பல் இளித்தவாறு காவலனைப் ார்த்தான்.

''டேய் இதோ அரசர் என் விரலில் அணிவித்த மாதிரம்... ம்... நாங்கள் போய்த் தனித்து பேச வேண் ம்...'' என்றவாறு மலங்க மலங்க நாலாபுறமும் பார்த் ான்.

மன்னரின் முத்திரை மோதிரம்தான் என்று உறுதி சய்து கொண்ட சிறைச்சாலைக் காவலர்கள் அவர்கள் வரையும் உள்ளே செல்ல அனுமதித்தார்கள்.

''மதுரை ஒற்றனை அடைத்திருக்கும் அறைத் திறவு காலைத் தாருங்கள். நீங்கள் யாரும் வரவேண்டாம். ற்றனிடம் உண்மையை வரவழைக்க அச்சுதப்பர் மட்டும் னியாக அவனிடம் பேசப் போகிறார். அதனால் நாங்கள்

திரும்பி வரும்பொழுது திறவுகோலை ஒப்படைக்கிறோம்'' என்றான் சொக்கநாதன்.

காவலன் மறுப்பேதும் சொல்லாமல் திறவுகோல் கொத்தில் இருந்து ஒன்றை மட்டும் பிரித்து எடுத்துத் தந்தான். மூவரும் சிறைச்சாலைக்குள் நுழைந்தனர். உடனே காவலர்கள் தங்களுக்குள் கிசுகிசுத்தனர்.

''அச்சுதப்பரைப் பார்த்தால் அளவுகடந்த போதையில் இருப்பதுபோல் தெரிகிறது. இந்நிலைமையில் ஒற்றனை எப்படி விசாரிப்பார்?''

''ம்... தளவாய்க்கு இப்படி ஒரு தறுதலைப் பிள்ளை...''

சிறைச்சாலைக்குள் மதுரை ஒற்றர் தலைவன் அழகப்ப நாயக்கன் அடைப்பட்டிருக்கும் அறையைத் திறந்தார்கள். உள்ளே ஒரு மூலையில் படுத்திருந்த அழகப்பன் திடுக்கிட்டு எழுந்து பார்த்து, சொக்கநாதனை அடையாளம் கண்டு, ''மன்னா...'' என்று ஓடோடி வந்தான்.

''உஷ்! எதுவும் பேசாதீர்கள்! முதலில் இவன் ஆடைகளைக் கழற்றி மாட்டிக் கொள்ளுங்கள். சீக்கிரம்.''

சற்று நேரத்தில் அழகப்ப நாயக்கன் தன் ஆடைகளை எடுத்து அச்சுதப்பனுக்குப் போட்டுவிட்டு அவன் அணிந்திருந்த ஆடைகளைத் தான் அணிந்து அதே மாதிரி முக்காடு போட்டுக் கொண்டான்.

அச்சுதப்பனை ஒரு மூலையில் படுக்க வைத்தார்கள். அவனோ சுயநினைவின்றி இளவரசியுடன் சல்லாபமாகப் பேச ஆரம்பித்தான்.

முக்காடு போட்ட அழகப்பனின் இருபுறமும் சொக்கநாதனும் வெங்கடகிருஷ்ணஷனும் தாங்கிப் பிடித்தவாறு சிறைச்சாலைக்கு வெளியே வந்தனர். சொக்கநாதன் திறவுகோலைக் காவலனிடம் கொடுத்தான்.

''வந்த வேலை முடிந்துவிட்டது. ஒற்றனிடமிருந்து எதிர்பாராத ஒரு தகவல் கிடைத்துவிட்டது. மன்னரே நாளை இங்கு ஓடிவரப் போகிறார். உங்கள் விழிப்புணர்ச் சிக்குத் தக்க பரிசு கிடைக்கும்.''

காவலர்கள் சிரித்தனர். திரும்பவும் முக்காட்டினை விலக்கிப் பார்க்கும் எண்ணம் அவர்களுக்கு வரவில்லை.

மூவரும் சிறைச்சாலையைக் கடந்து வெகுதூரம் வந்து ஆள் அரவமற்ற ஓர் இடத்திற்கு வந்து சேர்ந்து நிம்மதியா கப் பெருமூச்சு விட்டனர்.

சொக்கநாதன் அடுத்த விநாடியே அந்தப்புரத்தில் இருக்கும் சந்திரவதனாவின் அறையைத் தேடிப் போக முடிவு செய்தான்.



# 78

சிறைச்சாலையில் இருந்த தங்களது ஒற்றர் படைப்பிரிவின் தலைவனான அழகப்ப நாயக்கனை மிகவும் சாமர்த்தியமாக விடுவித்துக் கூட்டி வந்த சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் வெகுதூரத்தில் உள்ள ஆளவரமற்ற ஓர் இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

சுற்றிலும் யாரும் இல்லை என்று உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு சொக்கநாதன் அழகப்பனைப் பார்த்து, ''என்ன அழகப்பரே, மன்னனையே வேவு பார்க்கும் அளவுக்கு உமக்குத் தைரியம் வந்துவிட்டது இல்லையா?'' என்றான் கடுமையாக.

அழகப்ப நாயக்கன் இதைக் கேட்டுப் பதறிப் போய், ''மன்னா, என்னை மன்னித்துவிடுங்கள். தங்கள் அன்னையார் எனக்கு இட்டக் கட்டளையை மீற முடியவில்லை'' என்று கும்பிட்டான்.

''சரி, நடந்தது நடந்துவிட்டது. இங்கு நடந்த எதையும் தாங்கள் என் அன்னையிடம் தெரிவிக்கக் கூடாது. நான் திருச்சிராப்பள்ளிக் கோட்டையில் இருந்து எங்கேயும் நகரவில்லை என்று அவரிடம் நீங்கள் சொல்ல வேண்டும்.''

''உத்தரவு மன்னா'' என்று பணிந்தான்.

சொக்கநாதன் வானத்தை அண்ணாந்து பார்த்தான். நள்ளிரவுப் பொழுது நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று நட்சத்திரங்கள் கண் சிமிட்டி எச்சரித்தன.

''வெங்கடகிருஷ்ணா, எனக்கு இன்னும் ஒரே ஒரு வேலை பாக்கி இருக்கிறது. அதனால் நீயும் அழகப்பரும் உடனே இங்கிருந்து கிளம்பி தஞ்சை எல்லையைக் கடந்து திருச்சிராப்பள்ளிக்கு செல்லும் ராஜபாட்டையில் சற்று ஒதுங்கி நிற்கும் ஆலமரத்தருகே காத்திருங்கள்.''

''நீ மட்டும் தனியாகவா போகிறாய்?''

''ஆம். நான் தனியாகப் போய் செய்து முடிக்க வேண்டிய காரியம். விடிந்து ஒரு நாழிகைக்குள் வந்து விடுவேன். அப்படி நான் வராவிட்டால் எனக்காக நீங்கள் காத்திருக்க வேண்டாம். நீங்கள் இருவரும் உடனே திருச்சிராப்பள்ளிக்குச் சென்று விடுங்கள்.''

வெங்கடகிருஷ்ணனுக்கு அவன் எங்கே செல்லப் போகிறான் என்பதை ஊகித்து உணர முடிந்தது.

''உன்னைத் தனியாக விட்டுவிட்டு நாங்கள் எப்படிப் போவது? அங்கு உனக்கு ஏதுவும் ஆபத்து நேரிட்டால்?''

''எந்த ஆபத்தும் வராது. அப்படியே வந்தாலும் நானே தனியாகச் சமாளித்துவிடுவேன். நீங்கள் கிளம்புங்கள்.''

''இருந்தாலும் உன்னைத் தனியாக விட்டுச் செல்ல என் மனம் ஒப்பமாட்டேன் என்கிறது.''

''சொல்வதைக் கேள் கிருஷ்ணா! அரசன் கண் விழித்து விட்டாலோ இல்லை அச்சுதப்பனின் போதை தெளிந்து விட்டாலோ அடுத்த நிமிடமே நம்மைத் தேடி தஞ்சை வீரர்கள் நாலாபுறமும் ஓடிவருவார்கள். நம் மூவரில் யார் மாட்டிக் கொண்டாலும் அது சிக்கலாகிவிடும். அதனால் தாமதிக்காதீர்கள். நான் எப்படியும் விடிவதற்குள் நீங்கள் இருக்கும் இடத்திற்கு வந்துவிடுவேன். கவலைப்படாதீர்கள். சீக்கிரம் கிளம்புங்கள்.''

இளவரசி சந்திரவதனாவால் சொக்கநாதனுக்கு ஆபத்து ஏதும் நேரிடலாம் என்று வெங்கடகிருஷ்ணனுக்கு உள்மனம் பதைத்தாலும், இன்னொரு பக்கம் சொக்கநாதனைப் பிடிக்கக் கூடிய சாமர்த்தியம் இந்தத் தஞ்சை மண்ணில் ஒருவருக்குமே கிடையாது என்ற தைரியமும் எழுந்தது.

மறுவிநாடி வெங்கடகிருஷ்ணனும், அழகப்ப நாயக்கனும் சொக்கநாதன் சொல்படி வேகவேகமாக அந்த இடத்தை விட்டு அகல ஆரம்பித்தார்கள்.

சொக்கநாதன் சிங்சாங்கிற்காக ஒதுக்கித் தரப்பட்ட வீட்டிற்கு வந்து நீண்ட கயிற்றுச் சுருளை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு உள்ளே இருந்த அனைத்துத் தடயங்களையும் அழித்துவிட்டு அந்தப்புரத்தை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கினான்.

அந்தப்புரம் அமைந்திருந்த பகுதி அந்தகாரமான இருளில் ஆழ்ந்திருந்தது. உள் வளாகத்தில் ஆங்காங்கே ஏற்றி வைக்கப்பட்டிருந்த தீப்பந்தங்கள் மங்கலான ஒளியை வீசிக் கொண்டிருந்தன.

சில நாட்களுக்கு முன் சொக்கநாதனால் அந்தப்புரத்திற்குள் ஏற்பட்ட களேபரத்திற்குப்பின், அந்தப்புரத்துக் காவல் கடுமையாக ஆக்கப்பட்டிருந்த போதிலும் நேரம் நள்ளிரவைத் தொட்டுவிட்டதால் இரவுக் காவலர்கள் சற்றுச் சோர்வடைய ஆரம்பித்திருந்தனர்.

அந்தப்புரத்தின் முக்கிய வாயிலும், திட்டி வாசலும் பலமாகக் காவல் காக்கப்பட்டு இருந்தாலும், சிங்சாங்கிற்காக ஒதுக்கப்பட்ட வீட்டிற்கு அருகாமையில் இருந்த மதிற்சுவர் சற்றே இருள் சூழ்ந்து காணப்பட்டது.

மதிற்சுவரைச் சுற்றிவரும் காவல் வீரர்கள் ஒரு தடவை ஓர் இடத்தைக் கடந்து சென்றுவிட்டால் திரும்ப

வும் அவர்கள் அதே இடத்திற்கு வருவதற்குக் குறைந்தது ஒரு நாழிகை நேரம் ஆகிறது என்பதை ஏற்கனவே கவனித்து வைத்திருந்த சொக்கநாதன், சற்று நேரம் இருளில் பதுங்கிக் காத்து இருந்தான்.

அடுத்த சில நிமிடங்களில் இரண்டு காவல் வீரர்கள் மதில் சுவரைக் கண்காணித்தபடி வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் அந்த இடத்தைக் கடந்து மறுபக்கம் திரும்பும் வரை காத்திருந்த சொக்கநாதன் வேகமாகச் செயல்பட ஆரம்பித்தான்.

மதிற்சுவரில் ஏறுவதற்கு வசதியாக இதற்கு முந்திய இரவுகளில் சிறிய பள்ளங்கள் செதுக்கி வைத்திருந்த இடத்திற்கு வந்து சரசர என்று ஏறி மறுபக்கம் குதித்தான். மரங்கள் செடி கொடிகள் இவற்றினூடே நடந்து உப்பரிகை அருகே வந்து பதுங்கினான்.

உப்பரிகையில் உள்ள அனைத்து அறைகளும் இருளில் மூழ்கிக் கிடந்தன. இளவரசி சந்திரவதனா இருக்கும் ஆறாவது மாடியின் மூன்றாவது சாளரம் திறந்தே கிடந்தது. உள்ளே இருள் அப்பிக் கிடந்தது.

உப்பரிகையின் சுவர்கள் தெரியும்படி நான்குபுறங்களிலும் தீவட்டிகள் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. உப்பரிகைச் சுவர் மீது யார் ஏறினாலும் நன்றாகத் தெரியும்படி ஒவ்வொரு பக்கம் இரண்டு தீவட்டிகள் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தன.

அதில் இளவரசி இருக்கும் பகுதியில் உள்ள தீவட்டியை எப்படி அகற்றுவது? இதனை அகற்றாமல் சுவர் மீது ஏறினால், அது தூரத்தில் உள்ள காவலர்கள் கண்களில் தெளிவாகத் தெரியும். அணைத்தாலும் திரும்ப ஏற்ற ஓடி வருவார்கள்! அடிக்கடி அணைத்தால் சந்தேகம் வரும்!

என்ன செய்வது? யோசித்தான். பிறகு ஓர் எண்ணம் உதித்தது. மெதுவாகப் பதுங்கி தீவட்டிக் கம்பத்திற்கருகே வந்தான்.

அதில் ஒரு தீவட்டியை மட்டும் எடுத்து தன் இடுப் பில் இருந்த குறுவாளால் எண்ணெய்த் துணியைக் கிழித் தான். பித்தளைக் கம்பியில் சுற்றப்பட்ட துணி கிழிந்து கீழே விழுந்து எரிந்தது. அதேமாதிரி மற்றொரு தீவட்டி யில் இருந்த துணியையும் கிழித்துக் கீழே போட்டான். பிறகு வெற்றுத் தீவட்டிகள் இரண்டையும் கம்பத்தில் சொருகிவிட்டு மறுபடியும் இருளுக்குள் சென்று பதுங்கிக் கொண்டான்.

தீவட்டியில் இருந்து கிழித்துப் போடப்பட்ட துணி கள் சற்று நேரம் கொழுந்துவிட்டு எரிந்தது. பிறகு சுத்தமாக அணைந்து புகையத் துவங்கியதும் அந்த இடத்தில் இருள் சூழ்ந்தது.

சொக்கநாதன் எதிர்பார்த்த மாதிரியே அந்தப்புரத்திற் குள் காவல் இருந்த இரண்டு வீரர்கள் அந்த இடத்திற்கு ஓடோடி வந்தார்கள். ஒருவன் கீழே கருகிக் கனன்று கொண்டிருக்கும் துணியைக் குனிந்து பார்த்துவிட்டுப் பிறகு கம்பத்தில் இருந்த தீவட்டிகளை எடுத்துப் பார்த் தான்.

''கம்பியில் சுற்றப்பட்டிருந்த துணி எண்ணெய் இல் லாமல் சுத்தமாக எரிந்து கீழே விழுந்துவிட்டது. இதனை மறுபடியும் ஏற்ற வேண்டும் என்றால் துணி சுற்றி, எண் ணெய் போடவேண்டும்'' என்றான் ஒருவன்.

''துணி வேண்டும் என்றால் அந்தப்புரத்து ஊழியன் வரவேண்டும். அவன் காலையில்தான் வருவான். இரவில் சுற்றி வந்து எண்ணெய் ஊற்றுபவனிடம் துணி இருக்காது. என்ன செய்யலாம்?''

''நேரம் நள்ளிரவைக் கடந்துவிட்டது. இன்னும் இரண்டு ஜாமம் இருக்கிறது. அதற்குள் எதுவும் நடந்து விடாது. இப்படியே இருக்கட்டும் காலையில் பார்த்துக் கொள்ளலாம்.''

இரண்டு காவலர்களும் திரும்பி நடக்கத் தொடங்கினர்.

அந்த இரண்டு காவலர்களும் நீண்ட தூரத்தில் உள்ள தங்கள் பணி இடங்களுக்குத் திரும்பிச் சென்று விட்டதை உறுதி செய்து கொண்ட சொக்கநாதன் உப்பரிகைச் சுவர் அருகே வந்து நின்று சுற்றுமுற்றும் நன்றாகப் பார்த்துக் கொண்டான்.

பின்னர் தோளில் இருந்த கயிற்றுச் சுருளில் ஒரு வளைவான கம்பியை வைத்துச் சுருக்கிட்டான். பிறகு கயிற்றைச் சுற்றி வீசினான். முதல் தடவை சரியாகச் சிக்காமல் கயிறு கீழே விழுந்தது. மறுபடி எறிந்தான். இப்பொழுது சரியாக இளவரசி இருக்கும் அறைச் சாளரக் கம்பியில் சிக்கிக் கொண்டது.

கயிற்றை இழுத்து உறுதி செய்து கொண்டு, சுற்றும் முற்றும் மீண்டும் ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சொக்கநாதன் கயிற்றைப் பிடித்து ஏற ஆரம்பித்தான். சற்று நேரத்தில் அறைக்குள் வந்து ஓசையின்றி இறங்கி உள்ளே பார்வையை ஓட்டினான்.

இளவரசி சந்திரவதனா நடு அறையில் மஞ்சத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பது, அவளருகே ஏற்றி வைக்கப்பட்டிருந்த மங்கலான விளக்கு வெளிச்சத்தில் தெரிந்தது. சொக்கநாதன் கீழே தொங்கிய கயிற்றைச் சுருட்டி எடுத்து மறுபடியும் தோளில் மாட்டிக் கொண்டு மஞ்சத்தினருகே மெல்லடி வைத்து வந்தான்.

இளவரசி ஒரு குழந்தையைப்போல ஒருக்களித்துப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். வீணையின் குடத்தைப் போன்ற அவளது பின்னழகுகளில் இருந்து நீண்ட அவளது கால்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து மஞ்சத்தில் கிடந்தன. ஒரு கை வளைந்து அவள் நெற்றியை அணைத்தவாறு தலையணையில் கிடக்க மற்றொரு கை மஞ்சத்தில் இருந்து சற்றுக் கீழே தொங்கிக் கிடந்தது.

சொக்கநாதன் அவள் தூங்கும் அழகைச் சற்ற நேரம் ரசித்து, லயித்துக் கிறங்கிப் போய்ப் பார்த்துக் கொண்டே நின்றான். இவள் அழகுக்கு இந்த உலகையே விலை கொடுக்கலாம் போலிருக்கிறதே!

ஒருக்களித்துப் படுத்துக் கையை உயர்த்தி இருந்ததால் அவளது மார்பகங்கள் ஒன்றோடொன்று இணைந்து சட்டைக்கு மேலே சற்று எழுந்து 'டேய் திருடா' என்பது மாதிரி சொக்கநாதனை முறைத்துப் பார்த்தன.

கோவைப் பழங்களை ஒட்ட வைத்தாற்போல் காட்சியளித்த அவளது இதழ்களின் இணைப்பில் எச்சில் லேசாகத் துளிர்த்து இருந்தது. சொக்கநாதன் தன் விரல் நுனியால் அதனை ஒத்தி எடுத்தான். அவன் விரல்கள் உதட்டில் பட்டதும் அவள் உடல் லேசாகச் சிலிர்த்து 'உம்' என்று முனகி உதடுகளை நாவால் தடவிவிட்டாள் தூக்கக் கலக்கத்தில்.

சொக்கநாதன் அந்தக் காட்சியினைப் பார்த்து ரசித்துப் புன்னகை புரிந்தவாறு, அவள் கை தொங்கும் இடத்தருகே தரையில் உட்கார்ந்து ஒருச்சாய்த்துக் கிடந்த அவள் முகத்தருகே வந்து கூர்ந்து பார்த்தான். அப்படியே அவள் மூக்கைப் பிடித்துத் திருக வேண்டும் போல் இருந்தது.

மஞ்சத்தில் இருந்து தொங்கும் அவள் கையருகே நெருங்கி உட்கார்ந்தான். சந்தனத்தில் கடைந்தெடுத்தது மாதிரி உருண்டு திரண்ட அழகான கை! செம்பஞ்சுக் குழம்பால் உள்ளங்கை, புறங்கைகளில் கோலம் வரையப் பட்டுச் சிவந்து கிடந்த விரல்கள். அவற்றைப் பற்றி ஒவ்வொன்றாக நீவி விடவேண்டும் போல் அவனுக்கு ஆசை எழுந்தது.

மெதுவாக அவள் விரல்களைத் தொட்டான். சந்திர வதனா நல்ல தூக்கத்தில் ஆழ்ந்து இருந்ததால் சொக்கநாதன் தொட்ட உணர்வு அவளுக்குத் தெரியவே இல்லை.

சொக்கநாதன் சற்று தைரியம் அடைந்து அவள் விரல்களை மெதுவாகத் தடவிக் கொடுத்தான். ஒரு முத்தம் அவள் விரல்களுக்குக் கொடுக்கலாமா என்று யோசித்தபொழுது சந்திரவதனா கையை இழுத்துக் கொண்டு புரண்டு படுத்தாள்.

சொக்கநாதன் மஞ்சத்தருகே இருந்த விசிறியை எடுத்து அதில் இருந்த மயில் தோகை ஒன்றை உருவி எடுத்தான். மஞ்சத்தை ஒட்டித் தரையில் உட்கார்ந்தவாறு மயிற் பீலியால் அவள் கன்னத்தை வருடிக் கொடுத்தான்.

சந்திரவதனா தூக்கக் கலக்கத்தில் தனது கன்னத்தைத் தட்டிவிட்டாள். சொக்கநாதன் மறுபடியும் கன்னம் உதடு இவற்றை மயிற் பீலி கொண்டு வருடினான். இம்முறையும் அவள் கை அந்த இடங்களை அனிச்சையாகத் தட்டிவிட்டாலும் அவள் தூக்கம் கலைய ஆரம்பித்தது.

சொக்கநாதன் மூன்றாவது முறையாக மயிற் பீலி கொண்டு அவள் கன்னத்தை வருடியபொழுது, அவள் கை கன்னத்தைப் பற்ற அதே சமயம் திடுக்கிட்டு எழுந்தாள். சொக்கநாதன் மறுவிநாடி மஞ்சத்தின் அடியில் மறைந்து கொண்டான்.

கன்னத்தில் கிடந்த மயிற் பீலியைப் பார்த்த சந்திர வதனா, விசிறியில் இருந்து கழன்று பறந்து வந்திருக்கும் என்று நினைத்தாள். அதேநேரம் சரசர என்று கேட்ட சப்தம் மஞ்சத்தினடியிலா இல்லை சாளரத்தின் அருகிலா என்று குழம்பி எழுந்து உட்கார்ந்தாள். பிறகு சாளரத்தின ருகே போய்க் கீழே எட்டிப் பார்த்தாள்.

சொக்கநாதன் தன்னை எப்படியும் தேடி வருவான் என்ற நினைப்பில் கடந்த இரவுகளில் பலமுறை அவள் சாளரத்தை எட்டி எட்டிப் பார்த்துத் தூக்கத்தைத் தொலைத் திருந்தாள்.

'வருவார் வருவார் என்ற இத்தனை நாளும் தூக்கம்

தொலைந்தது. இன்றுதான் தூங்கினேன். முழுக்கத் தூங்க விடாமல் பாவி மனிதரின் நினைப்பு எழுப்பிவிட்டது. ஹூம்' என்று பெருமூச்சு விட்டபடி அவள் மறுபடியும் மஞ்சத்தில் வந்து படுத்தாள்.

சொக்கநாதன் சற்று நேரம் காத்திருந்துவிட்டுப் பிறகு மெதுவாக எழுந்து மஞ்சத்தில் உட்கார்ந்தான். சந்திர வதனா கண்களை மூடித் தூங்குவதற்கு முயன்று கொண்டிருந்தாள். சொக்கநாதன் சொக்கிப் போய் அவள் கன்னத்தில் தன் விரல்களை வைத்தான்.

மயிற்பீலிதான் மறுபடியும் பறந்து வந்து கன்னத்தில் விழுந்து இருக்கிறதோ என்ற நினைப்பில் கண்களைத் திறக்காமல் தன் கையைக் கன்னத்தில் கொண்டு சென்றவள், மயிற்பீலிக்குப் பதில் சொக்கநாதனின் விரல்கள் தட்டுப்பட்டதும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

கண்களைத் திறந்து சொக்கநாதன் முகத்தைப் பார்த்ததும், அவள் கண்கள் மிரட்சியுற்றதைக் கவனித்த அவன், எங்கே அலற ஆரம்பித்து விடுவாளோ என்ற பயத்தில் அவள் வாயைப் பொத்தினான்.

''சந்திரவதனா மறுபடி பேய் என்று அலறாதே! நான் தான் முத்து! உன் ஆசை அத்தான்'' என்று கிசுகிசுத்தான்.

சந்திரவதனா கோபத்துடன் அவன் கையைத் தட்டி விட்டாள்.

''இங்கே எதற்கு வந்தீர்கள்?'' மிரட்டலாகக் கேட்டாள்.

''என் உயிர் இங்கே இருக்கும்பொழுது உடம்பு வேறு எங்கு போகும்?''

''மரியாதையாகப் போய் விடுங்கள்.''

''போகிறேன். அதற்கு முன் 'நான் உங்களைக் காதலிக்கிறேன்' என்று ஒரு வார்த்தை சொல் போதும்.''

''அது இந்த ஜென்மத்தில் நடக்காது. உங்களுக்கு எவ்வளவு கொழுப்பு இருந்தால் நாடாளும் மன்னவனை உங்கள் காலில் விழச் செய்திருப்பீர்கள்?''

''அதுவும் உன்னால்தானே கண்ணே! அன்றே எனக்கு உணவு அளித்து இருந்தால் இவ்வளவு தூரம் நடந்திருக் குமா? இப்பொழுதுகூடப் பசிக்கிறது. காதலிக்கிறேன் என்று சொல். எத்தனை யுகங்களானாலும் எனக்கு பசி ஏற்படாது.''

''மரியாதையாகப் பேசுங்கள். அன்றே நீங்கள் யார் என்பதை என் தந்தையிடம் சொல்லாததைத் தவறு என்று இப்பொழுது உணர்கிறேன்.''

''அதற்குக் காரணம் என் மேல் உனக்கு ஏற்பட்ட காதல்! ஒத்துக் கொள்!''

''ஒருக்காலும் இல்லை. என்னைக் காப்பாற்றிய நன் றிக்காக. இனியும் இது தொடர்ந்தால் நான் உங்களைக் காட்டிக் கொடுப்பதைத் தவிர வேறு வழி இல்லாமல் போய்விடும்.''

''அப்படியானால் என்னை காதலிக்கவில்லையா?''

''இல்லை. உங்களை வெறுக்கிறேன்.''

சொக்கநாதன் எழுந்து வாசற்பக்கம் சென்றான். இளவ ரசி ஒன்றும் புரியாமல், ''எங்கே செல்கிறீர்கள்?'' என்றாள்.

சொக்கநாதன் வாசற் கதவுகளைத் திறந்துவிட்டு, ''சரி. காவலர்களை அழைத்து என்னைப் பிடித்துச் செல்லச் சொல்'' என்றான்.

''உங்களைப் பற்றி எனக்குத் தெரியாதா? காவலர்களு டன் சண்டை செய்து சாமர்த்தியமாகத் தப்பி விடுவீர்கள்.''

"அப்படியானால் இந்த நாற்காலியில் உட்காருகிறேன். என்னை நன்றாகக் கட்டிப் போட்டுக் காவலர்களைக் கூப்பிடு."

"அப்படியாவது உங்கள் மீது என் விரல்கள் படும் என்ற கெட்ட எண்ணம் புரிகிறது. நான் செய்ய மாட்டேன்."

"என்னை நீ காதலிக்கவில்லை. வெறுக்கிறாய் என்பது உண்மைத்தானே?"

"நிச்சயமாக! போயும் போயும் உங்களையாவது காதலிப்பதாவது?"

"அப்படியானால் நான் எக்கேடு கெட்டாலும் உனக்கு கவலை இல்லை அப்படித்தானே! மாற்றமில்லையே!"

"அப்படித்தான்."

சொக்கநாதன் நாற்காலியில் அமர்ந்து, தன் தோளில் இருந்த கயிற்றால் முதலில் கால்களைக் கட்டி, பிறகு நாற்காலியோடு தனது இடக்கரத்தை நன்றாகக் கட்டினான்."

""பார்! என்னால் நகரக்கூட முடியாத அளவுக்கு இறுக்கமாகக் கட்டிவிட்டேன். திருப்திதானே?"

இளவரசி ஒன்றும் புரியாமல் விழிக்க அடுத்த விநாடி சொக்கநாதன் பெருங்குரலில் "ஆபத்து, ஆபத்து.. ஓடி வாருங்கள்!" என்று பலமாகக் கூச்சலிட்டான்.

இதனைக் கேட்டு கீழே காவல் புரிந்து கொண்டிருந்த நான்கு வீரர்கள் ஓடிவரத் தொடங்கினர்.



# 79

சொக்கநாதன் நாற்காலியில் அமர்ந்து தன்னுடைய கால்களையும், இடக்கையினையும் நாற்காலியோடு கயிற்றால் இறுகக் கட்டும்பொழுது, அவன் எதற்காக அப்படிச் செய்கிறான் என்று புரியாமல் விழித்துக் கொண்டிருந்த இளவரசி சந்திரவதனா தொடர்ந்து அவன் 'ஆபத்து, ஓடிவாருங்கள்' என்று பெருங்கரலில் கத்தியதும் திடுக்கிட்டாள்.

அந்தப்புரத்தில் அனைவரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் அந்தகாரமான அந்த அர்த்த ராத்திரி வேளையில் சொக்கநாதன் அலறிய குரல் உப்பரிகையின் கீழ்தளம் வரை தெளிவாகக் கேட்டது. இதனைக் கேட்டுக் கீழ்தளத்தில் காவல் இருந்தவர்கள் மாடிப்படி வழியாக ஓடிவரும் ஓசையும் தொடர்ந்து எதிரொலித்தது.

இதனை முற்றிலும் எதிர்பார்க்காத இளவரசி, இதயத்தில் காயம்பட்டதுபோல் துடித்துப் போய் விட்டாள். அடுத்த விநாடி வேகமாக ஓடிப்போய்த் திறந்து கிடந்த வாசற் கதவுகளை அவசர அவசரமாக அடைத்துச் சாத்தித் தாழிட்டாள்.

மறுபடியும் வேகமாகச் சொக்கநாதன் அருகே ஓடி வந்தாள்.

''என்ன வீரரே, இப்படிச் செய்துவிட்டீர்கள்?'' என்று பதைப்புடன் கேட்டாள்.

''நீ ஏன் பதட்டப்படுகிறாய்? நீதான் என்னை வெறுக்கிறாயே! நான் எக்கேடு கெட்டாலும் உனக்குக் கவலை இல்லையே! ஏதோ நான் உன் உயிரைக் காப்பாற்றிய நன்றிக்காக், நீயே என்னைப் பிடித்துக் கொடுப்பதற்கு உன் மனம் வரவில்லை. அதனால்தான் நானே உனது வீரர்களை அழைத்தேன்.''

இளவரசி பேச வாயெடுத்த அதேநேரம் வீரர்கள் அவளது அறைவாசலருகே ஓடிவரும் ஓசை கேட்டது. தொடர்ந்து வாசற்கதவு பலமாகத் தட்டப்பட்டது.

''சந்திரவதனா அதோ உனது வீரர்கள் வந்துவிட்டார்கள். போ, போய்க் கதவைத் திறந்துவிடு. உள்ளே வந்து அவர்கள் என்னைப் பிடித்துச் செல்லட்டும். உன் தந்தையிடம் ஒப்படைக்கட்டும். அர்த்த ராத்திரி வேளையில் அந்தப்புரத்திற்குள்ளேயே வந்து இளவரசியின் அறைக்குள் நுழைந்த குற்றத்திற்காக உனது தந்தை என் அங்கங்களை, துண்டு துண்டாக வெட்டிக் காக்கை, கழுகுகளுக்குக் கூறு போடட்டும். நான் எப்படிப் போனால் உனக்கென்ன? போய்க் கதவைத் திறந்துவிடு.''

''என்ன வீரரே...'' என்று இளவரசி பதட்டமாக ஏதோ சொல்ல மறுபடியும் வாய் திறக்க முற்பட்ட பொழுது அறைக்கதவு மிகவும் பலமாக நாலைந்து வீரர்களால் ஒரே சமயத்தில் சேர்ந்து தட்டப்பட்டது.

அதற்கு மேலும் தாமதித்தால் 'உள்ளே இளவரசி ஆபத்தான நிலைமையில் இருக்கிறாள்' என்ற நினைப்பில் அந்த வீரர்கள் கதவை உடைத்து உள்ளே வந்துவிடுவார்கள் என்று பயந்தாள்.

''இளவரசியாரே... கதவைத் திறவுங்கள்...'' கதவு உடைபடுவதுபோல் அசைய ஆரம்பித்தது.

''போ சந்திரவதனா போ. போய்க் கதவைத் திற'' என்று இளக்காரமாகச் சிரித்தபடி சொன்னான் சொக்க நாதன்.

'போகிறேன். அதுவரை வாயை மூடிக் கொண்டு இருங்கள்'' என்று அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்த வாறு சொன்ன இளவரசி அருகில் இருந்த நீண்ட போர்வை ஒன்றை எடுத்துச் சொக்கநாதனை நாற்காலி யோடு மூடிப் போட்டாள்.

பிறகு வேகமாக ஓடிப்போய் கதவுகளைத் திறந்தாள். வாசலில் ஆயுதங்களுடன் தயாராக நின்றிருந்த வீரர்கள் இளவரசியைப் பார்த்ததும், கொஞ்சம் நிம்மதி அடைந்தா லும் பரபரப்புடன் அவளைப் பார்த்து ''இளவரசியாரே, என்ன ஆயிற்று? தங்களுக்கு ஏதாவது ஆபத்தா?'' என்றனர்.

இளவரசி இதற்கு உடனே பதில் சொல்லாது, நீண்ட தாக ஒரு கொட்டாவி விட்டாள். பிறகு கண்களைக் கசக்கிவிட்டு அவர்களைப் பார்த்து, ''ஆபத்தா? எனக்கு ஒன்றும் இல்லையே! நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தேன். ஏதோ ஒரு கெட்ட கனவு! என்னை மறந்து ஆபத்து என்று அலறிவிட்டேன். கவலைப்படாதீர்கள். எனக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை. போங்கள். உங்கள் இடத்திற் குச் சென்று காவல் புரியுங்கள்'' என்றவாறு ஓரக்கண்ணால் சொக்கநாதன் அமர்ந்திருந்த இடத்தைப் பார்த்துக் கொண் டாள்.

நல்லவேளையாக அந்த இடம் இருள் சூழ்ந்து இருந் தது. அதேநேரம் சொக்கநாதன் ஏதாவது கத்தி விடுவா வானோ என்று பயமும் எழுந்தது.

''தாங்கள்தான் அலறியதா? எங்கள் காதுகளுக்கு யாரோ ஓர் ஆண் உங்கள் அறைக்குள் இருந்து அலறுவது போல் கேட்டது. அன்று மாதிரியே யாரோ ஒரு திருடன்

நுழைந்துவிட்டானோ என்று பதறிப்போய் ஓடோடி வந்தோம்'' என்றான் காவல் தலைவன்.

''ஆண் குரலா? சேச்சே! இங்கு என்னைத் தவிர யாரும் இல்லை. மிகவும் பயங்கரமான கனவொன்று கண்டேன். கரும்பூதம் ஒன்று என் குரல் வளையை நெறிப்பதுபோல. அதனால் நான் தொண்டை கமறி அலறி இருக்கலாம். அது உங்களுக்கு ஆண் குரல் போல் கேட்டதோ என்னவோ? சரி. சரி. போங்கள்.''

''நிச்சயமாகத் தங்களுக்கு ஆபத்து எதுவும் இல்லையே?'' என்று தயங்கியவாறு கேட்டான்.

''எதுவும் இல்லை. நீங்கள் போகலாம். எனக்குத் தூக்கம் வருகிறது'' என்றவாறு மறுபடியும் கொட்டாவி ஒன்றை விட்டவாறு கதவுகளை அடைத்துச் சப்தம் எழும் படியாகத் தாழிட்டாள்.

பிறகு உடனே திரும்பாமல் கதவில் காதுகள் பதித்துக் காத்திருந்தாள். வீரர்கள் கடந்து சென்று மாடிப் படிகளில் இறங்கும் ஓசை கேட்டது. அது முற்றிலும் அடங்கியவுடன், கதவுகளை ஓசை எழாமல் திறந்து வெளியே பார்த்தாள். இல்லை. அனைத்து வீரர்களும் அங்கிருந்து போய் விட்டார்கள். மறுபடியும் ஓசை எழாமல் சாத்தித் தாழிட்டு விட்டுச் சொக்கநாதன் அருகே ஓடோடி வந்தாள்.

நடந்த நிகழ்ச்சிகளைச் சொக்கநாதன் கண்களால் காண முடியாவிட்டாலும், காதுகளில் விழுந்த உரையாடல் அவன் மனத்திற்குத் தெம்பையும் உற்சாகத்தையும் அளித்தது. இளவரசி அவன் மேல் வீசியிருந்த போர்வையை விலக்கினாள்.

''என்ன சந்திரவதனா, என்னைப் பிடித்துக் கொடுக்க உனக்கு மனம் வரவில்லையல்லவா? இப்பொழுது தெரிகிறதா, உன் மனம் என்னை விரும்புகிறது என்று?'' சிரித்தவாறு கேட்டான் சொக்கநாதன்.

சந்திரவதனா இதைக் கேட்டதும் அவனைக் கடுமையாக முறைத்துப் பார்த்தவாறு, ''வீரரே, என்ன இது விளையாட்டு? போதும். உங்கள் கை கால்களைப் பிணைத்திருக்கின்ற கயிற்றை அவிழ்த்துவிட்டுத் தயவு செய்து யாரும் அறியாமல் இங்கிருந்து போய்விடுங்கள்'' என்றாள்.

''அப்படியானால் நீ என்னைக் காதலிக்கவில்லையா?''

''இல்லை, இல்லை, இல்லை. எத்தனை தடவைதான் சொல்வது! தயவு செய்து போய்விடுங்கள்.''

''ஓஹோ! உனக்கு இந்த அளவுக்கு மன உறுதி இருக்கும்பொழுது எனக்கு மட்டும் இருக்காதா என்ன? நான் போகமாட்டேன்'' என்றான் உறுதியாக.

''வீரரே என்ன இது விளையாட்டு?'' கைகளைப் பிசைந்தாள்.

''விளையாட்டு இல்லை சந்திரவதனா! இது என்னுடைய ஜீவமரணப் போராட்டம்! வாழ்ந்தால் நான் உன்னோடுதான் வாழ வேண்டும் என்று உன்னை முதல் முதலாகப் பார்த்தவுடனே தீர்மானித்துவிட்டேன். நீ என்னைக் காதலிக்காத பட்சத்தில் நான் உயிர் வாழ்வதில் அர்த்தமே இல்லை. உண்மையிலேயே நீ என்னைக் காதலிக்கவில்லை என்று சொன்னால் அதன் மறுவிநாடி என் உயிர் செத்துவிட்ட மாதிரிதான். அதன் பிறகு உன் வீரர்கள்

வந்து பிடித்துச் சென்றால் என்ன உன் தந்தை எனக்கு மரண தண்டனை விதித்தால் என்ன? அதற்கு முன்தான் என் உயிர் போய்விட்டதே! செத்த உடலைத்தானே சின்னாபின்னம் ஆக்குவார்கள் உனது வீரர்கள்.''

''என்ன இது பிதற்றல்?'' எரிச்சலுடன் கேட்டாள் இளவரசி.

''பிதற்றல் இல்லை சந்திரவதனா. என் உள்ளத்தின் அடியில் இருந்து எழுந்துவரும் ஆன்மாவின் கூற்று. முடிவாகக் கேட்கிறேன். நீ என்னைக் காதலிக்கிறாயா இல்லையா?''

''அதுதான் இல்லை என்று சொல்லிவிட்டேனே!'' என்றாள் தலையைக் குனிந்தபடி.

''அப்படியானால் சரி. இனி நான் உயிரோடு இருப்பதே தவறு. ஐயையோ... ஆபத்...'' அவன் மீதியைக் கத்துவதற்குள் இளவரசி பதறிப்போய் அவன் வாயைத் தன் கரத்தால் அழுத்தமாகப் பொத்தினாள்.

சொக்கநாதனின் வாயை இறுகப் பொத்திய சந்திரவதனா பரபரப்புடன் வாசற் கதவை ஏறிட்டுப் பார்த்தாள். காதுகளைக் கூர்மை தீட்டி உற்றுக் கவனித்தாள்.

நல்லவேளையாக யாரும் ஓடிவரவில்லை. சொக்கநாதன் தன் குரல் எழுப்பத் துவங்கியதுமே வாயைப் பொத்திவிட்டதால் அந்தக் குரலின் அரைகுறை ஓசை அந்த அறையைத் தாண்டிக் கூடக் கேட்கவில்லை.

இருந்தாலும் வாயைப் பொத்திய தனது கரத்தை எடுக்காமல் சந்திரவதனா, சொக்கநாதனைப் பார்த்துக் கெஞ்சும் குரலில் பேச ஆரம்பித்தாள்.

''வீரரே, தயவு செய்து கேளுங்கள்! ஏன் இப்படி வீணாகப் பிடிவாதம் பண்ணி என் மனதை நோக அடிக்கி

நீர்கள்? உங்களைக் காட்டிக் கொடுக்கவும் என் மனம் ஒப்பமாட்டேன் என்கிறது!''

இதைக் கேட்டவுடன் சொக்கநாதன் தனது வாயைப் பொத்தி இருந்த அவள் கை விரல்களை அழுத்தமாகப் பற்றிக் கடித்தான்.

''ஸ்...ஆ'' என்று வலியில் படக் என்று கையை எடுத்து உதறியவாறு அவனை முறைத்துப் பார்த்தாள் சந்திரவதனா.

''என்னைக் காட்டிக் கொடுக்க உனக்கு மனம் வர வில்லை என்றால் அதற்குப் பெயர்தான் காதல்!'' என்று கண்ணடித்தான் சொக்கநாதன்.

''உம். மண்ணாங்கட்டி!'' எரிச்சலுடன் கையை உதறி யவாறு சொன்னாள் சந்திரவதனா.

''காதலுக்கு அப்படி ஒரு பெயரை நீ வைத்திருக்கி றாயா! அது எனக்குத் தெரியாது! பரவாயில்லை. அந்த மண்ணாங்கட்டி என் மீது உனக்கு இருக்கிறது என்று இப்பொழுதாவது ஒத்துக் கொள் போதும்.''

''ஒருபோதும் இல்லை. உங்கள் மீது பரிவு, கருணை, நன்றியுணர்ச்சி எல்லாம் இருக்கிறது. காதல் மட்டும் இல்லை, என்னால் காதலிக்கவும் முடியாது. தயவு செய்து முரண்டு பிடிக்காமல் போய் விடுங்கள்.''

இதைக் கேட்டவுடன் சொக்கநாதன் முகத்தில் தோல் விக் களை தெரிய ஆரம்பித்தது.

''நான் ஒரு முடிவுடன்தான் உன்னைத் தேடி வந்தேன் சந்திரா. இந்த இடத்தைவிட்டு என் உடம்பு அகலவேண் டும் என்றால், ஒன்று உன் காதல் என்ற உயிருடன் கலந்து

செல்ல வேண்டும். இல்லாவிட்டால் என் பிணம்தான் இங்கிருந்து செல்ல வேண்டும் என்று. இவ்வளவு தீர்மான மாக நீ சொன்ன பிறகு இனி நானும் என் முடிவில் இருந்து மாறப் போவதில்லை. ஐயையோ...''

அவன் அலற இளவரசி மறுபடியும் அவன் வாயைப் பொத்தினாள். சொக்கநாதன் அவள் விரல்களை அழுத்தமா கக் கடிக்க, அவள் வலியில் கையை விலக்க, அந்த இடைவெளியில் அவன் மறுபடியும் 'ஐயையோ...' என்று அலற முயல, இளவரசி பயத்துடன் தன் இரு கைகளாலும் அவன் வாயைப் பொத்தினாள்.

பிறகு தலைகுனிந்தவாறு ''சரி, சரி கத்தாதீர்கள்... நீங்கள் நினைக்கிற மாதிரியே வைத்துக் கொள்ளுங்கள்'' என்றாள் நாணத்துடன்.

இதைக் கேட்டவுடன் சொக்கநாதன் இதயம் பூரிப்பில் மலரத் தொடங்கியது. தனது வாயைப் பொத்தி இருந்த அவள் விரல்களில் மெதுவாக முத்தமிட்டான்.

இளவரசிக்கு அவன் இதழ்கள் முத்தமிட்ட உணர்ச்சி சிலிர்ப்பை ஏற்படுத்த, அவள் கரம் திடுக்கிட்டு விலகியது அவனிடமிருந்து.

''சந்திரா, சொல்வதைப் புரியும்படியாகச் சொல். நீங் கள் நினைக்கிற மாதிரி என்றால் என்ன அர்த்தம்? விளங்க வில்லை.''

''உங்களுக்கா விளங்காது. நீங்கள் இந்த உலகுக்கே விளக்கம் அளிக்கும் சாமர்த்தியசாலி. அதெல்லாம் விளங் கும்'' என்றாள் தனது தலையை நிமிர்த்தாமல்.

''நிஜமாக விளங்கவில்லை. நீங்கள் நினைக்கிற மாதிரி என்றால்?''

''அதுதான் அது... நீங்க சொன்னீங்களே அப்படித் தான்.''

''அதுதான் அது... அப்படித்தான்னா...''

''அதுக்கு மேல என்னால சொல்ல முடியாது'' அவள் முகம் சிவந்தது.

''சொல்லலேன்னாப் போ... நான் வீரர்களைக் கூப் பிடுகிறேன்.''

அவன் மீண்டும் அலற வாயெடுக்க, சந்திரவதனா பதறி மறுபடியும் அவன் வாயைப் பொத்தி ''உங்களுக்கு ரொம்பப் பிடிவாதம்... சரிசரி. நான் உங்களைக் காதலிக்கி றேன்...'' என்று அவசரமாகச் சொல்லிவிட்டு தன் முகத்தை கரங்களால் மெதுவாக மூடிக் கொண்டாள்.

சொக்கநாதன் சொக்கநாதனாகிச் சொல்லொண்ணா உவகைக்கு ஆளானான்.

''சந்திரவதனா, இன்னும் ஏன் முகத்தை மூடிக் கொண்டு இருக்கிறாய்? நாணம் கலந்த உன் முகத்தை நான் பார்த்து ரசிக்க வேண்டாமா? கரங்களை விலக்கி உன் கமல முகத்தை காட்டு கண்ணே!''

''ஊஹும் மாட்டேன்'' வெட்கத்துடன் முகத்தை இன்னும் நன்றாகப் பொத்திக் கொண்டாள்.

''இப்படியே எவ்வளவு நேரம் இருக்கப் பேகிறாய்? கயிறு இறுக்கி என் கை கால்கள் வலிக்கின்றன. மரத்து விடும் போல் இருக்கிறது. முதலில் இவற்றை அவிழ்த்து விடு.''

சந்திரவதனா முகத்தை விலக்கி அவனைக் கூர்ந்து பார்த்துவிட்டுச் சிரித்தாள்.

''இது நீங்களாகவே ஏற்படுத்திக் கொண்டதுதானே! இன்னும் சற்று நேரம் அப்படியே இருங்கள். கொழுப்பு கொஞ்சம் குறையட்டும்...''

''அது இப்பொழுது குறையாது கண்ணே! உன்னை என்று மணம் புரிந்து இல்லற வாழ்வில் ஈடுபடத் தொடங்குகிறேனோ அப்பொழுதே என் கொழுப்பு குறைந்து விடும். அதன்பிறகு உனக்குத்தான் கொழுப்பு ஏறிவிடும்'' என்றவாறு கண்ணடித்தான்.

''மகா மட்டமான மனிதர் நீங்கள்'' என்று நாணத்துடன் சொல்லித் தலை கவிழ்ந்தாள்.

''சீக்கிரம் அவிழ்த்துவிடு சந்திரவதனா! கை வலிக்கிறது.''

''வலிக்கட்டும் வலிக்கட்டும். என் தந்தையை உங்கள் காலில் விழச் செய்தீர்கள் அல்லவா. நன்றாக வலிக்கட்டும்.''

''சரி. தப்புதான் கன்னத்தில் போட்டுக் கொள்ளட்டுமா? முதலில் கட்டுக்களை அவிழ்த்து விடுகண்ணே!''

சந்திரவதனா சிரித்தவாறு அவனருகே வந்து அவனது இடக்கரத்தைப் பிணைத்திருந்த கயிற்றைப் பிரித்து அவிழ்க்க முயன்றாள். அதற்காக அவள் குனிய வேண்டி இருந்ததால், அவள் முகம் அவனது நெஞ்சருகே இருந்தது.

சொக்கநாதன் கயிறு பிணைக்காமல் கிடந்து தனது வலது கையை உயர்த்தி, அவளது கன்னத்தைக் கிள்ளினான்.

அவள் திடுக்கிட்டு நிமிர்ந்து, ''இப்படிக் குறும்பு செய்தீர்களேயானால் நான் அவிழ்த்துவிட முடியாது'' என்றாள் முறைப்பாக.

''சரி, சரி. உத்தரவு. இனி கயிறுகளை அவிழ்த்து முடிக்கும்வரை என் கையால் உன்னைத் தொடமாட்டேன். அவிழ்த்துவிடு'' என்றவாறு வாயைப் பொத்திக் கொண் டான்.

சந்திரவதனா கள்ளச் சிரிப்புச் சிரித்தவாறு மறுபடியும் அவனருகே வந்து குனிந்து கயிற்றைப் பிரித்தாள். முக்கால் வாசிக் கயிற்றை அவள் பிரித்து முடிக்கும்பொழுது, தன் நெஞ்சருகே இருந்த அவள் கன்னத்தின் செழுமையை உற்றுப் பார்த்தான் நெஞ்சம் கிளர்ச்சியுறத் தொடங்கியது.

அடுத்த விநாடி அவள் கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டான். திடுக்கிட்டு நிமிர்ந்த இளவரசி அவனை முறைத்துப் பார்த்தாள்.

''இனி நான் அவிழ்க்க மாட்டேன்'' என்றவாறு கைகளை உதறிவிட்டு நகர்ந்து நின்று ''மோசமான மனிதர்'' என்று முனகினாள்.

''தெரியாமல் செய்துவிட்டேன். என் கண் அல்லவா! கயிற்றை அவிழ்த்துவிடு சந்திரா'' கெஞ்சினான் சொக்க நாதன்.

''முடியவே முடியாது. கயிறு அவிழ்ந்துவிட்டது. கையை விலக்கி மீதிக் கயிற்றை நீங்களே பிரித்துக் கொள்ளுங்கள்'' என்றாள் திட்டவட்டமாக.

சொக்கநாதன் சிரித்தவாறு தனது கையை விடுவித்து கால்களைக் கட்டியிருந்த கயிற்றை விலக்கி எழுந்து நின்றான். அவ்வளவு நேரம் அவனைப் பார்த்துக் கொண்டிருந்த இளவரசி அவன் எழுந்து நின்றதும் தலையைக் குனிந்தாள்.

சொக்கநாதன் அவளருகில் வந்து அவள் நாடியைப் பிடித்து உயர்த்தினான்.

சந்திரவதனா அவனை ஏறிட்டுப் பார்த்து ''வீரரே, தாங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? முதலில் தங்களைப் பற்றிய விவரங்களை கூறுங்கள்'' என்றாள்.



# 80

மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கன் தஞ்சை இளவரசி சந்திரவதனாவை நெருங்கி அவளது நாடியைப் பிடித்து முகத்தைத் நிமிர்த்தியதும் அவள் அவனை ஏறிட்டு ''நீங்கள் யார் வீரரே? எங்கிருந்து வருகிறீர்கள்? தங்களைப் பற்றிய விவரங்களைக் கூறுங்கள்'' என்று கேட்டதும், சொக்கநாதன் சற்று நேரம் மவுனமாக இருந்தான்.

''என்ன வீரரே! நான் கேட்டது தங்கள் காதுகளில் விழவில்லையா? அன்று கங்கைகொண்ட சோழபுரத்தில் மதயானையிடம் இருந்து என்னைக் காப்பாற்றியதும் இதே கேள்வியைத்தான் அப்போதும் கேட்டேன். தாங்கள் எதுவும் கூறவில்லை'' என்றாள்.

''என்ன கேட்டாய் கண்ணே?''

''தாங்கள் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர் நீங்கள்?''

''நான் யாராக இருப்பேன் என்று நீ நினைத்தாய்?''

''நள்ளிரவில் கூடாரத்தைக் கிழித்துக் கொண்டு என் முன்னால் குதித்தவுடன் உன்மத்தம் பிடித்த ஒரு திருடன் என்று நினைத்தேன். அதன்பிறகு மதயானையிடம் இருந்து என்னைக் காப்பாற்றியதும் மிகச் சிறந்த வீரர் என்று

பிரமித்தேன். அதன்பிறகு அந்தரப்புரத்தில் நுழைந்து சாமர்த்தியமாகத் தப்பியதையும், அருளானந்த ஸ்வாமிகள் வேடத்தில் வந்து நினைத்ததைச் சாதித்துக் காட்டியதையும் பார்த்தபொழுது வீரத்தில் மட்டுமல்ல புத்திசாலித்தனத்தி லும் உங்களை மிஞ்ச இந்த உலகத்தில் ஆளே இல்லை என்று தீர்மானித்தேன்.''

''இப்பொழுது என்னைப் பற்றி என்ன நினைக்கி றாய்?''

''என் காதலைப் பெறுவதற்காக தன்னுடைய உயி ரையே திரணாக மதிக்கும் மகத்தான மனிதர் என்ற பூரிப்பு எனக்குள் எழுகிறது. இத்தனை முகங்கள் கொண்ட தாங் கள் உண்மையிலேயே யார் என்று இப்பொழுது தாங்கள் கூறியே ஆகவேண்டும்.''

''சொல்லத்தான் போகிறேன் கண்மணி! உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன். அதற்கு முன்னால் ஒரே ஒரு கேள்வி. அதற்கு மட்டும் பதில் சொல் போதும்.''

''என்ன கேள்வி?''

''நான் யாராக இருப்பேன் அல்லது இருக்க வேண்டும் என்று உன் மனம் கொஞ்சமாவது யோசித்து இருக்க வேண்டுமே?''

''அப்படி எதுவும் நான் யோசிக்கவில்லை. அந்த அளவுக்கு எனக்குப் பரந்த அறிவு கிடையாது. நீங்கள் யாராக இருக்கவேண்டும் என்று நான் ஆசைப்பட்டதை விட நீங்கள் யாராக இருக்கக் கூடாது என்று மட்டும் நான் அடிக்கடி நினைத்தது உண்டு.''

''அப்படி யாராக இருக்கக் கூடாது என்று நீ நினைத் தாய்? உனக்குப் பிடிக்காத அந்த துர்ப்பாக்கியசாலி யார்?''

எனக்கு பிடிக்காத என்று சொல்வதைவிட, இந்த உலகிலேயே நான் அதிகமாக வெறுக்கும், மனிதர் என்று சொல்லலாம்.''

''அடேயப்பா! உனது அளப்பரிய வெறுப்புக்கு ஆளான அந்த அபாக்கியவான் யார் என்றுதான் சொல்லேன்.''

''வேறு யார்? மதுரையில் மன்னனாக ஒருவன் ஆட்சி புரிந்து கொண்டிருக்கிறானே, அவன்தான்'' என்றாள் இகழ்ச்சியாக.

''யார்? சொக்கநாதனா?''

''ஆம், அந்த மடையன் மக்குநாதன்தான்! அவனாக மட்டும் தாங்கள் இருந்துவிடக் கூடாது என்று நான் வேண்டிக் கொள்ளாத தெய்வங்களே இல்லை.''

''அந்த மடையன் மக்குநாதன் மீது உனக்கு எதற்கு இவ்வளவு வெறுப்பு கண்ணே?'' என்று அவள் கன்னத்தை நிமிண்டியவாறு கேட்டான் சொக்கநாதன்.

''வெறுப்பு மட்டுமல்ல வீரரே! பகை! பரம்பரைப் பகை!''

''பரம்பரைப் பகையா? எப்படி அந்தப் பகை மூண்டது? நீ இவ்வளவு வெறுக்கும் அளவுக்கு அந்த மக்குநாதன் அப்படி என்ன கொடுமை உனக்குச் செய்துவிட்டான்?''

''எனக்கல்ல வீரரே! என் மூதாதையருக்கு! அது ஒரு நீண்ட கதை! இப்படிப்பட்ட இனிமையான சமயத்தில் எங்கள் இனப் பகைவனை பற்றிய பேச்சை எடுக்க எனக்கு விருப்பமில்லை வீரரே! தாங்கள் யார் என்று சொல்லுங்கள்.''

சொக்கநாதன் மனம் மின்னலென யோசித்தது. என் மீது இவள் எவ்வளவு வெறுப்புக்கு ஆளாகி இருக்கிறாள்! இது இவள் குற்றமல்ல! பரம்பரை பரம்பரையாக எங்கள் இருவரது குடும்பங்களிலும் தாய்ப்பாலோடு சேர்த்துப் புகட்டி வளர்த்த பகை! இவளைப் பார்க்கும்வரை நான் கூட இவளை எப்படி வெறுத்துப் பேசினேன்.

இப்படிப்பட்ட நிலைமையில், இப்பொழுதுதான் காதல் கூடி வந்திருக்கும் தருணத்தில் உண்மையில் நான் தான் அந்தச் சொக்கநாதன் என்று தெரிந்தால் இவள் இதயம் இந்த விநாடியே வெடித்துச் சிதறிவிடும். வேண் டாம். இப்பொழுது நான் யார் என்று இவள் தெரிந்து கொள்ள வேண்டாம். இவள் மனதைச் சிறிது சிறிதாக அசைத்து என்மீதுள்ள வெறுப்பைப் போக்கிய பிறகு நான் யார் என்பதைச் சொல்லிக் கொள்ளலாம்.

''மறுபடியும் மவுனம் எதற்கு வீரரே? தாங்கள் யார் என்பது பெரிய ரகசியமா? இல்லை நான் தெரிந்து கொள் ளக்கூடாதா?'' என்றாள் சந்திரவதனா வருத்தம் தோய்ந்த குரலில்.

''அது ஒன்றும் பெரிய ரகசியமில்லை கண்ணே! அளவுக்கதிகமாக உன் வெறுப்புக்கு ஆளாகி இருக்கி றானே மதுரை மன்னன், அவன் பெயர் என்ன மக்கு நாதனா, அவனுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. அவனை நான் பார்த்ததுக்கூட இல்லை. போதுமா?''

''அப்பப்பா! இப்பொழுதுதான் என் மனம் நிம்மதி அடைகிறது. இருந்தாலும் இது போதாது. நீங்கள் யாரென்று சொல்லுங்கள்.''

''என் பெயர் முத்துக்குமாரசாமி! முத்து என்று சுருக்க மாக என்னை அழைப்பார்கள்! உன்னைக் கைப்பற்றும் அளவுக்கு நான் பெரிய அந்தஸ்து உள்ளவன்கூடக் கிடை

யாது. மிகச் சாதாரணமான ஒரு குடிமகன். ஏழை! என்னைக் காதலிப்பதைப் பற்றி இப்பொழுது உன் மனதில் கவலை எழுகிறதா? கண்ணே?''

''நிச்சயம் இல்லை வீரரே! உங்களுக்கு இணையான வீரர் இந்த உலகத்திலேயே இல்லை என்று என் கண்ணாரப் பார்த்தபிறகு நீங்கள் ஏழையாக இருந்தாலும், இந்த உலகுக்கு ஏகச் சக்கிராதிபதியாக இருந்தாலும் எனக்கு எல்லாமே ஒன்றுதான். நீங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? தமிழும், தெலுங்கும் தடையின்றிப் பேசுகிறீர்கள். இவ்வளவு சிறந்த போர்ப்பயிற்சியை எங்கு பெற்றீர்கள்?''

''நான் பிறந்தது விஜயநகரம் கண்ணே! இளம் வயதிலேயே நான் அநாதையாகிவிட்டேன். என் எதிர்கால வாழ்விற்காக வல்லவர்கள் பலரிடம் போர்ப்பயிற்சி பெற்றேன். அதன்பிறகு மைசூர் மன்னர் தேவராஜரிடம் ஒரு சாதாரணப் படை வீரனாகப் பணிபுரிந்தேன். சமீபத்தில் அவர் இறந்து அவரது மைந்தர் சிக்கதேவராயர் பதவிக்கு வந்ததும் அவர் போக்கு எனக்குப் பிடிக்காமல் அங்கிருந்து வெளியேறி விட்டேன். வேறு ஏதாவது ஒரு நாட்டிற்குச் சென்று படைப்பிரிவில் சேரலாம் என்ற நினைப்பில் நானும், என் நண்பன் முருகனும் கங்கை கொண்ட சோழபுரம் வழியாக வந்து கொண்டிருந்தபொழுது உன்னை முதன் முதலாகக் காண நேரிட்டது. இவ்வளவுதான் என் சரித்திரம்.''

''உங்கள் பெயரைப் பார்த்தால் தமிழன் என்று தெரிகிறதே?''

''நாங்கள் தமிழர்கள்தான். கிருஷ்ணதேவராயர் காலத்தில் எங்கள் மூதாதையர் விஜயநகரத்தில் சென்று குடியேறினார்களாம். அதனால் எங்கள் வீட்டில் எப்பொழுதும் தமிழும், தெலுங்கும் தங்கு தடையின்றிப் பேசுவார்கள்.''

''இப்பொழுதுதான் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது வீரரே! முதலில் இந்த உவப்பான விஷயத்தை மதுரவாணி யிடம் சொல்ல வேண்டும்.''

''யார் அவள் மதுரவாணி?''

''எங்களது அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் மகள். எனது நெருங்கிய தோழி.''

''அவளிடம் எதற்காக என்னைப் பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறாய்?''

''அவள்தான் அடிக்கடி சொல்வாள், மதுரை மக்கு நாதன் பெரிய அழகன். உலகத்திலேயே இல்லாத வீரன் என்று பெருமையாகப் பீற்றிக் கொள்வாள். அந்த மடை யனை மிஞ்சக்கூடிய வீரர் என் நெஞ்சை அள்ளிய முத்து என்று நான் சொல்லி அவள் மூக்கை உடைக்க வேண்டும.''

''அந்த மக்குநாதனுக்கும், மதுரவாணிக்கும் என்ன தொடர்பு? அவனை அமைச்சர் மகள் காதலிக்கிறாளா?''

''சேச்சே! அதெல்லாம் கிடையாது. என்னை வெறுப் பேற்றுவதற்காக அடிக்கடி அவனைப்பற்றிச் சொல்லிச் சீண்டுவாள்.''

''அது கிடக்கட்டும் கண்ணே! ஒரு சாதாரண வீரனான, அநாதையான இந்த ஏழையை மணம் புரிய உன் தந்தை சம்மதம் தருவாரா? நமது திருமணம் நடக்குமா?''

''நிச்சயம் நடக்கும்! என் சிந்தையில் நீங்கள் இடம் பெற்று விட்டபிறகு தந்தை என்ன சொல்லப் போகிறார்! இருந்தாலும் அதற்கு முன் சில காரியங்கள் செய்யவேண் டும்.''

''என்ன காரியங்கள் கண்ணே!''

''முதலில் உங்களை எப்படியாவது எங்களது படைப் பிரிவில் ஒரு அந்தஸ்துள்ள பதவியில் உட்கார்த்தி வைக்க வேண்டும். எனது தந்தையும் தங்கள் திறமையைப் படிப் படியாகப் புரிந்து கொள்வார். அதன்பிறகு நமது காதலைப் பற்றி நான் எடுத்துரைத்தால் அவர் மறுக்கமாட்டார்.''

''முதலில் நாம் இருவரும் உட்கார்ந்து பேசலாம். காதல் உணர்ச்சியில் கால்வலிப்பதுகூடத் தெரியவில் லையா?''

''வாருங்கள் மஞ்சத்தில் உட்கார்ந்து பேசலாம்.''

சொக்கநாதன் அவள் வலக்கரத்தை ஆசையோடு பற்ற, இருவரும் கை கோத்தபடி நடந்து சென்று மஞ்சத் தில் உட்கார்ந்தனர்.

சந்திரவதனா, உன் காதலைப் பெறுவேனோ மாட் டனோ என்று உன்னைப் பார்த்த கணம் முதல் என் மனம் வதனையால் துடித்துக் கொண்டிருந்தது... இன்றுதான் ன் மனம் உவகை அடைகிறது. என்னைப் போன்ற ாக்கியசாலி இந்த உலகத்தில் யாருமே இல்லை என்று ன் இதயம் குதூகலிக்கிறது கண்ணே!''

''எனக்கும் அதேமாதிரித்தான் தோன்றுகிறது வீரரே! ன் வாழ்நாளின் இறுதி மூச்சுவரை என் கை தங்கள் கயுடன் இதேபோன்று இணைந்திருக்க வேண்டும் என் ம் ஏங்குகிறது.''

''கவலையுறாதே கண்ணே! எவ்வளவு கஷ்டம் வந்தா ம் எத்தனை எதிர்ப்பு வந்தாலும் இந்தக் கையை விட்டு ரிய ஒருபோதும் என் மனம் இணங்காது'' என்றவாறு வள் கரத்தை அழுத்தமாகப் பிடித்து இறுக்கினான்.

மறுகணம் சந்திரவதனா, ''ஸ்...ஆ'' என்று வலியால் முனகி அவனிடமிருந்து கையைப் பிரித்து உதறி, உள்ளங் கையில் ஊதினாள்.

''என்ன சந்திரா, உன் கையில் என்ன?'' பதறிப்போய் கேட்டான் சொக்கநாதன்.

''செய்வதையும் செய்துவிட்டுத் தெரியாதது மாதிரிக் கேட்பதைப் பார். குறும்பு பிடித்த மனிதர், முரடர்.''

''என்ன சொல்கிறாய் நீ? ஒன்றும் புரியவில்லையே?''

''தாங்கள் அலறியபொழுது தங்களது வாயை என் கரத்தால் பொத்திய பொழுது நீங்கள் என்ன செய்தீர்கள்? நினைவில்லையா?''

சொக்கநாதனுக்கு அப்பொழுதுதான் நினைவுக்கு வந் தது. அவள் கரத்தைத் தான் பலமாகக் கடித்தது.

அவள் கரத்தைப் பற்றித் தன்னருகே இழுத்துப் பார்த் தான். அவள் விரல்களிலும், உள்ளங்கையிலும் அவன் பற்கள் பட்ட இடம் நன்றாகச் சிவந்து லேசாக வீங்கி இருப்பது மங்கலான வெளிச்சத்தில்கூட நன்றாகத் தெரிந் தது.

சொக்கநாதன் மனம் கசிந்து அவள் உள்ளங்கையைத் தனது இதழ்களின் அருகே கொண்டு சென்று சிவந்து கிடந்த இடங்களில் எல்லாம் மெதுவாக முத்தமிட்டான். சிலிர்த்துப் போனாள் இளவரசி.

பிறகு அந்த இடங்களில் மெதுவாகத் தடவிக் கொடுத் தான். ஒவ்வொரு விரலாக நீவி விட்டு, ஒவ்வொரு விரல்க ளிலும் முத்தம் கொடுக்கக் கிறங்கிப் போனாள் சந்திர வதனா!

சொக்கநாதனின் இதழ் விரல்களிலிருந்து கைக்குத் தாவி முழங்கை வரை வந்ததும் தன்னிலைக்கு வந்து சுதாரித்த இளவரசி, மெதுவாகத் தனது கரத்தை அவனிடமிருந்து விலக்கிக் கொண்டாள்.

''வீரரே, தாங்கள் உணவு அருந்தினீர்களா?'' என்றாள் கவலையுடன்.

''உணவா, நீ கேட்ட பிறகுதான் அந்த நினைவே வருகிறது. உன்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் ஓடி வந்தவனுக்கு பசி எங்கே இருக்கும்? இப்பொழுது உன் காதலை அடைந்த மகிழ்ச்சியில் அது இருக்கும் இடமே தெரியவில்லை கண்ணே!''

''இருங்கள். பழங்கள் எடுத்து வருகிறேன். நீங்கள் கண்டிப்பாக சாப்பிட வேண்டும். அன்று தாங்கள் கேட்டும் நான் கொடுக்கவில்லை. அது என் மனதை அரித்துக் கொண்டே இருக்கிறது.''

சந்திரவதனா எழுந்து சென்று பழங்கள் அடங்கிய குவளையை எடுத்துவந்து அவன் எதிரில் உட்கார்ந்தாள். பழங்களை எடுத்துத் தோலை நீக்கி அவள் ஒவ்வொன்றாக எடுத்துத் தர, சொக்கநாதன் அவள் முகத்தையே சொக்கிப் போய் பார்த்தவாறு புசித்தான். சந்திரவதனா அதனை உணர்ந்ததால் தலை குனிந்தவாறு பழங்களை எடுத்து அவன் கையில் திணித்துக் கொண்டிருந்தாள்.

''போதும் கண்ணே! என் பசி அடங்கிவிட்டது. உனது கையால் என் கையை வாயைக் கழுவித் துடைவித்துவிடு.''

''ஹுக்கும்! அதெல்லாம் நீங்களே செய்து கொள்ளுங்கள்'' என்று முகத்தில் வக்கணம் காட்டினாள்.

''ஹூம்! அருளானந்த ஸ்வாமிகளாய் இருந்தால்தான் அந்த பாக்கியம் கிட்டும் போலிருக்கிறது'' என்று கைக ளைத் துடைத்துவிட்டு அவள் மூக்கைத் திருகினான்.

''இனி அந்த வேடத்தில் வந்தால்கூடக் கிட்டாது'' என்று எழுந்து கொள்ள முயன்றவளை இழுத்துத் தன்னரு கே உட்கார வைத்து, அவள் இதழ்களில் அழுத்தமாக முத்தமிட்டான்.

அப்பொழுது தூரத்தில் சேவல் கூவும் ஓசை கேட்கத் தொடங்கியது. சந்திரவதனா அவனிடமிருந்து தன்னை விடுவித்து எழுந்து நின்றாள்.

''வீரரே, விடியும் வேளை நெருங்கிவிட்டது. இனி யும் தாங்கள் இங்கே இருப்பது நல்லதல்ல.''

''ஆம் கண்ணே! நான் கிளம்பட்டுமா?'' என்றவாறு எழுந்தான்.

''சரி விடிந்தபிறகு தர்பார் மண்டபத்திற்கு வாருங்கள். என் தந்தையை எப்படியாவது சமாளித்து உங்களை எங்க ளது படைப் பிரிவில் சேர்த்து விடுகிறேன்.''

''இன்று வேண்டாம் கண்ணே! நம் காதல் நிறைவேறி யதற்காகத் திருவரங்கத்தில் நேர்த்திக் கடன் செலுத்த வேண்டும். பத்து நாட்கள் கழித்து உன்னைச் சந்திக்கி றேன்.''

''அத்தனை நாட்கள் ஆகுமா?'' ஏக்கத்துடன் கேட் டாள்.

மறுபடியும் அவளை இறுக அணைத்து முத்தமிட்டு விட்டு, ''நான் கொடுத்த முத்தங்களை நினைத்துக் கொண்டே இரு. நாட்கள் பறந்து போவது உனக்கே தெரியாது'' என்று சொல்லிவிட்டுக் கயிற்றை எடுத்துக் கொண்டு, சாளரத்தில் இருந்து தொங்கவிட்டு, இளவரசியி டம் இருந்து விடைபெற்று வெளியேறினான்.

அவன் கண்களை விட்டு மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்த இளவரசி, 'தந்தையிடம் சொல்லி இந்தத் திருமணத்தைச் சீக்கிரம் முடித்துவிட முயலவேண்டும்' என்று நினைத்தாள்.

அதேசமயம் அந்தப்புரத்தில் இருந்து வெளியேறி தஞ்சை எல்லையில் காத்துக்கொண்டிருந்த வெங்கடகிருஷ் ணன், அழகப்ப நாயக்கன் இவர்களுடன் நாட்டை விட்டு வெளியேறிய சொக்கநாதன் 'கூடிய சீக்கிரமே இரு நாடுகள ளும் இணையப் போகின்றன' என்ற மகிழ்ச்சியுடன் சென்று கொண்டிருந்தான்.

ஆனால் இந்த இருவருக்குமே தெரியாது. இனிமேல் தான் ஏராளமான சிக்கல்களும், குழப்பங்களும் உருவாகப் போகின்றன என்று!


சந்திரவதனா
2
எஸ்.பாலசுப்பிரமணியன்